அங்கத்தவர்களுக்கு மட்டும்

# கல்வியியல் சுற்றறிக்கைகளின் தொகுப்பு

(தெரிந்தெடுக்கப்பட்டவை)

2006

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

(கொழும்பு பணிமனை)

கனடா இல்லம்

40 மத்திய வீதி,

கொழும்பு -15

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின்

கொழும்புக்கிளைகளின்

வாண்மை விருத்தி வழிகாட்டல் அமர்வு செயற்திட்டம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியியல்
# சுற்றறிக்கைகளின் தொகுப்பு

(தெரிந்தெடுக்கப்பட்டவை)

## 2006


தொகுத்தவர்
**சி.சரவணபவானந்தன்**
*நிருவாகச் செயலாளர்*
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்


- ஆசிரியர் தேவைப்பாடு
- ஆசிரியர் செயலாற்றுகை தரங் கணிப்பீடு
- ஆசிரியர் சேவை/பதவியுயர்வு
- ஆசிரியர் பிரசவலீவு
- ஆசிரியர் ஓய்வூதியம்
- பாடசாலை முகாமைத்துவம்
- பாடசாலை மட்டக் கணிப்பீடு
- பொதுநிர்வாகம்
- தாபன விடயம்
- தகவல் தொழில்நுட்பம்
- பொது

ஆசிரியர், ஒவ்வொரு மாணவருக்கும் அறிவைத் தேடும் பசியை உருவாக்க வேண்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்

### ஆசிரியர் தேவைப்பாடு


1. பாடசாலையின் ஆசிரியர் தேவையை பூர்த்தி செய்ய .... ஆசிரியர் எண்ணிக்கை தீர்மானித்தல் 1


### ஆசிரியர் தரங் கணிப்பீடு


1. ஆசிரிய செயலாற்றுகை தரக் கணிப்பீட்டு வேலைத்திட்டத்தை அமுல்படுத்தல் 2005/2006 21
2. ஆசிரிய செயலாற்றுகை தரக் கணிப்பீடு 23
3. ஆசிரிய செயலாற்றுகை தரங் கணிப்பீடு அமுலாக்கலும் .................. வேலைத்திட்டங்களை கண்காணித்தலும் 25


### ஆசிரியர் சேவை / பதவியுயர்வு


1. இலங்கை ஆசிரிய சேவைக்கு உள்ளீர்ப்பு.......... பதவி உயர்வு விதிமுறைகளை மறுசீரமைத்தல் 26
2. இலங்கை ஆசிரியர் சேவையின் பதவி உயர்வுகளை அமுல்நடாத்தல் 31
3. அரசியல் பழிவாங்கல் ஆய்வுக் குழு.......... அதிபர் சேவையின் I மற்றும் II / I தரத்திற்குரிய உத்தியோகத்தர் பெற்று வந்த சம்பளத்தை செலுத்தல் 36
4. பயிலுநர் / தகுதிகாண் அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட ஆசிரியர்களை இலங்கை ஆசிரியர் சேவையில் உரிய வகுப்பில் நியமித்தல் 40
5. இலங்கை அதிபர் சேவையின் 1 ம் வகுப்பை சேர்ந்த உத்தியோகத்தரின் சம்பளம் திருத்தி அமைக்கப்படல் 41
6. பயிலுநர் / தகுதிகாண் அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டுள்ள ஆசிரியர்களை இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணத்திற்கமைய ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கல் 42
7. பட்டம் பெற்றுள்ள பயிலுநர் ஆசிரியர்களையும் / பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களையும் தகுதிகாண் ஆசிரியர்களையும் பதவியில் நிரந்தரப்படுத்தல் 43
8. இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணத்தின் திருத்தங்களுக்கமைய ஆசிரியர்சேவையில் பதவிஉயர்வை செயற்படுத்தல் (1999.10.11) 46
9. இலங்கை ஆசிரியர் சேவைக்கு உள்ளெடுக்கப்பட்டதன் பின்னர் ஆசிரியர் பயிற்சியும் பட்டமும் பெற்ற ஆசிரியர் சம்பந்தமான நடவடிக்கை 48
10. கல்விமாணி பட்டதாரி ஆசிரியர்களுக்கு புதிய ஆசிரியர் சேவைத்திட்ட ஏற்பாட்டின் கீழ் சம்பள சரிக்கட்டல் (1996.02.06) 49
11. இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணத்தின் திருத்தங்களுக்கமைய ஆசிரியர்சேவையில் பதவிஉயர்வை செயற்படுத்தல் (1999.09.30) 50
12. இலங்கை ஆசிரியர் சேவை 1ஆம் தரத்தில் சேர்த்துக் கொள்வதற்கும் பதவி உயர்வு வழங்குவதற்குமாய பரீட்சை 57
13. இலங்கை ஆசிரிய சேவையின் பயிற்றப்பட்ட டிப்ளோமாதாரி ஆசிரியர்களை ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்தல் 58
14. இலங்கை ஆசிரிய சேவை தொடர்பாகச் செய்யப்பட்ட திருத்தங்களின் பிரகாரம் பட்டதாரி பயிலுநர்களை ஆசிரியர் சேவையில் சேர்த்துக் கொள்ளல் 59
15. இலங்கை ஆசிரியர் சேவைக்கு உள் வாங்கியதன் பின் ஆசிரிய பயிற்சியும், பட்டமும் பெற்றுக் கொள்ளும் ஆசிரியர்கள் தொடர்பான நடவடிக்கைகள் 60
16. 2, 3 ஆண்டுகளில் பல்வேறு டிப்ளோமா பெற்ற பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையில் ஈடுபடுத்தல் 61
17. இலங்கை ஆசிரியர் சேவைக்கு உள்ளெடுத்தல் - சிறப்புப் பட்டதாரிகள் 62
18. இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணத்திற்குரிய சேவைக்காலப் பயிற்சிக் கருமங்கள் 63
19. இலங்கை ஆசிரியர் சேவையின் திருத்தியமைக்கப்பட்ட தாபனக் கோவையின் படி பட்டதாரி ஆசிரியர்களுக்கான சம்பளம் - 1995 64
20. இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பு திருத்தங்கள் பட்டதாரி ஆசிரியர் சம்பளம் - 1995 65
21. கல்விமாணி பட்டதாரி ஆசிரியர்களுக்கு புதிய ஆசிரியர் சேவைத்திட்ட ஏற்பாட்டின் கீழ் சம்பள சரிக்கட்டல் (1996 . 06.28) 67
22. இலங்கை ஆசிரியர் சேவையை ஏற்படுத்திய பின் ஆசிரியர்களின் சம்பள உயர்வுகளை வழங்குதல் 68
23. இலங்கை ஆசிரியர் சேவை நியதிப் பிரமாணங்களுக்கமைய ஆசிரியர்களை உள்ளீர்ப்பு செய்தல் (1995.07.20) 69
24. இலங்கை ஆசிரியர் சேவை ஆரம்பமாகி 1994.10.06 ஆந் திகதியின் பின் புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களை உரிய சம்பளத் திட்டத்திற்குள்ளாக்குதல் 70




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. திருத்தம் - இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பு 72
26. இலங்கை ஆசிரிய சேவையை ஸ்தாபித்தல் - ஆசிரியர்களை உள்ளீர்ப்புச் செய்தலும், புதிய சம்பளத் திட்டங்களை வழங்கலும் 75

## ஆசிரியர் பிரசவ விடுமுறை

1. பிரசவ விடுமுறை தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XII 77

## ஆசிரியர் ஓய்வூதியம்

1. ஓய்வு பெறுகின்ற.......... ஓய்வூதிய கொடுப்பனவை துரித.......... கடிதக் கோவைகளை நாளதுவரைப்படுத்தல் 80
2. விதவைகள், தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய திருத்தம் 2004 86
3. New method of calculation of pensions 88
4. அரச அலுவலர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியங்களை திருத்துதல் - 2004 90
5. ஓய்வூதிய கொடை வழங்கலுக்கும் மாற்றிய பணிக்கொடையை வழங்கலுக்குமான புதியமுறை 93
6. 1994.10.06 வரை சேவையிலீடுபட்டு ஓய்வு பெற்ற பட்டதாரி ஆசிரியர்களினது ஓய்வூதிய சம்பள திருத்தம் 95
7. 1994.10.06 வரை சேவை..... ஓய்வு பெற்ற பட்டதாரி ஆசிரியர்.... ஓய்வூதியம் திருத்தியமைக்கப்படல் 96
8. 2001ம் ஆண்டு 2ம் இலக்க தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய திருத்தச் சட்டம் 97

## பாடசாலை முகாமைத்துவம்

1. கல்வி அமைச்சிலும், மாகாணத்திலும் முகாமைத்துவ தர உறுதிப்பாட்டு அலகின் கடமைப் பொறுப்புக்கள் 98
2. நி.பி. 115ன் கீழ் அங்கீகாரம் வழங்குதல் (ஓய்வூதியர்களின் புகையிரத ஆணைச்சீட்டு தொடர்பாக) 101
3. பாடசாலைகளில் ஒழுக்க விழுமியங்களை பாதுகாத்தல் 102
4. கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை 107
5. Introduction of the subject of Technology for G.C.E. A / L 110
6. 5ம் ஆண்டின் புலமைப் பரிசில் ......... பாதுகாவலர் வருடாந்த வருமான எல்லையை திருத்தியமைத்தல் 111
7. வசதியான மாகாணங்களிலிருந்து கஷ்டப் பிரதேச மாகாணங்களிலான பாடசாலைகளில் க.பொ.த உயர்தர வகுப்புகளிற்கு மாணவர்களை சேர்த்தல் 112
8. பாடசாலைகளில் நியமிக்கப்பட்டுள்ள முகாமைத்துவ உதவியாளர்களின் கடமைக்கூறுகள் 114
9. அதிபர்கள் தரத்திற்கான பதவி உயர்வு / நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு தரத்திற்கேற்ற பதவிகளை வழங்குதல் 115
10. அதிபர் வெற்றிடங்கள் நிரப்பப்படுதல் 116
11. அதிபர் தரத்திற்கு நியமனம் / பதவி உயர்வு பெற்றுள்ள ஆசிரியர்களுக்கு தரத்திற்கு ஏற்ப பதவி வழங்குதல் 118

## பாடசாலை மட்டக் கணிப்பீடு

1. பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டு (கணிப்பீட்டு) வேலைத்திட்டம் (6 - 13) 119
2. பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீடுகள் 10, 11, 12 தரங்களைக் கொண்ட பாடசாலைகளுக்கு க.பொ.த (உயர்தர) மாணவர்களை அனுமதித்தல் 124
3. பாடசாலை மட்ட மதிப்பீட்டு வேலைத்திட்டத்தின் கீழ் க.பொ.த (உயர்தர) பரீட்சைக்கு வெளிவாரி விண்ணப்பதரர்களாக தோற்றுதல் 2005ம் ஆண்டிலும் அதன் பின்னரும் 125

## பொது நிர்வாகம்

1. தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் II ஆம் பிரிவுக்கான திருத்தம் 128
2. மாகாண அரசாங்க சேவை ஆசிரியர்களை தேசிய பாடசாலை சேவைக்காக ஆட்சேர்த்தல் 131
3. இடம்பெயர்ந்து சென்று திரும்பியவர்களை மீண்டும் பழைய பதவியில் அமர்த்துதல் 132
4. ஒரு மொழியை விட மொழிகளில் தேர்ச்சி பெற்ற இலங்கை ஆசிரியர் சேவையில் உள்ள ஆசிரியர்களுக்கு மொழி ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்துதல் 133
5. சம்பள அளவுத் திட்டமொன்றின் தேக்க நிலை அடைந்துள்ள அலுவலர்களுக்கு வேதனவேற்றங்களை வழங்குதல் 134
6. அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க பணியாளர்களுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் 136
7. தாபன விதிக்கோவையில் Vம் அத்தியாயத்தில் 5ம் பிரிவை திருத்தம் செய்தல் 55 வயதிற்கு மேல் சேவை நீடிப்பு செய்தல் (2002.08.23) 140
8. பதவி உயர்வின் போது சம்பள மாற்றங்களை செய்தல் 142
9. அதிபர்கள் தரத்திற்கு பதவி உயர்வு / நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு தரத்திற்குரிய நியமனம் வழங்குதல் 144



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாபன விடயம்


1. மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றும் போது அரச நிறுவனங்களின் உதவி வழங்கல் 145
2. அரசாங்க பாடசாலைகளில் ஆசிரியர்களாக சேவையாற்றிக் கொண்டிருக்கும் போது பல்கலைக்கழகங்களின் உள்வாரி மாணவர்களாகப் பட்டப் பாடநெறியைத் தொடர்ந்து பட்டங்களைப் பெற்றுக் கொள்ளல் 146
3. மேலதிக தனிப்பட்ட உதவி வகுப்புக்கள் 148
4. மாகாண அரச சேவையில் பதவி வகிக்கின்ற கல்வி ஆளணியினர் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளல் 150
5. சுயவிபரக் கோவைகளிலுள்ள குறைகளைப் பூர்த்தி செய்தல் 154
6. கல்விச் சேவைக்குழுவின் கருமங்களை புதிய அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு ஒப்படைத்தல் 155
7. தேசிய பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற ....... பதவி உறுதிப்படுத்தப்பட்டதாக கடிதங்கள் வழங்குதலும் 156
8. தேசிய பாடசாலைகளில் சேவை புரியும் உதவி ஆசிரியர்களை தகுதிகாண் காலத்தின் முடிவில் நிரந்தரப்படுத்தல் 157
9. இடம்பெயர்ந்த அரசாங்க உத்தியோகத்தர்கள், கூட்டுத்தாபன பணியாளர்கள் தம் கடமைகளை மீளப் பொறுப்பேற்றல் 158


## தகவல் தொழில்நுட்பம்


1. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பக் கல்வி 159
2. கணனி ஆய்வுகூடங்களின் அலுவல்களை நடாத்திச்செல்லல் 176
3. கணனி விஞ்ஞான கூடங்களின் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் 184


## பொது


1. ஆங்கில மொழியில் உயர்ந்த தகமையைப் பெற்றுக் கொள்வதில் ஆங்கில ஆசிரியர்களை ஊக்குவிப்பதாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுத் திட்டம் ஒன்றை ஏற்படுத்தல் 192
2. ஆட்சேர்ப்பு திட்டங்களுக்கு புறம்பாக அரச சேவை....... 55 வயதுக்கு மேல் சேவை நீடிப்பு வழங்கல் (2003.12.26) 193
3. பழுதடைந்த நூல்கள் 194
4. தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் IIம் ஆம் பிரிவை திருத்துதல் - சொத்துக்கடன் 195
5. அரச அலுவலர்களுக்கு உத்தேசிக்கப்பட்ட புதிய காப்புறுதி திட்டத்தை ஸ்தாபித்தல் 196
6. இலங்கையிலுள்ள பாடசாலைகளில் அதிபர் .......... தொலைபேசி பட்டியல் கட்டுவதற்கான அனுமதி 202
7. பாடசாலை நேரத்தில் பணம் அறவிட்டு கற்பித்தல் நடவடிக்கைகளை ஒழுங்கு செய்வதை தடுத்தல் 203
8. அரசாங்க திணைக்களங்கள் ....... முத்திரை வழங்கும் போது பற்றுச்சீட்டு வழங்கல் 204
9. அக்ரஹார காப்புறுதி சந்தாப் பணம் 205
10. மொழிபெயர்ப்பு .......... தட்டச்சு இடுவதற்கான கட்டணங்களை திருத்தம் செய்தல் 206
11. 1995 ம் ஆண்டில் நடைபெற்ற ...... III ம் வகுப்புக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான வேதனக் கொடுப்பனவுகள் 207
12. அரச சேவையிலிருந்து மாகாண அரச சேவைக்கு விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு மீண்டும் அரச சேவைக்கு வருவதற்காக சந்தர்ப்பமளித்தல் / அரசாங்க சேஸ்வக்கு ஆட்சேர்க்கப்படுவதற்கு வயதெல்லை 208
13. இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பின் திருத்தங்கள் பட்டதாரி ஆசிரிய சம்பளத் தயாரிப்பின் சிக்கல்கள் 209
14. அரசாங்க பாடசாலைகளில் பிரதி அதிபர்கள்/ உதவி அதிபர்களை நியமித்தல் 210
15. ஆட்சேர்ப்பு திட்டங்களுக்கு புறம்பாக அரச சேவைக்கு ..... 55 வயதுக்கு மேல் சேவை நீடிப்பு வழங்கல்(2003.12.16) 211
16. 2005 வரவு செலவுத்திட்டத்தில் பிரேரிக்கப்பட்டவாறு அரச உத்தியோகத்தர்களுக்கான புதிய (அக்ரா ஹரா) காப்புறுதித் திட்டத்தினை தயாரித்தல் 212
17. தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XXIV இன் IIம் ஆம் பிரிவை திருத்துதல் - ஆதனக்கடன் 216


## பிந்திச் சேர்த்தவை


1. பழைய பெறுபேற்றுப் பதிவேடுகள் பயன்பாட்டிலிருந்து நீக்குவதன் பொருட்டு பரீட்சை பெறுபேறுகள் உறுதிப்படுத்தல் 87
2. மாகாண தகவல் தொழில்நுட்ப நிலையங்களுக்கு நியமிக்கப்பட்ட விரிவுரையாளர்களுக்கு கடமைகளை வழங்குதல் 149



ஆசிரியர் வாண்மை விருத்தி குறித்து பரந்த நோக்கில் வெளியிடப்படும் இத்தொகுப்பினை மீள் பிரசுரம் செய்வதைத் தயவு செய்து தவிர்த்துக்கொள்ளுமாறு வினயமாக கேட்டுக்கொள்கின்றோம்.கடினமான முயற்சிகளைத் திருடுவது நல்ல காரியங்களைச் சமுதாயத்தில் கொலை செய்வதாக உணரப்படலாம்.

உங்கள் ஆதரவிற்கு நன்றி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දුරකථන/ தொலைபேசி இல. /Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister } 784807, 784832

ලේකම් / செயலாளர் / Secretary } 784811

කාර්යාලය / அலுவலகம் / Office } 785141-50, Fax: 784846

ඊමේල්/ ஈ-மெயில் / E-mail : secedu@sltnet.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. } ..............................

මානව සම්පත් සංවර්ධන, අධ්‍යාපන හා සංස්කෘතික කටයුතු අමාත්‍යාංශය

மனிதவள அபிவிருத்தி, கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு

Ministry of Human Resources Development, Education & Cultural Affairs

'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ, බත්තරමුල්ල.

'இசுருபாயா' ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை, பத்தரமுல்ல.

"Isurupaya", Sri Jayawardhanapura Kotte, Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. } ED 3/37/03/2(1)

දිනය / திகதி / Date } 2003.11.07

சுற்றறிக்கை இலக்கம் 2003/38

மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,
அதிபர்கள் சகலருக்கும்.

## ஒரு பாடசாலையின் ஆசிரியர் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில் ஆசிரியர்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல்

இச் சுற்று நிருபத்தின் நோக்கம் ஒரு பாடசாலைக்குத் தேவையான ஆசிரிய ஆளணியினரைத் தேவைக்கு ஏற்ப நிர்ணயித்தல் தொடர்பான ஒழுங்குவிதிகள், அறிவுறுத்தல்களை வழங்குவதாகும். இது தொடர்பாகத் தற்போது அமுலிலுள்ள 1997.04.08 திகதி கொண்ட 1997/4 இலக்கச் சுற்று நிருபம் 1997 ஜூலை 25 ஆம் திகதிய அதன் திருத்தம் மற்றும் 1998 மார்ச் 11ம் திகதி கொண்ட அதன் இரண்டாவது திருத்தம், 1993.05.05 திகதிய இலக்கம் 93/6 கொண்ட உடற்கல்வி ஆசிரியர்களை நியமித்தல், இடமாற்றம் செய்தல் பற்றிய சுற்று நிருபம் 2001.10.29 ம் திகதிய 2001/27 இலக்க பாடசாலை ஒன்றிற்குத் தேவையான ஆசிரியர்களை வழங்கும் நோக்கில் ஆசிரியர் எண்ணிக்கையைத் தீர்மானிக்கும் சுற்று நிருபம் மற்றும் அது தொடர்பான 2003/01/24 ம் திகதிய திருத்தமும் இத்தால் வலுவற்றதாக்கப்படுகின்றன. இச் சுற்று நிருபத்தின் விதிமுறைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் 2004.01.01 திகதி தொடக்கம் செல்லுபடியாகும்.

1.1 ஒவ்வொரு பாடசாலையினதும் ஆசிரிய எண்ணிக்கை அப்பாடசாலைக்கு அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் எண்ணிக்கையைக் கொண்டதாக இருக்க வேண்டும். ஒரு பாடசாலைக்குரிய ஆசிரிய எண்ணிக்கையை கணிப்பீடு செய்யும் முறை இச் சுற்றறிக்கையின் 2:1 மற்றும் 2:2 பந்திகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதோடு, அவ்வடிப்படையில் அமைந்துள்ள பாடசாலைக்குரிய அனுமதிக்கப்பட்ட ஆசிரிய எண்ணிக்கை முகாமைத்துவ திணைக்களத்தின் இணக்கப்பாட்டுடன் தீர்மானித்துக் கொள்ளப்பட வேண்டும். இவ்வனுமதிக்கப்பட்ட ஆசிரிய எண்ணிக்கை எதிர்வரும் 3 ஆண்டுகளுக்கு செல்லுபடியானதாக இருக்கும்.

1.2 இப்புதிய சுற்றறிக்கை 2004.01.01 திகதி தொடக்கம் அமுல் நடாத்தப்பட்ட போதிலும் தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள ஆசிரிய எண்ணிக்கையில் மாற்றங்கள் 2004 ம் ஆண்டில் இடம் பெறாததோடு, சுற்றறிக்கை அமுலாவதினால் இடம் பெறுவது ஒரு பாடசாலையின் ஆசிரியர் தேவையை நிறைவேற்றும் நோக்கத்தில் ஆசிரியர் எண்ணிக்கையைத் தீர்மானித்தல் எனும் செயற்பாட்டை அமுலுக்கு கொண்டு வருவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2005 ம் ஆண்டில் இச் சுற்று நிருபத்தின் படி அனுமதிக்கப்பட்ட ஆசிரிய சேவையாளரின் எண்ணிக்கை மாற்றமடையும் வரை 1997/4/8 திகதிய 1997/4 ம் இலக்க சுற்று நிறுபத்தின் பிரகாரம் அனுமதி கிடைத்துள்ள ஆசிரிய எண்ணிக்கை அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் எண்ணிக்கையாக கருதப்பட வேண்டும். எனினும் இச் சுற்றுநிருப விதிகளின் கீழ் உரிய முறையில் ஆசிரிய எண்ணிக்கையை கணித்து அனுமதிக்கப்பட்ட பின்பு அதன் படி சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

1.3 உரிய ஆசிரிய எண்ணிக்கை, பொருத்தமான ஆசிரிய எண்ணிக்கை, அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் எண்ணிக்கை.

**உரிய ஆசிரிய எண்ணிக்கை** :- ஏதாவது ஒரு பாடசாலைக்கு இச்சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின் கீழ் கணிப்பிடப்படுவதன் மூலம் பெறப்படும் ஆசிரிய எண்ணிக்கை அப்பாடசாலைக்குரிய ஆசிரிய எண்ணிக்கையாகும்.

**பொருத்தமான ஆசிரிய எண்ணிக்கை** :- ஒரு பாடசாலை தமது கற்றல், கற்பித்தல், செயல்பாடுகளின் விஷேச தேவைகளைக் கருத்திற் கொண்டு அப்பாடசாலையைச் சார்ந்தவர்களால் அப்பாடசாலைக்கு பொருத்தமானவர்கள் என்று தீர்மானிக்கப்படுகின்ற ஆசிரிய எண்ணிக்கை பொருத்தமான ஆசிரிய எண்ணிக்கை என்று அழைக்கப்படும்.

**அனுமதிக்கப்பட்ட ஆசிரிய எண்ணிக்கை** :- இச் சுற்றுநிருப விதிமுறைகளின் கீழ் பாடசாலைகளுக்கு கணிப்பீடு செய்யப்படுகின்ற உரிய ஆசிரிய எண்ணிக்கை, கருதப்படும் எண்ணிக்கைக்கு குறைவாக அல்லது கூடிய அளவு தேவைப்படும் பட்சத்தில் அத் தொகையை சம்பந்தப்பட்ட விதி முறைகளுக்கமைய அனுமதியைப் பெற்றுக் கொண்டதன் பின்பு தான் அது பாடசாலைக்கான அனுமதிக்கப்பட்ட ஆசிரிய எண்ணிக்கை என்று கருதப்படும்.

1.4 பாடசாலை முறைமையும் பொதுவாகக் கருதி தயாரிக்கப்பட்ட ஒப்பளவுகளின் அடிப்படையிலேயே ஒரு பாடசாலைக்குரிய ஆசிரியர் எண்ணிக்கைகளைக் கணிப்பீடு செய்வதற்கான வழி முறைகள் தயாரிக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் இச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் பாடசாலைக்குரிய ஆசிரிய எண்ணிக்கை பொருத்தமான ஆசிரிய எண்ணிக்கைக்குச் சமமாகும் பொழுதும் உரிய ஆசிரியர் எண்ணிக்கையை விட குறைவான அளவு பொருத்தமான ஆசிரியர் எண்ணிக்கை அமையும் பொழுது அப்பொருத்தமான ஆசிரிய எண்ணிக்கைக்காக அனுமதித்த ஆசிரிய எண்ணிக்கையாக கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும்.

எனினும் ஏதாவது ஒரு பாடசாலையின் பொருத்தமான ஆசிரிய எண்ணிக்கை இச் சுற்றுநிருபத்தில் கணிக்கப்படுகின்ற உரிய ஆசிரிய எண்ணிக்கையை விட அதிகரிக்கும் பட்சத்தில் இச் சுற்றுநிருபத்தின், கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கு அமைய உரிய முறையில் செயற்பட்டு, சம்பந்தப்பட்ட பிரிவினால் உறுதிப்படுத்திய பின்னர் அதற்கான அனுமதியைப் பெற வேண்டும். ஒரு பாடசாலையின் பொருத்தமான ஆசிரிய எண்ணிக்கையை விஷேடமாகக் கணிப்பீடு செய்து பெறும் அனுமதி மூன்று ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும். இவ்வாறு கணிப்பீடு செய்து அனுமதி பெறும் முறை மூன்று வருடங்களுக்கு ஒரு முறைதான் நிகழ வேண்டும். எவ்வாறாயினும் பாடசாலைகள் மூடப்படுவதை மாணவர்கள் பெருமளவில் குறைவது போன்ற விசேட சந்தர்ப்பங்களில் ஆசிரிய எண்ணிக்கைகளில் மாற்றமேற்படுத்துவதற்கு இது தடையாகாது. ஏதும் தடைகள் ஏற்படாதிருக்க வேண்டும்.

வருடாந்த ஆசிரிய எண்ணிக்கையை அறிக்கைப்படுத்தும் போதும் 3 ஆண்டுகளுக்குச் செயற்படுத்துவதற்கு ஏற்ப அனுமதிக்கப்பட்ட பொருத்தமான ஆசிரிய எண்ணிக்கை ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் மேலதிக ஆசிரியர்களை கணிப்பிடும் போதும், கருத்திற் கொள்ள வேண்டும் என்பது நினைவில் வைத்துக் கொள்வதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.5 ஒரு பாடசலைக்குரிய ஆசிரியர் தேவையைப் பிழையின்றிக் கணித்து இணைப்பு 1 இன் படி ஆ,.எ. (பா.) படிவம் மூலம் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு வருடாந்தம் அறிக்கைப்படுத்தல் அதிபர் ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும். தேசிய பாடசாலை ஒன்றெனில் ஒரு பிரதியை தேசிய பாடசாலை பணிப்பாளருக்கு நேரடியாக அனுப்ப வேண்டும். இங்கு பாடசாலையின் தற்போதைய ஆசிரியர் குழுவினதும் அது சம்பந்தப்பட்ட தகவல்களையும் இச் சுற்றுநிருப அறிவுறுத்தல்களின் படி பாடசாலை மட்ட ஆசிரிய பற்றாக்குறை, மேலதிக ஆசிரியர்களைக் கணிப்பீடு செய்வதற்கேற்ப சமர்ப்பிக்க வேண்டும். வலயத்திலுள்ள ஆசிரியத் தேவைகளைச் சமப்படுத்த வேண்டிய பொறுப்பு வலயக் கல்விப் பணிப்பாளருக்குடையதாகும். சமப்படுத்தல் செய்ய வேண்டியது ஒவ்வொரு பாடசாலைக்கும் அனுமதிக்கப்பட்ட ஆசிரிய எண்ணிக்கையை இது அடிப்படையாகக் கொண்டதாக அமைய வேண்டும்.

1.6 வலயத்திலுள்ள மாகாண சபைப் பாடசாலைகளின் ஆசிரிய குழுவை அவ்வப் பாடசாலைகளுக்காக அனுமதிக்கப்பட்ட ஆசிரிய எண்ணிக்கையுடன் சமப்படுத்தும் பொறுப்பு வலயக் கல்விப் பணிப்பாளரிடம் வழங்கப்பட்டுள்ளதோடு, மாகாணத்திலுள்ள ஒவ்வொரு வலயத்திற்கும் தேவையாகும் ஆசிரிய எண்ணிக்கையை அவ்வவ் வலயத்துக்காக அனுமதிக்கப்பட்ட ஆசிரிய எண்ணிக்கையுடன் சமப்படுத்தும் பொறுப்பு மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தேசிய பாடசாலைகளிலுள்ள ஆசிரிய எண்ணிக்கையை அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் எண்ணிக்கையுடன் சமப்படுத்தும் பொறுப்பு என்னால் செய்யப்படுவதோடு அவற்றிற்குத் தேவையான விதப்புரையை பாடசாலைக்குரிய மாகாணத்தின் மாகாணக் கல்விப் பணிப்பாளர் இவ்வமைச்சின் தேசிய பாடசாலைப் பணிப்பாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ள முறைக்கேற்ப உரிய அதிகாரிகளால் ஒவ்வொரு மாகாண சபை மூலமும் இவ் வேலை நிறைவேற்றப்பட வேண்டும்.

1.7 வலயக் கல்விப் பணிப்பாளரினால், இணைப்பு 2 இன் படி ஆ 1 எ. (வலயம்) படிவத்தை உபயோகித்து மாகாணக் கல்விப் பணிப்பாளரிடமும், மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் இணைப்பு 3 இன் படி மாகாணக் கல்விச் செயலாளர் மூலம் கல்வியமைச்சின் செயலாளருக்கும் முறையாக வலயம் மற்றும் மாகாணத்திற்குரிய ஆசிரியர் எண்ணிக்கைக்கான வருடாந்த அறிக்கையை ஒவ்வொரு வருடமும் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு அறிவிக்கப்படும் ஆசிரியர் எண்ணிக்கை பற்றிய விபரங்களின் நம்பகத்தன்மையை ஏற்படுத்திக் கொள்வது அவ்வவ் உத்தியோகத்தர்களின் பொறுப்பாகும்.

1.8 வலயத்தின் தற்போதைய ஆசிரிய எண்ணிக்கை பற்றிய சுருக்கம் வலயக் கல்விப் பணிப்பாளரினால் இணைப்பு 2 உள்ள ஆ.எ(வ) படிவத்தில் தயாரிக்கப்பட வேண்டும். அவ்வாறே மாகாணத்தின் தற்போதைய ஆசிரிய எண்ணிக்கை பற்றிய சுருக்கம் மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் இணைப்பு (3) இணைப்பு அ.ஏ. (மா) படிவத்தில் கல்விச் செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டும். (தகவல்களை அறிக்கைப்படுத்தும் போது தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாணப் பாடசாலைகள் என்பவற்றிற்கு வெவ்வேறாக படிவங்களில் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

1.9 வலயம் அல்லது மாகாணத்திற்குரிய ஆசிரிய பற்றாக்குறை மேலதிக ஆசிரியர்கள் என்பது உரிய ஆசிரிய எண்ணிக்கை அடிப்படையிலான அனுமதிக்கப்பட்ட ஆசிரிய எண்ணிக்கைக்குச் சமமான முறையில் கணிப்பீடு செய்யப்படுவதோ, எந்தப் பாடசாலையிலாவது ஆசிரியர் பற்றாக்குறையோ மேலதிகமோ ஏற்படாத வகையில் சமப்படுத்தப்பட வேண்டும். எனினும் தனியே புள்ளி விபரங்களில் மாத்திரமன்றி பாடசாலைத் தேவைகள் மற்றும் ஆசிரிய வகைகள் பற்றியும் இங்கு கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

1.10 ஏதாவதொரு பாடசாலையில் கணிப்பீடு செய்யப்பட்ட உரிய ஆசிரிய தொகையை விட அப்பாடசாலைக்குக் கணிப்பீடு செய்யப்பட்ட பொருத்தமான ஆசிரிய எண்ணிக்கை அதிகப்படும் பட்சத்தில் அது அனுமதிக்கப்பட்ட ஆசிரிய எண்ணிக்கை என்று தீர்மானிப்பதற்கு இணைப்பு 4 இன் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மாகாண


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரிய எண்ணிக்கையை பரிசீலனை மற்றும் கணிப்பீடு செய்வது பற்றிய உப குழுவின் பாடசாலை, வலய மற்றும் மாகாண மட்டத்திலான தரவுகளைப் பகுப்பாய்வு செய்து அதன் அவதானிப்புக்களை அவ்விணைப்பில் குறிப்பிட்டு மாகாண ஆசிரிய சேவை எண்ணிக்கைக் குழுவிற்கு சமர்ப்பித்து பாடசாலைகள், வலயங்கள் மற்றும் மாகாண மட்டத்தில் எழும் பிரச்சினைகளுக்காகத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தல் மாகாண கல்விப் பணிப்பாளரின் பொறுப்பாகும். தேசிய பாடசலைகளைப் பொறுத்தவரையில் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக மாகாண ஆசிரிய எண்ணிக்கைப் பரிசீலனை மற்றும் கணிப்பீடு பற்றிய உப குழுவின் அவதானிப்பின் படி மாகாணக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசுடன் அவற்றை தேசிய பாடசாலைப் பணிப்பாளரிடம் சமர்ப்பிப்பது அவசியமாகும்.

1.11 மாகாண ஆசிரிய எண்ணிக்கைப் பரிசீலனை மற்றும், கணிப்பீட்டு உபகுழுவின் மேற்பார்வையின் படி மாகாண ஆசிரிய சேவை எண்ணிக்கை குழு மூலம் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பற்றி இணைப்பு 4 இல் குறிப்பிட்டுள்ள படி மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் எனக்கு அறிக்கைப்படுத்தப்பட வேண்டும். தேசிய பாடசாலைகள் சம்பந்தப்பட்ட தீர்மானங்கள் அவசியமான சகல விதப்புரைகளுடனும் அனுமதிக்காக அமைச்சின் ஆசிரிய சேவை எண்ணிக்கைக் குழுவிடம் அறிக்கைப் படுத்தல் தேசிய பாடசாலை பணிப்பாளரின் பொறுப்பாகும்.

1.12 மாகாண ஆசிரிய சேவை எண்ணிக்கைக் குழுவிற்கு தீர்மானங்களை எடுப்பதற்காக மேற்படி உப குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அவதானிப்புக்கள் எவ் வகையிலும் போதியதாக அமையாத சந்தப்பங்களில் மாத்திரம், அமைச்சின் ஆசிரிய சேவை எண்ணிக்கைக் குழுவிடம் பிரச்சினையைச் சமர்ப்பித்து தீர்மானங்களைப் பெற்றுக் கொள்வதற்கு மாகாண ஆசிரிய சேவை எண்ணிக்கைக் குழுவின் செயலாளர் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். எவ்வாறாயினும் இதற்காக நிச்சயிக்கப்பட்டுள்ள கால அமைப்புக்கு வெளியே செயற்படுவதற்கு எவ்வித வாய்ப்பும் இல்லை என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

1.13 எவ்வாறாயினும் ஒவ்வொரு பாடசாலையினதும் மாகாணத்தினதும் குறைவாக உள்ள உரிய ஆசிரிய எண்ணிக்கையைப் பூரணப்படுத்தியதன் பின்னரே ஏனைய பாடசாலைகளுக்குரிய ஆசிரிய எண்ணிக்கையை மிக விரைவில் கணிப்பீடு செய்து பொருத்தமான ஆசிரிய எண்ணிக்கையினராகவும் மேலதிகமாகத் தேவைப்படுகின்ற ஆசிரிய எண்ணிக்கையை பூர்த்தி செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்தல் மாகாண ஆ. சேவை எண்ணிக்கைக் குழுவினால் செய்வதற்கு விசேடமாக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

1.14 இச் சுற்றுநிருபம் தொடர்பான விதிமுறைகள் அறிவுறுத்தல்கள் என்பவற்றைக் கடைப்பிடிக்கும் பொழுது ஏதும் சிக்கல்கள் ஏற்படின் ஆசிரிய சேவை எண்ணிக்கைக் குழுவின் செயலாளரான கல்வியமைச்சின் திட்டமிடல் செயற்சாதனை, மீளாய்வுப் பிரிவின் பணிப்பாளரிடம் ஏற்படுமிடத்து அச்சிக்கலை சமர்ப்பித்து உரிய ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

2. விபரங்களும் அறிவுறுத்தல்களும்.

2.1 உரிய ஆசிரிய எண்ணிக்கை.

2.1.1 ஒரு பாடசாலையின் உரிய ஆசிரிய எண்ணிக்கை என்பது இச் சுற்றுநிருபத்தின் விதிமுறைகளுக்கமைவாகக் கணிப்பிடப்படும் பாடசாலை ஒன்றின் கற்பித்தல் செயல்பாடுகளில் ஈடுபடும் ஆசிரிய எண்ணிக்கையாகும்.

இச் சுற்றுநிருபத்திற்கு அமைவாக மேற்படி ஆசிரிய எண்ணிக்கையை செயற்பாடுகளுக்கேற்ப மூன்று பிரதான பகுதிகளாகப் பிரித்துக் காட்டலாம்.

I. மேற்பார்வை வேலைகளில் ஈடுபடுபவர்.

II. பாடக் கற்பித்தல் வேலைகளில் ஈடுபடுபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

III. ஆலோசனைச் செயற்பாடு/ நூல் நிலையப் பொறுப்பு/ உடற் கல்வி நடவடிக்கை/ விசேட கல்வி நிகழ்ச்சிகள் என்பவற்றில் ஈடுபடுபவர் என்ற வகையிலாகும்.

2.1.2 **மேற்பார்வை வேலைகளில் ஈடுபடுபவர்**

பாடசாலையில் பாடத் திட்டத்தைச் சரிவரச் சிறப்பாக அமுல் நடாத்துவதால் மாணவர் சாதனையை மேம்படுத்தல், சிறந்த நிர்வாக நடவடிக்கைகளால் பாடசாலையை மனங் கவரக்கூடிய இடமாக அமைக்கப்படுதல் ஆகிய நடவடிக்கைகளுக்காக பாடசாலை உரிய வகையில் மேற்பார்வை செய்யப்பட வேண்டும். இவ் வேலையை நிறைவேற்றிக் கொள்வதற்காக அவ்வப் பாடசாலைகளுக்கு ஏற்ற வகையில் மேற்பார்வை வேலைகளில் ஈடுபடுத்திக் கொள்ளும் ஆசிரியர்களுக்கு கடமைகளை ஒப்படைத்தல் பாடசாலை அதிபரின் கடமையாகும்.

மேலும் மேற்பார்வை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற ஆசிரியர்கள் வாரமொன்றுக்கு குறைந்த பட்சம் 40 நிமிடங்களைக் கொண்ட 16 பாடவேளைகள் கற்பித்தல் வேலைகளில் ஈடுபடுதல் வேண்டும்.

2.1.3 **பாடக் கற்பித்தில் வேலைகளில் ஈடுபடுபவர்**

பாடக் கற்பித்தலில் ஈடுபடுகின்ற ஆசிரியர்கள், வாரமொன்றுக்குப் பொதுவாக 40 நிமிடங்களைக் கொண்ட 35 பாடவேளைகளும், பாடக் கற்பித்தலுக்குப் புறம்பாக வகுப்புக்குப் பொறுப்பாகவுள்ள ஓர் ஆசிரியர் அவ்வாறு வகுப்புக்கு பொறுப்பாக இருக்கும் காலங்களில் 33 பாட வேளைகள் கற்பித்தல் வேலைகளில் ஈடுபடுதல் வேண்டும்.

உயர்தர பரீட்சைப் பாடங்களை கற்பித்தற்காக இயன்ற சகல சந்தர்ப்பங்களிலும் பட்டதாரிகளையோ, அதற்குச் சமமான தகைமையுள்ளவர்களையோ ஈடுபடுத்த வேண்டும். அவர்கள் ஒரு வாரத்திற்கு கற்பிக்க வேண்டிய குறைந்த பட்சப் பாடவேளைகள் 30 ஆக இருக்க வேண்டும்.

2.1.4 (அ). **ஆலோசனைச் செயற்பாடுகளில் ஈடுபடும் ஆசிரியர்கள்**

மொத்த மாணவர் 300க்கு மேற்பட்டவர்களைக் கொண்ட பாடசாலைகளில் ஓர் ஆசிரியர் ஆலோசனைச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்காக விடுவிக்கப்பட்டுள்ளார். மொத்த மாணவர் எண்ணிக்கை 300 அல்லது அதற்குக் குறைவான பாடசாலைகளில் ஆலோசனைச் சேவைக்காக ஆசிரியர் குழுவிலிருந்து ஓர் ஆசிரியரை 10 பாட வேளைகளுக்கு எண்ணிக்கைக்கு ஆலோசனை வேலைகளுக்காக ஈடுபடுத்திக் கொள்ளலாம். (மொழியடிப்படையில் இரு மொழிப்பாடசாலைகளுக்கு இரண்டு ஆசிரியர்களை ஈடுபடுத்திக் கொள்ளலாம்.

(ஆ). **நூல் நிலையச் செயற்பாடுகளில் ஈடுபடும் ஆசிரியர்கள்**

பாடசாலையின் நூல் நிலைய கற்பித்தல் வள நிலையங்களாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள பாடசாலைகளில் இலங்கை ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு ஏற்ப நூலகர் ஒருவராகச் சேவையாற்றுவதற்கு அமைச்சு மூலம் உரிய முறையில் பயிற்றுவிக்கப்பட்ட ஓர் ஆசிரியரை நூல் நிலையப் பொறுப்பாசிரியராகக் கடமை புரிவதற்காக நியமித்துக் கொள்ள அனுமதி உண்டு. மேலும் ஏனைய பாடசாலைகளில் உரிய முறையிலான நூலகம் ஒன்று இருப்பின் நூல் நிலைய நடவடிக்கைகளுக்காக பயிற்றுவிக்கப்பட்ட ஓர் ஆசிரியரை பாடசாலை ஆசிரியர் எண்ணிக்கைக் குழுவிற் சேர்த்துக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ). **உடற்கல்வி ஆசிரியர்கள்**

உடற்கல்வி ஆசிரியர்களின் தேவையைப் பின்வருமாறு தீர்மானிக்கப்பட வேண்டும்.

| பாடசாலை மாணவர் எண்ணிக்கை | உரிய ஆசிரியர் எண்ணிக்கை |
|---|---|
| 750 - 2000 வரை | 1 |
| 2000 - 3000 வரை | 2 |
| 3000 மேல் | 3 |
| விளையாட்டுப் பாடசாலைச் செயற் திட்டம் அமுல் நடாத்தப்படும் பாடசாலைகள் | 5 |

(ஈ). **விஷேட கல்விக்கான ஆசிரியர்கள்**

விஷேட கல்விப் பிரிவுகளை அனுமதித்து நிறுவப்பட்டுள்ள பாடசாலைகளில் அதற்கு வேண்டிய 1:5 ஆசிரிய மாணவ விகிதாசாரத்திற்கேற்ப விஷேட கல்விக்காகப் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களை உரிய ஆசிரியர் எண்ணிக்கைக்கு உட்படுத்தப்படலாம்.

2.1.5 பின்வரும் அட்டவணையின் மூன்றாம் நிரலிற் காணப்படும் விதப்புரைகளுக்கு ஏற்ப ஆசிரிய எண்ணிக்கை குறி காட்டப்படும்.

| வேலையடிப்படை | ஆசிரியர் வகை | பிரிவு |
|---|---|---|
| மேற்பார்வை வேலைகளில் ஈடுபாடு கற்பித்தலில் ஈடுபாடு | (1-5) ஆரம்பம்<br>(6-11) இடைநிலை<br>(12-13) உயர்தரம் | அட்டவணை 2.1<br>அட்டவணை 2.2<br>அட்டவணை 2.3 |
| கற்பித்தலில் ஈடுபாடு | (1-5) ஆரம்பம்<br>(6-11) இடைநிலை<br>(12-13) உயர்தரம் | அட்டவணை 2.4<br>அட்டவணை 2.5 (அ), 2.5 (ஆ)<br>அட்டவணை 2.6 |
| ஆலோசனைச் சேவை/ நூல் நிலையங்கள்/உடற் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபாடு | முழுப் பாடசாலைக்கும் பிரிவுக்கும் | 2.1.4 (ஆ) (இ) மற்றும் (ஈ) பந்திகள் |

2.1.6 உரிய ஆசிரிய எண்ணிக்கைக்குப் புறம்பான கல்வி சார் ஆளணியினர்

2:1 இல் குறிப்பிடப்பட்டுள்ள உரிய ஆசிரிய எண்ணிக்கைக்குப் புறம்பாக ஒவ்வொரு பாடசாலைக்கும் ஓர் அதிபர் உரித்தாகுகிறார். மேலும் பாடசாலை ஒன்றுக்கு கிடைக்கும் பிரதி அதிபர்களின் உரிய எண்ணிக்கை மேலே குறிப்பிட்ட அட்டவணை 1.1 மூலம் தரப்பட்டுள்ளது. உதவி அதிபர்களின் உரிய எண்ணிக்கை அட்டவணை 1.2 இல் காட்டப்படுகின்றது.

2.2 ஒவ்வொரு பாடசாலையின் கல்விசார் ஆளணியினரை கணிப்பீடு செய்தல். ஒவ்வொரு அதிபரும் தமது பாடசாலைக்குரிய அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர்களின் எண்ணிக்கை மற்றும் உரிய ஆசிரியர்களின் எண்ணிக்கையை கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் நடவடிக்கைகளைப் பின்பற்றுவதன் மூலம் கணிப்பீடு செய்து கொள்ள முடியும். இவ் எண்ணிக்கை தொடர்ந்துவரும் கல்வி ஆண்டிற்கான உரிய ஆசிரிய எண்ணிக்கையாகக் கருதப்பட வேண்டும். (அதிபர் தவிர்ந்த ஏனை பதவிகளுக்கான ஆளணியினர் மொழி மூல அடிப்படையில் வெவ்வேறாகக் கணிப்பீடு செய்யப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.2.1 **கட்டம் I**

குறிப்பிட்ட ஆசிரிய எண்ணிக்கையைக் கணிப்பிடுவதற்காக மாணவர் எண்ணிக்கை மற்றும் வகுப்புக்களின் எண்ணிக்கை என்பவற்றைக் கருத்திற் கொள்ளும் போது அவ்வாண்டின் மார்ச் முதலாம் திகதியன்று பாடசாலையிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை, வகுப்புக்களின் எண்ணிக்கை என்பவற்றை மொழி மூல அடிப்படையில் வெவ்வேறாகக் குறித்துக் கொள்ளவும். உயர்தர வகுப்புக்களுக்காக கணிப்பிடப்படுவது அடுத்துவரும் ஆண்டுக்காக எதிர்பார்க்கப்படும் மாணவர் எண்ணிக்கைப்படியாகும். இது பாடசாலையின் தற்போதைய உயர்தர மாணவர் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஓர் எண்ணிக்கையாக இருக்க வேண்டும்.

(இரண்டாம் முறை பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு 11 மற்றும் 13 தரங்களில் வகுப்பு நடத்துவதாயின் மாத்திரம் ஏற்கனவே பாடசாலையில் கல்வி கற்கின்ற வகுப்பில் பதிவு செய்யப்பட்டு அம்மாணவர் எண்ணிக்கையையும் சேர்த்துக் கொள்ளவும்.)

2.2.2 **கட்டம் II**

குறித்துக் கொள்ளப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் அட்டவணையின் உதவியுடன் கல்விசார் ஆளணியினரைக் கணிப்பீடு செய்து இணைப்பு 1ல் காட்டப்பட்டுள்ள ஆ.எ. (பாடசாலை) படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட படிவத்தின் II ம் இலக்கப் பகுதியைப் பூரணப்படுத்தவும்.

I. அதிபர்களின் எண்ணிக்கை - ஒவ்வொரு பாடசாலைக்கும் ஓர் அதிபர் உரித்தாகுகிறார்.

II. உரிய பிரதி அதிபர்களின் எண்ணிக்கை - அட்டவணை இலக்கம் 1.1

| பாடசாலையின் தன்மை | பிரதி அதிபர்களின் எண்ணிக்கை |
|---|---|
| உயர்தர மாணவர்களின் எண்ணிக்கை 350க்கு மேல், 6-11 இடைநிலைக் கல்விப் பிரிவு மாணவர் எண்ணிக்கை 500க்கு மேல் மற்றும் 1-5 ஆரம்பப் பிரிவின் மாணவர் எண்ணிக்கை 800க்கு மேலும் மற்றும் மொத்த மாணவர் எண்ணிக்கை 2500 ற்கு மேல் உள்ள பாடசாலைகள். | 03 |
| மேற்படி வகைகளைச் சாராத எனினும் உயர்தர மாணவர் எண்ணிக்கை 210 க்கு மேல் மற்றும் 6-11 இடை நிலைப் பிரிவு மாணவர் எண்ணிக்கை 960 க்கு மேல் மொத்த மாணவர் எண்ணிக்கை 1500 க்கு மேல் உள்ள பாடசாலைகள். | 02 |
| மேற்படி இரு வகைகளையும் சாராத எனினும் முழு மாணவர் தொகை 500 க்கு மேற்பட்ட பாடசாலைகள். | 01 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பிரதி அதிபர்கள் உரிய ஆசிரியர் எண்ணிக்கைக்கு புறம்பாகக் கிடைக்கின்றனர். அதிபர்களைப் பாடசாலைக்கு நியமிக்கும் போது முதலில் சகல பாடசாலைகளுக்குமான அதிபர்களையும் அதை அடுத்து பிரதி அதிபர்களின் பதவிகளையும் அதற்குப் பின் உதவி அபதிர்கள் பதவிகளையும் பூர்த்தி செய்யும் வகையில் அமுல் நடாத்தப்பட வேண்டும்.

III. **உரிய உதவி/ உப அதிபர்களின் எண்ணிக்கை** – அட்டவணை இ. 1-2

| பாடசாலையின் தன்மை | 1-5 ஆரம்பப் பிரிவிற்கான உதவி அதிபர்களின் எண்ணிக்கை | 6-11 இடைநிலைப் பிரிவிற்கான உதவி அதிபர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| (அ). 1-5 ஆரம்பப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட மொத்த மாணவர் எண்ணிக்கை 600க்கு மேல் மற்றும் 6-11 இடைநிலைப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட முழு மாணவர் எண்ணிக்கை 240 க்கு மேல் என்ற இரண்டு நிலைகளையும் பூரணப் படுத்தும் பாடசாலைக்கு. | 01 | - |
| (ஆ). 6-11 இடைநிலைப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட மாணவர் எண்ணிக்கை 960 க்கு மேல் மற்றும் உயர்தர மாணவர் எண்ணிக்கை 140 க்கு மேல் ஆகிய இரண்டு நிலை களையும் பூரணப்படுத்தும் பாடசா லை ஒன்றிற்கு. | - | 01 |

ஏதாவது ஒரு பாடசாலை (அ) மற்றும் (ஆ) ஆகிய இரண்டு சந்தர்ப்பத்திற்கும் உரித்துடையதாயின் அச் சந்தர்ப்பங்கள் இரண்டிற்கும் அமைவாக உதவி அதிபர்களைப் பெற்றுக் கொள்ளலாம். இந்த உதவி அதிபர்கள் அனுமதிக்கப்பட்ட ஆசிரிய எண்ணிக்கைக்குப் புறம்பாக இலங்கை அதிபர் சேவையின் கீழ் கிடைக்கப் பெறும் எண்ணிக்கையாகக் கருதப்பட வேண்டும். பிரதி அதிபர்கள் வாரமொன்றுக்க 12 பாட வேளைகளாவது கற்பித்தலில் ஈடுபட வேண்டும்.

IV. **உரிய ஆசிரிய எண்ணிக்கை**

மேற்பார்வை வேலைகளில் ஈடுபாடு - (IV) -(அ)
பாடக் கற்பித்தலில் ஈடுபாடு - (IV) -(ஆ)
ஆலோசனை அலுவல்களில் ஈடுபாடு
நூல் நிலையப் பொறுப்புக்களில் ஈடுபாடு/ - (IV) -(இ)
உடற்கல்வி நடவடிக்கைகளில் ஈடுபாடு
விசேச கல்வி நடவடிக்கைகளில் ஈடுபாடு
என்பவற்றில் காட்டப்பட்டுள்ளது.

V. **(அ). மேற்பார்வை வேலைகளில் ஈடுபடும் உரிய ஆசிரியர்களின் எண்ணிக்கை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டவணை 2.1**

ஆரம்பப் பிரிவிற்குரிய மேற்பார்வை ஆணணியினரை இவ் அட்டவணை மூலம் தெரிவு செய்து கொள்ளவும்.

| 1-5 ஆரம்பப் பிரிவில் பதிவு செய்யப்பட்டுள்ள மாணவர் எண்ணிக்கை | மேற்பார்வை ஆளணி |
|---|---|
| 250 | - |
| 251 - 550 | 1 |
| 551 - 850 | 2 |
| 851 - 1150 | 3 |
| 1151 - 1450 | 4 |
| 1451 - 1750 | 5 |

(மாணவர் எண்ணிக்கை 300க்கு ஒரு மேற்பார்வையாளர் வீதம் அதிகரிக்கக் கூடியதாக 2:1 அட்டவணையைப் பரவலாக்கலாம்.)

**அட்டவணை 2.2**

இடைநிலைப் பிரிவிற்குரிய மேற்பார்வை ஆனணியினரை இவ் அட்டவணை மூலம் தெரிவு செய்து கொள்ளவும்.

| 6-11 இடைநிலைப் பிரிவில் பதிவு செய்யப்பட்டுள்ள மாணவர் எண்ணிக்கை | மேற்பார்வை ஆளணி |
|---|---|
| 200 க்குக் குறைவு | - |
| 200 - 300 | 1 |
| 301 - 480 | 2 |
| 481 - 720 | 3 |
| 721 - 1440 | 4 |
| 1441 - 1940 | 5 |
| 1941 - 2440 | 6 |
| 2441 - 2940 | 7 |
| 2941 - 3440 | 8 |

(மாணவர் எண்ணிக்கை 500க்கு ஒரு மேற்பார்வையாளர் வீதம் அதிகரிக்கக் கூடியதாக 2:2 அட்டவணையைப் பரவலாக்கலாம்.)

**அட்டவணை இலக்கம் 2:3**

**உயர்தர வகுப்புகளுக்குரிய மேற்பார்வை ஆளணியினர் குழுவை இவ்வட்டவணையின் உதவியால் தெரிவு செய்து கொள்ளவும்**

| பாடசாலையில் அடுத்து வரும் ஆண்டிற்கு உத்தேசிக்கப்படும் முழு உயர்தர மாணவர்களின் எண்ணிக்கை | விஞ்ஞான/ கலை/வர்த்தக பிரிவுகள் | | |
|---|---|---|---|
| | ஒரு பாடத்துறை மாத்திரம் | இரண்டு பாடத்துறை மாத்திரம் | பாடத்துறைகள் 3 அல்லது 4 இருப்பின் |
| 100உம் 100 க்கு குறைவு | 0 | 0 | 0 |
| 101 - 210 | 0 | 1 | 1 |
| 211 - 480 | 1 | 1 | 1 |
| 481 - 960 | 1 | 2 | 2 |
| 960 க்கு மேல் | 1 | 2 | 3 |

பாடசாலைக்குரிய மேற்பார்வை வேலைகளில் ஈடுபடும் ஆசிரிய எண்ணிக்கையை மேற்குறிப்பிட்ட 3 அட்டவணைகளுக்கும் ஏற்ப தெரிவு செய்து கொள்ளவும். இவ்வாசிரியர்கள் குறைந்தபட்சம் 40 நிமிடங்களைக் கொண்ட 16 பாடவேளைகள் கற்பித்தலில் ஈடுபட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iv)

(ஆ) வாசகங்கள் 2.1.4 (அ). (ஆ). (இ). (ஈ). மற்றும் 24, 25 (ஆ) 26 ஏற்ப பாடக்கற்பித்தலில் ஈடு படுகின்ற ஆளணியினர்

அட்டவணை 2.4 ஆரம்பப் பிரிவிற்கான ஆசிரிய எண்ணிக்கை

| மொத்த மாணவர் எண்ணிக்கை | உரிய ஆசிரிய எண்ணிக்கை | | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | ஆரம்ப பொது | ஆங்கிலம் | இரண்டாம் மொழி | |
| 1 - 26 | 1 | 1 | - | 02 |
| 27 - 52 | 2 | 1 | - | 03 |
| 53 - 88 | 3 | 1 | - | 04 |
| 89 - 124 | 4 | 1 | - | 05 |
| 125 - 164 | 5 | 1 | - | 06 |
| 165 - 204 | 6 | 1 | - | 07 |
| 205 - 244 | 7 | 1 | - | 08 |
| 245 - 284 | 8 | 1 | 1 | 10 |
| 285 - 324 | 9 | 1 | 1 | 11 |
| 325 - 364 | 10 | 1 | 1 | 12 |
| 365 - 404 | 11 | 1 | 1 | 13 |
| 405 - 444 | 12 | 1 | 1 | 14 |
| 445 - 484 | 13 | 2 | 1 | 16 |
| 485 - 524 | 14 | 2 | 1 | 17 |
| 525 - 564 | 15 | 2 | 1 | 18 |
| 565 - 604 | 16 | 2 | 1 | 19 |
| 605 - 644 | 17 | 2 | 1 | 20 |
| 645 - 684 | 18 | 3 | 1 | 22 |
| 685 - 724 | 19 | 3 | 1 | 23 |
| 725 - 764 | 20 | 3 | 1 | 24 |
| 765 - 804 | 21 | 3 | 1 | 25 |
| 805 - 844 | 22 | 3 | 1 | 26 |
| 845 - 884 | 23 | 3 | 2 | 28 |
| 885 - 924 | 24 | 3 | 2 | 29 |
| 925 - 964 | 25 | 3 | 2 | 30 |
| 965 - 1004 | 26 | 3 | 2 | 31 |
| 1005 - 1044 | 27 | 3 | 2 | 32 |
| 1045 - 1084 | 28 | 4 | 2 | 34 |
| 1085 - 1124 | 29 | 4 | 2 | 35 |
| 1125 - 1164 | 30 | 4 | 2 | 36 |
| 1165 - 1204 | 31 | 4 | 2 | 37 |
| 1205 - 1244 | 32 | 5 | 2 | 39 |
| 1245 - 1284 | 33 | 5 | 2 | 40 |
| 1285 - 1324 | 34 | 5 | 2 | 41 |
| 1325 - 1364 | 35 | 5 | 2 | 42 |
| 1365 - 1404 | 36 | 5 | 2 | 43 |
| 1405 - 1444 | 37 | 5 | 2 | 44 |
| 1445 - 1484 | 38 | 6 | 2 | 46 |
| 1485 - 1524 | 39 | 6 | 2 | 47 |
| 1525 - 1564 | 40 | 6 | 2 | 48 |
| 1565 - 1604 | 41 | 6 | 2 | 49 |
| 1605 - 1644 | 42 | 6 | 2 | 50 |
| 1645 - 1684 | 43 | 6 | 3 | 52 |
| 1685 - 1724 | 44 | 6 | 3 | 53 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| மொத்த மாணவர் எண்ணிக்கை | உரிய ஆசிரிய எண்ணிக்கை | | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | ஆரம்ப பொது | ஆங்கிலம் | இரண்டாம் மொழி | |
| 1725 - 1764 | 45 | 6 | 3 | 54 |
| 1765 - 1804 | 46 | 6 | 3 | 55 |
| 1805 - 1844 | 47 | 7 | 3 | 57 |
| 1845 - 1884 | 48 | 7 | 3 | 58 |
| 1885 - 1924 | 49 | 7 | 3 | 59 |
| 1925 - 1964 | 50 | 7 | 3 | 60 |
| 1965 - 2004 | 51 | 7 | 3 | 61 |
| 2005 - 2044 | 52 | 8 | 3 | 63 |
| 2045 - 2084 | 53 | 8 | 3 | 64 |
| 2085 - 2124 | 54 | 8 | 3 | 65 |
| 2125 - 2164 | 55 | 8 | 3 | 66 |
| 2165 - 2204 | 56 | 8 | 3 | 67 |
| 2205 - 2244 | 57 | 8 | 3 | 68 |
| 2245 - 2284 | 58 | 8 | 3 | 69 |
| 2285 - 2324 | 59 | 9 | 3 | 71 |
| 2325 - 2364 | 60 | 9 | 3 | 72 |
| 2365 - 2404 | 61 | 9 | 3 | 73 |
| 2405 - 2444 | 62 | 9 | 3 | 74 |
| 2445 - 2464 | 63 | 9 | 3 | 75 |
| 2465 - 2504 | 64 | 9 | 4 | 77 |
| 2505 - 2544 | 65 | 9 | 4 | 78 |
| 2545 - 2584 | 66 | 9 | 4 | 79 |
| 2585 - 2624 | 67 | 10 | 4 | 81 |
| 2625 - 2664 | 68 | 10 | 4 | 82 |
| 2665 - 2704 | 69 | 10 | 4 | 83 |
| 2705 - 2744 | 70 | 10 | 4 | 84 |
| 2745 - 2784 | 71 | 10 | 4 | 85 |
| 2785 - 2824 | 72 | 10 | 4 | 86 |
| 2825 - 2864 | 73 | 10 | 4 | 87 |
| 2865 - 2904 | 74 | 10 | 4 | 88 |
| 2905 - 2944 | 75 | 11 | 4 | 90 |
| 2945 - 2984 | 76 | 11 | 4 | 91 |
| 2985 - 3024 | 77 | 11 | 4 | 92 |
| 3025 - 3064 | 78 | 11 | 5 | 94 |
| 3065 - 3104 | 79 | 11 | 5 | 95 |
| 3105 - 3144 | 80 | 11 | 5 | 96 |
| 3145 - 3184 | 81 | 11 | 5 | 97 |
| 3185 - 3224 | 82 | 11 | 5 | 98 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 2.5 (அ)

இடைநிலைப் பிரிவிற்குரிய அழகியல் கலைப் பாடத்தைத் தவிர ஏனைய பாடங்களுக்கான ஆசிரியர்களின் எண்ணிக்கை

6-11 தரங்களுக்கு

| இடைநிலைப் பிரிவின் முழு மாணவர் எண்ணிக்கை (6-11) | உரிய ஆசிரிய எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | விஞ்ஞான/ கணிதம் | ஆங்கிலம் | தொழில் நுட்பம் | இரண்டாம் மொழி | பொது | மொத்தம் |
| 1 - 72 | 1 | 1 | 0 | 0 | * 2 | 04 |
| 73 - 140 | 2 | 1 | 1 | 0 | 2 | 06 |
| 141 - 200 | 2 | 1 | 1 | 0 | 3 | 07 |
| 201 240 | 2 | 1 | 1 | 1 | 3 | 08 |
| 241 - 280 | 3 | 1 | 1 | 1 | 4 | 10 |
| 281 - 320 | 3 | 1 | 1 | 1 | 5 | 11 |
| 321 - 360 | 4 | 2 | 1 | 1 | 4 | 12 |
| 361 - 400 | 4 | 2 | 1 | 1 | 5 | 13 |
| 401 - 440 | 5 | 2 | 1 | 1 | 5 | 14 |
| 441 - 480 | 5 | 2 | 1 | 1 | 6 | 15 |
| 481 - 520 | 6 | 2 | 2 | 1 | 6 | 17 |
| 521 - 560 | 6 | 2 | 2 | 1 | 7 | 18 |
| 561 - 600 | 6 | 2 | 2 | 1 | 8 | 19 |
| 601 - 640 | 7 | 3 | 2 | 1 | 7 | 20 |
| 641 - 680 | 7 | 3 | 2 | 1 | 8 | 21 |
| 681 - 720 | 7 | 3 | 2 | 1 | 9 | 22 |
| 721 - 760 | 8 | 3 | 2 | 1 | 10 | 24 |
| 761 - 800 | 8 | 3 | 2 | 1 | 11 | 25 |
| 801 - 840 | 9 | 3 | 2 | 1 | 11 | 26 |
| 841 - 880 | 9 | 3 | 2 | 1 | 12 | 27 |
| 881 - 920 | 9 | 4 | 3 | 1 | 11 | 28 |
| 921 - 960 | 9 | 4 | 3 | 1 | 12 | 29 |
| 961 - 1000 | 10 | 4 | 3 | 2 | 12 | 31 |
| 1001 - 1040 | 10 | 4 | 3 | 2 | 13 | 32 |
| 1041 - 1080 | 11 | 4 | 3 | 2 | 13 | 33 |
| 1081 - 1120 | 11 | 4 | 3 | 2 | 14 | 34 |
| 1121 - 1160 | 11 | 4 | 3 | 2 | 15 | 35 |
| 1161 - 1200 | 11 | 5 | 3 | 2 | 15 | 36 |
| 1201 - 1240 | 12 | 5 | 3 | 2 | 16 | 38 |
| 1241 - 1280 | 12 | 5 | 4 | 2 | 16 | 39 |
| 1281 - 1320 | 12 | 5 | 4 | 2 | 17 | 40 |
| 1321 - 1360 | 13 | 5 | 4 | 2 | 17 | 41 |
| 1361 - 1400 | 13 | 5 | 4 | 2 | 18 | 42 |
| 1401 - 1440 | 14 | 5 | 4 | 2 | 18 | 43 |
| 1441 - 1480 | 14 | 6 | 4 | 2 | 19 | 45 |
| 1481 - 1520 | 14 | 6 | 4 | 2 | 20 | 46 |
| 1521 - 1560 | 15 | 6 | 4 | 2 | 20 | 47 |
| 1561 - 1600 | 15 | 6 | 4 | 2 | 21 | 48 |
| 1601 - 1640 | 15 | 6 | 4 | 2 | 22 | 49 |
| 1641 - 1680 | 16 | 6 | 5 | 2 | 21 | 50 |
| 1681 - 1720 | 16 | 7 | 5 | 2 | 22 | 52 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இடைநிலைப் பிரிவின் முழு மாணவர் எண்ணிக்கை 6-11 | உரிய ஆசிரிய எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | விஞ்ஞான/ கணிதம் | ஆங்கிலம் | தொழில் நுட்பம் | இரண்டாம் மொழி | பொது | மொத்தம் |
| 1721 - 1760 | 16 | 7 | 5 | 2 | 23 | 53 |
| 1761 - 1800 | 17 | 7 | 5 | 2 | 23 | 54 |
| 1801 - 1840 | 17 | 7 | 5 | 2 | 24 | 55 |
| 1841 - 1880 | 17 | 7 | 5 | 2 | 25 | 56 |
| 1881 - 1920 | 18 | 7 | 5 | 2 | 25 | 57 |
| 1921 - 1960 | 18 | 7 | 5 | 3 | 26 | 59 |
| 1961 - 2000 | 18 | 8 | 5 | 3 | 26 | 60 |
| 2001 - 2040 | 19 | 8 | 5 | 3 | 26 | 61 |
| 2041 - 2080 | 19 | 8 | 6 | 3 | 26 | 62 |
| 2081 - 2120 | 19 | 8 | 6 | 3 | 27 | 63 |
| 2121 - 2160 | 20 | 8 | 6 | 3 | 27 | 64 |
| 2161 - 2200 | 20 | 8 | 6 | 3 | 29 | 66 |
| 2201 - 2240 | 20 | 8 | 6 | 3 | 30 | 67 |
| 2241 - 2280 | 21 | 9 | 6 | 3 | 29 | 68 |
| 2281 - 2320 | 21 | 9 | 6 | 3 | 30 | 69 |
| 2321 - 2360 | 21 | 9 | 6 | 3 | 31 | 70 |
| 2361 - 2400 | 22 | 9 | 6 | 3 | 31 | 71 |
| 2401 - 2440 | 22 | 9 | 7 | 3 | 32 | 73 |
| 2441 - 2480 | 22 | 9 | 7 | 3 | 33 | 74 |
| 2481 - 2520 | 23 | 9 | 7 | 3 | 33 | 75 |
| 2521 - 2560 | 23 | 10 | 7 | 3 | 33 | 76 |
| 2561 - 2600 | 23 | 10 | 7 | 3 | 34 | 77 |
| 2601 - 2640 | 24 | 10 | 7 | 3 | 34 | 78 |
| 2641 - 2680 | 24 | 10 | 7 | 3 | 36 | 80 |
| 2681 - 2720 | 24 | 10 | 7 | 3 | 37 | 81 |
| 2721 - 2760 | 25 | 10 | 7 | 3 | 37 | 82 |
| 2761 - 2800 | 25 | 10 | 7 | 3 | 38 | 83 |
| 2801 - 2840 | 25 | 11 | 8 | 3 | 37 | 84 |
| 2841 - 2880 | 26 | 11 | 8 | 3 | 37 | 85 |
| 2881 - 2920 | 26 | 11 | 8 | 4 | 38 | 87 |
| 2921 - 2960 | 27 | 11 | 8 | 4 | 38 | 88 |
| 2961 - 3000 | 27 | 11 | 8 | 4 | 39 | 89 |
| 3001 - 3040 | 27 | 11 | 8 | 4 | 40 | 90 |
| 3041 - 3080 | 27 | 11 | 8 | 4 | 41 | 91 |
| 3081 - 3120 | 28 | 12 | 8 | 4 | 40 | 92 |
| 3121 - 3160 | 28 | 12 | 8 | 4 | 42 | 94 |
| 3161 - 3200 | 29 | 12 | 9 | 4 | 41 | 95 |
| 3201 - 3240 | 29 | 12 | 9 | 4 | 42 | 96 |
| 3241 - 3280 | 29 | 12 | 9 | 4 | 43 | 97 |
| 3281 - 3320 | 29 | 12 | 9 | 4 | 44 | 98 |
| 3321 - 3360 | 30 | 12 | 9 | 4 | 44 | 99 |
| 3361 - 3400 | 30 | 13 | 9 | 4 | 45 | 101 |
| 3401 - 3440 | 31 | 13 | 9 | 4 | 45 | 102 |
| 3441 - 3480 | 31 | 13 | 9 | 4 | 46 | 103 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இடைநிலைப் பிரிவின் முழு மாணவர் எண்ணிக்கை 6-11) | உரிய ஆசிரிய எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | விஞ்ஞான/ கணிதம் | ஆங்கிலம் | தொழில் நுட்பம் | இரண்டாம் மொழி | பொது | மொத்தம் |
| 3481 - 3520 | 31 | 13 | 9 | 4 | 47 | 104 |
| 3521 - 3560 | 31 | 13 | 9 | 4 | 48 | 105 |
| 3561 - 3600 | 32 | 13 | 10 | 4 | 47 | 106 |
| 3601 - 3640 | 32 | 14 | 10 | 4 | 48 | 108 |
| 3641 - 3680 | 33 | 14 | 10 | 4 | 48 | 109 |
| 3681 - 3720 | 33 | 14 | 10 | 4 | 49 | 110 |
| 3721 - 3760 | 33 | 14 | 10 | 4 | 50 | 111 |
| 3761 - 3800 | 33 | 14 | 10 | 4 | 51 | 112 |
| 3801 - 3840 | 34 | 14 | 10 | 4 | 51 | 113 |
| 3841 - 3880 | 34 | 14 | 10 | 5 | 52 | 115 |
| 3881 - 3920 | 35 | 15 | 10 | 5 | 51 | 116 |
| 3921 - 3960 | 35 | 15 | 11 | 5 | 51 | 117 |
| 3961 - 4000 | 35 | 15 | 11 | 5 | 52 | 118 |
| 4001 - 4040 | 36 | 15 | 11 | 5 | 52 | 119 |
| 4041 - 4080 | 36 | 15 | 11 | 5 | 53 | 120 |
| 4081 - 4120 | 36 | 15 | 11 | 5 | 55 | 122 |

* பொது ஆசிரியர் அழகியல் பாடத்தை கற்பிப்பதற்கு ஈடுபடுத்தப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை இல 2.5 (ஆ) இடை நிலைப் பிரிவின்அழகியற் பாடத்திட்டத்துக்கான உரிய ஆசிரிய எண்ணிக்கை (6-11 தரங்கள்.)

இவ் விடயத்தில் உரிய ஆசிரியர்களை கணிப்பிடும் பொழுது அழகியற் பாடம் ஒன்றைக் கற்றுக் கொள்கின்ற மாணவ எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை விசேடமாக கருத்திற் கொள்ளவும்.

| ஓர் அழகியல் பாடத்தைக் கற்றுக் கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை | அழகியற் பாடத்திற்கு உரிய ஆசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1 - 72 | * |
| 73 - 200 | 01** |
| 201 - 240 | 01 |
| 241 - 720 | 02 |
| 721 - 1100 | 03 |
| 1101 - 1920 | 04 |

வெவ்வேறாக ஒவ்வொரு அழகியல்கலை பாடத்தையும் கற்றுக் கொள்ளும் எண்ணிக்கைக்கு ஏற்ப ஒவ்வொரு அழகியற் கலை பாடத்திற்காகவும் வெவ்வேறாக ஆசிரியர்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

* அழகியற்கலை பாடக்கற்பித்தலுக்காக வேறாக ஓர் அழகியற் கலை ஆசிரியர் ஒதுக்கப்பட மாட்டாது. ஆனபடியால் இப் பாடத்தை கற்பிப்பதற்காக 2.5 (அ) அட்டவணையின் படி ஒரு பொது ஆசிரியரை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

* இவ்வாறான ஒரு பாடசாலையில் அழகியற் கல்வி கற்பிப்பதற்கு ஓர் அழகியற் கல்வி ஆசிரியர் கட்டாயமாகத் தேவைப்படின், அண்மையிலுள்ள பாடசாலை ஒன்றில் இருந்து இணைப்புச் செய்ய வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 2.6 உயர்தர விஞ்ஞானக் கலை/வர்த்தக பிரிவுகளுக்கான உரிய ஆசிரியர்களின் எண்ணிக்கை.

| வகுப்புக்கள் தொகை | விஞ்ஞான/கலை/வர்த்தக பிரிவுகளில் ஒரு பாடத்துறை மாத்திரம் இருப்பின் உரிய ஆசிரிய எண்ணிக்கை | | | விஞ்ஞான/கலை/வர்த்தக பிரிவுகளில் இரு பாடத்துறைகள் இருப்பின் உரிய ஆசிரிய எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|
| | பிரதான பாடம் | மேலதிக பாடம் | மொத்தம் | பிரதான பாடம் | மேலதிக பாடம் | மொத்தம் |
| 1 | 2 | 1 | 3 | - | - | - |
| 2 | 2 | 1 | 3 | 3 | 1 | 4 |
| 3 | 3 | 1 | 4 | 3 | 1 | 4 |
| 4 | 4 | 2 | 6 | 4 | 2 | 6 |
| 5 | 5 | 2 | 7 | 6 | 2 | 8 |
| 6 | 6 | 2 | 8 | 7 | 2 | 9 |
| 7 | 7 | 3 | 10 | 7 | 3 | 10 |
| 8 | 8 | 3 | 11 | 8 | 3 | 11 |
| 9 | 9 | 3 | 12 | 8 | 3 | 11 |
| 10 | 10 | 4 | 14 | 10 | 4 | 14 |

அதிகரிக்கும் ஒவ்வொரு வகுப்புக்கும் பிரதான பாடத்திற்கு ஓர் ஆசிரியர் வீதமும், மேலதிக பாடத்திற்கு அதிகரிக்கும் 3 வகுப்புக்களுக்கு ஓர் ஆசிரியர் வீதமும் வழங்கப்பட வேண்டும். மேலதிக பாடமாக தகவற் தொழில் நுட்பப் பாடமும் இதில் அடங்கும். விஞ்ஞானம் / கலை / வர்த்தம் வேறாகக் கணிப்பிடப்பட வேண்டும்.

**IV. (இ). ஆலோசனை நடவடிக்கைகள் / நூல் நிலையப் பொறுப்பு வேலைகள் உடற்கல்வி விசேட கல்வி என்பவற்றிற்கான உரிய ஆசிரியர்களின் எண்ணிக்கை.**

ஆலோசனைச் செயற்பாடு, நூல் நிலையப் பொறுப்பு, உடற்கல்வி, விசேட கல்வி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்திக் கொள்ளப்பட வேண்டிய ஆசிரியர்கள் 2:1:5 இல் முறையே பந்திகள் (அ), (ஆ), (இ), (ஈ) ஏற்ப கணிப்பிடப்பட வேண்டும்.

2.2.3 **கட்டம் III**

தரப்பட்ட "ஆ. எ பாடசாலை" என்ற படிவத்திற்கு ஏற்பத் தயாரித்து, ஒரு பாடசாலையின் ஆசிரிய எண்ணிக்கையைப் பூர்த்தி செய்யவும்.

I. ஆ. எ. (பாடசாலை) 2.2.1 இல் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப மாணவர் இனங் காணப்படும் தகவல்களிற்கு அமைவாக மாணவ எண்ணிக்கை, வகுப்புகளின் எண்ணிக்கை அமைய வேண்டும்.

II. அதிபர் பதவிக்கான உரிய எண்ணிக்கை 2.2 பந்தியின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப அமைய வேண்டும்.

III. உரிய "ஆசிரிய எண்ணிக்கை (பா)" படிவத்தின் இரண்டாம் பிரிவை பயன்படுத்தவும். மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்பார்வை வேலைகளில் ஈடுபடும்
பாடக் கற்பித்தலில் ஈடுபடும் (ஆரம்பக் கல்வி)
பாடக் கற்பித்தலில் ஈடுபடும் (இடைநிலைக் கல்வி)
பாடக் கற்பித்தலில் ஈடுபடும் (உயர்தரக் கல்வி)

என்ற வகையில் ஒன்று சேரும் தொகையை வெவ்வேறாகக் கணித்து உரிய கோடுகளில் இடவும்.

IV. தற்போது பாடசாலை ஒன்றிற்குரிய ஆசிரிய எண்ணிக்கையைக் குறிப்பிடுகையில் எப்போதும் பாடசாலைக்குரிய ஒவ்வொரு ஆசிரியரும் 3 ம் இலக்கப் பகுதியின் ஏதாவது ஒரு வகைக்குள் கட்டாயம் உட்பட்டிருக்க வேண்டும். எனினும் ஓராசிரியரை ஒன்றிற்கு மேற்பட்ட வகைக்குள் உட்படுத்திக் கணக்கீடு செய்யாதிருப்பதில் கவனமாக இருக்க வேண்டும். முதலாவதாக மேற்பார்வை வேலைகளில் ஈடுபடும் ஆசிரியர்கள் ஆலோசனைகளைச் சேவைகளில் ஈடுபடும் ஆசிரியர்கள் மற்றும் நூல் நிலையப் பொறுப்பு வேலைகளில் ஈடுபடுகின்ற ஆசிரியர்கள் என்போர்களின் எண்ணிக்கையை உரிய இடங்களில் குறிப்பிடவும்.

அவ்வாறே கற்பித்தலில் ஈடுபடுகின்ற ஆசிரியர்கள் அவர்களின் நியமனம் தொழிற்பயிற்சி மற்றும் நிபுணத்துவம் என்பவற்றிற்கு ஏற்ப மிகவும் பொருத்தமான வரையறைக்குள் தீர்மானித்து அதற்குரிய இடங்களில் குறிக்கவும். இடைநிலைப் பிரிவின் கீழ் கருதும் போது யாராவது ஒரு ஆசிரியருக்குரிய பாட வேறுபாடு படிவத்தில் விஷேசமாக குறிப்பிடப்பட்டில்லாதிருப்பின் அவ்வாசிரியர் பொது என்ற வரையறைக்குள் உரியவரென்று கருதவும். மேற்பார்வை வேலைகளில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களை வேறு வரையறைக்குள் குறிப்பிடாது மேற்பார்வை வேலைகளின் கீழேயே குறிப்பிடவும். பொது வேறுபாட்டின் கீழ் பாடசாலைக்குரிய ஆசிரிய எண்ணிக்கை பற்றி ஆ.எ. (பா) படிவத்தின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற தகவல்கள் போதுமானவைகளாக அமையாத சந்தர்ப்பத்தில் அது பற்றிய விவர அறிக்கையைச் சமர்ப்பிக்கும் படி கல்விச் செயலாளர் அறிவிப்பார். அப்படியான சந்தர்ப்பங்களில் உடனடியாகச் சமர்ப்பிப்பதற்கு ஏற்ப பொது வரையறைக்குள் குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரியர்களினால் பாடங்கள், பாட வேளைகள், பற்றிய தகவல்களை அதிபர்கள் அறிக்கைப்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

V. 3ம் இலக்கப்பிரிவில் பாடசாலைக்குரியவராக இருந்தும் வேறு வேலைகளுக்காக இணைப்புச் செய்யப்பட்ட அல்லது பூரணமாக முழுக் காலத்துக்கும் விடுவிக்கப்பட்ட ஆசிரியர்கள் குறிப்பிடப்பட வேண்டும்.

VI. ஒரு பாடசாலைக்குரிய ஆசிரியர் எண்ணிக்கை ஆ, எ (பா) பத்திரத்தின் 3ம் பிரிவில் கிடைக்கும் மொத்தக் கூட்டுத் தொகைக்கு சமமானதாக அமைய வேண்டும்.

2.3 பாடசாலையின் தற்போதைய ஆளணியினர் ஒரு பாடசாலையின் தற்போதைய ஆளணியினர் என்று கருதப்படுவது அறிக்கைப்படுத்தப்படும் ஆண்டின் மார்ச் 01 ஆந் திகதியன்றில் பாடசாலைக்கு உரியதாயுள்ள கல்விசார் ஆளணியினராவர். பாடசாலைக்குரியதாக இருந்தும் உரிய ஆண்டியல் கற்கை விடுமுறைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளமை போன்ற அம்சங்களின் அடிப்படையில் பாடசாலைக்கு வெளியேயுள்ள எண்ணிக்கையை அட்டவணைப்படுத்தும் போது உரிய கூட்டில் மாத்திரம் குறிப்பிடப்பட வேண்டும். பாடசாலையின் தற்போதைய ஆளணியினரை இணைப்பு 01 இல் ஆ,எ (பா) படிவத்திற்கேற்பக் குறிப்பிடும் பொழுது அதன் கீழுள்ள பல்வகை வேறுபாடுகளுக்கேற்ப உள்ளடக்கப்பட வேண்டும். இங்கு கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் அவர்கள் நியமனம் பெற்றுள்ள தொழிற்றகைமைகள் மற்றும் நிபுணத்துவம் என்பவற்றின் அடிப்படையில் மிகவும் பொருத்தமான ஆசிரிய வேறுபாடுகளில் சேர்க்கப்பட வேண்டும். அவ்வாறின்றி ஆசிரியர் தற்போது கற்பிக்கின்ற பாடத்தை மாத்திரம் கருத்திற் கொண்டு அவர் ஆசிரிய வேறுபாட்டு வகைகளில் சேர்த்துக் கொள்ளப்படக் கூடாது. மேலும் அது தொடர்பான 2.2.3 பந்தியின் இலக்கம் (V). மற்றும் (VI) அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.4 **ஆசிரிய பற்றாக்குறையும் ஆசிரிய மிகையும்**

ஆசிரிய பற்றாக்குறை மேலதிக தகவல்களை அறிக்கைப்படுத்தும்போது கீழ்க் குறிப்பிடப்படும் விதத்தில் அப்பதங்கள் சரியாக உபயோகிக்கப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ளவும். வகையில் சரியான விளக்கத்துடன் மாத்திரம் இடம் பெறச் செய்வதற்குக் கருத்திற் கொள்ளவும்.

ஒரு பாடசாலையின் ஆசிரியர் பற்றாக்குறை என்பது தேவைக்கேற்பப் பல்வகை வேறுபாடுகளின் கீழ் ஆசிரியர் குழு வெவ்வேறாகக் கொண்டு கருதப்படும் பொழுது ஆசிரியர் பற்றாக்குறை உண்டென்று கிடைக்கும் பற்றாக் குறைகளின் மொத்தமாகும். (இச் சுற்று நிருபத்தின் தேவை கருதி இணைப்பு ஒன்றின் ஆ.எ. (பா) படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வேறுபாடுகளைக் கருத்திற் கொள்ளவும். மேலதிகமென்பது ஆசிரியர் மேலதிகமாக உள்ளனர் என்று கிடைக்கப் பெறும் வேறுபாடுகளில் அம் மேலதிக ஆசிரியர்களின் கூட்டுத் தொகையின் மொத்தமாகும்.

பாடசாலையொன்றில் ஏதாவது ஆசிரிய வேறுபாட்டின் பற்றாக்குறையோ மிகையோ. =

{ அவ் வேறுபாடுகளின் கீழ் பாடசாலையிலுள்ள ஆசிரியர் எண்ணிக்கை } – { அவ்வாசிரிய வேறுபாடுகளின் கீழ் பாடசாலைக்கு அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் எண்ணிக்கையாகும். }

விடை (+) = மேலதிகம்

விடை (-) = பற்றாக்குறை

**குறிப்பு:**

இங்கு அனுமதிக்கப்பட்ட ஆசிரிய எண்ணிக்கை என்பது இச் சுற்று நிருபத்தின் விதிமுறைகளுக்கு அமையப் பாடசாலைக்குரிய மாகாண ஆசிரியர் எண்ணிக்கைக்குழு நிரல் அமைச்சின் உதவியுடன் முகாமைத்துவத் திணைக்களத்தின் இணக்கப்பாட்டுடன் அனுமதித்துக் கொள்ளப்பட்ட ஆசிரிய எண்ணிக்கை என்று கருதப்பட வேண்டும்.

2.5 தகவல்களை அறிக்கைப்படுத்தல்

2.5.1 **தகவல்களை அறிவிக்கும் போது கருத்திற் கொள்ள வேண்டிய அம்சங்கள்**

பாடசாலையொன்றின் உரிய ஆசிரிய எண்ணிக்கையைக் கணிப்பீடு செய்து தகவல்களை அறிவிக்கும் அடிப்படையாவது அடுத்துவரும் ஆண்டிற்கான சுற்று நிருபமூலம் பாடசாலைக்குரிய ஆசிரிய எண்ணிக்கையையும் பாடசாலையிலுள்ள தற்போதைய ஆசிரிய எண்ணிக்கையையும் அமைச்சிற்கு அறிவிப்பதாகும். பாடசாலை மட்டத்தில் சமர்ப்பித்து வலய மட்டத்திலும் மாகாண மட்டங்களில் சாராம்சமாக்கப்பட்டு அமைச்சுக்கு இத் தகவல்கள் சமர்ப்பிக்கும் போது அத் தகவல்களின் நம்பகத் தன்மை பற்றிக் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும். ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதும் அவர்களைப் பதவி நிலைப்படுத்தலும் பற்றிய மிகச் சிறந்த தீர்மானங்களை எடுக்க முடிவதும் அதன் மூலம் ஏதாவதொரு பாடசாலையினால் விசேடமாகக் கோரப்படுகின்ற பொருத்தமான ஆசிரியராளணியனருக்கு அனுமதியை வழங்கக் கூடிய முறையில் திட்டங்களைத் திறமையான முறையில் தயாரிக்கக் கூடியதாக அமைவதும் அமைச்சுக்குக் கிடைக்கும் தகவல்கள் சரியானதும் விசுவாசமானதாகவும் அமையும் முறைக்கேற்பவேயாகும். இது சம்பந்தமாகச் செய்யப்படும் தகவல் வினவல்களின் போது தகவல்கள் சரியானவை என்பதை உறுதிப்படுத்த வேண்டிய கடப்பாடு உரிய உத்தியோகத்தர்களுக்கு உண்டு.

2.5.2 **தகவல்கள் அறிக்கைப்படுத்தப்பட வேண்டிய முறை.**

இச் சுற்றுநிருப விதிகள் அறிவுறுத்தல்கள் என்பவற்றிற்கமைவாக அறிக்கைப்படுத்த வேண்டிய முறை 2.7 அட்டவணையில் காட்டப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளுக்கு முன்பு உரிய தகவல்களை அனுப்புதல் கட்டாயமானதாகும். கீழ்க்காணும் அட்டவணையில் திகதி கால கட்டம் காட்டப்பட்டுள்ளன. 2004 ஆம் ஆண்டிற்குரிய ஆசிரிய எண்ணிக்கையைக் காண்பித்து 2004 ஆம் ஆண்டிற்குள் அறிக்கைப்படுத்தப்பட வேண்டிய முறையைக் காண்பிக்கும் வகையிலான ஓர் உதாரணமாகும். அதன்படி உரிய ஆண்டு சந்தர்ப்பம் என்பனவற்றிற் கேற்பத் திருத்தி அமைத்துக் கொள்ளவும்.

அட்டவணை இலக்கம் 2.7 தகவல்களை அறிக்கைப்படுத்த வேண்டிய முறை.

| தகவல் | படிவம் | தயாரிப்பவர் பெறுநர் விபரம் | | கடைசித் திகதி | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | | தயாரிப்பு | பெறுநர் | | |
| I. ஒரு பாடசாலைக்கான 2004 ஆம் ஆண்டிற்குரிய எண்ணிக்கை, 2004.03.01 திகதியில் பாடசாலைக்குரிய ஆசிரியர் எண்ணிக்கை. | ஆ.எ. (பு) இணைப்பு 01 | அதிபர் | உரிய வலயக் கல்விப் பணிப்பாளர் தேசிய பாடசாலை எனில் ஒரு பிரதியை தே.பா. பணிப்பாளருக்கு அனுப்ப வேண்டும். | 2004.03.15 | உரிய பிரதியொன்று கோவைப் படுத்தீ வைத்துக் கொள்ளப்பட வேண்டும். |
| II. வலயத்திலுள்ள சகல பாடசலைகளிலிருந்தும் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆ.எ.(பா) அறிக்கைச் சுருக்கம் 2004 இற்குரிய ஆசிரிய எண்ணிக்கை மற்றும் மற்றும் 2004.03.01 திகதியன்றில் வலயத்தில் இருக்கும் ஆசிரியர் எண்ணிக் கை. | அ.எ. (வ) இணைப்பு 02 | வலயக் கல்விப் பணிப்பாளர் | உரிய மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு. | 2004.04.15 | சகல பாடசாலைகளினதும் ஆ.எ (பா) அறிக்கைகளும் வலயச் சுருக்க அறிக்கைகளும் கணனிப் படுத்தப்பட்டு வைத்துக் கொள்ளப்பட வேண்டும். |
| மாகாணத்திலுள்ள சகல வலயங்களிலிருந்தும் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆ.எ (வ) அறிக்கைகளை கொண்டு தயாரித்த மாகாணத்திற்கான 2004 ஆண்டிற்குரிய அறிக்கையும், 2004.03.01 இல் மாகாணத்திலுள்ள ஆசிரிய எண்ணிக்கை. | ஆ.எ. (மா) இணைப்பு 03 | | மாகாணக் கல்விச் செயலாளர் மூலம் கல்விச் செயலாளர் தேசிய பாடசாலை சம்பந்தப் பட்ட தகவல்கள் தேசிய பாடசாலைக் கல்விப் பணிப்பாளர் | | சகல வலயங்களினதும் ஆ.எ. (வ) அறிக்கைகளும் மாகாணச் சுருக்க அறிக்கைகளும் கணனிப் படுத்தப் பட்டு வைக்கப்பட வேண்டும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.3 ஏதாவதொரு பாடசாலைக்குரிய ஆசிரிய ண்ணிக்கை உரிய பாடசாலையைச் சேர்ந்தவர்களால் நிச்சயிக்கப்படும் பொருத்தமான ஆசிரியர் எண்ணிக்கைக்குச் சமமாகாத முறையில் அமையும் சந்தர்ப்பங்களில் அதிபரினால் அதுபற்றி நியாய பூர்வமான ஓர் அறிக்கையை வலயக் கல்விப் பணிப்பாளர் மூலம் மாகாண ஆசிரிய சேவை எண்ணிக்கைக் குழுவிற்குச் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வறிக்கையைப் பரிசீலனை செய்த பின்பு மாகாண ஆசிரிய எண்ணிக்கை பரிசீலனை மற்றும் கணிப்பீடு பற்றிய உப குழுவினால் செய்யப்படும் மனித சக்திக் கணிப்பீட்டின் பின்பு மாகாண ஆசிரிய சேவை எண்ணிக்கைக் குழு அது பற்றிய தீர்ப்பை வழங்கும் தேசிய பாடசாலைகள் தொடர்பாக மாகாணக் கல்விப் பணிப்பாளரின் விதப்புரையின் பேரில் தேசிய பாடசாலைக் கல்விப் பணிப்பாளரினால் அமைச்சின் உரிய தகவல்களைச் சமர்ப்பித்து ஒரு தீர்ப்பைப் பெற்றுக் கொள்ளலாம்.

இணைப்பு 04 இல் விவரிக்கப்படும் பிரகாரம் அமைச்சின் ஆசிரிய சேவை எண்ணிக்கைக் குழுவினால் உரிய ஆசிரிய எண்ணிக்கையைத் திருத்தியமைத்து அனுமதித்துத் தரும் ஒரு சந்தர்ப்பமாயின் அது பற்றிச் செய்யப்படும் அறிவித்தலின் படி உரிய விவரங்களுடனான உப அறிக்கை கணனிப்படுத்தப்பட்டு மாகாணச் சுருக்க அறிக்கைக்கும் வலயச் சுருக்க அறிக்கைக்குமிடையே தொடர்புபடுத்தல் வலய மாகாணக் கல்விப் பணிப்பாளர்களின் பொறுப்பாகும்.

இச் சுற்று நிருப விதி முறைகளை அமுல் நடாத்தும் போது பாடசாலையில் பாடத் திட்டம் சிறந்த முறையில் அமுல் நடாத்தப்படல் மற்றும் ஆசிரிய உபயோகம் உச்ச நிலையில் அமைந்திருக்கக் கூடியதான வகையில் அவதானித்துக் கொள்வது மிக அத்தியாவசியமாகக் கருதப்பட வேண்டும்.

அவ்வாறே இச் சுற்று நிருப விதிமுறைகளை அமுல் நடாத்துவதில் இறுதித் தீரமானம் வழங்கும் பொறுப்பு கல்வி அமைச்சின் செயலாளரைச் சார்ந்ததாகும்.

வீ.கே. நாணயக்கார
செயலாளர்,
மனிதவள அபிவிருத்தி, கல்வி, கலாசார, அலுவல்கள் அமைச்சு

1. கணக்காய்வாளர் நாயகம்.
2. செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு.
3. செயலாளர்கள், மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு.
4. நிதி ஆணைக்குழுச் செயலாளர்.
5. பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ சேவைத் திணைக்களம்.
6. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்.
7. ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம்.
8. வெளியீட்டு ஆணையாளர்.
9. தவிசாளர், தேசிய கல்வி ஆணைக்குழு.
0. சுவடிக் கூடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.
අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2785617
ලේකම් / செயலாளர் / Secretary: 2784812
කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, Fax: 2784846
ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education
"ඉසුරුපාය"
බත්තරමුල්ල.
"இசுருபாயா"
பத்தரமுல்ல.
"Isurupaya"
Battaramulla.

ඔබේ අංකය / உமது இல. / Your No. ........................................

මගේ අංකය / எமது இல. / My No. ............ஈடி/04/40/2/01..

දිනය / திகதி / Date ............2006.06.29............

மாகாண கல்வி செயலாளர் / மாகாணக் கல்விப் பணிப்பாளர்
........................................................

## ஆசிரிய செயலாற்றுகை தரக்கணிப்பீட்டு வேலைத்திட்டத்தை அமுல்படுத்தல் 2005/2006

ஆசிரியரின் தொழில் வாண்மை விருத்தியை இலக்காகக் கொண்டு பாடசாலை கல்வி பண்புசார் விருத்தியை ஏற்படுத்துவதற்காக இதுவரையில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஆசிரிய செயலாற்றுகை தரக்கணிப்பீட்டு வேலைத்திட்டம் மீது தங்களது விசேட கவனத்தை ஈர்க்கச் செய்கிறேன். அண்மைக்காலமாக இவ்வேலைத்திட்டத்திற்கு தடையாக இருந்த ஆசிரிய சங்கங்களின் தீவிர எதிர்ப்பு, அவர்களுடன் கலந்துரையாடல் நடத்தியதன் பின்னர் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது. மேலும் இவ்வேலைத்திட்டம் மூலம் பாடசாலை கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை பலப்படுத்தி அபிவிருத்தி இலக்குடன் தொடர்ச்சியாக பாடசாலை முறைமைக்குள் அமுல்படுத்த முடியுமான உயர்ந்தபட்ச ஒத்துழைப்பை வழங்குவதாக அவர்கள் இணக்கம் தெரிவித்தது ஆசிரியர் பெற்ற பாரிய வெற்றியாகும்.

02. 2005ம் ஆண்டில் இவ்வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக தங்களால் வழங்கப்பட்ட ஒத்துழைப்புக்களை பெரிதும் பாராட்டுவதுடன் தங்களது மாகாணத்தில் ஒரு சில வலயங்களுக்குரிய பாடசாலைகளில் இவ்வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக தேவைப்படும் கீழ்க் குறிப்பிடப்பட்ட அடிப்படை செயற்பாடுகளும் நிறைவேற்றப்படவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. செயலாற்றுகை தரக்கணிப்பீடு படிவம் இதுவரையில் பாடசாலைகளுக்கு கிடைக்காமை.
2. மேற்பார்வை மற்றும் முன்னோடி குழுக்களின் கவனம் போதியளவு கிடைக்கப்படாமை.
3. வலய மட்டத்தில் இவ்வேலைத்திட்ட இணைப்பு வேலைக்களை செய்ய உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படாமை.

2005ம் ஆண்டில் இவ்வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவது என்ற அடிப்படையில் 2006ம் ஆண்டில் சம்பளப்படி உயர்வு வழங்குவதற்கு இருப்பதனால் மேற்கூறப்பட்ட குறைபாடுகளைக் கொண்ட வலயங்களில் கூடிய விரைவில் இந்நிலைமையை சரிசெய்வதற்கு தேவையான உபதேசங்களை மாகாண/வலயப் பணிப்பாளர்களுக்கு வழங்கி இவ்வேலைத்திட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் பெறுமதியை மீண்டும் மீண்டும் வலியுறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. பாடசாலை முறைமையில் பண்புசார் தன்மையை விருத்தி செய்வதற்காக தேவைப்படும் நிகழ்ச்சித் திட்டமான ஆசிரிய செயலாற்றுகை தரக்கணிப்பீடு நிகழ்ச்சித் திட்டத்திற்கு வருடாந்தம் தேவைப்படும் ஒதுக்கீடுகளை மேற்கொண்டு அதனை தொடர்ச்சியாக நடாத்திச் செல்லுமாறு தங்களது மாகாண / வலயப் பணிப்பாளர்களுக்கு விளக்கமூட்டுமாறு கேட்டுக் கொள்கிறேன். 2006ம் ஆண்டில் மேற்கூறப்பட்டவாறு குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் ஏற்படாதவாறு முன்கூட்டியே கீழ்க் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை திட்டமிட்டு நடாத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1. கணிப்பீட்டு படிவங்களை அச்சிடல்
2. நாட்காட்டி (லீக் ஆண்டு) ஆரம்பிப்பதற்கு முன்னர் விநியோகித்தல்
3. தேவைக்கேற்றவாறு அறிவுறுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
4. முன்னோடி நிகழ்ச்சிகளை அமுல்படுத்தல்

இவ்வேலைத்திட்டங்களுக்கு தாங்கள் வழங்கும் ஒத்துழைப்புக்களை பாராட்டுவதோடு இப்பணியை வெற்றிகரமாக மேற்கொள்ள மாகாணப் பொறுப்பாளர் என்ற ரீதியில் தங்களது விசேட கவனத்தை செலுத்துமாறு தயவாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

எஸ்.எல். குணவர்தன
மேலதிக செயலாளர் (கல்வி சேவை)
கல்வி அமைச்சு.

பிரதி:

1. மாகாண இணைப்பு உத்தியோகத்தர் - தகவலுக்காக மற்றும் தேவைப்படும் நடவடிக்கைகளுக்காக. (..................................................)

2. வலயக் கல்விப் பணிப்பாளர் - தகவலுக்காக மற்றும் தேவைப்படும் நடவடிக்கைகளுக்காக. (..................................................)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.
අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2785617
ලේකම් / செயலாளர் / Secretary: 2784812
කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, Fax: 2784846
ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education
"ඉසුරුපාය"
බත්තරමුල්ල.
"இசுருபாயா"
பத்தரமுல்ல.
"Isurupaya"
Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. ............ED/3/40/1/1/1............

ඔබේ අංකය / உமது இல. / Your No. ..........................................

දිනය / திகதி / Date ............2004.12.24............

சுற்றறிக்கை இல. 2004/38

சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல வலயக் கல்வி பணிப்பாளர்கள்
சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல அரச, அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலை அதிபர்கள்.
சகல பிரிவெனாத் தலைவர்கள்

## ஆசிரிய செயலாற்றுகைத் தரக்கணிப்பீடு

ஆசிரியர்களின் தொழில் விருத்தி மற்றும் தொழில் வாண்மையை நோக்காகக் கொண்டு பாடசாலைக் கல்வியின் பண்புசார் விருத்தியை ஏற்படுத்துமுகமாக அமுல் நடாத்தப்படவுள்ள இந்த செயற்றிட்டத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும்.

கல்விச் செயலாளரின் எமது இலக்கம் ED/03/40/1/1/1 என்ற சுற்றுநிருபத்தின்படியும் 2004.08.02 ஆந் திகதியிட்ட கடிதத்தில் கூறியுள்ளபடியும் 2005 ஆம் வருடத்தில் உங்களுடைய பிரதேசங்களில் சேவையாற்றும் ஆசிரியர்களின் செயலாற்றுகை தரக்கண்ப்பீடு அமுலாக்கலுக்குத் தேவையான படிவங்கள் இப்பொழுதே அச்சடிக்கப்பட்டு பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கைகள் முடிவுற்றிருக்க வேண்டியது அவசியமாகும்.

2003/39 சுற்றுநிருபத்தில் கூறியுள்ளபடி ஆசிரிய செயலாற்றுகைக் கணிப்பீட்டின் பேரிலேயே 2005 ஆம் வருடம் முதல் ஆசிரியர்களின் சம்பள உயர்வு வழங்கல் இடம்பெற வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்ட போதும், 2004 ஆம் வருடத்தில் இந்த செயற்பாடு நாம் எதிர்பார்த்த பிரகாரம் நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும், இது சம்பந்தமாகப் பற்பல பிரச்சினைகளும் கஷ்டங்களும் ஏற்பட்டுள்ளதென பின்னர் கிடைத்த விபரங்களின்படியும் ஆசிரிய பிரதிநிதிகளுடன் நடாத்திய கலந்துரையாடல் மூலமும் தெரிய வந்துள்ளது. அதன்படி,

1. 2003/39 சுற்றுநிருபத்தில் கூறியுள்ளபடி சம்பள உயர்வு வழங்கலானது கட்டாயம் ஆசிரிய செயலாற்றுகை கணிப்பீட்டின் பேரிலேயே இடம்பெறல் வேண்டும் என்ற தீர்மானம் 2005 ஆம் வருடத்திலன்று, 2006 ஆம் வருடம் முதலே அமுலாக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதும் ஆசிரிய செயலாற்றுகை தரக்கணிப்பீடு அமுல் நடத்தப்பட வேண்டிய ஆண்டு 2005 இல் அல்லாது 2006 ஆம் ஆண்டு முதல் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஆசிரிய செயலாற்றுகைத் தரக்கணிப்பீடு செயற்பாடு கீழ் குறிப்பிட்டுள்ள தீர்மானங்களுக்கு ஏற்ப 2003/39 சுற்றுநிருபத்தின்படி கட்டாயமாக அமுல் நடாத்தப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. 2003/39 சுற்றுநிருபத்தில் முதல் பக்கம் கடைசி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள "குறித்த ஆண்டினுள் அமுலாக்கப்படும் ஆசிரிய செயலாற்றுகையின் முன்திட்டமொன்றிற்கான ஒப்பந்தம் மாத்திரம் என கொள்ளல் வேண்டும்" என்பதற்குப் பதிலாக "குறித்த ஆண்டினுள் அமுலாக்கப்படும் ஆசிரிய செயலாற்றுகையின் முன்திட்டமொன்றிற்கான இணக்கப்பாடாக மாத்திரம் கொள்ளல் வேண்டும்" எனத் திருத்தி அமைத்துக் கொள்ளல் வேண்டும்.

3. ஆசிரிய செயலாற்றுகைத் தரக்கணிப்பீட்டுப் பத்திரத்தின் 6:1 குறிப்பிடப்பட்டுள்ள கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள் அல்லது பிரதான துறையின் கீழ் அடங்கும் பொறுப்புள்ள வேறு வேலைகள் மாத்திரமே ஆசிரியரின் சம்பள உயர்வு வழங்கலுக்குக் கணிக்கப்படவுள்ளதோடு, அப்பத்திரத்தின் 6:2 குறிக்கப்பட்டுள்ள சுயவிருப்பத்தின் பேரில் தெரிவு செய்த ஏதாவது வேலையின் கீழ் ஒரு ஆசிரியரினால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள், சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கு அடிப்படையாகக் கொள்ளக்கூடாது. எனினும் அவ்வேலைகள் மதிப்பீடு செய்யப்பட வேண்டியுள்ளதோடு, அவை ஆசிரியரின் எதிர்கால தொழில்வாண்மை அபிவிருத்தி நடவடிக்கைகளின்போது கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்களின் கீழ் 2003/39 சுற்றுநிருபத்திற்கு ஏற்ப ஆசிரிய செயலாற்றுகைத் தரக்கணிப்பீடு நிகழ்ச்சித் திட்டத்தை அமுல் நடாத்துவது சகல வலய கல்வி பணிப்பாளர்கள் கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் சகல பாடசாலை அதிபர்கள் ஆகியோரின் பொறுப்பாவதோடு அவ்வேலைகள் உரிய முறையில் நடைபெறுகின்றனவா என்பதை மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் மேற்பார்வை செய்தல் வேண்டும்.

ஒப்பம்:
டாக்டர் டாரா டி மெல்
செயலாளர்.
கல்வி அமைச்சு.

பிரதி:

1. ஜனாதிபதியின் செயலாளர்
2. மாகாணக் கல்விச் செயலாளர்
3. செயலாளர், பொது நிருவாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு.
4. தலைவர் - தேசிய கல்வி ஆணைக்குழு.
5. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்.
6. கணக்காய்வாளர் நாயகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.
ඇමති:
அமைச்சர்
ister
} 2784832
2784807
2785617

ලේකම්
செயலாளர்
retary
} 2784812

කාර්යාලය
அலுவலகம்
ice
} 2785141-50
Fax: 2784846

ඊ-මේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය
உமது இல.
Your No.
} ..........................................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

"ඉසුරුපාය"
බත්තරමුල්ල.
"இசுருபாய"
பத்தரமுல்ல.
"Isurupaya"
Battaramulla.

මගේ අංකය
எமது இல.
My No.
} ED/3/40/1/1/1

දිනය
திகதி
Date
} 2004.06.07


சகல வலயக் கல்விப் பணிப்பளார்களுக்கும்

..........................................................

..........................................................

..........................................................

**ஆசிரிய செயலாற்றுகை தரங் கணிப்பீடு அமுலாக்கலும் பாடசாலை மேற்பார்வையின்போது இவ் வேலைத் திட்டங்களைக் கண்காணித்தலும்**

மேற்படி விடயம் தொடர்பாக 2003டிசெம்பர் 30 ஆந் திகதி வெளியிடப்பட்ட 2003/39 சுற்றுநிருபத்தின் பால் உங்கள் கவனத்தை ஈர்க்கின்றேன்.

02. அதன்படி ஆசிரிய செயலாற்றுகை தரங் கணிப்பீடு 2004.01.01 ஆம் திகதி தொடக்கம் அமுலாகும் விதத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதனால் சகல ஆசிரியர்களுடைய சம்பள உயர்வுகளுக்காக 2005.01.01 ஆம் திகதி தொடக்கம் ஆசிரிய செயலாற்றுகை தரங் கணிப்பீடு கட்டாயமாக கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

03. வலய மட்டத்தில் பாடசாலை மேற்பார்வையின்போது மேற்படி செயற்றிட்டத்தின் அமுலாக்கம் பற்றி கண்காணிப்புக்கு உட்படுத்துவது இந்த செயற்றிட்டத்தின் வெற்றிக்கு வழி வகுக்கும், ஆகையால் உங்கள் வலயத்தில் இடம் பெறும் அதிபர்கள் கூட்டத்தின் போது இந்த செயற் திட்டத்தின் முக்கியத்துவம் பற்றி அடிக்கடி விழிப்பூட்டுவதுடன் இந்த வேலைத் திட்டம் வலயத்தினுள் அமுலாக்கும் பொறுப்பு குறித்தொரு அதிகாரியின் பொறுப்பில் இருப்பதுடன் ஏனைய அதிகாரிகளின் ஒத்துழைப்பையும் இதற்குப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

இது தொடர்பான படிவங்கள் சகல பாடசாலைக்கும் கிடைக்கதப் பெற்றுள்ளதா என்பதை தேடிப்பார்த்து குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வலயக் கல்விப் பணிப்பளார் ஊடாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஏற்கனவே மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி உங்களுடைய மாகாணக் கல்விப் பணிப்பாளரின் ஆலோசனை வழிகாட்டலின் பேரில் இந்த வேலைத் திட்டத்தினை அடிக்கடி மேற்பார்வை செய்து வலுவூட்டுமாறு கேட்டுக் கொள்வதோடு 30.06.2004 அன்று அது தொடர்பான ஓர் முன்னேற்ற அறிக்கையினை இவ்வமைச்சின் மனித வள அபிவிருத்தி கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

வைத்திய தாரா டி மெல்
செயலாளர்
கல்வி அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2785617

ලේකම් / செயலாளர் / Secretary: 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, Fax: 2784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

"ඉසුරුපාය"
බත්තරමුල්ල.
"இசுருபாயா"
பத்தரமுல்ல.
"Isurupaya"
Battaramulla.

ඔබේ අංකය / உமது இல. / Your No. ..........................................

මගේ අංකය / எமது இல. / My No. ஆ/02/29/04/07/01

දිනය / திகதி / Date ............2005.05.19..............

**சுற்றறிக்கை இலக்கம்: 2005/04**

மாகாண அரச சேவை ஆணைக்குழு சபை
செயலாளர்களுக்கு,

**இலங்கை ஆசிரிய சேவைக்கு உள்ளீர்ப்பு செய்யும் செயற்பாடு**
**<u>மற்றும் பதவி உயர்வு விதிமுறைகளை மறுசீரமைத்தல்</u>**

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 1995.04.03ம் திகதி கொண்ட இலக்கம் 865/3 கொண்ட விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரமான 1997.03.11ம் திகதி கொண்ட 966/5 இலக்கம் மற்றும் 1997.05.14ம் திகதிய 975/6 கொண்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் மறுசீரமைக்கப்பட்ட இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பு 1999 ஆகஸ்ட் 11ம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மீண்டும் மறுசீரமைக்கப்பட்டதுடன், அத்தீர்மானம் கல்வி செயலாளரின் 1/99 சுற்றறிக்கை மூலம் வெளியிடப்பட்டது. மேற்கூறப்பட்ட மறுசீரமைப்புகளுடன் 1994.10.06ம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைக்கு ஆசிரியர்களை உள்ளீர்ப்புச் செய்யும் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் முரண்பாடுகளை நீக்குவதற்காகவும், ஆசிரியர்களின் பதவி உயர்வுகளைப் பெற்றுக்கொள்ளும் செயற்பாட்டை திருத்தியமைப்பதற்காகவும் இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பு கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு மீண்டும் மறுசீரமைக்கவும் ஆசிரியர்களின் பதவி உயர்வுகளுக்குரிய கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆரம்பத் தேவைகளிலிருந்து விடுவிப்பதற்கும் 2005.01.12ம் திகதி கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அத்தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கை ஆசிரிய சேவையின் ஆசிரியர்கள் அவர்கள் தகைமை பெற்றுள்ள வகுப்பிற்கு/ தரத்திற்கு பதவி உயர்வு வழங்குவதற்காக அரச சேவை ஆணைக்குழு சபையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.

02. இதனடிப்படையில் இலங்கை ஆசிரியர் சேவைக்கு, ஆசிரியர்களை உள்ளீர்ப்பு செய்யும் போது இதுவரையில் இருந்த சுற்றறிக்கை ஆலோசனைகளை தாண்டிச் சென்று கீழ்க். குறிப்பிடப்பட்ட தீர்மானங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும்.

(i) 2004.12.31ம் திகதிக்கு முன்னர் நியமனம் பெற்று அரச பாடசாலைகளில் பயிலுனர் பட்டதாரி அடிப்படையில் சேவையாற்றிய ஆசிரியர்கள் அந்நியமனத்திற்கமைய கடமையைப் பொறுப்பேற்ற தினம் முதல். நிரந்தர பட்டதாரி ஆசிரியர்களாக கருதி இலங்கை ஆசிரியர் சேவைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளீர்ப்பு செய்தல் அச்சேவைக் காலத்தை அவ்வாறே அவர்களது பதவி உயர்விற்காக ஏற்றுக்கொள்வதற்கும், அவ்வாறு உள்ளீர்ப்பு செய்யும் மற்றும் பதவி உயர்வு பெறுதல் அடிப்படையில் உரித்தாகும் சம்பளம் 2004.12.31ம் திகதி வரை நிலுவைச் சம்பளம் செலுத்தாது 2005.01.01ம் திகதி முதல் செலுத்துவதற்கும்.

(ii) 2004.12.31ம் திகதிக்கு முன்னர் நியமனம் பெற்று அரச பாடசாலைகளில் சேவையாற்றிய பொது ஆசிரியர்கள், மௌலவி பயிலுனர் ஆசிரியர்கள் மற்றும் அவ்வகையில் கருதப்படும் அதற்கு சமமான வேறு ஆசிரியர்கள் அவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஒழுங்கு முறைக்கமைய தகைமை பெற்ற தினம் அல்லது நியமனத்திற்கமைய கடமையைப் பொறுப்பேற்ற தினம் ஆகிய திகதி முதல் பயிற்றப்படாத ஆசிரியராக கருதி இலங்கை ஆசிரியர் சேவைக்கு வரும் திகதி உள்ளீர்ப்பு செய்வதற்கும் அக்காலத்தை ஆசிரிய சேவை பதவி உயர்விற்காக பயிற்றப்படாத ஆசிரியர் சேவைக் காலமாக கருதுவதற்கும் இதனடிப்படையில் உரித்தாகும் சம்பளம் 2004.12.31ம் திகதி வரை நிலுவைப் பணம் செலுத்தாது 2005.01.01 ம் திகதி முதல் செலுத்துதல்.

(iii) 1994.10.06ம் திகதிக்கு முன்னர் ஆசிரியராக நிரந்தர நியமனம் பெற்றவர் அந்நியமனத்தைப் பெறுவதற்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் பெற்றிருந்தால் அந்நியமனத்திற்கமைய கடமையைப் பொறுப்பேற்ற தினம் முதல் நிரந்தரப் பட்டதாரி ஆசிரியராக கருதி இலங்கை ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்வதற்கும் ஆசிரியர் சேவை பதவி உயர்விற்காக அதன் சேவைக்காலத்தை பட்டதாரி ஆசிரிய சேவை காலமாகக் கருதி நடவடிக்கை எடுப்பதற்கும் இதனடிப்படையில் உரித்தாகும் சம்பளம் 2004.12.31ம் திகதி வரை நிலுவைப் பணம் செலுத்தாது 2005.01.01ம் திகதி முதல் செலுத்துவதற்கும்

(iv) 1994.10.06ம் திகதியளவில் 45 வயதை அல்லது அதனை விட அதிகரித்த தொழிற்றகைமையற்ற பட்டதாரி ஆசிரியர்கள் தொழிற்றகைமையுடன் பட்டதாரி ஆசிரியர்களாகக் கருதி இலங்கை ஆசிரிய சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்தல் மற்றும் அதனடிப்படையில் உரித்தாகும் சம்பளம் 2004.12.31ம் திகதி வரை நிலுவைச் சம்பளம் செலுத்தாது 2005.01.01ம் திகதி முதல் செலுத்துவதற்கும்

(v) 1994.10.06ம் திகதியளவில் அரச சேவை சுற்றறிக்கை 37/92இற்கமைய சிறப்புப் பட்டதாரிகளாகக் கருதி சம்பளம் பெற்ற சகல பட்டதாரி ஆசிரியர்களும் சிறப்புப் பட்டதாரி ஆசிரியர்களாகக் கருதி இலங்கை ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்தல் மற்றும் அதனடிப்படையில் உரித்தாகும் சம்பளம் 2004.12.31ம் திகதி வரை நிலுவை சம்பளக் கொடுப்பனவு இன்றி 2005.01.01ம் திகதி முதல் செலுத்துவதற்கும்

(vi) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் விவசாயம் தொடர்பாக டிப்ளோமா/மனைப்பொருளியல் டிப்ளோமா/கனிஷ்ட பல்கலைக்கழக டிப்ளோமா ஆகியனவற்றை இரு ஆண்டு கால டிப்ளோமாவாக அல்லது மூன்று வருட கால அழகியல் டிப்ளோமா ஆகியவற்றில் அவற்றில் ஏதாவதொரு டிப்ளோமா அல்லது பலவற்றைப் பெற்று 1994.10.06ம் திகதிக்கு முன்னர் அரச பாடசாலை ஒன்றின் ஆசிரிய நியமனம் பெற்ற ஆசிரியர் ஒருவர் அந்நியமனத்திற்கமைய கடமையைப் பொறுப்பேற்ற தினம் அல்லது மேற்கூறப்பட்ட சான்றிதழைப் பெற்ற திகதி ஆகிய இரு தினங்களுக்குப் பின்னர் வரும் தினம் முதல் பயிற்றப்பட்ட ஆசிரியராக கருதி இலங்கை ஆசிரிய சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்வதற்கும் அக்காலத்தை பதவி உயர்வுக்காக பயிற்சி ஆசிரிய பயிற்சி சேவைக்காலமாகக் கருதி செயற்படுவதற்கும் அதனடிப்படையில் உரித்தாகும் சம்பளத்தை 2004.12.31ம் திகதி வரை நிலுவைச் சம்பளம் இன்றி 2005.01.01ம் திகதி முதல் செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பு – மறுசீரமைத்தல்

இதன் முதலாவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2005.01.12ம் திகதி அமைச்சரவை தீர்மானத்திற்கமைய இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பு 11வது பிரிவின் 3:2 சரத்திற்குக் கீழ் குறிப்பிடப்பட்ட உப சரத்து சேர்த்துக்கொள்ளப்படுகிறது.

(ஏ) மேற்கூறப்பட்ட (அ) மற்றும் (இ) சரத்துகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சகல இரு ஆண்டுகளுக்கும் ஒரு புள்ளி வீதம் வழங்கும் போது எஞ்சும் இருப்பு ஒரு ஆண்டு அல்லது அதனை விட அதிகரிக்குமானால் அதன் சேவைக்காலத்திற்காக மேலும் ஒரு புள்ளி வழங்கப்பட வேண்டும்.

(ஐ) மேற்கூறுப்பட்ட (ஆ) சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சகல ஆண்டுகளுக்குமாக ஒரு பள்ளி வீதம் வழங்கும் போது எஞ்சும் இருப்பு ஆறு மாதம் அல்லது அதனை விட அதிகரித்திருக்குமானால் அதன் சேவைக்காலத்திற்காக மேலும் ஒரு புள்ளி வழங்கப்பட வேண்டும்.

04. விடுவித்தல்

மேற்கூறப்பட்ட 2005.01.12ம் திகதி கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய இலங்கை ஆசிரியர் சேவையின் ஏதாவதொரு வகுப்பு/தரத்தில் உள்ள அதனை விட உயர் வகுப்பு/தரத்திற்கு பதவி உயர்வு பெற்றுக்கொள்வதற்காக போதியளவு புள்ளிகளைப் பெற்று பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேற்கொள்ளப்பட வேண்டிய அல்லது சித்தியடைய வேண்டிய கீழ்க் குறிப்பிடப்பட்ட தேவைகளிலிருந்து 2004.12.31ம் திகதி வரை விடுவிக்கப்படும்.

(i) சேவைக்கால பயிற்சி வேலைத் திட்டத்திற்கான பங்கேற்பு
(ii) தொழில் மீளாய்வு சித்தியடைந்திருத்தல்.
(iii) தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்
(iv) பெயர் குறிப்பிடப்பட்ட பாடசாலையில் உரிய சேவைக்காலத்தை கொண்டிருத்தல்.

05. ஆசிரிய சேவைக்கு பதவி உயர்வு வழங்கல்

இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பின் ஒழுங்கு விதிகள் மற்றும் மேற்கூறப்பட்ட விடயம் தொடர்பாக 2005.01.12ம் திகதி அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய 2004.12.31ம் திகதி வரை மாத்திரம் மேற்கூறப்பட்டவாறு செயற்பட அரச சேவைக் குழு அங்கீகரித்துள்ளது.

(i) இலங்கை ஆசிரியர் சேவையின் 3ம் வகுப்பின் IIம் தரத்திற்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட ஆசிரிய பயிற்சி சான்றிதழ்/ வெளிவாரி பட்டம் அல்லது அதற்குச் சமமான தகைமை இதுவரையில் பெறாத பயிற்றப்படாத ஆசிரியராக இருந்தால் அவ்வாசிரியரின் பயிற்றப்படாத ஆசிரிய சேவைக்காலம் 10 ஆண்டுகளைப் பூர்த்தி செய்யும் தினம் அல்லது 1994.10.06 ஆகிய இரு தினங்களுக்கும் பின்னர் வரும் தினத்திற்கு ஏனைய தகைமைகளை கருத்திற்கொள்ளாது இலங்கை ஆசிரிய சேவையின் மூன்றாம் வகுப்பின் முதலாம் தரத்திற்கு பதவி உயர்வு வழங்கல்.

(ii) இலங்கை ஆசிரிய சேவையின் மூன்றாம் வகுப்பின் முதலாம் தரத்தில் பயிற்சி, பயிற்சி டிப்ளோமாதாரர் மற்றும் தொழில் தகைமை அற்ற பட்டதாரி என மூன்று வகைக்குட்படும் ஆசிரியர்கள் மற்றும் அதற்குச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமமான தகைமை கொண்ட ஆசிரியர்கள் 111ம் வகுப்பின் சேவைக்காலத்திற்குள் உழைத்த 5 புள்ளிகள் பெற்ற தினம் அல்லது 1994.10.06 ஆகிய இரு தினங்களுக்குப் பின்னர் வரும் தினம் முதல் ஏனைய தகைமைகளைக் கருத்திற் கொள்ளாது 2வது வகுப்பின் II ம் தரத்திற்கு பதவி உயர்வு வழங்கல்.

(iii) இலங்கை ஆசிரிய சேவையின் 2ம் வகுப்பின் IIம் தரத்தில் பயிற்சி, பயிற்சி டிப்ளோமாதாரர்கள் மற்றும் தொழிற்றகைமை கொண்ட பட்டதாரி ஆகிய ஆசிரியர்கள் மற்றும் அதற்குச் சமமான தகைமை கொண்ட ஆசிரியர்களில் 2ம் வகுப்பின் IIம் தரத்திற்கு 10 புள்ளிகளை உழைத்துக்கொண்ட ஆசிரியர்கள் ஏனைய தகைமைகளைக் கருத்திற்கொள்ளாது மேற்கூறப்பட்ட 10 புள்ளிகளை ஈட்டிக்கொண்ட தினம் அல்லது 1994.10.06 ஆகிய இரு தினங்களுக்குப் பின்னர் வரும் தினம் முதல் 2வது வகுப்பின் Iம் தரத்திற்கு பதவி உயர்வு வழங்கல்

(iv) இலங்கை ஆசிரிய சேவையின் 2ம் வகுப்பின் Iம் தரத்தின் பயிற்சி, பயிற்சி டிப்ளோமாதாரர் தொழிற்றகைமை கொண்ட பட்டதாரி மற்றும் அதற்குச் சமமான தகைமை கொண்ட ஆசிரியர்களில் 2ம் வகுப்பின் Iம் தரத்தின் சேவைக்காலத்திற்குள் 5 புள்ளிகளை ஈட்டிக்கொண்ட ஆசிரியர்கள் ஏனைய தகைமைகளைக் கருத்திற் கொள்ளாது மேற்கூறப்பட்ட 5 புள்ளிகளை பெற்ற அல்லது 1994.10.06ம் திகதி ஆகிய இரு தினங்களுக்குப் பின்னர் வரும் தினம் முதல் 1ம் வகுப்பிற்கு பதவி உயர்வு வழங்கல்.

(v) மேற்கூறப்பட்ட 2005.01.12ம் திகதி அமைச்சரவை தீர்மானத்திற்கமைய ஆசிரியர்களின் பதவி உயர்விற்கான காரணியாக இருக்கும் புள்ளிகளைத் தவிர ஏனைய சகல தேவைகளும் 2004.12.31ம் திகதி வரை விடுவிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் மேற்கூறப்பட்ட சந்தர்ப்பங்களில் ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு வழங்க வேண்டிய தினம் 2005.01.01 அல்லது அதற்கு முன்னரான தினமாக இருக்க வேண்டியதுடன் 1994.10.06ம் திகதி அல்லது அதற்குப் பின்னரான தினமாக இருப்பது அவசியமாகும். இலங்கை ஆசிரிய சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட 2005.01.01 அல்லது அதற்கு முன்னரான தினத்தில் ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கும் இதனை பொருத்தமானவாறு உரியதாக்கிக் கொள்ளவேண்டும்.

06. இச்சுற்றறிக்கையின் ஒழுங்குவிதிகளுக்கமைய உள்ளீர்ப்புச் செய்யப்பட்டு அல்லது பதவி உயர்வு பெறுவதனால் ஆசிரியர்களின் சம்பளம் அதிகரிக்கும் வேளையில் 2004.12.31ம் திகதி வரை நிலுவைக் கொடுப்பனவின்றி 2005.01.01ம் திகதி முதல் சம்பள உரிமையை வழங்க வேண்டும். மேற்கூறப்பட்ட பதவி உயர்வு வழங்கப்பட்டதன் பின்னர் சம்பளம் தயாரிக்கப்பட வேண்டியது பொதுநிர்வாகச் சுற்றறிக்கை 11/94 மற்றும் 7/2000 மூலம் மறுசீரமைக்கப்பட்ட தாபன விதிக்கோவையின் vii வது வாசகத்தின் 5வது சரத்திற்கமையவாகும்.

07. இச்சுற்றறிக்கையை அமுல்படுத்தும் போது தேவைப்படும் மேலதிக ஒதுக்கீட்டு அளவை மதிப்பீடு செய்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவும்.

08. இச்சுற்றறிக்கை வெளியிடப்படுவது அரசசேவையின் ஆணைக்குழு சபையின் இணக்கத்துடன் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. இதில் குறிப்பிடப்பட்டுள்ள மறுசீரமைப்புகள் மற்றும் அதற்குரிய ஆலோசனைகளின் பிரகாரம் பதவி உயர்வு பெற உரிமை உள்ள சகல ஆசிரியர்களுக்கும் பதவி உயர்வு வழங்க தாமதமின்றி நடவடிக்கை எடுக்கவும். இச்சுற்றறிக்கையில் உள்ள ஒழுங்கு விதிகளுக்கமைய நடவடிக்கையை மேற்கொள்ளும் போது ஏதாவதொரு பிரச்சினை ஏற்பட்டால் என்னை தொடர்புகொள்ளுமாறும் மேலும் அறியத் தருகிறேன்.

..............................
டாக்டர் தாரா டி மெல்
செயலாளர்,
கல்வி அமைச்சு.

பிரதிகள்

1. செயலாளர் அரசசேவை ஆணைக்குழு – தகவலுக்காக மற்றும் தேவைப்படும் நடவடிக்கைக்காக
2. மாகாண கல்விச் செயலாளர், மாகாண அரச சேவை ஆணைக்குழு சபையின் ஆலோசனைக்கமைய – தேவைப்படும் நடவடிக்கைகளுக்கு
3. மாகாண கல்விப் பணிப்பாளர்கள் - தகவல் மற்றும் தேவைப்படும் நடவடிக்கைகளுகு (அரசசேவை ஆணைக்கழு சபையின் வலயப் பிரிவுக்கு உட்படும் தேசிய பாடசாலைகளில் சேவையாற்றும் தரம் கொண்டோரின் பதவி உயர்வுகள் அரச சேவை ஆணைக்குழு அங்கீகரிக்கப்பட வேண்டியதுடன் உரிய பரிந்துரை அரசசேவை ஆணைக்குழு சபைக்கு அனுப்பவுதற்கு, எனக்கு அனுப்புவுதற்கு.
4. வலயக் கல்விப் பணிப்பாளர் - தகவலுக்காக மற்றும் தேவைப்படும் நடவடிக்கைகளுக்காக.
5. கோட்டத்திற்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர்கள் - தகவல் மற்றும் தேவைப்படும் நடவடிக்கைகளுக்காக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා
அமைச்சர்
Minister
784807
784832

ලේකම්
செயலாளர்
Secretary
784811

කාර්යාලය
அலுவலகம்
Office
785141-50
Fax: 784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

මානව සම්පත් සංවර්ධන, අධ්‍යාපන හා සංස්කෘතික කටයුතු අමාත්‍යාංශය
மனிதவள அபிவிருத்தி, கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு
Ministry of Human Resource Development, Education & Cultural Affairs

'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ බත්තරමුල්ල.
'இசுருபாயா' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை, பத்தரமுல்ல.
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte, Battaramulla.

ඔබේ අංකය
உமது இல.
Your No. } ....................

මගේ අංකය
எமது இல.
My No. } ஈடி/2/29/2/2/1

දිනය
திகதி
Date } 2004.01.16

தமிழ் மொழிபெயர்ப்பு

சுற்றறிக்கை இலக்கம்: 2004/01

சகல மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளர்கள்,

**இலங்கை ஆசிரியர் சேவையின் பதவி உயர்வுகளை அமுல்நடத்தல்**

இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின்படி பதவி உயர்வுகளுக்குத் தேவையான சேவைக்காலத்தையும், புள்ளிகளின் அளவையும் பூரணப்படுத்தியுள்ள சகல ஆசிரியர்களும் 2001.01.01 திகதி தொடக்கம் 2003.12.31 திகதி வரையிலும் தொழில் மீளாய்வு மற்றும் சேவைகாலப் பயிற்சி போன்ற தேவைகளிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்று 2003.10.08 திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் 83/1563/128/071 இலக்கம் கொண்ட அமைச்சரவை பத்திரத்தின்படி கொள்கை தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அத்தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கை ஆசிரியர் வேவையின் ஆசிரியர்களை, அவர்கள் தகைமை பெற்றுள்ள வகுப்புக்கு/ தரத்துக்குப் பதவி உயர்வு வழங்குவதற்கான அனுமதியை அரசாங்க சேவை ஆணைக்குழு வழங்கியுள்ளது.

02. ஆசிரிய சேவையின் ஒரு வகுப்பு /தரத்திலிருந்து அடுத்த வகுப்புக்கு /தரத்திற்குப் பதவி உயர்வு பெறுவதற்காக அவ்வகுப்பின் /தரத்தின் போது ஆசிரியர்களால் உழைத்துக்கொள்ள வேண்டிய புள்ளிகளின் அளவு பற்றிய தகவல்கள் கீழே குறிப்பிடப்படுகின்றன.

i. இலங்கை ஆசிரிய சேவையின் மூன்றாம் வகுப்பின் முதலாம் தரத்தில் பயிற்றப்படட, பயிற்றப்பட்ட டிப்ளோமாதாரர்கள் மற்றும் (தொழில் தகைமையற்ற ) ஆகிய மூன்று வகைளையும் சேர்ந்த மற்றும் அதற்குச் சமமான ஆசிரியர்களினால் 05 புள்ளிகளும்.

ii இலங்கை ஆசிரியர் சேவையின் இரண்டாம் வகுப்பின் II ஆம் தரத்தின் பயிற்றப்பட்ட, பயிற்றப்பட்ட டிப்ளோமாதாரர்கள் மற்றும், தொழில் தகைமை பெற்றுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் அதற்குச் சமமான ஆசிரியர்களினால் 10 புள்ளிகளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. இலங்கை ஆசிரியர் சேவையின் இரண்டாம் வகுப்பின் முதலாம் தரத்தைச் சேர்ந்த பயிற்றப்பட்ட ,பயிற்றப்பட்ட டிப்ளோமாதாரர்கள் மற்றும் தொழில் தகைமை பெற்ற பட்டதாரி ஆசிரியர்களும் அதற்குச் சமனான தகைமைகள் பெற்ற ஆசிரியர்களினால் 05 புள்ளிகளும். உழைத்துக் கொண்ட பின்பு இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தகைமைகளை பூர்த்தி செய்திருப்பின் அவர்களுக்கு அடுத்த தரத்திற்கு /வகுப்பிற்கு பதவி உயர்வு பெறுவதற்கு தகைமை கிடைக்கின்றது.

03. <u>ஆசிரியர்களின் பதவி உயர்வுகளுக்கு தேவையான புள்ளிகளை கீழ்க் குறிப்பிடப்படும் முறையில் உழைத்துக் கொள்ள முடியும்.</u>

i. நிரந்தர சேவையைச் சேர்ந்த ஒவ்வொரு பயிற்றப்பட்ட, பயிற்றப்பட்ட டிப்ளோமா, தொழில் தகைமையற்ற /உள்ள ஒரு பட்டதாரி ஆசிரியருக்கு மற்றும் அதற்குச் சமனான தகைமைகளைப் பெற்ற ஓர் ஆசிரியருக்குத் தமது சேவைக்காலத்தில் ஓர் ஆண்டிற்கு ஒரு புள்ளி வீதம் கிடைக்கும் புள்ளிகளும்.

ii. பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் பயிற்றப்பட்ட தராதரப்பத்திரம் செல்லுபடியாவதற்கு முன்பு நிரந்தர சேவைக்காலத்தில் ஆசிரிய கல்லூரி பயிற்சிக் காலமும் உட்படக் கூடியதாக இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு புள்ளி வீதம் கிடைக்கும் புள்ளிகளும்.

iii. பட்டதாரி ஆசிரியர்களின் பட்டதாரி நியமனத்துக்கு முன்பு நிரந்தர சேவையில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு புள்ளி வீதம் கிடைக்கும் புள்ளிகளும்.

iv. பட்டதாரி ஆசிரியர்கள் பட்டபின் கல்வி டிப்ளோமா தேர்ச்சி பெற்றிருப்பின் அதற்காக ஒரு முறை மாத்திரம் கிடைக்கும் ஒரு புள்ளியும் என்ற முறையில் புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

04. <u>புள்ளிகளை பெற்றுக்கொள்வதற்காக கருத்தில் கொள்ளப்பட வேண்டிய சேவைக்காலம்</u>

புள்ளிகளைப் பெற்றுக்கொள்வது சம்பந்தமாக ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்படுவது, ஏதாவது ஒரு வகுப்பின்/தரத்தின் சேவைக் காலத்துள் உரிய புள்ளிகளின் அளவை உழைத்துக் கொள்ள வேண்டும் என்பதாகும். ஏதாவது ஒரு வகுப்பின்/ தரத்தின் சேவைக் காலமென்று ஆசிரிய சேவைப் பிரமணக் குறிப்பின் பிரகாரம் அதன் III ஆவது பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள படி ஆசிரிய சேவைக்கு உள்வாங்கப்படுவதற்குரிய செயற்பாடுகளின் கீழ் அமைந்த விதிமுறைகளுக்கேற்ப அவ்வவ் ஆசிரியர் நியமனம் பெற்ற திகதி தொடக்கமுள்ள சேவைக் காலத்தை உள்ளடக்கிக் கணக்கீடு செய்து தீர்மானிக்கப்படும் சேவைக் காலமாகும். அவ்வாறே உள்வாங்கல் செய்யப்பட்ட பின்பு சேவைக்காலத்தில் உழைத்துக் கொள்ளப்பட்ட புள்ளிகளும் பதவி உயர்வுகளுக்காகப் பொருத்தமானதாக அமையும். எனினும் நிரந்தர நியமனம் பெற்றுள்ளது ஆசிரிய சேவை அமுலுக்கு வந்ததன் பின்பெனில் அச்சந்தர்ப்பத்தில் அவ்வாறு நிரந்தர நியமனம் பெற்ற திகதியிலிருந்து உழைத்துக் கொள்ளப்பட்ட புள்ளிகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. பதவி உயர்வு பெறுவதற்கான தகைமைகளை பெற்றுக்கொள்ளும் முகமாக ஒவ்வொரு ஆசிரியரும் கல்விச் சேவைச் சபையினால் விதிக்கப்படுகின்ற ஒரு பாடசாலையில் விதிக்கப்படுகின்ற கால எல்லை வரை சேவையாற்ற வேண்டும் என்று ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அப்பாடசாலைகளோ அல்லது கால வரையறையோ இதுவரை தீர்மானிக்கப்படாத படியால் அவ்வாறான தேவைகள் பற்றி இங்கு கருத்தில் கொள்ளப்படாது செயற்படலாம்.

06. (I) <u>இலங்கை ஆசிரிய சேவையின் 3 ஆம் வகுப்பின் I ஆம் தரத்திலிருந்து 2ஆம் வகுப்பின் II தரத்திற்கு பதவி உயர்த்தப்படல்.</u>

இலங்கை ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்பின்படி இலங்கை ஆசிரிய சேவையின் 3 ஆம் வகுப்பின் I ஆம் தரத்திலுள்ள பயிற்றப்பட்ட, பயிற்றப்பட்ட டிப்ளோமா, தொழில் தகைமைகள் அற்ற பட்டதாரி ஆசிரியர்களும் அதற்குச் சமமான தகைமைகளைப் பெற்ற ஆசிரியர்களும் 2ஆம் வகுப்பின் IIஆம் தரத்திற்கு பதவி உயர்த்தப்படுவதற்காக சேவைக்கால பயிற்சியும் குறிப்பிடப்பட்ட ஒரு பாடசாலையின் சேவைக்குப் புறம்பாக 3ஆம் வகுப்பில் உழைத்துக்கொள்ளப்பட்ட 05 புள்ளிகளும் இருக்க வேண்டும். எனினும் குறிப்பிடப்பட்ட புள்ளிகளை தவிர ஏனைய தேவைகளிலிருந்து 2003.12.31 திகதி வரை விடுவித்து அவை கருத்தில் கொள்ளப்படாத படியால் தேவையான புள்ளிகள் 05ஐ 2003.12.31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பு உழைத்துக் கொண்டிருப்பின் அத்திகதி தொடக்கம் அவ்வாசிரியர்கள் 2ஆம் வகுப்பின் IIஆம் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட வேண்டும்.

(II) <u>இலங்கை ஆசிரியர் சேவையின் 2ஆம் வகுப்பின் IIஆம் தரத்திலிருந்து 2ஆம் வகுப்பின் 1ஆம் தரத்திற்குப் பதவி உயர்வு வழங்கல்</u>

இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் படி 2ஆம் வகுப்பின் IIஆம் தரத்தில் உள்ள பயிற்றப்பட்ட, பயிற்றப்பட்ட டிப்ளோமா, தொழில் தகைமை உள்ள பட்டதாரி ஆசிரியர்களும் அதற்குச் சமனான தகைமைகளைப் பெற்ற ஆசிரியர்களும் 2ஆம் வகுப்பின் Iஆம் தரத்திற்கு பதவி உயர்த்தப்படுவதற்காகக் குறிப்பிடப்பட்ட பாடசாலை ஒன்றின் சேவை, தொழில் மீளாய்வு மற்றும் சேவைக்காலப் பயிற்சிக்குப் புறம்பாக அத்தரத்தில் உழைத்துக் கொள்ளப்பட்ட 10 புள்ளிகள் இருக்க வேண்டும். எனினும் குறிப்பிடப்பட்ட புள்ளிகளை தவிர ஏனைய தேவைகளிலிருந்து 2003.12.31 திகதி வரை விடுவித்து அவற்றைக் கருத்தில் கொள்ளாதிருக்கக் கூடியதாகவுள்ள படியால் தேவையான புள்ளிகள் 10ஐ, 2003.12.31 திகதியன்று அல்லது அதற்கு முன்பு உழைத்துக் கொண்டிருப்பின் அத்திகதி தொடக்கம் அவ்வாசிரியர்கள் 2 ஆம் வகுப்பின் 1 ஆம் தரத்திற்குப் பதவி உயர்த்தப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(III) <u>இலங்கை ஆசிரியர் சேவையின் 2ஆம் வகுப்பின் I ஆம் தரத்திலிருந்து I ஆம் வகுப்பிற்கு பதவி உயர்த்தப்படல்.</u>

இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக்குறிப்பின் படி 2ஆம் வகுப்பின் I ஆம் தரத்திலுள்ள பயிற்றப்பட்ட, பயிற்றப்பட்ட டிப்ளோமாதாரர்கள், தொழில் தகைமை பெற்ற பட்டதாரிகள் மற்றும் அதற்குச் சமமான தகைமைகளைப் பெற்ற ஆசிரியர்கள் I ஆம் வகுப்பிற்குப் பதவி உயர்த்தப்படுவதற்காக 2 ஆம் வகுப்பின் I ஆம் தரத்தில் உழைத்துக் கொள்ளப்பட்ட புள்ளிகள் 05 உம் தொழில் மீளாய்வு சேவைக்காலப் பயிற்சி மற்றும் அதற்குப் புறம்பான விணைத்திறன் தாண்டற் பரீட்சையிலும் சித்தி பெற்றிருக்க வேணடும்.

சேவையின் 2ஆம் வகுப்பின் I ஆம் தரத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் Iஆம் வகுப்பிற்கு பதவி உயர்த்தப்படுவதற்காக தடைதாண்டற் பரீட்சையில் இருந்து விடுவிக்கப்படாதுள்ள படியால் ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கு I ஆம் வகுப்பிற்குப் பதவி உயர்வு பெறுவதற்காக இச்சுற்றுநிருபத்தின் கீழ் வாய்ப்பில்லை எனினும் இனிமேல் நடாத்துவதற்குள்ள குறிப்பிடப்பட்ட 2ஆம் வகுப்பின் I ஆம் தர ஆசிரியர்களை I ஆம் வகுப்பிற்கு பதவி உயர்வு வழங்குவதற்கான தடைதாண்டல் பரீட்சையில் சித்தி பெறும் ஆசிரியர்கள் 2ஆம் வகுப்பில் I ஆம் தரத்தில் பதவி உயர்வுக்கு அவசியமான புள்ளிகளை பெற்றுக் கொண்ட திகதி தொடக்கம் செல்லுபடியாகும் விதத்தில் ஏனைய தேவைகளை கருத்தில் கொள்ளாது I ஆம் தரத்திற்கு பதவி உயர்வு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

எனினும் கல்வி முதுமாணி, கல்வி தத்ததுவ முதுமாணி , கலைமுதுமாணி(கல்வி) போன்ற பட்டப்பின் பட்டதாரிகள் 2ஆம் வகுப்பின் I ஆம் தர ஆசிரியர்கள் I ஆம் வகுப்பிற்கு பதவி உயர்த்தப்படும் போது பிரமாணக் குறிப்பின் விதிகளின்படி பதவி உயர்வுக்கான தடைதாண்டலிருந்து விடுவிக்கப்படுகின்றனர்.

அதன்படி 2ஆம் வகுப்பின் I ஆம் தரத்தைச் சேர்ந்த கல்வி முதுமாணி, கல்வித் தத்துவ முதுமாணி, கலை முதுமாணி (கல்வி) ஆகிய பட்டப்பின் பட்டம் பெற்ற ஆசிரியர்கள் 2ஆம் வகுப்பின் I ஆம் தரத்தில் 05 புள்ளிகளை பெற்றுக் கொள்ளும் திகதி மற்றும் பட்டப்பின் பட்டச் சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி ஆகிய திகதிகள் இரண்டில் பின்பு இடம் பெறுகின்ற திகதி 2003.12.31 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்பு இடம்பெறும் ஒரு திகதியாயின் அத்திகதி தொடக்கம் அவ்வாசிரியர்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவையின் I ஆம் வகுப்பிற்கு பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. பதவி உயர்வு நடைபெற்ற பின் சம்பளம் தயாரிக்கப்பட வேண்டியது பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 11/94 மற்றும் 7/2000 மூலம் திருத்தி அமைக்கப்பட்ட தாபனக் கோவையின் VII வது அத்தியாயத்தின் 5 வது வாசகத்தின் படியாகும். பதவி உயர்வுக்குரிய திகதியோ அல்லது 2001.01.01 திகதி ஆகிய இரண்டு திகதிகளில் பின்பு வரும் திகதிகளிலிருந்து இதன்படி நிலுவைச் சம்பளம் வழங்கப்படவுள்ளதோடு புதிய சம்பள அளவுகளின் படி சம்பளம் வழங்கப்பட வேண்டியது 2004.01.01 திகதி தொடக்கமாகும். அவ்வாறு இருப்பின் பதவி உயர்வு பெற்ற திகதி அல்லது 2001.01.01 திகதி ஆகிய இரண்டு திகதிகளிலும் பின்பு வரும் திகதியிலிருந்து 2003.12.31 வரையிலான நிலுவைச் சம்பளத்தை கணிப்பீடு செய்து ஒதுக்கீடுகள் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்பு நிலுவைச் சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

08. இவ்விதி முறைகளுக்கமைய பதவி உயர்வு உரித்தாவது 2001.01.01 திகதியன்று அல்லது அதன் பின்பு உள்ள ஒரு திகதியிலாவதுடன் அத்திகதி தொடக்கம் 2003.12.31 திகதி வரை ஓய்வு பெற்றுள்ள ஆசிரியர்களுக்கும் இது பொருத்தமான முறையில் அமையும் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

09. இச்சுற்றுநிருபம் விநியோகிக்கப்படுவது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டிலாகும்.

ஒப்பம்/வீ.கே. நாணயக்கார
செயலாளர்
மனிதவள அபிவிருத்தி கல்வி,
கலாசார அலுவல்கள் அமைச்சு.

பிரதிகள்:

1. செயலாளர் – அரசாங்க சேவை ஆணைக்குழு – தகவலிற்காக.
2. மாகாணக் கல்விச் செயலாளர்கள்– மாகாண அரசாங்க சேவைக் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களின் படி உரிய நடவடிக்கைகளுக்காக.
3. மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் பதவி உயர்வு வழங்கும் போது மத்திய அரசின் கீழ் நிறுவகிக்கப்படும் தேசிய பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்களுள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கீழ் அமையும் தரம் பெற்றவர்களுக்கான பதவி உயர்வுகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட வேண்டியிருப்பதால் அதற்கான விதப்புரைகளை அரசாங்க சேவை ஆணைக் குழுவிடம் சமர்ப்பிப்பதற்கு ஏற்ற வகையில் நடவடிக்கை எடுக்கவும்.
4. வலயப் பொறுபபு கல்விப் பணிபபாளர்கள் தகவலிற்காக.
5. கோட்டப் பொறுப்பு கல்விப் பணிப்பாளர்கள் தகவலிற்காக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister — 784807, 784832

ලේකම් / செயலாளர் / Secretary — 784811

කාර්යාලය / அலுவலகம் / Office — 785141-50, Fax: 784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

මානව සම්පත් සංවර්ධන, අධ්‍යාපන හා සංස්කෘතික කටයුතු අමාත්‍යාංශය

மனிதவள அபிவிருத்தி, கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு

Ministry of Human Resource Development, Education & Cultural Affairs

'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ බත්තරමුල්ල.

'இசுருபாய' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பத்தரமுல்ல.

"Isurupaya", Sri Jayawardhanapura Kotte. Battaramulla.

ඔබේ අංකය / உமது இல. / Your No. ....................

මගේ අංකය / எமது இல. / My No. ஈ.டி/4/58/16/2/1

2003.12.22.

දිනය / திகதி / Date ....................

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
பரீட்சை ஆணையாளர் நாயகம்/
கல்வி வெளியீட்டு ஆணையாளர்,
சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,

**<u>அரசியல் பழிவாங்கல் ஆய்வுக்குழு சிபாரிசின் கீழ் இலங்கை கல்வி நிருவாக சேவைக்கு நியமனம் பெற்ற அதிபர் சேவையின் 1 மற்றும் 11/1 தரத்திற்குரிய உத்தியோகத்தர்கள் பெற்று வந்த சம்பளத்தை செலுத்துதல்</u>**

அரசியல் பழிவாங்கல் ஆய்வுக் குழு பரிந்துரைக்கமைய 1996.12.18 மற்றும் 1997.07.31ம் திதி கொண்ட அமைச்சரவை தீர்மானத்திற்கமைய கல்விச் சேவைக்கு நியமனம் பெற்ற உத்தியோகத்தர்களின் சம்பள முரண்பாடுகள் தொடர்பாக கருத்திற் கொண்ட அமைச்சரவை இலங்கை கல்வி நிருவாக சேவையிற் 111ம் வகுப்புக்கு நியமிக்கப்பட்ட இலங்கை அதிபர் சேவையின் 1ம் வகுப்பு மற்றும் 11/1 வகுப்பு உத்தியோகத்தர்களுக்கு அவர்களுக்கு தனிப்பட்டவாறு இவ்வுத்தியோகத்தர்கள் மேற்கூறப்பட்ட நியமனம் பெறும் தினத்தை அடையும்போது அதிபர் சேவையில் பெற்றுக் கொண்டிருந்த சம்பளத்தை மாத்திரம் தொடர்ந்தும் பெற்றுக் கொள்ள அனுமதி வழங்குவதற்காக அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

மேற்கூறப்பட்டவாறு சம்பளம் செலுத்தும்போது இலங்கை கல்வி நிருவாக சேவைக்கு வழங்கப்பட்ட நியமனத்திற்குரிய நியமனக் கடிதம் வெளியிடப்பட்ட தினத்திற்குப் பின்னர் இலங்கை அதிபர் சேவையின் பதவி உயர்விற்காக தோற்றி முன்கொண்டு சென்று நியமனம் பெற்றிருப்பின் இவ்வுரிமை வழங்கப்படாது என்பதனை கருத்திற் கொள்ளவும், மேலும் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு நியமனக் கடிதம் வெளியிடப்பட்ட தினத்திற்குப் பின்னரான காலத்திற்குரிய இலங்கை அதிபர் சேவையின் சம்பளபடி உயர்வுகளை அங்கீகரித்து செலுத்தப்பட்டிருப்பின் அச் சம்பள அதிகரிப்பு கருத்திற் கொள்ளப்பட மாட்டாது,

வீ.கே. நாணயக்கார
செயலாளர்,
மனிதவள அபிவிருத்தி கல்வி
கலாசார விவகார அமைச்சு.

N.Government T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை ஆசிரிய சேவையின் பதவி உயர்வு வழங்குவதற்காக ஆசிரியர்களினால் பூர்த்திசெய்யப்பட வேண்டிய தேவைகள்

| வகுப்பு, தரம், ஆசிரியர் வகை மற்றும் பதவி உயர்வு | புள்ளி அல்லது சேவைக்காலம் | சேவைக்கால பயிற்சி | மீளாய்வு (தொழில்) | ஏனையவை (iv) | பெயர் குறிப்பிடப்பட்ட சேவைக்காலம் |
|---|---|---|---|---|---|
| (1) 3ஆம் வகுப்பின் iiம் தரம் பயிற்றப்படாத ஆசிரியர்கள் 3ம் வகுப்பின் iம் தரத்திற்கு பதவி உயர்வு வழங்க பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைகள் | 10 ஆண்டுகள் (1/8.1.1) | 3ம் வகுப்பில் நேரம் 150 (11/1.1) | அல்லது | வெளிவாரி பட்டம் அல்லது பயிற்சி சான்றிதழ் (க.சே.ஆ/செ.இன் 96/2, 97/3 சுற்றறிக்கை மற்றும் 1999.09.30ம் திகதிய க.சே.ஆ/ ஆ.சே/1/1 இலக்கம் கொண்ட கடிதத்திற்கமைய | |
| (2) 3ம் வகுப்பின் iம் தரத்தில் பயிற்சி/ பயிற்சி டிப்ளோமா மற்றும் அதற்குச் சமமான தகைமை கொண்ட ஆசிரியர்கள் 2ம் வகுப்பின் iiம் தரத்திற்கு பதவி உயர்வு வழங்க பூரணப்படுத்த வேண்டிய தேவைகள் | 3ம் வகுப்பின் 5 புள்ளிகள் (11/3.1 அ) | 3ம் வகுப்பில் 150 மணித்தியாலம்) (11/1.2) | | | பெயர் குறிப்பிடப்பட்ட பாடசாலையின் உரிய சேவைக் காலம் (11/3.3) |
| (3) 3ம் வகுப்பின் iம் தரத்தில் பட்டதாரிகள் மற்றும் அதற்குச் சமமான தகைமை கொண்ட ஆசிரியர்கள் 2ம் வகுப்பின் iiம் தரத்திற்கு பதவி உயர்வு வழங்க பூரணப்படுத்த வேண்டிய தேவைகள் | 3ம் வகுப்பில் 5 புள்ளிகள் (11/3.1அ) | டிப் | அல்லது | பட்டப்பின் கல்வி (1/8. 1.2) | பெயரிடப்பட்ட பாடசாலையில் உரிய சேவைக்காலம் (11/3.3) |
| (4) 2ம் வகுப்பின் iiம் தரத்தில் பயிற்சி/பயிற்சி டிப்ளோமா அதற்குச் சமமான தகைமை கொண்ட | 2/II இல் புள்ளிகள் 10 (11/3.1ஆ) | 2/II இல் 06 வாரங்கள் (11/1.3) | தொழில் மீளாய்வு (1/8, 1.3) | | பெயரிடப்பட்ட பாடசாலையில் உரிய சேவைக்காலம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆசிரியர்கள் 2ம் வகுப்பின் iம் தரத்திற்கு பதவி உயர்வு வழங்க பூரணப்படுத்த வேண்டிய தேவைகள் | | | | | (11/3.3) |
| (5) 2ம் வகுப்பின் iiம் தரத்தில் பட்டதாரி மற்றும் அதற்குச் சமமான தகைமை கொண்ட ஆசிரியர்கள் 2ம் வகுப்பின் iம் தரத்திற்கு பதவி உயர்வு வழங்க பூரணப்படுத்த வேண்டிய தேவைகள் | 2/II இல் புள்ளிகள் 10 (11/3.1ஆ) | 2/II இல் மணித்தியாலம் 150 (11/1.5) | தொழில் மீளாய்வு (1/8, 1.4) | பட்டப்பின் கல்வி/டிப் (11/1.5) | பெயரிடப்பட்ட பாடசாலையில் உரிய சேவைக்காலம் (11/3.3) |
| (6) 2ம் வகுப்பின் iம் தரத்தில் பயிற்சி/பயிற்சி டிப்ளோமா மற்றும் அதற்குச் சமமான தகைமை கொண்ட ஆசிரியர்களை முதலாம் வகுப்பிற்கு பதவி உயர்வு வழங்குவதற்காக பூரணப்படுத்த வேண்டிய தேவைகள் | 2/I இல் புள்ளிகள் 5 (11/3.1இ) | 75 மணித்தியாலம் (அண்மித்த 5 ஆண்டுகளுக்குள் 11/1.7) | தொழில் மீளாய்வு (1/8, 1.4) | வினைத்திறன் தடை தாண்டல் (11/6) | |
| (7) 2ம் வகுப்பின் iம் தரத்தில் தொழிற்பயிற்சி கொண்ட பட்டதாரிகள் மற்றும் அதற்குச் சமமான தகைமை கொண்ட ஆசிரியர்களை முதலாம் வகுப்பிற்கு பதவி உயர்வு வழங்க பூரணப்படுத்த வேண்டிய தேவைகள் | 2/I இல் புள்ளிகள் 5 (11/3.1இ) | 2/I இல் 75 மணித்தியாலம் (11/1.7) | தொழில் மீளாய்வு (1/8, 1.4) | | |

குறிப்பு : அட்டவணையில் அடைப்புக் குறிக்குள் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயம் இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பில் உள்ள சரத்தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை ஆசிரியர் சேவையின் பதவி உயர்வுகளைப் பெற்றுக் கொள்ள பூர்த்தி செய்ய வேண்டிய தேவைகள்

| வகுப்பும் தரத்தின் பதவி உயர்வும் | ஆசிரிய வகை | புள்ளிகள் அல்லது சேவைக் காலம் | சேவைக் காலப் பயிற்சி | மீளாய்வு (தொழில்) | வேறும் | பெயர் குறிப்பிடப்பட்ட சேவைக் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 3 ii இன் ஆசிரியர்கள் 3 i இற்குப் பதவி உயர்வு பெறுவதற்கு பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைகள் → | பயிற்றப்பட்ட | ஆண்டு 10 1(8.1.1.) | மணித்தியாலங்கள் 150 (11/1 1) | அல்லது | வெளிவாரிப்பட்டம்/ ஆசிரிய பயிற்சி | - |
| 3 i இன் ஆசிரியர்கள் 2 ii இற்குப் பதவி உயர்வு பெறுவதற்காகப் பூர்த்தி செய்ய வேண்டிய தேவைகள் → | (A) பயிற்றப்பட்ட/ பயிற்றப்பட்ட டிப்ளோமா மற்றும் அதற்குச் சமமான தகைமை பெற்றவர்கள் | 3 வகுப்பில் புள்ளிகள் 5 (11/31 அ) | மணித்தியாலங்கள் 150 (11/1.2) | - | - | குறிப்பிடப்பட்ட பாடசாலையொன்றின் நிச்சயிக்கப்பட்ட சேவைக் காலம் (11/3.3) |
| | (B) பட்டதாரிகளும் அதற்குச் சமமான தகைமை பெற்றவர்களும் | 3 வகுப்பில் புள்ளிகள் 5 (11/31 அ) | அல்லது | | பட்டப்பின் கல்வி/டிப் (1/8 12) | குறிப்பிடப்பட்ட பாடசாலையொன்றின் நிச்சயிக்கப்பட்ட சேவைக் காலம் (11/33) |
| 2 ii ஆசிரியர்கள் 2 i இற்குப் பதவி உயர்வு பெறுவதற்குப் பூரணப்படுத்தப்பட வேண்டும் → | (A) பயிற்றப்பட்ட/ பயிற்றப்பட்ட டிப்ளோமா | 2/11 இல் புள்ளிகள் 10 (11/3.1ஆ) | வாரங்கள் 06 (11/13) | தொழில் மீளாய்வு (1/813) | - | குறிப்பிடப்பட்ட பாடசாலையொன்றின் நிச்சயிக்கப்பட்ட சேவைக் காலம் (11/33) |
| | (B) பட்டதாரிகளும் அதற்குச் சமமான தகைமை பெற்றவர்களும் | 2/11 இல் புள்ளிகள் 10 (11/31 ஆ) | மணித்தியாலங்கள் 150 (11/15) | தொழில் மீளாய்வு (1/814) | பட்டப்பின் கல்வி/டிப் (11/15) | குறிப்பிடப்பட்ட பாடசாலையொன்றின் நிச்சயிக்கப்பட்ட சேவைக் காலம் (11/33) |
| 2 i இன் ஆசிரியர்கள் 1 ஆம் வகுப்பிற்கு பதவி உயர்வு பெறுவதற்காக பூர்த்தி செய்ய வேண்டிய தேவைகள் → | (A) பயிற்றப்பட்ட/ பயிற்றப்பட்ட டிப்ளோமா | 2/1 இல் புள்ளிகள் 5 (11/31 இ) | மணித்தியாலங்கள் 75 (அண்மித்த 5 வருடங்கள் 11/17) | தொழில் மீளாய்வு (1/8.14) | தடைதாண்டல் பரீட்சை (11/6) | - |
| | (B) தொழில் தகைமை பெற்ற பட்டதாரிகளும் அதற்குச் சமமான தகைமை பெற்றவர்களும் | 2/1 இல் புள்ளிகள் 5 (11/31 இ) | மணித்தியாலங்கள் 75 (11/17) | தொழில் மீளாய்வு (1/814) (11/7) | தடைதாண்டல் பரீட்சை (11/6) | - |

நந்தசேன முனசிங்க
செயலாளர்
ஆசிரியர் சேவை பதவிநிலைப்படுத்தற் குழு
2003. 12. 03.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்று நிருபம் இல: 02/2003

எனது இல: ச/1/92/1/2003
அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்
இல. 46, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 2.
2003 நவம்பர் மாதம் 07 ஆந் திகதி

செயலாளர் - மனிதவள அபிவிருத்தி கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சு
சகல மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்
சகல மாகாண கல்விச் செயலாளர்கள்
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்

## பயிலுநர்/தகுதிகாண் அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட ஆசிரியர்களை இலங்கை ஆசிரியர் சேவையில் உரிய வகுப்பில்/தரத்தில் நியமித்தல்

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவினால் 2001.11.16ஆந் திகதி வெளியிடப்பட்ட 2001/12 ஆம் இலக்கம் கொண்ட சுற்றுநிருபம் 2001.11.21 ஆந் திகதிய 2001/12(1) ஆம் இலக்கம் கொண்ட சுற்றுநிருபம் மற்றும் 2002.03.18 ஆந் திகதிய 2002/03 ஆம் இலக்கம் கொண்ட சுற்றுநிருபம் ஆகியவற்றுக்கு உட்படாத ஆசிரியர்களை இலங்கை ஆசிரியர் சேவையின் உரிய வகுப்பிற்கு/தரத்திற்கு நியமிப்பதற்காக பின்வரும் செயல்முறையை நடைமுறைப்படுத்துவதற்காக அரசாங்க சேவை ஆணைக்குழு அனுமதித்துள்ளது.

02. மேற்குறித்த சுற்றுநிருபங்களில் உட்படாத 1994.10.06 ஆந் திகதிக்குப் பின்னர், அதாவது இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணம் செயற்படுத்தப்பட்ட திகதிக்குப் பின்னர் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவினாலும், கல்விச் சேவைக் குழுவின் அனுமதியுடன் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினாலும் ஆட்சேர்க்கப்பட்ட சகல வகைகளுக்குமுரிய பயிலுநர்/தகுதிகாண் ஆசிரியர்களை கல்விச் சேவைக் குழுவின் 2001/12 ஆம் இலக்க, 2001/12(1) ஆம் இலக்க கொண்டதுமான சுற்றுநிருபங்களின் அறிவுறுத்தல்களை பின்பற்றி இலங்கை ஆசிரியர் சேவையின் உரிய வகுப்பு/தரங்களில் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

03. ஆட்சேர்ப்பதற்கான அடிப்படைத் தகைமையாக கல்விப் பொதுத் தராதர பத்திர (சா.த) அடிப்படையில் அல்லது 03 பாடங்களுடன் கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உ.த) பரீட்சையின் அடிப்படையில் 1994.10.06 ஆந் திகதிக்குப் பின்னர் ஆட்சேர்க்கப்பட்ட ஆசிரியர்களுக்கு கல்வி அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சியை பெற்றிருப்பின், அப்பயிற்சி சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி முதல் ஆசிரியர் சேவையின் உரிய வகுப்பு/தரம் என்பவற்றுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படல் வேண்டும். அவ்வாறு ஆசிரியர் பயிற்சியை பெற்றிராவிட்டால், அப்பயிற்சியை பூரணப்படுத்துவதற்காக இத்திகதி முதல் அதிகபட்சம் 04 ஆண்டு காலம் பெற்று கொடுப்பதோடு அவர்களுக்கு அதற்கான வசதிகளை உரிய அதிகாரிகளினால் செய்து கொடுக்கப்படல் வேண்டும். இதற்கிணங்க அவர்களுக்கு விசேடமாக அவர்களது பயிற்சி சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி முதல் ஆசிரியர் சேவையின் உரிய வகுப்பிற்கு/தரத்திற்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

04. மேற்குறித்த 3ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுடன் ஆசிரியர்களை நிரந்தர சேவைக்கு நியமிக்கும்போது இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணத்தின் முதலாவது உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள "பல்கலைக்கழகத்திற்கு உட்சேர்வதற்கான தகைமையுடன் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்" என்ற தேவையை கவனத்தில் எடுக்காது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

05. மேற்குறித்த ஏற்பாடுகள் பொருந்துவது சுற்றுநிருபம் வெளியிடப்படும் திகதிவரை வழங்கப்பட்டுள்ள நியமனங்களுக்கு மாத்திரம் என்பதைக் கவனிக்கவும். இதன் பிறகு ஆட்சேர்க்கும் போது ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்புக்கு அமைவாக மாத்திரம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய
ஒப்பம்: எச்.டி.எல்.குணவர்தன
செயலாளர்
அரசாங்க சேவை ஆணைக்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ටෙලි/தொலைபேசி இல./Telephone Nos.

...ister } 784807 784832

...etary } 784811

...ice } 785141-50 Fax: 784846

...-மெயில்/E-mail : secedu@sltnet.lk

... අංකය / ...து இல. / Your No. } ....................

කටයුතු අමාත්‍යාංශය
மனிதவள அபிவிருத்தி. கல்வி. பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு
Ministry of Human Resources Development, Education & Cultural Affairs

'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ බත්තරමුල්ල.
'இசுருபாய' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பத்தரமுல்ல.
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte. Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. } டி/04/60/01/01/0

දිනය / திகதி / Date } 2003.11.09

மாகாணக் கல்விச் செயலாளர்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடகிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

**உயர்நீதிமன்ற வழக்கிலக்கம் எப்.ஆர்453/97,454/97,390/99, மற்றும் 362/99இன் தீர்மானப்படி இலங்கை அதிபர் சேவையின் 1ஆம் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தரின் சம்பளம் திருத்தி அமைக்கப்படல்**

மேற்படி வழக்குத் தீர்ப்பின் படி சம்பளம் தயாரிப்பது பற்றித் தங்களுக்கு அனுப்பப்பட்ட எனது சமவிலக்கத்தையும் 2003.06.02 திகதி கொண்ட கடிதம் சம்பந்தமானது,

02. மேற்படி வழக்குத் தீர்ப்பின்படி அமுல்நடாத்துவதற்காக விநியோகிக்கப்பட்ட எமது சமவிலக்கத்தையும் 2003.06.02 திகதிய கடித மூலம் தொடர்ந்தும் விளங்கிக் கொள்வாதற்காக நீதிமன்றத்தில் விளக்கங்கள் கோரப்பட்டுள்ளபடியால் அதுசம்பந்தமாக நீதிமன்றத் தீர்மான மொன்று எதிர்பார்க்கப்படுகின்றது.

03. சம்பள மாற்றம் செய்யப்பட வேண்டிய முறையைப் பற்றி நீதிமன்றத் தீர்ப்புக் கிடைக்கப் பெற்றதும் உரிய ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டியுள்ளபடியால் மேற்படி கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு 97.01.01 தொடக்கம் சம்பளம் மாற்றியமைப்பதைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு தயவாய் வேண்டுகிறேன்.

ஏ.திஸாநாயக்கா.
சிரேஷ்ட உதவிச் செயலாளர்
மனிதவள அபிவிருத்தி கல்வி, கலாசார
அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்காக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுநிருபம் 2002/07

எனது இல: கசேகு/ஆதா/2/17

அரசாங்க சேவை ஆணைக்குழுவின்
கல்விச் சேவைக் குழு
'இசுறுபாய'
பெலவத்த, பத்தரமுல்ல.

2002.07. 17

சகல மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்

பயிலுநர்/தகுதிகாண் அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டுள்ள ஆசிரியர்களை இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணத்திற்கமைய ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கல்

பயிலுநர் மற்றும் தகுதிகாண் அடிப்படையில் ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கப்படும் போது கசேகு/2001/12, 2001/12(1) மற்றும் 2002/03 சுற்று நிருபங்களுக்கு மாத்திரம் பொருந்தும் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

02. 2001/12(1) இலக்கம் கொண்ட சுற்று நிருபத்திற்கமைய கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் தகைமைகளை பெற்ற திகதி முதல் ஆசிரியர் சேவையின் 3II தரத்திற்கு உள்வாங்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. அப்பொழுது தகைமை பெற்ற திகதி, அப்பரீட்சை ஆரம்பிக்கப்பட்ட திகதியாக்கி கணிக்கப்பட்டு நடவடிக்கை எடுப்பது நாபணக் குறிப்புக்கு பொருந்துவதால், அவ்வாறு நடவடிக்கை எடுக்குமாறும் மேலும் அறியத் தருகின்றேன். அதன் பிரகாரம் 1990ஆம் ஆண்டு தொடக்கம் 2002ஆம் ஆண்டுவரை மேல் குறித்த பரீட்சை ஆரம்பிக்கப்பட்ட திகதிகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், உள்வாங்கப்படுவதற்காக கணக்கில் எடுக்கப்படும் திகதி ஏதேனுமொரு முறையில் தகுதிகாண் ஆசிரியர் நியமனத்தை ஏற்றுக் கொண்ட திகதிக்கு முன்னராக மாட்டாது என்பதையும் அவதானிக்கவும்.

| வருடம் | பரீட்சை ஆரம்பிக்கப்பட்ட திகதி |
|---|---|
| 1990 | 1990.08.10 |
| 1991 | 1991.08.03 |
| 1991 வருடத்திற்கான (விசேடபரீட்சை) | 1992.04.01 |
| 1992 | 1992.08.01 |
| 1993 | 1993.08.02 |
| 1994 | 1994.08.01 |
| 1995 | 1995.07.31 |
| 1996 | 1996.09.02 |
| 1997 | 1997.08.04 |
| 1998 | 1998.08.03 |
| 1999 | 1999.08.02 |
| 2000 | 2000.07.31 |
| 2001 | 2001.08.04 |
| 2002 | 2002.04.22 |

பயிலுநர்/ தகுதிகாண் ஆசிரியர்களை ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கப்படுவது சம்பந்தமாக இக்குழுவினால் வெளியிடப்பட்ட கசேகு 2001/8 மற்றும் 2001.11.07ஆந் திகதிய சுற்றுநிருபம், 2001.9 மற்றும் 2001.11.07 ஆந் திகதிய சுற்றுநிருபத்திற்கும் எனது இல கசேகு/ஆதா/16 மற்றும் 2002.05.07ஆந் திகதிய கடிதத்தை உடன் செயற்படும் வண்ணம் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றேன்

பி.எம்.எம்.தென்னகோன்
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழுவின்
கல்விச் சேவைக் குழு.

பிரதிகள்:

01. செயலாளர் மனிதவள அபிவிருத்தி கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சு
02. சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கசேகு/சுற்றுநிருபம்/இல: 99/05

எனது இல. கசேகு/ஆசே/01/05,
அரசாங்க சேவை ஆணைக்குழுவின்,
கல்விச் சேவைக் குழு,
'இசுறுபாய'
பெலவத்த, பத்தரமுல்ல.
1999.11.30

சகல மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்.

**<u>பட்டம் பெற்றுள்ள பயிலுநர் ஆசிரியர்களையும்/பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களையும் தகுதிகாண் ஆசிரியர்களையும் பதவியில் நிரந்தரப்படுத்தல்</u>**

1.0 அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவின் செயலாளரின் 93/02ஆம் இலக்கம் கொண்ட சுற்று நிருபத்தினால் தகைமைகளைப் பெற்றுள்ள பட்டதாரிகளான சாதாரண பயிலுநர் ஆசிரியர்களுக்கு பட்டதாரி பயிலுநர் பதவி வழங்குவதற்கும், பட்டதாரி பயிலுநர்களுக்கு பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்குவதற்குமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இச் செயல்முறை 95/05(1) இலக்கம் கொண்ட சுற்று நிருபத்தினால் இடை நிறுத்தப்பட்டது.

2.0 தற்பொழுதுள்ள ஆசிரியர் பதவியணியில் பின்வரும் வகைகளுக்குரிய பயிலுநர்/பட்டதாரி பயிலுநர் மற்றும் தகுதிகாண் ஆசிரியர் போன்ற ஆசிரியர் தொழிலில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகளும் உள்ளனர்.

2.1 1990ஆம் ஆண்டும் அதன் பின்வரும் இடைக்கிடை பயிலுநர் ஆசிரியர்களாக (தொண்டர் பயிலுநர் உட்பட)வும், தகுதிகாண் ஆசிரியர்களாகவும் ஆட்சேர்க்கப்பட்டுள்ள பட்டதாரிகளாயினும் பட்டத்திற்குரிய நியமனம் கிடைக்கப் பெறாதவர்கள்.

2.2 பட்டதாரி பயிலுநர் நியமனம் பெற்றவர்கள்.

2.3 முதலில் பயிலுநர் அல்லது தகுதிகாண் ஆசிரியராக நியமனம் பெற்று பின்னர் சேவையில் விடுபட்டு, முறையீட்டை பரிசீலனை செய்து மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டிருப்பினும், இதுவரை பட்டதாரிக்குரிய நியமனம் கிடைக்கப் பெறாத சாதாரண பயிலுநர்/தகுதிகாண் ஆசிரியர் அல்லத் பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்கள்.

3.0 பட்டதாரிகளாகிய மேற்குறித்த வகைக்குரிய பட்டதாரி பயிலுநர்கள், பயிலுநர் ஆசிரியர்கள்/தகுதிகாண் ஆசிரியர்கள் இலங்கை ஆசிரியர் சேவைக்கு உரித்தான ஆசிரியர் தரத்திற்கு நியமிப்பது, பின்வரும் நிபந்தனைகளின் கீழ் நடைமுறைப் படுத்தப்படும்.

3.1 ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் 5.3ஆம் பந்தி மற்றும் கீழ் உள்ள 4.2இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் அமைச்சினால் மிகவும் விசேடம் எனக் குறிக்கப்பட்ட பாடப்பரப்புக்கு உரித்தான ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட பட்டம் அல்லது அதற்கு சமனாக அமைச்சினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.2 மேற்குறித்த 2.1இல் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் சம்பந்தமாக தகைமை பெறும் திகதியாவது, பயிலுநராக அல்லது தகுதிகாண் ஆசிரியராக நியமனம் பெற்ற திகதி முதல் 04 வருட காலத்தைப் பூரணப்படுத்திய திகதியாகும்.

3.3 மேற்குறித்த 2.2இல் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் சம்பந்தமாக தகைமை பெறும் திகதியாவது பட்டதாரி பயிலுநர் நியமனத் திகதி முதல் ஒரு வருட காலம் பூரணப்படுத்திய திகதியாகும்.

3.4 மேற்குறித்த 2.3இல் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் சம்பந்தமாக தகைமை பெறும் திகதியாவது சாதாரண பயிலுநர் ஆசிரியர் சம்பந்தமாக, மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்ட திகதி முதல் 04 வருட காலமும், பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களாயின், மீண்டும் சேவையில் அமர்த்தப் பட்ட திகதி முதல் ஒரு வருட காலம் பூரணப்படுத்தப்பட்ட திகதியாகும்.

3.5 மேற்குறிப்பிடப்பட்டுள்ள 2.1 மற்றும் 2.2 பந்திகளில் குறிப்பிடப் பட்டுள்ளவர்கள் சம்பந்தமாக நியமனம் செயல்படும் திகதியாக கவனிக்கப் படுவது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தேவைகளிலும் கீழ் பட்டம் பெற்ற திகதி அல்லது மேற்குறித்த 3.2இல் அல்லது 3.3இல் தகைமை பெற்றுள்ள திகதி என்ற இரண்டில் பின்னர் வரும் திகதியில் இருந்தாகும். மேற்குறித்த 2.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் சம்பந்தமாக செயற்படும் திகதியாவது மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்ட திகதி அல்லது பட்டம் பெற்ற திகதி என்ற இரண்டில் பின்னர் வரும் திகதி தொடக்க மாகும் என்பதுடன் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தேவைகளை பூரணப் படுத்துவதற்கும் மேற்குறித்த 3.4இன் கீழ் என்பதையும் கவனிக்கவும்.

3.6 பட்டத்திற்கு உரித்தான தரத்தில் அமர்த்தப்பட்டுள்ள ஆசிரியர்கள் தமது முதல் நியமனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாடப் பரப்பில் தொடர்ந்து சேவை செய்யும் நிபந்தனைக்கு கட்டுப்படுதல் வேண்டும். உதாரணமாக ஆங்கிலப் பாடத்திற்கு முதல் நியமனமான பட்டதாரியொருவர் வேறு பாடப்பரப்பிற்காக பட்டம் பெற்றிருப்பினும் நியமனக் கடிதத்தில் குறிப் பிடப்பட்டுள்ள ஆங்கிலப் பாடத்தை தொடர்ச்சியாக கற்பித்தல் வேண்டும்.

3.7 966/5ஆம் இலக்கமும் 1997 மார்ச் 11ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையினால் திருத்தப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணத்தின் 5.3பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளின் கீழ் ஆசிரியர் சேவையின் 3வது வகுப்பின் 1ஆம் தரத்திற்கு அல்லது 2வது வகுப்பின் 11ஆந் தரத்திற்கு நியமிக்க முடியும்.

4.0 கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களையும் தாங்கள் பின்பற்றுதல் வேண்டும்.

4.1 பெற்றுள்ள பட்டம் வெளிவாரியல்லாதவிடத்து அதனை பின்பற்றுவதற்காக விடுமுறை அல்லது அனுமதி பெற்றிருந்தாரா என்பதை நியமனம் வழங்கப் படுவதற்கு முன்னர் ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். அத்துடன் சில பட்டதாரிகள் தமது பயிலுநர் கொடுப்பனவுக்கு மேலதிகமாக மஹாபொல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற மாணவர் நன்கொடை பெற்றிருந்தாரா என்பதை ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். அவ்வாறானவர்கள் சம்பந்த மாக உரிய அதிகாரிகள் மூலம் தீர்மானம் எடுத்தல் வேண்டும்.

4.2 இச்சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளுக்கு ஏற்றவாறு ஆசிரியர் சேவையில் குறித்த தரத்தை நிரப்பும் போது அமைச்சினால் குறிக்கப்பட்ட பாடப்பரப்பிற்கு பொருத்தமற்ற பட்டம் பெற்றுள்ளவர்களுக்கு (அதாவது நீதி தொல்பொருளியல் போன்ற பாடங்களுக்கு) பட்டதாரி நியமனம் வழங்க அவகாசம் இல்லை.

4.3 நியமனம் செயற்படும் திகதி ஆசிரியர் சேவைப் பிரமாணம் செயற்படும் திகதிக்கு முன்னுள்ள திகதியாக இல்லாதிருப்பதுடன் உரிய தரம் நிரப்புவது ஆசிரியர் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பள முறை, நிபந்தனை மற்றும் வேறு நடைமுறைகளுக்கும் கீழாகும் என்பதை கவனிக்கவும்.

5.0 தேசிய பாடசாலைகளில் சேவை புரியும் பயிலுநப் ஆசிரியர்கள்/பட்டதாரி பயிலுநர்கள் மற்றும் தகுதிகாண் ஆசிரியர்கள் இவ்வடிப்படையில் நிரந்தரப் படுத்துவதற்கும் நியமனக் கடிதம் வழங்கப்படுவதற்குமான அதிகாரம் மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. கல்விச் சேவைக் குழுவின் செயலாளரின் பிரதி ஒப்பத்துடன் மாகாணக் கல்விப் பணிப்பாளர்களால் இக் கடிதங்கள் வழங்கப்படுதல் வேண்டும்.

6.0 உரிய நியமனக் கடிதத்தின் மாதிரி இத்துடன் உள்ளது. சம்பள அளவுத் திட்டம் 966/5ஆம் இலக்கமும் 1997 மார்ச் 11ஆந் திகதிய அதி விசேட வர்த்த மானப் பத்திரத்தால் திருத்தியமைக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணத்தின் 7வது பந்தியின் பிரகாரம் அமைதல் வேண்டும்.

7.0 இலங்கை ஆசிரியர் சேவைக்கு உள்ளெடுக்கப்பட்டதன் பின்னர் பட்டம் பெற்றுள்ள ஆசிரியர்கள் சம்பந்தமாக செயற்படும் முறை தொடர்பாக 96/02ஆம் இலக்கமும் 1996.08.06ஆந் திகதிய சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அதற்கு தங்களது அவதானத்தைச் செலுத்தவும்.

8.0 கல்வி உயர்கல்வி அமைச்சில் நடைபெற்ற கல்வி அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் மாகாணக் கல்விச் செயலாளர்கள் உட்பட மாகாண கல்வி அதிகாரிகளுடன் ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையிலும் கல்வி உயர்கல்வி அமைச்சின் விருப்பத்துடன் இச்சுற்று நிருபம் வெளியிடப்படுவதை கவனிக்கவும்.

எஸ்.ஏ.பிரேமரத்தின,

செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழுவின்,
கல்விச் சேவைக் குழு.

<u>பிரதிகள்:</u>

கல்வி உயர்கல்வி அமைச்சின் செயலாளர்.

தங்களது 4/ஆசே/இட/கு/1ஆம் இலக்கமும் 1999.11.04 மற்றும் 1999.11.23ஆந் திகதியும் கொண்ட கடிதம் சார்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கசேகு/ஆசிரியர் சேவை
சுற்று நிருபம்.1/99(1)

எனது இல:கசேகு/ஆசிரியர்சேவை/1/4
அரசாங்க சேவை ஆணைக்குழுவின்,
கல்விச் சேவைக் குழு,
'இசுறுபாய'
பெலவத்த, பத்தரமுல்ல.
1999.10.11

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்.

## இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணத்தின் திருத்தங்களுக் கமைய ஆசிரியர் சேவையில் பதவி உயர்வை செயற்படுத்தல்

மேற்குறித்த விடயம் தொடர்பாக என்னால் வெளியிடப்பட்ட கசேகு/ஆசிரியர் சேவை/1/99ஆம் இலக்க சுற்று நிருபம் பின்வருமாறு திருத்தியமைக்கப் பட வேண்டுமென்பதை தயவாய் அறியத் தருகின்றேன்.

1. 7வது பக்கத்தின் முதல் பந்தியை நீக்கி விட்டு பின்வரும் பந்தியைச் சேர்க்கவும்

"அத்துடன் சேவையின் 3-1ஆம் தரத்தின் சம்பள அளவுத் திட்டமாக, 1996.12.31வரை செயல்படுத்தப்பட்ட ரூபா:42,720/- 12X1200-57,120என்ற சம்பள அளவுத் திட்டத்தில் ரூபா:57,120.- -சம்பளப் படிக்கு அல்லது 1997.01.01ஆந் திகதிக்கு செயல்படுத்தப்பட்ட ரூபா:, 55,140-9X1320-3X1560-79,500என்ற சம்பள அளவுத் திட்டத்தில் ரூபா:79,500/-என்ற சம்பளப் படியை அடைந்துள்ள 3-1தரத்தின் ஆசிரியர் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தேவைகளைப் பூரணப்படுத்துவதன் கீழ் சேவைக் காலப் பயிற்சி சம்பந்தமான தேவையிலிருந்து விடுவிக்கப்படுவதுடன், அதற்கடுத்த தரமான 2-11தரத்திற்கு உயர்வு செய்தல் வேண்டும்.

02. 7வது பக்கத்தின் இரண்டாவது பந்தியை நீக்கிவிட்டு, பின்வரும் பந்தியைச் சேர்க்கவும்

"மேலும் ஆசிரியர் சேவையின் 2-11ஆந்தர ஆசிரியர்களிலிருந்து அத்தரத் திற்கு அமைவாக 1996.12.31ஆந் திகதி வரை செயல்படும் சம்பள அளவுத் திட்டமான ரூபா:53,880/- 15X1560-77,280/-சம்பள அளவுத் திட்டத்தில் 77,280/-சம்பளப் படிக்கு அல்லது 1997.01.01ஆந் திகதி முதல் செயல்படும் ரூபா:67,320/- 12X2460-98,640/- சம்பள அளவுத்திட்டத்தின் ரூபா: 98,640/-சம்பளப் படியை அடைந்துள்ள ஆசிரியர்கள், ஏனைய பிரமாணங்களுக் கமைய முன்னுள்ள தேவைகளையும் , பூரணப்படுத்துவதன் கீழ் தொழில் மீளாய்வு மற்றும் சேவைக்காலப் பயிற்சி போன்ற தேவைகளிலி ருந்தும் விடுவிக்கப்படுவார்கள். இதன் பிரகாரம் அவர்களும் அதற்கடுத்த தரமான 2-1 தரத்திற்குப் பதவி உயர்வு செய்யப்படுதல் வேண்டும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. 7வது பக்கத்தில் மூன்றாவது பந்தியில் இல: 2இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நீக்கிவிட்டு பின்வரும் பந்தியைச் சேர்க்கவும்

2. வயது 50 வருடத்தை தாண்டியிருத்தல்.

கி.பி. 2000.12.31ஆந் திகதிவரை இவ்வாசிரியர்களும் தொழில் மீளாய்வு, சேவைக்காலப் பயிற்சி தொடர்பான தேவைகளிலிருந்தும் விடுவிக்கப்படுவர்கள்.

04. 7வது பக்கத்தின் நான்காம் பந்தியை நீக்கிவிட்டு பின்வரும் பந்தியைச் சேர்க்கவும்

"மேற்குறித்த வண்ணம் விடுவிக்கப்பட்ட காரணத்தினால் பதவி உயர்வு செய்வதற்காக தகைமை பெற்றுள்ள 3-11 தரத்தின், 3-1 தரத்தின் மற்றும் 2-11, 2-1 தரங்களின் ஆசிரியர்கள், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய கோரப்பட்டதன் பின்னர், அவர்களது சுயவிபரக் கோவை பரிசீலிக்கப்பட்டு, உரிய விடயத்தை உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சுடன், அவ்விண்ணப்பப்பத்திரம் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். மாகாண அரசாங்க சேவைக்குரித்தான ஆசிரியர்களின் விண்ணப்பப் பத்திரம் அவரது சிபார்சுடன் அங்கீகாரத்திற்காக சம்பந்தப்பட்ட மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு/மாகாணக் கல்விச் செயலாளருக்கு உரிய முறையின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். தேசிய பாடசாலைகளில் சேவை புரியும் ஆசிரியர்களின் பதவி உயர்வு மாகாண கல்விப் பணிப்பாளர்களினால் செய்யப்படுதல் வேண்டும்.

அச்சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் நிலுவைப் பணம் வழங்கப்படமாட்டாதுடன், 1999.09.01ஆந் திகதி முதல் அல்லது பதவி உயர்வு பெறுவதற்காக தகைமை பெறும் திகதி அல்லது என்ற இரண்டு திகதிகளுள் பின்னர் வரும் திகதி முதல் சம்பளம் வழங்கப்படுதல் வேண்டும்.

அச்சுற்றுநிருபத்திற்கு தொடர்பான காலத்தினுள் ஓய்வு பெற்றுள்ள ஆசிரியர்களுக்கு ஏற்புடைய பதவி உயர்வு வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். இதன் பிரகாரம் அவர்களது ஓய்வூதியச் சம்பளத்- நிலுவைச் சம்பளம் வழங்கப்படாமல் திருத்தியமைக்கப்படுதல் வேண்டும்.

1/99 சுற்று நிருபத்திற்கு இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்பத்திரத்தின் தலைப்பு கசேசு/ஆசிரியர்சேவை 1/99மற்றும் 1/99(1)என்பவற்றின் பிரகாரம் இலங்கை ஆசிரியர் சேவையில் பதவி உயர்வு சம்பந்தமான விண்ணப்பித்தல் என திருத்தியமைக்கப்பட வேண்டியதுடன், அதில் இறுதிப் பந்தி உரியவாறு திருத்தியமைக்கப்பட வேண்டும். என்பதையும் தயவாய் அறியத் தருகிறேன்.

K.S. [signature]
உதவிச் செயலாளர்.

ஒப்பம்: எம்.டி.பத்மசேன,
பதில் செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழுவின்,
கல்விச் சேவைக் குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இல: கசே ந/ஆசே/1/1
அரசாங்க சேவை ஆணைக்குழுவின்,
கல்விச் சேவைக் குழு,
'இசுருபாய'
பெலவத்த, பத்தரமுல்ல.
1998 - 09 - 30.

சகல மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல தேசிய பாடசாலை அதிபர்களுக்கும்.

**இலங்கை ஆசிரியர் சேவைக்கு உள்ளெடுக்கப்பட்டதன் பின்னர் ஆசிரியர் பயிற்சியும் பட்டமும் பெற்ற ஆசிரியர் சம்பந்தமான நடவடிக்கை**

மேற்குறித்த விடயம் சம்பந்தமாக தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள 96/2 மற்றும் 97/03ஆம் இலக்க கல்விச் சேவைக் குழுவின் சுற்று நிருபத்திற்கு மேலதிகமாக.

02. ஆசிரியர் சேவைக்கு உள்ளெடுக்கப்பட்டதன் பின்னர் சேவையில் ஈடுபட்டிருக்கும் போது ஆசிரியர் பயிற்சியைப் பெற்றுள்ள தேசிய பாடசாலைகளில் சேவை புரியும் 3/11 ஆந் தரத்தில் உள்ள ஆசிரியர்களின், ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழும் அவர்களால் பூரணப்படுத்தப்பட வேண்டிய வேறு தேவைகளும் பூரணப்படுத்தியிருப்பின் அவர்கள் பயிற்சி சம்பள முறையில் அமர்த்தப்பட்டு, சம்பளம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து 3/1ஆந் தரத்திற்கு நியமிக்கதற்கான முறையான கடிதம் வழங்குவதற்காக, அவர்கள் சம்பந்தமான தகவல்களை எனக்கு அனுப்பி வைக்குமாறு 97/03ஆம் சுற்று நிருபத்தினால் தங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

03. அத்துடன் தேசிய பாடசாலைகளில் சேவை புரியும் 3/11 ஆந் தர ஆசிரியர்கள் சேவையில் ஈடுபட்டிருக்கும் போது பட்டம் பெற்றிருப்பின் அவர்களை 3/1ஆந் தரத்திற்கு நியமிப்பது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்காக அவர்கள் சம்பந்தமான தகவல்களை எனக்கு அனுப்பி வைக்குமாறு கோரி எனது சம இலக்கமும் 1998.06.30ஆந் திகதிய கடிதத்தினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இவ்வாசிரியர்கள் சம்பந்தமாக அறிய வரும் தகவல்கள் பிரமாணம் இல்லாதிருப்பதுடன் அவர்களது சுய விபரக்கோவை போன்றவற்றை பரிசீலிப்பதற்கு முடியாமலிருப்பதால், இவர்கள் சம்பந்தமான நடவடிக்கை எடுப்பதற்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. இதன் பிரகாரம் சேவையில் உள்ள போது ஆசிரியர் பயிற்சியை அல்லது பட்டத்தினைப் பெற்ற தேசிய பாடசாலைகளில் சேவை புரியும் 3/11 தரத்திலுள்ள ஆசிரியர்களின் சான்றிதழ்கள் பிழையற்றதாகவும், அவர்களால் பூரணப்படுத்தப்பட வேண்டிய வேறு நிபந்தனைகள் இருப்பின் அவற்றினையும் பூரணப்படுத்தப்பட்டதென நிச்சயப்படுத்திய தன் பின்னர், ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அமைவாக அவர்களை 3/1 தரத்திற்கு நியமித்து எனது மேலொப்பத்துடன் நியமனக் கடிதம் வழங்கப் படுவதற்கு தயவு செய்து நடவடிக்கை எடுக்கவும். அவர்களுக்கு வழங்கப்படுவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தேசிக்கப்பட்டுள்ள நியமனக் கடிதத்தின் சுருக்கப் பிரதியொன்று, இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஏற்றவாறு தேவையான இடங்களைத் திருத்திக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

04. தங்களால் இங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தகவல் படிவங்களையும் இத்துடன் திருப்பி அனுப்பி வைக்கிறேன்.

R.S.G.

ආර්. [illegible]
[illegible]
'ඉසුරුපාය', පැලවත්ත,
බත්තරමුල්ල.

எம். டி. பந்துசேன,
பதில் செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழுவின்
கல்விச் சேவைக் குழு.

அமைச்சின் சுற்றுநிருபம்-95-7VIII எனது இல: 4/குரு3/1/3099
கல்வி, உயர்கல்வி அமைச்சு,
'இசுருபாய'
பத்தரமுல்ல.
1996.02.06

சகல மாகாண கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,

**கல்வியாளி பட்டதாரி ஆசிரியர்களுக்கு புதிய ஆசிரியர் சேவைத் திட்ட ஏற்பாட்டின் கீழ் சம்பளச் சரிக்கட்டல்**

புதிய ஆசிரியர் சேவைத் திட்ட ஏற்பாட்டின் கீழ் கல்விமாணி பட்டப் படிப்பை நிறைவு செய்த சமூக விஞ்ஞான டிப்ளோமா ஆசிரியர்களின் சம்பள மாற்றங்கள் செய்வது சம்பந்தமான சிக்கல்கள் சில இருப்பதாக அறிக்கை கிடைத்துள்ளது. இப்பட்டதாரிகள் சம்பந்தமாக எனது இல: 95/7 (111) கொண்ட சுற்றுநிருபப்படி அமைவதோடு, பட்டதாரி ஆசிரியர்களாகக் கணிக்கப்படும் சான்றிதழுக்கமைய, பட்டதாரி நியமனம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து அவர்களுக்குரிய பட்டதாரிச் சம்பளம் வழங்கப்பட வேண்டும். அப்பட்டம் கல்விமாணிப் பட்டமாயமையின், அவ் ஆசிரியர் குழுவினர் தொழிற்றகைமை கொண்ட பட்டதாரிகளாகக் கணிக்கப்படுவர்.

ஒப்பம்
சேனாநாயக்க உபசேன
மேலதிகச் செயலாளர் (பரிபாலனம்)
கல்வி, உயர்கல்விச் செயலாளருக்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கசேஆ/ஆசிரியர் சேவை
சுற்று நிருபம் 1/99

எனது இல: கசேஆ/ஆசிரியர் சேவை1/4
அரசாங்க சேவை ஆணைக்குழுவின்,
கல்விச் சேவைக் குழு,
'இசுருபாய'
பெலவத்த, பத்தரமுல்ல.
1999 செப்டெம்பர் மாதம் 30ஆந் திகதி

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர்கள்,
சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,

## இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணத்தின் திருத்தங்களுக்கமைய ஆசிரியர் சேவையில் பதவி உயர்வு செயற்படுத்தல்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 865/3ஆம் இலக்கமும் 1995.04.03ஆந் திகதியும் கொண்ட அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 1997.03.11ஆந் திகதியும் 966/5ஆம் இலக்கமும் மற்றும் 1997.05.14ஆந் திகதியும் 975/6ஆம் இலக்கமும் கொண்ட வர்த்தமானப் பத்திரிகை திருத்தப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணங்களை செயற்படுத்தும் போது நோக்கப்படும் பிரச்சினை மற்றும், பல ஆசிரியர் தொழிற்சங்கங்களினால் செய்யப்பட்ட முறையீடுகளையும் பரிசீலனை செய்த அமைச்சரவை, அப்பிரமாணத்தை பின்வருமாறு மீண்டும் திருத்தியமைப்பதற்கும், உள்ள ஆசிரியர்களின் உயர்ச்சிகளுக்குரிய பின்வரும் ஏற்கனவே தேவைகளிலிருந்தும் விடுவிப்பதற்கும் 1999 ஆகஸ்ட் மாதம் 11ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திருத்தம்

865/3ஆம் இலக்கமும் 1995.04.03ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பில்

1. [illegible]

2:6 மேற்பார்வை அலுவலர் என்பது தகுதியான மற்றும் முறையான மேற்பார்வை நடாத்தப்படுவதற்காக தயாரிக்கப்பட்ட சட்டம் மற்றும் கட்டளைகளின் பிரகாரம் நியமிக்கப்பட்ட கல்வி உயர் கல்வி அமைச்சின் அல்லது திணைக்களத்தின் ஓர் அலுவலர் என கருதப்படுகிறது.

2:12 "பயிற்றப்பட்ட டிப்ளோமாதாரர்" எனக் கருதப்படுவது 2:11இல் குறிப்பிடப்பட்டுள்ள டிப்ளோமா பாடநெறிகள் மற்றும் 2:9 அல்லது அதற்கு பகரமாக அமைச்சினால் ஏற்கக் கொள்ளப்படும் பயிற்சிப் பாடநெறியொன்றை திருப்தியாகப் பின்பற்றி பூர்த்தி செய்த ஒருவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2:13 "பயிற்றப்படாத ஆசிரியர்" எனக் கருதப்படுவது மேற் குறிப்பிடப்பட்டுள்ள 2:9, 2:10, 2:11, 2:12 என்பவற்றின் கீழ் விபரிக்கப்பட்டுள்ள வகையைச் சாராத ஆசிரியர்கள். (2:1, 2:2, 2:3, 2:4, 2:5, 2:7, 2:8, 2:9, 2:10, 2:11 ஆகிய உப வாசகங்கள் வேறுபட மாட்டாது.)

2. 1வது பகுதி 13ஆம் வாசகம்

13 இலங்கை ஆசிரியர் சேவை தாபிக்கப்பட்ட பின்னர் ஏற்படக் கூடிய யாதேனும் முரண்பாடுகளைப் பரிசீலனை செய்து தீர்வுகளைக் காண்பதற்காக நிலையியற் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும்.

அக்குழு கீழ் குறிப்பிடப்படும் வகையில் 11 அங்கத்தவர்களைக் கொண்டதாக அமைய வேண்டும்.

அமைச்சின் செயலாளரினால் பெயர் குறிப்பிடப்படும் 02 உறுப்பினர். நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரினால் பெயர் குறிப்பிடப்படும் 01 உறுப்பினர். பொது நிருவாக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரினால் பெயர் குறிப்பிடப்படும் 01 உறுப்பினர். கல்விச் சேவைக் குழுவினால் பெயர் குறிப்பிடப்படும் 01 உறுப்பினர். ஆசிரிய தொழிற்சங்கங்களின், ஆலோசனையின் பேரில் அமைச்சின் செயலாளரினால் பெயர் குறிப்பிடப்படும் 06 உறுப்பினர்கள்.

(13:1, 13:2, 13:3 உப வாசகங்களில் மாற்றம் ஏற்படாது.)

11 வது பகுதி 1ஆம் வாசகம்

1:1 பயிற்றப்படாத ஆசிரியர்கள் சேவையின் 3ஆம் வகுப்பின் 11ஆந் தரத்திலிருந்து 3ஆம் வகுப்பின் 1ஆந் தரத்திற்குப் பதவி உயர்வு பெறுவதற்காக அமைச்சு/மாகாணத் திணைக்களம்/தேசிய கல்வி நிறுவகம் அல்லது அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட வேறும் சேவைக்காலப் பயிற்சி நிறுவனமொன்றில் 150 மணித்தியாலங்களுக்குக் குறையாத பயிற்சியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

1:2 பயிற்றப்பட்ட அல்லது பயிற்றப்பட்ட டிப்ளோமாதாரர் ஆசிரியர்கள் சேவையின் 3வது வகுப்பின் 1ஆந் தரத்தில் இருந்து சேவையின் 2வது வகுப்பின் 11ஆந் தரத்திற்கு உயர்வு செய்வதற்காக சேவைக்காலப் பயிற்சித் திட்டமொன்றில் 150 மணித்தியாலயத்திற்குக் குறையாமல் பங்குபற்றி இருத்தல் வேண்டும்.

1:3. பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் அல்லது பயிற்றப்பட்ட டிப்ளோமா ஆசிரியர் சேவையின் 2ஆம் வகுப்பின் 11ஆந் தரத்திலிருந்து சேவையின் 2ஆம் வகுப்பின் 1ஆந் தரத்திற்கு பதவி உயர்வு பெறுவதற்கு ஆறு வாரங்களுக்குக் குறையாத மீள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றில் பங்குபற்றி இருக்கல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1:4 பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் அல்லது பயிற்றப்பட்ட டிப்ளோமா ஆசிரியர்கள் சேவையின் 2ஆம் வகுப்பின் 1ஆந் தரத்திலிருந்து சேவையின் 1ஆம் வகுப்பிற்கு பதவி உயர்வு பெறுவதற்காக அண்மித்த 05 ஆண்டுகளில் 75 மணித்தியாலங்களுக்குக் குறையாத மீள் பயிற்சி/சேவைக் காலப் பயிற்சிப் பாடநெறி ஒன்றில் பங்குபற்றி இருத்தல் வேண்டும்.

1:5 தொழிற்றகைமை பெற்றிராத பட்டதாரி ஆசிரியர்கள் சேவையின் 2ஆம் வகுப்பின் 11ஆந் தரத்திலிருந்து 2ஆம் வகுப்பின் 1ஆம் தரத்திற்கு பதவி உயர்வு பெறுவதற்குப் பட்டப் [illegible] கல்வி டிப்ளோமா பாடநெறியொன்றை சிறப்பாக பயின்று பூர்த்தி செய்திருப்பதோடு 150 மணித்தியாலங்களுக்குக் குறையாத சேவைக் காலப் பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றி இருத்தல் வேண்டும்.

1:6 தொழிற்றகைமை பெற்றுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் சேவையின் 2ஆம் வகுப்பின் 11ஆந் தரத்திலிருந்து 2ஆம் வகுப்பின் 1ஆம் தரத்திற்கு பதவி உயர்வு பெறுவதற்கு 150 மணித்தியாலங்களுக்குக் குறையாத சேவைக்காலப் பயிற்சிப் பாடநெறியொன்றில் பங்குபற்றி இருத்தல் வேண்டும்.

1:7 தொழிற்றகைமை பெற்றுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் சேவையின் 2ஆம் வகுப்பின் 1ஆந் தரத்திலிருந்து 1ஆம் வகுப்பிற்குப் பதவி உயர்வுக்கு அண்மித்த 05 வருட காலத்திற்குள் 75 மணித்தியாலத்திற்குக் குறையாத மீள் பயிற்சி பெறல். சேவைக்காலப் பயிற்சி பெற்றிருத்தல்.

[illegible] வது பகுதியின் 3வது வாசகம்

3:1 அ. 3வது வகுப்பின் 1ஆந் தரத்திலிருந்து 2வது வகுப்பின் 11ஆந் தரத்திற்குப் பதவி உயர்த்தப்படுவதற்கு தொழிற்றகைமை அற்ற பட்டதாரிகளுக்கு, பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு மற்றும் பயிற்றப்பட்ட டிப்ளோமா ஆசிரியர்களுக்கு 3ஆம் வகுப்பின் சேவைக் காலத்தினுள் உழைத்துக் கொள்ளப்பட்ட 05 புள்ளிகள்

ஆ. தொழிற்றகைமை உடைய பட்டதாரி ஆசிரியர்களுக்கு, பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு மற்றும் பயிற்றப்பட்ட டிப்ளோமா ஆசிரியர்களுக்குச் சேவையின் 2ஆம் வகுப்பின் 11ஆந் தரத்திலிருந்து சேவையின் 2ஆம் வகுப்பின் 1ஆந் தரத்திற்கு உயர்த்தப்படுவதற்கு 2-11ஆம் தரத்தில் சேவைக்காலத்தினுள் உழைத்துக் கொள்ளப்பட்ட 10 புள்ளிகள்.

இ. சேவையின் 2ஆம் வகுப்பின் 1ஆந் தரத்திலிருந்து 1ஆம் வகுப்பிற்கு பதவி உயர்த்தப்படுவதற்காக 2ஆம் வகுப்பின் 1ஆந் தரத்திற்குரிய சேவைக்காலத்தினுள் உழைத்துக் கொள்ளப்பட்ட 05 புள்ளிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3:2 சேவையைச் சேர்ந்த அலுவலர்கள் பதவி உயர்வுக்கான புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் ஒழுங்கு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

அ. பயிற்றப்பட்ட ஆசிரியர்களில் இப்பிரமாணக் குறிப்பின் 1வது பகுதியின் 2-9இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரிய பயிற்சிநெறியொன்றைப் பெறுவதற்கு முன்பு நிரந்தர நியமனமொன்றைப் பெற்றிருந்த ஆசிரியர்களுக்கு அவ்வாறு ஒரு நிரந்தர ஆசிரியராகச் சேவை செய்த காலத்திற்கும் ஆசிரியர் பயிற்சியைப் பெற்ற காலத்திற்கும் ஒவ்வோர் ஈராண்டிற்கும் 01 புள்ளி வீதம்.

ஆ. பயிற்றப்பட்ட அல்லது பயிற்றப்பட்ட டிப்ளோமாதாரர் அல்லது பட்டதாரி ஆசிரியராக சேவை செய்துள்ள காலத்திற்கு ஒவ்வொர் ஆண்டிற்கும் 1 புள்ளிகள் வீதமும்.

இ. பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெறுவதற்கு முன்பு வேறும் நிரந்தர ஆசிரிய நியமனமொன்றைப் பெற்றிருந்த ஆசிரியர்களுக்குப் பட்டதாரி ஆசிரிய நியமனம் செல்லுபடியாகும். திகதிக்கு முன்னுள்ள நிரந்தர நியமனத்தின் கீழான சேவைக் காலத்திற்கு ஒவ்வொரு ஈராண்டிற்கும் 1 புள்ளி வீதம். (பயிற்சி ஆசிரியர்கள் சம்பந்தமாக 3:2(அ) ஏற்புடையதாகும்.)

ஈ. சேவையின் 3ஆம் வகுப்பின் 1ஆந் தரத்தைச் சேர்ந்த அலுவலர்களுக்கு இங்கு 04வது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையில் தேர்ச்சி பெறுவதன் பேரில் 03புள்ளிகள்

உ. சேவையின் 2ஆம் வகுப்பின் 11ஆந் தரத்தைச் சேர்ந்த அலுவலர்களுக்கு இங்கு 05வது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையில் தேர்ச்சி பெறுவதன் பேரில் 05 புள்ளிகள்.

ஊ. பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறியில் தேர்ச்சி பெற்றால் ஒருமுறை மாத்திரம் கணக்கிடக் கூடியதாக 1 புள்ளி மாத்திரம்.
(3:3 வாசகத்தில் மாற்றம் ஏற்படாது.)

5, II வது பகுதியின் 7வது வாசகம்

7:1:1 ஒவ்வோர் ஆசிரியரினதும் ஆசிரிய அறிக்கைப் புத்தகத்தில் உரிய கால எல்லைக்குள் பதியப்பட்டுள்ள அறிக்கைகளும், குறிப்புக்களும்.

7:1:2 உரிய கால எல்லைக்குள் ஆசிரியரின் வருடாந்த சாதனை மதிப்பீட்டறிக்கை.

7:1:3 ஆசிரியரின் வகுப்பறைக் கற்பித்தல் பற்றி மேலாய்வுக் குழுவினால் அல்லது உத்தியோகத்தரால் செய்யப்படும் மதிப்பீடுகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7:1:4 உரிய காலத்தினுள் ஆசிரியரால் பெற்றுக் கொள்ளப்பட்ட விடுமுறைகள் (ஆசிரியருக்கு உரிய விடுமுறைகளில் பெற்றுக் கொள்ளப்படாத 2 விடுமுறை நாட்களுக்கு 1 புள்ளிவீதமும் ஆசிரியர் கடுமையாக நோய்வாய்ப்பட்ட சந்தர்ப்பங்களில் அல்லாத வேறு சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொள்ளப்பட்ட சம்பளமற்ற விடுமுறை 2இற்கு 1 புள்ளி வீதம் குறைத்தும் புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்.)

7:1:5, 7:1:6, 7:2, 7:2:1, 7:3, 7:3:1, 7:3:2, 7:4, 7:5, 7:6 வாசகங்கள் நீக்கப் பட்டுள்ளன.

6. 1[illegible] வது பகுதியின் (9) மற்றும் (10) வது வாசகம்

09. தொழில் மீளாய்வுக்காகப் பயன்படுத்தப்படும் அறிக்கைகள் அல்லது குறிப்புக்கள் என்பன தொடர்பான படிவங்கள், மற்றும் அப்படிவங்களைப் பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள் உட்பட, தொழில் மீளாய்வு செய்யப்பட வேண்டிய முறை பற்றிய அறிவுறுத்தல்கள் கல்விச் சேவைக் குழுவின் இணக்கப்பாட்டுடன் அமைச்சின் செயலாளரினால் அவ்வப்போது தேவைக்கேற்ப வழங்கப்பட வேண்டும்.

10. இப்பிரமாணக் குறிப்பின் 11ஆம் பகுதியின் 04, 05, 06 ஆகிய வாசகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைகளுக்கான பாடத்திட்டங்கள் அமைச்சின் செயலாளரினால் தயாரிக்கப்பட்டு கல்விச் சேவைக் குழுவின் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

7. 11 வது பகுதியின் 2 - அ வாசகம்

2 - அ பட்டதாரி ஆசிரியராக 15 வருட காலத்தினுள் திருப்திகரமான சேவைக்காலத்தை பூரணப்படுத்தி உள்ள அல்லது மேற்குறித்த 1வது வாசகத்தின் பிரகாரம் 20 புள்ளிகள் பெற்றுள்ள தொழிற்றகைமையுடைய பட்டதாரி ஆசிரியர்.

<u>விடுவித்தல்</u>

1. இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின்படி 1994.10.06ஆந் திகதியன்று உள்ளீர்ப்புச் செய்யப்பட்டு வகுப்பிற்குரிய/தரத்திற்குரிய சம்பள அளவுகளின் உச்ச அளவை அடைந்துள்ள அத்துடன் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை ஆசிரியர் சேவையின் 11 ஆந் தரம் வரையுள்ள தரங்களில் தங்கி நின்றுள்ள ஆசிரியர்களை கி.பி. 2000வரை தொழில் மீளாய்வு, சேவைக் காலப் பயிற்சி போன்ற தேவைகளிலிருந்து விடுவித்து அடுத்த தரத்திற்கான பதவி உயர்வுகளை வழங்குதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. இலங்கை ஆசிரியர் சேவையின் 2ஆம் வகுப்பின் 11ஆந் தரத்திற்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ள, அத்தரத்திற்குரிய சம்பள அளவின் உச்ச தரத்தை அடைந்துள்ள 50 வயதைத் தாண்டிய தொழிற் தகைமைகளுடன் கூடிய பட்டதாரி ஆசிரியர்களுக்கு, பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு மற்றும் பயிற்றப்பட்ட டிப்ளோமாதாரர் ஆசிரியர்களுக்கு தொழில் மீளாய்வு, சேவைக்காலப் பயிற்சி மற்றும் 11ஆம் பகுதியில் 6வது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையில் சித்தியடைதல் போன்ற தேவைகளைத் தவிர்த்து இலங்கை ஆசிரியர் சேவையின் 1ஆம் வகுப்பிற்கு பதவி உயர்வு வழங்குதல்.

<u>தெளிவுபடுத்தல்</u>

1. மேற்குறித்த திருத்தங்களுக்கமைய பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு ஒரு வகுப்பிலிருந்து/தரத்திலிருந்து அடுத்துள்ள தரத்திற்கு பதவி உயர்வு செய்வதற்காக தகைமை பெறுவதற்காக உரிய கால எல்லை சுருக்கப்பட்டுள்ளது. 11வது பகுதியின் 3வது வாசகத்தின் கீழ் உள்ள திருத்தங்களுக்கமைய இலங்கை ஆசிரியர் சேவையின் 3ஆம் வகுப்பின் 1ஆந் தரத்திலிருந்து 2-11 தரத்திற்கு பதவி உயர்வுக்காக முன்னர் பெற வேண்டிய 10 புள்ளிகள் 05 புள்ளிகளாக குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 3.2 வாசகத்தின் கீழ் திருத்தங்களுக்கமைய பயிற்சி ஆசிரியர்களின், ஆசிரியர் பயிற்சிக்கு முன்னர் நிரந்தர சேவைக் காலத்திற்காக புள்ளிகள் வழங்கப்படும்.

11. மேல் குறிப்பிடப்பட்டுள்ள விடுவிப்புகளுக்கமைய தாம் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ள வகுப்புக்கு/தரத்திற்கு உரிய சம்பள அளவுகளின் உச்ச அளவை அடைந்துள்ள இலங்கை ஆசிரியர் சேவையின் 3-11 3-1 மற்றும் 2-11 தரங்களில் தங்கியுள்ள ஆசிரியர்கள் ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தேவைகளை பூரணப்படுத்தியிருப்பின் தொழில் மீளாய்வு சேவைக்காலப் பயிற்சி போன்ற தேவைகளிலிருந்து விடுவிக்கும் வண்ணம் கவனித்தல் வேண்டும்.

இதன் பிரகாரம் 1996.12.31ஆந் திகதிவரை செயல்படுத்தப்பட்ட ரூபா:32,520-10 780-2 1200-42,720/- சம்பள அளவில் ரூபா:42,720/- படியில் அல்லது 97.01.01ஆந் திகதி செயல்படும் வண்ணம் ரூபா:45,900-14 1320-6 1560-73,740 சம்பள அளவின் ரூபா:73,740 படிக்கு வந்துள்ள ஆசிரியர்கள் பயிற்சி சம்பந்தமான தேவையிலிருந்து கி.பி. 2000வரை விடுவிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய பிரமாணங்களின் தேவையிலிருந்து பூரணப்படுத்தியிருப்பின் 3வது வகுப்பின் 1ஆந் தரத்திற்கு உயர்வு செய்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் சேவையின் 3:1 தரத்தின் சம்பள அளவுத்திட்டம் 1996.12.31வரை செயல்படுத்தப்பட்ட ரூபா:32,520/-10×780-2×1200-42,720 என்ற சம்பள அளவுத் திட்டத்தில் ரூபா:42,720/- சம்பளப் படிக்கு அல்லது 1997.01.01ஆந் திகதி முதல் செயல்படுத்தப்பட்ட ரூபா:45,900-14×1320-6×1560-73,740 என்ற சம்பள அளவுத் திட்டம் ரூபா:73,740என்ற சம்பள படியை அடைந்துள்ள 3-1தரத்தின் ஆசிரியப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தேவைகளை பூரணப் படுத்துவதன் கீழ் சேவைக்காலப் பயிற்சி சம்பந்தமான தேவையிலிருந்து விடுவிக்கப்படுவதுடன், அதற்கடுத்த தரமான 2-11தரத்திற்கு உயர்வு செய்தல் வேண்டும்.

மேலும், ஆசிரியர் சேவையின் 2ஆம் வகுப்பின் 11ஆந் தர ஆசிரியர்களிலிருந்து, அத்தரத்திற்கு அமைவாக 1996.12.31ஆந் திகதிவரை செயல்படும் சம்பள அளவான ரூபா:42,720/- 12×1200-ரூபா:57,000/-சம்பள அளவின் ரூபா:57,000/- சம்பளப்படிக்கு அல்லது 1997.01.01ஆந் திகதி முதல் செயல்படும் ரூபா:55,140-9×1320-8×1560-79,500 சம்பள அளவின் ரூபா:79,500/- சம்பளப் படியை அடைந்துள்ள ஆசிரியர்களும் ஏனைய பிரமாணங்களுக்கமைய முன்னுள்ள தேவைகளையும் பூரணப்படுத்துவதன் கீழ் தொழில் மீளாய்வு மற்றும் சேவைக் காலப் பயிற்சி போன்ற தேவைகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டுள்ளீர்கள். இதன் பிரகாரம் அவர்களும் அதற்கடுத்த தரமான 2-1 தரத்திற்கு உயர்வு செய்யப்படுதல் வேண்டும்.

ஆசிரியர் சேவை தாபிக்கப்படும் போது 2வது வகுப்பின் 1ஆந் தரத்திற்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ள தொழிற்றகைமையுடன் கூடிய பட்டதாரி ஆசிரியர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் பயிற்றப்பட்ட டிப்ளோமாதாரர் ஆசிரியர்கள் 1வது வகுப்பிற்கு பதவி உயர்வு செய்வதற்கு உரிய தரத்திற்கான சம்பள அளவின் உச்ச எல்லைக்கு வந்திருப்பின் பின்வரும் நிபந்தனைகளின் கீழ் அவர்களை 1ஆம் வகுப்பிற்கு உயர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1996.12.31வரை செயல்படும் ரூபா:80400/-7×3000 ரூபா:101,400/- சம்பள அளவின் ரூபா:101,400/- அல்லது 1997.01.01ஆந் திகதி முதல் செயல்படும் ரூபா:90,420/-7×3,000-111,420 சம்பள அளவில் ரூபா:111,420/- படிக்கு வந்திருத்தல்..

2. வயது 50 வயதைத் தாண்டியிருத்தல்

கி.பி. 2000வரை இவ்வாசிரியர்க்கும் தொழில் மீளாய்வு, சேவைக் காலப் பயிற்சிப் பரீட்சைக்கும் சமூகமளிக்க வேண்டிய தேவையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த வண்ணம் விடுவிக்கப்பட்ட காரணத்தினால் பதவி உயர்வு செய்வதற்காக தகைமை பெற்றுள்ள 3-11 தரத்தின், 3-1 தரத்தின் மற்றும் 2-11, 2-1 தரங்களின் ஆசிரியர்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய கோரப்பட்டதன் பின்னர் அவர்களது சுயவிபரக் கோவை பரிசீலிக்கப்பட்டு உரிய விடயத்தினை நிச்சயப்படுத்திய பின் வலய கல்விப் பணிப்பாளரின் சிபார்சுடன், அவ்விண்ணப்பப்பத்திரம் மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்திருத்தத்தினால் உள்ளீர்க்கப்பட்ட நடவடிக்கைகளில் வேறுபாடு ஏற்படாததுடன், அந்தந்த தரங்களுக்கு/வகுப்புக்கு தற்போதும் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களின் அதற்கடுத்த பதவி உயர்வு மற்றும் எதிர்கால பதவி உயர்வு நடவடிக்கைகளுக்காக மாத்திரம் அதிகாரம் வழங்கப்படுகிறது. இது சம்பந்தமாக சம்பள நிலுவை வழங்கப்பட மாட்டாது.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள திருத்தம் மற்றும் அதற்குரிய அறிவுறுத்தல்களின் பிரகாரம் பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துப் பெற்றுள்ள சகல ஆசிரியர்களுக்கும் பதவி உயர்வு வழங்குவதற்கு காமதமின்றி நடவடிக்கை எடுக்கவும்.

இச்சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் போது ஏதேனும் பிரச்சினை ஏற்படின் கல்வி உயர்கல்வி அமைச்சில் விசாரிக்குமாறு மேலும் இத்தால் அறியத் தருகின்றேன்.

R.S. [signature]
உதவிச் செயலாளர்

ஒப்பம்; எம். டி. பந்துசேன,
பதில் செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழுவின்,
கல்விச் சேவைக் குழு.

சுற்றுநிருப இல. 97/5/111

எனது இல. 4/குருஆ/1/3099/11 காண்டம்
கல்வி, உயர்கல்வி அமைச்சு,
'இசுருபாய',
பத்தரமுல்ல.
1997.09.18

எல்லா மாகாணக் கல்விச் செயலாளர்,
எல்லா மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
எல்லா மாகாண அ.சே.கொ. செயலாளர்,
எல்லா வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு,

## இலங்கை ஆசிரியர் சேவை 1 ஆம் தரத்தில் சேர்த்துக் கொள்வதற்கும் பதவி உயர்வு வழங்குவதற்குமாய பரீட்சை.

கல்வி முதுமாணி, கல்வி மெய்யியல் பட்டதாரி ஆகியோர் இலங்கை ஆசிரியர் சேவை 1 ஆந் தரத்தில் சேர்த்துக்கொள்வதற்கும் பதவி உயர்வு வழங்குவதற்குமாய பரீட்சைக்குத் தோற்ற அவசியமில்லையென முடிவெடுக்கப்பட்டுள்ளது. கலை முதுமாணி(கல்வி)பட்டதாரிகளும் 1994.10.06ஆந் திகதியல் 1 ஆந் தரத்திற்குச் சேர்த்துக்கொள்வதற்குத் தேவையான தகைமைகளைப் பெற்றிருந்தால் மேற்படிப் பரீட்சைக்குத் தோற்ற அவசியமில்லையென விதிவிலக்கு வழங்கப்பட்டுள்ளது.

02. கலை முதமாணி(கல்வி)பட்டதாரிகள் இலங்கை ஆசிரியர் சேவை 1 ஆந் தரத்திற்கு உயர்வு வழங்கும் பரீட்சைக்குத் தோற்ற அவசியமில்லையென்ற விதிவிலக்கைப் பதிவு செய்துகொள்ளவும்.

சேனாநாயக்க உபசேன
மேலதிக செயலாளர் (நிருவாகம்)
கல்வி, உயர்கல்வி செயலாளருக்காக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ඔබේ අංකය / உமது இல. / Your No. ........................................

දුර කථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍ය / அமைச்சர் / Minister 864807, 869325

Fax : 869326

ලේකම් / செயலாளர் / Secretary 864812

කාර්යාලය / அலுவலகம் / Office 865141 - 50

මගේ අංකය / எமது இல. / My No. 4/ஆசா./3009/பல்வகை/ தொடர் (11)

අධ්‍යාපන හා උසස් අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி அமைச்சு
Ministry of Education and Higher Education

'ඉසුරුපාය' ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ බත්තරමුල්ල.
'இசுருபாய' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே. பத்தரமுல்ல.
'ISURUPAYA' SRI JAYAWARDHANAPURA KOTTE. BATTARAMULLA

දිනය / திகதி / Date 1999.01.28 ஆந்திகதி

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளர்கள்,
சகல வலயக் கோட்டப் பொறுப்புக் கல்விப் பணிப்பாளர்கள்,

**இலங்கை ஆசிரிய சேவையில் பயிற்றப்பட்ட டிப்ளோமாதாரி ஆசிரியர்களை ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்தல்.**

இலங்கை ஆசிரிய சேவையில் ஈராண்டு, மூன்றாண்டு, நாலாண்டு, ஐந்தாண்டு மற்றும் ஆறாண்டு டிப்ளோமாதாரிகள் இருக்கிறார்கள். இவர்களுள் நாலாண்டுகளையும் அதற்கு மேற்பட்ட ஆண்டுகளையுமுடைய டிப்ளோமாதாரிகள் பட்டதாரிகளுக்குச் சமமானவர்கள் என்று கணிக்கப்படுவதால் பட்டத்திற்குரிய சம்பளத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள். ஏனையவர்கள், ஈராண்டு, மூவாண்டு டிப்ளோமாப் பாடநெறியைத் தொடர்ந்தவர்களாவர். இதற்கிடையில் பல்கலைக் கழக விஞ்ஞான/ கணித ஆசிரிய பாட நெறியைப் பின்பற்றியுள்ள ஆசிரியர்களைப் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக அங்கீகரிப்பதற்கு ஏற்கனவே ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் ஆசிரிய பயிற்சியைப் பெற்றுள்ள டிப்ளோமாதாரிகளின் பயிற்றப்பட்ட தராதரப் பத்திரம் செல்லுபடியாகும் திகதியிலிருந்து பயிற்றப்பட்ட ஆசிரியர்களாகவுள்ள சேவைக்காலத்தைக் கணித்து அவர்கள் இலங்கை ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கப்பட்டிருக்கிறார்கள். எனினும் 1995.04.03 திகதிய 865/3 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்பின் 111 வது பிரிவில் காட்டப்பட்டுள்ள உள்வாங்கல்/ செயற்பாடுகள் சம்பந்தப்பட்ட 1-5 வாசகம் இவ்வாறு குறிப்பிடுகின்றது.

"ஓர் ஆசிரியராக 10 ஆண்டு காலத் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்துள்ள பயிற்றப்பட்ட டிப்ளோமாதாரிகள் சேவையின் 2 ஆம் வகுப்பின் 11 ஆம் தரத்திற்கு உள்வாங்கப்படுவர்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாசகத்தின் பிரகாரம் 1994.10.06 திகதியன்று பயிற்றப்பட்ட தராதரம் பெற்றிருந்த ஈராண்டு, மூன்றாண்டு டிப்ளோமாதாரிகள் எப்பெறுமை பயிற்சி பெற்றிருந்த போதிலும் 1994.10.06 திகதியன்று பயிற்றப்பட்ட ஆசிரிய தராதரப் பத்திரம் பெற்றிருந்தால் அவர்களின் டிப்ளோமாவை அடிப்படையாகக் கொண்டு முதல் நியமனம் பெற்ற திகதியிலிருந்தே பயிற்றப் பட்டவர்களாகக் கணிக்கப்பட்டு இலங்கை ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கப்பட வேண்டும். அவர்களின் சேவைக்காலத்திற்கேற்பத் தீர்மானிக்கப்படும் ஆசிரியர் தரத்திற்கு நியமிக்கப்பட்டு அதற்குரிய சம்பள அளவும் நிலைச் சம்பளங்கள் இருப்பின் அவைகளும் வழங்கப்பட வேண்டும்.

අ: කා:/සේනානායක උපසේන

ஒப்பம்: சேனாநாயக்க உபசேன

மேலதிக செயலாளர் (திட்டமிடலும் முகாமைத்துவமும்)

கல்வி, உயர்கல்வி அமைச்சின் செயலாளருக்காக.

சுற்றுநிருபம் இல: 97/5/IV

எனது இல: 4/குரு/3090/பல்லினம்/111

1997.09.23

எல்லா மாகாண கல்விச் செயலாளர்,

எல்லா மாகாண கல்விப் பணிப்பாளர்,

எல்லா மாகாண பொது நிருவாக ஆணைக் குழுச் செயலாளர்,

எல்லா வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு,

இலங்கை ஆசிரிய சேவை தொடர்பாகச் செய்யப்பட்ட திருத்தங்களின் பிரகாரம் பட்டதாரி பயிலுநர்களை ஆசிரியர் சேவையில் சேர்த்துக்கொள்ளுதல்.

இலங்கை ஆசிரியர் சேவை அமைப்புத் தாபனக் கோவையின்படி 94.10.06 ஆந் திகதியில் இலங்கை ஆசிரியர் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஓர் ஆசிரியர் பட்டம் பெற்ற பின்னர் பட்டதாரி பயிலுநர் நியமனம் பெற்றிருந்தாலும், 97.03.11ஆந் திகதி வெளியாய வர்த்தமானி அறிக்கையின் படியும் அதனைத் தொடர்ந்து என்னால் வழங் கப்பட்ட 97/5 சுற்றறிக்கையின்படி மீண்டும் சேர்த்துக்கொள்ளும் பொழுது பட்டதாரி பயிலுநர் நியமனத்தின் பின்னர், பட்டதாரி நியமனம் ஒன்று வழங்கப்பட்டிருந்தால், அந்த ஆசிரியர் 94.10.06 ஆந் திகதி இலங்கை ஆசிரியர் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டி ருந்தாலும் அவருடைய சேவைக் காலத்தைப் பட்டதாரி நியமனம் வழங்கப்பட்ட நாளிலி ருந்து கணக்கிற்கொள்க.

மேலும் ஒரு பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் சேவையில் ஈடுபட்டிருக்கும்பொழுது பட்டம் பெற்ற காரணத்தினால் பட்டதாரி பயிலுநர் நியமனம் பெற்று, ஒரு வருடத்தின் பின்னர் பட்டதாரி நியமனத்திற்கு மாற்றப்பெற்று 94.10.06 ஆந் திகதியில் இலங்கை ஆசிரியர் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தால் அவருடைய சேவைக் காலத்தைப் பட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து கணக்கிற் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

சேனாநாயக்க உபசேன

மேலதிகச் செயலாளர் (நிருவாகம்)

கல்வி உயர்கல்விச் செயலாளருக்காக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இல: கசேஆ/ஆசே/1/3,
அரசாங்க சேவை ஆணைக்குழுவின்,
கல்விச் சேவைக் குழு,
'இசுருபாய'
பெலவத்த, பத்தரமுல்ல.
1998.

சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்!

## இலங்கை ஆசிரிய சேவைக்கு உள் வாங்கியதன் பின் ஆசிரிய பயிற்சியும், பட்டமும் பெற்றுக் கொள்ளும் ஆசிரியர்கள் தொடர்பான நடவடிக்கைகள்

மேற்குறித்த விடயம் தொடர்பாக தங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள எனது சம இலக்கம் கொண்ட 1997.10.13ஆந் திகதிய 03/97ஆம் இலக்க கல்விச் சேவைக் குழுவின் சுற்று நிருபத்திற்கு மேலதிகமாக.

02. ஆசிரிய சேவைக்கு உள் வாங்கியதன் பின் சேவையிலிருக்கும் போதே பட்டம் பெற்றுள்ள, உங்களது பிரதேசத்திலுள்ள தேசிய பாடசாலைகளில் கடமையாற்றும் இ.ஆ.சே.03ஆம் வகுப்பின் 11ஆம் தர ஆசிரியர்களது பட்டத்திற்குரிய சான்றிதழ்களையும், அவர்களால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய ஏனைய தேவைகள் ஏதும் இருப்பின் அவற்றையும் பரிசீலனை செய்து, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள எனது சம இலக்கம் கொண்ட 1996.08.06ஆந் திகதிய 96/02ஆம் இலக்க சுற்று நிருபத்தின் பிரதியின் அறிவுறுத்தல்களுக்கமைய உரிய தரத்தில் நியமனம் செய்வதற்கான முறையான கடிதத்தை வழங்குவதற்கா அவர்கள் பற்றிய விபரங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தின் ஊடாக சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

எம்.டி.பந்துசேன,
பதில் செயலாளர்,
கல்விச் சேவைக் குழு.

<u>பிரதிகள்:</u>

சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்.
தேசிய பாடசாலை தொடர்பான மாகாணக் கல்விப் பணிப்பாளரின் அறிவுறுத்தலுக்கமைய நடவடிக்கை மேற் கொள்வதற்காக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுநிருப இல: 97/5/ட

எனது இல: 4/ஆருஅ/1/3099/பலின
கல்வி உயர்கல்வி அமைச்சு,
"இசுருபாய", பத்தரமுல்ல.
1997.09.30.

எல்லா மாகாண கல்விச் செயலாளர்,
எல்லா மாகாண கல்விப் பணிப்பாளர்,
எல்லா மாகாண பொது நிருவாக ஆணைக்குழுச் செயலாளர்,
எல்லா வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு,

இரண்டு, மூன்று ஆண்டுகளில் பல்வேறு டிப்ளோமா பெற்ற பட்டதாரிகளை
------<u>இலங்கை ஆசிரியர் சேவையில் ஈடுபடுத்துதல்</u>------------------

இலங்கை ஆசிரியர் சேவையில் ஈடுபடுத்தும் பொழுது கல்வி, தொழிற்கல்வித் தகைமைகள், சேவைக்காலம் என்பவற்றைக் கவனத்திற் கொண்டு ஆசிரியர்களை வகுப்பு, தரம் பிரித்து சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பாக 865/03 ஆம் 966/5 ஆம் ஆகிய இலக்க அரசாங்க வர்த்தமானி அறிக்கையிலும் அவற்றைப் பின்பற்றி இதுவரை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள சுற்றுநிருபங்களின் மூலமும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை நினைவுபடுத்துகிறேன்.

02. தேசிய கற்பித்தல் விஞ்ஞானப் பட்டதாரிகளையும் இரண்டு ஆண்டுகள் பயிற்சி பெற்ற விஞ்ஞான/கணித பட்டதாரிகளையும் இரண்டு அல்லது மூன்று வருடம் பயின்ற டிப்ளோமா பட்டதாரிகளையும் பெற்றுக்கொண்ட நியமனங்களின் பின்னர் ஆசிரிய பயிற்சி பெற்றுக்கொண்ட டிப்ளோமா பட்டதாரிகளையும் இலங்கை ஆசிரியர் சேவையில் ஈடுபடுத்தும் பொழுது அவர்கள் இலங்கையின் பயிற்சி பெற்ற டிப்ளோமா ஆசிரியர்களாக ஏற்றுக்கொள்ளப்படுவர்.

03. டிப்ளோமா ஆசிரியர்களை மேற்குறிப்பிட்டவாறு தரம் பிரிக்கக் கூடியதாக ~~இருக்கும் பொழுது கல்விசார் பல்கலைக்கழக~~ டிப்ளோமா பெற்றவர்களையும், மனைப் பொருளியல் டிப்ளோமா பெற்றவர்களையும் இரண்டு அல்லது மூன்று வருட பல்வேறு டிப்ளோமா பெற்றவர்களையும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களாகக் கணித்து - பயிற்றப்பட்ட ஆசிரியர் தரத்தில் ஈடுபடுத்தும் படியும், அதற்குரிய சம்பளத்தைச் செலுத்தும்படி அதிகாரத்தை வழங்கி சில மாகாண சபைக் கல்விப் பணிப்பாளர்கள் சுற்றுநிருபங்களின் மூலம் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவுரை வழங்கியிருப்பதால் ஒரு குழப்பமான நிலை உருவாகியுள்ளது.

04. அத்தகைய சுற்றுநிருபங்களை அனுப்புவதற்கு முன்னர் இந்த அமைச்சில் விசாரித்து முடிவெடுத்திருந்தால் இத்தகைய நிலையைத் தவிர்த்துக்கொண்டிருக்கலாம். மேலே குறிப்பிடப்பட்ட சுற்றுநிருபங்களின் அறிவுரைகளைத் திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

05. மேலும் 1994.10.06 ஆந் திகதியின் பின்னர் கல்வி டிப்ளோமா சித்தி பெற்றிருந்தால் சேவையில் சேர்க்கும் பொழுது டிப்ளோமாவைக் கவனத்திற் கொள்ளக் கூடாது. 1994.10.06 இன் பின்னர் பெற்றுக்கொண்ட டிப்ளோமாத் தகைமை, பட்டதாரி ஆசிரியர்களை ஆசிரியர் சேவையில் சேர்த்துக்கொள்வதற்குரிய தகைமையாகக் கொள்ளாமல் பதவி உயர்வுகள் வழங்கும் பொழுது அதற்குத் தேவையான தொழிற்தகைமையாகக் கவனத்திற் கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவிக்கிறோம்.

சேனாநாயக்க உபசேன
மேலதிகச் செயலாளர் (நிர்வாகம்)
கல்வி உயர்கல்வி செயலாளருக்காக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றறிக்கை இல:97/5/11.

எனது இல:4/ஆதா/3099/பல்வகை
கல்வி, உயர்கல்வி அமைச்சு,
"இசுருபாய", பத்தரமுல்ல.
1997 ஜூலை 17 ஆந் திகதி.

சகல மாகாணக் கல்விச் செயலாளர்,
சகல மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயப் பொறுப்புக் கல்விப் பணிப்பாளர்கள்,

இலங்கை ஆசிரியர் சேவைக்கு
உள்வாங்கப்படல் சிறப்புப் பட்டதாரிகள்.

1997.03.11 திகதியைக் கொண்ட 966/5 ஆம் இலக்க ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பித் செய்யப்பட்ட திருத்தங்களடங்கிய வர்த்தமானி அறிவித்தலுக்கும், அதற்கேற்ப என்னால் வெளியிடப்பட்ட

1997.04.30 - இலக்கம் 97/5
1997.05.19 - இலக்கம் 97/5/1

சுற்றுநிருபங்களின்பாலும் உங்கள் கவனத்தைச் செலுத்தவும்.

சிறப்புப் பட்டதாரி என்பதை பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு பின்வருமாறு வரைவிலக்கணம் செய்துள்ளதென்பதை இத்தால் அறிவிக்கிறேன்.

அதாவது சிறப்புப் பட்டதாரி எனக் கணிக்கப்படுபவர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பொது அல்லது விசேட பாடத்துறையொன்றைப் பின்பற்றி வகுப்புச் சித்தி பெற்றுக் கொண்ட ஒருவராவர்.

ஏதேனும் விசேட காரணமொன்றின் அடிப்படையில் விண்ணப்பதாரர் பின்னொரு முறை தோற்றும் பரீட்சையொன்றில் சிறப்புச் சித்திக்குத் தகைமை எனத் தீர்மானிக்கப்படும் சந்தர்ப்பமொன்றில் அல்லாது தாம் தகைமைபெற்ற முதலாவது சந்தர்ப்பத்திலேயே அப் பரீட்சைக்குத் தோற்றாதவிடத்தும் அவ்வாறு தோற்றிய முதலாவது சந்தர்ப்பத்திலேயே உரிய பரீட்சையில் தேர்ச்சி பெறாதவிடத்தும் அவ்வாறு சிறப்புப் பட்டதாரி என்ற பெயரைப் பெறுவதற்கு அருகதையற்றவராவார்.

இதன்படி சிறப்புப் பட்டதாரிகளைத் தெரிவு செய்து ஆசிரியர் சேவைக்கு உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவும். இது சம்பந்தமாக எனது 97/5/1 இலக்கத்தைக் கொண்ட 1997.05.19 ஆம் திகதிய சுற்றுநிருபத்தின் அறிவுறுத்தல்கள் இதற்கமைய மாற்றப்பட்டுள்ளன என்பதையும் தயவுசெய்து கவனிக்கவும்.

ஒப்பம்: சேனாநாயக்க உபசேன
மேலதிகச் செயலாளர்
கல்வி, உயர்கல்வி அமைச்சின்
செயலாளருக்காக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்று நிருபம் இல: 1997/08

எனது இல.: கல்வி/தொழிலபி/நலன்/10,
கல்வித் தொழிலபிவிருத்தி நலன்புரிப் பிரிவு,
கல்வி, உயர்கல்வி அமைச்சு,
" இசுருபாய ",
பத்தரமுல்ல.
1997.06.25.

சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,

# இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்புக்குரிய சேவைக்காலப் பயிற்சிக் கருமங்கள்

1995 ஏப்ரல் மாதம் 03 ஆந் திகதி வெளியான 865/3 ஆம் இலக்க அதிவிசேட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை மூலம் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 2 ஆம் பந்தியில் 1:0 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஆசிரியர்களின் பதவி உயர்வு சம்பந்தமான வினைத்திறமை காண் தடை தாண்டுவதற்காக அவர்கள் அடைந்து கொள்ள வேண்டிய சேவைக்காலப் பயிற்சி மணித்தியாலக் காலங்கள் தொடர்பான அறிவுறுத்தல் வருமாறு :

1. பின்வரும் சேவைக்காலப் பயிற்சிச் செயலமர்வுகளின் மணித்தியாலங்கள் இது தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்படும்:—

1.1 மாகாண, வலய கோட்ட மட்டத்திலான மாகாணக் கல்விப் பணிப்பாளரின், வலயக் கல்விப் பணிப்பாளரின், கோட்டக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் 1994.10.06 ஆந் திகதியின் பின்னர் நடாத்தப்படும் சேவைக்கால ஆசிரியர் பயிற்சிகள்.

1.2 கல்வி, உயர்கல்வி அமைச்சின் பாடசாலைப் பாடவிதானக் கற்பித்தலை மேம்பாடு அபிவிருத்தி செய்தல், கல்விக் கொள்கைகள், வேலைத்திட்டம் என்பவை பற்றி அறிந்து கொள்ளச் செய்தல் போன்றவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு கல்வி, உயர்கல்வி அமைச்சின் அவற்றுக்கு பொறுப்பான பிரிவுகளினால் ஏற்பாடு செய்யப்பட்டு 1994.10.06 ஆந் திகதிக்குப் பின்னரும், இதன் பின்னரும் நடாத்தப்பெறும் சேவைக்கால ஆசிரிய பயிற்சிச் செயலமர்வுகள்.

1.3 தேசியக் கல்வி நிறுவகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு 1994.10.06 ஆந் திகதியின் பின்னரும் இதன் பின்னரும் நடாத்தப்பெறும் டிப்ளோமாவும் பட்டமும் தவிர்ந்த ஏனைய சேவைக்காலச் செயலமர்வுகள்.

1.4 கல்வி, உயர்கல்வி அமைச்சின் ஆங்கிலக் கல்விக் கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்டுக் கொழும்புப் பல்கலைக்கழகத்தினால் 1994.10.06 ஆந் திகதியின் பின்னர் நடாத்தப்பட்ட, இதன் பின்னர் நடாத்தப்படும் ஆங்கிலம் கற்பித்தல் சம்பந்தமான பயிற்சி வேலைத்திட்டம்.

1.5 மற்றும், தேசிய பல்கலைக்கழகங்களாலும் திறந்த பல்கலைக்கழகத்தினாலும் 1994.10.06 ஆந் திகதியின் பின்னர் நடாத்தப்பட்ட, இதன் பின்னரும் நடாத்தப்படும் பட்டமும், டிப்ளோமாவும் தவிர்ந்த சேவைக்கால ஆசிரிய பயிற்சிகள்.

2. ஏற்கனவே நடாத்தப்பட்ட சேவைக்காலப் பயிற்சிகளின் [illegible] அறிந்த சேவைக்காலப் பயிற்சிகளை ஏற்பாடு செய்த நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

3. இச் சுற்றுநிருபம் வெளியிடப்பட்டதன் பின்னர் நடாத்தப்படும் ஒவ்வொரு சேவைக்காலப் பயிற்சிச் செயலமர்வு தொடர்பாகவும் வழங்கப்படும் சான்றிதழ்களில் சமூகமளித்த மணித்தியாலக் கணக்குப் பிரகாரம் அறிக்கை குறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

4. அந்தந்தப் பதவி உயர்வுகளுக்கான சேவைக்காலப் பயிற்சி தொடர்பான 300,150 மணித்தியாலங்களுக்கான சான்றிதழ்களை ஆசிரியர் சமூகமளித்துள்ள மணித்தியாலங்களைக் கணித்து, மாகாணக் கல்விப் பணிப்பாளரால் இத்துடன் இணைத்துள்ள படிவத்தில் உள்ளவாறு வழங்கப்பட வேண்டும். மாகாணக் கல்விப் பணிப்பாளரால் மணித்தியாலக் கணிப்பைச் செய்த [illegible] பின்னர் தேவையான எந்தச் சந்தர்ப்பத்திலும் சமர்ப்பிக்கக் கூடியவாறு பாதுகாத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

5. எதிர்காலச் சேவைக்காலப் பயிற்சிக் கருமங்களைப் பண்புசார் முறையில் நடாத்துவதற்காக எனது 1996/21 ஆம் இலக்கமும் 1996.09.15 ஆந் திகதியும் கொண்ட சுற்றுநிருபத்தினைத் தொடர்ந்தும் பின்பற்ற வேண்டும்.

எம். டி. டீ. பீரிஸ்,
செயலாளர்,
கல்வி, உயர்கல்வி அமைச்சு.

பிரதிகள் :

1. மேலதிக செயலாளர் (பொதுப் பரிபாலனம்) - அறிந்துகொள்வதற்காக.
2. சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள் - அறிந்துகொள்வதற்காக.
3. சகல வலய, கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் - தேவையான கருமங்கள் செய்வதற்காக.
4. சகல அதிபர்கள் - ஆசிரியர்களுக்கு அறிய வைப்பதற்காக.
5. தேசியக் கல்வி நிறுவகப் பணிப்பாளர் நாயகம் - உரிய செயலமர்வுகள் நடாத்தி மணித்தியாலக் கணக்கை உள்ளடக்கிய சான்றிதழ் வழங்குவதற்காக.
6. ஆங்கிலக் கல்விக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகம் - உரிய செயலமர்வுகளின் ஈற்றில் மணித்தியாலக் கணக்கை உள்ளடக்கிய சான்றிதழ் வழங்குவதற்காக.
7. சகல பல்கலைக்கழகங்களினதும் கல்விப் பகுதித்தலைவர்கள் - உரிய செயலமர்வுகளுக்கான மணித்தியாலக் கணக்கை உள்ளடக்கிய சான்றிதழ் வழங்குவதற்காக.
8. சகல ஆசிரியர்களுக்கும் - அறிந்து கொள்வதற்காக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4/ஆருஜ/1/3099(11)

1997 மே மாதம் 19 ஆந் திகதி

சுற்றறிருப இல. 97/5(1)

சகல பிரதான அமைச்சுச் செயலாளர்,
சகல மாகாணக் கல்விச் செயலாளர்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு.

இலங்கை ஆசிரியர் சேவையின் திருத்தியமைக்கப்பட்ட
தாபனக் கோவையின்படி பட்டதாரி ஆசிரியர்களுக்கான சம்பளம்-1995

எனது சம இலக்கமுடையதும் 1997.04.30 ஆந் திகதிய சுற்றறிருபத்திற்கும் மேலதிகமாக.

02. அந்தச் சுற்றறிக்கையோடு இணைக்கப்பட்டிருந்த திருத்தங்களில், அடிக்கடி எமது அலுவலகத்திற்குக் கிடைக்கும் தகவல்களின்படி, பட்டதாரி ஆசிரியர்கள் இடை சேர்த்துக் கொள்ளுதல் பற்றிய அறிவுரைகளைப் பிழையாக விளங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது.

03. பட்டதாரி ஆசிரியர்கள் இடை சேர்த்துக்கொள்ளும் போது சிறப்புப் பட்டதாரிகளுக்கும் கல்விப் பட்டதாரிகளுக்கும் பட்டப் பின்படிப்புக் கல்வி டிப்ளோமா பட்டம் பெற்றவர்களுக்கும் சேவையின் ஒரு வருடத்துக்காக இரண்டு புள்ளிகள் மட்டுமே உரித்துடையன

04. கல்விப் பட்டதாரி அல்லது சிறப்புப் பட்டதாரி அல்லாத ஒருவர் பட்டப்பின் படிப்புக் கல்வி டிப்ளோமா பெற்ற பின்னர் ஆற்றிய சேவைக் காலத்துக்கு மட்டும் ஒரு வருடத்துக்கு இரண்டு புள்ளிகள் உரித்துடையன என்பதைக் குறித்துக் கொள்ளவும். சிறப்புப் பட்டதாரி ஆசிரியர் ஒருவர் பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா தகைமை பெற்றுக்கொண்ட காரணத்திற்காக அவருக்கு மேலதிக இரண்டு புள்ளிகள் பெறும் உரிமையில்லை. முன்போல அவருக்கும் அவருடைய சேவைக்காலத்தின் ஒவ்வொரு ஆண்டிற்கும் இரண்டு புள்ளிகள் மட்டுமே உரித்துடைத்து.

05. சிறப்புப் பட்டதாரிகள் என்போர் பல்கலைக்கழக நிதி ஒதுக்கீட்டுக் குழுவின் கருத்துப்படி சிறப்புப் பட்டதாரியாக மட்டுமே கவனத்திற் கொள்ளப்படுவார்கள்.

தயவு செய்து இதன்படி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு குறித்துக் சொள்க.

(சேனாநாயக்க உபசேன)
மேலதிகச் செயலாளர் (நிருவாகம்)
கல்வி உயர்கல்விச் செயலாளருக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ඔබේ අංකය
உமது இல.
Your No. ……………………

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා
அமைச்சர்
Minister
864807
869325

Fax : 869326

ලේකම්
செயலாளர்
Secretary
864812

කාර්යාලය
அலுவலகம்
Office
865141 — 50

මගේ අංකය
எமது இல.
My No.
4/ஆசிதா 1/3099(11

අධ්‍යාපන හා උසස් අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி அமைச்சு
Ministry of Education and Higher Education
'ඉසුරුපාය' ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ.
බත්තරමුල්ල.
'இசுருபாய', ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே,
பத்தரமுல்ல.
'Isurupaya' Sri Jayawardhanapura Kotte.
Battaramulla

දිනය
திகதி
Date
1997.04.30 திகதி

சுற்றுநிருப இலக்கம் 97/5

சகல முதலமைச்சுக்களின் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்.

## இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பு திருத்தங்கள்

## பட்டதாரி ஆசிரியர் சம்பளம் - 1995

1995ஆம் ஆண்டு ஏப்ரில் 03ஆம் திகதியைக் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 865/3ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேட) மூலம் வெளியிடப்பட்டுள்ள இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பினை மேலும் அர்த்தமுள்ளதாக அமைப்பதற்காக வேண்டித் திருத்தங்களைச் செய்வதற்கு அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. இத்திருத்தங்கள் வெளியிடப்பட்ட 1997.03.11 ஆம் திகதியின் 966/5 இலக்கத்தைக் கொண்ட (அதிவிசேட) வர்த்தமானியின் பிரதி இத்துடன் அனுப்பப்பட்டுள்ளது.

03. மேற்படி 966/5 ஆம் இலக்கத்தைக் கொண்ட வர்த்தமானியின் (அதிவிசேட) சில திருத்தங்களை மேலும் திருத்துவதற்காகத் தயாரிக்கப்பட்ட வரைபின் ஒரு பிரதியும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

04. இத்திருத்தங்களுக்கேற்பப் பட்டதாரி ஆசிரியர்கள் ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கப்பட வேண்டும். அவர்கள் அவ்வாறு உள்ளெடுக்கப்படுவது இப்புதிய திருத்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி வழங்கும் முறைகளுக்கேற்பவே என்பதை தயவுசெய்து கருத்திற் கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்வாங்கப்படும்போது இரண்டாவது முறையாகச் செய்யப்பட்டுள்ள புதிய திருத்தங்களுக்கான புள்ளியிடும் முறைகளையும் சம்பள மாற்ற முறை அட்டவணைகளையும் உபயோகித்தே அவ்வாறு செய்யப்பட வேண்டுமென்பதை தயவுசெய்து கவனிக்கவும். அதன்படி திருத்தப்பட்ட இச்சம்பள மாற்று அட்டவணைகளை உபயோகித்துப் பட்டதாரி ஆசிரியர்களின் சம்பளங்கள் மாற்றியமைக்கப்பட்ட பின்பு பொதுநிருவாகச் சுற்றுநிருப இலக்கம் 2/97 இன்படி தொடர்ந்து செயற்பட முடியும். ஒரு பட்டதாரி ஆசிரியர் முதல் ஆண்டில் ஒரு புள்ளியும் சிறப்பு அல்லது கல்விமாணிப் பட்டதாரிகள் முதல் ஆண்டில் 2 புள்ளிகளும் பெறுவுள்ளதா-கக் கருதி மாற்ற அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளதென்பதைக் குறித்துக் கொள்வீர்களாக.

05. பட்டதாரி ஆசிரியர்களை உள்ளடக்குவது சம்பந்தமாகத் திருத்தப்பட்ட பிரமாணக் குறிப்பின் பகுதி 3 இன் (1)ஆம் வாசகத்தின் இறுதியிலுள்ள பின்வரும் குறிப்பின் மீது விசேட கவனம் செலுத்துவது மிக முக்கியமானதாகும்.

(அ) ஆசிரியர் தொழிலிற் சேரும் பொழுது இப்பிரமாணக் குறிப்பின் பகுதி 1இன் வாசகம் 2இல் குறித்துரைத்த விசேட பட்டதாரியாக இருந்தால் பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெறாவிட்டாலும் ஆசிரியர் தொழிலுக்குச்-சேர்ந்த திகதியிலிருந்தான சேவைக் காலம் உள்ளெடுப்பதற்குக் கணிக்கப்படல் வேண்டும்.

(ஆ) ஆசிரியர் தொழிலிற் சேரும்போது பட்டதாரியாக இல்லாவிட்டாலும் ஆசிரியராகச் சேவையாற்றும் போது இப்பிரமாணக் குறிப்பின் பகுதி 1இன் 2ஆம் வாசகத்தில் குறித்துரைத்தவாறு விசேட பட்டதாரியாக நியமிக்கப்பட்டிருந்தால் பட்டச்சான்றிதழ் அமுலாகும் திகதியிலிருந்தான சேவைக் காலம் அவரை உள்ளெடுப்பதற்குக் கணிக்கப்படுதல் வேண்டும்.

06. 1997.03.11 திகதியின் இலக்கம் 966/5 கொண்ட (அதிவிசேட) வர்த்தமானியின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட ஏனைய வாசகங்கள் அவ்வாறே அமுல் நடாத்தப்படும்.

07. மேற்குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்கள் 1994.10.06 திகதி முதல் அமுல் நடாத்தப்பட்டபோதிலும் 1997.01.01 திகதியிலிருந்து மாத்திரமே அதற்கான சம்பளம் வழங்கப்பட வேண்டுமென்பதை விசேடமாகக் குறித்துக்-கொள்ளவும். 1994.10.06 திகதியில் இருந்த நிலைமையை அடிப்படையாக வைத்துச் சம்பளம் மாற்றி அமைக்கப்பட்டு அதன்படியான கொடுப்பனவுகள் மாத்திரம் 1997.01.01 திகதியிலிருந்து வழங்கப்படுகின்றதென்பதையும் அதற்கு முன்புள்ள காலத்திற்கான நிலுவைகள் வழங்கப்படுவதில்லையென்பதையும் தெளிவாக விளங்கிக் கொள்வீர்களாக.

Sgd/Senanayake Upasena
ஒப்பம்:
சேனாநாயக்க உபசேன,
மேலதிகச் செயலாளர் (நிருவாகம்),
கல்வி உயர் கல்வி அமைச்சின்
செயலாளருக்காக.

பிரதிகள்:

1. அரசாங்க சேவை ஆணைக் குழுவின் கல்விச் சேவைக் குழுச் செயலாளர்.
2. சகல மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளர்கள்.
3. [illegible] தகவலிற்காக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இல: 4/குருஆ/1/3099
கல்வி, உயர்கல்வி அமைச்சு
'இசுருபாய'
பத்தரமுல்ல.
1996.06.28

சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வட்டாரப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு,

கல்விமாணிப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு புதிய ஆசிரியர் சேவைத் திட்ட ஏற்பாட்டின் கீழ் சம்பளச் சரிக்கட்டல்.

எனது இல: 95-7-VIII உம் 1996.02.06 திகதியும் கொண்ட சுற்றுநிருபத் தெளிவாக்கம்

புதிய ஆசிரியர் சேவைத் திட்ட ஏற்பாட்டின் கீழ், கல்விமாணி பட்டப்படிப்பை நிறைவு செய்த சமூக விஞ்ஞான டிப்ளோமா ஆசிரியர்களின் சம்பள மாற்றங்கள் செய்வது சம்பந்தமாக மேற்குறிப்பிட்ட சுற்றுநிருபத்தின் மூலம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

"அவர்கள் பட்டதாரி ஆசிரியர்களாகக் கணிப்பதற்குரிய சான்றிதழின் படி, அவர்களைப் பட்டதாரிகளாகக் கணித்து நியமனம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து அவர்களுக்குரிய சம்பளம் திருத்தியமைக்கப்பட வேண்டும்." என்ற எடுத்துக்காட்டின்படி, சான்றிதழ் மூலம் பட்டதாரி ஆசிரியராக உறுதிப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து பட்டதாரி ஆசிரியராகக் கணிக்கப்படுவர் என்பது தெளிவாகிறது. இவர்கள் தொழிற்றகைமை கொண்ட பட்டதாரிகளெனப்படுவர். இதன்படி அவர்களுக்குரிய சம்பளத்தோடு பாக்கிப் பணத்தையும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இச் சுற்றுநிருபம் சமூக விஞ்ஞான டிப்ளோமா (பின்னைய கல்விமாணி) சான்றிதழைப் பெற்றுள்ள ஆசிரியர்களுக்கு மாத்திரம் உரியதாகும்.

ஒப்பம்
சேனாநாயக்க உபசேன
மேலதிக செயலாளர்
கல்வி, உயர்கல்விச் செயலாளருக்காக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றறிக்கை இல: 95/7(VII)

எனது இல: 4/குகு/1/3099
கல்வி, உயர்கல்வி அமைச்சு,
'இசுருபாய'
பத்தரமுல்ல.
1996.02.06

சகல மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வட்டார பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,

இலங்கை ஆசிரியர் சேவையை ஏற்படுத்தியபின்
ஆசிரியர்களின் சம்பள உயர்வுகளை வழங்குதல்

இலங்கை ஆசிரியர் சேவையை ஏற்படுத்தி ஆசிரியர்களைத் தரப்படுத்திய பின் அவர்களது வருடாந்த சம்பள உயர்வுகளைப் பெற்றுக்கொடுத்தல் சம்பந்தமான விசாரணைகள் பல எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

02. ஆசிரியர் சேவை சட்டவிதிகளின் ஏற்பாட்டின் கீழ் இலங்கை ஆசிரியர் சேவைக்கு ஆசிரியர்களைத் தரப்படுத்தி சம்பள மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளமை (சம்பளத்திட்ட அமுலாக்கல் சபையினரின்) விதிமுறைகளுக்கு அப்பால் நின்ற படிப்படியாக செயற்பட்டமையாகும். இதற்கமைவாக சம்பள மாற்றங்களை ஏற்படுத்தும் போது சம்பள உயர்ச்சித் திகதியில் எதுவித மாற்றமும் நிகழமாட்டாது. இதன்படி ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் சேவைக்குட்படுத்தப்பட்ட பின் அவர்களது அடுத்த சம்பள உயர்வுத் திகதியில் உரிய வருடாந்த சம்பள உயர்ச்சியை அவர்கள் பெற வேண்டியிருப்பின், அச்சம்பள உயர்ச்சியை அவர்களுக்கு வழங்குதல் வேண்டும். எவ்வாறாயினும், ஓர் ஆசிரியர் வகிக்கப்பட்டிருக்கும் தரத்துக்குரிய சம்பளத் திட்டத்தின் உயர் எல்லையை அடைந்திருப்பின், உயர் எல்லையைக் கடந்த சம்பள உயர்ச்சியை அவருக்கு வழங்கக் கூடாது. அவ்வாறான ஆசிரியர்கள் ஆசிரியர் சேவைச் சட்டக் கோவையின் விதிகளுக்கு அமைய அடுத்த தரத்துக்கு உயர்த்தப்படும் வரை சம்பள உயர்வுக்கு உரித்துடையவர் அல்லர். இது சம்பந்தமான தெளிவான ஆலோசனைகளை சம்பள எழுதுவினைஞர்களுக்கு அனுப்பி வைக்குமாறு அறியத் தருகின்றேன்.

ஒப்பம்
சேனாநாயக்க உபசேன
மேலதிக செயலாளர் (பரிபாலனம்)
கல்வி, உயர்கல்வி செயலாளருக்காக

பிரதி:- 1. சகல மேலதிக செயலாளர்கள்/
மாகாண கல்விச் செயலாளர்
2. சகல ஆசிரியர் சேவை தொழிற் சங்கங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, உயர்கல்வி அமைச்சு,
'இசுருபாய', பத்தரமுல்லை.
1995.07.20

சகல மாகாணக்
கல்விப்பணிப்பாளர்கட்கும்,

இலங்கை ஆசிரியர் சேவை நியதிப் பிரமாணங்களுக்கமைய ஆசிரியர்களை உள்ளீர்ப்புச் செய்தல். 1976 ஆம் ஆண்டில் மாவட்ட சேவைத் திட்டத்தின் கீழ் கராதரப் பத்திரம் பெற்ற உதவியாசிரியர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பட்டதாரிகள்

---

1976 ஆம் ஆண்டில் வருடத்திற்கு ரூ.3000/- திரட்டிய நிலையான சம்பளத்தில், மாவட்ட சேவைத் திட்டத்தின் கீழ் கராதரப்பத்திரம் பெற்ற உதவியாசிரியர்களாக ஆட்சேர்க்கப்பட்ட பட்டதாரிகளுக்கு பட்டதாரி ஆசிரிய வேதனம் பின் வந்ததொரு காலப்பகுதியிலேயே வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாசிரியர்களை 1976 ஆம் ஆண்டில் மாவட்ட சேவைத் திட்டத்தின் கீழ் கராதரப்பத்திரமுள்ள உதவியாசிரியர்களாக ஆட்சேர்க்கப்பட்ட போது அவர்களைப் பட்டதாரி ஆசிரியர்களாகவே ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளமையால், அவர்களை அந் நியமனத் திகதியிலிருந்தே பட்டதாரி ஆசிரியர்கள் எனக் கருதி, இலங்கை ஆசிரிய சேவை நியதிச்சட்டப் பிரமாணங்களுக்கமைவாக அவர்களுக்கான வேதன மாற்றம் செய்யப்பட வேண்டும். இதன் பின்னருள்ள ஒரு காலப்பகுதியில் ஆயினும் இதே ஏற்பாடுகளின் கீழ் இதே போன்று ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பட்டதாரிகள் விடயத்திலும் இவ்வாறே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

இது தொடர்பாக ஏதேனும் சிக்கல்கள் தோன்றுமாயின் தயவுசெய்து என்னோடு தொடர்பு கொள்ளவும்.

ஒப்பம் : சேனாயக்க உபசேன,
மேலதிகச் செயலாளர் (நிர்வாகம்)
கல்வி உயர்கல்வி அமைச்சின் செயலாளருக்காக.

பிரதிகள் :

1) க.சே.ச./செய.
2) சகல மா.க.செய.
3) சகல மா.பொ.சே.ஆ.கு./செய.
4) சகல வலய/கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள்.

எனது இல : வகிமா/மாகதி/ஏஓ/12.
மாகாண கல்வித்திணைக்களம்,
வடக்கு கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.
1995.08.16

பிராந்திய/பிரதிக் கல்விப்பணிப்பாளர்,

.......................

மேற்படி சுற்று நிருபம் சம்பந்தமாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும்.

பீ. றோச் அருளப்பு,
நிர்வாக உத்தியோகத்தர்.

ஒப்பம் : செல்வி. சி. பெரியதம்பி,
மாகாண கல்விப்பணிப்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விச் சுற்றறிக்கை இல: 95/7 (IV)

எனது இலக்கம்: 4/ஆசே/01/3099
1995 யூலை 07 ஆந் திகதி,
கல்வி, உயர்கல்வி அமைச்சு,
"இசுருபாய"
பத்தரமுல்லை.

மாகாணக் கல்விச் செயலாளர்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
சகல வலய பிரதிக் கல்விப்
பணிப்பாளர்களுக்கும்,

இலங்கை ஆசிரியர் சேவை ஆரம்பமாகி 1994.10.06 ஆந் திகதியின் பின் புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களை உரிய சம்பளத் திட்டத்திற்குள்ளாக்குதல்.

மேற்படி விடயம் சம்பந்தமாக அமைச்சு வெளியிட்டுள்ள 95/7 (1), 95/7 (11), 95/7 (111) ஆகிய இலக்கங்களைக் கொண்ட சுற்றறிக்கைக்கு அப்பாற்பட்டது.

02. "இலங்கை ஆசிரியர் சேவை" 1994.10.06 இல் நடைமுறைப் படுத்தப்பட்டதற்கமைய, அத்தினத்தின் பின் புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்கள் புதிய ஆசிரிய சேவையின் உரிய வகுப்பிற் சேர்த்துக்கொள்ளப்படுவதோடு அதற்குரிய சம்பள அலகிற்கும் உரித்துடையவராவர்.

03. ஆதலால், 1994.10.06 ஆந் திகதி அல்லது அவர்களது முதல் நியமனத் திகதிப்படி-சரியான தெரிவைக் கண்டு அத்திகதியிலிருந்து, கீழ்க் காணும் ஆசிரியர் சேவையின் உரிய வகுப்பிற்கு நியமித்த அதற்குரிய சம்பளத் திட்டத்தையும் அமுல்படுத்தும்படி அன்புடன் அறியத்தருகிறேன்.

04. 1995.01.01 ஆந் திகதி அல்லது ஆசிரியரின் முதல் நியமனத் தினதி - இதில் உசிதமானதைத் தெரிந்தெடுத்த அவர்களது புதிய சம்பளத் திட்டத்தை அமுலாக்க வேண்டும்.

உரிய ஆசிரியத் தரங்கள்:

1. பட்டதாரி ஆசிரியர்கள் பயிலுநர்களாகச் சேவை செய்ததிலிருந்து நிரந்தர பட்டதாரி ஆசிரியர் தரத்தைப் பெற்றவராவர்.

   - பட்டதாரி ஆசிரியர்களுக்கான 37/92 சம்பளச் சுற்றறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளபடி சம்பளத் திட்டமும் சம்பள அலகு நம்: ரூ. 37,200- 4 X 780-10 X 1200-1 X 1560-53,880 எல்:11-3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆசிரியர் சேவையின் புதிய சம்பளத் திட்டமும் 37/92 சம்பளச் சுற்றறிக் கையின் சம்பள அலகும்: ரூ. 42,720-12 X 1200-57,120 எல்: 3-7
- நியமித்தலுக்குரிய தரம்: 3 ஆம் தரம் முதலாம் வகுப்பு.
- ஆரம்பச் சம்பள நிலை: 46,720/-
- முதலில் வழங்கப்பட்ட சம்பளமும் 37/92 சம்பளச் சுற்றறிக்கைக்கு அமை வான சம்பள அலகும்: ரூ. 32,520-10 X 780-6 X 1200-47,520 எல்: 11-1
- ஆசிரியர் சேவையின் புதிய சம்பளத் திட்டமும் 37/92 சம்பளச் சுற்றறிக் கையின் சம்பள அலகும்: ரூ. 42,720-12 X 1200-57,120 எல்: 3-7
- நியமித்தலுக்குரிய தரம்: 3 ஆம் தரம் முதலாம் வகுப்பு
- ஆரம்பச் சம்பள நிலை: ரூ. 45,120/-

3. ஆங்கில மொழி நிறுவனங்களில் (DELIC) பயிற்சி பெற்ற ஆங்கில ஆசிரியர் நியமனம் பெற்றோர்.

- முதலில் வழங்கப்பட்ட சம்பளமும் 37/92 சம்பளச் சுற்றறிக்கைக்கு அமைவான சம்பள அலகும்: ரூ. 24,120-14 X 660-6 X 780-38,040 எல்: 2-1
- ஆசிரியர் சேவையின் புதிய சம்பளத் திட்டமும் 37/92 சம்பளச் சுற்றறிக் கையின் சம்பள அலகும்: ரூ. 32,520-10 X 780-2 X 1200-42,720 எல்: 3-3
- நியமித்தலுக்குரிய தரம்: 3 ஆம் தரம் 2 ஆம் வகுப்பு
- ஆரம்பச் சம்பள நிலை: ரூ. 32,520/-

4. நான்கு வருட (4) சேவைக் காலத்தையும் மற்றும் தேவையானவற்றையும் பூரணப் படுத்தியதன் பின் தராதரப் பத்திரமற்ற ஆசிரியர்களாக நிரந்தர நியமனம் பெற்றோர்.

- தராதரப்பத்திரமற்ற ஆசிரியர்களுக்காக முன்னர் செலுத்தப்பட்ட சம்பளத் திட்டமும் 37/92 சுற்றறிக்கையின் உரிய சம்பள அலகும்: ரூ. 24,120-14 X 660-6 X 780-38,040/- எல்: 2-1
- ஆசிரியர் சேவையின் புதிய சம்பளத் திட்டமும் 37/92 சம்பளச் சுற்றறிக் கைக்கு அமைவான சம்பள அலகும்: ரூ. 32,520-10 X 780-2 X 1200-42,720/- எல்: 3-3
- நியமித்தலுக்குரிய தரம்: 3 ஆம் தரம் 2 ஆம் வகுப்பு.
- ஆரம்ப சம்பள நிலை: ரூ. 32,520/-

சேனாநாயக்க உபசேன
மேலதிக செயலாளர் (பரிபாலனம்)
கல்வி, உயர்கல்விச் செயலாளருக்காக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்தம்

### இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பு

1995ஆம் ஆண்டு எப்பிரல்மாதம் 3ஆந் திகதி திங்கட்கிழமை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 865/3ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேடமானது) மூலம் வெளியிடப்பட்டு 1997 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11ஆந் திகதி செவ்வாய்க்கிழமை இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் 966/5 ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேடமானது) மூலம் திருத்தப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைப்பிரமாணக் குறிப்பு பின்வரும் பிரிவுகளை/வாசகங்களைக் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு திருத்தங்கள் மூலம் மேலும் திருத்தப்படுகின்றன.

### பகுதி 111

01.

குறிப்பு: சேவைக்கு உள்ளெடுக்கும்போது பட்டதாரி ஆசிரியர்களுக்குப் புள்ளிகள் வழங்கும் முறை கீழே தரப்பட்டுள்ளது.

(அ) சிறப்புப் பட்டதாரியாக ஒவ்வோர் ஆண்டுச் சேவைக்கும்

02 புள்ளிகள்

(ஆ) வாண்மைத் தொழிற்தகைமைகள் இல்லாத பயிற்றப்பட்ட அல்லது பட்டதாரி ஆசிரியராக ஒவ்வோர் ஆண்டுச் சேவைக்கும்.

01 புள்ளி

(இ) கல்வி மாணிப் பட்டத்தை அல்லது பட்டப் பின் கல்வி டிப்ளோமாவைப் பெற்ற பின் ஒவ்வோர் ஆண்டுச் சேவைக்கும்

02 புள்ளிகள்

(பின்வரும் சம்பள மாற்றல் அட்டவணைகள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு திருத்தப்படுகின்றன)

#### பயிற்றப்படாத பட்டதாரிகள்

| தற்போதைய சம்பள நிலை (எஸ்-11-3) | புள்ளிகள் | உத்தேச சம்பள நிலை (எஸ்-3-7) | (எஸ்-5-1) | (எஸ்-6-1) |
|---|---|---|---|---|
| 37,200 | 1 | 52,320 | | |
| 37,980 | 2 | 53,520 | | |
| 38,760 | 3 | 54,720 | | |
| 39,540 | 4 | 55,920 | | |
| 40,320 | 5 | | 58,560 | |
| 41,520 | 6 | | 60,120 | |
| 42,720 | 7 | | 61,680 | |
| 43,920 | 8 | | 63,240 | |
| 45,120 | 9 | | 64,800 | |
| 46,320 | 10 | | 66,360 | |
| 47,520 | 11 | | 67,920 | |
| 48,720 | 12 | | 69,480 | |
| 49,920 | 13 | | 71,040 | |
| 51,120 | 14 | | 72,600 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 52,320 | 15 | |
| 53,880 | 16 | 80,400 |
| | | 83,400 |
| | | 86,400 |
| | | 89,400 |
| | | 92,400 |
| | | 95,400 |
| | | 98,400 |
| | | 101,400 |

பயிற்றப்பட்ட (வாண்மைத் தொழில் தகைமையுள்ள) பொதுப்-பட்டதாரிகள்

| தற்போதைய சம்பள நிலை | புள்ளிகள் | உத்தேச சம்பள நிலை | |
|---|---|---|---|
| (எல்-11-4) | ----- | (எல்-5-1) | (எல்-6-1) |
| 39,540 | 1 | 53,880 | |
| 40,320 | 2 | 55,440 | |
| 41,520 | 3 | 57,000 | |
| 42,720 | 4 | 58,660 | |
| 43,920 | 5 | 60,120 | |
| 45,120 | 6 | 61,680 | |
| 46,320 | 7 | 63,240 | |
| 47,520 | 8 | 64,800 | |
| 48,720 | 9 | 66,360 | |
| 49,920 | 10 | | 80,400 |
| 51,120 | 11 | | 83,400 |
| 52,320 | 12 | | 86,400 |
| 53,880 | 13 | | 89,400 |
| 55,440 | 14 | | 92,400 |
| 57,000 | 15 | | 95,400 |
| | 16 | | 98,400 |
| | 17 | | 101,400 |

பயிற்றப்படாத (வாண்மைத் தொழில் தகைமையற்ற) சிறப்புப் பட்டதாரிகள்

| தற்போதைய சம்பள நிலை | புள்ளிகள் | உத்தேச சம்பள நிலை | | |
|---|---|---|---|---|
| (எல்-11-4) | ----- | (எல்-3-7) | (எல்-5-1) | (எல்-6-1) |
| 39,540 | 2 | 53,520 | | |
| 40,320 | 3 | 54,720 | | |
| 41,520 | 4 | 55,920 | | |
| 42,720 | 5 | | 58,560 | |
| 43,920 | 6 | | 60,120 | |
| 45,120 | 7 | | 61,680 | |
| 46,320 | 8 | | 63,240 | |
| 47,520 | 9 | | 64,800 | |
| 48,720 | 10 | | 66,360 | |
| 49,920 | 11 | | 67,920 | |
| 51,120 | 12 | | 69,480 | |
| 52,320 | 13 | | 71,040 | |
| 53,880 | 14 | | 72,600 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 55,440 | 15 | 80,400 |
| 57,000 | 16 | 83,400 |
| | 17 | 86,400 |
| | 18 | 89,400 |
| | 19 | 92,400 |
| | 20 | 95,400 |
| | 21 | 98,400 |
| | 22 | 101,400 |

<u>பயிற்றப்பட்ட (வாண்மைத் தொழில் தகைமையுள்ள) சிறப்புப் பட்டதாரிகள்</u>

| தற்போதைய சம்பள நிலை (எல்-11-5) | புள்ளிகள் | உத்தேச சம்பள நிலை (எல்-5-1) | (எல்-6-1) |
|---|---|---|---|
| 42,720 | 2 | 55,440 | |
| 43,920 | 3 | 57,000 | |
| 45,120 | 4 | 58,560 | |
| 46,320 | 5 | 60,120 | |
| 47,520 | 6 | 61,680 | |
| 48,720 | 7 | 63,240 | |
| 49,920 | 8 | 64,800 | |
| 51,120 | 9 | 66,360 | |
| 52,320 | 10 | | 80,400 |
| 53,880 | 11 | | 83,400 |
| 55,400 | 12 | | 86,400 |
| 57,000 | 13 | | 89,400 |
| 58,560 | 14 | | 92,400 |
| 60,120 | 15 | | 95,400 |
| 61,680 | 16 | | 98,400 |
| 63,240 | 17 | | 101,400 |
| 64,800 | | | 101,400 |
| 66,360 | | | 101,400 |
| 67,920 | | | 101,400 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சின் சுற்றுநிருப
இல : 95/7(111)

எனது இல: 4/ஆசே/1/3099
கல்வி உயர்கல்வி அமைச்சு,
'இசுருபாய', பத்தரமுல்ல.

1995 ஏப்பிறல் 26 ஆந் திகதி

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கட்கும்,
சகல மாகாணக் கல்விப்பணிப்பாளர்கட்கும்,
சகல கோட்டப் பொறுப்பு பிரதிக் கல்விப்பணிப்பாளர்கட்கும்,

**இலங்கை ஆசிரிய சேவையை ஸ்தாபித்தல் - ஆசிரியர்களை உள்ளீர்ப்புச் செய்தலும், புதிய சம்பளத் திட்டங்களை வழங்கலும்**

மேற்குறித்த விடயம் சார்பான 95/7(1), 95/7(11) ஆம் இலக்க சுற்று நிருபங்களுக்கு மேலதிகமாக,

இலங்கை ஆசிரிய சேவையை நிறுவுதலின் கீழ் ஆசிரியர்களை உள்ளீர்ப்புச் செய்தலோடு தொடர்பான பல்வேறு காரியாலயங்களிலிருந்தும் இவ்வமைச்சினைக் கோரியுள்ள விடயங்களையிட்டு மேலும் தெளிவான விடயங்களை விளக்கும் நோக்குடன் இச்சுற்றுநிருபம் வெளியிடப்படுகின்றது. மேற்குறித்த சுற்று நிருபங்கள் மூலம் என்னால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக கீழ்க் காட்டப்பட்டுள்ள விளக்கங்களையும் கவனத்திற்கொண்டு செயற்படும்படி அறியத் தருகின்றேன்.

01. <u>வினைத்திறமைகாண் தடைகளில் சித்தியடையாமை காரணமாக ஒத்திப் போடப்பட்ட சம்பள ஏற்றங்களுக்கான அனுகூலங்கள் :-</u>

இலங்கை ஆசிரிய சேவை நியதிகளுக்கமைய ஆசிரியர்களை உள்ளீர்ப்புச் செய்யும்போது அவர்களது திருப்திகரமான சேவைக்காலம் கவனத்திற் கொள்ளப்படக்கூடிய எவரேனும் ஒரு ஆசிரியரின் வருடாந்த வேதன ஏற்றம், அவர் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தியடையாமை காரணத்திற்காக மட்டும் ஈட்டிக்கொள்ள தவறியிருப்பின் அவ்வாறான வருடாந்த வேதன ஏற்றங்கள் உள்ளீர்ப்புச் செய்யும் நடவடிக்கைக்காக மட்டும் ஆசிரியர் அதனை ஈட்டியதாக கவனத்திற்கெடுத்துக் கொள்ளப் பட்டு உரிய சம்பள நிலையில் அவர் அமர்த்தப்படுதல் வேண்டும். உள்ளீர்ப்புச் செய்யும் செயல்முறையின் போது வருடாந்த சம்பள ஏற்றம் தொடர்பான காலப்பகுதியுள் ஒழுக்காற்று நடவடிக்கை, மற்றும் சம்பள மற்ற விடுமுறைகள், அல்லது வேறேதாயினும் தண்டனையாக விதிக்கப் <u>பட்ட காலப்பகுதி திருப்திகரமான சேவைக்காலமாக சேர்த்துக்கொள் ளப்படலாகாது.</u>—

<u>உதாரணமாக</u> :-

தொழிற்தகைமை பெறாத பட்டதாரியொருவர் தனது சேவைக்காலத்துள் 12வது வருடத்தை எட்டியுள்ளாரெனில், அம்முழுச் சேவைக்காலத்துள் தும் தண்டனையாகவோ, சம்பளமற்ற லீவு பெற்றதன் காரணமாகவோ சம்பளவேற்றம் ஒத்திவைக்கப்பட்டமைக்கு ஆட்படாதவராக இருப்பின் அவர் 2ஆம் வகுப்பில் 11ஆம் தரத்தில் ரூபா 60120/- சம்பள நிலையில் அமர்த்தப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. <u>விவசாய விஞ்ஞான டிப்ளோமா சான்றிதழ் பெற்றோர்</u> :

விவசாய விஞ்ஞான டிப்ளோமாதாரர்கள், ஆசிரிய பயிற்சி பெறாத டிப்ளோமாதாரர் என கருதப்பட்டு 3ஆம் வகுப்பில் 1ஆம் தரத்தில் அமர்த்தி சம்பளமாற்றம் செய்யப்படல் வேண்டும். அவர்கள் தமது டிப்ளோமா பாட நெறிக்கு மேலதிகமாக ஆசிரிய பயிற்சியை பெற்றுள்ளவராக இருப்பின் அவ்வாறானோரை பயிற்சி பெற்ற டிப்ளோமாதாரர் எனக்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

03. <u>பயிற்சி ஆசிரியராக கருதப்படும் டிப்ளோமாதாரர்</u> :

எவரேனும் ஒரு டிப்ளோமாதார ஆசிரியர் பயிற்சி ஆசிரியராக கருத்திற்கொள்ளப்பட்டு இதுவரை வேதன வழங்கல் இடம்பெற்றிருப்பின் அவ்வாறானோர் ஆசிரிய பயிற்சியுடன் கூடிய டிப்ளோமாதாரராக கருதப்படல் வேண்டும்.

04. <u>பட்டதாரிப் பயிலுநர் திட்டத்தின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஆசிரியர்கள்</u> :

பட்டதாரி பயிற்சித் திட்டத்தின் கீழ் ஆட்சேர்க்கப்பட்ட ஆசிரியர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு வகையான நியமனக் கடித வழங்கலின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர்: இவ்வகை ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நியமனக் கடிதங்களும் காரியாலயத்திற்கு காரியாலயம் வேறுபட்டுள்ளமையும் தெரிந்த ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ் ஆட்சேர்க்கப்பட்ட ஆசிரியர்களது நியமனக் கடிதங்களின்படி அவர்கள் பட்டதாரி உதவியாசிரியராகவோ, அல்லது பட்டதாரி உதவியாளர் வகை ஆசிரியராகவோ நியமிக்கப்பட்டுள்ளவர்களாக குறிப்பிடப்பட்டிருப்பின் நிலையியற் குழுவின் ( Structure Commitee ) கூறு அங்கீகாரத்தின் கீழ் அவர்கள் அவ்வாறு நியமனம் பெற்ற திகதி முதல் பட்டதாரி ஆசிரியர்களாக கருதப்படல் வேண்டும். நியமனக் கடிதத்தில் அவர்களது நியமனம் பயிலுநர் தர நியமனமாக குறிப்பிடப்பட்டிருப்பின் அவர்களது பட்டதாரி சேவைக்காலம் அவர்கள் பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்ற திகதியிலிருந்தே கணிக்கப்படுதல் வேண்டும். இதனால் ஏற்படக்கூடிய முரண்பாடுகள் தொடர்பாக ஆசிரிய சேவை திட்டத்தின் கோவையில் குறிப்பிட்டுள்ளபடி நிலையியற் குழு அமைக்கப்பட்டதன் பின்னர் தீர்வுக்கு நடைமுறைக்கு கொண்டு வரப்படும். இவ்வகை ஆசிரியர்களுக்கு ஆசிரியர்களாக மட்டும் தரப்பட்டுள்ள நியமனக் கடிதங்கள் நீங்கலாக வேறு நியமனங்களோ சேவைகளோ வழங்கப்பட்டிருப்பின் அவர்களுக்கும் அமைவில் வழங்கப்பட்ட விசேட சம்பள முறைமையினால் புதிய ஆசிரிய சேவைக்கு உள்ளீர்க்கப்படுகின்ற வாய்ப்பினை உரித்தற்றதாக்கலாகாது.

சோமநாயக்க உபசேன,
மேலதிக செயலாளர் (நிர்வாகம்)
கல்வி உயர்கல்வி அமைச்சின்
செயலாளருக்காக.

பிரதிகள் : க.சே.ச./ செ:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இல தா/7/5/1/100
அரசாங்க நிர்வாக,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு - 07.
2005 பெப்ரவரி மாதம் 03 ஆந் திகதி

சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

## பிரசவ விடுமுறை தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XII

பெண் அரச அலுவலர்களுக்கு ஒவ்வொரு பிள்ளை பிறப்புக்குமாக 84 நாள்கள் சம்பளத்துடனான பிரசவ விடுமுறையும், 84 நாள்கள் அரைச் சம்பளத்துடனான பிரசவ விடுமுறையும், 84 நாள்கள் சம்பளமற்ற பிரசவ விடுமுறையும் வழங்க அரசு தீர்மானித்துள்ளது. அதன்படி, தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XII இன் 18 ஆம் பிரிவுக்குப் பதிலாக பின்வரும் பிரிவு 2005.01.01 திகதி முதல் நடைமுறைப்படும் வண்ணம் பதிலீடு செய்யப்படுகிறது.

18. பிரசவ விடுமுறைகள்

18.1 நிரந்தர, தற்காலிக, அமய, அல்லது பயிலுநர் பெண் அலுவலர்கள் இப் பிரிவின் கீழ் பிரசவ விடுமுறை பெறுவதற்கு உரித்துடையவர்கள் ஆவர்.

18.2 சம்பளத்துடனான பிரசவ விடுமுறைகள்

18.2.1 பெண் அலுவலரொருவருக்கு உயிர்வாழும் ஒவ்வொரு பிள்ளை பிறப்புக்குமாக முழுச்சம்பளத்துடனான அரசாங்க வேலையாற்று 84 நாள்கள் விடுமுறை பெறுவதற்கு உரித்துண்டு. பிரசவம் நிகழ்ந்து 04 வாரங்கள் செல்லமுன் அலுவலர் மீண்டும் கடமையை பொறுப்பேற்க அனுமதிக்கப்படமாட்டார். இப்பிரிவின் கீழ் விடுமுறை பெறுவதற்காக ஒரு வைத்தியச் சான்றிதழையோ அல்லது குழந்தையின் பிறப்புச் சான்றிதழையோ சமர்ப்பிக்க வேண்டும்.

18.2.2 பிரசவ விடுமுறைகளை கணிப்பீடு செய்யும் போது அந்த விடுமுறைக் காலத்திற்குள் வருகின்ற அரசாங்க விடுமுறைகள் மற்றும் சனிக்கிழமை ஞாயிற்றுக்கிழமை தினங்களை அதில் உள்ளடக்கலாகாது.

18.2.3 இவ் விடுமுறைக் காலத்தை அலுவலரின் மீதி விடுமுறைகளிலிருந்து கழித்தல் ஆகாது என்பதுடன், இவ் விடுமுறைக் காலத்தை முழுச்சம்பளத்துடனான ஒரு விசேட விடுமுறையாக கருத வேண்டும்.

18.2.4 பிறக்கும் போதே மரணம் நிகழ்கின்ற ஒரு பிள்ளைப் பிறப்பிலும் பிரசவத்திலிருந்து 6 வாரங்கள் செல்லமுன் குழந்தை மரணிக்கின்ற சந்தர்ப்பத்திலும் குழந்தையின் மரணச் சான்றிதழை அல்லது வைத்தியச் சான்றிதழை சமர்ப்பித்த போது விசேட சம்பளத்துடனான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுமுறையாக பிள்ளைப் பிறப்பு நிகழ்ந்த திகதி முதல் 6 வார கால விடுமுறை வழங்க வேண்டும்.

18.3 அரைச் சம்பளத்துடனான பிரசவ விடுமுறை

18.3.1 மேற்போந்த 18.2.1 ஆம் உபபிரிவின் ஏற்பாடுகளின்படி விடுமுறை பெற்றுக் கொண்ட பின் குழந்தையை பாதுகாத்துக் கொள்வதற்காக அரைச் சம்பளத்துடனான 84 நாள்கள் விடுமுறை பெற உரித்துண்டு.

18.3.2 அரைச் சம்பளத்துடனான விடுமுறைக் காலத்திற்குள் வருகின்ற அரசாங்க விடுமுறைகள், சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை தினங்களை அரைச் சம்பள விடுமுறைகளாகக் கருத வேண்டும்.

18.4 சம்பளமற்ற பிரசவ விடுமுறைகள்

18.4.1 மேற்போந்த 18.3.1 உபபிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட விடுமுறைகள் முடிந்த பின் மேலும் குழந்தையை பாதுகாக்கும் அவசியம் ஏற்படும்போது மட்டும் சம்பளமற்ற 84 நாள் விடுமுறை வழங்கலாம்.

18.4.2 இப் பிரிவின் கீழ் வழங்கப்படுகின்ற விடுமுறைகளை கணிப்பீடு செய்யும் போது அந்த விடுமுறைக் காலத்திற்குள் வரும் அரசாங்க விடுமுறைகள் மற்றும் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை தினங்களை அதில் உள்ளடக்க வேண்டும்.

18.4.3 இந்த விடுமுறைகளை வழங்க முன் அலுவலருக்குக் கொடுக்கப்பட்டுள்ள கடன்களின் அல்லது முற்பணங்களின் மாத தவணைக் கட்டணங்களை தொடர்ந்து அறவிடுவதற்காக திருப்திகரமான ஓர் ஒழுங்கைச் செய்வது திணைக்களத் தலைவரின் பொறுப்பாகும்.

18.5 கருச்சிதைவுக்காக (Abortion & Miscarriage) விடுமுறை அவசியப்படுமாயின் வைத்தியச் சான்றிதழின் பேரில் அலுவலருக்கு உரித்தான ஓய்வு விடுமுறைகளில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

18.6 18.2.1 உபபிரிவின் கீழ் பெற்றுக்கொண்ட விடுமுறைக் காலம் முடிவடைந்த பின் 18.3.1 ஆம் உபபிரிவில் குறிப்பிட்டுள்ள விடுமுறைகளை பெறாவிட்டால் தனது குழந்தைக்கு தாய்ப்பாலூட்டுவதற்காக வழமையாக சேவை நிலையத்தில் இருந்து புறப்படும் நேரத்திற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன் சேவை நிலையத்தில் இருந்து புறப்படுவதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்க வேண்டும். இவ் அனுமதி வழங்கப்பட வேண்டியது குழந்தையின் வயது 6 (ஆறு) மாதங்கள் பூர்த்தியாகும் வரை மட்டுமாகும்.

18.7 மேலும் பெண் அரச அலுவலரொருவர் கர்ப்பமுற்றிருக்கும் காலம் 5 மாதங்கள் ஆகும் போது கடமைக்காக அரை மணித்தியாலம் தாமதமாகி சேவை நிலையத்திற்கு வருகை தரவும், வழமையாக சேவை நிலையத்தில் இருந்து புறப்படும் நேரத்திற்கு அரை மணித்தியாலத்திற்கு முன் புறப்படவும் அனுமதி வழங்கப்படுகிறது. இச்சலுகை வழங்கப்படுவது அலுவலர் பிரசவ விடுமுறை பெறும்வரை மட்டுமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18.8 மேற்போந்த 18.3.1, 18.4.1 பிரிவுகளின் கீழ் குறிப்பிட்டுள்ள விடுமுறைகள் அங்கீகரிக்கப்படுவது குழந்தை உயிர் வாழும் போது மட்டுமாகும். விடுமுறை பெற்றுக்கொள்வது குழந்தையை பாதுகாப்பதற்கானதால் ஏதேனும் காரணமாக குழந்தை மரணித்துவிட்டால் அத்திகதி தொடக்கம் ஏழு நாட்களுக்கு பின் இவ் விடுமுறைகள் செல்லுபடி அற்றதாகும்.

18.9 மேற்போந்த 18.3.1, 18.4.1 பிரிவுகளின் கீழ் வழங்கப்படும் விடுமுறைகள் சம்பள ஏற்றங்களுக்கும் ஓய்வூதிய அலுவல்களுக்கும் தடையாக அமைதல் ஆகாது சம்பளமற்ற விடுமுறைக் காலத்திற்குள் ஏற்படும் வெற்றிடங்களின் போதும் பதவி உயர்வுகளின் போதும் இந்த விடுமுறைக் காலத்தை தடையாக கருதுதலாகாது.

18.10 அலுவலர் மேற்போந்த 18.3.1, 18.4.1 பிரிவுகளில் குறிப்பிட்டுள்ள விடுமுறைகளில் ஒரு பகுதியை இரத்துச் செய்து சேவைக்குச் சமூகமளிக்க விரும்பினால் திணைக்களத் தலைவருக்கு அறிவித்து அவ்வாறு செய்யலாம்.

02. இந்தச் சுற்றறிக்கை நடைமுறைக்கு வரும் திகதியன்றுஅரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல 03/2004 இன் ஏற்பாடுகளின்படி பெற்றுள்ள சம்பளத்துடனான 84 நாள்கள் விடுமுறையை கடந்து செல்லாத அலுவலர்கள் மட்டும் மேற்போந்த 18.3.1 ஆம் 18.4.1 ஆம் உட்பிரிவுகளின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட விடுமுறைகளைப் பெற்றுக் கொள்ளலாம். 2005.01.01 ஆம் திகதியன்று சம்பளத்துடனான 84 நாள்கள் விடுமுறையைக் கடந்திருக்கும் அலுவலர்கள் இச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள அரைச் சம்பளம் மற்றும் சம்பளமற்ற விடுமுறைச் சிறப்புரிமை பெற உரித்துடையவர்கள் ஆகார்.

உதாரணம்:- 2004.12.15 ஆம் திகதியன்று அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல 03/2004 இன் ஏற்பாடுகளின்படி சம்பளத்துடனான 84 நாள்கள் விடுமுறைகளை முடிவுறுத்தி உள்ள அலுவலர்களுக்கு இச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள அரைச் சம்பள, சம்பளமற்ற விடுமுறைகளை வழங்க முடியாது.

03. 2005.01.01 ஆம் திகதி முதல், 1999.07.20 திகதிய 16/99 இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையும், 2004.08.18 ஆம் திகதிய 03/2004 இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையும், தற்போது மேற்கொண்டுள்ள செயல் முறைகளை பாதிக்காதவாறு இரத்துச் செய்யப்படுகின்றது.

ஒப்பம்: டி.திசாநாயக்க
செயலாளர்,
அரசாங்க நிர்வாக,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : **14/2005**

எனது இல: ஐஏபிஏ/பி/1/1/30
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு . 07

2005 ஒகோஸ்த்து ஆந் திகதி

சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,
மாவட்டச் செயலாளர்களும்,
பிரதேச செயலாளர்களும்.

ஓய்வு பெறுகின்ற அலுவலர்களின் ஓய்வூதியச் சம்பள கொடுப்பனவை துரிதப்படுத்துவதற்காக கடிதக் கோவைகளை நாளதுவரைப்படுத்தல்.

மேற்படி விடயம் தொடர்பாக வெளியிடப்பட்ட 1999.06.07 ஆந் திகதிய **16/95 ஆம்** இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 1995.08.21 ஆம் திகதி வெளியிடப்பட்ட 02/95 ஆம் இலக்க ஓய்வூதியத் திணைக்கள சுற்றறிக்கையின்பால் தங்களின் தயவான கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. குறித்த சுற்றறிக்கையின் முலம் கருதப்படுவது யாதெனில் ஓய்வு பெற்றுச் செல்கின்ற எந்தவொரு அரச அலுவலரும் தனக்கு உரித்துடைய மாற்றிய பணிக்கொடையை ஓய்வு பெறும் திகதியில் தான் சேவையாற்றுகின்ற நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொண்டு **அதற்கு அடுத்த மாதங்களின் ஓய்வுச் சம்பளங்களை பிரதேசச் செயலகத்தில் இருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய ஒழுங்குகளை ஏற்படுத்துவதே ஆகும் . எனினும் இந் நோக்கம் நிறைவேற்றப்படவில்லை என்பதை அவதானிக்கின்றேன். இது பற்றி** ஓய்வூதியத் திணைக்களத்தை கலந்தோலோசித்த போது ஓய்வுபெறுகின்ற அலுவலர்களின் பெயர்வழிக்கோவைகள் நாளது வரைபடுத்தப்படாத நிலையில் இருப்பதே கால தாமதத்திற்குக் காரணமாகின்றது. என்பது தெளிவுபடுகிறது. அதாவது ஓய்வு பெறும் தறுவாயில் ஓய்வுபெறச் செய்வதற்குத் தேவையான ஆவணங்கள் பெயர்வழிக்கோவையில் இராமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. எனவே சரியான நிலையில் அலுவலரின் பெயர்வழிக் கோவை நாளதுவரைப்படுத்தல் செயற்பாட்டின் அவசியத்தை வலியுறுத்த விரும்புகின்றேன். இதனால் உரிய பெயர்வழிக் கோவைகளை நாளதுவரைப்படுத்துவதன் வாயிலாக ஓய்வுபெறும் திகதியில் அவர்களின் பணிக்கொடையைப் போன்று ஓய்வுச் சம்பளத்தை பெற்றுக் கொள்வதில் ஏற்படும் கால தாமதத்தை தவிர்த்துக் கொள்வது இதன் முக்கிய நோக்கமாகும். இதன் மூலம் மேல் குறிப்பிட்டவாறு ஓய்வுப் பணிக்கொடையை ஓய்வுபெறும் அதே திகதியில் தான் சேவையாற்றுகின்ற நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொள்ளவும் ஓய்வு பெற்றதன் பின் முதல்மாதத்திலேயே ஓய்வுச் சம்பளத்தை பெற்றுக் கொள்ளவும் வசதி ஏற்படுகிறது.

04. அதன் படி இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு 1 இல் காட்டப்படுகின்ற ஆவணங்களை உள்ளடக்கி பெயர்வழிக் கோவைகளை நாளதுவரைபடுத்தி வைப்பதன் மூலம் ஓய்வுச் சம்பளங்களை தயாரிக்கும் போது ஏற்படும் அநாவசியமான கால தாமதத்தைத் தவிர்த்துக் கொள்ள முடியும் என்பதை ஓய்வூதியத் திணைக்களம் எனக்கு அறிவித்துள்ளது.

05. ஆகையால் இச் செயற்பாட்டை பின்வருமாறு 3 கட்டங்களாக மேற்கொள்ளப்பட வேண்டும் என இத்தால் வலியுறுத்தப்படுகிறது.

(5.I) தற்போது 57 வயது பூர்த்தியாகிய ஒவ்வொரு அலுவரினதும் அடுத்த சேவை நீடிப்பு மேற்கொள்ளப்படும் தறுவாயில் இணைப்பு 1 இல் காட்டப்பட்டுள்ள ஆவணங்களை பரிசோதித்து கடிதக் கோவைகளை நாளதுவரைபடுத்திய பின் முதலாபவது சேவை நீடிப்பை அங்கீகரித்தல்.

(5.II) தற்போது 57 வயதை கடந்துள்ள ஒவ்வொரு அலுவரினதும் இறுதிச் சேவை நீடிப்பு வழங்க முன்னராக இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் எல்லாவற்றையும் பூர்த்தி செய்து அதன்பின் சேவை நீடிப்பை அங்கீகரித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5-III) ஓய்வூதிய வயதை அடையும் ஒரு அலுவலர் சேவை நீடிப்பை எதிர்பார்க்காத விடத்து ஓய்வூதிய செயற்பாடானது ஓய்வூதியத் திகதிக்கு 6 மாதத்திற்கு முன்னரே ஆரம்பிக்கப்படல் வேணடும். ஏன் எனில் பெயர் வழிக் கோவை நாளதுவரைப்படுத்தல் செயல்பாட்டை பூர்த்தி செய்வதற்கு போதியளவு கால அளவைப் பெறக்கூடியதாக இருக்கும்.

06. மேற்படி 5-I, 5 - II இன் படி பெயர்வழிக் கோவை நாளதுவரைப்படுத்திய பின்பு ஏற்புடைய பெயர்வழிக் கோவையைப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதற்கான குறிப்பொன்றை நிறுவன எழுதுநரினால் சேவை நீடிப்புக்காக முன்வைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தில் எழுதல் வேண்டும்.

07. ஓய்வுபெறச் செய்யும் செயற்பாடானது ஓய்வுபெறும் திகதிக்கு 3 மாதங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட வேண்டும். கடிதக் கோவைகளை நாளதுவரைப்படுத்துவதற்கான பின் 02 ஆம் இலக்க இணைப்பின் படி திணைக்களத் தலைவரால் ஒரு சான்றிதழ் வழங்கப்பட வேண்டும்.

08. அத்துடன் இல்விதத்தில் பெர்வழிக். கோவைகளை நாளது வரைப்படுத்தும் செயற்பாட்டின் போது கடித ஆவணங்களைப் பரீசீலனை செய்வது வேலை கொள்பவர் வேலை செய்பவர் ஆகிய இருவரினதும் பொறுப்பாகும் என்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன்.

09. இம் முறை கையாளுவதன் முலம் ஓய்வு பெற்றுள்ள அலுவர்கள் அனைவரது ஓய்வுச் சம்பளங்கள் விதவை அனாதை ஓய்வுச் சம்பளங்கள் மற்றும் பணிக் கொடைகளை துரிதமாக பெற்றுக். கொள்ள சந்தர்ப்பம் அளிக்க முடியுமென்றும் அதன்படி தேவையற்ற கால தாமதங்களை தவிர்த்து ஓய்வுபெறுகின்ற அலுவலர்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்களை தவிர்த்துக் கொள்ள முடியுமென்பெதையும் மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒப்பம்/ டீ. திஸாநாயக்க,
செயலளார்,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
அமைச்சு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பு 1

பெயர்வழிக் கோவைகளை நாளதுவரைபடுத்தும் போது அதில் கோவையிட வேண்டிய ஆவணங்களில்

தேவையற்ற பிரிவுகள் இருப்பின் சீறிட்டஷம்

1. நியமனக் கடிதம் (ஓய்வூதியமுடைய)

2. நியமனம் ஏற்றுக் கொள்ளப்பட்டதை நிரூபிக்கும் கடிதம்

3. தகுதி காண் நிலைக் காலம் நீடிக்கப்பட்டிருப்பின் அதற்குரிய கடிதங்கள்

4. மருத்துவ அறிக்கை

5. சேவையில் நிரந்தரப்படுத்திய கடிதம்

6. சத்தியப் பிரமாணம் / உறுதியுரை

7. அமைய சேவைக்காலம் இருப்பின் அதற்குரிய கடிதங்கள்

8 விதவைகள் அநாதைகள் அங்கத்துவ அட்டையின் ஒரு புகைப்படப் பிரதி

9. அரசாங்க சேவை சகாய நிதியில் பங்குகொண்ட கடிதங்கள்

10. **கோவையில் பதவி உயர்வுகளுடன்** தொடர்புடைய கடிதங்கள்

11. **சம்பள ஏற்றங்கள்** அங்கீகரிக்கப்பட்ட கடிதங்கள்

12. இடமாற்றங்களுக்கு உரிய கடிதங்கள்

13. வினைத் திறன்காண் தடைகளில் சித்தியடைந்ததற்குரிய அல்லது அவற்றிலிருந்து விலக்களிக்கப்பட்டதற்குரிய கடிதங்கள்

14. ஊழியரின் பிறப்புச் சான்றிதழ்

15. விவாகச் சான்றிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ்கள்

17. வெளிநாடுகளில் பிறந்த பிள்ளைகள் இருப்பின் அவர்கள் பிறப்புகள் இலங்கையில் பதிவு செய்யப்பட்டதை நிருபிக்கும் கடிதங்கள்

18. விவாகரத்துச் செய்யப்பட்டிருப்பின் அவ் வழக்குத் தீர்ப்பின் ஒரு பிரதி

19. மீண்டும் விவாகமாகி இருப்பின் குறித்த விவாவகச் சான்றிதழ்

20. வாழ்க்கைத் துணைவர் அல்லது பிள்ளைகள் மரணித்திருப்பின் அவர்களின் மரணச் சான்றிதழ்கள்

21. வயது குறைந்த பிள்ளைகள் இருப்பின் அவர்களின் வயது குறைவை நிருபிக்கின்ற மருத்துவச் சான்றிதழ்களும் உரிய மற்றச் சான்றிதழ்களும்.

22. வாழ்க்கைத் துணைவர் தொழில் புரிவாராயின் அது பற்றி விபரங்கள்

23. தேசிய அடையாள அட்டையின் புகைப்படப் பிரதி அல்லது சாரதி உத்தரவுப் பத்திரம் இருப்பின் அதன் புகைப்படப் பிரதியொன்று

24. கல்விச் சான்றிதழ்களின் பிரதிகள்

25. தொழில்சார் தகைமை பெற்றிருப்பின் அச் சான்றதழ்களின் பிரதிகள்

26. உள்நாட்டு வெளிநாட்டு பயிற்சிப் பாடநெறிகளின் போது பெறப்பட்ட சான்றிதழ்கள்

27. அரைச் சம்பள விடுமுறைகள் மற்றும் சம்பளமற்ற விடுமுறைகள் பற்றிய விபரங்கள்

28. பிரசவ விடுமுறைகள் பற்றிய விபரங்கள்

29. திடீர் விபத்துக்களுக்கான விடுமுறை பற்றிய விபரங்கள்

30. வெளிநாட்டு விடுமுறை பற்றிய விபரங்கள்

31. முற்பட்ட ஆண்டுகளில் விடுமுறைகள் பெறப்பட்டிருப்பின் உரிய விபரங்கள்

32. கற்கை விடுமுறைகள் பெறப்பட்டிருப்பின் உரிய விபரங்கள்

33. வருடாந்த விடுமுறை அறிக்கைகள் (பெற்றுக் கொள்ளப்படாத விடுமுறைகளுக்காக ஓய்வு பெறும் தறுவாயில் கொடுப்பனவுகள் செய்யப்படுவதால்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34, பதவி வெறித்தாக்கல் கட்டளையும் திரும்பச் சேவையில் அமர்த்தும் கட்டளைகளும்,

35, ஒழுக்காற்றுக் கட்டளைகளும் அக்கட்டளைகளை நடைமுறைப்படுத்திய கடிதங்களும்,

36, ஒழுக்காற்று கட்டளைகளுக்காக சமர்ப்பித்த மேன்முறையீடுகள் பற்றிய தீர்மானங்கள்

37, இரண்டாம் நிலை அடிப்படையில் சேவையில் இருந்து விடுவிக்கப்பட்ட கடிதங்கள் ( இருக்குமாயின்)

38, இரண்டாம் நிலை அடிப்படையில் இருந்த காலத்தில் அந் நிறுவனத்தால் ஓய்வுச் சம்பளத்திற்காக சம்பளததிலிருந்து 25 வீதம் ஓய்வூதியப் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்டதை நிருபிக்கும் கடிதங்கள்

39, மாகாண சபை சேவைக்கு விடுவித்தல் பற்றிய கடிதங்கள்

40, மாகாண சபை சேவையில் இருந்து அரச சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட கடிதங்கள்

41, சேவை பாராட்டப்பட்ட் கடிதங்களும் குற்றங்குறை தெரிவித்த கடிதங்களும்

42, கடன்கள் பெறப்பட்டதற்காக கடிதங்கள்

43, உரிய வேறு ஆவணங்கள்

44, நாளதுவரைபடுத்தி விதிமுறையாக பேணிவருகின்ற வரலாற்றுத் தாள்

45, அரச விடுதிகளில் வசிப்பதாக இருந்தால் வீட்டு வாடகை மின்சாரம் தொலைபேசி கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளதற்கான அறிக்கைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

විදුලි පණිවුඩ : "විශ්‍රාම වැටුප්" කොළඹ
தந்தி : "ஓய்வூதியம்" கொழும்பு
Telegrams : "PENSIONS" Colombo

දුරකථන / தொலைபேசி / Telephones } 2320316, 2421786, 2431305

ෆැක්ස් / பெக்ஸ் / Fax } 2342078

මගේ අංකය / எனது இல / My No. } பிஎன்/4042ச

ඔබේ අංකය / உமது இல / Your No. }

# විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව
# ஓய்வூதியத் திணைக்களம்
# DEPARTMENT OF PENSIONS

මාලිගාවත්ත මහලේකම් කාර්යාලය,
මාලිගාවත්ත,
කොළඹ 10.

மாளிகாவத்தை செயலகம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.

Maligawatte Secretariat,
Maligawatte,
Colombo 10.

දිනය / திகதி / Date } 2005.07-28

ஓய்வூதியத் திணைக்கள சுற்றறிக்கை இல.7/2005

சகல பிரதேச செயலாளர்களுக்கும்,

<u>விதவைகள், தபுதாரர், அநாதைகள் ஒய்வூதியத்திருத்தம் : 2004</u>

மேலுள்ள விடயம் தொடர்பாக முன்பு அனுப்பப்பட்ட சுற்றறிக்கை இல.6/2004, 2005.05.04ஆம் திகதியிடப்பட்ட விதவைகள் தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியம் தொடர்பானது.

1. விதவைகள், தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியம் பின்வரும் அடிப்படையில் திருத்தியமைக்கப்படல் வேண்டும். விதவைகள், தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியம் பெறும் பெண் ஊழியர் சேவையிலுள்ளபோது இறந்திருந்தால் அல்லது விதவைகள் தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியம் திருத்தியமைக்கப்பட்ட சட்டத்தின்படி ஓய்வு பெறவேண்டிய காலத்தின்முன் சேவையிலிருந்து ஓய்வு பெற்றிருந்தால் அல்லது அரசாங்க சேவையிலிருந்து ஸ்தாபன சட்டத்திற்கு உள்ளடங்காத காரணத்தின் நிமித்தம் ஓய்வு பெற்றிருந்தால் ஓய்வூதியமானது அவரது சேவைக்காலத்தின் அடிப்படையில், அல்லது 25 வருடங்களுக்குக் குறைவான ஓய்வூதியப் பிரேரணையில் உள்ளவாறு, குறித்த பெண் ஊழியரின் சேவைக்காலம் 25 வருடங்களுக்குக் குறைவாக அல்லது கட்டாய ஓய்வுகாலம் வரை சேவையில் ஈடுபட்டு மரணமடைந்திருந்தால் சேவைக்காலத்தின் அடிப்படையில் ஓய்வூதியம் கணிக்கப்படல் வேண்டும்.

2. 1981.07.02க்கு முன்பாக சேவையில் உள்ளபோது மரணமடைந்த ஊழியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய மீள்கணிப்பீடானது சுற்றறிக்கை 6/2004ல் உள்ளவாறு கணிக்கப்படல் வேண்டும்.

3. மேலும் அறிவிக்கப்படுவதாவது, வலது குறைந்தவர்களின் ஓய்வூதியமானது வழங்கப் படும்போது விதவைகள், தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய சட்டமானது சுற்றறிக்கை இல.6/2004இன்படி திருத்தியமைக்கப்படல் வேண்டும்.

கே.எ. திலகரட்ன
ஓய்வூதியப் பணிப்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දුරකථන / தொலைபேசி / Telephones: 2784323, 2786200/2784201, Ext. 234, 254, 255, 256
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: 011 2784323

තැපැල් ලිපිනය
அஞ்சல்முகவரி
POSTAL ADDRESS
තැ. පෙ. 1503, කොළඹ.
த. பெ. 1503, கொழும்பு.
P.O. Box 1503, Colombo.

මගේ අංකය / எமது இல / My No.: 11/01/ க / வி/ மு/
ඔබේ අංකය / உமது இல / Your No.: ..............................

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka
සහතික පත්‍ර ශාඛාව / சான்றிதழ் கிளை
Certificate Branch
දිනය / திகதி / Date : 2005.12.12

சகல அமைச்சுச் செயலாளர்கள்/பாராளுமன்றச் செயலாளர்,
முதலமைச்சுச் செயலாளர்கள்/ மாவட்டச் செயலாளர்கள்,
நீதிமன்ற நீதியரசர்கள்/ பிரதேசச் செயலாளர்கள்/ திணைக்களத்
தலைவர்கள்/பொலிஸ் மா அதிபர்,முப்படைத் தலைவர்கள்/மாகாணக்
கல்விப் பணிப்பாளர்கள்/வலயக்கல்விப் பணிப்பாளர்கள் சகல
கூட்டுத்தாபன மற்றும் சட்டபூர்வ சபைகளின் தலைவர்கள்
பணிப்பாளர்கள் மற்றும் ஏனைய நிறுவனத் தலைவர்கள்.

**<u>பழைய பெறுபேற்றுப் பதிவேடுகள் பயன்பாட்டிலிருந்து நீக்குவதன் பொருட்டு பரீட்சைப் பெறுபேறுகள் உறுதிப்படுத்தல்</u>**

1965 ஆம் ஆண்டுவரை க.பொ.த (சா.த), க.பொ.த. (உ.த) ஆகிய பரீட்சைகளின் பழைய பெறுபேற்று அட்டவணைகள் சிதைவடைந்துள்ளதால் பயன்பாட்டிலிருந்து நீக்குவதற்கான திட்டமொன்று நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

02. மேற்படி வருடங்களில் பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளில் இதுவரை பரீட்சைப் பெறுபேறு உறுதிப்படுத்தப்படாத 1965 ஆம் ஆண்டு உட்பட அதற்கு முன்னைய வருடங்களுக்குரிய பரீட்சார்த்திகளான சகல உத்தியோகத்தர்கள் ஊழியர்களின் பரீட்சைப் பெறுபேறு உறுதிப்படுத்தும்பொருட்டு எனது இல. 11/01, 2002.12.14 ஆம் திகதியிட்ட கடிதத்தின் அறிவுறுத்தல்களுக்கேற்ப பெறுபேறுகள் உறுதிப்படுத்துவதற்குரிய விண்ணப்பங்கள் 2006 ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் எனக்கு கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும்.

03. அவ்விண்ணப்பத்துடன் உரிய பரீட்சார்த்தியின் பெறுபேற்று அட்டவணையொன்றை சமர்ப்பிப்பது அத்தியவசியம் என்பதை கவனத்திற் கொள்ளவும்.

04. இத்திகதிக்குப் பின் பழைய வருடங்களுக்குரிய பெறுபேறுகள் உறுதிப்படுத்தப்படுவது சிரமமாகும் என்பதை தங்களது கவனத்திற்கு தர விரும்புகின்றேன்.

அநுர எதிரிசிங்க
பரீட்சை ஆணையாளர் நாயகம்.

අනුර එදිරිසිංහ
විභාග කොමසාරිස් ජනරාල්


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

My No.PN 4042 E
Department of Pensions,
Maligawatta, Colombo 10.
16.01.2004.

Pensions Department Circular No. 3/2004.

To all

Secretaries to Ministries,
Heads of Departments,
Chief Secretaries to Provincial Councils,
District Secretaries,
Divisional Secretaries and
Heads of all Local Authorities.

New method of calculation of Pensions.

Your attention is invited to pensions Department Circular No. 1/98 dated 10.03.1998 issued on the above subject.

2. Due to the revision of salaries in terms of Public Administration circular No. 15/2003 dated 30.12.2003, action should be taken to revise the pensions of those who retired from 02.01.2004 as per percentage table attached.

3. If there are instances where pension numbers and cheques for commuted gratuities have already been received from the Director of Pensions in respect of those officers who are expected to retire after 02.01.2004, action should be taken to obtain the arrears of commuted gratuity due by forwarding a revised pension application. In such cases, the pension number already assigned will have to be changed. Therefore, a separate request should also be made by a covering letter.

Sgd : Victor Samaraweera
Director of Pensions.

Copies to -

1. Secretary Ministry of Public Administration Management & Reforms.
2. Director General Budget.
3. Auditor General.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Percentage Table for computation of Pensions, of Pensioners retiring from 02.01.2004.

| Service | 25 Yrs. | | 25 Yrs. 6 Mths. | | 26 Yrs. | | 26 Yrs. 6 Mths. | | 27 Yrs. | | 27 Yrs. 6 Mths. | | 28 Yrs. | | 28 Yrs. 6 Mths. | | 29 Yrs. | | 29 Yrs. 6 Mths. | | 30 Yrs. | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Annual salary at retirement | Un Red. | Red. | Un Red. | Red. | Un Red. | Red. | Un Red. | Red. | Un Red. | Red. | Un Red. | Red. | Un Red. | Red. | Un Red. | Red. | Un Red. | Red. | Un Red. | Red. | Un Red. | Red |
| Less than 66841 | % 85 | % 75 | % 86 | % 76 | % 87 | % 77 | % 88 | % 78 | % 89 | % 79 | % 90 | % 80 | % 90 | % 81 | % 90 | % 82 | % 90 | % 83 | % 90 | % 84 | % 90 | % 85 |
| 66841-68100 | 84 | 74 | 85 | 75 | 86 | 76 | 87 | 77 | 88 | 78 | 89 | 79 | 90 | 80 | 90 | 81 | 90 | 82 | 90 | 83 | 90 | 84 |
| 68101-72120 | 83 | 73 | 84 | 74 | 85 | 75 | 86 | 76 | 87 | 77 | 88 | 78 | 89 | 79 | 90 | 80 | 90 | 81 | 90 | 82 | 90 | 83 |
| 72121-74760 | 82 | 72 | 83 | 73 | 84 | 74 | 85 | 75 | 86 | 76 | 87 | 77 | 88 | 78 | 89 | 79 | 90 | 80 | 90 | 81 | 90 | 82 |
| 74761-78720 | 81 | 71 | 82 | 72 | 83 | 73 | 84 | 74 | 85 | 75 | 86 | 76 | 87 | 77 | 88 | 78 | 89 | 79 | 90 | 80 | 90 | 81 |
| 78721-95400 | 80 | 70 | 81 | 71 | 82 | 72 | 83 | 73 | 84 | 74 | 85 | 75 | 86 | 76 | 87 | 77 | 88 | 78 | 89 | 79 | 90 | 80 |
| 95401-127500 | 79 | 69 | 80 | 70 | 81 | 71 | 82 | 72 | 83 | 73 | 84 | 74 | 85 | 75 | 86 | 76 | 87 | 77 | 88 | 78 | 89 | 79 |
| 127501-139500 | 78 | 68 | 79 | 69 | 80 | 70 | 81 | 71 | 82 | 72 | 83 | 73 | 84 | 74 | 85 | 75 | 86 | 76 | 87 | 77 | 88 | 78 |
| 139501-150300 | 77 | 67 | 78 | 68 | 79 | 69 | 80 | 70 | 81 | 71 | 82 | 72 | 83 | 73 | 84 | 74 | 85 | 75 | 86 | 76 | 87 | 77 |
| 150301-206520 | 76 | 66 | 77 | 67 | 78 | 68 | 79 | 69 | 80 | 70 | 81 | 71 | 82 | 72 | 83 | 73 | 84 | 74 | 85 | 75 | 86 | 76 |
| Over 206521 | 75 | 65 | 76 | 66 | 77 | 67 | 78 | 68 | 79 | 69 | 80 | 70 | 81 | 71 | 82 | 72 | 83 | 73 | 84 | 74 | 85 | 75 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல 15/2003.

எனது இல தா1/2/1/9
அரசாங்க நிர்வாக, முகாமைத்து
மறுசீரமைப்பு அமைச்சு,
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07
2003 டிசெம்பர் மாதம் 30 ஆம் தி

அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

## அரச அலுவலர்களின் சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியங்களை திருத்துதல்- 2004.

1997-11-12 ஆந் திகதிய 2/97 (111) இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவாக செலுத்தப்படுகின்ற அரச அலுவலர்களின் சம்பளங்களை (படிகள் அற்ற திரட்டிய சம்பளம்) 10% அல்லது மாதமொன்றுக்கு ரூபா 1250/= ஆகிய இரண்டில் கூடிய அளவினால் 2004-01-01 ஆம் திகதி முதல் கூட்டுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

02 2004-01-01 ஆந் திகதி முதல் நடைமுறைப்படும் தேறொத்த புதிய சம்பள அளவுத் திட்டங்கள் இணைப்பு 1இல் காட்டப்பட்டுள்ளன. சம்பளங்களை மீளமைக்கும் அடிப்படையான 2003-12-31 ஆந் திகதிக்கு உரிய சம்பளத்தை இருக்கின்ற சம்பளத்தினால் புதிய சம்பளத்திற்கு மீளமைத்தலானது படிநிலை அடிப்படையில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

03 அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் இச்சுற்றறிக்கையின் இணைப்பு 1 இல் குறிப்பிட்டுள்ள சம்பள அளவுத் திட்டங்களைப் பார்க்க கூடிய சம்பளம் வழங்கப்பட்டுள்ள அமைச்சுக்கள்/திணைக்களங்களின் அலுவலர் பிரிவுகள் குறித்த சம்பளங்களை தொடர்ந்தும் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் இச்சுற்றறிக்கையின் கீழ் அந்தச் சம்பளங்களை மீளமைத்தலாகாது.

04 (அ) 2000-09-07 ஆந் திகதிய 15/2000 இலக்க, 2001-10-16 ஆந் திகதிய 24/2001 இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகளின் கீழ் செலுத்தப்படுகின்ற ஓய்வூதியமற்ற இடைக்காலப் படிகளை தொடர்ந்தும் செலுத்த வேண்டும். 15/2000 இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் கீழ் செலுத்தப்படுகின்ற 10% படியையும் 2004-01-01 ஆந் திகதி தொடக்கம் இச் சுற்றறிக்கை மூலம் திருத்தப்படுகின்ற சம்பளத்தின் பேரில் கணிப்பீடு செய்ய வேண்டும்.

(ஆ) 2/97(111) ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் கீழ் செலுத்தப்படுகின்ற படிகளையும், அதன் பின்னராக வெளியிடப்பட்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் கீழ் செலுத்தப்படுகின்ற மற்றைய படிகளையும் தொடர்ந்து செலுத்த வேண்டும்.

(இ) சம்பளத்தில் 1/3 படியாக தற்போது செலுத்தப்படுகின்ற நிறுவனங்களைச் சேர்ந்த பணிற்றொகுதிகளுக்கு 2003-12-31 ஆம் திகதி அல்லது அதற்கு முன் பெறப்பட்ட சம்பளத்தின் அடிப்படையில் கணிப்பீட செய்து குறித்த படியை தொடர்ந்தும் செலுத்த வேண்டும்.

(ஈ) அரச அலுவலரொருவர் 1997-01-01 ஆந் திகதிக்கு பின் மேலே 4(அ) ,(ஆ) மற்றும் (இ) இன் கீழ் குறிப்பிட்டுள்ள படிகளை தவிர வேறு படியொன்றை அல்லது படியொன்றின் அதிகரிப்பை பெற்றிருப்பின் அத்தகைய படிகளை அல்லது கூட்டிப்பெற்றுக்கொண்ட படிகளை இச் சுற்றறிக்கையின் கீழ் காட்டப்பட்ட சம்பளத்தில் இருந்து கழிக்க வேண்டும்.

05 இணைந்த படிகள்:
2004 புதிய சம்பளங்களில் பின்வரும் திருத்திய சம்பள படிநிலைகளின் பேரில் இணைந்த படிகளை செலுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2004 புதிய சம்பளங்கள் — இணைந்த படி

| 2004 புதிய சம்பளங்கள் | இணைந்த படி |
|---|---|
| ரூபா 57,720/= மற்றும் அதற்குக் குறைந்த | ரூபா 150.00 |
| ரூபா 57,721/= இருந்து ரூபா 81,300/=வரை | ரூபா 180.00 |
| ரூபா 81,301/= இருந்து ரூபா 133,440/= வரை | ரூபா 230.00 |
| ரூபா. 133,441/= மற்றும் மேற்பட்ட | ரூபா 280.00 |

06 விதவைகள் அனாதைகள் ஓய்வூதியங்கள் மற்றும் தபுதாரர் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை அறவிடல்.

(அ) வி.அ.ஒ.திட்டத்திற்கு உதவுதொகை செலுத்தும் அளவுகளை 1997–11–12 திகதிய 2/97(111) இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள வரையறைகளுக்கு அமைவாக திருத்தப்பட்ட சம்பளத்தின் பேரில் கணிப்பீடு செய்ய வேண்டும்.

(ஆ) 2003–01–01 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் சேர்த்துக்கொள்ளப்பட்ட அரச அலுவலர்களிடமிருந்து கொடுத்துதவும் ஓய்வூதியத்திட்டத்திற்கு அறவிடப்படும் உதவுதொகை அளவுகள் இணைப்பு 1இல் குறிப்பிட்டுள்ள திருத்திய சம்பளத்தின் 8% ஆகும்.

07 புகைவண்டி பிரயாணச் சீட்டும் விடுமுறை பிரயாணங்களும்.

பிரயாணம் செய்ய முடிஉமான வகுப்பு பின்வருமாறு தீர்மானிக்கப்படும்.

வகுப்பு 1 – ஆண்டொன்றுக்கு ரூபா 100,440/= அத்துடன் அதைப்பார்க்க கூடிய சம்பளம் பெறும் அலுவலரொருவர்.

வகுப்பு 2 – ஆண்டொன்றுக்கு ரூபா 77,340/= அத்துடன் அதைப்பார்க்க கூடிய சம்பளம் பெறும் அலுவலரொருவர்.

வகுப்பு 3 – ஏனைய சகலரும்.

08 அரச அலுவலர்களை இனம் பிரித்தல்.

(அ) பதவிநிலை அலுவலர்:– 2004 திருத்திய சம்பளங்களின் தொடக்க ஆண்டுச் சம்பளம் 89,160/= ரூபா அல்லது அதைப்பார்க்க கூடியதும் ஆண்டு வேதன வேற்றம் 1560/= அல்லது அதைப்பார்க்க கூடிய ஆண்டு சம்பள அளவுத் திட்டத்திற்கு உரித்துடையதுமான அலுவலர்.

(ஆ) கீழ் அலுவலர்:– 2004 திருத்திய சம்பளங்களின் தொடக்க ஆண்டுச் சம்பளம் 62,880/= ரூபா அல்லது அதைப்பார்க்க கூடிய சம்பள அளவுத்திட்டத்திற்கு உரித்துடைய எனினும் மேலே (அ) வில் காட்டப்பட்டுள்ள தொகுதியை சேராத அலுவலர்.

(இ) கனிஷ்ட ஊழியர்:– 2004 திருத்திய சம்பளங்களில் தொடக்க ஆண்டுச் சம்பளம் 62,879/= ரூபா அல்லது அதைப்பார்க்க குறைந்த சம்பளத்திற்கு உரித்துடைய அலுவலர்.

09 நாட் சம்பளம்.

நாட் சம்பளங்கள் இதன் இணைப்பு 11 இல் காட்டப்பட்டுள்ளவாறு செலுத்த வேண்டும்.

10 ஓய்வுபெற்ற பின் ஓய்வுபெறும் போது பெறப்பட்ட சம்பளத்தின் பேரில் மீளச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அலுவலர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றுவதாக கருதப்படுவதுடன் ஒப்பந்தக்கால எல்லைக்குள் திருத்தப்பட்ட சம்பளத்திற்கு உரித்துடையவர் ஆகமாட்டார்கள். எனினும் 2003–01–03 ஆந் திகதிய 1/2003 இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் 14 ஆம் பந்தியின் கீழ் அவர்கள் திருத்திய ஓய்வூதியம் பெறுவதற்கு தகுதி உடையவர்கள் ஆவர்.

11 அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள் மற்றும் மாகாண சபைகளின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்களைச் சேர்ந்த அலுவலர்கள் பின்வரும் வரையறைகளுக்கு கீட்படுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) 13/99 இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை மற்றும் முகாமைச்சேவை சுற்றறிக்கை 10 இன் 4:1 (ஆ) பந்தியின் கீழ் சம்பள மற்ற விடுமுறைகளின் பேரில் கருத்திட்டங்களில் சேவையாற்றுகின்ற அலுவலர்களுக்கு இச் சம்பள அதிகரிப்பு ஏற்புடையதாகாது.

(ஆ) அரச சேவைக்கு புறம்பாக ஒப்பந்த அடிப்படையில் கருத்திட்டங்களுக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ள அலுவலர்களுக்கும் இச்சுற்றறிக்கை ஏற்பாடுகள் ஏற்புடையதாகாது.

12 இச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள மீளமைக்கப்பட்ட சம்பளத்தை பார்க்க கூடிய விசேட சம்பளத்தின் பேரில் ஒப்பந்த அடிப்படையில் மீளச் சேவையில் ஈடுபடுத்தியுள்ள அல்லது சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ள, அலுவலர்களுக்கு இச் சுற்றறிக்கை ஏற்பாடுகள் ஏற்புடையதாகாது.

13 இவ் அறிவுறுத்துரைகளை பிழையாக வரைவிலக்கணம் கூறல் காரணமாகவோ கடிதங்களை தயாரிக்கும் போது அல்லது கணிப்பீடு செய்யும் போது ஏற்படும் வேறு ஏதேனும் தவறுதல் காரணமாகவோ, எவரேனுமொரு அலுவலருக்கு கூடுதலாக பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவ்வாறு கூடுதலாக செலுத்தி உள்ள பணத்தொகைகளை திருப்பி செலுத்த, வேண்டுமென்ற கட்டுப்பாட்டுக்கு அந்த அலுவலர் ஆளாவார் என்பதை குறித்துக்கொள்ளவும்.

14 ஓய்வூதியத் திருத்தம்

2003-12-31 ஆந் திகதி அல்லது அதற்கு முன் ஓய்வுபெற்றுள்ள ஓய்வுபெற்றவர்களின் தற்கால அடிப்படை ஓய்வூதியத்திற்கு (படிகள்அற்ற) 2004-01-01 திகதி முதல் 10% அதிகரிப்புகளை கூட்டி செலுத்த வேண்டும். 2000-09-07 திகதி 15/2000 இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் கீழ் செலுத்தப்படும் 10% படியையும் அடிப்படை ஓய்வூதியத்தின் பேரில் கணிப்பீடு செய்ய வேண்டும்.

15 அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள்

அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும். நியதிச்சட்ட சபைகளுக்கு இச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள சம்பள அதிகரிப்புகளை எவ்வாறு ஏற்புடையதாக்கிக் கொள்ளலாம் என்பது பற்றி பொதுத் திறைசேரியின் மூலம் வேறான அறிவுரைகள் வழங்கப்படும்.

16 நிதி ஏற்பாடு

செலவு விடயம் 1001- சம்பளங்கள் வேதனங்களின் கீழான ஏற்பாடுகளிலிருந்து இச் சம்பள அதிகரிப்பை செலுத்த வேண்டும். மேலதிக ஏற்பாடுகளுக்கான ,விண்ணப்பங்களை 2004 யூன் மாதத்திற்கு பின் தேசிய வரவு செலவு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

17 பொதுத் திறைசேரியின் ஒத்திசைவுடன் இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது.

ஒப்பம் எஸ்.சி.மான்னப்பெரும,
செயலாளர்,
அரசாங்க நிர்வாக, முகாமைத்துவ
மறுசீரமைப்பு அமைச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இலIAPA/P1/08/18
அரசாங்க நிர்வாக முகாமைத்துவ,
மறுசீரமைப்பு அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07
2002.10. 01.

சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்

**ஓய்வூதிய கொடை வழங்கலுக்கும் மாற்றிய பணிக்கொடையை வழங்கலுக்குமான புதிய முறை**

மேற்படி விடயம் தொடர்பாக வெளியிடப்பட்ட 1995.06.07 ஆந் திகதிய 16/95 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையுடன் தொடர்பானதாகும்.

02. அந்தச் சுற்றறிக்கையின் மூலமாக வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின்படி பின் குறிப்பிடப்படும் காரணங்களினால் ஓய்வு பெறச் செய்வதற்கான ஓய்வூதியக் கணக்கிடுதலும் மாற்றிய பணிக்கொடையை வழங்கலும் தற்போது தங்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

01. 60 வயதில் ஓய்வுபெறச் செய்வித்தல்.
02. 55-60 இற்கு இடைப்பட்ட வயதில் ஓய்வு பெறச் செய்வித்தல்
03. 1990.10.18 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 44/90 இன் கீழ் ஓய்வு பெறச் செய்வித்தல்
04. வயதின் காரணமாக ஓய்வு பெறும் முப்படையின் அங்கத்தவர்களின் மாற்றிய பணிக்கொடையை செலுத்துதலும், சேவை ஓய்வூதியத்தை கணக்கிடுதலும்
05. பயங்கரவாத காரணங்களின் பேரில். இறந்தவர்களைத் தவிர ஏனைய மரண பணிக்கொடைகளை செலுத்துதல்
06. மருத்துவ காரணங்களின் பேரில் வழங்கப்படும் பணிக்கொடையை தவிர ஏனைய சேவைகளின் பணிக்கொடைகளை செலுத்துதல்.

03. ஓய்வூதியம் செலுத்துதலை துரிதப்படுத்தும் நோக்கத்துடன் பின் குறிப்பிடப்படும் காரணங்களின் பேரில் செய்யப்படும் ஓய்வு பெறும் அலுவல்களையும் 2002.10.15 ஆந் திகதிக்கு பரவலாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

3.1 சிவில் ஓய்வூதியச் சம்பள பிரமாணக் குறிப்பின் / ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் கீழ் சம்பந்தப்பட்ட பிரிவு

| | |
|---|---|
| 1. நீதித்துறை அலுவலர்களினதும் சட்டத்துறை அலுவலர்களினதும் ஓய்வு பெறுதல்கள் | 2 மற்றும் 25 |
| 11. பதவிகளை இல்லாதொழித்தலின் பேரில்/ திணைக்களங்களை இல்லாதொழித்தலின் பேரில் ஓய்வு பெறச் செய்வித்தல் | 2 மற்றும் 7 |
| 111. மருத்துவக் காரணங்களின் பேரில் ஓய்வு பெறுதல் | 2 மற்றும் 14 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1V. தாதிமார்களுக்கும், ஆசிரியர்களுக்குமாக 50 வயதை அடையும் திகதியில் அல்லது 20 வருட சேவைக்காலம் பூர்த்தியாகும் திகதி ஆகிய இரண்டில் முன்னராக அமையும் திகதியில் ஓய்வு பெறல் 2 மற்றும் 14

V. பொலிஸ் நஸ்டஈடு

V1. நாளாந்த சேவை பணிக்கொடை 29

V11. உப அஞ்சல் அதிபதி உடபுகையிரத நிலைய அதிபதி பணிக்கொடை

3.2 1981 படையினரின் ஓய்வூதிய பிரமாணக் குறிப்பின் கீழ்

1. மருத்துவ காரணங்களின் பேரில் ஓய்வு பெறச்செய்வித்தல்
11. மருத்துவ காரணங்களின் பேரில் சேவை பணிக்கொடையை செலுத்துதல்
111. இயலாமை ஓய்வூதியம்
1V. விசேட நஸ்டஈடு

04. இவ் ஓய்வூதிய நலன்களுக்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அந்தந்த சேவைகளுக்குரிய படிவங்களினால் ஓய்வூதிய இலக்கமொன்றைப் பெற்றுக் கொள்ள வேண்டியதுடன் ஓய்வூதிய கொடையை கணக்கீடு செய்து பணிக்கொடையை செலுத்தியதன் பின்பு மாதாந்த ஓய்வூதியத்தை செலுத்துவதற்காக ஓய்வூதிய கடித கோவையை நபரின் வதிவிடத்தை குறிப்பிட்டுள்ள பிரதேச செயலாளர் அலவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும்,

05. மேற்படி 3:1 பந்தியில் குறிப்பிடப்பட்ட ஓய்வு பெறச் செய்தல்களுக்காக திருத்தப்பட்ட "அ" படிவத்தையும் (இணைப்பு 1) 3:2 பந்தியில் குறிப்பிட்டுள்ள ஓய்வு பெறச் செய்தலுக்காக இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் சம்பந்தப்பட்ட படிவத்தையும் (இணைப்பு 11 ) பூர்த்தி செய்து 04 பிரதிகளை ஓய்வூதியப் பணிப்பாளருக்கு சமர்ப்பித்து இலக்கமொன்றை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்,

06. இம் முறையை செயற்படுத்துவதற்கு தேவையான மேலதிக மதியுரைகள் ஓய்வூதியப் பணிப்பாளரினால் வழங்கப்படும்.

07. திறைசேரியின் இணக்கத்துடன் இச் சுற்றறிக்கையை வெளியிடப்பட்டது.

ஒப்பம் டிட்டா விமலசிறி
செயலாளர்,
அரசாங்க நிர்வாக, முகாமைத்துவ,
மறுசீரமைப்பு அமைச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுநிருப இலக்கம்: 97/13 1997.08.08

சகல பிரதான அமைச்சின் செயலாளர்கள்,

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,

சகல மாகாண பொது நிருவாக ஆணைக்குழுச் செயலாளர்கள்,

சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,

சகல வலயப் பொறுப்பு பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு,

1994.10.06 ஆந் திகதி வரை சேவையிலீடுபட்டு ஓய்வு பெற்ற பட்டதாரி ஆசிரியர்களின் சம்பளங்களி னதும் ஓய்வூதியச் சம்பளங்களினதும் திருத்தம்.

1995.04.03 ஆந் திகதிய 865/3 ஆம் இலக்கம் கொண்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சிறப்பு வர்த்தமானியின் மூலம் அறிக்கை செய்த இலங்கை ஆசிரியர் சேவை ஒழுங்கு விதி அமைப்புகள், பட்டதாரி ஆசிரியர்களுக்குப் பொருந்தக்கூடிய முறையில் 1997.03.11 ஆந் திகதிய 966/5 ஆம் இலக்கம் கொண்ட அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திருத்தத்தின் மூலம் மீண்டும் திருத்தியமைக்கப்பட்டது. அந்த திருத்தத்தின் பிரகாரம் எனது இல.97/5 உடைய தும்1997.04.30 ஆந் திகதி கொண்டதுமாய சுற்று நிருபத்திலும், அதைத் தொடர்ந்து வழங்கப்பட்ட 97/5/1 ஆம், 97/5/11 ஆம் இலக்க சுற்றுநிருபங்களின் பிரகாரம் 1994.10.06 ஆந் திகதி வரை சேவைக் காலத்தைக் கணக்கிட்டு புள்ளி முறைப்படி எல்லாப் பட்டதாரி ஆசிரியர்களையும் இலங்கை ஆசிரியர் சேவையில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது.

02. தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள பட்டதாரி ஆசிரியர்களை, அந்த அறிவுறுத்தலின் மீது இலங்கை ஆசிரியர் சேவையில் சேர்த்துக் கொள்ள வேண்டும். 1994.10.06 ஆந் திகதி வரை சேவையிலீடுபட்டிருந்து ஓய்வு பெற்ற எல்லாப் பட்ட தாரி ஆசிரியர்களுக்கும் 1997.03.11 ஆந் திகதிய இலக்கம் 966/5 கொண்ட வர்த்தமானி அறிக்கையும், அதனைத் தொடர்ந்து என்னால் வழங்கப்பட்ட சுற்றுநிருபங் களின் பிரகாரம் ஆசிரியர் சேவையில் சேர்த்துக் கொண்டு, அதன்படித் தீர்மானிக்கப் பட்ட சம்பளங்கள் வழங்கப்பட வேண்டும்.

03. மேலும் பொதுப் பட்டதாரிகள் அல்லது சிறப்புப் பட்டத்தோடு சித்தி பெற்ற ஆசிரியர்களுக்கு அமைப்புத் திருத்தத்தினாலும், மேலே குறிக்கப்பட்ட சுற்றுநிரு பங்களின் மூலம் வழங்கப்பட்ட சிறப்புப் பட்டதாரிகளுக்குரிய புள்ளிகளுக்கிணைய இலங்கை ஆசிரியர் சேவையில் அவர்களுக்கு உரிய தரத்தையும் பிரிவையும் உறுதிப்படுத்தி 1994.10.06 ஆந் திகதிக்குரிய, தரத்திற்கும் பிரிவுக்கும் இணையவும் சம்பளத் திட் டத்தை முடிவு செய்து ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். 1997.01.01 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஓய்வூதியச் சம்பளமும் பணிக்கொடையும் மட்டும் இதன் பிரகாரம் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதைக் குறித்துக் கொள்ளவும்.

சேனாநாயக்க உபசேன
மேலதிகச் செயலாளர் (நிருவாகம்)
கல்வி, உயர்கல்விச் செயலாளருக்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ඔබේ අංකය
உமது இல.
Your No. } ..................................

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos

අමාත්‍ය
அமைச்சர்
Minister } 864807
869325

Fax : 869326

ලේකම්
செயலாளர்
Secretary } 864812

කාර්යාලය
அலுவலகம்
Office } 865141 — 59

මගේ අංකය
எனது இல.
My No. } 4/ஆதா/1/3099,
பல்வகை 111 ஆம் கடி

අධ්‍යාපන හා උසස් අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி அமைச்சு
Ministry of Education and Higher Education
'ඉසුරුපාය' ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ,
බත්තරමුල්ල.
'இசுருபாய', ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,
பத்தரமுல்லை.
'ISURUPAYA' SRI JAYAWARDHANAPURA KOTTE,
BATTARAMULLA

දිනය
திகதி
Date } 1997.08.08.

சுற்றறிக்கை இலக்கம்: 97/13.

சகல முதலமைச்சுக்களின் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயப் பொறுப்புப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள்,

**1994.10.06 திகதிவரை சேவையாற்றி ஓய்வுபெற்றுள்ள பட்டதாரி ஆசிரியர்களின் சம்பளமும் ஓய்வூதியமும் திருத்தியமைக்கப்படல்.**

இலக்கம் 865/3 கொண்ட 1995.04.03 திகதியுடைய இலங்கைச் சனநாயகச் சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்டுள்ள இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக்குறிப்பு பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஏற்றவகையில் அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள திருத்தங்களின் மூலம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. அத்திருத்தங்களின்படி எனது இலக்கம் 97/5 கொண்ட 1997.04.30 திகதிய சுற்றறிக்கையின்படியும் அதைத் தொடர்ந்த வெளியிடப்பட்டுள்ள 97/5/1 ஆம் 97/5/11 ஆம் இலக்கச் சுற்றறிக்கைகளின் படியும் 1994.10.06 திகதி வரைக்குமான சேவைக்காலத்தைக் கணிக்கும் புள்ளிகளின் அடிப்படையில் சகல பட்டதாரி ஆசிரியர்களையும் இலங்கை ஆசிரியர் சேவைக்கு உள்ளெடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

02. தற்போது சேவையிலுள்ள பட்டதாரி ஆசிரியர்களை அறிவுறுத்தல்களின்படி இலங்கை ஆசிரியர் சேவைக்கு உள்ளெடுக்கப்படுவதுடன் 1994.05.06 திகதி வரை சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ள சகல பட்டதாரி ஆசிரியர்களையும் 1997.03.11 திகதியையும் 966/5 இலக்கத்தையும் கொண்ட வர்த்தமானி அறிவுறுத்தலின்படியும் அதைத் தொடர்ந்து என்னால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளின் படியும் ஆசிரியர் சேவைக்கு உள்ளெடுத்து அதற்கேற்ப ஓய்வூதியம் கணிக்கப்பட்டு வழங்கப்பட வேண்டும்.

03. மேலும் சாதாரண பட்டத்தில் அல்லது விசேட பட்டத்தில் வகுப்புச சித்தியுடன் சித்தியடைந்துள்ள ஆசிரியர்களுக்குத் திருத்தப்பட்ட பிரமாணக் குறிப்பு மூலமாகவும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள சுற்றுநிருபங்கள் மூலமாகவும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள சிறப்புப் பட்டதாரிகளுக்குரிய புள்ளிகளின் அடிப்படையில் இலங்கை ஆசிரியர் சேவையில் அவர்களுக்குரிய வகுப்பையும் தரத்தையும் நிச்சயப்படுத்தி 1994.10.06 திகதியில் உரித்தாகும் வகுப்பிலும் தரத்திலும் படி சம்பள நிலைகளைத் தீர்மானித்து ஓய்வூதியம் பெற்றுக் கொடுக்க வேண்டும். 1997.01.01 திகதிக்கு முன்பு ஓய்வுபெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஓய்வூதியத்தையும் பணிக்கொடையையும் இந்த அடிப்படையில் பெற்றுக்கொடுக்க வேண்டுமென்பதை மேற்கொண்டும் குறித்துக்கொள்க.

ஒப்பம்: சேனாநாயக்க உபசேன,
மேலதிகச் செயலாளர் (நிர்வாகம்),
கல்வி, உயர் கல்வி அமைச்சின்
செயலாளருக்காக.

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 13/2001 (01) எனது இல: ஜுஏபிஎ/11/8/19

அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு.
24 072005 ஜூலை ஆந் திகதி

அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,
மாவட்டச் செயலாளர் மற்றும்,
பிரதேசச் செயலாளர்களுக்கும்

2001 ஆண்டு 2 ஆம் இலக்க தபுதாரர் அனாதைகள் ஓய்வூதியத் (திருத்த) சட்டம்
அரச பெண் அலுவலர்களின் விருப்புத் தெரிவிப்பு.

மேற்படி குறித்த விடயம் தொடர்பாக 2001.07.04 ஆந் திகதிய 13/2001 ஆம் இலங்கை அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் பால் கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. குறித்த சுற்றறிக்கையில் 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விருப்புத் தெரிவிக்கும் இறுதித் திகதியை 2005.12.31 ஆந் திகதி வரை நீடிக்க அரசு தீர்மானித்துள்ளது.

03. குறித்த சுற்றறிக்கையின் ஏனைய ஏற்பாடுகள் அவ்வாறே வலுவில் இருக்கும்.

ஒப்பம்/ டீ. திசாநாயக்க,
செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister — 2784832, 2784807, 2785617

ලේකම් / செயலாளர் / Secretary — 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office — 2785141-50, Fax: 2784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

"ඉසුරුපාය"
බත්තරමුල්ල.
"இசுருபாய"
பத்தரமுல்ல.
"Isurupaya"
Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. ..............

ඔබේ අංකය / உமது இல. / Your No. ..............

දිනය / திகதி / Date — 2005 May 27

சுற்றுநிருப இலக்கம் - 2005/22

மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
வலயக கல்விப் பணிப்பாளர்கள்,
அதிபர்கள்.

## கல்வி அமைச்சிலும், மாகாணத்திலும் முகாமைத்துவ தர உறுதிப்பாட்டு அலகின் கடமைப் பொறுப்புக்கள்

இலங்கையின் கல்விமுறைமையில் அளவுரீதியான அபிவிருத்திக்குச் சமமாக பண்புசார் தன்மையும் மேலும் விருத்தியடைய வேண்டியது அவசியமென்பது யாவரும் ஏற்றுக் கொள்ள வேண்டிய முக்கிய விடயமாகும். தேசிய கல்வி மறுசீரமைப்பின்படி பாடசாலையின் விடயதானம் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளின் மூலம் மாணவர்களிடம் விருத்தியடைய வேண்டிய தகைமைத்திறன் விருத்தி அடையும் அளவே அளவுரீதியான கல்வியின் பண்புசார் தன்மையை தீர்மானிக்கும். தனி நபரின் விருத்தி தேசிய அபிவிருத்திக்கோ அல்லது சர்வதேசரீதியில் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கோ கல்விச் செயற்பாடுகளின் பெறுபேறு (Outputs) மற்றும் தகைமைத்திறன்களில்தான் (Competences) தங்கியுள்ளது.

கல்வித் துறையின் முக்கிய சேவை பெறுநரான மாணவர்களிடத்தே இத்தகைமைத் திறன்களை விருத்தி செய்வதற்கான உள்ளீடுகளாக (Inputs) பயன்படுத்தப்படும் ஆசிரியர் , ஆசிரிய ஆலோசகர், அதிபர், ஆசிரிய கல்வியியலாளர், கல்வி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட சகல கல்விசார், கல்விசாரா ஆளணியினரும் தமது திறமைக்கேற்ப வினைத்திறமையுடன், பயன்தரத்தக்க முறையில் கருமமாற்ற தகைமைத்திறன் அவசியமாகும். பௌதீக உள்ளீடுகளாக பயன்படுத்தப்படும் கட்டடங்கள், மரத் தளபாடங்கள், நானாவித உபகரணங்கள், கணணி, புத்தகங்கள் ஆகியவற்றிலும் பண்புசார்பான குறித்த தர உறுதிப்பாடு இருக்க வேண்டும். இந்த சகல உள்ளீடுகளையும் பயன்படுத்தி கல்வியின் நோக்கத்தை அடைவதற்காக கையாளப்படும் முகாமைத்துவச் செயற்பாடுகளிலும் தர உறுதிப்பாடு இருக்க வேண்டும்.

இத்துறையின் உற்பத்தியான மாணவர் தேர்ச்சித்திறனும், மனிதவள உள்ளீடுகளான பல்வேறு மட்டத்தில் உள்ளவர்களது தகைமைத்திறன்களும், பௌதிகத் தேவைகளுக்கான உள்ளீடுகளும், முகாமைத்துவச் செயற்பாடுகளின்போது இருக்க வேண்டிய பண்புகளும் என்பன பூரண தரம் (Total quality) எனக் கருதப்படும். இத்துறையின் தர உறுதிப்பாடாகவும் இதனைக் கொள்ளலாம்.

13 வது அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் 111 வது அத்தியாயத்தின்படி கல்வித்துறை சம்பந்தமான செயற்பாடுகள் பல மாகாணங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இருந்தும் கல்வியின் தர விருத்தி தேசிய மட்டத்தில் நடைமுறைப்படுத்துதல் சம்பந்தமான அதிகாரங்களும் பொறுப்புக்களும் 111 வது திருத்தத்தின் 2 ஆ பிரிவின்படி கல்வி அமைச்சுக்குரியதாகும். இந்நாட்டின் பொதுவான விடயதானம், பொதுப்பரீட்சை, விளையாட்டு மற்றும் அழகியற் பிரிவுகளின் போட்டிகள் உட்பட பாடவிதானம் சம்பந்தமான பலவித செயற்றிட்டங்களும் தேசிய மட்டத்தில் செயற்படுத்தப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனடிப்படையில் தேசிய மட்டத்தில் கல்வியில் தரவிருத்தியை நடைமுறைப்படுத்தல் மற்றும் அதன் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக விசேட பிரிவொன்று கல்வி அமைச்சில் இருக்க வேண்டுமென்பதால் அமைச்சரவையின் அனுமதியுடன் 2001. ஜனவரி மாதம் 15 ஆம் திகதி மதிப்பீட்டுக்கும் தர உறுதிப்பாட்டுக்குமான அலகு ஆரம்பிக்கப்பட்டு, மீண்டும் அமைச்சரவையின் அனுமதியுடன் 2004.01.15 ஆம் திகதியிலிருந்து முகாமைத்துவ தர உறுதிப்பாட்டு அலகு என ஆழமான கருமங்களை கொண்ட பிரிவாக மாற்றம் செய்யப்பட்டது. இப்பிரிவினால் பின்வரும் கருமங்கள் ஆற்றப்படுகின்றன.

1. கல்வித்துறையின் சகல கல்விசார், கல்விசாரா அணியினரிடம் இருக்க வேண்டிய தகைமைத்திறன்களை இனங்கண்டு அவற்றை நிர்மாணித்து, அதை கல்வித்துறைக்கு அறிமுகப்படுத்தல்.
2. பௌதீக வளங்கள் தொடர்பாக, பல்வேறு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள் மூலம் தயாரிக்கப்பட்ட தொழில்நுட்ப தரம் மற்றும் தகவல்களை சேகரித்தல் அல்லது விசேட நிபுணர்களின் உதவியுடன் தயாரித்தல் மற்றும் அறிமுகப்படுத்தல்
3. பாடசாலைகளின் சுய அபிவிருத்திக்கான பண்புசார் விருத்தி தொடர்பாக முகாமைத்துவச் செயற்பாடுகளை பாடசாலைகளுக்கு அறிமுகப்படுத்தும் திட்டங்களை செயற்படுத்தல்
4. கல்வி அமைச்சின் கீழுள்ள தேசிய பாடசாலைகள், விசேட அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் மூலம் பராமரிக்கப்படும் நவோத்யா மற்றும் மத்திய மகா வித்தியாலயங்கள் தொடர்பாக பண்புசார் விருத்திக்கான செயற்பாடுகளை இவ்வலகின் மூலம் முன்னெடுத்தல், இதற்காக மாகாண உத்தியோகத்தர்களின் உதவியை பெற்றுக் கொள்ளல், மற்றும் தேவையான இணைப்புகளை பேணுதல்
5. பாடசாலைகளின் சுய அபிவிருத்திக்குத் தேவையான ஆழமான உள்வாரி மதிப்பீட்டுச் செயற்றிட்டத்திற்கு பயன்படுத்துவதற்காக மதிப்பீட்டு உபகரணங்களை அறிமுகப்படுத்தல்
6. அமைச்சின் உத்தியோகத்தர்களினால் பாடசாலைகளின் வெளிவாரி மதிப்பீட்டுக்காக பயன்படுத்தப்படும் மதிப்பீட்டு உபகரணத் தொகுதிகளை தயாரித்து, மதிப்பீடுகளை கிரமமாக மேற்கொள்ளல்
7. அமைச்சின் கீழுள்ள பல்வேறு நிறுவனங்களினதும் செயற்பாடுகளை மதிப்பிடுவதற்காக நிபுணர்களின் உதவியுடன், தர அளவுகள்/மாதிரியைத் தயாரித்து மதிப்பீட்டை மேற்கொள்ளல்
8. மாகாணங்களிலும் மேற்கூறப்பட்ட செயற்பாடுகளை கிரமமாக மேற்கொள்ள அமைச்சின் முகாமைத்துவ தர உறுதிப்பாட்டு அலகின் வழிகாட்டலுடன் மற்றும் தொடர்பாடலின் கீழ் தொடர்ந்து செயற்படுவதற்காக, ஒவ்வொரு மாகாணத்திலும் முகாமைத்துவ தர உறுதிப்பாட்டு அலகை தாபிக்க நடவடிக்கை எடுத்தல்.
   ( இதற்காக மாகாண உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது)
9. மாகாண மட்டத்தில் முகாமைத்துவ தர உறுதிப்பாட்டு அலகின் மூலம் செயற்பாடுகள் நடைபெறுகையில் விசேடமாக பாடசாலைகளின் வெளிவாரி மதிப்பீடுகளின்போது இனங்காணப்படும் பலங்களை மேலும் பலப்படுத்தி முன்னோக்கிச் செல்லவும், பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காகவும், தேவை மற்றும் இயலுமையினடிப்படையில் பாடசாலை, வலயம் மற்றும் மாகாண மட்டத்தில் மனிதவள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் செயலமர்வுகள் மூலம் நடாத்துதல் வரவேற்கத்தக்கது. மதிப்பீடுகளின் மூலம் அறியப்பட்ட தகவல்கள் தொடர்பான அறிக்கையை மாகாண முகாமைத்துவ தர உறுதிப்பாட்டு அலகு மூலம் அமைச்சின் முகாமைத்துவ தர உறுதிப்பாட்டு அலகுக்கு அனுப்புதல் அவசியமாகும். அதேவேளை அறியப்பட்ட விசேட முன்னேற்றங்கள் தரக் குறிப்பு (Bench marks) என அறிமுகப்படுத்தி தேசிய மட்டத்தில் பிரச்சினைகளுக்கான தீர்வு காண்பதற்கும் இப்பிரிவு மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். அமைச்சின் அதிகாரிகள் குழுவின் மூலம் வெளிவாரி மதிப்பீடுகளின்போது அறியப்பட்ட தகவல்களும் இதற்காக பயன்படுத்தப்படலாம்.
10. மேற் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான வெளியீடுகள், அறிக்கைகள் வெளியிடுவதற்கும் இப்பிரிவு மூலம் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாகாண மட்டத்தில் முகாமைத்துவ தர உறுதிப்பாட்டு அலகு தாபித்தல் மற்றும் செயற்படுதல் தொடர்பான விசேட அறிவுறுத்தல்

இது தொடர்பாக மாகாணத்தினால் பெயரிடப்பட்ட குழுவுக்கு அறிவூட்டுவதற்காக 5 நாள் க் கருத்தரங்கு நடாத்தப்பட்டது. பின்வரும் அறிவுறுத்தல்களை ஆராய்ந்து மாகாண்த்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இது தொடர்பான அறிக்கை அமைச்சினூடாக, இதனுடன் அல்லது தேவையினடிப்படையில், வரும் காலங்களில் வழங்கப்படும் மாதிரிப்படிவத்திற்கேற்ப சமர்ப்பித்தல் முக்கியமாகும்.

4. பெற்றுக் கொண்ட அறிவுறுத்தல்களைப் பயன்படுத்தி, சகல பாடசாலைகளும் சுய அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு உள்வாரி மதிப்பீட்டுச் செயற்பாடுகளை உரிய முறையில் செய்வதுடன் அறியப்படும் முன்னேற்றங்களை மேலும் பலப்படுத்தி, பலவீனங்களை நிவர்த்திக்க பாடசாலைகளில் உள்வாரி மனிதவள அபிவிருத்திச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக விசேட அவதானத்தைச் செலுத்த வேண்டும்.

5. இது தொடர்பாக பாடசாலைகளினால் வழங்கப்பட்ட நான்குமாத அறிக்கைகளை வலயக் கல்வி அலுவலகம் மூலம் பெற்று, வலய அலுவலகத்தின் கல்வி அபிவிருத்திப் பிரிவு மற்றும் முகாமைத்துவ தர உறுதிப்பாட்டு அலகினால் ஆராய்ந்து அறியப்படும் முன்னேற்றங்கள், பலவீனங்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக முறையான அறிக்கையை மாகாணக் கல்வி அலுவலகத்தின் முகாமைத்துவ தர உறுதிப்பாட்டு அலகுக்கு சமர்ப்பிப்பதுடன், அதன் பிரதியொன்றை அமைச்சின் முகாமைத்துவ தர உறுதிப்பாட்டு அலகுக்கும் அனுப்பபுதல் அவசியமாகும்.

6. வலயத்தினால் வழங்கப்படும் அவ்வறிக்கை மாகாண முகாமைத்துவ தர உறுதிப்பாட்டு அலகினால் ஆராய்ந்து அறியப்பட்ட முன்னேற்றம், பலவீனங்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக முறையான அறிக்கை கல்வியமைச்சின் முகாமைத்துவ தர உறுதிப்பாட்டு அலகுக்கு அனுப்புதல் அவசியமாகும். மேலும் இவ்வறிக்கை தயாரிப்பதில் மாகாண அலுவலகத்தின் உத்தியோகத்தர்களினால் நடாத்தப்படும் வெளிவாரி மதிப்பீட்டினால் அறியப்பட்ட தகவல்களையும் சேர்த்துக் கொள்ள முடியும். பாடசாலையினால் வலயக் கல்வி அலுவலகத்துக்கும், வலய அலுவலகத்தினால் மாகாண அலுவலகத்துக்கும், மாகாணத்தினால் கல்வி அமைச்சின் முகாமைத்துவ தர உறுதிப்பாட்டு அலகுக்கும் வழங்கப்படவேண்டிய முதல் நான்கு மாத அறிக்கை தொடர்பான மாதிரிப்படிவம் 1,2,3 ஆக உள்ளடக்கப்பட்டுள்ளது. அடுத்த அறிக்கை தொடர்பான மாதிரிப்படிவம் உரிய காலத்தில் வழங்கப்படும்.

7. இது தவிர மாகாணத்தின் விசேட தேவைகளினடிப்படையில் மாகாண தரஉறுதிப்பாட்டு அலகினால் திட்டமிட்டு செயற்படுத்தப்படும் கல்வியில் பண்புசார் விருத்தி தொடர்பாக வேலைத்திட்டமும், அதன் பிரதிபலன் தொடர்பான அறிக்கை என்பன இப்பிரிவுக்கு அனுப்பப்படல் வேண்டும். அவ்வறிக்கை இப்பிரிவின் மூலம் ஆராயப்பட்டு அதிவிசேட முன்னேற்றங்கள் /பலங்கள் அனுபவங்கள் முக்கியமான பிரச்சினைகள், மற்றும் தீர்வுகள் அந்தந்த மாகாணங்களுக்கு அறியப்படுத்துவதுடன், தேசிய மட்டத்தில் பண்புசார் விருத்தி தொடர்பான செயற்திட்டங்களுக்கு உபயோகப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

8. இந்த அனைத்து செயற்பாடுகள் தொடர்பாக மாகாண முகாமைத்துவ தர உறுதிப்பாட்டு அலகுக்கு தேவையான சகல உதவிகளும் கல்வி அமைச்சின் முகாமைத்துவ தர உறுதிப்பாட்டு அலகு ஊடாக பெற்றுக் கொள்ள முடியும்.

கல்வியில் பண்புசார் விருத்தியை ஏற்படுத்துவதற்காக மேற்கூறப்பட்ட வழிமுறைகள் ஊடாக தற்போதைய நிலைமையை அந்தந்த பிரிவுகளில் காணப்படும் முன்னேற்றங்கள், பலவீனங்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக சரியான தரவுகளை பெற்றுக் கொள்ளல் அவசியமாகும். சரியான தரவுகளின் மூலமே அபிவிருத்தி தொடர்பாக சரியான தீர்மானம் எடுக்க முடியும். இதனால் மாகாண முகாமைத்துவ தர உறுதிப்பாட்டு அலகுகள் தமது செயற்பாடுகளை பொறுப்புணர்வுடன் நிறைவேற்ற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக் கல்வித்துறையின் செயற்பாடுகள் அமைச்சு மற்றும் மாகாணங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாயினும், தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் கல்வி பெறுவது இந்நாட்டின் பிரஜைகளது பிள்ளைச் செல்வங்களாதலால், பொதுவான கல்விக் கொள்கை மற்றும் தரத்தினடிப்படையில், அமைச்சு மற்றும் மாகாணங்களுக்கிடையே அந்நியோன்ய புரிந்துணர்வுடன் இணைந்து செயற்படுதல் அத்தியாவசியம் எனக் கூறலாம்.

இதற்காக உங்கள் யாவரினதும் தயவான ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றேன்.

டாக்டர் தாரா டி மெல்
செயலாளர்
கல்வி அமைச்சு.

பிரதிகள்:
1. பணிப்பாளர் நாயகம் - தேசிய கல்வி நிறுவகம்
2. தேசிய கல்விக் கல்லூரி – பீடாதிபதிகள்
3. ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர்கள்
4. தேசிய பல்கலைக்கழகங்களின் கல்விப் பீடங்கள்
5. பரீட்சை ஆணையாளர் நாயகம்
6. கல்வி வெளியீட்டு ஆணையாளர்
7. கல்வி அமைச்சின் சகல பதவிநிலை உத்தியோகத்தர்கள்.

ஓய்வூதியத் திணைக்கள சுற்றுநிருப இல. : /9 / 2003

எனது இல. பீஎன் / 4042 ஈ
ஓய்வூதியத் திணைக்களம்
மாளிகாவத்தை
கொழும்பு 10.
2003.07.31.

அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும்,

## நி.பி 115 இன் கீழ் அங்கிகாரம் வழங்குதல்
## ( ஓய்வூதியர்களின் புகையிரத ஆணைச்சீட்டு தொடர்பாக )

ஓய்வூதியக் கொடுப்பனவு நடவடிக்கைகள் பிரதேச செயலகங்களுக்கு பன்முகப்படுத்தப்பட்டுள்ளதனால் ஓய்வூதியர்களின் புகையிரத ஆணைச்சீட்டு தொடர்பாக நிதிப்பிரமாணம் 115 இன் கீழ் அங்கிகாரம் வழங்கும் அதிகாரத்தை மாவட்ட செயலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென பொது நிர்வாக முகாமைத்துவ மற்றும் மறுசீரமைப்பு செயலாளரின் இலக்கம் கி / 3 / 1 / 1 / 4 / 5 கொண்ட 2003.06.27 திகதிய கடிதம் மூலம் எனக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

02. அதனடிப்படையில் 2003.08.01 திகதி முதல் நீங்கள் அங்கிகாரத்தை வழங்க வேண்டும் என தயவுடன் அறியத்தருகிறேன்.

ஒப்பம்/விக்டர் சமரவீர
ஓய்வூதியப் பணிப்பாளர்.

பிரதிகள் : 1. செயலாளர் ,
பொதுநிர்வாக முகாமைத்துவ மற்றும் மறுசீரமைப்பு அமைச்சு - தகவலுக்காக

2. பிரதேச செயலாளர்களுக்கு - தகவலுக்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister } 2784832 / 2784807 / 2785617

ලේකම් / செயலாளர் / Secretary } 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office } 2785141-50 / Fax: 2784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. } ..........

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

"ඉසුරුපාය"
බත්තරමුල්ල.

"இசுருபாய" பாடசாலை செயற்பாட்டு மற்றும் பத்தரமுல்ல தனியார் பாடசாலை கிளை

"Isurupaya"
Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. } ஈடி/01/12/01/04/24

දිනය / திகதி / Date } 2005.05.11

சுற்றறிக்கை இல: **2005/17**

சகல மாகாண பொதுச் செயலாளர்கள்,
சகல மாகாண கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதி/உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல அதிபர்கள்,

## பாடசாலைகளில் ஒழுக்க விழுமியங்களைப் பாதுகாத்தல்

எதிர்கால சிறந்த பிரஜைகளை உருவாக்கும் பாடசாலைகள் கல்வி கற்கும் மாணவர்களுக்கு அறிவு மற்றும் திறமையை வழங்குவது மாத்திரமன்றி சமூக ஒழுக்க விழுமியங்களுடன் வாழ்வதற்கு தேவைப்படும் சிந்தனைகள் மற்றும் ஒழுக்க விழுமியங்களை விருத்திசெய்ய தேவைப்படும் நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டியுள்ளது.

தற்போதைய சமூகத்தில் காணப்படும் சீரற்ற விளைவுகளாக இருப்பது சிறுவர் வன்முறை மற்றும் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துச் செல்வதாகும். தற்போதைய சிகலான சமூக முறைமையில் பாடசாலை செல்லக்கூடிய பாடசாலைகளிலும் பல்வேறுபட்ட நபர்களினால் கஷ்டங்களுக்கு உட்படுத்தப்படுவதாக தகவல்கள் தெரியவந்துள்ளன. இவ்வாறான சம்பவங்களினால் பிள்ளைகளின் எதிர்காலம் இருள்மயமாகும் நிலை ஏற்பட்டுள்ளது. இன்னல்களைச் செய்யும் நபர்கள் மற்றும் நிறுவனங்களில் பாடசாலை முறைமை, அதிலிருக்கும் பணியாளர்கள் மாணவர்களும் உள்ளடங்குவதாக தெரியவந்துள்ளன.

பாடசாலை மாணவர்களுக்கு பல வழிகளில் மேற்கொள்ளப்படும் இன்னல்கள் தொடர்பாக அதிபர்கள் ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா பணியாளர்களுக்கும் எதிராக பெற்றோர்கள் சட்ட நடவடிக்கை எடுத்த பல சந்தர்ப்பங்கள் உள்ளன. மேலும் உலகில் சிறுவர் இன்னல்களை அதிகரித்ததைத் தொடர்ந்து சிறுவர் நன்னடத்தை பாதுகாப்பு உரிமைகளுக்காக விரிவான வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் பாடசாலைகளைப் போன்று வெளியேயும் இவ்வாறான நிலைமைகளுக்கு இடமளிக்க முடியாதுள்ளதுடன் ஏதாவதொரு முறையில் இந்நிலைமை ஏற்பட்டால் தமது பாதுகாப்புக்காக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து பிள்ளைகளுக்கு விளக்கமூட்ட வேண்டும். பாடசாலைகளில் மாணவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவது மற்றும் இன்னல்களை தடுப்பது அத்தியவசியம் என்பதனால் இதன் மூலம் வழங்கப்படும் ஆலோசனைகளை பின்பற்ற வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. உடல்ரீதியிலான தண்டனைகள்

சகல சந்தர்ப்பங்களிலும் மாணவர்களுக்கு உடல் ரீதியான தண்டனைகளை வழங்குவதிலிருந்து தவிர்ந்துகொள்ள வேண்டும். அதிபர்கள் ஆசிரியர்களினால் மாணவர்களுக்கிடையே ஒழுக்க மாற்றங்களை ஏற்படுத்தும் சிந்தனையுடனும் நோக்குடனும் செயற்பட்டு உடல் ரீதியான தண்டனைகள் வழங்கக்கூடாது. இங்கு தண்டனை வழங்குவதன்றி விடயங்களை விளக்குதல், முன்மாதிரி மற்றும் சிறந்த அமைப்புகள் மூலம் உள்ளக ரீதியாக சுயஒழுக்கத்தை ஏற்படுத்துவதற்காக பயிற்சியளிப்பதன் மூலம் நபர் ஒருவர் தமது வாழ்வு பூராகவும் ஒழுக்க விழுமியங்கள் கொண்ட நபராக வாழ தேவைப்படும் பயிற்சிகளை பெறுவதென்பதனை மறந்துவிடக்கூடாது.

இலங்கையினால் கையொப்பமிட்டு முன்மொழியப்பட்ட (1989) ஐக்கியநாடுகள் சிறுவர் உரிமை தொடர்பான உடன்படிக்கை 28(2) வாசகத்தின் மூலம் பாடசாலைகளில் ஒழுக்க நிருவாகம் மாணவர்களின் மானிட கௌரவத்திற்கு அமைவான முறையில் மேற்கொள்வதை பொறுப்புடன் செயற்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

2.1 உடல் ரீதியான தண்டனைகள் வழங்கப்படுவது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் தெரியவந்திருப்பது பிள்ளைகளிடையே ஒழுக்கத்தை புகட்டும் போது வழங்கப்படும் தண்டனைகள் மூலம் எதிர்பார்த்த விளைவுகள் கிடைக்கவில்லை என்றும் கீழ்க் குறிப்பிடப்பட்ட பாதக விளைவுகள் ஏற்படக்கூடும்.

I. உடல் ரீதியான தண்டனைகளை வழங்குவதன் மூலம் திருட்டு, தாக்குதல்கள் போன்ற சமூகத்திற்கெதிரான பழக்கங்கள் மாணவர்களுக்கிடையே ஏற்படல்

II. சிறுவர் துஷ்பிரயோகத்திற்கான சந்தர்ப்பம் அதிகரிக்கின்றமை.

III. மாணவர்களுக்கிடையே ஆத்திரமடையும் பழக்கங்கள் அதிகரிக்கும்.

IV. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் / அதிபர்களுக்கிடையே தொடர்பு துண்டிக்கப்பட்டுவிடல்.

V. திருப்தியற்ற மானிட உணர்வுகள் பிள்ளைகளிடம் ஏற்படல்

VI. பிள்ளைகளினால் சிறந்த சிந்தனைகளை கட்டியெழுப்பும் போது பாதகமான முறையில் வற்புறுத்தல்கள் ஏற்படல்.

மேலும் உடல் ரீதியான தண்டனைகளை வழங்காது ஒழுக்கத்தைப் பாதுகாக்க முடியாத பட்சத்தில் அதன்மூலம் சித்தரித்துக் காட்டப்படுவது ஆசிரியரின் திறமையற்ற தன்மையே ஆகும்.

2.2 உடல் ரீதியான தண்டனைகளுக்குப் பதிலாக கீழ்க் குறிப்பிடப்பட்ட மாற்று நடவடிக்கைகளை பின்பற்ற முடியும்

I. பாடசாலையிலுள்ள மாணவர்கள் ஒழுக்க விழுமியத்திற்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபடவிருக்கும் சந்தர்ப்பங்களை குறைப்பதற்காக பாடசாலை செயற்பாட்டு மற்றும் பாட இணை நடவடிக்கைகளினை சிறந்த முறையில் ஒழுங்கு செய்தல்.

II. பாடசாலைகளின் ஒழுக்க விழுமியங்கள் தொடர்பாக சகலருக்கும் விளக்கமூட்டல் மற்றும் சிறந்த செயற்பாடுகளை மேற்கொள்வதுடன் தவறான செயற்பாடுகளுக்கு உதவாதிருத்தல் அல்லது அதனை அங்கீகரிக்காது இருத்தல்.

III. சிறந்த பழக்கங்களை ஏற்படுத்துவதற்கும் பாடசாலைகளில் ஒழுக்கத்தைப் பேணுவதற்கும் ஒழுக்க விழுமிய செயற்பாடுகளின் முக்கியத்துவத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கமுட்டல், முன்மாதிரியாக மேற்கொள்ளல் மற்றும் மாணவர்களுக்கு சரியான வழிமுறைகளை காண்பித்தல்.

IV. மாணவர்கள் தவறிழைக்கும் வேளையில் அவரால் இழைக்கப்பட்ட தவறை விளக்கமுட்டல்.

V. மோசமான முறை ஒழுக்கத்திற்கெதிரான செயற்பாடுகளை மேற்கொண்ட வேளையிலும் உடல் மற்றும் உளரீதியான தண்டனைகளை வழங்குவதற்குப் பதிலாக எச்சரிக்கை செய்தல் மற்றும் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களுக்கு அறிவித்தல்.

VI. தவறிழைத்த மாணவர் அனுபவிக்கும் வரப்பிரசாதங்களை வரையறுத்தல் அல்லது இடைநிறுத்தல். உ-ம்: வகுப்புத் தலைவர், மாணவர் தலைவர் போன்ற பதவிகளை இல்லாமற் செய்தல்.

VII. பாரிய ஒழுக்கத்திற்கெதிரான செயற்பாடுகளை மேற்கொண்ட வேளையில் பெற்றோருக்கு அறிவித்து இரண்டு வாரத்திற்கு அதிகரிக்காத வகுப்புக்குத் தடை விதித்தல்.

மேற்கூறப்பட்ட VI மற்றும் VII கீழ் செயற்படும் போது அதிபரினால் பாடசாலை ஒழுக்க சபையை அழைத்து அதன்மூலம் மேற்கொள்ளப்படும் பரிசோதனைக்குப் பின்னர் எடுக்கப்படும் தீர்மானத்தின் கீழ் மாத்திரம் அவ்வாறு செயற்பட வேண்டும்.

VIII. பாடசாலை ஒழுக்க சபையினால் மிக மோசமான ஒழுக்கத்திற்கெதிரான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தீர்மானித்த வேளையில் அச்செயற்பாட்டின் தன்மை மற்றும் தீவிரத் தன்மைக்கமைய வலயக் கல்விப் பணிப்பாளர் அல்லது மாகாணக் கல்விப் பணிப்பாளரின் முன் அங்கீகாரத்துடன் 2 வாரத்திற்கு மேற்படாத காலத்திற்குள் வகுப்புத் தடை அல்லது பிள்ளை வேறொரு பாடசாலைக்கு கல்வி கற்ற ஆண்டிற்கே மாற்றம் செய்தல்.

மாணவர்கள் தொடர்பில் நடவடிக்கைகளை எடுக்கும் போது அது தொடர்பாக ஆவணரீதியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதுடன் அவை கவனமாக கல்லூரியில் வைத்திருக்கவும் வேண்டும்.

மேலும் VII மற்றும் VIII இன் செயற்பாடுகளின் போது அதிபரினால் அது தொடர்பாக லொக் குறிப்பொன்றும் பேண வேண்டும். மேற்கூறப்பட்டவாறு மாணவர்களது சிறந்த செயற்பாடுகளை ஏற்படுத்தும் நோக்கில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் கல்லூரியின் பிரதான கூட்டம் அல்லது அறிவித்தற் பலகையில் பாடசாலையினுள் பகிரங்கப்படுத்த பொறுப்பாக இருக்க வேண்டும்.

2.3 பாடசாலையில் ஒழுக்கத்தை பேணும் நோக்கிலாக இருந்தாலும் மாணவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டால் கீழ்க் குறிப்பிட்டவாறு சட்ட நடவடிக்கைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிபேற்படும்.

I. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் III அத்தியாயம் II வது வாசகம் மற்றும் xvi வது அத்தியாயம் 126வது பிரிவிற்கமைய அடிப்படை உரிமை மீறும் வழக்குத் தாக்கல் செய்யமுடியும்.

II. 1995 இல 22 கொண்ட குற்றவியல் சட்டத்தின் மூலம் (மறுசீரமைக்கப்பட்ட) சட்டத்தின் 3வது வாசகம் மற்றும் பிரதான சாசனத்தின் 308 (அ) பிரிவின் கீழ் பிள்ளைகள் மோசமான முறையில் தண்டனைக்கு உட்படுத்திய தவறின் கீழ் வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

III. கல்வி அமைச்சின் பொறுப்பாளர்களினால் நடாத்தப்படும் ஒழுக்காற்று விசாரணைகளில் உடல் ரீதியான தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டால் தாபன விதிக் கோவையின் IIவது பிரிவின் கீழ் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க முடியும்.

## 3.0 சிறுவர் துஷ்பிரயோகம்

3.1 சிறு பராயத்திற்குப் பொருந்தாத பல்வேறுதரப்பட்ட முறையற்ற நடவடிக்கைகளுக்காக பிள்ளைகளை ஈடுபடுத்துவது சிறுவர் துஷ்பிரயோகமாக கருத முடியும். இலங்கையில் பல ஆண்டு காலம் முதல் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரித்துள்ளதுடன் தற்பொழுது பல்வேறுபட்ட முறையில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் நாளுக்கு நாள் இடம்பெறும் நிலை ஏற்பட்டுள்ளது.

பாடசாலைகளுக்குள் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெறுவது கவலைக்குரிய விடயமாகும். பாடசாலையில் பிள்ளையின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டிய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் ஏனையோர் மூலம் பிள்ளைகளை முறையற்ற ரீதியில் நடாத்தப்படுவது கவலைக்குரிய நிலைமையாகும்.

3.2 சிறுவர் துஷ்பிரயோகத்தில் பாலியல் வற்புறுத்தல் மாணவர் / மாணவி உட்படுத்தப்படுவது பாரிய குற்றமாகும். இலங்கையின் 80வது தசாப்த நடுப்பகுதியில் சிறுவர் மற்றும் உடல் ரீதியிலான துஷ்பிரயோகம் குற்றமென்றும் 90ம் தசாப்த ஆரம்பப் பகுதியில் சிறுவர் பாலியல் உறவு பாரிய தண்டனைக்குரிய குற்றமென்றும் இனங்காணப்பட்டது.

இதனால் பாடசாலைகளில் மாணவர் / மாணவிகள் ஏதாவதொரு முறையில் துஷ்பிரயோகத்திற்கு இலக்காவதைத் தடுப்பது அதிபரினதும் ஆசிரியரினதும் பொறுப்பாகும்.

பாடசாலைகளில் மாணவர் / மாணவி பாலியல் அல்லது வேறு முறையிலான துஷ்பிரயோகத்திற்கு உட்பட்டால் அது உண்மையானது என ஊர்ஜிதப்படுத்தப்படும் பட்சத்தில் பாரிய தண்டனைகளுக்கு இலக்காக வேண்டியேற்படும் என்பதை விசேடமாக வலியுறுத்துகிறேன்.

3.3 பாடசாலைகளில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் உட்பட பாடசாலைக்குள் மேற்கொள்ளப்படும் சகல நடவடிக்கைகளுக்கும் தடை ஏற்படக்கூடியவாறு கல்லூரியில் கல்வி மற்றும் கல்வி சாரா பணியாளர் சபை அங்கத்தவர்களினால் ஒழுக்கத்திற்கு எதிரான செயற்பாடுகளுக்கு மாணவர்களை தூண்ட ஒருபோதும் நடவடிக்கை எடுக்கக்கூடாது. மாணவர்கள் ஒழுக்கத்திற்கெதிரான செயற்பாடுகளுக்கு தூண்டுவது அவ்வாறானவர்களினால் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக குற்றச்சாட்டுக்கள் சமர்ப்பிக்கப்படும் வேளையில் அக்குற்றம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டால் மாணவரை தூண்டப்பட்டது தொடர்பாக உரிய குழு அல்லது நபருக்கு தீவிர தண்டனை வழங்க முடியும்.

இவ்வாறு சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது மேற்கூறப்பட்ட 2.3. I. II மற்றும் IIIல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயற்பாடுகளை மேற்கொள்ள முடியுமென மேலும் அறியத் தருகிறேன்.

4.0 சிறுவர் இன்னல்கள் தொடர்பிலான சகல புலனாய்வு மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளின் மேற்பார்வை செய்தல் உட்பட விசேட அதிகாரங்கள் 1998 இல 50 கொண்ட பாராளுமன்ற சட்டத்தின் மூலம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நிறுவப்பட்டுள்ளது. அவ்வதிகார சபையினால் தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரங்களை அமுல்படுத்தும் போது மாகாணக் கல்விப் பணிப்பாளர் அல்லது வலயக்கல்விப் பணிப்பாளர் அல்லது பாடசாலை பொறுப்பாளரிடம் ஏதாவதொரு உதவி கேட்கப்படும் போது அதற்காகத் தேவைப்படும் உதவியை அவ்வதிகார சபைக்கு வழங்குமாறு இத்தால் ஆலோசனை தெரிவிக்கிறேன்.

மேலும் மனிதாபிமானமற்ற முறையில் தண்டனைகளை வழங்காது பாடசாலைகளில் ஒழுக்க விழுமியங்களை பேணிவருவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதுடன் பாடசாலைகளில் சிறுவர் துஷ்பிரயோக செயற்பாடுகள் இடம்பெறாத சூழலை ஏற்படுத்தவும் பொறுப்பாக இருக்க வேண்டுமென மேலும் வலியுறுத்துகிறேன். இந்நோக்கத்தை அடைந்துகொள்வதற்காக அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் அர்ப்பணிப்பு செய்யவேண்டுமென எதிர்பார்க்கிறேன்.

பாடசாலை மாணவர்களுக்கு உடல் ரீதியான தண்டனைகள் வழங்குவது தொடர்பாக இல. 1961 / 26 மற்றும் 1961.07.21 திகதி கொண்ட சுற்றறிக்கை மற்றும் பாடசாலைகளின் ஒழுக்கத்தை பாதுகாப்பது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள இல. 2001/11 மற்றும் 2001.03.30ம் திகதிய சுற்றறிக்கையை இத்தால் இரத்துச் செய்வதாக அறிவிக்கிறேன்.

டாக்டர் தாரா டி மெல்
செயலாளர்,
கல்வி அமைச்சு.

பிரதிகள் :

1. கல்வி அமைச்சின் சகல கிளைப் பொறுப்பாளர்களுக்கும்.
2. தேசிய கல்வி நிறுவக பணிப்பாளர் நாயகம்
3. கல்வி வெளியீட்டின் ஆணையாளர்.
4. பரீட்சை ஆணையாளர் நாயகம்.
5. தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos

අමාත්‍ය / அமைச்சர் / Minister } 2784832, 2784807, 2785617

ලේකම් / செயலாளர் / Secretary } 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office } 2785141-50, Fax: 2784846

ඊ-මේල්/மின்னஞ்சல்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. } ..................................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

ඉසුරුපාය
බත්තරමුල්ල

பாடசாலை செயற்பாட்டு மற்றும் தனியார் பாடசாலைக் கிளை
"Isurupaya"
Battaramulla.

මගේ අංකය / எனது இல. / My No. } ..சுடி/01/12/03/07/03.....

දිනය / திகதி / Date } 2005.03. 30

**சுற்றறிக்கை இலக்கம்: 2005/10**

மாகாண கல்வி செயலாளர்,
மாகாண கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
கோட்டத்திற்குப் பொறுப்பான
பிரதி/உதவிக் கல்விப் பணிப்பாளர்
அரச, தனியார் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட
பாடசாலைகளின் பொறுப்பாளர்கள்,
பிரிவேனாக்களின் பொறுப்பாளர்கள்

## கல்விப் பொதுத்தராதர (சா/த) பரீட்சை

கல்விப் பொதுத்தராதர (சா/த) வினாப்பத்திரங்களின் கட்டமைப்பு மற்றும் தயாரிப்பு மாற்றங்கள் 2007ம் ஆண்டு முதல் அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இம்மாற்றங்கள் இடம்பெறுவது க.பொ.த (சா/த) பரீட்சை வினாப்பத்திரங்களின் கட்டமைப்பு மற்றும் தயாரிப்புக்கள் மாத்திரம் என்றும் பாடங்களுக்காக தற்பொழுது இருக்கும் பாடவிதானம் அவ்வாறே இருக்கும் என்றும் வலியுறுத்துகிறேன்.

தற்பொழுது இருக்கும் கல்விப் பொதுத்தராதர (சா/த) பரீட்சையின் பலதரப்பட்ட பாடங்களுக்குரிய வினாப்பத்திரங்களில் அடங்கும் வினாக்களின் எண்ணிக்கை பதிலளிக்க வேண்டிய வினாக்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்படும் காலம் தொடர்பாக (வினாப்பத்திரங்களைத் தயாரித்தல் மற்றும் கட்டமைப்பு) பல மாற்றங்கள் உள்ளன. இதன் காரணமாக பரீட்சை வினாப்பத்திரங்களைத் தயாரித்தல் மற்றும் மதிப்பீடுகள் மேற்கொள்ளும் பரிசோதகர்களைப் போன்று ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. பரீட்சை செயற்பாடு மற்றும் அதனுடன் தொடர்புபட்ட தாக்கங்களைக் குறைத்தலும் பரீட்சை மதிப்பீட்டு செயற்பாட்டின் பண்புசார் தன்மை, செல்லுபடியான தன்மை மற்றும் நம்பகத் தன்மையை தொடர்ந்தும் விருத்தி செய்வதன் மூலம் பரீட்சை நடவடிக்கைகளின் போது ஒரு தலைப்பட்சத்தை ஏற்படுத்துவதும் இம்மாற்றங்கள் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றன.

இதற்காக மேற்கூறப்பட்டவாறு ஒவ்வொரு பாடங்கள் தொடர்பாக உள்ள விடயங்கள் மாற்றமின்றி இருப்பதுடன், விருத்தி செய்யும் நோக்காகவும் தாக்க நிலைமையை குறைக்கும் வகையிலும் சாதாரண தரப் பரீட்சைகளில் முழுமையாக நோக்கம் நிறைவேறக்கூடிய வகையில் பாட விடயங்களுக்கு உட்படும் முக்கிய விடயங்கள் வலியுறுத்தக்கூடியவாறு வினாப்பத்திரங்கள் தயாரிக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேடமாக மிகக் குறைந்த மாணவ அடைவு மட்டம் கொண்ட "கணிதம்" பாடம் தொடர்பில் பிரதான 03 நோக்கங்கள் நிறைவேறக் கூடியவாறு வினாப்பத்திரங்கள் தயாரிக்கப்படுகின்றன. அந்நோக்கங்களாக இருப்பது,

* சகலருக்கும் தேவைப்படும், கணித அறிவு
* பாடவிதானத்தின் ஏனைய பாடங்களைக் கற்பிப்பதற்கு உதவியாகத் தேவைப்படும் கணிதம்
* கணிதப் பாடத்தை சாதாரணதர பரீட்சைக்குப் பின்னரும் கற்கும் மாணவர்களுக்காக இவ்விருத்திகளை தெளிவுபடுத்தும் வகையில் துரித கதியில் பரீட்சைத் திணைக்களத்தினால் மாதிரி வினாப்பத்திரங்கள் தங்களுக்கு வழங்கப்படும்.

மேலும் 2007ம் ஆண்டில் "மலே" மற்றும் "லதீன்" மொழிகள் சாதாரண தரப் பாடமாக இருக்காது என்பதையும் குறிப்பிடுகிறோம்.

02. வினாப்பத்திரங்களின் கட்டமைப்பு மற்றும் தயாரிப்பு

கல்விப் பொதுத்தராதர (சா/த) பரீட்சையில் அழகியற் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் மேலதிக பாடங்களின் வினாப்பத்திரங்களைத் தயாரித்தல் மற்றும் கட்டமைப்பு தொடர்பாக மாற்றங்கள் இடம்பெறாததுடன் 02 கட்டமைப்புக்களின் கீழ்க் குறிப்பிடப்பட்ட பாடங்களின் வினாப்பத்திரங்கள் தயாரிக்கப்படும்.

(i) முதலாவது கட்டமைப்பு மாற்றம் மேற்கொள்ளும் பாடங்கள்
மொழி மற்றும் இலக்கியம்
கணிதம்

(ii) இரண்டாவது கட்ட மாற்றங்கள் மேற்கொள்ளும் பாடங்கள்
சமயம்,
ஆங்கில மொழி,
விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பம்
சமூகக் கல்வி மற்றும் வரலாறு

2.1 முதலாவது கட்டமைப்பு மாற்றம்

2.1.1 முதலாவது கட்டமைப்பு மாற்றத்தின் கீழ் இருக்கும் மொழி மற்றும் இலக்கியப் பாடங்கள் தற்பொழுது வழங்கப்படும் 03 வினாப்பத்திரங்களுக்குப் பதிலாக I மற்றும் II ஆக 02 வினாப்பத்திரங்கள் வழங்கப்படும்.

முதலாவது வினாப்பத்திரத்திற்கு 40 புள்ளிகளும் இரண்டாவது வினாப்பத்திரத்திற்கு 60 புள்ளிகளும் வழங்கப்படுவதுடன், ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 02 மணித்தியாலம் வீதம் வழங்கப்படும்.

முதலாவது வினாப்பத்திர கட்டமைப்பு, பகுதிக் கட்டமைப்பு, கட்டுரை, திறமை போன்றன கேள்விகளில் உள்ளடங்கியிருக்கும். இரண்டாவது வினாப்பத்திரம் கட்டுரை மற்றும் சாராம்சம் எழுதும் பயிற்சியாக இருக்கும்.

2.1.2 கணிதப் பாடத்திற்காக 02 மணித்தியாலம் வீதம் 02 வினாப்பத்திரங்கள் இருக்கும். முதலாவது வினாப்பத்திரத்திற்கு 40 புள்ளிகளும் இரண்டாவது வினாப்பத்திரத்திற்கு 60 புள்ளிகளும் வழங்கப்படும். முதலாவது வினாப்பத்திரம் சுருக்கமாக விடையளிக்கும் வகையாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.2 இரண்டாவது கட்டமைப்பு மாற்றங்கள்

2.2.1 இரண்டாவது கட்டமைப்பில் அடங்கும் பாடங்களில் முதலாவது வினாப்பத்திரம் பாட இணை வினாக்கள் 40ஐக் கொண்டதாக இருப்பதுடன் 01 மணித்தியால வினாப்பத்திரமாகவும் இருக்கும். இக்கேள்விப் பத்திரம் 4 வகையாக இருக்கும். பல்வகை அல்லது சுருக்கமாக விடை எதிர்பார்க்கும் வகையான கேள்வி அல்லது மேற்கூறப்பட்ட இரண்டும் கலப்பாக இருக்கும்.

இரண்டாவது வினாப்பதிரத்திற்காக 02 மணித்தியாலம் வழங்கப்படுவதுடன் அது 06 வினாக்களைக் கொண்டதாக இருக்கும். அக்கேள்விகள் 06இல் 05 கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இரண்டாவது வினாப்பத்திரத்தில் ஒவ்வொரு வினாவுக்குமுரிய புள்ளிகளின் அளவு வினாப்பத்திரத்திலேயே குறிப்பிடப்பட்டிருக்கும்.

பிரயோக செயற்பாடுகளை மதிப்பீடு செய்யும் பாடங்களுக்காக தற்பொழுதுள்ள வேலைத்திட்டம் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் பாடசாலைகளை அடிப்படையாகக். கொண்ட மதிப்பீடுகள் மூலம் திறன் தற்பொழுது அமுல்படுத்தியிருக்கும் முறைக்கமைய கல்விப் பொதுத்தராதர (சா/த) பெறுபேறு அட்டவணையில் உள்ளடங்கியிருக்கும். அவ்வாறு பெறுபேறு அட்டவணையில் தனியாகக் குறிப்பிடப்படுவது எழுத்துமூல சாதாரண தரப் பரீட்சையில் குறிப்பிடும் முறைக்கு மாற்று முறையில் செல்லுபடியாகும் . மற்றும் நம்பத்தக்க மதிப்பீட்டு முறை மூலம் அத்தரத்தை பெற்றுக்கொண்டதாக சுட்டிக் காட்டுவதற்காகும்.

03. கல்விப் பொதுத் தராதர (உ/த) வகுப்புக்களில் சேர்வதற்கான தகைமை

கல்விப் பொதுத்தராதரத (உ/த) வகுப்புக்களுக்கு சேர்வதற்கு தேவைப்படும் க.பொ.த சாதாரண தர பரீட்சையின் அடைவு தேவை மாற்றமின்றி இருக்கும்.

04. ஆரம்பக் கேள்வி மற்றும் மேலதிக ஆலோசனை

பரீட்சை திணைக்களத்தினால் மாற்றம் செய்யப்படும் பாடங்க்ளுக்காக மாதிரி வினாப்பத்திரங்கள் மூலம் பரீட்சைகளின் கட்டமைப்பு மற்றும் தயாரிப்புகளின் மாற்றங்கள் தெளிவுபடுத்தப்படும். இதற்கு மேலதிகமாக இலக்கம் NE TS/RD/02/01 கொண்ட க.பொ.த (சா/த) பரீட்சையின் 2001 மற்றும் அதற்குப் பின்னர் நடைபெறும் பரீட்சைக்கான ஆலோசனைக் கோவை என்ற புத்தகத்தில் தேவைப்படும் மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

டாக்டர் தாரா டி மெல்
செயலாளர்,
கல்வி அமைச்சு.

பிரதி:

1. தலைவர் - தேசிய கல்வி ஆணைக்குழு
2. பணிப்பாளர் நாயகம் - தேசிய கல்வி நிறுவகம்
3. பரீட்சை ஆணையாளர் நாயகம் - பரீட்சைத் திணைக்களம்
4. கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
5. பதவி நிலை உத்தியோகத்தர்கள் - கல்வி அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.
අමාත්‍ය / அமைச்சர் / Minister } 2784832 2784807 2785617
ලේකම් / செயலாளர் / Secretary } 2784812
කාර්යාලය / அலுவலகம் / Office } 2785141-50 Fax: 2784846
ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. } ..........................................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education
"ඉසුරුපාය"
බත්තරමුල්ල.
"இசுருபாய"
பத்தரமுல்லை.
"Isurupaya"
Battaramulla.

School Activities & Private School Branch

මගේ අංකය / எமது இல. / My No. } ED/01/12/03/10/01

දිනය / திகதி / Date } 2005.03.03

Principals of Schools
Starting to Teach the Subject of Technology on
a Pilot Basis.

**Introduction of the subject of Technology**
**for the General Certificate of Education (Advance Level)**

This letter is issued in addition to the Circular letter no. ද8/103, Circular No.98/15, Letter dated 24.11.1998, Circular No.1999/31 of 19.08.1999 & Circular No.2001/99 of 23.03 2001 which have been issued relating to the subject combinations in the G.C.E.(Advance Level))

Under the subject field of Social Science / Applied Social Studies in the Art stream 1.1 indicated under item No.1 of Circular 98/15, a subject category of Technology is due to be introduced from year 2005, in addition to the 9 subjects prescribed at present. The six subjects which will be introduced in the Technology category to be introduced accordingly are indicated below.

I. Civil Technology
II. Mechanical Technology
III. Electricity, Electronics & Information Technology
IV. Food Technology
V. Agro Technology
VI. Bio Resource Technology.

Accordingly, a student under the Art Stream can select, at the discretion, one subject out of the six Technology subjects indicated above, along with two other subjects included in the subject stream.

This subject introduced on a pilot basis, in the initial stage, is scheduled to be introduced later, to all schools having G.C.E.(Advance level ) Classes.

Dr. Tara De Mel
Secretary
Ministry of Education

C.C . i. Director General., National Institute of Education - For the preparation of the relevant syllabus & Teachers' guide and for training of teachers.
ii. Commissioner General of Examination, Department of Examination
iii. Chairman,- University Grant Commission, ward place ,Colombo 7
iv. Chairman - National Education Commission.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.
අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister } 2784832, 2784807, 2785617
ලේකම් / செயலாளர் / Secretary } 2784812
කාර්යාලය / அலுவலகம் / Office } 2785141-50, Fax: 2784846
ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. } ........................................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education
"ඉසුරුපාය"
බත්තරමුල්ල.
"இசுருபாயா"
பத்தரமுல்ல.
"Isurupaya"
Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. } ஈடி/01/12/01/07/01, பாடசாலை-செயற்பாடுகள்....... தனியார் பாடசாலை

දිනය / திகதி / Date } 2004.04.27

சுற்றறிக்கை இலக்கம் - 2004/15

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,
பாடசாலை அதிபர்கள்,
பிரிவெனாதிபதித் தேரர்கள்.

பொதுமுகாமைச் செயலாளர்
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்
கண்டா இல்லம்
இல 40, சத்திய வீதி
கொழும்பு 01500

**5ஆம் ஆண்டின் புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவருதவி வழங்குவதற்காகக் கருத்திற் கொள்ளப்படும் பெற்றார்கள்/சட்டபூர்வமான பாதுகாவலர்களின் வருடாந்த வருமான எல்லையைத் திருத்தியமைத்தல்**

5ஆம் தர புலமைப்பரிசில் தாரர்களில் மாணவர் உதவியைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக, வருடாந்த வருமான எல்லையைத் திருத்தி அமைத்துள்ள கல்வி அமைச்சின் செயலாளரின் எச்.ஆர்டி/ஈகியூடீ/2002/20 இலக்கத்தையும் 2002.08.15 திகதியையும் கொண்ட சுற்றறிக்கையின் 03ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள 02 அம்சங்களுக்கும் மேலதிகமாகக் கீழ்க் குறிப்பிடப்படும் வாசகங்களும் சேர்க்கப்படுகின்றன என்பதை தயவாய் அறியத் தருகிறேன்.

iii. 2003ஆம் ஆண்டிற்கு முன்பு பெற்றார்களின் வருடாந்த வருமான எல்லை ரூ 6000/- அல்லது அதற்குக் குறைவான நிலையில் மாணவருதவி பெற்றவர்களின் தற்போதைய மாணவருதவி வருமான எல்லை 2003 ஜனவரி மாதம் தொடக்கம் ரூபா 24000/- என்று திருத்தியமைக்கப்படுகின்றது.

iv. அதன்படி ஏற்கனவே மாணவருதவி பெறுகின்ற மாணவரின் பெற்றார்களின் வருமானம் ரூபா 24000/- வரை வருடாந்தம் அதிகரிக்கப்பட்ட போதிலும் அம்மாணவ மாணவியர்களுக்கும் மாணவருதவி வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தயவாய் அறியத் தருகிறேன். எவ்வாறாயினும் இம்மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு 2003ஆம் ஆண்டிற்கு முன்பு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று தற்போது மாணவருதவி பெறாத மாணவர்களுக்கு மாணவருதவி பெறும் உரிமை இல்லை என்பதை மேலும் வலியுறுத்த விரும்புகிறேன்.

இந்திராணி காரியவசம்
மேலதிக செயலாளர்,
கல்வி பண்பு சார் விருத்தி.

ஒப்பம்:
வைத்திய தாரரா டி மெல்
செயலாளர்,
கல்வி அமைச்சு.

பிரதிகள்:
i. பரீட்சை ஆணையாளர் நாயகம்
ii. தவிசாளர், தேசிய கல்வி ஆணையம்
iii. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்
iv. பிரதம கணக்காளர், கல்வி அமைச்சு
v. சகல பிரதேச செயலாளர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிபெயர்ப்பு

பாடசாலை அனுமதிக் கிளை,
எனது இல: ஈடீ/01/12/01/04/16
மனிதவள அபிவிருத்தி, கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சு,
இசுருபாய, பத்தரமுல்ல.
2003.08.22

மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
மாகாண கல்வித் திணைக்களம்,
வடமா.

**வசதியான மாகாணங்களிலிருந்து கஷ்டப் பிரதேச மாகாணங்களிலான பாடசாலைகளில் க.பொ.த. உயர்தர வகுப்புகளிற்கு மாணவர்களைச் சேர்த்தல்**

கல்வி முறைமையிலுள் பௌதீக, மனித வள வழங்கல்களிலான முரண்பாடுகளையும், பிரதேச ரீதியான வளவ் வசதிக் குறைகளையும் கருத்திற் கொண்டு பல்கலைக்கழக அனுமதியின் போது சில எண்ணிக்கையான மாவட்டங்கள் கஷ்டப் பிரதேச மாவட்டங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவ் வகைப்படுத்தலினூடாக வசதிகள் குறைந்த பகுதிகளிலுள்ள கஷ்டங்களின் மீது கல்வி பெறும் மாணவர்களுக்கு சலுகையான நிலையொன்று வழங்கப்பட்டுள்ளது.

02. அவ்வாறு சமுதாயத்திலுள்ளும் முறைமையிலுள். நிலவும் முரண்பாட்டின் காரணமாக சம்பந்தப்பட்ட பிரதேசங்களில் வசிப்பவர்க்குக்கு வழங்கப்பட்ட இச்சலுகையினை மோசடியாகப் பெறும் நோக்குடன் வசதியான பிரதேசங்களிலிருந்து சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து இப்பிரதேசத்திலுள்ள உயர்தர வகுப்புக்கள் நடைபெறும் பாடசாலைகளுக்கு வந்து சேர்வதாக முறைப்பாடுகள் கஷ்டப்பிரதேசப் பெற்றோரிடமிருந்தும், மாணவர்களிடமிருந்தும் கிடைக்கப்பெற்றுள்ளன.

03. இவ்வெதிர்ப்பினைக் கருத்திற்கொண்டவிடத்து, இதன்பின்னர் க.பொ.த. (சா/த) பரீட்சையிற் சித்தியடைந்ததன் பின்னர் உயர்தர வகுப்புக்களுக்கு சேர்வது தொடர்பாகக் கீழ்க்குறிக்கப்படும் நடைமுறையினைப் பின்பற்றுவதென இவ்வமைச்சினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

04. எனவே இனிமேல் வசதிகள் கொண்ட மாவட்டங்கள் என ஒதுக்கப்பட்டுள்ள பிரதேசங்களிலிருந்து க.பொ.த.(சா/த) பரீட்சையில் சித்தியடைந்ததன் பின்னர் கஷ்டப் பிரதேச மாவட்டங்களிலான உயர்தர வகுப்புக்கள் கொண்ட பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுமதித்தல் நிகழ்தலாகாது என வலியுறுத்துகின்றேன்.

05. எனினும் கீழ்க்குறிப்பிடப்படும் விசேட காரணங்களின் மீது அவ்வாறான விண்ணப்பங்கள் முன்வைக்கப்படின் அதுபற்றி கவனத்திற்கொள்ளல் செய்யப்பட வேண்டியது சம்பந்தப்பட்ட விடயங்களை உறுதி செய்யும் ஆவணங்களைச் சமர்ப்பித்து உறுதி செய்யின் மாத்திரமே என்றும் வலியுறுத்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(i) இடமாற்றம் காரணமாக அனுமதி வழங்குதல் செய்யப்பட வேண்டியது, இடமாற்றத்துடன் தமது வசிப்பிடமும், புதிய சேவை நிலையத்திற்கு கிட்டவுள்ள பிரதேசத்திற்கு உண்மையில் மாற்றப்பட்டிருப்பின் மாத்திரமே. அவ்வாறு வசிப்பிடம் மாற்றப்பட்டிருப்பது தொடர்பாக உரிய பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(ii) பாதுகாப்புக் காரணங்களின்மீது வசிப்பிடம் மாற்றப்பட்டிருப்பின் பாதுகாப்புக் காரணங்களினால் வசிப்பிடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என உரிய பொலிஸ் நிலையப் பொறுப்பாளரினால் பெறப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்:

06. இத்தேவைப்பாடுகளை பூர்த்திசெய்யாத வசதியான பிரதேசங்களிலான பாடசாலைகளிலிருந்து கஷ்டப் பிரதேசம் எனப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களிலான உயர்தர வகுப்புப் பாடசாலைகளுக்கு பிள்ளைகளைச் சேர்க்க வேண்டாமென அன்புடன் அறிவிக்கின்றேன்.

வீ.கே.நாணயக்கார,
செயலாளர்.

பிரதி: 1. மாகாணக் கல்விச் செயலாளர்கள் - அறிதலுக்கு.

2. தேசிய பாடசாலை பணிப்பாளர்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுநிருபம்: 2000/01/அ

எனது இல: வகிமா/மாகவ/எஸ்ஓ/எ/160
மாகாண கல்வித் திணைக்களம்,
வடக்கு கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.
18.09.2000

வலயக் கல்விப்பணிப்பாளர்,
.................

பாடசாலைகளில் நியமிக்கப்பட்டுள்ள முகாமைத்துவ உதவியாளர்களின் கடமைக் கூறுகள்

---

நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளரின் பிடிஎ/1/29(எ) இலக்கமிட்ட 00.07.25 ஆந் திகதியிட்ட கடிதத்தின்படி குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ உதவியாளரின் கடமைக் கூறுகள் இத்துடன் அனுப்பி வைக்கப்படுகின்றன.

இக்கடமைக் கூறுகளை, பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைத்து, சுற்றுநிருபத்தின் பிரதியை இத்திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பதவிப் பெயர் : முகாமைத்துவ உதவியாளர்

கடமைகள் : அதிபரின்/பிரதி அதிபரின் பணிப்புக்கும் மேற்பார்வைக்கும் அமைவாக இவர்களுக்குக் குறித்தொதுக்கக்கூடிய கடமைகளில் கீழ்க்குறிப்பிடப்பட்டவைகளும் அடங்கும்.

1. பாடசாலையின் வழங்கல்கள், சேவைகளின் பணிகளுக்கு உதவியாக இருத்தல்.
2. பாடசாலை வளங்களை முகாமை செய்தல்.
3. ஆவணங்கள், பதிவேடுகள், புள்ளிவிபரங்கள் ஆகியவைகளை ஒழுங்காகப் பேணுதல்.
4. சொத்துக்களின் பாதுகாப்பு மேம்பாடு, கட்டிட நிர்மாணம் அபிவிருத்தி என்பவற்றில் உதவியாக இருத்தல்.
5. பாடசாலையை விட்டுச்சென்ற மாணவர்களின் தேவைகளை இணைப்பாக்குதல்.
6. நிதிகளை ஒருங்கிணைப்பதில் உதவுதல்.
7. பாடசாலையுடன் தொடர்புடைய தொண்டர் அமைப்புக்களை இணைப்பாக்குவதில் உதவுதல்.
8. பாடசாலை விடயத்திற்குப் புறம்பான செயற்பாடுகளில் உதவுதல்.
9. கற்கை ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்கு உதவுதல்.
0. அதிபர், பிரதி அதிபர் ஆகியோரால் குறித்தொதுக்கப்படும் வேறு கடமைகள்.

தற்போது இத்தகைய கடமைகள், ஆசிரியர் ஆளணியினரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பின் அவர்களை அத்தகைய கடமைகளில் இருந்து விடுவித்தல் வேண்டும்.

அத்தியாவசிய சேவை நிபந்தனைகள் :

கடமையின் தன்மைக்கு இணங்க, ஏற்படும் அவசர தேவைகளின் நிமித்தம், அரச திணைக்களம் ஒன்றில் உத்தியோகத்தர் ஒருவருக்கு உரித்தாகவுள்ள சேவை ஏற்புரிமைகள் முகாமைத்துவ உதவியாளர்களுக்கும் உரித்தானதாகும். இவர்கள் பாடசாலை விடுமுறைக்கு உரித்தாகமாட்டார்கள் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அலுவலக நேரம் :**

முகாமைத்துவ உதவியாளரின் அலுவலக நேரம் பாடசாலை ஆரம்பமாகும் நேரத்தில் இருந்து 7.45 மணித்தியாலங்கள் முடிவடையும் வரையாகும்.

(உ-ம் : காலை 8.00 மணிக்கு பாடசாலை ஆரம்பிக்கப்படுமாயின், இவர்களது அலுவலக நேரம் மு.ப.8.00 மணி முதல் பி.ப.3.45 மணிவரையாகும்)

இ. சிவானந்தன்,
மாகாண கல்விப்பணிப்பாளர்.

பிரதி : செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, வ.கி.மா.

எனது இலக்கம் : கசேச/கசே/4/25
அரசாங்க சேவை ஆணைக்குழுவின்
கல்விச் சேவைச்சபை,
இசுருபாய , பெலவத்தை, பத்தரமுல்லை.
1993.07.15

சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,

அதிபர்கள் தரத்திற்கான பதவி உயர்வு/நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு தரத்திற்கேற்ற பதவிகளை வழங்குதல்.

---

அதிபர்கள் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய தரங்களைப் பெற்றுள்ள அதிபர்களுக்குப் பாடசாலைகளின் தரத்திற்கமைய கீழ்க்காணும் பதவிகளில் நியமனம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

(அ) அதிபர்

(ஆ) பிரதி அதிபர்

(இ) உதவி அதிபர்

02. உங்கள் பிரதேசத்திலுள்ள தரத்திற்கேற்ப உரிய பதவிகளை வழங்க முடியாத அதிபர் தரம் பெற்றுள்ள அதிபர்களின் பெயர் அட்டவணையொன்றினை அவ்வாறு பதவிகள் வழங்க முடியாமைக்கான காரணங்களுடன் கல்விச் சேவைச் சபைக்கு இரு வாரங்களுக்குள் அனுப்பி வைக்கவும்.

கல்விச் சேவைச் சபையின் பணிப்பின்படி.

ஒப்பம். ஏ.எஸ். வீரரத்ன
செயலாளர்
அரசாங்க சேவை ஆணைக்குழுவின்
கல்விச் சேவைச் சபை.

பிரதிகள் :-
1. கல்வி, உயர் கல்விச் செயலாளர்.
2. பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றறிக்கை இலக்கம்: 1998/27 எனது இல: 14/பொதி1/2(1)

கல்வி, உயர்கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பத்தரமுல்லை.
1998.07.[illegible] ஆந்திகதி.

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,

## அதிபர் வெற்றிடங்கள் நிரப்பப்படுதல்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள விடயம் பற்றிய 93/15 இலக்கங்கொண்ட 1993.09.10 திகதிய எனது சுற்றுநிருபம் இத்தால் வலுவற்றதாக்கப்படுகிறது.

02. பாடசாலைகளின் அதிபர் வெற்றிடங்களைப் பூரணப்படுத்தும்போது கீழ்க் குறிப்பிடப்படும் ஒப்பளவுகளின் அடிப்படையில் தகைமை பெற்றவர்களைத் தெரிவு செய்து நியமனம் வழங்கப்பட வேண்டும்.

(அ) தேசிய பாடசாலைகளின் அல்லது 1ஏ,பி,சி பாடசாலைகளின் வெற்றிடங்களுக்கு இலங்கைக் கல்வி நிருவாகசேவை 1,11,111 வகுப்புக்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும், இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த 1ஆம் தர உத்தியோகத்தர்களும் விண்ணப்பிக்கத் தகைமை பெற்றவர்களாகின்றனர்.

(ஆ) 2ஆம், 3ஆம் தரப் பாடசாலைகளுக்கு முறையே அதிபர் சேவை 11ஆம் 111ஆம் தர அதிபர்கள் விண்ணப்பிக்கத் தகைமை பெறுகின்றனர்.

03. விசேட சந்தர்ப்பங்களைத் தவிர உள்ள சகல சந்தர்ப்பங்களிலும், விண்ணப்பங்கள் கோரப்பட்டுத் தகைமை பெற்றுள்ளவர்களிலிருந்து தகுதியானவர்கள் தெரிவு செய்யப்பட்டு அதிபர் பதவிகளுக்கு நியமிக்கப்பட வேண்டும்.

04. 1ஏ,பி,சி பாடசாலைகளின் அதிபர் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படும் பொழுது அதற்கு 03 மாதகாலத்திற்கு முன்பு மாகாணக் கல்விப் பொறுப்பாளர்களால் அது சம்பந்தமாகக் கல்வி, உயர்கல்வி அமைச்சுக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

05. அதிபர்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தகுதியானவர்களைத் தெரிவு செய்யக் கல்வி, உயர்கல்வி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

06. அதிபர்கள், தெரிவின்போது தகுதியானவர்கள் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் அவ்வாறு தகுதியான ஒருவர் நிரந்தரமாக நியமிக்கப்படும்வரை குறைந்த தரத்திலான ஓர் அதிபரை அல்லது ஓர் ஆசிரியரை உரிய வெற்றிடத்திற்குத் தற்காலிகமாக ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. குறைந்த தர அதிபர் ஒருவர் இருக்கும் பாடசாலையொன்றில் எக்காரணம் கொண்டும் கூடிய தர அதிபர் ஒருவரைப் பிரதி அதிபராக நியமிக்கக் கூடாது.

08. அதிபர் பதவியொன்றிற்குப், பதில் அதிபராக அல்லது கடமை நிறைவேற்று அதிபராக ஓர் உதவியாசிரியரை மாற்றவோ பதவி உயர்வு செய்யவோ கூடாது. உரிய அதிபர் ஒருவர் நியமிக்கப்படும்வரை தற்காலிகமாகக் கடமை புரிவதற்கு முதநிலை உதவி ஆசிரியரொருவரை நியமித்துக் கொள்ள முடியும்.

09. அதிபர் வெற்றிடங்களை விளம்பரம் செய்து பல அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு சபையை நிறுவி அதன் மூலம் தெரிவுகள் நடைபெற வேண்டும்.

ஒரு தேசிய பாடசாலையில் அல்லது 1ஏ, பி, சி, பாடசாலையிலெனில் கல்விச் சேவைக் குழுவினதும் மாகாணக் கல்வி அமைச்சினதும் பிரதிநிதிகளைக் கொண்ட நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றை மத்திய கல்வி அமைச்சு மூலம் அமைத்துக்கொள்ள முடியும். ஏனைய பாடசாலைகள் சம்பந்தப்பட்ட வரையில் மாகாணக் கல்விச் செயலாளர்/ மாகாணக் கல்விப் பணிப்பாளர் என்பவர்களால் (தெரிவு செய்வதற்கான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கு) நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட நேர்முகப் பரீட்சைக்குழுவொன்றை அமைத்துக் கொள்ள முடியும்.

10. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவின் இணக்கப்பாட்டுடன் இச்சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

சேனாநாயக்க ஜயசேன,
மேலதிக செயலாளர்.

ஒப்பம்: ஏ. அந்ரா டி சில்வா
செயலாளர்,
கல்வி, உயர் கல்வி அமைச்சு.

பிரதி:- அ.சே.ஆ.க.சே.கு./செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இலக்கம்: கசேச/ஆ/கசே/4/26
அரசாங்க சேவை ஆணைக்குழுவின்
கல்விச் சேவைச் சபை,
'இசுருபாய',
பெலவத்தை, பத்தரமுல்லை.
1994.08.02.ஆந் திகதி.

மாகாணக் கல்விப் பணிப்பாளர்,

அதிபர் தரத்திற்கு நியமனம்/பதவி உயர்வு பெற்றுள்ள
ஆசிரியர்களுக்கு தரத்திற்கு ஏற்ப பதவி வழங்குதல்.
(அதிபர் 1, 11, 111)

எனது சம இலக்கமும் 1994.04.06, 1994.04.12, 1994.06.20 ஆகிய திகதிகள் கொண்ட கடிதங்களுக்கு உங்கள் கவனத்தைச் செலுத்துவதற்கு விரும்புகிறேன்.

02. இலங்கை அதிபர் சேவையின் பதவிகளுக்கான தகைமைக்கு ஏற்ப தேர்ந்தெடுக்கப்பட்ட பதவிகளை வகிப்பவர்களை பதவியில் அமர்த்துவதற்கான உத்தேசிக்கப்பட்டுள்ள [illegible] அதன் பிரகாரம் தற்சமயம் சகல தர அதிபர்களும் தகுதிப்படி பதவியில் அமர்த்தப்பட்டிருப்பதாகவும், சகல அதிபர்களும் கடமையைப் பொறுப்பேற்றுள்ளனரென்றும் கல்விச் சேவைச் சபை கருதுகின்றது. தயவு செய்து இதனை உறுதிப்படுத்தவும். அவ்வாறு செய்யாவிடின் அவ்வாறு செய்து அறியத்தரவும்.

03. யாதேனும் பாடசாலையிலோ பாடசாலைகளிலோ அதிபர்/அதிபர்கள் ஓய்வு பெறுவதால் அல்லது வேறு காரணங்களாலோ ஏற்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தரத்தினைப் பெற்றுள்ள ஆசிரியர்களை நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி மாவட்டம், வலயம், கோட்டம், ஆகியவற்றின் அடிப்படையில் தகைமைக்கமைய, முன்னுரிமைப் பட்டியல் ஒன்றைத் தயாரித்து அதன் பிரகாரம் எதிர்காலத்தில் ஏற்படும் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்கு உங்களுக்கு வசதியாவதுடன், அவ்வாறு செயற்படுவதற்கு குறித்துக் கொள்வீர்களாக. யாரேனும் தரமுடைய அதிபர், அவருக்கு நியமிக்கப்பட்ட பதவியை பாரமேற்பதற்கு முன் வராவிட்டால், அதனையும் குறித்துக் கொள்க.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைச் சபையின் பணிப்பிற்கு அமைய.

ஏ. எஸ். வீரரத்ன
செயலாளர்
கல்விச் சேவைச் சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.
අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2785617
ලේකම් / செயலாளர் / Secretary: 2784812
කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, Fax: 2784846
ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk
ඔබේ අංකය / உமது இல. / Your No. ..............................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education
"ඉසුරුපාය" බත්තරමුල්ල.
"இசுருபாயா" பத்தரமுல்ல.
"Isurupaya" Battaramulla.

பா. சாலை செயற்பாடுகள் தனியார் பாடசாலைகள்

මගේ අංකය / எமது இல. / My No. ED/01/12/02/05/01
දිනය / திகதி / Date 2004.08.24

சுற்றறிக்கை இலக்கம் 2004/27

மாகாணக் கல்விச் செயலாளர்கள்
மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
தேசிய பாடசாலைகள் /அரசாங்க அங்கீகாரம்
பெற்ற தனியார் பாடசாலை அதிபர்கள்
மற்றும் பிரிவெனாதிபதித் தேரர்கள்.

## பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டு (கணிப்பீட்டு) வேலைத்திட்டம். (6 - 13 தரங்கள்)

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட மதிபபீட்டு வேலைத் திட்டம் தற்போது நாட்டிலுள்ள பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. எனினும் அவ்வேலைத் திட்டம் வகுப்பறையில் அமுல் நடாத்துகையில் வேறுபட்ட பிரயோகச் சிக்கல்கள் ஏற்படுவதாக தெரியவந்துள்ளது. வகுப்பறையில் இவ்வேலைத்திட்டத்தை கூடிய வினைத்திறனுடனும் பயன் தருவகையிலும் அமுல் நடாத்தப்படுவதற்குக் கீழ்க் குறிப்பிடப்படும் திருத்தங்களைச் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

01. 6 - 9 தரங்கள்

1.1 கணிப்பீடு (மதிப்பீடு) செய்யப்படும் தடவைகள்

எனது HRD/PPM/2002/23 இலக்கத்தையும் 2002.10.24 ஆம் திகதியையும் கொண்ட சுற்றுநிருபத்தின் SBA-6-9/02 படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கணிப்பீடு செய்யப்படவேண்டிய (மதிப்பீடு) சந்தர்ப்பங்களின் தொகை பின்வரும் முறையில் திருத்தியமைக்கப்படுகின்றது.

1.1.1 6,7,8 - மற்றும் 9 தரங்களில் ஒவவொரு பாடத்திலும் வாரத்திற்குக் கற்பிக்க வேண்டிய பாட வேளைகளின் எண்ணிக்கைக்குச் சமனான மதிப்பீட்டு சந்தர்ப்பங்களை ஒரு பாடசாலைத் தவணைக்குள் கட்டாயம் முடித்தல் வேண்டும்.

உதாரணம்: 8ஆம் தரத்தில் 6 வாரமொன்றில் ஆங்கில பாடத்தைக் கற்பிக்க வேண்டிய பாடவேளைகளின் எண்ணிக்கை 5 ஆகும். அதன்படி அப்பாடத்திற்காக ஒரு தவணைக்காலத்தில் கட்டாயம் முடிக்கப்பட வேண்டிய மதிப்பீட்டுச் சந்தர்ப்பங்கள் 5 ஆகும்.

1.1.2 இதன்படி ஓர் ஆண்டிற்குள் செய்யப்பட வேண்டிய மொத்தக் கணிப்பீட்டு சந்தர்ப்பங்களின் தொகை ஒரு தவணைக்குள் கட்டாயம் முடிக்கப்பட வேண்டிய கணிப்பீட்டுச் சந்தர்ப்பங்களைப் போன்று மூன்று மடங்குகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.1.3 கணிப்பீட்டுச் சந்தர்ப்பங்களுக்குச் சமுகமளிக்க முடியாத மாணவர்களுக்கு மாற்றுக் கணிப்பீட்டுச் சந்தர்ப்பங்கள் பெற்றுக் கொடுத்தல் கட்டாயமானதாகும்.

1.2 9 ஆம் தரத்தின் திறமைச் சான்றிதழ

1.2.1 9ஆம் தரத்தின் இறுதியில் வழங்கப்படுகின்ற திறமைச் சான்றிதழுக்காக 9 ஆம் தரம் தொடர்பாகப் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டுச் சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட தரங்களையும் 9 ஆம் தர இறுதியில் நடாத்தப்படுகின்ற அடைவுப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளப்பட்ட தரங்களையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

1.2.2 அச்சான்றுப் பத்திரம் எனது HRD/PPM/2002/23 இலக்கத்தையும் 2002-10-24 ஆம் திகதிய சுற்றுநிருபத்தின் SBA/6-9/01 படிவத்தின்படி வழங்கப்பட வேண்டும்.

1.2.3 அதன்படி எனது HRD/PPM/2002/23 இலக்கத்தையும் 2002.10.24 ஆம் திகதியையும் கொண்ட சுற்றுநிருபத்தின் 2.1, 2.3, 2.4, 2.5 மற்றும் 2.6 பந்திகள் வலுவிழக்கச் செய்யப்படுகின்றன.

1.2.4 மேற்படி சுற்றுநிருபத்தின் 2.7 பந்தி கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்படுகின்றது.

"பிரயோக மற்றும் தொழிநுட்பத்திறன் பாடங்களின் மதிப்பீட்டுச் செயற்பாடுகள் தொடர்பாக எனது 2001/32 இலக்கத்தையும் 2001.11.02 திகதியையும் கொண்ட சுற்று நிருபத்தின்படி செயற்பட வேண்டும். 9 ஆம் தர இறுதியில் வழங்கப்படுகின்ற திறமைச் சான்றிதழுக்குப் பிரயோக மற்றும் தொழிநுட்பத்திறன் பாடம் தொடர்பான தரத்தைத் தீர்மானிப்பதற்கும் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது 9 ஆம் தரத்தில் செய்யப்படுகின்ற பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டுச் சந்தர்ப்பங்கள் மாத்திரமே"

1.3 மதிப்பீட்டு அறிக்கைகளை வைத்துக் கொள்ளுதல்

1.3.1 மாணவ முன்னேற்றக் குறிப்பு

1.3.1.1 இங்கு வர்ணக் குறியீடுகள் (தற்போது உபயோகத்திலுள்ள வட்டவடிவான குறியீடு) இட்டு மாணவர் அடைவு மட்டத்தைக் காண்பித்தல் அவசியமானதன்று.

1.3.1.2 ஒவ்வொரு மதிப்பீட்டுச் சந்தர்ப்பங்களிலும் மாணவனுக்கு 20 புள்ளிகளின் அளவில் வழங்கி 100 புள்ளிகளின் அளவுக்கு மாற்றியமைத்து அறிக்கைப்படுத்தப்பட வேண்டும்.

1.3.1.3 மாணவர் திறன்கள் பின்வரும் முறையில் அறிக்கைப்படுத்தப்பட வேண்டும்.

| புள்ளிகளின் அளவு | திறமை மட்டம | |
|---|---|---|
| 81 – 100 | திறமை பெறப்பட்டுள்ளது | மிகநன்று |
| 61 – 80 | திறமையை அண்மித்துள்ளது | நன்று |
| 21 – 60 | திறமை பெறப்படவில்லை | குறைவு |
| 0 - 20 | திறமை பெறப்படவில்லை | மிகக் குறைவு |

மேற்குறிப்பிடப்பட்டுள்ளவாறு தயாரிக்கப்பட்ட மாணவ மதிப்பீட்டு அறிக்கைகள் ஆசிரியர் பொறுப்பில் வகுப்பறையில் வைக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.3.2 மாணவ பக்கவாட்டம்

இதை மாணவர்களுக்குத் தமது அப்பியாசப் புத்தகங்களின் இறுதிப் பக்கத்தில் தயாரித்துக் கொள்வதற்குத் தேவையான அறிவுறுத்தல்களை வழங்குவது ஒவ்வொரு பாடப் பொறுப்பாசிரியர்கள், வகுப்பாசிரியர்கள் என்போரால் செய்யப்பட வேண்டும். இம்மாணவ பக்கவாட்டங்கள் ஆசிரியரால் தொடர்ச்சியாக மேற்பார்வைக்குட்படுத்தப்பட வேண்டியுள்ளதோடு அதைத் தமது பெற்றார்களுக்குக் காட்ட வேண்டுமென்றும் மாணவர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும். ஒவ்வொரு தவணையின் இறுதியிலும் பாடப் பொறுப்பாசிரியர் தமது கையொப்பத்தை இட்டு இவ்வறிக்கையை உறுதிப்படுத்த வேண்டும்.

1.3.3 அடைவு அறிக்கைகள

ஒவ்வொரு வகுப்பினதும் வகுப்புப் பொறுப்பாசிரியரினால் மதிப்பீட்டு அறிக்கைப் புத்தகமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அப்பெறுமதி அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு மாணவரினதும் அடைவு மட்டம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கேற்பத் தயாரிக்கப்பட்ட அடைவு மட்ட அறிக்கையில் சேர்க்கப்பட்டு ஒவ்வொரு தவணை இறுதியிலும் பெற்றார்களுக்கு அனுப்புவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

<u>மாணவரடைவு மட்டம் பற்றிய அறிக்கை</u>

மாணவரின் பெயர் : ..........................................................................................

தரம் : ........................ வருடம் : ........................ தவணை : ....................

| பாடம் | தவணைக்குரிய மதிப்பீட்டு சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | திறமை மட்டம் | | |
|---|---|---|---|---|
| | | தேர்ச்சி பெற்றுள்ள | தேர்ச்சி பெறுவதற்கு அண்மித்துள்ள | தேர்ச்சி பெறாதுள்ள |
| | | | | |

வகுப்பாசிரியரின் குறிப்பு:..........................................................................................
..........................................................................................................................
..........................................................................................................................

வகுப்புப் பொறுப்பாசிரியரின் ஒப்பம்: .......................................... திகதி: ..........................

அதிபா/பிரதி அதிபா/இன் ஒப்பம்: .......................................... திகதி: ..........................

தாய/தகப்பன்/பாதுகாவலரின் கருத்துக்கள்: ...................................................................
..........................................................................................................................
..........................................................................................................................

பொறுப்பாளரின் ஒப்பம்: .......................................................... திகதி: ..........................

02. 10 - 11 தரங்களுக்கு

2.1 கணிப்பீடு காணும் தடவைகள்

2.1.1 வாரமொன்றிற்குக் கற்பிப்பதற்குரிய பாடவேளைகளுக்குச் சமமான எண்ணிக்கைக் கணிப்பீடு செய்யப்படும் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை ஒரு பாடசாலைத் தவணைக் காலத்தில் கட்டயம் செய்து முடிக்கப்பட வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.1.2 அதன்படி ஆண்டிற்குள முடிக்கப்பட வேண்டிய மொத்தக் கணிப்பீட்டு சந்தர்ப்பங்களின் தொகை ஒரு தவணைக்குள் கட்டாயம் முடிக்கப்பட வேண்டிய கணிப்பட்டு சந்தர்ப்பங்களைப் போன்று மூன்று மடங்காகும்.

2.1.3 கணிப்பீடு காணும் சந்தர்ப்பங்களில் பங்குபற்றுவதற்கு முடியாமற் போகும் மாணவர்களுக்கு மாற்றுக் கணிப்படடுச் சந்தர்ப்பங்களை வழங்குவது கட்டாயமானதாகும்.

2.2 சான்றிதழ்படுததுவதற்கான கணிப்பீட்டுச் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை

2.2.1 கணிதம், விஞ்ஞானமும் தொழிநுட்பவியலும ஆகிய இரண்டு பாடங்களுக்கும் வெவ்வேறாக ஒரு தவணைக்குள் கட்டாயம் முடிக்கப்பட வேண்டிய கணிப்பட்டு எண்ணிக்கைகள் ஒரு தவணைக்கு 05 வீதமெனத் திருத்தியமைக்கப்படுகின்றது.

2.2.2 பரீட்சைத் திணைக்களத்தினால சான்றிதழ்படுத்துவதற்காக பயன்படுத்திக் கொள்ளும் கணிப்பீட்டுச் சந்தர்ப்பங்களாக 10 ஆம் தரத்தின் 1, 2 மற்றும் 3 தவணைகளினதும 11ஆம் தரத்தின் 1, 2 தவணைகளினதும கணிப்பீடுச சந்தர்ப்பங்கள் மாத்திரமேயாகும்.

2.2.3 அதன்படி பரீட்சை ஆணையாளர் நாயகரின் SBA/2002/03 மற்றும் 2002.07.02 சுற்று நிருபத்தின் கணிதம், விஞ்ஞான தொழிநுட்பவியல் பாடங்களாகிய இரண்டு பாடங்களுக்கும் ஒரு தவணைக்குள் செய்யப்பட வேண்டிய மதிப்பீட்டுத் தடவைகளின் எண்ணிக்கை திருத்தியமைக்கப்படுகின்றன.

03. 12 - 13 தரங்களுககு

3.1 12 – 13 தரங்களின் சான்றிதழ்படுத்தல் தொடர்பான மதிப்பீட்டுச் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை

இல. 2003/13 ஐயும் 2003.09.31 ஐயும கொண்ட சுற்றுநிருபத்தின் 4.1, 4.2 பந்திகளும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் SBA/AL/2003/01 மற்றும் 2004.04.07 ஆம் திகதிய சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டெண்ணிக்கை கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் திருத்தியமைக்கப்படுகின்றது.

| | ஒரு தவணையில் பல்வேறு மதிப்பீட்டு வேறுபாடுகளின் கீழ் முடிக்கப்பட வேண்டிய மதிப்பீடுகளின் எண்ணிக்கை | ஒரு தவணையில் செய்யவேண்டிய பிரயோக வேலைகளின் எண்ணிக்கை | பேச்சு மட்டத்தைத் தீர்மானிப்பதற்காக 12-13 தரங்களில் இருந்து பெற்றுக் கொள்ளும் மொத்த மதிப்படுகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| 1. பிரயோக வேலைகளுடனான பாடங்களுக்கு | 02 | 01 | 15 |
| 2. ஏனைய சகல பாடங்களுக்கும் | 03 | - | 15 |
| 3. சாதாரண ஆங்கிலம | 03 | - | 15 |
| 4. ஒற்றைச் செயற்றிட்டம | - | - | 01 |
| 5. குழுச் செயற்றிட்டம் | - | - | 01 |

சான்றுதல்படுத்துவதறகாக மேற்குறிப்பிடப்பட்டுள்ள கணிப்பீட்டு சந்தர்ப்ப எண்ணிக்கையைத் தொடர்புபடுத்திக் கொள்வதாக இருப்பினும் வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் போது உரிய பிரயோகச் செயற்பாடுகள் எல்லாவற்றையும் முடிப்பது கட்டாயமானதாகும். மாணவரின் திறமையை விருத்தி செய்வதற்காக தேவைக்கேற்ப பல்வேறு வேறுபாடுகளின் கீழ் உரிய கணிப்பீட்டுச் சந்தர்ப்பத் தடவைகளை விடக்கூடுதலான கணிப்பீட்டுச் சந்தர்ப்பங்களைச் செயற்படுத்துவதற்கு ஆசிரியர்களுக்கு எவ்விதத் தடைகளுமில்லை

04. பாடசாலையை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு (கணிப்பிட்டு நெறிப்படுத்தப்படல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீடு (கணிப்படு) நெறிப்படுத்தப்படல் பாடசாலையின் உள்ளக நெறிப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக முறையாக அமுல்நடாத்தப்பட வேண்டும். அதற்காக வேண்டிக் கீழ்க் குறிப்பிடப்படும் முறையில் உள்ளக நெறிப்படுத்தற் சபைகள நிறுவப்பட வேண்டும். நெறிப்படுத்தற் சபைகளின் மூலம் அமுல் நடாத்தப்படுகின்ற நெறிப்படுத்தற் சந்தர்ப்பங்கள் பற்றி முறையான அறிக்கைப்படுத்தல் காணப்படல் வேண்டும்.

<u>6 – 9 தரஙகளுக்கு</u>

| | | |
|---|---|---|
| அதிபா/பிரதி அதிபா | - | 01 |
| 6 – 9 பகுதித் தலைவா | - | 01 |
| தர இணைப்பாளர் | - | 01 |
| பாட இணைப்பாளா | - | 02 |
| | | 05 |

<u>10 – 11 தரங்களுக்கு</u>

| | | |
|---|---|---|
| அதிபா/பிரதி அதிபா | - | 01 |
| பகுதித் தலைவர் | - | 01 |
| தர இணைப்பாளர் | - | 01 |
| பாட இணைப்பாளா | - | 01 |
| மதிப்பீட்டிணைப்பாளா | - | 01 |
| | | 05 |

<u>12 – 13 தரங்களுக்கு</u>

| | | |
|---|---|---|
| அதிபா | - | 01 |
| பிரதி அதிபர் - (கல்வி அபிவிருத்தி) | | 01 |
| பகுதித் தலைவர் (பாடசாலையில நடைபெறும் பாடத்துறைகளின்படி ஒவ்வொரு பாடத்துறையிலிருந்தும் ஓர் ஆசிரியர் வீதம்) | | 03 |
| | | 05 |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள மேற்பார்வைப் பதவிகள் இல்லாத சிறிய பாடசாலைகளுக்கு அதிபரையும் இரண்டு ஆசிரியர்களையும் கொண்ட ஒரு குழுவைத் தெரிவு செய்து கொள்ள வேண்டும்.

வலய, மாகாணக் கல்வித் திணைக்கள அமைச்சு மட்டத்தில் பாடசாலை மேற்பார்வைச செயற்பாடுகளின் போது பாடசாலை அடிப்படையிலான மதிப்பீடு பற்றி விசேட கவனத்தைச் செலுத்தி உரிய அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதன்படி ஆண்டிற்குள் முடிக்கப்பட வேண்டிய மொத்தக் கணிப்பீடு காணப்படுகின்ற சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை ஒரு தவணையில் கட்டாயம் முடிக்கப்பட வேண்டிய கணிப்பீட்டு சந்தர்ப்பங்களின் எண்ணிக்கையைப் போன்று மூன்று மடங்கானதாக இருக்கும்.

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டம் பற்றி இதற்கு முன்பு என்னாலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினாலும் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை விதிகள் மற்றும் அறிவுறுத்தல்கள் என்பனவற்றிற்கு மேலாக இச்சுற்றறிக்கை அமுலில் இருக்கும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கேற்ப வகுப்பறையில் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டுச் செயற்பாடுகளை மிகவும் பலன் தருவகையிலும் சிறந்த முறையிலும் அமுல் நடாத்தப்படுவதற்கு சகல பாடசாலை அதிபர்களினாலும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்று எதிர்பார்க்கிறேன்.

என்.முண்டிகல
கல்விப்பணிப்பாளர்
(பாடசாலை செயற்பாடுகள் தனியார் பாடசாலைகள்)

ஒப்பம்:வைத்திய தாரா டி மெல்
செயலாளர்.
கல்வி அமைச்சு

பிரதிகள்:

1. தலைவர் - தேசிய கல்வி ஆணையம்
2. பணிப்பாளர் நாயகம் - தேசிய கல்வி நிறுவகம்.
3. பரீட்சை ஆணையாளர் நாயகம் - இலங்கைப் பரீட்சைத் திணைக்களம
4. வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
5. கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දුරකථන/தொலைபேசி இல/Telephone Nos.
අමාත්‍ය / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2785617
ලේකම් / செயலாளர் / Secretary: 2784812
කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, Fax: 2784846
ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education
"ඉසුරුපාය"
බත්තරමුල්ල.
"இசுருபாய"
பத்தரமுல்ல.
"Isurupaya"
Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. ED/01/12//01/03/13 பா. சாலைச் ........செயற்பாடுகள் தனியார் பாடசாலைக் கிளை.

ඔබේ අංකය / உமது இல. / Your No. ..........................................

දිනය / திகதி / Date 2004.07.21

சுற்றறிருப இலக்கம்: 2004/27

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்
மாகாணக்கல்விப் பணிப்பாளர்கள்
வலயக்கல்விப் பணிப்பாளர்கள்
கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள்
அதிபர்கள்

## பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீடுகள் 10, 11, 12 தரங்களைக் கொண்ட பாடசாலைகளுக்கு க.பொ.த (உயர்தர) மாணவர்களை அனுமதித்தல்

பாடசாலைகளுக்குப் பிள்ளைகளைச் சேர்ப்பது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 2004.05.31 ஆம் திகதிய 2004/18 சுற்றறிக்கையின் IV வது பகுதியில் க.பொ.த.(உ/த) (12 ஆம் தரத்திற்கு) வகுப்புக்களுக்குப் பிள்ளைகளைச் சேர்ப்பது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்பகுதியின் 17ஆம் இலக்க (அ) பந்தியின் 1ஆம் வாசகத்தின்படி 2002 டிசம்பர் மாதம் மற்றும் இனிமேலும் நடாத்தப்படும் க.பொ.த(சா/த) பரீட்சையின் பெறுபேறுகளின்படி க.பொ.த(உயர்தர) வகுப்புக்களைத் தொடர்வதற்குத் தேவையான தகைமைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதன்படி உயர்தர வகுப்பிற் சேர்வதற்குத் தேவையான திறமைச் சித்திகளில் ஒரு சிறப்புச் சித்தியை மாத்திரம் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீடுகளின்கீழ் பெற்றுக்கொள்ள முடியுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் இரண்டாம் முறை பாடசாலை மூலம் க.பொ.த(சா/த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு தற்போது பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீடுகள் அமுல்நடாத்தப்படுவதில்லை. அவ்வாறு பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீடுகளின்கீழ் சிறப்புச் சித்தியின் தேவையைப் பூர்த்தி செய்வதற்குச் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை.

எனவே கீழ்க்குறிப்பிடப்படும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்துள்ள இரண்டாம் தடவை பாடசாலை விண்ணப்பதாரி ஒருவராக தோற்றுகின்ற ஒரு மாணவர் முதலாம் ஆண்டில் அவரால் பெற்றுக்கொண்ட பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டுச் சிறப்புச் சித்தியை உயர்தரத்திற்காக அவசியப்படும் சிறப்புச் சித்தியின் தேவைக்கு பதிலாகக் கொள்ளப்படலாம்.. இச்சிறப்புச் சித்தித் தேவை கணிதம் மற்றும் தாய்மொழி ஆகிய பாடங்களுக்கான தேவைகளுக்கு உபயோகப்படுத்த முடியாது.

ஈடுசெய்யக்கூடிய பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீடு திறமைத் தேர்ச்சிக்கு அது தொடர்பான பாடம் முன்னைய ஆண்டின் உரிய பாடத்தின் எழுத்துப் பரீட்சையில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

இவ்வாறு தகைமை பெற்றுள்ள மாணவர்கள் உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்தவர்களாகக் கணிக்கப்பட்டு வகுப்பில் சேர்க்கப்படலாம்.

டாக்டர் டாரா டி மெல்
செயலாளர்,
கல்வி அமைச்சு..

பிரதிகள்

1. பரீட்சை ஆணையாளர் நாயகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister } 784807, 784832

ලේකම් / செயலாளர் / Secretary } 784811

කාර්යාලය / அலுவலகம் / Office } 785141-50, Fax: 784846

ඊමේල් - ஈமெயில்/E-mail isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. } ..................

මානව සම්පත් සංවර්ධන, අධ්‍යාපන හා සංස්කෘතික කටයුතු අමාත්‍යාංශය
மனிதவள அபிவிருத்தி, கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு
Ministry of Human Resource Development, Education & Cultural Affairs

'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ, බත්තරමුල්ල
இசுருபாய, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை, பத்தரமுல்லை.
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte, Battaramulla

பாடசாலை செயற்பாடுகள்,
தனியார் பாடசாலைக் கிளை

මගේ අංකය / எமது இல. / My No. } நடி.01/12/01/04/20

දිනය / திகதி / Date } 2004.01.23.

சுற்று நிருப இலக்கம் 2004/02

மாகாணக் கல்விச் செயலாளர்கள்
மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்
அதிபர்கள்
பிரிவெனாதிபதித் தேரர்கள் மற்றும்
அரசால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை அதிபர்கள்

## பாடசாலை மட்ட மதிப்பீட்டு வேலைத் திட்டத்தின் கீழ் க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்கு வெளிவாரி விண்ணப்பதாரர்களாக தோற்றுதல் 2005 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும்

கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உ.த) பரீட்சைக்குப் பாடசாலை மட்டத்திலான மதிப்பீட்டு வேலைத் திட்டத்தின் கீழ் மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் தரங்கள், 2005 ஆம் ஆண்டு தொடக்கம் நடாத்தப்படும் க.பொ.த (உயர்தர) பரீட்சைகளுக்காக இலங்கைப் பரீட்சைத் திணைக்கள மூலம் வழங்கப்படும் சான்றுப் பத்திரத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அவ்வாறே க.பொ.த. (உ.த) பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு முன்பு சகல விண்ணப்பதாரர்களாலும் இம் மதிப்பீட்டு வேலைத்திட்டத்தின் கீழ் வகைகள், தேர்ச்சி, அபிவிருத்தி செயற்றிட்டங்கள் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் கட்டாயமானதாகும்.

அதன்படி முதலாம் தடவையாக க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்கு வெளிவாரிப் பரீட்சார்த்திகளாகத் தோற்றுவதற்கு எதிர்பார்ப்பவர்களுக்கு வாய்ப்புக்களை வழங்குவதற்காகக் கீழ்க் குறிப்பிடப்படும் செயன்முறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

02. க.பொ.த.(உ.த) பரீட்சைக்கு தோற்றுவதற்கு உத்தேசித்துள்ள வெளிவாரி விண்ணப்பதாரிகள் இரண்டுவகையினராவர்.

2.1. எச் சந்தர்ப்பத்திலும் பாடசாலை விண்ணப்பதாரி ஒருவராகத் தோற்றாது முதற் தடவையாக வெளிவாரி விண்ணப்பதாரரொருவராகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்ப்பதோடு பரீட்சைக்குத் தோற்றும் ஆண்டின் ஜனவரி 01 ஆம் திகதியன்று 21 வயதுக்குக் கூடிய வெளிவாரி விண்ணப்பதாரிகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.2. ஒரு போதும் பாடசாலை விண்ணப்பதாரியொருவராகத் தோற்றாது முதல் தடவையாக வெளிவாரி விண்ணப்பதாரி ஒருவராகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்ப்பதோடு பரீட்சைக்குத் தோற்றும் ஆண்டின் ஜனவரி 01ஆந் திகதியன்று 21 வயதுக்குக் குறைந்த வெளிவாரி விண்ணப்பதாரிகள்.

03. இதில் 2.1 வகைக்குரிய வெளிவாரி விண்ணப்பதாரர்கள் க.பொ.த (உயர்தர) பரீட்சையில் பூரணப்படுத்த வேண்டிய பிரயோகச் செயற்பாடுகள், பாட இணைப்புச் செயற்றிட்டங்கள், தனியாள் செயற்றிட்டங்களிலிருந்து விலக்களிக்கப்படுவர்.

04. இவற்றுள் 2.2 வகையைச் சேர்ந்த வெளிவாரி விண்ணப்பதாரர்கள் க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்கு, விண்ணப்பங்களை அனுப்புவதற்கு முன்பு கீழ்க் குறிப்பிடப்படும் தேவைகளைப் பூரணப்படுத்தி இருத்தல் அத்தியாவசியமானதாகும்.

4.1. பிரயோகச் செயற்பாடுகளும் பாட இணைப்புச் செயற்றிட்டங்களும்.

க.பொ.த. (உயர்தர) பாடத் துறைகளின் பிரயோகச் செயற்பாடுகளுடன் கூடிய பாடங்கள் (பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம் மனைப் பொருளியல் சங்கீதம், நடனம்) தொடர்பாக ஒரு பாடத்திற்குப் பிரயோகச் செயற்பாடுகள் மூன்று வீதம் பூரணப்படுத்தப்பட வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட பாடங்களைத் தவிர ஏனைய சகல பாடங்களுக்கும் (அதாவது பிரயோகச் செயற்பாடுகளற்ற பாடங்களுக்காக) பாடத்துடன் தொடர்பான் செயற்றிட்டம் ஒன்று நிறைவேற்றப்பட வேண்டும்.

4.2 தேர்ச்சி அபிவிருத்தி தனியாள் செயற்றிட்டங்கள்.

மேலே உள்ள 4.1 இற்குப் புறம்பாக தேர்ச்சி அபிவிருத்தி தனியாள் செயற்றிட்டமொன்று பூரணப்படுத்தப்பட வேண்டும். இது. தான் விரும்பும் ஏதாவது பாட விடயம் சம்பந்தப்பட்டதாக அமையலாம்.

05. மேலேயுள்ள 4.1 மற்றும் 4.2 இன் கீழ் காட்டப்பட்டுள்ள செயற்பாடுகள் மற்றும் செயற்றிட்டங்களைப் பூரணப்படுத்துவதற்காகப் பதிவு செய்யும் விண்ணப்பதாரர்களுக்குக் கல்வி அமைச்சினால் பாடசாலைகள் பெற்றுக் கொடுக்கப்படும்.

06. ஒரு போதும் பாடசாலை விண்ணப்பதாரியொருவராகத் தோற்றாது முதன்முறையாக வெளிவாரி விண்ணப்பதாரியாக க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் 21 வயதுக்குக் குறைவான விண்ணப்பதாரர்கள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளைப் பூரணப்படுத்திக் கொள்வதற்காகப் பரீட்சைக்கு விண்ணபபிக்கும் வருடத்திற்கு முன்னுள்ள ஆண்டின் ஜனவரி 31 ஆந் திகதிக்கு முன்பு (உதாரணம்-2005 ஆம் ஆண்டிற்காக விண்ணப்பிப்போர் 2004.01.31 ஆந் திகதிக்கு முன்பு) கல்வி அமைச்சின் பாடசாலைச் செயற்பாட்டுக் கிளையில பதிவு செய்ய வேண்டும்.

இங்கு பதிவுக் கட்டணம் 100/- ரூபாவாவதுடன் கீழே 07 (1),(11), (111) இல் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகளை வழங்குவதற்குத் தேவையான பணத்தையும விண்ணப்பதாரர்கள் கல்வி அமைச்சிற்குச் செலுத்த வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. இவ்வாறு பதிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களின் மதிப்பீட்டு வேலைகளை நிறைவேற்றுதற்காக அனுப்பப்படுகின்ற பாடசாலைகளின் ஆசிரியர்கள் அதிபர்கள் என்போருக்குக் கீழ்க் குறிப்பிடப்படும் வகையில் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

(1) மதிப்பீட்டு வேலைகளில் பங்கு கொள்ளும் ஓர் ஆசிரியருக்கு ஒரு பாடம் தொடர்பில் ஒரு விண்ணப்பதாரிக்காக 100/= ரூபா.

(11) தேர்ச்சி அபிவிருத்தி தனியாள் செயற்றிட்ட மதிப்பீட்டிற்காக 100/= ரூபா.

(111) மேற்படி ஒழுங்குகளைச் செய்வதற்காக அதிபருக்கு ஒரு விண்ணப்பதாரருக்காக100/= ரூபா.

இப்பணம் விண்ணப்பதாரர்களால் இவ் அமைச்சுக்கு செலுத்தப்படும் பணத்திலிருந்து வழங்கப்படுவதற்கு ஒழுங்குகள் மேற் கொள்ளப்படும்.

08. மேலே 2.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய செயற்பாடுகள் உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட பின்னர் அவ்வாறு பூரணப்படுத்தியதாக விண்ணப்பதாரிகள் அனுப்பப்பட்ட பாடசாலை அதிபரினால் க.பொ.த உயர்தர பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பப்பத்திரத்தில் உரிய முறையில் உறுதிப்படுத்தியதன் பின்பு உயர்தரப் பரீட்சைக்காகப் பரீட்சைத் திணைக்களத்திற்கு விண்ணப்பிப்பதற்கு விண்ணப்பதாரர் வழிவகை செய்து கொள்ள வேண்டும்.

09. இதன்படி என்னால் வெளியிடப்பட்டுள்ள 1999 ஜூலை மாதம் 30 ஆந் திகதிய 99/25 இலக்கச் சுற்று நிருபத்தைச் செயலற்றதாக்குகிறேன். இச் சுற்று நிருபத்தில் காட்டப்படுகின்ற விதிமுறைகளுக்கேற்ப நடவடிக்கைகளை மேற் கொள்பவர்களுக்கு மாத்திரம் வெளிவாரிப் பரீட்சார்த்தி ஒருவராகத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படுமென்பதை வலியுறுத்துகிறேன்.

இந்திராணி காரியவசம்
மேலதிக செயலாளர்.
(கல்வி பண்புசார் அபிவிருத்தி)

ஒப்பம்/வீ.கே. நாணயக்கார
செயலாளர்
மனிதவள அபிவிருத்தி கல்வி,
கலாசார அலுவல்கள் அமைச்சு.

பிரதிகள்:

1. பரீட்சை ஆணையாளர் நாயகம் - இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
2. பணிப்பாளர் நாயகம் - தேசிய கல்வி நிறுவகம்
3. தவிசாளர் - பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு
4. தலைவர் - தேசிய கல்வி ஆணைக் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இல : ஆ/7/3/1/31
அரசாங்க நிர்வாக
உள்நாட்டலுவல்கள்
அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு - 7
23 ஆகஸ்ட் 2005

அமைச்சின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாபேருக்கும்.

## தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 11 ஆம் பிரிவுக்கான திருத்தம்

வங்கிகளுக்கூடாக சொத்துக்கடன் வழங்குவது தொடர்பாக தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 11 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்குப் பதிலாக புதிய ஏற்பாடுகளைப் பதிலீடு செய்து 2005.03.31 இல் வழங்கப்பட்ட 08/2005 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை கீழ்க்காணும் பிரிவுகளை சேர்த்துக் கொள்வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

02. 08/2005 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கைக்கான திருத்தங்களாக வழங்கப்பட்ட அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகள் 08/2005(I) 08/2005(II) ஆகியவை இத்தால் இரத்துச் செய்யப்படுவதுடன் அதிலிருந்த ஏற்பாடுகள் தற்போதைய சுற்றறிக்கையில் சேர்க்கப்படுகின்றன. தாபன விதிக் கோவையின் பின்னிணைப்பு 26, பின்னிணைப்பு 28 ஆகியவற்றில் திருத்தம் செய்யப்பட்டு புதிய சேர்க்கைகளாக பின்னிணைப்பு 29 பின்னிணைப்பு 30 ஆகியவை சேர்க்கப்படுகின்றன.

11.1 <u>கடன் வழங்கப்படக்கூடிய நோக்கங்கள்</u>

11.1.6 பொருத்தமான ஒரு இடத்தைக் கொள்வனவு செய்வதற்கும் அத்துடன் அவ்விடத்தில் வீடு ஒன்றை நிர்மாணிப்பதற்கும்.

11.1.7 விண்ணப்பகாரர் ஒருவரின் வாழ்க்கைத் துணைக்குச் சொந்தமான காணியில் வீடு ஒன்றைக் கட்டுவதற்கு / வீட்டில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு/ வீடு ஒன்றில் புதிதாக ஒரு பகுதியை சேர்ப்பதற்கு / பகுதியாக நிர்மாணிக்கப்பட்ட வீடு ஒன்றின் மீதி வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு

11.1.8 ஸ்வர்ணபூமி / ஜயபூமி மானியத்தில் அல்லது காணி சீர்திருத்த ஆணைக்குழு சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட காணியில் வீடு ஒன்றை நிர்மாணிப்பதற்கு நிர்மாணிக்கப்பட்ட வீடு ஒன்றில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு/ வீட்டில் புதிதாக பகுதிகளை சேர்ப்பதற்கு, பகுதியாக நிர்மாணிக்கப்பட்ட வீட்டில் எஞ்சிய வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு.

11.2 <u>தகவுத்திறன்</u>

11:2:3 கணவன் மனைவி ஆகிய இருவரும் அரசாங்க உத்தியோகத்தர்களாக இருப்பின் ஒவ்வொருவரும் தனித்தனியாக கடனுக்கு விண்ணப்பிக்கும் உரித்துடையவர்களாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11.2.3.1 கணவன், மனைவி ஆகிய இருவரும் அரசாங்க உத்தியோகத்தர்களாக இருப்பின் ஒருவரால் கடன் பெறப்பட்ட அதே வங்கியில், சொத்துக்களுக்கான கடன் வழங்கும் வங்கியொன்றிலிருந்து ஏற்கனவே பெற்ற கடனைக் கொண்டு கொள்வனவு செய்யப்பட்ட ஒரு காணியில் வீடொன்றை நிர்மாணிப்பதற்கு / ஏலவே நிர்மாணிக்கப்பட்ட விட்டினைத் திருத்துவதற்கு/ பகுதியாக நிர்மாணிக்கப்பட்ட வீட்டினை பூர்த்தி செய்வதற்கு கடன் பெற்றிராத மற்றவரினால் கூட்டு கடனைப் பெற்றுக் கொள்ள முடியும். எவ்வாறாயினும் முன்னைய கடன் தற்போதைய சுற்றறிக்கை வழங்கப்பட்ட திகதிக்கு முன்பிருந்த வட்டி வீதத்தில் பெறப்பட்டிருப்பின் அம்முன்னைய கடன் அரசாங்கத்தினால் ஏற்கப்பட்ட வட்டிக்கு உரித்துடையதாகாது.

11.2.3.2 கணவன் மனைவி இருவரும் அரசாங்க உத்தியோகத்தர்களாக இருக்கும் சந்தர்ப்பத்தில் வீடொன்றை நிர்மாணிப்பதற்கு / பொருத்தமான காணியை கொள்வனவு செய்து அத்துடன் வீட்டை நிர்மாணிப்பதற்கு / வீடு/ அடுக்கு மாடி வீடு ஒன்றுடனான காணியை கொள்வனவு செய்வதற்கு இருவரும் கூட்டுக்கடன் பெறலாம்.

11.2.5 விண்ணப்பகாரரின் வாழ்க்கைத்துணை அரசாங்க உத்தியோகத்தரல்லாது இருந்த போதும் அந்த வாழ்க்கைத் துணைக்கு சொந்தமான காணியில் வீடொன்றை நிருமாணிப்பதற்கு கூட்டுக்கடனைப் பெறலாம்.

11.2.6 தொழில் புரியும் காலம் முழுவதிலும் ஒரு தடவை மட்டுமே இத் திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்படும் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் நியதிகளின்படி 11.1 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நோக்கங்கள் பொருட்டு ஏலவே சொத்தக்கடன் பெற்றவர்கள் தற்போதைய திட்டத்தின் கீழ் மேலும் கடன் பெறுவதற்கு உரித்துடையவரல்லர்.

## 11.4 கடன் தொகை

11.4.1 உத்தியோகத்தர் ஒருவர் பெறக்கூடிய ஆகக்கூடிய கடன் தொகை படிகள் நீங்கலாக 6 வருட திரட்டிய சம்பளம் அல்லது 2,000,000 ரூபா தொகை ஆகியவற்றில் எது குறைந்ததோ அது.

## 11.9 கடன் விண்ணப்பங்களை ஒழுங்குபடுத்துவதற்கான கட்டணம்.

அங்கீகரிக்கப்பட்ட வங்கி ஒன்றிலிருந்து கடன் பெறும் பொருட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்களுக்கான செலவு அதாவது போக்குவரத்து அடங்கலாக மதிப்பீட்டு அறிக்கை, சட்டவறிஞர் கட்டணம் பொருட்டு 7,500 ரூபா அல்லது கடன்தொகையின் 1% எது குறைந்ததோ அதுவாகும்.

11.9.1 மேலே 11.9 இல் குறிப்பிடப்பட்டவாறு உத்தியோகத்தரால் செலுத்தப்பட வேண்டிய ஆகக் குறைந்த கட்டணம் அங்கீகரிக்கப்பட்ட கடன் தொகையுடன் சேர்க்கப்பட்டு மாதாந்த தவணைகளில் கழிக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11.9.2 காணிப்பதிவகத்திலிருந்து இருமடித்தான்கள், உரித்து அறிக்கை, மதிப்பீட்டு திட்டத்துக்கான கட்டணம், அளவை வரைபடம், உரித்து ஒன்றில் குறைபாடுகள் இருக்கும் சந்தர்ப்பங்களில் உரித்து காப்புறுதி ஆகியவற்றைப் பெறுவதற்கான செலவு உத்தியோகத்தரினாலேயே பொறுப்பேற்கப்பட வேண்டும். (மேலே 11.9 இல் குறிப்பிடப்பட்ட தொகைக்கு மேலதிகமாக.)

11.10 சொத்துக் கடன்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகள்.

11.10.1.3 வங்கியினால் உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்கப்படவுள்ள கடன் தொகையை அங்கீகரிக்கும் போது பணியாளரிடமிருந்து அறவிடப்படவேண்டிய 4% வட்டி அத்துடன் படிகள் நீங்கலாக தேறிய மாத சம்பளத்திலிருந்து கழிக்கப்பட வேண்டிய கடன் தவணை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு கடன் தொகை நீர்மானிக்கப்படும்.

11.11 கடன் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கும் பரிந்துரை செய்வதற்குமான நடைமுறை

11.11.1 கடன் விண்ணப்பகாரர் தனது விண்ணப்பத்தை கடனைப் பெற்றுக்கொள்ளவிருக்கும் வங்கியினால் வழங்கப்பட்ட பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் பின்னிணைப்பு 26 க்கு அமைவாக இணைப்படிகளிற் தயாரித்து அமைச்சின் செயலாளர்/ திணைக்களத் தலைவரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

11.11.2 அமைச்சு/திணைக்களம் சம்பந்தப்பட்ட கடன் விண்ணப்பத்தை பதிவு செய்து கொள்வதற்கான நடவடிக்கை எடுத்து 11.10.1 ஆம் பிரிவின் படி வழங்கப்படக்கூடிய கடன் தொகையை நீர்மானித்து பரிந்துரை செய்யப்பட்ட விண்ணப்பத்தை ஒரு வார காலத்தினுள் விண்ணப்பகாரர் கடன் பெறுவதற்கு இணக்கம் தெரிவித்திருக்கும் வங்கிக்கு அனுப்புதல் வேண்டும்.

11.11.5 அமைச்சு /திணைக்களத்தினால் வங்கிக்கு பரிந்துரை செய்யப்பட்ட கடன் விண்ணப்பம் தொடர்பாக வங்கிக்கு மேலும் ஏதும் தகவல்கள் தேவைப்படின் உத்தியோகத்தர் அத்தகைய விளக்கங்களை சமர்ப்பிக்க வேண்டும். மூன்று மாத காலத்தினுள் அத்தகைய விளக்கங்களை சமர்ப்பிக்கத் தவறினால் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். இக் காலப்பகுதி எக்காரணம் கொண்டும் நீடிக்கப்பட மாட்டாது என்பதுடன் விண்ணப்பம் புதிய விண்ணப்பமாக கருதப்பட்டு காத்திருப்போர் நிரலில் வைக்கப்படும்.

03. 11.1 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நோக்கங்கள் ஏதேனும் பொருட்டு 2005 ஆம் ஆண்டில் கடன் வழங்கப்படலாம். அத்துடன் மேற்கூறப்பட்ட நோக்கங்கள் பொருட்டு 2004.12.31 ஆம் திகதியில் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட சொத்துக் கடன்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

04. சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் 11.11.1 ஆம் பிரிவின் நியதிகளின்படி ஏற்கனவே பரிந்துரைக்கப்பட்ட கடன் விண்ணப்பங்கள் தொடர்பாக பின்னிணைப்பு 28 இல் குறிப்பிடப்பட்ட வங்கிகளுக்கு அவரது அமைச்சின் கீழ் வரும் திணைக்களங்கள் நிறுவனங்களின் உத்தியோகத்தர்களின் பதிவுப்பெயர்களின் நிரலை அனுப்புதல் வேண்டும்.

ஒப்பம்/ ட. திசாநாயக்க,
செயலாளர்,
அரசாங்க நிர்வாக
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசேஆ/ஆ3/வீடு/மாகா/தேபா/68


මගේ අංකය / உமது இல/Your No.....................

මගේ අංකය / எனது இல/My No.....................

රාජ්‍ය සේවා කොමිෂන් සභා කාර්යාලය (~~අධ්‍යාපන සේවා අංශය~~)
அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம் (~~கல்விச் சேவைப் பிரிவு~~)
OFFICE OF THE PUBLIC SERVICE COMMISSION
(~~EDUCATION SERVICE DIVISION~~)

~~"ඉසුරුපාය" පැලවත්ත, බත්තරමුල්ල.~~
~~"இசுருபாய" பெலவத்த, பத்தரமுல்ல.~~
~~"Isurupaya" Pelawatta, Battaramulla.~~
46, வொக்ஷோல் வீதி,
கொழும்பு-02.

දුරකථනය / தொலைபேசி / Telephone.
අති. ලේකම් / மே. செயலாளர் / Addl. Secretary : 785236
කාර්යාලය / காரியாலயம் / Office : 785091
ෆැක්ස් / பக்ஸ் / Fax : 787231


දිනය / திகதி / Date 2003.08.14

செயலாளர்
மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு,
வடக்கு கிழக்கு மாகாணம்

**மாகாண அரசாங்க சேவை ஆசிரியர்களை தேசிய பாடசாலை சேவைக்காக உட்சேர்த்தல்**

மாகாண சபை அமுல்படுத்தப்பட்டதன் பின்னர் மாகாண அரசாங்க சேவை நியமனமாக உட்சேர்க்கப்பட்ட ஆசிரியர்களை மத்திய அரசாங்க சேவைக்கு (தேசிய பாடசாலைகள் சேவைக்கு) உட்சேர்ப்பதற்கு சட்ட ஏற்பாடுகள் இல்லையென அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

02. எனினும் 1989.12.31ஆந் திகதிக்கு முன்னராக அரசாங்க ஆசிரியர்களாக நியமனம் பெற்று, சேவையில் ஈடுபட்டிருந்தபோது, மாகாணசபை உருவாக்கப்பட்டதுடன், மாகாண அரசாங்க சேவையின் கீழ் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களினால் தேசிய பாடசாலைகள் சேவைக்கு உட்சேர்வதற்கு சமர்ப்பிக்கப்படும் முறையீடுகள் மாத்திரம் பொது நிருவாக சுற்றுநிருபம் 99/09 இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் கவனத்தில் எடுக்கமுடியும்.

03. எனவே மேற்குறித்த 2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகையான ஆசிரியர்களினால் மாகாண அரசாங்க சேவையிலிருந்து தேசிய பாடசாலை சேவைக்கு உட்சேர்வதற்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்பத்திரங்களை இக்குழுவிற்கு அனுப்பி வைப்பதற்கு முன்னர், அரசாங்க பொது நிருவாக சுற்றுநிருபம் 99/09ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் தொடர்பாக அவ்வாசிரியர்களின் அவதானத்தை திருப்பி, அதில் பணிக்கப்பட்டுள்ள சத்திய உறுதியுரையை ஒவ்வொரு இடமாற்றம் கேட்டுள்ள ஆசிரியர்களிடமிருந்தும் பெற்று தங்களது சிபார்சுடன் அவ்வாசிரியரின் விண்ணப்பப்பத்திரத்தினையும் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றேன்.

04. இதற்கு மேலதிகமாக இடமாற்றம் கோரியுள்ள ஒவ்வொரு ஆசிரியர்களின் முதல் நியமனத் திகதியை உறுதிப்படுத்திக்கொள்வதை இலகுபடுத்திக் கொள்வதற்காக நியமனக் கடிதத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியையும் அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றேன்.

05. பொது நிருவாகச் சுற்றுநிருபம் இலக்கம் 99/09உம் அத்துடனுள்ள சத்தியக் கடதாசியின் மாதிரியின் நிழற் பிரதியும் தாங்கள் அறிந்து கொள்வதற்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. மேற்குறித்த கால எல்லைக்குட்படாத ஆசிரியர்கள் மாகாண அரசாங்க சேவையிலிருந்து தேசியபாடசாலைகள் சேவைக்காக ஆட்சேர்க்குமாறு வேண்டும் விண்ணப்பங்களை அனுமதிக்காக இவ்வாணைக்குழுவிற்கு அனுப்பி வைக்க வேண்டாம் என்பதுடன், அது தொடர்பாக உரிய அதிகாரிகளும் ஆசிரியர்களும் அறிந்துகொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் தயவாய் அறியத் தருகிறேன்.

ரி. எம். எம். தென்னகோன்
மேலதிக செயலாளர்
அரசாங்க சேவை ஆணைக்குழுவின்
செயலாளருக்காக.

அரசாங்க நிருவாகச்சுற்றறிக்கை இல: 09/92.

அரசாங்க நிருவாக, மாகாணசபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.
1992, பெப்புருவரி21ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாணசபைகளின் பிரதான செயலாளர்கள்.
ஆளுநர்களின் செயலாளர்கள்.
திணைக்களங்களின் தலைவர்கள்,
அரசாங்க அதிபர்கள்,
கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டமுறைச்சபைகளின் தலைவர்கள் அனைவருக்கும்.

இடம்பெயர்ந்து சென்று திரும்பிவருபவர்களை மீண்டும்
பழைய பதவியில் அமர்த்துதல்

---

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவிய நிலைமைகள் காரணமாக இடம்பெயர்ந்து இந்தியாவுக்கு ஓடிய அரசாங்க சேவையாளர்கள் தற்பொழுது கடமைகளைப் பொறுப்பேற்கும் நோக்கத்துடன் தங்களுடைய வேலைத்தலங்களுக்கு திரும்பி வந்துகொண்டிருக்கின்றனர்.

எனவே அத்தகைய உத்தியோகத்தர்களை அவர்களுடைய பதவிகளில் உடனடியா மீண்டும் சேர்த்துக்கொள்ளுமாறு தாங்கள் வேண்டப்படுகின்றீர்கள். மீண்டும் பதவியில் சேர்த்துக்கொள்ளுதல் அமய, மாற்று, பதிற்கடமைப் பணியாளர்களின் விடயத்திலும் கூட செய்யப்படல் வேண்டும்.

ஒப்பம் : எம். என். ஜுனைட்,
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாணசபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister } 784807, 784832

ලේකම් / செயலாளர் / Secretary } 784811

කාර්යාලය / அலுவலகம் / Office } 785141-50, Fax: 784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : secedu@sltnet.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. } ....................

මානව සම්පත් සංවර්ධන, අධ්‍යාපන හා සංස්කෘතික කටයුතු අමාත්‍යාංශය

மனிதவள அபிவிருத்தி, கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு

Ministry of Human Resources Development, Education & Cultural Affairs

'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ බත්තරමුල්ල.

'இசுருபாய' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பத்தரமுல்ல.

"Isurupaya", Sri Jayawardhanapura Kotte. Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. } .......... ஈடி/2/29/06/01/1

දිනය / திகதி / Date } 2003.06.11

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,

சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,

**<u>பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 29/98 இன் கீழ் ஒரு மொழியை விட மொழிகளில் தேர்ச்சி பெற்ற இலங்கை ஆசிரியர் சேவையில் உள்ள ஆசிரியர்களுக்கு மொழி ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்துதல்.</u>**

பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 29/98 இன் கீழ் ஒரு மொழியை விட பல மொழிகளில் தேர்ச்சி பெற்ற இலங்கை ஆசிரிய சேவையில் உள்ள ஆசிரியர்களுக்கு மொழி ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்கும் போது கீழ் குறிப்பிடப்பட்ட விடயங்கள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

02. சுற்றறிக்கையின் 2: 4 மற்றும் 4: 7 ஆகிய வாசகத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் முதலாவது உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள, அச்சேவையின் 3ம் வகுப்பு 11 தரத்திற்கு சேர்த்துக் கொள்வதற்காக திறந்த போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பிப்பதற்கான கல்வித் தகைமை ஆசிரியர்களுக்கான அடிப்படைக் கல்வித் தகைமை எனக் கருதப்படும். இதன் அடிப்படையில் அச் சுற்றறிக்கையின் 3: 2 வாசகத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள ஆசிரியர்களுக்கு மாத்திரம் ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்த முடியும்.

03 இலங்கை ஆசிரியர் சேவைக்கு ஆசிரியர் ஒருவர் சேர்த்துக் கொள்ளப்பட்டது ஏதாவது ஒரு மொழி மூலம் கற்பிப்பதற்காக இருந்தால் அம்மொழி சேவைக்கு சேர்த்துக் கொண்ட மொழியாக கருதப்படும்.

அவ்வாறு இருந்தாலும் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பது மொழியைக் கற்பிப்பதற்காக இருந்தால் அம்மொழி சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட மொழியாகக் கருதப்படும்.

04. மேற்கூறப்பட்ட விடயங்களுக்கு புறம்பான அம்சங்கள் தொடர்பில் பொது நிருவாக சுற்றறிக்கை 29/98 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் உரித்தாகிறது.

05. இது பொது நிருவாக அமைச்சின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்பட்டதாகும்.

டி.எஸ்.ஏ.விசிதாகம
மேலதிக செயலாளர்,
(ஆசிரியர் சேவைத் தாபனம்)
மனிதவள அபிவிருத்தி,கல்வி,கலாசார
அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்காக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரசாங்க நிருவாக சுற்றறிக்கை : 7/2003**

எனது இல: தா1/4/3(1)
அரசாங்க நிர்வாக, முகாமைத்துவ,
மறுசீரமைப்பு அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07

2003. 06. 05

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபை தலைமைச் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் ,

**சம்பள அளவுத் திட்டமொன்றின் தேக்க நிலை அடைந்துள்ள அலுவலர்களுக்கு வேதனவேற்றங்களை வழங்கல்.**

சம்பள அளவுத் திட்டத்தின் தேக்க நிலையை அடைந்துள்ள அலுவலர்களுக்கு தேக்க நிலையில் தங்கி இருப்பதன் பொருட்டு வேதன ஏற்றங்கள் வழங்குவதற்குரிய 1997.11.12 ஆந் திகதிய 2/97(111) இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 5ஆம் பிரிவினால் திருத்தப்பட்ட 1997.01.15 ஆந் திகதிய 2/97 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 6ஆம் பிரிவின் 6:1, 6:2 மற்றும் 6:3 ஆம் ஏற்பாடுகளை 1997.01.01 ஆந் திகதியிலிருந்து வழங்கப்பட்டுள்ள நலன்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு நீக்குவதற்கும் அதற்குப் பதிலாக இச் சுற்றறிக்கை ஏற்பாடுகளை அன்று தொடக்கம் செயற்படுத்துவதற்கும் அரசு தீர்மானித்துள்ளது.

02. 2002.12.31 திகதி வரை நிலுவை சம்பளம் செலுத்தாது 1997.01.01 ஆந் திகதியிலிருந்து தேக்க நிலையை அடைந்துள்ள அலுவலர்களுக்கு தமது பதவிக்கு இயைபுடைய சம்பள அளவுத் திட்டத்தில் இறுதியாக உள்ள பெறுமதிக்கு சமமான வேதனவேற்றங்களை தொடர்ந்தும் ஆண்டுதோறும் உழைத்துப் பெறுவதற்கு இடமளிக்கலாம்.

03. 1997.01.01 திகதிக்கு ஒரு வருடம் அல்லது அதற்குக் கூடிய காலம் உச்சச் சம்பள படிநிலையில் இருந்தவர்களும் வேதனவேற்றமொன்றை பெற்றுக் கொள்ளாதவர்களுமான அலுவலர்களுக்காக ஒரு வேதனவேற்றம் 1997.01.01 ஆந் திகதி தொடக்கம் வழங்கப்படுவதுடன், அதன் பின்னர் இந்த அலுவலர்களின் வேதனவேற்றத் திகதியாக அமைவது சனவரி மாதம் 01 ஆந் திகதியாகும். ஒழுக்காற்றுக் கட்டளையொன்றின் பேரில் வேதனவேற்றங்களை இழக்கச் செய்துள்ள அலுவலர்கள் தொடர்பில் இது இயைபாகாததுடன், ஒழுக்காற்று கட்டளைகளின்படி செயற்படுதல் வேண்டும்.

04. 1997.01.01 ஆந் திகதிக்கு ஒருவருடத்தைப் பார்க்க குறைந்த காலம் உச்சச் சம்பளப் படிநிலையில் இருப்பவர்களும், 1997.01.01 திகதிக்குப் பின் அதே வருடத்தினுள் அடுத்த வேதனவேற்றத் திகதி அமைகின்றவர்களுமான அலுவலர்களுக்கு ஒழுக்காற்றுக் கட்டளையொன்றின் பேரில் வேதனவேற்றங்கள் இழக்கச் செய்யப்படாதிருப்பின் 1997 ஆண்டினுள் அமையும் வேதனவேற்றத் திகதியில் ஒரு வேதனவேற்றம் வழங்கப்படுவதுடன் அந்த அலுவலரின் வேதன வேற்றத் திகதி மாறாது இருக்கும்.

05. 1997.01.01 திகதி அல்லது அதற்குப்பின் தற்போது உள்ள சம்பள அளவுத் திட்டங்களின் தேக்கநிலையை அடைகின்ற அலுவலர்களுக்கு தேக்கநிலையை அடைந்த பின் ஒவ்வொரு ஆண்டிற்குமாக இச்சுற்றறிக்கையின் 02ஆம்; 03ஆம் பந்திகளின் ஏற்பாடுகளின் கீழ் வேதனவேற்றங்களை வழங்கலாம்.

06. மேலே 03ஆம், 04ஆம் , 05 ஆம் பந்தியின்படி வேதனவேற்றங்களை பெறுகின்ற அலுவலர் ஒருவர் 1997.01.01 ஆந் திகதி முதல் 2002.12.31 ஆந் திகதி வரையான காலத்தினுள் பதவி உயர்வு பெறப்பட்டிருந்தால் திருத்தப்பட்ட சம்பளத்தின் பேரில் சம்பளத்தை மீளமைக்க வேண்டியதுடன், 2003.01.01 ஆந் திகதியில் இருந்தே நிலுவை சம்பளம் செலுத்த வேண்டும். இச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை செயற்படுத்த முன்னராக இருந்த ஏற்பாடுகளின் பேரில் மேற்கொள்ளப்படும் சம்பள மீளமைப்புகளின் கீழ் பதவி உயர்வுகள் செயற்படும் திகதியில் இருந்து நிலுவை சம்பளம் செலுத்த தடையொன்றும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. 1997.01.01 திகதி தொடக்கம் 2002.12.31 திகதி வரையிலான காலத்திற்குள் தேக்கநிலை சம்பளம் பெற்றுக் கொண்டிருந்து, 60 வயது பூர்த்தியாகி ஓய்வுபெற்றுள்ள அலுவலர்களின் ஓய்வூதியம் அவர்கள் இறுதித் தடவையாக வேதனவேற்றத்தை பெற்ற திகதியிலிருந்து ஓய்வுபெறல் வரையிலான காலத்திற்கு உழைத்துப் பெற்றுள்ள வேதனவேற்றத்தின் விகிதாசார பங்கோடு கணிப்பீடு செய்து திருத்தப்படவேண்டியதுடன், நிலுவை ஓய்வூதியத்தை 2003.01.01 ஆந் திகதி தொடக்கம் மட்டும் செலுத்த வேண்டும். இச்சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகள் செயற்பட முன்னிருந்த ஏற்பாடுகளின்கீழ் ஓய்வுபெற்ற திகதியில் இருந்து ஓய்வூதியத்தை பெறுவதில் தடை இல்லை.

08. மேற்படி ஏற்பாடுகளுக்கு புறம்பாக 1997.01.01 திகதிக்கு முன் தேக்க நிலையில் தங்கியிருந்த ஒவ்வொரு ஆண்டிற்காகவும் வேதனவேற்றங்களை வழங்க இயலாது என்பதை விசேட கவனத்திற் எடுத்துக் கொள்ள வேண்டியதுடன் சிலவேளை 1 வருடம் தொடக்கம் 3 வரையிலான காலத்திற்கு ஒரு வேதனவேற்றத்தை மட்டும் பெறலாம்.

**உதாரணம்** :-

I. 1994.01.01 ஆந் திகதி தேக்க நிலையை அடைந்த அலுவலருக்குப் போன்று 1996.01.01 திகதி தேக்க நிலையை அடைந்த அலுவலருக்கும் 1997.01.01 ஆந் திகதி தொடக்கம் ஒரு வேதனவேற்றம் மட்டும் கிடைப்பதுடன் அது ஒரு முரண்பாடாக கருதப்படமாட்டாது.

II. 1993.01.01 திகதி சம்பள அளவுத் திட்டத்தில் தேக்க நிலையை அடைவதால் 1996.01.01 திகதி கருதுகின்ற அடிப்படையில் ஒரு வேதனவேற்றம் வழங்கப்பட்டுள்ள அலுவலரொருவருக்கு இச் சுற்றறிக்கையின் கீழ் 1997.01.01 திகதி தொடக்கம் ஒரு வேதனவேற்றத்தை வழங்கலாம்.

09. பதவிஉயர்வொன்றை பெறுகின்ற அலுவலரொருவர் பதவிஉயர்வு செயற்படும் திகதியில் புதிய பதவிக்கு இயைபுடைய சம்பள அளவுத் திட்டத்தின் உச்ச சம்பள படிநிலையை கடந்து சம்பளம் பெற்றுக் கொண்டிருந்தால் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின்படி சம்பளத்தை மீளமைப்பதற்காக சொல்லப்பட்ட சம்பள அளவுத் திட்டத்துடன் ( உயர்வுபெற்ற பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் ) வேதனவேற்றங்களை சேர்த்து சீராக்க வேண்டும்.

10. ஒரு பதவியில் உச்ச சம்பளப் படிநிலையை கடந்து சம்பளம் பெற்றுக் கொண்டிருக்கின்ற அலுவலரொருவர் பதவி உயர்வொன்றின் பேரில் மேற்கொள்ளப்படும் சம்பள மீளமைப்பின் கீழேனும் அப் பதவியின் உச்ச சம்பள படிநிலையை அடைவாராயின் அதன் பின்னர் உயர்வுபெற்ற பதவியில் ஒரு வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்த பின்னரே வேதனவேற்றங்களை பெறுவதற்காக தகைமையடைவதுடன் இரண்டு பதவிகளில் தேக்க நிலை அடைந்திருந்த காலப்பகுதிகளை ஒன்றிணைத்து வேதனவேற்றங்களை பெற்றுக் கொள்ள இயலாது.

11. இச்சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பேரில் 1997.01.01 ஆந் திகதியில் இருந்து இயைபுடைய சம்பளப் படிநிலைகளில் அமர்த்த முடிந்தாலும் 2002.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்காக நிலுவை சம்பளம் செலுத்தப்படமாட்டாது.

12. இற்றை வரை இருந்த ஏற்பாடுகளின் பேரில் 1997.01.01 ஆந் திகதிக்கு பின் தேக்கநிலையில் தங்கி இருந்தமைக்காக செலுத்தியுள்ள வேதனவேற்றங்களுக்குப் பதிலாக இச்சுற்றறிக்கை ஏற்பாடுகள் பதிலீடு செய்யப்படுவதால் ஒரே திகதிக்கு வேதனவேற்றங்கள் இரண்டை வழங்குதலாகாது.

13. இவ் வேதனவேற்றங்களை வழங்கும் போது தாபன விதிக்கோவையின் VII அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவில் விதித்துரைத்துள்ள ஏற்பாடுகள் இயைபு ஆதல் வேண்டும்.

14. இதற்காக மேலதிக ஒதுக்கீடுக் வழங்கப்படாததுடன் இருக்கின்ற ஒதுக்கீடுகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

15. இச்சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் இணக்கத்துடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்/ பீ.ஜீ.கருணாரட்ன.
தாபனப் பணிப்பாளர் நாயகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இல: டீஎம்எஸ்/சீஎம்/ஜென்.
முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்,
பொதுத் திறைசேரி,
கொழும்பு 01.
2003.03.05

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்.
திணைக்களங்களின் தலைவர்களுக்கு.

அரசாங்க மற்றும் மாகாண அரசாங்கப் பணியாளர்களுக்கான
பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

1. அரசாங்கம் 2003.01.01 ஆந் திகதியன்று அல்லது அதன் பின்னர் நிரந்தர அடிப்படையில் அரசாங்க சேவை அல்லது மாகாண அரசாங்க சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் பணியாளர்களுக்கென "பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்" ஒன்றை அறிமுகப்படுத்திச் செயற்படுத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

2. நிதியமொன்றைத் தாபித்தல்

இந்நோக்கத்துக்கென ஓய்வூதியத் திணைக்களத்தின் தலைவரினால் நிருவகிக்கப்படும் "பங்களிப்பு ஓய்வூதிய நிதியம்" (பஓநி) என அழைக்கப்படும் நிதியமொன்று தாபிக்கப்படும்.

3. இந்நிதியத்துக்கான பங்களிப்பு

3.1 இந்நிதியத்தின் உறுப்புரிமைக்குத் தகுதியுள்ள பணியாளர் ஒருவர் அவரது மாதாந்த சம்பாதிப்பில் எட்டு நூற்றுவீதத்தினை (8%) இந்நிதியத்துக்கு பங்களிப்புச் செய்யும் அதேவேளை அரசாங்கத்தினால் அல்லது மாகாண அரசாங்கத்தினால் சூழ்நிலைகளுக்கு ஏற்ப தீர்மானிக்கப்படும் விடயத்தில் அப்பணியாளரின் மாதாந்த சம்பாதிப்பில் பன்னிரண்டு நூற்றுவீதத்துக்குச் (12%) சமமான தொகை பங்களிப்புச் செய்யப்படும். இந்நிதிய நோக்கங்களுக்கான சம்பாதிப்பு என்பது நிதி அமைச்சினால் காலத்துக்குக் காலம் ஓய்வூதியம் பெறத்தக்க படியாக இருக்கும் வகையில் பிரகடனஞ் செய்யப்படும் ஏதேனும் படி உள்ளிட்ட அப்பணியாளரின் மாதாந்த ஊதியங்கள் அல்லது வேதனம் எனப் பொருள்படும்.

3.2 மாதாந்த பங்களிப்புத் தொகை கிட்டிய ரூபாய்க்குக் கணிக்கப்பட வேண்டும்.

3.3 அவ்வாறு குறைக்கப்பட்ட தொகையையும் அரசாங்கப் பங்களிப்புத் தொகைப் பங்கையும் அப்பங்களிப்புத் தொகை செலுத்தப்பட வேண்டியது தொடர்பிலான அம்மாதத்தின் இறுதி நாளிலிருந்து 7 வேலை நாட்கள் முடிவடைவதற்கு முன்னர் இந்நிதியத்திற்கு பற்று வைக்கப்படுவதை உறுதி செய்வது அரசாங்க/ மாகாண அரசாங்கங்களின் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்களின்/ கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பாகும். உரிய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இப்பங்களிப்பை அனுப்பத் தவறும் உத்தியோகத்தர்களுக்கு கணிக்கப்பட்ட வட்டி மற்றும்/ அல்லது அத்தவறின் காரணமாக இழக்கப்படும் பங்களிப்புத் தொகை மிகை விதிப்பாக விதிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.4 இந்நிதியத்துக்கு அவ்வாறு செலுத்தப்படும் தொகை 2003 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்திலுள்ள இயைபுடைய கருத்திட்டங்களின் "சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள்" விடயக் குறியீடு 1001 இற்கு விதிக்கப்படும். அவ்வழங்கலில் ஏதேனும் பற்றாக்குறை ஏற்படும் பட்சத்திலும் அப்பற்றாக் குறையை எதிர்கொள்ளும் பொருட்டு சேமிப்புகள் காணப்படாதவிடத்தும் அத்தகைய தேவைப்பாட்டு விபரங்களை வழங்குவதன் மூலம் மேலதிக ஒதுக்கீடு ஒன்றுக்கென வரவு செலவுத்திட்டப் பணிப்பாளர் அதிபதிக்கு வேண்டுகோள் ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும்.

3.5 மாதாந்த மொத்தப் பங்களிப்பு ஓய்வூதிய நிதியக் கணக்கு இல: 0747-08-0000521-3 கணக்குக்குப் பற்று வைக்கப்படும் பொருட்டு இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பப்பட வேண்டும். மத்திய வங்கி இலத்திரனியல் பண மாற்றல்கள் மூலம் இந்நிதியத்துக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகையைக் குறைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும். இது தொடர்பில் மேலதிக அறிவுறுத்தல்கள் வெளியிடப்படும்.

4. தகுதி:

4.1 2003.01.01 ஆந் திகதியன்று அல்லது அதன் பின்னர் நிரந்தர அடிப்படையில் அரசாங்க சேவைக்கும் மாகாண அரசாங்க சேவைக்கும் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் பணியாளர்கள் இந்நிதியத்தின் அங்கத்தவர்களாகச் சேர்க்கப்படுவதற்குத் தகுதியுடையவர்களாக இருக்கின்றனர். வரவு செலவுத்திட்ட, பதவியணிக் கட்டுப்பாட்டு நோக்கத்துக்காக ஆட்சேர்ப்புக்கு முன்னர் புதிய பணியாளர் ஒருவரை இந்நிதியத்தின் அங்கத்தவராக ஏற்றுக்கொள்வதற்காக திறைசேரிச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வேண்டும். அத்தகைய அங்கீகாரக் கடிதத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று கீழே பந்தி 5.1 (11) இல் குறிப்பிடப்பட்டுள்ள வெளிப்படுத்துகைப் படிவத்துடன் மத்திய வங்கியின் பணியாளர் ஏற்பாட்டுத் (ஈபீஎவ்) திணைக்களத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

4.2 4.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறியினைப் பின்பற்றாது ஆட்சேர்க்கப்படும் எவரேனும் உத்தியோகத்தர் கீழே 4.3 இன் கீழ் ஆட்சேர்க்கப் படும் பணியாளராகக் கருதப்படுவார்.

4.3 அமைய/ தற்காலிக/ ஒப்பந்த/ நாளாந்தம் கொடுப்பனவு செலுத்தப்படும் பணியாளர்கள் இந்நிதியத்தின் உறுப்புரிமைக்குத் தகுதியற்றவர்களாவர். இருந்தபோதிலும், அவர்கள் அரசாங்க சேவை ஏற்பாட்டு நிதிய (அசேஏநி) சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் அரசாங்க சேவை ஏற்பாட்டு நிதியத்திற்குப் (அசேஏநி) பங்களிப்புச் செய்ய வேண்டும். பணியாளர், பணி கொள்பவர் ஆகியோரின் பங்களிப்புத் தொகைகள் பணியாளரின் மாதாந்தச் சம்பளத்தில் முறையே எட்டு நூற்றுவீதம் (8%), பன்னிரண்டு நூற்றுவீதம் (12%) என்பனவாக இருக்கும். நாளாந்தம் கொடுப்பனவு செலுத்தப்படும் பணியாளர்களின் விடயத்தில், நாளாந்தச் சம்பளமாக ஓர் மாதத்தில் பணியாளர் ஒருவரினால் கிடைக்கப்பெறும் தொகை அல்லது மாதாந்தப்படி அவரது/ அவளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பாதிப்பாகக் கருதப்படும். இது தொடர்பில் ஓய்வூதியத் திணைக்களம் தனியான அறிவுறுத்தல்களை வெளியிடும்.

4.4 ஏற்புடையதாக இருக்கும் பங்களிப்பு ஓய்வூதிய நிதியம் (பஓநி) அல்லது அரசாங்க சேவை ஏற்பாட்டு நிதியம் (அசேஏநி) அல்லது பணியாளர் ஏற்பாட்டு நிதியத்துக்கு (பஏநி) அவரோ / அவளோ பங்களிப்புச் செய்யாது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் வேலைக்கமர்த்தப்பட மாட்டார்கள்.

5. நியமனக் கடிதம்

5.1 2003.01.01 ஆந் திகதியன்று அல்லது அதன்பின்னர் மேற்கொள்ளப்படவிருக்கும் நியமனங்கள் தொடர்பில் வழங்கப்படும் நியமனக் கடிதத்தில், 36/89(1) ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையினால் திருத்தம் செய்யப்பட்ட தாபன விதிக்கோவையின் பின்னிணைப்பு 4 இலுள்ள முதலாவது மாதிரி நியமனக் கடிதம் பின்வருமாறு திருத்தம் செய்யப்பட வேண்டும்.

i. மாதிரி நியமனக் கடிதத்தின் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள "நிரந்தரமானது" எனும் சொல்லை உடனடுத்து "நீங்கள் பங்களிப்பு ஓய்வூதிய நிதியத்தின் கீழ் பங்களிப்பு ஓய்வூதியமொன்றுக்கான தகுதியுடையவர்களாக இருக்கின்றீர்கள்" எனும் சொற்களைச் சேர்க்குக.

ii. மாதிரிக் கடிதத்தின் 10 ஆம் பந்தியை நீக்கிவிட்டு பின்வருவனவற்றினால் மாற்றீடு செய்க. நியமனக் திகதியிலிருந்து, தாங்கள் தங்களது மாதாந்த சம்பாதிப்பின் எட்டு நூற்றுவீதத்தை (8%) பங்களிப்பு ஓய்வூதிய நிதியத்துக்கு பங்களிப்புச் செய்யுமாறு வேண்டப்படுகின்றீர்கள்". தாங்கள் பதவியேற்ற உடனடுத்து இந்துடன் அனுப்பப்படும் வெளிப்படுத்துகைப் படிவம் (I) பகுதி அ வைப் பூரணமாக நிரப்பி மத்திய வங்கியிலுள்ள பங்களிப்பு ஓய்வூதிய நிதியம் மற்றும் ஓய்வூதியத் திணைக்களத்தின் தலைவருக்கு திணைக்களத் தலைவரினூடாக அனுப்பி வைக்க வேண்டும்.

iii. இப்பின்னிணைப்பின் கீழுள்ள ஏனைய மாதிரி நியமனக் கடிதங்களும் மேலுள்ள படி ஏற்புடையதாகத் திருத்தம் செய்யப்பட வேண்டும்.

iv. பணியாளர் அரசாங்கத்திடமிருந்து அல்லது மாகாண அரசாங்கத்திடமிருந்து ஏதெனும் சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் முன்னர் எத்தகைய இழப்பீட்டையும் பெற்றிருக்கவில்லை எனும் சத்தியப் பிரமாணத்தின் மீதான வெளிப்படுத்துகையொன்று அவரிடமிருந்து/ அவளிடமிருந்து பெறப்பட்டிருக்க வேண்டும்.

2003.01.01 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வூதியமுள்ள பதவியொன்றுக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் பதவியுயர்வின் பேரில் அல்லது தாபனவிதிக் கோவையின் v ஆம் அத்தியாயத்தின் I ஆம் பிரிவிலுள்ள நியதிகளின் பிரகாரம் முறையாக விடுவிக்கப்பட்டால் அல்லது ஓய்வூதியமுடையது எனப் பிரகடனப்படுத்தப்படும் பதவியொன்றுக்கு புதிதாக நியமிக்கப்பட்டால், ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் கீழும் விதவைகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனாதைகள்/ தபுதாரர்கள், அனாதைகள் ஓய்வூதியச் சட்டங்களின் கீழும், அவரது முன்னைய நியமனத்தின் கீழ் இணைக்கப்பட்டிருக்கும் பயன்கள் அவருக்குத் தனிப்பட்டதாக இருப்பதால் அவருக்கு அவை தொடர்ந்து உரித்துடையதாக இருக்கும்.

7. பங்களிப்பு ஓய்வூதிய நிதியத்தின் (பஓநி) உரித்துகளுடன் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் தொடர்பில், ஓய்வூதியம் தொடர்பிலான தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளும் ஓய்வூதியத்துக்கு ஏற்புடையதாக இருக்கும் ஏனைய ஏற்பாடுகளும் பணியாளர் ஏற்பாட்டு நிதிய (திருத்தம்) சட்டத்தின் இயைபுடைய ஏற்பாடுகளினால் மாற்றீடு செய்யப்பட்டுள்ளது எனக் கருதப்படும்.

8. ஓய்வூதியமுடைய பதவியிலிருந்து நீக்கம் செய்யப்பட்ட அல்லது அத்தகைய பதவியை வெற்றிடமாக விட்டுச் சென்றுள்ளதாகக் கருதப்படும் உத்தியோகத்தர் ஒருவர் புதிய நுழைவுநர் ஒருவராக மீள நியமனஞ் செய்யப்படும்போது முந்திய நிரந்தர சேவைகளுக்கான சகல உரிமைகளையும் இழந்து கொள்வார். அதன்படி அத்தகைய உத்தியோகத்தரின் ஓய்வூதிய நோக்கங்களுக்கான இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் மூலம் நிருவகிக்கப்படும்.

9. 01.01.2003 ஆந் திகதியிலிருந்து இச்சுற்றறிக்கை வெளியிடப்படும் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் ஆட்சேர்ப்புகள் இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க ஒழுங்குமுறைப்படுத்தப்பட வேண்டும்.

10. இவ்விடயம் தொடர்பிலான ஏதேனும் மேலதிக விபரங்கள் அல்லது வழிகாட்டு நெறி தொடர்பில், தாங்கள் பணியாளர் ஏற்பாட்டு நிதிய (திருத்தம்) சட்டத்தைத் தயவுசெய்து பார்க்கவும்.

11. இச்சுற்றறிக்கை பொது நிருவாக, முகாமைத்துவ, மறுசீரமைப்பு அமைச்சின் ஒருப்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.

*ஒப்பமிடப்பட்டுள்ளது/*

செயலாளர்,
நிதி அமைச்சு மற்றும் கொள்கை
விருத்தி, செயற்படுத்துகை அமைச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இல.தா/IV/2/2/1(2)
அரசாங்க நிர்வாக,முகாமைத்துவ,
மறுசீரமைப்பு அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு.07
2002 ஆகஸ்ட் மாதம் 23 ஆந் திகதி

அமைச்சின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்,
திணைக்கள தலைவர்கள் யாவருக்கும்

**தாபன விதிக்கோவையில் V ஆம் அத்தியாயத்தில்**
**5 ஆம் பிரிவை திருத்தம் செய்தல்.**
**55 வயதிற்கு மேல் சேவை நீடிப்பு செய்தல்.**

1996.08.30 ஆந் திகதிய 27/96 ஆம் இலக்க மற்றும் 1997.09.25 ஆந் திகதிய 21/97 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகளின் மூலமாக செய்யப்பட்ட திருத்தங்களும் அடங்கலாக தாபன விதிக்கோவையில் V ஆம் அத்தியாயத்தில் 5 ஆவது பிரிவிற்குப் பதிலாக பின்குறிப்பிடப்படும் பிரிவை 2002 யூலை 31 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பதிலீடு செய்யப்படுகின்றது.

02. 5 - ஓய்வு பெறச் செய்வித்தல்.

5:1 அரசு அலுவலரொருவரினது ஓய்வுபெறச் செய்வித்தலானது அரசின் மற்றும் நீதித்துறை அலுவலர்களினது (ஓய்வு பெறச் செய்வித்தலின்) கட்டளைச் சட்டமும், அதன் கீழ் விதிக்கப்பட்ட சட்டங்களின் கீழும் நிருவகிக்கப்படுகின்றது.

5:2 அலுவலரொருவரினது விருப்புக்குரிய ஓய்வுபெறச் செய்விக்கும் வயது 55 ஆகும்.

5:3 கீழ் குறிப்பிடப்படும் உபபிரிவுகளில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் வருடாந்தம் சேவை நீடிப்பின்றி 57 வயது வரை அலுவலரொருவருக்கு சேவையில் ஈடுபடுவதற்கு இயலும்.

5:3:1 55 வயதை கடந்த அலுவலரொருவருக்கு தமது விருப்பப்படி குறைந்த பட்சம் மூன்று மாதத்திற்கு முன்பு சம்பந்தப்பட்ட நியமன அதிகாரிக்கு அறிவிப்பு செய்து ஓய்வு பெறுவதற்கு இயலும்.

5:3:2 55 ஆவது வயதை கடந்த அலுவலரொருவரினது வினைத்திறமையும் சேவை நிலைமையும் திருப்திகரமற்றது என நியமன அதிகாரி தீர்மானிப்பாராயின், மூன்று மாத கால அவகாசத்தின் பின்பு ஓய்வு பெறச் செய்விக்கும் உரிமை நியமன அதிகாரியை சார்ந்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5:4 சேவை நீடிப்பு சம்பந்தமாக நியமன அதிகாரியினால் வழங்கப்பட்டுள்ள கட்டளை தொடர்பாக, அந்தக் கட்டளைக்கு பாத்திரமான அலுவலரினால் முன்வைக்கப்படும் மேன்முறையீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் பேரில் உரியவாறு மேன்முறையீட்டு அதிகாரத்துவத்தை வகிக்கும், அமைச்சரவைக்கு அல்லது அரசு சேவை ஆணைக் குழுவிற்கு அந்தக் கட்டளையை நிராகரிப்பதற்கோ அல்லது மாற்றுவதற்கோ அல்லது இரத்துச் செய்வதற்கோ அதிகாரம் உள்ளது.

5:5 பின்குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கமைய சேவையின் தேவைக்கேற்ப அரசு அலுவலரொருவரினது சேவை 57 வயதிலிருந்து 60 வரை நீடிப்பு செய்யும் அதிகாரம் நியமன அதிகாரியை சார்ந்திருக்கும்.

5:5:1 57 வயதின் பின்பு சேவையாற்றுவதற்கு எண்ணும் அலுவலரொருவர் தமது சேவையை நீடிப்பு செய்வதற்காக விண்ணப்பப் பத்திரத்தை திணைக்கள தலைவர் ஊடாக, நியமன அதிகாரியிடம் வருடாந்தம் முன் வைத்தல் வேண்டும். முதலாவது சேவை நீடிப்புக்கான கோரிக்கையை அலுவலரினது 57 ஆவது வயதை அடையும் திகதிக்கு ஆறு மாதத்திற்கு முன்பும் , அதன் பிறகு 60 வயது வரையிலான சேவை நீடிப்புக்கான கோரிக்கைகளை சேவை நீடிப்பு ஆரம்பிக்கும் திகதிக்கு மூன்று மாதத்திற்கு முன்பும் முன்வைத்தல் வேண்டும். அந்தக் கோரிக்கைகள் தொடர்பாக கவனத்திற் கொண்டு பார்த்து நியமன அதிகாரியினால் சேவை நீடித்தல் வழங்குதல் தொடர்பாக தீர்மானித்தல் வேண்டும்.

5:5:2 நியமன அதிகாரி அமைச்சரவையாகும் சந்தர்ப்பத்தில் 5:5:1 உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய திகதிக்கு முன்பு உரிய அமைச்சின் செயலாளரிடம் சேவை நீடிப்பிற்கான கோரிக்கையை முன்வைத்தல் வேண்டும். செயலாளரினால் சம்பந்தப்பட்ட அமைச்சரை விசாரித்து சேவை நீடிப்பை வழங்குதல் தொடர்பாக தீர்மானித்தல் வேண்டும். சேவை நீடிப்பை நிராகரிப்பதென்றால் சம்பந்தப்பட்ட அமைச்சர் அந்த தீர்மானத்தை அமைச்சரவைக்கு முன் வைத்தல் வேண்டும்.

5:5:3 அலுவலரொருவரினது சேவை நீடிப்பு செய்யும் கால எல்லையை அவருக்கு அறிவிக்க வேண்டியதுடன், ஒரு முறைக்கு ஒரு வருடத்திதற்கு மேலான காலத்திற்கு சேவை நீடிப்பு செய்தலாகாது.

5:6 ஒழுக்காற்று கட்டளையாகாவிட்டால், அலுவலரொருவரினது ஓய்வூதியத்திற்காக கணக்கில் எடுக்கப்பட வேண்டிய சேவைக்காலம் பத்து வருடத்திற்கு மேல் குறைவாக இருப்பின் பத்து வருடம் பூர்த்தியாகும் திகதி அல்லது அலுவலரொருவரினது 60 வயது பூர்த்தியாகும் திகதி ஆகிய இரண்டு திகதிகளில் முன்னராக வரும் திகதிக்கு முன்பு மேற்படி ஏற்பாடுகளின் கீழ் அலுவலரொருவரை ஓய்வு பெறச் செய்விப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரி நடவடிக்கை எடுத்தலாகாது.

ஒப்பம்: டிட்டா விமலசிறி
செயலாளர்,
அரசாங்க நிர்வாக, முகாமைத்துவ,
மறுசீரமைப்பு அமைச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 07 DEC 1994 11/94.

பொது நிர்வாக அமைச்சு.
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு - 07
1994, 02.11.

எல்லாச் செயலாளர்களுக்கும்.
திணைக்களத் தலைவர்களுக்கும்.

பதவி உயர்வின் போது சம்பள மாற்றங்களைச் செய்தல்

---

01. பதவி உயர்வின் போது, அரசாங்க உத்தியோகத்தர்களுக்குச் செலுத்த வேண்டிய சம்பளங்களைத் தீர்மானித்தல் தொடர்பான ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்ட தாபன விதிக்கோவையின் VII வது அத்தியாயத்தின் 5 வது பிரிவில் உங்கள் கவனம் செலுத்தப்படுகின்றது. அந்த ஏற்பாடுகளைச் செயற்படுத்துகையில் சில முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதால் அவற்றைத் தகுந்த விதத்தில் திருத்தம் செய்தல் வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி நடைமுறையிலுள்ள தாபனவிதிக்கோவையின் VII வது அத்தியாயத்தின் 5 வது பிரிவினை அகற்றி கீழ்வரும் பிரிவு பதிலீடு செய்யப்படுகின்றது.

" 5. உயர்ச்சி பெற்றதன் பேரில் சம்பளம்

---

5.1 அத்தியாயம் 11இன் 1.9லிருந்து 1.14 வரையுள்ள உப்பிரிவில் விவரிக்கப்பட்டதன்படி தமது உயர்ச்சி செயற்படு திகதியிலிருந்து தமக்கு உயர்ச்சி வழங்கப்பட்டுள்ள பதவியின் சம்பளத்தை உத்தியோகத்தரொருவர் பெறுவார்.

5.2 அச்சம்பளம் நிலையான ஏற்ற மற்ற சம்பளமாகவிருக்குமிடத்து அவர் அந்தச் சம்பளத்தைப் பெறுவார்.

5.3 தமக்கு உயர்ச்சி வழங்கப்பட்ட பதவி சம்பள ஏற்ற (முறை) சம்பள அளவுத் திட்டத்தையுடையதாகவிருக்குமிடத்து அவருடைய சம்பளம் ஒரு சம்பள அளவுத் திட்டத்திலிருந்து மற்றைய அளவுத் திட்டத்துக்கு மாற்றப்படல் வேண்டும்.

5.3.1 பதவி உயர்வின் போது உத்தியோகத்தர் ஒருவர் இறுதியாகப் பெற்ற சம்பளம், அவர் அதற்கு குறைந்த பதவியில் இறுதிச் சம்பள ஏற்றத் திகதிக்குப் பின்னர் சேவை புரிந்த காலத்துக்கு விகிதசமமாகக் கணக்கிடப்படும் சம்பாதித்த சம்பள உயர்வுபடி நிலையுடன் எடுத்து பார்க்குமிடத்து, புதிய சம்பள அளவுத் திட்டத்தின் சம்பளப்படி நிலைகளுக்கு இடையில் வருமிடத்து அவர் அடுத்த உயர் சம்பளப்படி நிலையில் வைக்கப்படுவதுடன் அவருக்கு மேலதிக சம்பள ஏற்ற மொன்றைச் செலுத்துதல் வேண்டும்.

5.3.2 பதவி உயர்வின் போது உத்தியோகத்தரொருவர் இறுதியாகப் பெற்ற சம்பளம் அவர் குறைந்த பதவியில் இறுதிச்சம்பள ஏற்றத் திகதிக்குப் பின்பு சேவை புரிந்த காலத்தின் பொருட்டு விகிதசமமாக கணக்கிடப்பட்ட சம்பாதித்த சம்பள ஏற்றப்படி நிலையுடன் எடுத்து பார்க்குமிடத்து சம்பள அளவுத் திட்டத்தின் ஆரம்பச் சம்பளத்துக்கு அல்லது ஒரு படி நிலைக்கு நேரொத்ததாக இருக்குமிடத்து அவர் அடுத்த உயர்படி நிலையில் வைக்கப்படுவார்

5.3.3 பதவி உயர்வின் போது உத்தியோகத்தரொருவர் இறுதியாகப் பெற்றச் சம்பளம் அவர் குறைந்த பதவியில் இறுதி சம்பள ஏற்றத் திகதிக்குப் பின்பு சேவை புரிந்த காலத்துக்கு கணக்கிடப்படும் சம்பாதித்த சம்பள ஏற்றப்படி நிலையுடன் எடுத்து பார்க்குமிடத்து அது புதிய சம்பள அளவுத் திட்டத்தின் தொடக்க நிலையிலும் ஒரு ஆண்டேற்றம் குறைவாக இருக்குமிடத்து புதிய சம்பள அளவுத் திட்டத்தில் ஓர் மேலதிக ஆண்டேற்றம் வழங்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.3.4 பதவி உயர்வின் போது உத்தியோகத்தரொருவர் இறுதியாகப் பெற்ற சம்பளம் அவர் குறைந்த பதவியில் இறுதிச் சம்பள ஏற்றத் திகதிக்குப் பின்பு சேவை புரிந்த காலத்துக்கு விகித சமமாகக் கணக்கிடப்பட்ட சம்பாதித்த சம்பள ஏற்றப் படி நிலையுடன் எடுத்து பார்க்குமிடத்துப் புதிய சம்பள அளவுத் திட்டத்தின் தொடக்க நிலையிலும் ஒரு ஆண்டேற்றம் குறைவாக இருக்குமிடத்து புதிய சம்பள அளவுத் திட்டத்தில் ஓர் மேலதிக ஆண்டேற்றம் வழங்கப்படும்.

5.4 உத்தியோகத்தரது எதிர்கால ஆண்டேற்றத் திகதி பதவி உயர்வுத் திகதியாக இருக்கும்.

5.5 பதவி உயர்வின் போது உத்தியோகத்தர் தனது சம்பள அளவுத் திட்டத்தின் உச்சநிலையில் இருந்தால், அவருக்குத் தேக்க நலன் வழங்குவது தாபனப் பணிப்பாளரால் உத்தியோகத்தரது சார்பு முறையான சேவை மூப்பு, பதவி உயர்வுச் சந்தர்ப்பங்கள் கருத்துக்கு எடுத்துத் தீர்மானிக்கப்படும். திணைக்களத் தலைவர் மேற்குறித்த விபரங்களைத் தனது விதப்புரைகளுடன் தாபனப் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் தேக்க நலன் வழங்கப்படும் போது அத்தகைய உத்தியோகத்தர்களைவிட சிரேட்ட உத்தியோகத்தர்களின் சம்பளத்திற்கு மேற்பட்டவொரு படி நிலையில் வைக்காமல் இருப்பதற்கு உரிய கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

5.6 தாம் இன்னும் தகைமையடையாதவொரு வினைத்திறமை காண் தடைக்கு மேலாகவுள்ளவொரு சம்பளப் படிநிலையில் பதவியுயர்வு வழங்கப்பட்ட உத்தியோகத்தர் வைக்கப்பட்டால் அவருக்கு வினைத்திறமை காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்துவதற்கு நீடிப்புக் காலம் வழங்குவதற்கு அல்லது வயது; சேவை மூப்பு, அனுபவம், வினைத்திறமை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையிலிருந்து முற்றாக விலக்களிப்பதற்கு தாபனப் பணிப்பாளரின் அதிகாரம் பெறப்பட்டிருந்தாலன்றி அவர் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தியெய்தும் வரைக்கும் அவருக்கு மேற்பட்ட ஏற்றங்களெதுவும் வழங்கப்படமாட்டாது. (அத்தியாயம் 11இன் பிரிவு 15ஐப் பார்க்க.)

5.7 உத்தியோகத்தரொருவரின் சம்பள மீளாய்வொன்றும் பதவி உயர்வும் ஒரே திகதியில் வரும் சந்தர்ப்பத்தில் அத்தகைய உத்தியோகத்தரொருவரை பதவி உயர்வு செய்வதன் மூலம் சம்பள மாற்றங்களைச் செய்வது (4வது உட்பிரிவுக்கு இணங்க அவரின் சம்பளத்தைப் புதிய சம்பள அளவுத் திட்டத்துக்கு மாற்றுவதற்கு முன்னர்) பழைய சம்பள அளவுத் திட்டங்களுக்கு இணங்க அல்லது 4வது பிரிவுக்கு இணங்க அவரின் பழைய சம்பளம் புதிய சம்பள அளவுத் திட்டத்துக்கு மாற்றியதன் பின்பு ) புதிய சம்பள அளவுத் திட்டத்துக்கு இணங்க எனும் இவ்விரண்டில் உத்தியோகத்தருக்கு மிகவும் பயன்தரக் கூடிய முறையில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

02. இந்த ஏற்பாடுகள் 1992.12.31ஆந் திகதி வரை நிலுவைச் சம்பள செலுத்தல்களின்றி, 1983 ஜனவரி 01ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும்.

ஒப்பம்: எம். டி. டி. பீரிஸ்.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இலக்கம்: கசேச/கசே/4/25
அரசாங்க சேவை ஆணைக்குழுவின்
கல்விச் சேவைச் சபை,
'இசுருபாய', பெலவத்தை,
பத்தரமுல்லை.
1993. ஆகஸ்ட் மாதம் 23ந் திகதி.

சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,

அதிபர்கள் தரத்திற்கு பதவி உயர்வு/நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்குத் தரத்திற்குரிய நியமனம் வழங்குதல்.

---

எனது ஒத்த இலக்கமும் 1993.07.15ஆந் திகதியும் கொண்ட கடிதம் தொடர்பாக.

தரத்திற்கேற்ப உரிய பதவிகளை வழங்க முடியாத, உங்கள் பிரதேசத்திலுள்ள தரம் பெற்ற அதிபர்களின் பெயர் அட்டவணை, அவ்வாறு பதவிகள் வழங்க முடியாமைக்கான காரணங்களையும் குறிப்பிட்டு இரு வாரங்களுக்குள் கல்விச் சேவைச் சபைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறு மேற்குறித்த கடிதத்தின் வாயிலாக உங்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

உங்கள் மாகாணம் தொடர்பான விபரங்களை இது வரையில் எங்களுக்கு அனுப்பி வைக்க உங்களால் முடியவில்லை என்பது பற்றிக் கவலையடைகிறேன். இவ்விடயம் சம்பந்தமாக கல்வி தொடர்பான ஆலோசனைச் செயற்குழுவிற்கு விடயங்கள் சமர்ப்பிக்கப்படவுள்ளமையினால் அவ்விபரங்களைத் தாமதமின்றி உடனடியாக அனுப்பி வைக்க நடவடிக்கை எடுப்பீர்களாக.

ஒப்பம்: ஏ. எஸ். வீரரத்ன
செயலாளர்
கல்விச் சேவைச் சபை.

பிரதிக் கல்விப் பணிப்பாளர்.

பிரதிகள்:-

1. கல்வி, உயர் கல்விச் செயலாளர்
2. கோட்டங்களுக்குப் பொறுப்பான சகல பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை: 17/2005

எனது இல: தா/1/1/2/4/1
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2005.10..25..

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
கூட்டுத்தாபனங்கள் மற்றும்,
நியதிச்சட்ட சபை தலைவர்கள்,

**மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றும் போது அரச நிறுவனங்களின் உதவி வழங்கல்**

1996 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 10 ஆவது பிரிவின் மூலம் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ள கடமைகளுள் பின்வரும் கடமைகளின் பால் தங்களின் தயவான கவனம் ஈர்க்கப்படுகிறது.

(அ) அடிப்படை உரிமைகள் தொடர்பிலும் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளித்தல் அவற்றை அனுசரித்தல் என்பவற்றை ஊக்குவித்தல் தொடர்பிலும் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதலை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் நிறைவேற்றுத்துறை மற்றும் நிர்வாகத்துறை செயல்முறைகளையும் நடவடிக்கை முறைகளையும் கண்காணித்தல்.

(ஆ) அடிப்படை உரிமை மீறப்பட்டமை அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமை என்பன தொடர்பிலான முறைப்பாடுகளை விட்டு விசாரணை செய்தலும் புலனாய்வு செய்தலும் அத்துடன் இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்படும் ஏற்பாடுகளுக்கு இணங்க மத்தியஸ்தம் மூலமும் இணக்கத்தின் மூலமும் அவற்றை தீர்ப்பதற்கு ஏற்பாடு செய்தலும்.

(இ) அடிப்படை உரிமைகளை முன்னெடுத்துச் செல்லுவதிலும், ஊக்குவிப்பதிலும், பாதுகாப்பதிலும் சட்டவாக்க, நிர்வாகப் பணிப்புரைகளையும் நடவடிக்கை முறைகளையும் தொகுத்தமைப்பதில் அரசாங்கத்திற்கு மதியுரை வழங்குதலும், உதவுதலும்.

மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்படி பணிகளை நடைமுறைப்படுத்தும் போது தங்களின் நிறுவனத்திற்கு உரிய செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகளின் போது அந்தக் குழுவிற்கு பொறுப்புடன் விடயங்களை சமர்ப்பிக்குமாறும், மனித உரிமைகள் மீறல் தொடர்பாக ஆணைக்குழு செய்கின்ற பரிந்துரைகள் தங்களுக்கு கிடைத்ததும் குறித்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக தொடர்புடை அதிகாரிகளின் முறைசார் அங்கீகாரத்தை பெற்ற பின் நடைமுறைப்படுத்துவதற்காக வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இத்தால் தெரிவித்துக்கொள்கின்றேன்.

டி.திசாநாயக்க
செயலாளர்
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2785617

ලේකම් / செயலாளர் / Secretary: 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, Fax: 2784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

"ඉසුරුපාය"
බත්තරමුල්ල.
"இசுருபாய"
பத்தரமுல்ல.
"Isurupaya"
Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. ஈடி/2/29/3/9/1

ඔබේ අංකය / உமது இல. / Your No. ....................

දිනය / திகதி / Date 2004.11.14

சுற்றறிக்கை இல: 2004/31

சகல மாகாண அரசாங்க சேவை
ஆணைக்குழுச் செயலாளர்கள்.

## அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரியர்களாக சேவையாற்றிக் கொண்டிருக்கும்போது பல்கலைக்கழகங்களின் உள்வாரி மாணவர்களாகப் பட்டப் பாடநெறியைத் தொடர்ந்து பட்டங்களைப் பெற்றுக் கொள்ளல்.

அரசாங்க பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற சில ஆசிரிய, ஆசிரியைகள் உரிய முறையில் கற்கை விடுமுறையைப் பெற்றுக்கொள்ளாது பல்கலைக் கழகங்களில் உள்வாரி மாணவர்களாகப் பதிவுசெய்து பாடநெறிகளைத் தொடர்வது சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ள இல.91/6 மற்றும் 1999/28 அமைச்சின் சுற்றுநிருபத்தின்பால் உங்கள் கவனத்தை ஈர்ப்புவிக்கிறேன்.

02. ஆசிரியர்கள் முழுக்கால ஆசிரிய சேவையில் ஈடுபட்டிருக்கவேண்டிய ஒரு குழுவினரானபடியால் ஆசிரிய சேவையில் ஈடுபட்டடிக்கும்போதே பல்கலைக் கழகங்களின் உள்வாரி மாவர்களாகப் பாடநெறிகளைத் தொடர்வது செய்யக்கூடாத ஒன்று என்று மீண்டும் வலியுறுத்துகின்றேன். அனுமதியின்றி பல்கலைக்கழகங்களின் உள்வாரி மாணவ, மாணவிகளாகப் பதிவுசெய்து பாடநெறிகளைத் தொடர்வதன் மூலம் அவர்களிடம் கல்வி கற்கின்ற மாணவ, மாணவியர்க்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு முடியாமற் போகின்றது.

03. பல்கலைக் கழகங்களில் **உள்வாரி** மாணவர்**களாகப்** பதிவுசெய்து பாடநெறிகளைத் தொடர்வதற்காக உரிய முறையிலான கற்கை விடுமுறையை அனுமதித்துக் கொள்ளாது விடுவிக்கப்படாத ஆசிரிய, ஆசிரியைகள் சம்பந்தமாக 2004.01.01 ஆந் திகதியின் பின்பு பட்டதாரிச் சம்பளம் வழங்கப்படமாட்டாது என்பதனை அறிவிக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. எவ்வாறாயினும் தற்போது யாராவது ஒரு ஆசிரிய/ஆசிரியை இவ்வாறு ஒரு பல்கலைக்கழகத்தின் உள்வாரிப் பட்டமொன்றைப் பெற்றிருப்பின் அவர்களுக்கு உரிய பட்டதாரிச் சம்பளத்தை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி 2003.12.31ஆந் திகதி அல்லது அதற்கு முன்புள்ள ஓர் திகதியிலிருந்து செல்லுபடியாகக் கூடியதான பட்டமொன்றினைப் பெற்றிருப்பின் அவ்வாறு பட்டங்களைப் பெற்றுள்ள ஆசிரியர்களுக்கு, வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி அவர்களை இலங்கை ஆசிரியசேவை பிரமாணக்குறிப்புக்கேற்ப உரிய தரத்தில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் இந்தப் பட்டச் சம்பளங்களைத் தயாரிக்கும்போது கல்விச் சேவைக் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள 2001/12 இலக்கச் சுற்றுநிருபத்தின் மூன்றாம் பந்தியின் III இன்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

05. உள்வாரி மாணவர்களாகக் கல்விக் கல்லூரிகளிலோ ஆசிரியர் கல்லூரிகளிலோ பயிற்சி பெறும் காலத்தில் பட்டம் பெற்றறவர்களுக்கு இச்சுற்றறிக்கையின் விதிகள் பொருத்தமானதாகாது.

06. இச்சுற்று நிருபத்தின் இலக்கம் 04 இல் காட்டப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் 2003.12.31. ஆந் திகதியன்றிலோ அதற்கு முன்னைய திகதி ஒன்றிலோ இருந்து செல்லுபடியாகக்கூடிய வகையில் உள்வாரிப் பட்டங்களைப் பெற்றிருக்கும் ஆசிரியர்களுக்கு மாத்திரம் பொருத்தமானதாக அமைவதோடு அதன் பின்பு எக்காரணங் கொண்டும் அவ்விதமுறைகள் நீடிக்கப்படமாட்டாது. ஆகையால் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள சகல ஆசிரியர்களையும் பொறுத்த வரையில் இச்சுற்று நிருப விதிகளை உரியமுறையில் அமுல் நடத்துவதற்கு உரிய அதிகாரிகள் ஒழுங்குகளைச் செய்ய வேண்டும்.

வைத்திய நிருபா டி மெல்
செயலாளர்,
கல்வி அமைச்சு.

பிரதிகள்:

1. செயலாளர், அரசாங்க சேவை ஆணைக் குழு
2. சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்
3. சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
4. சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.
අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2785617
ලේකම් / செயலாளர் / Secretary: 2784812
කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, Fax: 2784846
ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk
ඔබේ අංකය / உமது இல. / Your No. ..........................................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education
"ඉසුරුපාය"
බත්තරමුල්ල.
"இசுருபாயா"
பத்தரமுல்ல.
"Isurupaya"
Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. ஈடி/01/12/01/03/13
பாடசாலை செயற்பாடுகள்
தனியார் பாடசாலைக் கிளை.

දිනය / திகதி / Date ...............2004:05:13...............

சுற்றுநிருப இல: 2004/14

மாகாணக் கல்விச் செயலாளர்கள்
மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
கோட்டத்திற்குப் பொறுப்பான
கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கு

## மேலதிக தனிப்பட்ட உதவி வகுப்புக்கள்

பாடசாலை நேரத்தில் சில மாணவர்கள் மேலதிக தனியார் வகுப்புக்களுக்குச் சமுகமளிப்பதாகவும் சில ஆசிரியர்கள் பாடசாலை நேரத்தில் பண அறவீடு செய்து தனியான உதவி வகுப்புக்களை நடாத்துவதாகவும் இவ்வமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

கல்விச் சீரமைப்பின் கீழ் பிள்ளைகளின் நிபுணத்துவங்களை அபிவிருத்தி செய்வதில் கூடிய கவனம் மற்றும் முயற்சி எடுக்கப்பட வேண்டியுள்ளதோடு, தற்போது நடைபெறும் முறைக்கேற்ப தனிப்பட்ட உதவி வகுப்புக்கள் காரணமாக அந்நோக்கங்கள் நிறைவேற்றப்படுவதில்லை. பாடத்திட்டத்தில் காட்டப்பட்டுள்ள உரிய பிரயோகச் செயற்பாடுகள் கொண்ட பாடங்களை நடாத்துவதால் மாத்திரம், எதிர்பார்க்கப்படும் கல்வியின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளமுடியும். ஆகவே தற்போது நிலவும் முறையில் தனிப்பட்ட உதவி வகுப்புக்களுக்கு, மாணவர்கள் செல்வதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியுள்ளன. எனவே இது சம்பந்தமாகக் கீழ்க்குறிப்பிடப்படும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சகல அதிபர்களையும் அறிவுறுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

1. மாணவரின் வரவுபற்றி ஆசிரியர்கள் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளதோடு, சுற்றுநிருபங்களுக்கேற்பப் பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்காக 80% வரவின் தேவையை அமுல்நடாத்த வேண்டும்.

2. கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் பிரயோகச் செயற்பாடுகள் என்பனவற்றின் மீது விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதோடு பாடசாலை அடிப்படையிலான மதிப்பீடுகளின்படி அதற்கான தரங்கள் வழங்கப்பட வேண்டும். கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரணதர, உயர்தர பரீட்சைச் சான்றிதழ்களில் இத்தரங்கள் குறிப்பிடப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. எக்காரணம் கொண்டும் பாடசாலை நடைபெறும் காலவேளையில் ஆசிரியரினால் தனிப்பட்ட உதவி வகுப்புக்கள் நடாத்தப்படக் கூடாது. யாராவதோர் ஆசிரியர் அவ்வாறு செய்வதாயின், அதிபர்கள் அதுபற்றி விசாரித்து சாட்சிகளடங்கிய அறிக்கையொன்றைத் தயாரித்து அவ்வாறான ஆசிரியர்களுக்கெதிரான ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்வதற்காக உரிய அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

பாடசாலை அபிவிருத்தி மன்றத்தின் இணக்கப்பாட்டின் பேரில் பின்தங்கிய மாணவர்களுக்கு வகுப்பறை முறையிலான மாற்றுக் கற்பித்தல் நிகழ்ச்சித் திட்டமொன்றை அமுல் நடாத்துவதற்கு இதனால் எவ்வித தடையும் ஏற்படுவதில்லை.

மேற்படி விடயங்கள் சம்பந்தமாக சகல அதிபர்களுக்கும் அறிவிப்பதோடு இவ்விதி முறைகள் உரிய முறையில் பேணப்படுகின்றனவா என்பதை நெறிப்படுத்துமாறு இத்தால் அறிவுறுத்துகிறேன்.

இந்திராணி காரியவசம்,
மேலதிக செயலாளர்,
(கல்வி பண்புசார் விருத்தி)

ஒப்பம்:
வைத்திய டாரா டிமெல்
செயலாளர்,
கல்வி அமைச்சு.

மாகாண கல்விப்பணிப்பாளர்,
வகிமா.

ஈடி/03/38/1/3/02
09.09.2004.

## மாகாணத் தகவல் தொழில்நுட்ப நிலையங்களுக்கு (PITEC) நியமிக்கப்பட்ட விரிவுரையாளர்களுக்கு கடமைகளை வழங்குதல்

தங்களது மாகாணத்திலுள்ள தகவல் தொழில்நுட்ப கல்வி நிலையங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள விரிவுரையாளர்களை மாகாண தகவல் தொழில்நுட்பக் கல்வியில் தரத்தினை உயர்த்துவதற்கென கீழ்க்காணும் வகையில் விவரிக்கப்பட்ட பணிகளை ஆரம்பிப்பதற்கு ஈடுபடுத்தும்படி கேட்கின்றேன்.

1) மாகாணத்தின் வலய தகவல் தொழில்நுட்ப நிலையங்கள் (CRC). பாடசாலை தகவல் நிலையங்கள் பற்றிய தகவல்களைத் திரட்டுதலும் அவற்றினது பூர்த்தி செய்யக்கூடிய தேவைகளை இனங்காணுதலும்.
2) மாகாணத்தின் பொதுத்தகவல் தொழில்நுட்ப பாடம் (GIT) செயற்படும் பாடசாலைகளினது கற்பித்தல் தரத்தினை விருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தலும் நடைமுறைப்படுத்தலும்.
3) கொரிய அரசின் ஆதரவின்கீழ் பாடசாலைகளுகடகு அனுப்பப்படும் கணனிகளைப் பரிசீலித்தலும் அவற்றை விநியோகிக்க நடவடிக்கை எடுத்தலும்.
4) நிலையத்திற்க கிடைக்கும் கணனிகள், உபஉறுப்புகள் என்பன தொடர்பாகப் புறம்பான கோவையினை ( ITEM FILE) த் தயாரிக்க நடவடிக்கை எடுத்தல்.
5) வரும் வருடத்திற்கான வேலைத்திட்டத்தினை மாகாண தகவல் தொழில்நுட்ப இணைப்பு அதிகாரியின முனைப்பின்கீழ் தயாரித்தல்.

மாகாண தகவல் தொழிநுட்ப நிலைகளது பொறுப்புக்கள், நிர்வாகம் பற்றிய அறிவுறுத்தல்கள் எதிர்வரும் காலப்பகுதியுள் தங்களுக்கு வழங்கப்படும்.

ஒப்பம் :- எச்.எல்.குணவர்த்தனா
மே.செ(கல்.அபி)
க/செயலாளருக்காக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றுநிருபம் இல: 04/03

எனது இல: ச/1/92/1/2003
அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்
இல. 46, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 02.
2003 டிசம்பர் மாதம் 02 ஆம் திகதி

செயலாளர், மனிதவள அபிவிருத்தி கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சு
செயலாளர், உள்நாட்டலுவல்கள், மாகாணசபை, மாகாண நிர்வாக அமைச்சு
சகல மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
சகல மாகாண சபைகளின் ஆளுநர்களின் செயலாளர்கள்
சகல மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்
சகல மாகாண சபைகளின் கல்விச் செயலாளர்கள்,

## மாகாண அரச சேவையில் பதவி வகிக்கின்ற கல்வி ஆளணியினர் சம்பந்தமான நடவடிக்கை மேற்கொள்ளல்

அரசியல் யாப்பின் 13ஆவது திருத்தத்திற்கமைய மாகாண அரச சேவையில் உள்ள கல்வி ஆளணியினர் சம்பந்தமாக குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளையும் அரசியல் யாப்பின் 17ஆவது திருத்தத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழு சம்பந்தமாக வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளையும் மிகவும் செயற்றிறனுடையதாகவும், பரஸ்பர ஒத்துழைப்புடனும் செயற்படுத்துவதன் அவசியத்தினையும்,

மத்திய அரசாங்க பதவிகளில் சேவை புரிகின்ற, மாகாண அரசாங்க சேவை பதவிகளில் சேவை புரிகின்ற கல்வி ஆளணியினர் சம்பந்தமாக ஒரே தேசிய கொள்கையின் கீழ் செயற்படுத்துவதன் உசிதத்தினையும் கருத்தில் கொண்டு,

அரசாங்க சேவை ஆணைக்குழு கீழ்வரும் செயல்முறைகளை நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளது.

### (1) இலங்கை கல்வி நிருவாக சேவை

| | |
|---|---|
| I. சேவைக்கு நியமித்தல், பதவி உயர்வு | இலங்கை கல்வி நிருவாக சேவை ஒரு அகில இலங்கை சேவையாதலால் ஏனைய அகில இலங்கை சேவைகளுக்கு போல் சேவைக்கு நியமித்தலும் பதவி உயர்வு செய்தலும் அரசாங்க சேவை ஆணைக் குழுவினாலேயே மேற்கொள்ளப்படும் |
| II. மாகாண அரசாங்க சேவை பதவிகளுக்காக தற்காலிகமாக விடுவித்தல் | உரிய மாகாண அதிகாரிகளினதும் உத்தியோகத்தர்களினதும் விருப்பத்தின் பேரில் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் உரிய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரி இணைப்பு (Secondmend) அடிப்படையில் தற்காலிகமாக விடுவிக்கப்படுவார் |
| III. மாகாண அரசாங்க சேவைக்கு விடுவிக்கப் பட்ட காலத்தினுள் ஒழுக்காற்று நிருவாகம் | இணைப்பு (Secondmend) அடிப்படையில் தற்காலிகமாக மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு விடுவிக்கப்பட்ட காலத்தினுள் அவ்வதிகாரிகளின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மாகாண |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படும். இருப்பினும் ஒழுக்காற்று தீர்மானங்கள் சம்பந்தமான முறையீடுகள் சார்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**IV. மாகாண கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்கு நியமித்தல்**

இப்பதவி மத்திய அரசினதும், மாகாண சபைகளினதும் கல்வி சம்பந்தமான இருவகைப் பொறுப்புக்களை வகிக்கின்ற ஒன்று என்பதால் மாகாண ஆளுநரால் பெயர் குறிப்பிடுகின்ற அதிகாரி ஒருவரும் அங்கம் வகிக்கின்ற ஒரு நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படுகின்ற இலங்கை கல்வி நிருவாக சேவை I-ஆம் வகுப்பைச் சேர்ந்த ஒரு அதிகாரி நியமிக்கப்படுவர். மாகாண சபைகளுக்கு வழங்கப் பட்டுள்ள அதிகாரங்களை செயற்படுத்துவதற்காக மாகாண அதிகாரியினால் அவருக்கு வேறொரு நியமனக் கடிதம் வழங்கப்படும்.

**V. மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்கு நியமித்தல்**

இப்பதவிகளுக்கு இலங்கை கல்வி நிருவாக சேவை I-ஆம் வகுப்பு அதிகாரிகள் மாகாண அதிகாரிகளால் நியமிக்கப்படுவர்.

**VI. வெற்றிடமாக உள்ள பதவிகளுக்கு கடமை பார்ப்பதற்கு/பதில் கடமை புரிவதற்கு நியமித்தல்**

வெற்றிடமாக உள்ள பதவிகளுக்கு சேவையின் உரிய தரத்தில் போதியளவு உத்தியோகத்தர்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் அடுத்த தரத்திற்குரிய அதிகாரிகளில் இருந்து அவர்களது சேவைமூப்பு, திறமை அடிப்படையில் நேர்முகப் பரீட்சையின் மூலம் தேர்ந் தெடுக்கப்பட்டதன் பின் மாகாண அதிகாரிகளினால் நியமிக்கப்படுவர்.

**VII. இடமாற்றம்**

மாகாணத்தினுள் உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்வது அனுமதிக்கப்பட்ட இடமாற்ற கொள்கையின் படி மாகாண அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும். எனினும் அதிகாரிகளை இடமாற்றம் செய்யும்போது சமமான பதவிகளில் இருந்து மற்றொரு சமமான பதவிக்கு (சிறப்பு/பொது) ஆளணி எண்ணிக்கையையும் கருத்தில் கொண்டு இடமாற்றம் செய்வதற்த நடவடிக்கை மேற்கொள்ளல் சிறந்ததாகும்.

1. ஒரு மா[illegible] இருந்து வேறு ஒரு மாகாண அரச சேவைக்கு இடமாற்றம் செய்யும்போது

2. மாகாண அரச சேவை பதவிகளில் இருந்து மத்திய அரச சேவை பதவி ஒன்றுக்கு இடமாற்றம் செய்யும்போது

3. மத்திய அரசின் பதவி ஒன்றிலிருந்து மாகாண அரச பதவி ஒன்றுக்கு இடமாற்றம் செய்யும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிய முறையில் அரசாங்க சேவை ஆணைக் குழுவினூடாக அல்லது மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவினூடாக விடுவிக்கப்பட்டதன் பின்னர் உரிய அதிகாரியினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (மாகாண அரச சேவை பதவிகளில் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலமும், மத்திய அரசின் பதவிகளில் கல்வி அமைச்சின் மூலமும்)

VIII. சேவை நீடிப்பும், ஓய்வு பெறச் செய்தலும்

ஏனைய அகில இலங்கை சேவைகளுக்கு போன்றே அரசாங்க சேவை ஆணைக் குழுவினாலேயே செய்யப்படும். மாகாண அரசாங்க சேவையில் உள்ள அதிகாரிகள் சம்பந்தமாக உரிய மாகாண அதிகாரிகளினால் விதப்புரைகள் பெறப்படும்

IX. வேதன ஏற்றங்கள் அனுமதித்தல்

மாகாண அரசாங்க சேவையில் பதவி வகித்துக் கொண்டிருக்கும் போது அவர்களது வேதன ஏற்றங்கள் கீழ் குறிப்பிடப்படும் அதிகாரிகளினால் அனுமதிக்கப்படும்.

III-ஆம் தர அதிகாரிகள்-மாகாண கல்விப் பணிப்பாளர்

II-ஆம் தர அதிகாரிகள்-மாகாண கல்விச் செயலாளர்கள்

I-ஆம் தர அதிகாரிகள்-மாகாண பிரதான செயலாளர்கள்

## (2) இலங்கை அதிபர் சேவை

I. சேவைக்கு நியமித்தல், பதவி உயர்வு

அதிபர் சேவை பிரமாணக் குறிப்பிற்கேற்ப அரசாங்க சேவை ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்படும்.

II. மாகாண அரசாங்க சேவை பதவிகளுக்கு நியமித்தல்

மாகாண அரச சேவையில் உள்ள அதிபர் தரமுடையோர் கல்வி அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலை வகைப் படுத்தலுக்கேற்ப உரிய பதவிகளுக்கு மாகாண அதிகாரிகளினால் நியமிக்கப்படுவர்.

III. 1A,B,C பாடசாலைகளுக்காக அதிபர்களை நியமித்தல்

அரசியல் யாப்பின் 13ஆவது திருத்தத்தில் III ஆம் பகுதிக்கு ஏற்ப 1A, B, C பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமிக்கும் அதிகாரம் மத்திய அரசைச்சாரும் என்பதால் தேசிய பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமிக்கின்ற முறையினைப் பின்பற்றி அரசாங்க சேவை ஆணைக் குழுவின் அனுமதியின் படி கல்வி அமைச்சின் செயலாளரினால். மேற்கொள்ளப்படும்.

IV. இடமாற்றம்

அனுமதிக்கப்பட்ட இடமாற்றக் கொள்கையின் அடிப்படையில் மாகாணங்களினுள் அதிபர் சேவை உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்யும் அதிகாரம் மாகாண அதிகாரிகளைச் சாரும். இடமாற்றங்களை செய்யும்போது அமைச்சின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகள் வகைப் படுத்தல்களுக்கேற்ப உரிய தரங்களை உடையவர்களை உரிய பதவிகளுக்கு இடமாற்றம் செய்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| V. இடமாற்றத்திற்காக விடுவித்தல் | I. ஒரு மாகாண அரச சேவையில் இருந்து மற்றொரு மாகாண அரச சேவைக்கு இடமாற்றம் பெறும்போது<br><br>II. மாகாண அரச சேவையில் உள்ளோர் மத்திய அரசின் பதவிகளுக்கு இடமாற்றம் பெறும்போது<br><br>III. மத்திய அரசிலிருந்து மாகாண அரச சேவையின் பதவிகளுக்கு இடமாற்றம் பெறும்போது<br><br>உரிய அதிகாரிகளினால் உரிய முறையில் விடுவித்தல் வேண்டும். | |
| VI. ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு | மாகாண அரச சேவையில் பதவி வகிக்கின்ற அதிபர் தரத்தினையுடையோர் சம்பந்தமாக உரிய மாகாண அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படும். எனினும் சேவையிலிருந்து நீக்கப்படுவது சம்பந்தமாக அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு முறையீடு செய்யும் உரிமை அதிகாரிக்கு உண்டு | |
| VII. சேவை நீடிப்பும், ஓய்வு பெறச் செய்தலும் | அதிபர் சேவை தரம் Iஇன் அதிகாரிகளது சேவை நீடிப்பும், ஓய்வுபெறச் செய்தலும் உரிய அதிகாரிகளின் விதப்புரைக்கேற்ப அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் மேற்கொள்ளப்படும். மாகாண அரச சேவையில் சேவை புரிகின்ற ஏனைய தரங்களுக்குரிய அதிகாரிகள் சம்பந்தமாக மாகாண அதிகாரிகளினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | |

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய

ஒப்பம் - எச்.டி.எல்.குனவர்தன
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இல: மேமா/கொ/வல/ஆநி/பொது
வலயக் கல்விக் காரியாலயம்,
விதானகே மாவத்தை,
கொழும்பு-02.
2003.07.18

சகல ஆசிரியர் மற்றும் அதிபர்களுக்கு,

<u>சுயவிபரக் கோவைகளிலுள்ள குறைகளைப் பூர்த்தி செய்தல்</u>

ஆசிரியர்களினதும், அதிபர்களினதும் சுயவிபரக்கோவைகளில் இருக்க வேண்டிய மிக முக்கியமான ஆவணங்கள் காணப்படாமையினால் கோவைகளை பூர்த்தி செய்வதற்கான அலுவல்களை (சம்பளத்தை சீர்செய்தல், நிரந்தரமாக்குதல், பதிவு இலக்கங்களை வழங்கல். விதவை/அநாதைகளுக்கான ஓய்வூதிய இலக்கத்தைப் பெறுதல், பதவி உயர்ச்சி, கல்விசார்பான லீவுகள், வெளிநாட்டுக்குச் செல்வதற்கான லீவுகளை அனுமதித்தல், சேவை நீடிப்பு, ஓய்வுபெற்றுச் செல்லுதல், ஓய்வூதியத்தை வழங்கல்) மேற்கொள்வதற்கு தாமதமாகின்றன. இது ஒரு பாரிய பிரச்சினையாகும்.

எனவே ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்குரிய தத்தமது சுயவிபரக் கோவைகளில் இருக்க வேண்டிய மிக முக்கியமான ஆவணங்களை அறிவிப்பதுடன், அவ்வாவணங்களைப் பெற்று சுயவிபரக்கோவைகளில் உள்ளடக்கவும். அவ்வாறு உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதை அறிவிக்கவும், அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது விடயமாக மேல்மாகாண கல்விச் செயலாளரின் இலக்கம் சி/எம்/டபிள்யு/பி/ஈ/11 மற்றும் 2003ம் ஆண்டு ஜூன் மாதம் 20ஆம் திகதி குறிப்பிடப்பட்டு எனக்கு கிடைக்கப் பெற்றுள்ள ஆலோசனைகளுக்கமைய சுயவிபரக்கோவைகளை பூர்த்திசெய்யும் பாரிய வேலைத்திட்டம் கொழும்பு வலயக் கல்விக் காரியாலயத்தினூடாக மேற்கொள்ளப் பட்டு வருகின்றது.

சுயவிபரக் கோவைகளில் இருக்க வேண்டிய மிகமுக்கியமான ஆவணங்கள் பற்றிய அட்டவணை ஒன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அவ்வட்டவணையை பரிசீலித்துப் பார்த்து இவ்விவரங்கள் தமது சுயவிபரக் கோவைகளில் கோவைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதை உறுதிசெய்வதுடன், சுயவிபரக் கோவைகளில் ஏதும் ஆவணங்கள் குறைபாடாகவுள்ளதா என்பதை தெரிந்துகொள்வதற்கும், அத்தகைய குறைபாடாக காணப்படும் ஆவணங்களை கோவையில் இணைத்துக்கொள்வதற்கும், சுயவிபரக்கோவை முழுமையாக பூரணப்படுத்தப் பட்டுள்ளதா என்பதை அறிந்துகொள்வதற்கும், சந்தேகங்களைப் போக்கி நிவர்த்தி செய்வதற்கான அலுவல்களை மேற்கொள்ள ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் கவனத்தை கடிமமாக ஈர்க்குமாறு அறிவிக்கின்றேன்.

இது தொடர்பாக ஆசிரியர் நிர்வாகக் கிளையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. விமலசரத்சந்திர அவர்களைச் சந்தித்து தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு மேலும் அறிவிக்கின்றேன்.

உங்களது சுயவிபரக்கோவைகளைப் பூரணப்படுத்துவதற்காக உங்களால் எங்களுக்கு கிடைக்கும் பங்களிப்பை மிக மேலானதாக மதிக்கின்றேன்.

T.R.J
திருமதி. த. இராஜரட்ணம்
உதவிக் கல்விப் பணிப்பாளர்.

ஒப்/ மேலதிக வலயக் கல்விப் பணிப்பாளர்

பிரதிகள்:
1. மேல்மாகாண கல்விச் செயலாளர் - பார்வைக்காக
2. மேல்மாகாண கல்விப் பணிப்பாளர் - பார்வைக்காக
3. கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் - பார்வைக்காகவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும்.

சுத/200803



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ඔබේ අංකය/உமது இல./Your No.................... මගේ අංකය/எனது இல./My No. கசேப/பொது/பி1/37(I,

රාජ්‍ය සේවා කොමිෂන් සභා කාර්යාලය (අධ්‍යාපන සේවා අංශය)
அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம் (கல்விச் சேவை பிரிவு)
**OFFICE OF THE PUBLIC SERVICE COMMISSION**
**(EDUCATION SERVICE DIVISION)**

ඉසුරුපාය, පැලවත්ත, බත්තරමුල්ල.
'இசுருபாய', பெலவத்த, பத்தரமுல்ல.
Isurupaya, Pelawatta, Battaramulla.

දුරකථනය/ தொலைபேசி / Telephone.
අති. ලේකම්/மே. செயலாளர்/Addl. Secretary: 785236
කාර්යාලය/காரியாலயம்/Office : 785091
ෆැක්ස්/ பக்ஸ் / Fax. 787231

දිනය/திகதி / Date 2003.02.07

---

சகல மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
பரீட்சை ஆணையாளர் நாயகம்,
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல ஆசிரிய கல்வி மத்திய நிலைய முகாமையாளர்கள்,
கல்விக் கல்லூரி பீடாதிபதிகள்,
சகல ஆசிரிய கலாசாலை அதிபர்கள்

**கல்விச் சேவைக் குழுவிகன் கருமங்களை**
**புதிய அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு ஒப்படைத்தல்**

அரசியல் யாப்பின் 17ஆவது திருத்தச் சட்டத்திற்கேற்ப புதிய அரசாங்க சேவை ஆணைக்குழு அமைக்கப்பட்டதுடன், கல்விச் சேவைக் குழுவின் கருமங்கள் 2002.12.03ஆந் திகதி முதல் அக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அத்தினம் முதல் கல்விச் சேவைக் குழு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் (கல்விச் சேவைப் பிரிவு)எனப் பெயரிடப்பட்டுள்ளதாக அறிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இக்கக் காரியாலயம் தொடர்ந்தும் பத்தரமுல்ல, 'இசுருபாய' வில் அமைந்துள்ள கல்வி அமைச்சு கட்டிடத்திலேயே செயற்படுவதோடு, பின்பு அமைவிடத்தில் மாற்றம் ஏற்படின் அது சம்பந்தமாக தங்களுக்கு அறிவிக்கப்படும் என்பதையும் கவனத்திற் கொள்க. அதன் பிரகாரம் தங்களால் அனுப்பப்படுகின்ற கடிதங்களை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தயவாய் கேட்டுக் கொள்கின்றேன்.

செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு காரியாலயம்,
(கல்விச் சேவைப் பிரிவு)
'இசுருபாய'
பத்தரமுல்ல.

டீ.எம்.எம்.தென்னகோன்,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழுவின்
செயலாளருக்காக.

**பிரதிகள்**

1. செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு-
2. செயலாளர் - மனிதவள அபிவிருத்தி
கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சு
3. செயலாளர் - பாடசாலைக் கல்வி அமைச்சு

} அறிந்து கொள்வதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

කසේකු/ஆதா 2/

මගේ අංකය/எனது இலக்கம்/My No. ..........................

රාජ්‍ය සේවා කොමිෂන් සභාවේ අධ්‍යාපන සේවා කමිටුව,
அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழு
Education Service Committee of the Public Service Commission

"ඉසුරුපාය"/"இசுருபாய"/"Isurupaya"
පැලවත්ත/பலவத்தை/Palawatte,
බත්තරමුල්ල/பத்தரமுல்ல/Battaramulla

ඔබේ අංකය/உமது இலக்கம்/Your No. ..........................

දුරකථන අංක/தொலை பேசி இலக்கம்/Telephone Nos.

| | |
|---|---|
| සභාපති/தலைவர்/Chairman | 785239 |
| ලේකම්/செயலாளர்/Secretary | 785236 |
| කාර්යාලය/செயலகம்/Office | 785141 – 785150 |
| ෆැක්ස්/பக்ஸ்/Fax | 787231 |

දිනය/திகதி/Date 2002.09. 30

சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்

தேசிய பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்கள் அதிபர்களுக்கு அவர்களை ஆரம்பத்தில் சேவைக்கு தெரிவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டுள்ள தற்காலிக நியமனக்கடிதங்களுக்குப் பதிலாக முறையான நியமனக் கடிதங்கள் வழங்குதலும், சேவையில் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்பு பதவி உறுதிப்படுத்தப்பட்டதாககடிதங்கள் வழங்குதலும்

என்னால் வெளியிடப்பட்ட 2001.12.09ஆம் திகதிய 2001/10, 2002.01.30ஆம் திகதி 2002/01 சுற்றுநிருபங்களின்பால் அவதானத்தை திருப்புகின்றேன்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவினால் காலத்துக்குக் காலம் பல்வேறு அடிப்படைகளில் ஆசிரிய சேவைக்கு ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். ஆரம்ப காலத்தில் அவ்வாறு சேர்த்துக் கொள்ளப்பட்ட ஆசிரியர்களுக்கு தற்காலிக நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளதோடு முறையான நியமனக் கடிதங்கள் பின்பு வழங்கப்படும் என்றும் அக்கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. எனினும் நீண்டகாலம் சென்றுவிட்டபோதிலும் அநேகமான ஆசிரியர்களுக்கு முறையான நியமனக் கடிதங்கள் வழங்குவதற்கு கல்விச் சேவைக் குழுவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரியவந்துள்ளது. தற்போது இவ்வாசிரியர்களுள் அநேகமானோர் ஓய்வு பெறும் வயதை அடைந்துள்ளதுடன் ஓய்வூதியம் பெறுவதில் முறையான நியமனக் கடிதங்கள் தங்களது சுயவிபரக் கோவைகளில் இல்லாததால் பிரச்சினைகளுக்கு உட்பட்டுள்ளனர் என அறிய வந்துள்ளது.

அவ்வாறே தகுதிகாண் கால முடிவில் சேவையில் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் உறுதிப்படுத்தல் கடிதமும் அநேகமான ஆசிரியர்களுக்கு வழங்கப்படவில்லை என தெரியவந்துள்ளது.

இத்தாமதங்கள் பற்றி ஆராய்ந்த கல்விச் சேவைக் குழு ஆசிரியர்களின் சுயவிபரக் கோவையை பரிசீலித்துபார்த்து மேற்கூறப்பட்ட முறையான நியமனக் கடிதம் அல்லது சேவையில் உறுதிப்படுத்தப்படுதல் கடிதத்தினை விநியோகிப்பதற்காக எனது சமகிலக்கம் கொண்ட 2002/1 சுற்றுநிருபத்தில் தேவையான அதிகாரங்களை தங்களுக்கு வழங்கியுள்ளது.

இருப்பினும் அநேகமான ஆசிரியர்களுக்கு அடிக்கடிதங்கள் இன்னும் கிடைக்கவில்லை என்பது அவர்களால் முன்வைக்கப்படுகின்ற முறைப்பாடுகளினூடாக தெரிய வருகின்றது

எனவே இது சம்பந்தமாக தங்களது மேலான அவதானத்தை செலுத்துகின்ற அதேவேளை இவ்வேலை சம்பந்தமாக விசேட கவனம் செலுத்தி சுயவிபரக் கோவைகளுக்கு பொறுப்பாக உள்ள எழுதுவினைஞர்களை ஈடுபடுத்தி முன்வரும் மாதத்தினுள் அவ்வாறான எல்லா கடிதங்களையும் விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவித்துக் கொள்கின்றேன்.

இது விடயமாக கூடிய முக்கியத்துவத்தை வழங்குவீர்கள் என நம்புகின்றேன்.

ரி.எம்.எம்.தென்னகோன்,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழுவின்,
கல்விச் சேவைக் குழு.

சகல மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர்கள்-
மாகாண அரசாங்க சேவையினுள் இருக்கின்ற ஆசிரிய, அதிபர்கள் சம்பந்தமாக மேற்கூறிய கடிதங்களை விநியோகிப்பதற்கு தாங்கள் செயற்படுவீர்கள் என நம்புகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விச் சேவைக் குழுவின் சுற்றுநிருப இல: 2002/04

எனது இல:கசேகு/ ஆதா/ 4/ 22
அரசாங்க சேவை ஆணைக்குழுவின்
கல்விச் சேவைக் குழு,
இசுறுபாய,
பெலவத்த, பத்தரமுல்ல.

2002.03.18ஆந் திகதி.

சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,

**தேசிய பாடசாலைகளில் சேவை புரியும் உதவி ஆசிரியர்களை தகுதிகாண் காலத்தின் முடிவில் நிரந்தரப்படுத்தல்**

மேற்குறித்த விடயமாக தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கல்விச் சேவைக் குழுவின் கடமை பார்க்கும் செயலாளரின் 2000/04ஆம் இலக்கமும் 2000.09.07ஆந் திகதிய சுற்றுநிருபம் தொடர்பாக.

02. தேசிய பாடசாலைகளில் சேவை புரியும் உதவி ஆசிரியர்களை, பதவிகளில் நிரந்தரமாக்குவது தொடர்பான அதிகாரங்கள் அச்சுற்றுநிருபத்தின் ஊடாக தங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் தகுதிகாண் காலத்தை பூரணப்படுத்தியுள்ள உதவி ஆசிரியர்களை பதவிகளில் நிரந்தரமாக்குவதற்காக அவர்கள் தொடர்பான அறிக்கையை உரிய அதிபர்கள் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு, உரிய பதவிகளுக்காக அவர்களிடம் இருக்க வேண்டிய கல்விச் சான்றிதழ்கள், அச்சான்றிதழ்களை வழங்கிய அதிகாரம் பெற்றவர்களினால் உறுதிப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். மேலும் அரசாங்க சேவையில் முதல் நியமனம் பெறும் அரச உத்தியோகத்தர்களால் சமூகமளிக்க வேண்டிய மருத்துவ பரிசோதனைக்காக உரிய ஆசிரியர் சமூகமளித்து அவர் தீவின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கான உடல் உளரீதியாக தகைமை பெற்றுள்ளார் என மருத்துவ அதிகாரியினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளார் என்பதில் தாங்கள் திருப்தியடைவது முக்கிய நிபந்தனையாகும்.

03. மேலும் அவ் ஆசிரியரின் சுயவிபரக்கோவை பரிசீலிக்கப்பட்டு, மேற்படி தேவைகள் அவரினால் பூரணப்படுத்தப்பட்டுள்ளன என்பதை சந்தேகமின்றி உறுதிப்படுத்தப்பட்டால் மாத்திரமே அவரை தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய பதவியில் நிரந்தரமாக்க வேண்டும். இது சம்பந்தமாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் IIம் அத்தியாயத்தின் 11ஆம் பந்தியின்பால் தங்களது கவனத்தை ஈர்க்கின்றேன்.

04. உதவி ஆசிரியர்களை பதவியில் நிரந்தரமாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தங்களுக்கு இக்குழுவினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதனால், தங்களது தனிப்பட்ட கையொப்பத்தின் மூலம் உரிய பதவியில் நிரந்தரமாக்கும் கடிதத்தை வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

ரி.எம்.எம்.தென்னகோன்,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழுவின்
கல்விச் சேவைக் குழு.

பிரதி: 1. மனிதவள அபிவிருத்தி, கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர்.
2. வலயக் கல்விப் பணிப்பாளர் மேற்குறித்த வண்ணம் நடவடிக்கை மேற்கொள்வதற்காக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 14/88

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
1988, ஏப்ரல் 25 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள்,
அரசாங்க கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் யாவருக்கும்!

இடம்பெயர்ந்த அரசாங்க உத்தியோகத்தர்கள், கூட்டுத்தாபன பணியாளர்கள் தம் கடமைகளை மீளப் பொறுப்பேற்றல்.

---

இவ் வன்செயலின் விளைவாக இடம் பெயர்ந்தவரும் கடமைகளை மீளப் பொறுப்பேற்க விரும்புகின்றவருமான அரசாங்க உத்தியோகத்தர் அல்லது உள்ளூராட்சிச் சேவைப் பணியாளர் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனப் பணியாளர் தாம் வாராமைக்கு ஏதுவாயமைந்த சூழ்நிலைகளை தமது திணைக்களத் தலைவருக்கு/அரசாங்க கூட்டுத்தாபனத் தலைவருக்கு அதுபற்றி விளக்கி அறிவித்தல் வேண்டும். உத்தியோகத்தர்/பணியாளர் கடமைகளை மீளப் பொறுப்பேற்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமா இல்லையா என்பதைப் பற்றி ஒவ்வொரு விடயத்தின் குறித்த சூழ்நிலைகளின் தன்மை பற்றித் திணைக்களத் தலைவர்/ அரசாங்க கூட்டுத்தாபனத் தலைவர் தீர்மானித்தல் வேண்டும்.

02. கடமைகளை மீளப் பொறுப்பேற்பதற்கு அனுமதிக்கப்படலாம் எனத் தீர்மானிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவரின்/பணியாளரொருவரின் வருகை தராத காலப்பகுதி தொடர்பில் அவர்,

(1) சம்பந்தப்பட்ட ஆண்டிலுள்ள ஏதேனும் பயன்படுத்தப்படாத அமய அல்லது ஓய்வு லீவைப் பயன்படுத்துவதற்கும்.

அத்துடன்(2) முந்திய ஆண்டிலுள்ள ஏதேனும் பயன்படுத்தப்படாத ஓய்வு லீவைப் பயன்படுத்துவதற்கும்.

அத்துடன்(3) அவருடைய சேவைக்காலத்தின் எந்த இரண்டு ஆண்டுகளினதும் பயன்படுத்தப்படாத ஓய்வு லீவைப் (காலங்கடந்த லீவு) பயன்படுத்துவதற்கும் அனுமதிக்கப்படல் வேண்டும்.

எஞ்சிய காலப்பகுதி சம்பளமற்ற லீவில் அமைதல் வேண்டும்.

03. 296, 343, 351, 369 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகள் 1983 யூலை தொடக்கம் இவ் வன்செயல் காரணமாக கொல்லப்பட்ட அல்லது நிரந்தரமாக இயலாதவராக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தருக்கு அல்லது உள்ளூராட்சிச் சேவைப் பணிப்பாளருக்கு அல்லது அரசாங்க கூட்டுத்தாபனப் பணிப்பாளருக்கு ஏற்புடைத்தானவைகளாகக் கொள்ளப்படல் வேண்டும்.

04. 1983 யூலை மாதத்திற்குப் பின்னர் வன்செயல், பாதுகாப்பின்மை ஆகியவற்றின் பயம் காரணமாகப் பதவி வெறிதாக்கத்தினால் அல்லது பதவி விலகலினால் தொழிலை இழந்த அரசாங்க உத்தியோகத்தர் அல்லது உள்ளூராட்சிச் சேவைப் பணியாளர் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனப் பணியாளர் இளைப்பாறுவதற்கு விருப்பம் தெரிவித்து கோரிக்கை செய்யுமிடத்து அந்த விடயம் ஒவ்வொன்றின் தொடர்பிலும் அதைப் பாதிக்கும் சூழ்நிலைகளின் நோக்கில் அது கருத்திற்கெடுத்துக் கொள்ளப்படலாம். சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் இளைப்பாறுவதற்கான விருப்பத் தேர்வை உத்தியோகத்தரின் சேவை புரிந்த ஆண்டுகளின் எண்ணிக்கையைக் கவனியாமல் வழங்குவதற்குரிய அதிகாரம் உடையர், ஆயின் அவர் இவ்வண்ணம் கருதப்படுவது தகுதியுடையது எனப் பூரணமாகத் திருப்தியுறல் வேண்டும்.

ஒப்பம்: டி.பி.ஐ.பி.எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

| | |
|---|---|
| අමාත්‍ය<br>அமைச்சர்<br>Minister | 2784832<br>2784807<br>2785617 |
| ලේකම්<br>செயலாளர்<br>Secretary | 2784812 |
| කාර්යාලය<br>அலுவலகம்<br>Office | 2785141-50<br>Fax: 2784846 |

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. ........................................

අධ්‍යාපන අමාත්‍යාංශය<br>கல்வி அமைச்சு<br>Ministry of Education

"ඉසුරුපාය"<br>බත්තරමුල්ල.<br>"இசுருபாய"<br>பத்தரமுல்ல.<br>"Isurupaya"<br>Battaramulla.

මගේ අංකය<br>எமது இல.<br>My No. பாடசாலை செயற்பாடு மற்றும் தனியார் பாடசாலைக் கிளை ED/01/12/03/10/10(1)

දිනය<br>திகதி<br>Date ........................ 2005.09.30 ......

**சுற்றறிக்கை இல:- 2005/29**

சகல மாகாண செயலாளர்கள்,<br>
சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,<br>
சகல தேசிய பாடசாலை அதிபர்கள்,<br>
சகல தகவல் மற்றும் தொழில்னுட்ப மத்திய நிலைய முகாமையாளர்கள்

## தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பக் கல்வி

## Information And Communication Technology (ICT) Education

துரிதமாக மாற்றமடைந்து வரும் புதிய அறிவு காரணமாக தற்போதைய உலகில் தீர்மானம் எடுத்தல் மற்றும் முகாமைத்துவ செயற்பாடுகளுக்காக புள்ளிவிபர மற்றும் தகவல்களை துரிதமாக பரிமாற்றம் செய்வது அத்தியாவசியமான பிரிவாக உள்ளது. அதன் பிரிவாக புதிய தகவல் தொழினுட்ப பாடத்துறை தொடர்பாக மக்களுக்கு விளக்கமூட்டுவது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக எதிர்கால உலகிற்கு ஏற்ப வெற்றிகரமாக முகங்கொடுக்கக்கூடியதாக உள்ளது. இந்நாட்டில் பாடசாலை மாணவர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவை விருத்திசெய்ய வேண்டியதன் அவசியத்தை அரசு இனங்கண்டுள்ளதுடன் அதன் பிரதிபலனாக பாடசாலைக் கல்வியின் நவீனமயச் செயற்பாடுகளுக்கு தகவல் தொழில்நுட்பத்தை இணைப்பதற்காக மிக முக்கியத்துவம் வாய்ந்த பணியை கல்வி அமைச்சு எடுத்துள்ளது.

தகவல் தொழில்னுட்ப பாடம் மற்றும் பாடசாலை கணனி ஆய்வுகூடத்தை பயன்படுத்தல் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 2004/23 மற்றும் 2004.07.12ம் திகதிய சுற்றறிக்கை இத்தால் இரத்துச் செய்யப்படுவதுடன் இதிலுள்ள ஆலோசனைகள் இதற்குப் பின்னரும் அமுலிலிருக்கும்.

### தகவல் மற்றும் தொடர்புசாதன தொழினுட்பம் (Information And Communication Technology – ICT)

தகவல் தொழினுட்பம் என்பது புள்ளிவிபரங்களை சேகரித்தல், அவற்றை களஞ்சியப்படுத்தல், புள்ளிவிபரங்களை தகவல்களாக மாற்றுதல் மற்றும் தகவல்களை உரிய தரப்பினர்க்கு வழங்குவதற்கான புதிய தொழில்னுட்பமாகும். இது இலகுவாக தகவல் தொழினுட்பம் **(Information Technology – IT)** அல்லது கணனியாக சமூகத்தினால் பயன்படுத்தப்படும் இப்புதிய தகவல் தொடர்புசாதன **(New ICT)** கணனி இணையத்தளம் **(Internet)** பிரதானமாக இருந்தாலும் இதற்கு முன்னர் தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்னுட்பம் **(Old ICT)** என கூறப்படும் தொலைபேசி வானொலி ரூபவாஹினி மற்றும் கட்புல செவிப்புல உபகரணங்கள் போன்றவற்றின் பயன்பாடும் தொடர்ந்தும் இதனுடன் தொடர்புபடுகிறது.

தகவல் தொடர்புசாதனத்தின் தொழில்னுட்பத்தினால் பலமடைந்த சமூகத்தை கட்டியெழுப்புவது மிக முக்கிய தேவையாக இருப்பதனால் கோளமய சூழலில் சவால்களை வெற்றி கொள்ள முடிந்த தேசிய பிரஜை ஒன்றை உருவாக்க தகவல் தொடர்புசாதன தொழில்னுட்பத்தை கல்வியில் உள்ளடக்குவது அத்தியாவசியமான விடயமென அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. இதனடிப்படையில் தகவல் தொடர்புசாதன தொழில்னுட்பம் பாடசாலை கல்வியுடன் தொடர்புபடுத்துவதற்காக அரசாங்கத்தினால் கொள்கை அடிப்படையிலான கோட்பாடாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக்கொண்டுள்ளதுடன் அதன் கீழ் உபாய வழிமுறைகள் நான்கு தொனிப் பொருளுக்கமைய செயற்படுத்தப்படுகின்றது.

1. பாடவிதான விருத்தி
2. மானிட வள விருத்தி
3. பௌதிக மற்றும் உட்கட்டமைப்பு வசதி விருத்தி
4. படைப்பாற்றல் சூழலை கட்டியெழுப்புதல்

இக்கொள்கை அடிப்படையில் தகவல் தொடர்புசாதன தொழில்னுட்பத்தை

i. கல்வியின் கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு இணைத்தல் மற்றும்
ii. கல்வி நிர்வாகத்திற்காக பயன்படுத்துவதன் மூலம்

இலங்கை கல்வி முறைமையை நவீனமயப்படுத்த வேண்டுமென கல்வி அமைச்சு கருதியுள்ளது.

தகவல் மற்றும் தொடர்புசாதன தொழினுட்பம் கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகளுடன் இணைக்கும் போது

i. பல்வேறுபட்ட பாடங்களை கற்றல் மற்றும் பாடத்துறைகள் தகவல் முகாமைத்துவ கருவியாக தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்னுட்பப் பயன்பாடு மற்றும்
ii. பாடமாக தகவல் தொடர்புசாதன தொழினுட்பத்தை கற்றல் ஆகிய இரு பிரவேசங்களை பின்பற்ற கருதப்பட்டுள்ளது.

தற்பொழுது அமுல்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டத்தின் கீழ்

i. ஆரம்பத் தரங்கள் தொடக்கம் உயர் தரம் வரை பல்வேறுபட்ட பாடங்களைக் கற்கும் போது அப்பாடங்களில் தகவல் முகாமைத்துவம் சார்ந்த செயற்பாடுகளின் போதும் தகவல் தொடர்புசாதன தொழினுட்பம் கருவியாக பயன்படுத்தல்.
ii. க.பொ.த (உ/த) 12ம் தர மாணவர்களுக்காக பொது தகவல் தொழினுட்பம் (GIT) பாடத்தை அறிமுகப்படுத்தல்
iii. க.பொ.த (சா/த) இற்காக தகவல் தொடர்புசாதன தொழினுட்பம் /தகவல் தொழில்னுட்பம், தொழில்னுட்ப பாடமாக 2006 ஜனவரி முதல் அறிமுகப்படுத்தல்.
iv. க.பொ.த (உ/த) முழுமையான பாடமாக தகவல் தொடர்புசாதன தொழில்னுட்பம் 2008 மே முதல் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

* இது கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் தொடர்ந்தும் காண்பிக்கப்பட்டுள்ளது.

| மட்டம் | தகவல் தொழில்னுட்ப பாடமாக | | கருவியாக |
|---|---|---|---|
| | சாதாரணம் /மேலதிகம் | தொழில்னுட்பம் | |
| ஆரம்பம் (1 – 5) | - | | ஆம் |
| கனிஸ்ட இடைநிலை (6 – 9) | - | | ஆம் |
| சிரேஸ்ட இடைநிலை (10 – 11) | | சாதரண தரத்திற்காக தகவல் தொழில்னுட்ப பாடமாக 2006 ஜனவரி தொடக்கம் | ஆம் |
| உயர்தரம் (12 – 13) | பொது தகவல் தொழில்னுட்பம் (GIT) 2002 மே முதல் | உயர்தர தகவல் தொழில்னுட்ப பாடமாக 2008 மே முதல் | ஆம் |

ஆரம்பம் முதல் உயர்தரம் வரை பாடத்தை கற்பிக்க கருவியாக தகவல் தொடர்புசாதன தொழினுட்பத்தை பயன்படுத்தும்போது ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்காக தகவல் மற்றும் தகவல் தொடர்புசாதன தொழினுட்ப உபகரண பயன்பாடு தொடர்பாக அடிப்படை திறனை வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.

தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்னுட்ப கல்வி தொடர்பாக கல்வி அமைச்சுக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஆலோசனைக் குழு (ICT Education Advisory Committee) கல்வி அமைச்சில் நிறுவப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அமைச்சின் கீழ் பாடசாலைகளில் தகவல் தொடர்புசாதன தொழில்னுட்பத்தை கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகளின் பணிகளை இணைப்புச் செய்வதற்காக பாடசாலை தகவல் தொடர்புசாதன தொழில்னுட்ப கல்விப் பிரிவு **(ICT Education Unit)** கல்வி அபிவிருத்தி பிரிவில் நிறுவப்பட்டுள்ளதுடன் தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்னுட்பம் தொடர்பான வள முகாமைத்துவம் மற்றும் சேவைக்காக தனியான பிரிவு **(ICT Resource Management Unit)** திட்டமிடல் மற்றும் அடைவுமட்ட மீளாய்வு பிரிவில் நிறுவுவதும் இடம்பெறும். இதனடிப்படையில் பாடசாலை, வலய, மாகாண மட்டத்திலிருந்து கிடைக்கும் திட்டங்களை கருத்திற்கொண்டு தகவல் மற்றும் தொடர்புசாதன கல்வி தொடர்பாக தேசிய கொள்கையின் கீழ் தேசியத் திட்டமிடலை தயாரிப்பதும் அதன் செயற்பாடுகள் தொடர்பான பொறுப்பும் இப்பிரிவிற்கு உண்டு.

மாகாண கல்வி அமைச்சின் கீழ் இப்பாடம் பாடசாலை மட்டத்தில் இணைப்பு செய்வதற்காக உரிய உத்தியோகத்தர்களும் (தகவல் தொழில்னுட்பம் தொடர்பான அனுபவம் மற்றும் பயிற்சி கொண்டோர்) தொடர்புபடுத்தி மாகாண தகவல் தொழில்னுட்ப கல்வி செயற்பாட்டுக்குழு **(Provincial ICTE Steering Committee)** நியமிக்கப்பட வேண்டும். அதன் தலைமை மாகாணக் கல்விச் செயலாளரினால் பொறுப்பேற்க வேண்டியதுடன் மாதாந்தம் கூட்டம் நடாத்தவும் வேண்டும்.

மாகாண கல்வித் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவரை முழு நேரமாக இப்பாட இணைப்புக்காக நியமிக்கப்பட வேண்டியதுடன் மாகாண தகவல் தொடர்புசாதன தொழில்னுட்ப கல்வி மத்திய நிலைய மற்றும் அதன் உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக மாகாண தகவல் தொடர்புசாதன தொழில்னுட்ப பிரிவு **(Provincial ICT Education Unit)** நடாத்தப்படுகின்றது. இதனடிப்படையில் பாடசாலை, வலய மட்டத்தில் கிடைக்கும் திட்டங்களை கருத்திற் கொண்டு தகவல் தொடர்புசாதன கல்வி தொடர்பான தேசிய கொள்கையின் கீழ் மாகாண கொள்கை மற்றும் மாகாண திட்டங்களை தயாரித்தல், அதன் செயற்பாடுகள் தொடர்பான பொறுப்பும் இப்பிரிவிற்கு உரியதாகும்.

கல்வி அமைச்சின் ஆலோசனைப் பிரகாரம் சகல கல்வி வலயமும் தமது வலய தகவல் தொடர்புசாதன தொழில்னுட்ப கல்வி **(ICTE)** பணி இணைப்புக்காக உரிய தகவல் தொழில்னுட்பம் தொடர்பான அனுபவம் மற்றும் பயிற்சி கொண்டோரைத் தொடர்புபடுத்தி தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்னுட்ப கல்வி செயற்பாட்டுக் குழு **(Zonal ICT Education Steering Commettee)** நியமிக்கப்பட வேண்டியதுடன் வலயப் பணிப்பாளர் அதன் பொறுப்பாளராக இருக்க வேண்டும். அதன் செயற்பாட்டுக் குழு மாதாந்தம் கூடி மாகாணக் குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

கல்வி வலய தகவல் தொடர்புசாதன தொழில்னுட்பக் கல்வி பணிகளையும் மேற்பார்வைக்காக முழு நேர உத்தியோகத்தர் நியமிக்கப்பட வேண்டும். இவ் உத்தியோகத்தர் வலய தகவல் தொடர்புசாதன தொழில்னுட்ப கல்வி வள மத்திய நிலையம் மற்றும் அதன் ஊழியர்களும் உள்ளடங்கலாக வலய தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்னுட்ப கல்விப் பிரிவு நடாத்தப்படுவதுடன் தகவல் தொடர்புசாதன தொழில்னுட்பக் கல்வி தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள ஆசிரிய ஆலோசகர்கள் **(ISA)** இப்பிரிவில் இணைந்து பணியாற்றுவார்கள். (ஏதாவதொரு மாகாணத்திற்கு இப்பாடம் தொடர்பாக ஆசிரிய ஆலோசகர்கள் நியமிக்கப்படாதிருந்தால் தாமதமின்றி ஆசிரிய ஆலோசகர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்) இதனடிப்படையில் பாடசாலை மட்டத்தில் கிடைக்கும் திட்டமிடல்களை கருத்திற்கொண்டு தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்னுட்ப கல்வி தொடர்பாக தேசிய மற்றும் மாகாண கொள்கையின் கீழ் வலய மட்ட கொள்கை மற்றும் திட்டங்களை தயாரித்தலும் அதன் செயற்பாடுகள் தொடர்பான பொறுப்பும் இப்பிரிவிற்கு உரியதாகும்.

பாடசாலை கல்விக்காக தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்னுட்ப கல்வியைப் பெற்று வெற்றிபெறச் செய்வதற்காக தேசிய, மாகாண மற்றும் வலய மட்டத்தில் பணிகலை மேற்கொள்ளும் போது உரிய பொறுப்பாளர்களினால் கீழ்க் குறிப்பிடப்பட்ட இலக்கை அடைந்துகொள்வதற்காக பாடசாலை முறைமையில் ஆர்வம் ஊட்ட வேண்டியதுடன் அவ்வவ் மத்திய நிலையங்கள் தொடர்பாக அடிப்படை பொறுப்பு அதிபருக்கு உரியதாகும். அதன்போது கீழ்க் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

i. பாடசாலை தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்னுட்ப கல்வி விருத்திக்காக கொள்கை மற்றும் வருடாந்த செயற்பாட்டுத் திட்டமிடலை தயாரிக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளல்.
ii. பாடசாலை விட்டு விலகும் சகல மாணவருக்கும் தகவல் தொடர்புசாதன தொழில்னுட்பம் தொடர்பாக அடிப்படை அறிவு, திறமை மற்றும் சரியான சிந்தனையுடன் வெளியேறுவதற்கான நடவடிக்கை எடுத்தல்.
iii. பாடசாலை தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்னுட்ப பாடமாக கற்பதற்காக தேவைப்படும் நடவடிக்கைகளை எடுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv. பாடசாலையிலுள்ள சகல ஆசிரியர்களுக்கும் தகவல் தொடர்புசாதன தொழில்நுட்ப பயன்பாடு தொடர்பான அடிப்படை அறிவை வழங்கலும் கல்வி பண்புசார் விருத்திக்காக தகவல் தொடர்புசாதன தொழில்நுட்பத்தை பயன்படுத்தவும் ஆர்வமூட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

v. தகவல் தொடர்புசாதன தொழில்நுட்ப பாடமாக பாடசாலையில் கற்க தேவைப்படும் மனித வளத்தை பேணுதல்.

vi. பாடசாலையிலுள்ள தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப வளத்தினை உயர்ந்தபட்ச செயற்திறனுடன் பயன்படுத்தல். நிறுவனத்தின் பண்புசார் தன்மையை விருத்தி செய்வதற்காக அவ்வளங்களை விநியோகித்தல், அவற்றை பாதுகாத்தல், பராமரித்தல் மற்றும் சமகாலப்படுத்த முடியுமான சகல முயற்சிகளையும் மேற்கொள்ளல்.

vii. பிரதேச மக்களுக்கு தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பக் கல்வி, சேவையை வழங்குவதற்கும் பாடசாலை தகவல் தொடர்புசாதன தொழில்நுட்ப பிரிவை சமூக கற்கை மற்றும் சேவை மத்திய நிலையமாக நடாத்திச் செல்ல நடவடிக்கை எடுத்தல்.

viii. அதிபரினால் தமது பாடசாலையின் கல்வி சாரா பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கும் பாடசாலையில் தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப வளத்தை பயன்படுத்துதல்.

ix. பாடசாலையில் தகவல் மற்றும் தொடர்புசாதன கல்வி விருத்திக்காக தகவல் தொடர்புசாதன தொழில்நுட்ப மாணவர் கழகங்களை நிறுவுதல், தகவல் தொடர்புசாதன தொழில்நுட்ப தினத்தை கொண்டாடுதல். தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப துறைசார்ந்த போட்டிகளை நடாத்துதல், போன்ற நடவடிக்கைகளுக்காக பாடசாலை சமூகத்தை ஈடுபடுத்துதல்.

x. பாடசாலை தகவல் தொடர்புசாதன தொழில்நுட்ப செயற்பாட்டுக் குழுவை உரியவாறு நடாத்துதல்.

xi. கல்வி அமைச்சின் சுற்றறிக்கைகளுக்கமைய பாடசாலை தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப வளத்தை போசிப்பதற்காக தேவைப்படும் நடவடிக்கைகளுக்கு தலைமைத்துவம் வழங்கல்.

xii. பாடசாலை தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப மத்திய நிலையங்களுக்கு பொருத்தமான ஆசிரியர் ஒருவரை முழு நேரமாக உள்ளீர்ப்பு செய்து அம்மத்திய நிலையங்களை சகல சந்தர்ப்பங்களிலும் மாணவர் கல்வி மற்றும் ஆசிரியர்களின் விருத்திக்காக திறந்து வைத்திருக்க நடவடிக்கை எடுத்தல்

xiii. அமைச்சின் ஆலோசனையின் பிரகாரம் பாடசாலைகளுக்காக வெப் தளம் ஒன்றை நடாத்தி செல்வதற்கும் அப்பாடசாலைகள் தொடர்பாக தகவல்களை வழங்கும் கருமபீடமாக சமகாலப்படுத்தி நடாத்திச் செல்ல நடவடிக்கை எடுத்தல்.

xiv. பாடசாலை கணனி இணையத் தளம் (School Web site) வேலைத்திட்டத்துடன் தொடர்புபட்டு அதன் மூலம் பாடசாலை சமூகத்திற்கு பயன்தரவும் பாடசாலை கணனி இணையத் தளத்தை போசித்தலும் பங்களிப்புச் செய்வதற்கும் தேவைப்படும் தலைமைத்துவத்தை வழங்குதல்.

xv. தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம் தொடர்பாக அமைச்சின் கொள்கைகள் ஆலோசனைகள் சுற்றறிக்கைகள் போன்றன பாடசாலை சமூகத்தின் பார்வைக்காக முறையாக பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

xvi. தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம் தொடர்பாக அமைச்சு மற்றும் ஏனைய பிரிவுகளிடமிருந்து பெற்றுக்கொள்ளும் புத்தகங்கள் பாடவிதானங்கள் சீடி தட்டு போன்றன பாடசாலை நூலகம் அல்லது தகவல் தொடர்புசாதன தொழில்நுட்ப பிரிவில் முறையாக பேணுதல்.

xvii. பாடசாலையிலும் அத்துடன் பாடசாலையினால் போசிக்கப்படும் சமூகத்திலும் தகவல் தொடர்புசாதன தொழில்நுட்ப கலாசாரத்தை கட்டியெழுப்புவதற்காக தலைமைத்துவத்துடன் செயற்படல்.

**தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப கல்வி மத்திய நிலையங்களை நடாத்திச் செல்லுதல்**

தற்பொழுது கல்வித் துறையில் அமுல்படுத்தப்படும் தகவல் தொடர்புசாதன மத்திய நிலையங்கள் பல வகையானதாகும்.

i. வெளிநாட்டு கொள்கை மூலம் நிறுவப்பட்ட மத்திய நிலையம்
ii. மாகாண சபை நிதியம் மூலம் வழங்கப்படும் மத்திய நிலையம்
iii. பழைய மாணவர். பெற்றோர் ஆசிரியர் அல்லது அரச சார்பற்ற அமைப்புக்களின் நன்கொடையாக வழங்கப்பட்ட மத்திய நிலையம்.
iv. மத்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட மத்திய நிலையம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிகளுக்கமைய இவை மூன்று பிரிவுகளாக வகைப்படுத்த முடியும்.

i. பாடசாலை தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்னுட்ப கல்வி மத்திய நிலையம்.
ii. வலய தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்னுட்ப கல்வி மத்திய நிலையம். (கணனி வள மத்திய நிலையம் - CRC)
iii. மாகாண தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்னுட்பக் கல்வி மத்திய நிலையம்

1. பாடசாலை தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்னுட்பக் கல்வி மத்திய நிலையம்

பல்வகை வழிமுறைகளிலிருந்து பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ள சகல கணனி ஆய்வுகூடங்களும் இதற்குப் பின்னர் பாடசாலை தகவல் மற்றும் தகவல் தொடர்புசாதன மத்திய நிலையமாக அறிமுகப்படுத்தப்படும்.

1.1 நோக்கம்

i. கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் பண்புசார் விருத்தியை ஏற்படுத்துவதற்கான முறையாக தகவல் மற்றும் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது.
ii. தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்னுட்ப பாடமாக கற்க வசதிகளை வழங்கல்.
iii. இணையத்தளம் ஊடாக தகவல்களை கண்டுபிடித்தல் மற்றும் தொடர்பாடல்களை கட்டியெழுப்பும் திறமைகளை வளர்த்தல்.
iv. தகவல் முகாமைத்துவத்திற்காக மாணவர்களின் திறமைகளை விருத்தி செய்தல்.
v. எதிர்காலத்தில் முகங்கொடுப்பதற்காக தேவைப்படும் தகவல் தொழில்னுட்ப திறமைகளை மாணவர்களுக்கு வழங்கல்
vi. பாடசாலை சமூகத்தில் தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்னுட்ப விருத்திக்கு பங்களிப்பு செய்தல்.

1.2 பணியாளர்கள்

i. மத்திய நிலையங்களுக்கு பொறுப்பாக செயற்படுவதற்காக முழு நேர ஆசிரியர் ஒருவரை நியமிக்க வேண்டும். அவர் தேவைப்படும் பட்சத்தில் பாடசாலை நேரத்திற்குப் பின்னரும் சேவையாற்ற வேண்டும்.
ii. இம்மத்திய நிலைய பணிகளுக்காக உதவி ஊழியராகவும் பயன்படுத்த முடியும்.

1.3 செயற்பாடுகள்

i. முகாமைத்துவ பணிகள் இதன் பின்னர் விளக்கப்பட்டுள்ளவாறு தேர்ந்தெடுக்கப்பட்ட முகாமைத்துவக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
ii. தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்னுட்ப மத்திய நிலையத்தை பாடசாலையில் நடாத்தும் கால எல்லைக்குள் மாணவர்களின் கல்வி நடவடிக்கைக்காக மாத்திரம் இருக்க வேண்டும்.
iii. பாடசாலை நடைபெறும் நேரத்தில் மு.ப 8 – பி.ப 2.00 மணிவரை மற்றும் பாடசாலை பாடவிதானத்திற்குரிய பகுதி பாடசாலை நேரத்திற்குப் புறம்பாக கற்பிக்கும் சந்தர்ப்பங்களில் மாணவர்களிடமிருந்து பணம் அறவிடக்கூடாது.
iv. இருப்பினும் பாடசாலை பாடவிதானத்திற்குரிய கற்றல் பணிகளுக்காக பாடசாலை நேரத்திற்குப் பின்னரும் இம்மத்திய நிலையத்தைப் பயன்படுத்த முடியும்.
v. பாடசாலை நேரத்திற்குப் பின்னர் அல்லது அரச விடுமுறை தினம் அல்லது பாடசாலை விடுமுறை காலத்திற்குள் இம்மத்திய நிலையத்தில் வெளிப் பாடநெறிகளுக்காக பயன்படுத்த முடியும்.

1.4 முகாமைத்துவ குழு

1.4.1 உள்ளடக்கம்

அதிபர் - தலைவர் (உத்தியோகபூர்வ அதிகாரம்)
மத்திய நிலையத்திற்குப் பொறுப்பான ஆசிரியர் - செயலாளர்
பொருளாளர் (பாடசாலை அபிவிருத்தி சங்க பொருளாளர் அல்லது பாடசாலையின் வேறு நிரந்தர ஆசிரியர்)
பாடசாலை அபிவிருத்திச் சங்க பிரதிநிதி (பொதுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய மாணவர் சங்கப் பிரதிநிதி (பொதுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும்)
தகவல் தொடர்புசாதன தொழில்னுட்ப மாணவர்கழகத் தலைவர்
பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்

1.4.2 முகாமைத்துவக் குழுவின் பணிகள்

i. மத்தியநிலைய நிதி நடவடிக்கைகளின்போது அங்கீகாரம் பெறல்
ii. மத்திய நிலையத்தினால் சமர்ப்பிக்கப்படும் பாடநெறி அல்லது சேவையை அங்கீகரித்தல்
iii. கல்விக்காக தகவல் தொடர்புசாதன தொழில்னுட்பங்களை பயன்படுத்துவது பிரபல்யப்படுத்தல்
iv. தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்னுட்பம் தொடர்பாக வலயம் ஊடாக மாகாண இணைப்பு உத்தியோகத்தர்கள், நிரல் அமைச்சின் உத்தியோகத்தர்கள் மற்றும் தேசிய கல்வி நிறுவக உத்தியோகத்தர்களுடன் தொடர்பை பேணுதல்.
v. புதிய சிந்தனைகள் மற்றும் சமூகத் தேவைகளுக்கமைய மத்திய நிலையத்தினால் வழங்கப்படும் தேவைகளை தீர்மானித்தல்.
vi. மாதாந்த குழுக் கூட்டங்களை நடாத்துதல், வலய தகவல் மற்றும் தொடர்புசாதன இணைப்பு உத்தியோகத்தருக்கு அல்லது வளவாளருக்கு இதற்கான அழைப்பு விடுக்க முடியும்.
vii. முகாமைத்துவ குழுவின் கூட்டம் மற்றும் பணிகள் தொடர்பாக முறையான கடித ஆவணங்களை பேணுதல் மற்றும் அவற்றை தகவல் தொடர்புசாதன தொழில்னுட்ப உத்தியோகத்தருக்கு அறிக்கைப்படுத்தல்.
viii. மத்திய நிலைய பணிகளை முன்னோடி செய்து மாதாந்த முன்னேற்ற அறிக்கைகளை வலயக் கல்வி அலுவலக இணைப்பு உத்தியோகத்தருக்கு வழங்குதல்.

1.5 நிதி முகாமைத்துவம்

1.5.1 வருமானத்தை சேகரித்தல் மற்றும் கணக்கிடல்

கீழ்க் குறிப்பிடப்பட்ட முறைகளின் அடிப்படையில் வருமானத்தை சேகரிக்க முடியும்.

i. பாடசாலை நேரத்திற்குப் பின்னர் வார இறுதி நாட்கள் மற்றும் பாடசாலை விடுமுறை காலத்தில் பாடநெறி நடாத்துவதற்கு
ii. மத்திய நிலையம் ஊடாக தகவல் தொழில்னுட்ப சேவைகள் சமூகத்திற்கு வழங்குதல்.
iii. பல்வேறு கொடைகள் மூலம்

* பாடசாலை மாணவருக்கு பாடவிதானத்திற்குரிய தரங்களில் கற்பிக்கும் தகவல் தொழில்னுட்ப பிரிவிற்காக மாலை நேரத்தில் அல்லது விடுமுறை தினங்களில் பணம் அறவிட்டு பாடநெறிகள் நடாத்தப்படக் கூடாது. இருப்பினும் உரிய பாடசாலை அல்லது வேறு பாடசாலை மாணவருக்கு பாடவிதானத்திற்குட்படாத வேறு தகவல் தொழில்னுட்ப பாடநெறிக்காக கலந்துகொள்ளும் போது /கற்கும்போது அம்மத்திய நிலையத்தின் நிருவாக மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக இங்கு 1.5.2 வாசகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள முறைக்கு கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

1.5.2 பாடநெறிக் கட்டணம்

வலய தகவல் தொடர்புசாதன குழு அங்கீகாரத்தின் கீழ் பிரதேசத் தேவைகளின் அடிப்படையில் பாடநெறிகளை தேர்ந்தெடுக்க முடியும்.

- அடிப்படை பாடநெறி (Basic Course ) – ஒரு மணித்தியாலத்திற்கு ரூ. 20.00
- சான்றிதழ் பாடநெறி – (Certificate Courses) – Web Designing, Desktop Publishing, Graphics Hardware.............................................) – மணித்தியாலத்திற்கு ரூ. 25.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உயர் கணனிப் பாடநெறி (Advance Courses – Web Programming, Net work, Data base.....) – ஒரு மணித்தியாலத்திற்கு ரூ. 30.00
- இணையத்தள வசதிக்காக மணித்தியாலத்திற்கு குறைந்த பட்சம் ரூ. 30.00
- கல்வி அமைச்சு /பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் **Sri Lanka ICT Examination** இற்காக பாடநெறி நடாத்துதல் மற்றும் அதற்காக கல்வி அமைச்சினால் தீர்மானிக்கப்படும் பாடநெறிக் கட்டணத்தை அறவிடல்.

எவ்வகையான பாடநெறிகளிலிருந்தும் குறைந்த பட்சம் 50% பிரயோக பகுதி காணப்படல் வேண்டும். ஒரு கணனிக்காக உயர்ந்த பட்சம் 2 மாணவர்கள் (முடியுமான சகல சந்தர்ப்பங்களிலும் ஒருவருக்காக ஒரு கணனி வழங்குவது பொருத்தமானது.)

1.5.3 சிறிய தொகை மூலம் செலவினம் செய்தல்

அத்தியாவசியம் மற்றும் சிறிய செலவினங்களுக்காக ரூ. 2000.00 பணம் சிறு தொகையாக மத்திய நிலையத்திற்குப் பொறுப்பான ஆசிரியருக்கு வைத்திருக்க முடிவதுடன் ரூ. 500.00 ஐ விட குறைந்த கொடுப்பனவு அதன் மூலம் மேற்கொள்ள முடியும். சகல கொள்வனவுக்காகவும் முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். இவ்வாறு நடவடிக்கை எடுப்பதற்காக சிறு தொகை கணக்குப் புத்தகம் பேணப்பட வேண்டும். ஆண்டு ஆரம்பத்தில் பொது 35 வவுச்சர் மூலம் பிரதான கணக்குப் புத்தகத்தில் இருந்து ரூ. 2000.00 பெற்றுக்கொள்ள முடிவதுடன் அது பிரதான கணக்குப் புத்தகச் செலவு (கொடுப்பனவு) பிரிவு உட்பட சிறுதொகை கணக்குப் புத்தகம் (கிடைப்பனவு) போன்றவற்றையும் குறிப்பிட வேண்டும். சிறுதொகைப் பணத்தினால் ஏற்கும் செலவினம் சிறு கணக்குப் புத்தக செலவில் குறிப்பிட வேண்டும். அச்செலவினத்தை உறுதி செய்யக்கூடியவாறு செலவின பற்றுச்சீட்டு இருக்க வேண்டும். அப் பற்றுச் சீட்டை பயன்படுத்தி செலவிடப்பட்ட நிதியை தொடரான கணக்குப் புத்தகத்தில் பூரணப்படுத்த முடியும். இச்செயற்பாட்டை ஆண்டு முழுவதும் பின்பற்ற முடிவதுடன் ஆண்டு இறுதியில் பெறப்பட்ட நிதி பிரதான நிதிப் புத்தகத்திற்கு நிரப்ப வேண்டும்.

1.5.3.1 செலவினங்களை ஏற்கும் எல்லை

(i) நாள் ஒன்றிற்கு ரூ. 500/= ஐ தாண்டாதவாறு மாதமொன்றிற்கு ரூ. 3000/= உயர்ந்த பட்ச கொடுப்பனவின் கீழ் விலை மனுக்களைக் கோராது குழுவின் அங்கீகாரத்துடன் விநியோகம் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க முடியும்.

(ii) ரூ 10,000/= ஐ விட குறைந்த விநியோகம் மற்றும் சேவையை பெற்றுக்கொள்ளும்போது குறைந்த பட்சம் மூன்று விலை மனுக்களை பெற்று "குறைந்த பட்சம்" அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களால் பொருத்தமான விலையை தேர்ந்தெடுத்து முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரத்துடன் நடவடிக்கை எடுத்தல்.

(iii) ரூ. 20,000/= ஐ விடக் குறைந்த கொள்வனவுகளின் போது அதிபரின் தலைமையுடன் கல்லூரியின் கேள்வி சபையின் அங்கீகாரத்துடன் செயற்படல்.

(iv) ரூ. 20,000/= முதல் ரூ. 200,000/= வரை வலய கேள்வி சபை அங்கீகாரத்தைப் பெற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

1.5.4 **கொடுப்பனவு மற்றும் வருமானம் தொடர்பாக கீழ்க் குறிப்பிடப்பட்ட ஒழுங்கு முறைகளை பின்பற்ற வேண்டும்.**

(i) வருடம் ஆரம்பமாவதற்கு முன்னர் வருடாந்த திட்டமிடல் மற்றும் வருமான செலவினங்களின் மதிப்பீடுகளைத் தயாரித்து வலயக் கல்விப் பணிப்பாளரின் அங்கீகாரத்தைப் பெறல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) மத்திய நிலையத்தின் சகல கொடுக்கல் வாங்கல்களுக்குமாக அரச வங்கி ஒன்றில் பாடசாலை தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்னுட்ப மத்திய நிலையம் என்ற பெயரில் நடைமுறைக் கணக்கை ஆரம்பித்தல்.

(iii) சகல கொடுப்பனவுகளுக்குமாக கல்வி சி100 பற்றுச்சீட்டை வழங்குதல்.

(iv) சகல கிடைப்பனவுகளும் (அங்கீகரிக்கப்பட்ட சிறு நிதி தவிர) மூன்று நாட்களுக்குள் வங்கியிலிடல்.

(v) மாதாந்தம் சமப்படுத்தப்பட்ட கணக்குப் புத்தகம் பேணுதல் மற்றும் மாதாந்தம் வங்கி இணக்கக்கூற்றுகளை தயாரித்தல்.

(vi) சகல கொடுப்பனவுகளுக்குமாக முகாமைத்துவக் குழுவின் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளல்.

(vii) சகல கொடுப்பனவுகளும் பொது 35 வவுச்சர் மூலம் செலுத்துதல் மற்றும் சகல கொடுப்பனவுகளுக்கும் செயலாளரின் பரிந்துரை பெறப்பட வேண்டியதுடன் தலைவரினால் அங்கீகரிக்க வேண்டும்.

(viii) சகல வவுச்சர்களும் பொருளாளரினால் உறுதிப்படுத்த வேண்டும்.

(ix) காசோலைகள் மூலம் கொடுப்பனவு செய்யும்போது குழுவின் பொருளாளர் மற்றும் தலைவர் கையொப்பம் இடல் வேண்டும்.

(x) சகல கொடுப்பனவுகளும் செலவின நாளேட்டில் குறிப்பிட வேண்டும்

(xi) ஆண்டு இறுதியில் கிடைப்பனவு மற்றும் கொடுப்பனவு தொடர்பாக இறுதிக் கணக்குகளை தயாரித்து குழுவின் அங்கீகாரம் பெறப்பட்ட கணக்குகளின் பிரதி, தேசிய பாடசாலை தொடர்புபட்ட அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவிடம் சமர்ப்பிக்க வேண்டும். மாகாணப் பாடசாலையாக இருந்தால் மாகாண கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

(xii) வருமான செலவின அறிக்கையை, குழு கூடும் வேளையில் சமர்ப்பித்தல்.

(xiii) உரிய மத்திய நிலையத்தில் இணையத்தளம், தொலைபேசி மற்றும் மின் கட்டணங்கள் இம்மத்திய நிலையத்தின் நிதியத்தினால் செலுத்தப்பட வேண்டும்.

(xiv) கிடைக்கும் சகல நிதிகளும், கணக்குப் புத்தகத்தில் குறிப்பிடல் மற்றும் வங்கியில் வைப்பிலிட்ட பின்னர் செலவிடுவதற்காக தேவைப்படும் நிதி வங்கியிலிருந்து பெறப்பட வேண்டும்.

### 1.5.5 விரிவுரை மற்றும் சேவைக்கான கொடுப்பனவுகள்

(i) கொடுப்பனவை பெறுபவர் போதியளவு கடமையை மேற்கொண்டதற்காக குழுவின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.

(ii) மத்திய நிலையத்திற்குப் பொறுப்பான ஆசிரியருக்கு பாடசாலை நேரத்திற்குப் பின்னர் மேற்கொள்ளும் பணிகளுக்காக முறையான அங்கீகாரத்தின் கீழ் மாதாந்த கொடுப்பனவு மத்திய நிலையத்தினால் செலுத்தப்பட வேண்டும்.

(iii) வாரத்திற்கு குறைந்த பட்சம் மூன்று நாட்களாவது மாலை நேரத்தில் கணனி மத்திய நிலையம் திறந்திருக்க வேண்டும்.

(iv) அங்கீகரிக்கப்பட்ட பாடநெறிகள் மூலம் கிடைக்கும் வருமானத்தில் 30% உயர்ந்தபட்ச அடிப்படையில் விரிவுரைக்காக பயன்படுத்த முடியும்.

(v) விரிவுரை கொடுப்பனவை பெற முடிவது பாடசாலை நேரத்திற்குப் பின்னர் மற்றும் வார இறுதி நாட்களில் மேற்கொள்ளும் பணிகளுக்கு மாத்திரமாகும்.

(vi) விரிவுரையாளர்களின் வருகை மற்றும் செல்லுதல் தொடர்பாக பதிவு செய்யும் ஆவணம் ஒன்றை பேண வேண்டும்.

(vii) ஒருவருக்கு வாராந்த கடமை நேரத்தில் மூன்று மணித்தியாலமும் அரச விடுமுறை நாட்களில் நான்கு மணித்தியாலங்களும் கொடுப்பனவு பெற முடியும். உரிய மணித்தியாலங்களை விட மேற்கொள்ளப்படும் விரிவுரைகள் முகாமைத்துவக் குழுவினால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

(viii) விரிவுரைக்காக கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு கொடுப்பனவு செலுத்த முடியும். (நாள் ஒன்றிற்கு மூன்று மணித்தியாலம் உயர்ந்த பட்சத்தின் கீழ் வருமானம் பெறும் பாடநெறிக்காக மாத்திரமாகும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்காக விரிவுரைக்கு மணித்தியாலத்திற்கு ரூ. 400/=
- நாடு தழுவிய சேவைகள் அல்லது முதலாம் வகுப்பு உத்தியோகத்தர்கள் சமமான சேவைகளில் உள்ளவர்கள் திணைக்களப் பொறுப்பாளர்கள் கலாநிதிப் பட்டம் கொண்டோர்களுக்காக விரிவுரைக்கு மணித்தியாலத்திற்கு ரூ. 300/=

மேற்கூறப்பட்ட கொடுப்பனவுகளுக்காக தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் 11/719E203/117 மற்றும் 2002.08.23ம் திகதிய கடித மூலம் வழங்கப்பட்டிருக்கும் அங்கீகாரத்திற்கமைய மேற்கொள்ள முடியும்.

**பொது ஆலோசனைகள்**

(i) மத்திய நிலையத்தின் சகல ஆவணங்களும் அரச கணக்காய்வுப் பிரிவு / உள்ளக கணக்காய்வுப் பிரிவினரால் கணக்காய்வுப் பணிகளுக்காக சமர்ப்பிக்கக் கூடியவாறு பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

(ii) மத்திய நிலையத்திற்கு கிடைக்கும் சகல பொருட்கள் /உபகரணங்கள் கிடைப்பனவு மற்றும் அகற்றுதல் போன்ற பொருட்கள் புத்தகத்தில் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

## 2. வலய தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப கல்விமத்திய நிலையம். (கணனி மத்திய நிலையம் - CRC)

### 2.1 நோக்கம்

i. க.பொ.த (சா/த) பரீட்சை மற்றும் க.பொ.த (உ/த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்காக தகவல் தொடர்புசாதன தொழில்நுட்ப பாடநெறிகளை நடாத்துதல்.

ii. வலய தகவல் தொடர்புசாதன கல்விக்காக மற்றும் பல்வேறுபட்ட பாடங்களில் தகவல் தொழில்நுட்ப பாடசெயற்பாடுகளுக்கான ஆசிரிய பயிற்சி

iii. தேவைப்படும் மென்பொருட்களை தயாரித்தலும் பாடசாலை தகவல் தொடர்புசாதன தொழில்நுட்ப மத்திய நிலையங்களின் அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு உதவுதலும்.

iv. வலய பாடசாலைகள் மற்றும் சமூகத்திற்கு தகவல் தொடர்புசாதன தொழில்நுட்ப அறிவை வழங்குவதற்காக உதவுதல்.

### 2.2 வலய தகவல் தொடர்புசாதன தொழில்நுட்பக் கல்வி மத்திய நிலையத்திற்காக பணியாளர்களை நியமித்தல்.

புதிதாக நிறுவப்படும் மத்திய நிலையத்திற்கு பணியாளர்களை நியமிக்கும் போது அல்லது இருக்கும் மத்திய நிலையத்தில் வெற்றிடம் ஏற்படும் பட்சத்தில் வலயக் கல்விப் பணிப்பாளரினால் வலயத்தில் உள்ள பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பம் கோரி நேர்முகப் பரீட்சைச் சபையினால் பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

பணியாளர்களை நியமிக்கும் போது கீழ்க் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

i. இடமாற்றம் பெற்றுச் செல்லும் எதிர்பார்ப்பிலுள்ள ஆசிரியர்களை நியமிக்காதிருத்தல்.

ii. பொறுப்புடன் மற்றும் அர்ப்பணிப்புடன் பணியாற்றக்கூடிய ஆசிரியர்களை நியமித்தல்.

iii. ஆங்கில பாடத்திற்காக சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் மற்றும் அதில் திறமை கொண்டிருக்கவேண்டும்.

iv. கணனி தொடர்பாக குறைந்த பட்சம் 06 மாதத்தை விட கூடிய பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.3 மத்திய நிலைய பணியாளர்கள்

மத்திய நிலைய முகாமையாளர் 1

i. ஆலோசகர்கள் 03 (இது மத்திய நிலையத்திலுள்ள மாணவரெண்ணிக்கை மற்றும் தேவையின் அடிப்படையில் மாற்றப்பட வேண்டும்.)

ii. உதவியாளர் 1

2.4 மத்தியநிலைய பணிகள்

i. க.பொ.த (உ/த) மற்றும் க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காக பாடநெறி நடாத்துதல்.

ii. மேற்கூறப்பட்ட குழுவிற்காக பாடம் நடத்தாத நேரங்களில் வெளிய பாடநெறிகளை நடாத்துதல்

iii. வலயத்தின் தேவைக்கமைய ஆசிரிய பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

iv. பொது சமூகத்திற்கு தகவல் தொடர்புசாதன தொழில்னுட்ப அறிவை வழங்குதல்.

v. பாடசாலைகளில் தகவல் தொடர்புசாதன தொழில்னுட்ப மத்திய நிலையங்களில் பிரச்சினைகளை தீர்க்க உதவுதல்.

2.5 முகாமைத்துவக் குழு

2.5.1 உள்ளடக்கம்

i. வலயக் கல்விப் பணிப்பாளர் (தலைவர்)

ii. மத்திய நிலையம் அமைந்துள்ள கல்லூரியின் அதிபர்.

iii. மத்திய நிலைய முகாமையாளர் (செயலாளர்)

iv. உரிய வள மத்தியநிலையத்தின் ஆலோசகர் (பொருளாளர்)

v. கணக்காளர் (வலயம்)

vi. வலய இணைப்பு உத்தியோகத்தர் (தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்னுட்ப பாடம் தொடர்பாக)

vii. ஆசிரிய ஆலோசகர் (ICT – ISA)

2.5.2 குழுவின் பணிகள்

i. மத்திய நிலைய நிதிப் பணிகளின் போது அங்கீகாரம் பெறல்

ii. மத்திய நிலையத்தினால் வழங்கப்படும் பாடநெறிகள் அல்லது சேவைகள் குறித்து தீர்மானம் எடுத்தலும் அதற்கான திட்டங்களை தயாரித்தலும்.

iii. கல்விக்கான தகவல் தொழில்னுட்பத்தை பயன்படுத்தல் பிரபல்யப்படுத்தல்

iv. தகவல் தொழில்னுட்பம் தொடர்பாக மாகாண இணைப்பு உத்தியோகத்தர்கள், கல்வி அமைச்சு உத்தியோகத்தர்கள், தேசிய கல்வி நிறுவன உத்தியோகத்தர்களுடன் தொடர்பை பேணுதல்.

v. புதிய திறன் மற்றும் சமூக தேவைகளுக்கமைய மத்திய நிலையத்தினால் வழங்கப்படும் சேவைகளை தீர்மானித்தல்.

vi. முகாமைத்துவக் குழுவின் கூட்டம் மற்றும் பணிகள் தொடர்பாக முறையான ஆவணங்களை பேணுதல்.

2.6 நிதி முகாமைத்துவம்

2.6.1 வருமானத்தை சேகரித்தல

கீழ்க் குறிப்பிடப்பட்ட முறைகள் மூலம் வருமானம் சேகரிக்க முடியும்.

i. வள மத்திய நிலையங்களுக்குரியதான பாடநெறி நடாக்கப்படாத காலங்களில் வெளிநபர்களுக்காக பாடநெறி நடாத்துதல்.

ii. மத்திய நிலையத்திலுள்ள இணையத்தளம் போன்ற வளங்கள் மூலம் வெளி சமூகத்திற்கு சேவை வழங்குதல் (அறவிடப்பட வேண்டிய நிதி தொடர்பாக முகாமைத்துவக் குழுவினால் தீர்மானிக்கப்பட வேண்டும்.

2.6.2 கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு பாடநெறிச் சட்டங்களை தீர்மானிக்க முடியும்.

எவ்வகையான பாடநெறி அல்லது சேவைக்காக கணனியை ஒரு மணித்தியாலத்திற்காக ரூ. 20/= அறவிடல் மற்றும் அதற்கு மேலதிகமாக ஏனைய நிர்வாக விரிவுரைக் கட்டணங்களுக்காக கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு கட்டணம் கணிப்பீடு செய்யப்பட வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அடிப்படை பாடநெறி (Basic Course) - ஒரு மணித்தியாலத்திற்காக 20/=
- சான்றிதழ்கள் பாடநெறி (Certificate courses – Web Development, Desktop Publishing, Graphics Hardware) – ஒரு மணித்தியாலத்திற்காக 30/=
- கல்வி அமைச்சு /பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் Sri Lanka ICT Examination இற்காக பாடநெறி நடாத்தல் அதற்காக கல்வி அமைச்சினால் தீர்மானிக்கப்படும் பாடநெறிக் கட்டணத்தை அறவிடல்.
- ஒரு கணனிக்காக உயர்ந்த பட்ச மாணவரெண்ணிக்கை 02 ஆகும். (முடியுமான சகல சந்தர்ப்பங்களிலும் ஒருவருக்கு ஒரு கணனியை வழங்குவது பொருத்தமானதாகும்.)

### 2.6.3 சிறு தொகைப் பணத்தினால் செலவிடல்

அத்தியாவசிய சிறு செலவினங்களுக்காக ரூ. 2000/= நிதி மத்திய நிலைய முகாமையாளருக்கு வைத்துக்கொள்ள முடிவதுடன் தேவைப்பட்டால் ரூ. 500/= ஐவிட அதிகரிக்காத கொடுப்பனவுகளுக்காக அதனை பயன்படுத்த முடியும். சகல கொள்வனவுகளுக்குமான முகாமைத்துவக் குழுவின் தழுவல் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். இவ்வாறு செயற்படுவதற்காக சிறு நிதிப்புத்தகம் பேணப்பட வேண்டும். ஆண்டு ஆரம்பத்தில் பொது 35 வவுச்சர் மூலம் பிரதான நிதிப் புத்தகத்தில் ரூ. 2000/= பெறமுடிவதுடன் அது பிரதான கணக்குப் புத்தகம் செலவின (கொடுப்பனவு) பக்கத்திலும் சிறு நிதிப்புத்தகம் (கிடைப்பனவு) பக்கத்திலும் குறிப்பிட வேண்டும்.

சிறு நிதிப்புத்தகத்தினால் மேற்கொள்ளப்படும் செலவினங்கள் சிறு நிதிப்புத்தக செலவின பக்கத்தில் குறிப்பிடப்பட வேண்டியதுடன் அச்செலவினத்தை உறுதிசெய்யும் பற்றுச்சீட்டு /கட்டணப் பட்டியல் இருக்க வேண்டும். இதனைப் பயன்படுத்தி செலவான நிதி பிரதான நிதிப் புத்தகத்தில் மீள்நிரப்ப வேண்டும். இச்செயற்பாடு ஆண்டு பூராகவும் பின்பற்ற வேண்டியதுடன் ஆண்டிறுதியில் பெறப்பட்ட ஆரம்ப நிதி பிரதான நிதிப்புத்தகத்தில் நிரப்பப்பட வேண்டும்.

#### 2.6.3.1 செலவினத்தை ஏற்கும் எல்லை

i. ஒரு நாளைக்கு ரூ. 500/= ஐ தாண்டாதவாறு மாதம் ஒன்றிற்கு ரூ. 3000/= உயர்ந்த பட்சத்தின் கீழ் விலை மனுக்கள் இன்றி குழுவின் அங்கீகாரத்துடன் விநியோகம் மற்றும் சேவையைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் எடுக்க முடியும்.
ii. ரூ. 10000/= ஐவிட குறைந்த விநியோகம் மற்றும் சேவையைப்பெற்றுக்கொள்ளும் போது குறைந்தபட்சம் மூன்று விலை மனுக்களைப் பெற்று "குறைந்த பட்சம்" ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களின் அடிப்படையில் பொருத்தமான விலைகளை தேர்ந்தெடுத்து முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரத்துடன் செயற்படல்.
iii. ரூ. 20000/= ஐவிட குறைந்த கொள்வனவுகளின் போது வலயக் கல்விப் பணிப்பாளர்களினால் கேள்வி ஒழுங்கு விதிகளுக்கமைய செலவினங்களை மேற்கொள்ள வேண்டும்.
iv. ரூ. 20000/= முதல் ரூ. 100000/= வரை வலயத்தில் கேள்வி சபையின் அங்கீகாரத்தைப் பெற செயற்பட வேண்டும்.
v. அரச நிதி ஒழுங்குக் கோவை, அரச கேள்வி ஒழுங்குக் கோவை மற்றும் தாபன விதிக்கோவைக்கமைய செலவின நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

### 2.6.4 கொடுப்பனவு தொடர்பாக கீழ்க் குறிப்பிடப்பட்ட ஒழுங்கு முறைகள் பின்பற்ற வேண்டும்.

i. வருடம் ஆரம்பமாவதற்கு முன்னர் வருடாந்த திட்டமிடல் மற்றும் வருமான செலவின மதிப்பீடுகளைத் தயாரித்து வலயக் கல்விப் பணிப்பாளரின் அங்கீகாரத்தைப் பெறல்.
ii. மத்திய நிலையத்தின் சகல கொடுக்கல் வாங்கல்களுக்குமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச வங்கி "தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப மத்திய நிலையம்" என்ற பெயரில் நடைமுறைக் கணக்கை ஆரம்பித்தல்

iii. சகல கிடைப்பனவுகளுக்குமாக கல்வி சி 100 பற்றுச்சீட்டை வழங்குதல்.

iv. கிடைக்கும் சகல கிடைப்பனவுகளையும் (கையில் எஞ்சியுள்ள சிறு தொகைப் பணத்தை தவிர) மூன்று நாட்களுக்குள் வங்கியில் வைப்பிலிடல்

v. மாதாந்தம் சமநிலைப்படுத்தப்பட்ட இரு கோடுகள் கணக்குப் புத்தகத்தைப் பேணுவதற்காக மட்டும் மாதாந்த வங்கி இணக்கக் கூற்றுக்களை தயாரிக்க.

vi. சகல கொடுப்பனவுகளுக்குமாக முகாமைத்துவக் குழுவின் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளல்.

vii. சகல கொடுப்பனவுகளும் பொது 35 வவுச்சர் மூலம் செலுத்தப்பட வேண்டும். சகல கொடுப்பனவுகளையும் பொருளாளர் /செயலாளரின் பரிந்துரை பெறவேண்டியதுடன் தலைவரினால் அங்கீகரிக்கப்பட வேண்டியதும் அத்தியாவசியமாகும். (காசோலைக்கு கையொப்பமிடும் அதிகாரம் பொருளாளர் மற்றும் தலைவருக்கு உரியதாகும்)

viii. சகல வவுச்சர்களும் பொருளாளரினால் உறுதி செய்யப்பட வேண்டும்.

ix. காசோலை மூலம் கொடுப்பனவுகளை செய்யும் போது குழுவின் பொருளாளர் மற்றும் தலைவர் கையொப்பமிட வேண்டும்.

x. சகல கொடுப்பனவுகளும் செலவின நாளேட்டில் குறிப்பிடப்பட வேண்டும்.

xi. ஆண்டிறுதியின் கிடைப்பனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பாக ஆண்டிறுதிக் கணக்குகளை தயாரித்தல் மற்றும் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்குகளின் பிரதி, தேசிய பாடசாலையாக இருந்தால் அமைச்சின் உள்ளக கணக்குப் பிரிவிற்கு சமர்ப்பிக்க வேண்டும். மாகாண பாடசாலை மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்க் வேண்டும்.

xii. வருமான செலவின அறிக்கை, குழு கூடும் வேளையில் சமர்ப்பிக்க வேண்டும்.

xiii. உரிய மத்திய நிலையத்தின் இணையத்தளம், தொலைபேசி மற்றும் மின்சார கட்டணங்க்ள் இவ்வமைச்சின் நிதியத்தினால் செலுத்தப்பட வேண்டும்.

xiv. கிடைக்கும் சகல நிதிகளும், கணக்குப் புத்தகத்தில் குறிப்பிட்டு வங்கியில் வைப்புச் செய்யப்பட்டதன் பின்னர் செலவினங்களுக்காக தேவைப்படும் பணம் வங்கியில் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

2.6.5 விரிவுரை மற்றும் சேவைக்கான கட்டணம்

i. மத்திய நிலைய முகாமையாளருக்கு நிருவாக நடவடிக்கைகளுக்காக ரூ.500/= மத்திய நிலையத்தினால் பெறமுடியும்.

ii. அங்கீகரிக்கப்பட்ட பாடநெறிகள் மூலம் கிடைக்கும் வருமானத்திலிருந்து 30% உயர்ந்த பட்சம் விரிவுரைக்காக பயன்படுத்த முடியும்.

iii. விரிவுரைக் கொடுப்பனவுகள் பெறமுடிவது பாடசாலை நேரத்திற்குப் பின்னரும் வார இறுதி நாட்களில் மேற்கொள்ளும் சேவைகளுக்கும் மாத்திரமாகும்.

iv. விரிவுரையாளர்களின் வருகை மற்றும் வெளியேற்றத்தை குறிப்பிடுவதற்காக வரவுப் புத்தகம் பேணப்பட வேண்டும்.

v. ஒருவருக்கு வேலை செய்யும் வார நாட்களில் நாள் ஒன்றிற்கு மூன்று மணித்தியாலமும், அரச விடுமுறை நாட்களில் நான்கு மணித்தியாலமும் கொடுப்பனவு பெறமுடியும். உரிய மணித்தியாலத்தை விட கூடுதலான விரிவுரையை முகாமைத்துவக் குழு அங்கீகரிக்க வேண்டும்.

vi. சகல பாடநெறிகளும் ஆரம்பிக்க முன்னர் சகல விவரங்கள் (மணித்தியால எண்ணிக்கை, விரிவுரையாளர்களின் பெயர், செலவினம், விரிவுரை நடாத்தும் மணித்தியாலங்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிக்கை) போன்றன விவரமாக குறிப்பிட்டு மதிப்பீடுகளைத் தயாரித்து வலயக் கல்விப் பணிப்பாளரின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும்.

vii. விரிவுரைக்காக வெளியாளர்கள் தொடர்புபடுத்தப்பட்டிருந்தால் கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு கொடுப்பனவுகளை செலுத்த வேண்டும். (நாளொன்றிற்கு மூன்று மணித்தியால உயர்ந்த பட்சத்தின் கீழ்)

- பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்காக விரிவுரை மணித்தியாலத்திற்கு ரூ. 400/=
- நாடு தழுவிய சேவைக்காக அல்லது சமமான சேவைகளின் முதலாம் வகுப்பு உத்தியோகத்தர்கள் அல்லது திணைக்கள தலைவர் அல்லது கலாநிதி பட்டம் கொண்டவர்களுக்காக மணித்தியாலத்திற்கு ரூ. 300/=
- ஆசிரிய ஆலோசகர் / தொழில்னுட்ப உத்தியோகத்தர் அல்லது மேற்கூறப்படாத உத்தியோகத்தர்களுக்காக விரிவுரை மணித்தியாலத்திற்கு ரூ. 250/=

**பொது ஆலோசனை**

i. மத்திய நிலையத்தின் சகல ஆவணங்களும் எதிர்காலத்தில் மேற்கொள்ள முடியுமான கணக்காய்வுப் பணிகளுக்காக சமர்ப்பிக்க முடியுமான வ்கையில் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

ii. மத்திய நிலையத்தில் கிடைக்கும் சகல கிடைப்பனவுகள் மற்றும் நீக்கப்பட்டவைகள் முறையான பொருட்பட்டியலில் கூறப்பட வேண்டும். (பொது நிருவாக முகாமைத்துவம் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சின் தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் 11/719/E 203/117 மற்றும் 2002.08.23ம் திகதிய சுற்றறிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட விரிவுரைக் கட்டணம் உரியதாக்கிக் கொள்ள வேண்டும்.)

## 3. மாகாண தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்னுட்ப மத்திய நிலையம்

### 3.1 நோக்கம்

i. மாகாண தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்னுட்ப கல்வி விருத்தி
ii. மாகாண தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்னுட்ப கல்வியின் கீழ் ஆசிரிய பயிற்சி
iii. தேவைப்படும் மென்பொருட்கள் மற்றும் ஆசிரிய மாதிரிகளை உருவாக்குதல்

### 3.2 பணியாளர்களை நியமித்தல்

புதிதாக நிறுவப்பட்டுள்ள மாகாண மத்திய நிலைய பணியாளர்களை நியமிப்பது தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் ஒழுங்கு முறைகள் முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் இடம்பெறும்.

### 3.3 மத்திய நிலைய பணியாளர்கள்

i. மத்தியநிலைய முகாமையாளர் 01
ii. விரிவுரையாளர்கள் 02 (தேவைக்கமைய சேவைக்காக வெளி விரிவுரையாளர்களினது சேவையையும் பெற்றுக்கொள்ள முடியும்)
iii. மத்திய நில்லய உதவியாளர் 02
iv. காவலாளர் 02
v. தொழிலாளி 01
vi. சுத்திகரிப்பு தொழிலாளி 01

### 3.4 மத்திய நிலையத்தின் பணிகள்

i. மாகாண தகவல் மற்றும் தொடர்புசாதன கல்விக்காக பல பாடத்துறைகள் சம்பந்தமாக ஆசிரியர்களுக்கு புயிற்சி அளித்தல்.
ii. மாகாணத்தில் தேவைக்கமைய தேவைப்படும் இலத்திரனியல் கற்றல் உபகரணங்கள் மற்றும் மென்பொருட்களை தயாரிப்பதற்காக உதவுதல்.
iii. மாகாண வலய தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்னுட்ப மத்தியநிலையம், பாடசாலை தகவல் தொடர்புசாதன மத்தியநிலையம் தொடர்பாக தகவல்களை சேகரித்தல், அவற்றில் நிறைவேற்ற முடியுமான தேவைகளை இனங்காணுதலும் அபிவிருத்திக்கு உதவுதலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.5 முகாமைத்துவக் குழு

### 3.5.1 உள்ளடக்கம்

i. மாகாணக் கல்விப் பணிப்பாளர் (உத்தியோகபூர்வ அதிகாரத்தின் கீழ் தலைவர்)
ii. கணக்காளர் (மாகாணம்)
iii. தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம் தொடர்பான மாகாண இணைப்பு உத்தியோகத்தர்
iv. மத்தியநிலைய முகாமையாளர் (செயலாளர்)
v. உரிய வள மத்தியநிலைய விரிவுரையாளர் (பொருளாளர்)
vi. உரிய வளமத்தியநிலைய விரிவுரையாளர்
vii. ஆசிரிய ஆலோசகர் (ICT – ISA)

### 3.5.2 பணிகள்

i. மத்திய நிலையத்தின் நிதி செயற்பாடுகளுக்கு அங்கீகாரம் வழங்குதல்
ii. மத்திய நிலையத்தினால் வழங்கப்படும் பாடநெறி அல்லது தீர்மானித்தல் மற்றும் அதற்கான திட்டங்களை தயாரித்தல்
iii. கல்விக்காக தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதனை பிரபல்யப்படுத்தல்
iv. தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம் தொடர்பாக மாகாண இணைப்புத்தியோகத்தர், நிரல் அமைச்சு உத்தியோகத்தர் மற்றும் தேசிய கல்வி நிறுவகத்தின் உத்தியோகத்தருடன் தொடர்பைப் பேணுதல்.
v. முகாமைத்துவக் குழுக் கூட்டம் மற்றும் பணிகள் தொடர்பாக முறையான கடித ஆவணங்களைப் பேணுதல்.
vi. மாகாண தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பக் கல்விக்காக பல பாடத்துறைகள் சம்பந்தமான ஆசிரிய பயிற்சி
vii. மாகாண தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம் தொடர்பாக தகவல்களை சேகரித்தலும் அவற்றை சமகாலப்படுத்தி பேணுதலும்.

மத்திய நிலையத்தை நடாத்துதலும் பாராமரிப்பும் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் மேற்கொள்ள வேண்டும்.

### 3.5.3 தாபன முகாமைத்துவ பணிகள்

ஏற்கனவே அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள மாகாண தகவல் வள மத்திய நிலையங்கள் இதற்குப் பின்னர் "மாகாண தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப கல்வி மத்திய நிலையம்" என கருதப்படும்

## 3.6 நிதி முகாமைத்துவம்

தகவல் தொடர்புசாதன தொழில்நுட்ப கல்வி மற்றும் கணனி ஆய்வுகூட மத்திய நிலையங்களை நடாத்திச் செல்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் 2003.07.17ம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் கீழ் 2004.01.28ம் திகதி கிடைக்கப்பெற்ற அங்கீகாரத்திற்கமைய இச்சுற்றறிக்கையின் நிதி முகாமைத்துவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிதி ஒழுங்குக் கோவைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 3.6.1 வருமானம் சேகரித்தல்

மாகாண முகாமைத்துவக் குழுவின் தேவை மற்றும் அங்கீகாரத்தின் அடிப்படையில் மத்திய நிலையத்திற்கு வருமானத்தை சேகரிக்க தேவைப்படும் பட்சத்தில் வெளி பாடநெறியை நடாத்துதல், வசதிகள் மற்றும் சேவைகளை வழங்குதல், கட்டணம் அறவிடல் மற்றும் கணக்கை பேணுதல் போன்றவற்றை மேற்கொள்ள முடிவதுடன் இதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்ட முறைகளை பின்பற்றுவது முக்கியமானதாகும்.

i. மாகாண தகவல் மற்றும் தொடர்புசாதன கல்வி மத்திய நிலையங்களுக்கு உரியதாக உள்ள பாடநெறி நடாத்தப்படாத காலங்களில் வெளிநபர்களுக்காக பாடநெறி நடாத்தல்.

ii. மத்திய நிலையத்தில் உள்ள வளங்களில் வெளி நபர்களுக்கு சேவையை வழங்கல் (அறவிட வேண்டிய நிதி முகாமைத்துவக் குழுவினால் தீர்மானிக்க வேண்டும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.6.2 கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு பாடநெறி கட்டணங்களை தீர்மானிக்க முடியும்.

இவ்வகையான பாடநெறி அல்லது சேவைக்காக கணனியை ஒரு மணித்தியாலம் பயன்படுத்த ரூ. 20/= அறவிடல், அதற்கு மேலதிகமாக ஏனைய நிருவாகம் மற்றும் விரிவுரைக் கட்டணங்களுக்காக கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு கட்டணங்கள் கணிப்பீடு செய்யப்படுகின்றன.

- அடிப்படைப் பாடநெறி (Basic Courses) – மணித்தியாலத்திற்கு ரூ. 20/=
- சான்றிதழ் பாடநெறி (Certificate Course – Web Development, Desktop Publishing, Hardware) – மணித்தியாலத்திற்கு ரூ. 30/=
- கல்வி அமைச்சு /பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் Sri Lanka ICT Examination இற்காக பாடநெறி நடாத்தல். மற்றும் அதற்காக கல்வி அமைச்சினால் தீர்மானிக்கப்படும் பாடநெறிக் கட்டணத்தை அறவிடல்.
- ஒரு கணனிக்காக உயர்ந்தபட்ச மாணவர் எண்ணிக்கை 02 (முடியுமான சகல சந்தர்ப்பங்களிலும் ஒருவருக்காக ஒரு கணனியை வழங்குவது பொருத்தமானது.

3.6.3 சிறுதொகைப் பணத்திலிருந்து செலவிடல்

அத்தியாவசியம் மற்றும் சிறு செலவினங்களுக்காக ரூ.2000/= நிதி சிறுதொகை நிதியாக மத்திய நிலையத்திற்குப் பொறுப்பான ஆசிரியர் வைத்திருக்க வேண்டியதுடன் ரூ.500/= ஐ விடக் குறைந்த கொடுப்பனவு அதிலிருந்து மேற்கொள்ள முடியும். சகல கொள்வனவுகளுக்குமாக முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரம் பெறப்படவேண்டும். இவ்வாறு செயற்படுவதற்காக சிறு நிதிப் புத்தகம் ஒன்றை பேணவேண்டும். ஆண்டு ஆரம்பத்தில் "பொது 35" வவுச்சர் மூலம் பிரதான நிதிப் புத்தகத்திலிருந்து ரூ.2000/= பெறவேண்டியதுடன் அது பிரதான நிதிப்புத்தக செலவினம் (கொடுப்பனவு) பிரிவைப் போன்று சிறு நிதிப் புத்தகத்தில் (கிடைப்பனவு) பகுதியிலும் குறிப்பிட வேண்டும். சிறு நிதிப் புத்தகத்தின் செலவினங்கள் சிறு நிதிப் புத்தக செலவினப் பக்கத்தில் குறிப்பிட வேண்டியதுடன் அச்செலவினத்தை உறுதிசெய்யக்கூடியவாறான பற்றுச் சீட்டுக்கள் இருக்கவேண்டும். அப்பற்றுச்சீட்டுக்களை பயன்படுத்தி செலவான நிதியை பிரதான நிதிப் புத்தகத்தில் மீள்நிரப்ப முடியும். இச்செயற்பாடுகள் ஆண்டு பூராகவும் பின்பற்ற முடிவதுடன் ஆண்டிறுதியில் பெற்ற ஆரம்ப நிதி பிரதான புத்தகத்திற்கு தீர்க்க வேண்டும்.

3.6.3.1 செலவினங்களை ஏற்கும் எல்லை

i. நாளொன்றிற்கு ரூ. 500/= ஐ தாண்டாதவாறு மாதமொன்றிற்கு ரூ. 3,000/= உயர்ந்த பட்சத்தின் கீழ் விலை மனுக்கள் கோராது குழுவின் அங்கீகாரத்துடன் விநியோகம் மற்றும் சேவையைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க முடியும்.

ii. ரூ.10,000/= ஐ விடக் குறைந்த செலவுகளுக்காக விலைமனுக்கள் கோரப்பட்டதன் பின்னர் முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ள முடியும்.

iii. ரூ.10,000/= ஐ விட கூடிய கொள்வனவுகளுக்காக மாகாணக் கல்விப் பணிப்பாளர்களினால் கேள்வி ஒழுங்கு முறைக்கமைய செலவுகளை மேற்கொள்ள வேண்டும்.

iv. அரச நிதிக்கோவை, அரச கேள்வி வழிகாட்டல் கோவை மற்றும் தாபன விதிகளுக்கமைய செலவினங்கள் மேற்கொள்ள வேண்டும். தொலைபேசி மற்றும் பில் கட்டணங்களுக்காக அமைச்சினால் பணம் செலுத்தப்படுவதில்லை. அது மத்திய நிலைய நிதியத்தினால் செலுத்தவேண்டும்.

3.6.4 கொடுப்பனவு தொடர்பாக கீழ்க் குறிப்பிடப்பட்ட ஒழுங்கு முறைகளை பின்பற்ற வேண்டும்.

i. ஆண்டு ஆரம்பிக்க முன்னர் வருடாந்த திட்டமிடல் மற்றும் வருமான செலவின மதிப்பீட்டைத் தயாரித்து மாகாணக் கல்விச் செயலாளரின் அங்கீகாரத்தைப் பெறல்.

ii. மத்திய நிலையத்தின் சகல கொடுக்கல் வாங்கல்களுக்குமான அரச வங்கி "தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப மத்திய நிலையம்" என்ற பெயரில் நடைமுறைக் கணக்கை ஆரம்பித்தல்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. சகல கிடைப்பனவுகளுக்குமாக கல்வி சீ 100 பற்றுச்சீட்டை வழங்குதல்
iv. சகல கிடைப்பனவுகளும் (கையிலுள்ள எஞ்சிய பணத்தை தவிர) 03 நாட்களுக்குள் வங்கியில் இட வேண்டும்.
v. மாதாந்த சமநிலைப்படுத்தல்களுக்காக இரு கோடுகள் கொண்ட நிதிப் புத்தகத்தை பேணுதல் மற்றும் மாதாந்த வங்கி இணக்கக் கூற்றுக்களை தயாரித்தல்.
vi. சகல கொடுப்பனவுகளுக்குமாக முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரத்தைப் பெறல்
vii. சகல கொடுப்பனவுகளும் "பொது35" வவுச்சர் மூலம் செலுத்தப்பட்டிருக்க வேண்டும். சகல கொடுப்பனவுகளுக்கும் செயலாளரினால் பரிந்துரை பெறவேண்டியதுடன் தலைவரினால் அங்கீகரிக்க வேண்டும்.
viii. சகல வவுச்சர்களும் பொருளாளரினால் உறுதிசெய்ய வேண்டும்.
ix. காசோலைகள் மூலம் கொடுப்பனவுகளை செலுத்தும்போது குழுவின் பொருளாளர் மற்றும் தலைவர் ஒப்பமிடல்.
x. சகல செலவின நாளேட்டிலும் குறிப்பிட வேண்டும்.
xi. ஆண்டிறுதியில் கிடைப்பனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பாக இறுதிக் கணக்குகளைத் தயாரித்தலும் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்குகளின் பிரதி, தேசிய பாடசாலையுடன் தொடர்புபட்டவைகள் அமைச்சின் உள்ளக கணக்காய்வுக் குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும். மாகாண பாடசாலைகள் தொடர்பிலானவைகள் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
xii. வருமான செலவின அறிக்கை, குழு கூடும் வேளையில் சமர்ப்பித்தல்.
xiii. கிடைக்கும் சகல பணத்தையும் நிதிப் புத்தகத்தில் பதிவுசெய்து வங்கியில் வைப்புச்செய்ததன் பின்னர் செலவிடுவதற்காக தேவைப்படும் பணத்தை வங்கியில் பெறவேண்டும்.

**3.6.5 விரிவுரை மற்றும் சேவைக்கான கொடுப்பனவுகள்**

i. மத்திய நிலைய முகாமையாளருக்கு மேலதிக சேவைகளுக்காக குழுவின் அங்கீகாரத்திற்கு அமைய கொடுப்பனவு பெற்றுக்கொள்ள முடியும்.
ii. மேலதிக பாடநெறி மூலம் கிடைக்கும் வருமானத்தின் 30% உயர்ந்த பட்சத்தின் கீழ் விரிவுரைக்காக பயன்படுத்த முடியும்.
iii. விரிவுரைக் கொடுப்பனவு பெறமுடிவது கடமை நேரத்திற்குப் பின்னர் மற்றும் வார இறுதி நாட்களில் மேற்கொள்ளும் சேவைகளுக்கு மாத்திரம் ஆகும்.
iv. விரிவுரையாளர்களின் சமுகமளிப்பு மற்றும் வெளியேற்றத்தை குறிப்பிடுவதற்காக வரவு இடாப்பு ஒன்றை பேணவேண்டும்.
v. ஒருவருக்கு வாரத்தில் கடமையாற்றும் நாளில் மூன்று மணித்தியாலமும் அரச விடுமுறை நாளில் நான்கு மணித்தியாலமாக கொடுப்பனவு பெறமுடியும். உரிய மணித்தியாலங்களை கூடுதலாக மேற்கொள்ளும் விரிவுரைக்கான கொடுப்பனவிற்கு முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரம் பெறவேண்டும்.
vi. சகல பாடநெறிகளும் ஆரம்பிக்க முன்னர் சகல விபரங்களும் (மணித்தியாலங்களின் எண்ணிக்கை விரிவுரையாளர்களின் பெயர், செலவு, விரிவுரை நடாத்தும் மணித்தியாலங்களின் எண்ணிக்கை போன்றன விபர மதிப்பீட்டைத் தயாரித்து வலயக் கல்விப் பணிப்பாளரின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும்.
vii. விரிவுரைக்காக வெளி நபர்கள் அழைக்கப்படுமானால் கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு கொடுப்பனவுகளை செலுத்த வேண்டும். (நாளொன்றிற்கு மூன்று மணித்தியால உயர்ந்த பட்சத்தின் கீழ்)
- பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்காக விரிவுரை மணித்தியாலத்திற்கு ரூ.400/=
- நாடு தழுவிய சேவை அல்லது சமமான சேவைகளை முதலாவது வகுப்பின் உத்தியோகத்தர்கள் அல்லது திணைக்களப் பொறுப்பாளர்கள் கலாநிதிப் பட்டம் கொண்டவர்களுக்காக விரிவுரை மணித்தியாலத்திற்கு ரூ.300/=
- ஆசிரிய ஆலோசகர்கள் /தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மேற்கூறப்படாத உத்தியோகத்தர்களுக்காக விரிவுரைக்கு மணித்தியாலத்திற்கு ரூ.250/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பொது நிருவாக முகாமைத்துவம் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சின் தாபன பணிப்பாளர் நாயகத்தின் இல. 11/719/ஈ203/117 மற்றும் 2002.08.23ம் திகதிய சுற்றறிக்கை மூலம் அங்கீகரிக்கப்பட்ட விரிவுரைக் கட்டணம் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.)

**பொது ஆலோசனைகள்**

i. மத்திய நிலையத்தின் சகல ஆவணங்களும் எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளும் கணக்காய்வுப் பணிகளுக்காக சமர்ப்பிக்க முடியுமான வகையில் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

ii. மத்திய நிலையத்திற்கு கிடைக்கும் சகல கிடைப்பனவுகள் மற்றும் நீக்கப்படுபவைகளை முறையாக பொருட் பட்டியலிற் குறிப்பிட வேண்டும்.

தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப கல்வி மத்திய நிலைய பணிகளை நடாத்தும் போது இதற்குப் பின்னர் இச்சுற்றறிக்கையின் ஆலோசனையை பின்பற்ற வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

டாக்டர் தாரா டி மெல்
செயலாளர்
கல்வி அமைச்சு.

பிரதிகள்:

1. வலயக் கல்விப் பணிப்பாளர்
2. தகவல் மற்றும் தொடர்புசாதன மத்திய நிலையம்
3. செயற்றிட்டப் பணிப்பாளர்கள்
4. உள்ளக கணக்காய்வு திணைக்களம்
5. நிரல் /மாகாணப் பணிப்பாளர்கள்
6. மாகாண கணக்காய்வுத் திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடி/01/12/01/03/13,
2004.07.12

சுற்று நிருப இல: 2004/23

சகல மாகாணச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப்பணிப்பாளர்கள்,
சகல வலயக்கல்விப்பணிப்பாளர்கள்,
அதிபர்கள்,
கணனி வள நிலைய முகாமையாளர்களுக்கும்,

## கணனி ஆய்வுகூடங்களின் அலுவல்களை நடாத்திச் செல்லல்

### 1. அறிமுகம் :

கணனி, தகவல் தொழில்நுட்பப் பாடமானது தற்சமயம் கல்விப்புலத்திலே மிகவும் ஈர்ப்புத்தன்மையினைக் கொண்ட பிரிவாக நிலவுகின்றது. உலகின் சகல நாடுகளும் இதுபற்றி பலமான கரிசனை காட்டிவரும் அதேசமயம் தகவல் தொழில்நுட்பமானது கல்வி நடவடிக்கைகளுக்கு அத்தியாவசியமான அங்கமொன்றாகக் கையாளப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. பிரபஞ்ச ஞானம் தொடர்பான தகவல்கள் சேரிக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான தரவுகளை அடிப்படையாகக்கொண்ட வலைப்பின்னலுடன் தொடர்புபட்டிருப்பதினால் புதிய விடையங்கள் சம்பந்தமாகவும், தகவல்களைப் பெறக்கூடியதாக உள்ளதுடன் ஆரம்பக்கல்வி முதல் உயர்கல்வி நடவடிக்கைகளுக்கும் பல்விதக்கல்விப் புலங்களைத் தொடரவும் கணனி ஒரு பிரதான ஊடகமாகப் பயன்படுத்தப்படுகின்றது.

தற்சமயம் கல்விப் புலத்தினுள்ளே செயற்படும் கணனி நிலையங்கள் பலவகைப்பட்டவையாகும்.

01. பிறநாட்டு செயற்றிட்டங்களினூடாக அமைக்கப்பட்ட கணனி நிலையங்கள்
02. மாகாணசபை நிதியங்களிலிருந்து வழங்கப்படும் கணனி நிலையங்கள்.
03. பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் அல்லது அரசசார்பற்ற நிறுவனங்களின் அன்பளிப்பாக வழங்கப்பட்ட கணனி நிலையங்கள்.
04. மத்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கணனி நிலையங்கள்.

இவற்றின் பணிகளைப் பொறுத்து இவை மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

1. பாடசாலைக் காலத்தினுள்ளேயான கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகளுக்குப் பாவிக்கப்படும் பாடசாலை மட்டத்தில் அமைக்கப்பட்ட கணனி நிலையங்கள்( பாடசாலைக் கணனி ஆய்வுகூடம்)
2. சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் க.பொ.த(உயர்தரம் ) க.பொ.த(சாதாரண தரம்) பரீட்சைகளுக்குத் தோற்றி பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களுக்கு வலய மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள கணனிவள நிலையங்கள்.(கணனி வள நிலையங்கள்)
3. மாகாண ஆசிரிய பயிற்சி நடவடிக்கைகளுக்கென மாகாண மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள மாகாண தகவல். தொழில்நுட்ப நிலையம். (மாகாணக் கணனி நிலையம்)

பல்வேறு வழிகளாலும் பாடசாலைகளுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள கணனி நிலையங்கள் இனிமேல் "பாடசாலை கணனி ஆய்வுகூடம்" என்ற பெயரால் அழைக்கப்படும்

### 2. பாடசாலைக் கணனி ஆய்வுகூடம்

2.1. <u>பாடசாலை கணனி ஆய்வுகூட நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கம்</u>

1. கற்றல் கற்பித்தல் செயல்முறையின் தரவிருத்தியினை ஏற்படுத்துவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றல் உபகரணமாக கணனியினை ஈடுபடுத்துதல்.

2. கற்றல் - கற்பித்தல் செயல்முறைக்கு வலைப்பின்னலைப்பாவித்தல். ஆளாளுக்கிடையிலான தொடர்புகளைக் கட்டியெழுப்புதல்.
3. தகவல் முகாமைத்துவம் தொடர்பான மாணவர்களின் திறனை விருத்தி செய்தல்.
4. வருங்காலத்திற்கு முகங்கொடுப்பதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவினை மாணவர்களுக்கு வழங்குதல்.

2.2. <u>பணி நிலையினர்</u>

1. கணனி ஆய்வு கூடத்திற்குப் பொறுப்பாக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு ஒரு ஆசிரியர் இருத்தல் வேண்டும். அவ்வாசிரியர் தேவையேற்படும்பொழுது பாடசாலை நேரத்தின் பின்னரும் சேவையாற்ற வேண்டும்.
2. பாடசாலை நேரத்தின் பின்னர் ஆய்வுகூட அலுவல்களை நிகழ்த்தும் பொழுது உதவி நிலைப்பணியாள் ஒருவரை ஈடுபடுத்த முடியும்.

2.3. <u>செயல்முறை</u>

1. முகாமைத்துவ அலுவல்கள் இங்கு பின்னர் விபரிக்கப்படும் விதத்தில் தெரிவு செய்யப்பட்ட முகாமைத்துவக் குழுவினால் நடாத்தப்படும்.
2. பாடசாலைக் கணனி ஆய்வுகூடமானது பாடசாலை நடைபெறும் கால எல்லையினுள் மாணவர்கட்கும் பணிநிலையினருக்கும் மாத்திரம் பாவிக்கப்படக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
3. பாடசாலை நடைபெறும் காலப்பகுதியினுள் அதாவது கிழமை நாட்களில் மு.ப.8.00 - பி.ப.2.00 வரை மாணவர்களிடமிருந்து பணம் அறவிடப்படக் கூடாது.
4. பாடசாலை நேரத்தின் பின்னர் அரசாங்க விடுமுறை தினங்களில் அல்லது பாடசாலை விடுமுறைக் காலத்தின்போது வெளியாட்களுக்கு கற்கை நெறிகளை நடாத்த இயலும். தேவையேற்படுமிடத்து வெளியிலிருந்தான விரிவுரையாளர்களையும் ஈடுபடுத்த முடியும்.

2.4. <u>முகாமைத்துவ குழுவின் உறுப்பினர்</u>

1. வலயக்கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளர்(விஞ்ஞானம்)
2. அதிபர் (தலைவர் என்ற அதிகாரத்துடன்)
3. பொருளாளர் (பாடசாலை கணனி ஆய்வுகூட ஆசிரியர்)
4. பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதியொருவர்
5. பழையமாணவர் சங்கத்தின் பிரதிநிதியொருவர்
6. கணக்காளர் (வலயக்கல்வி அலுவலகம்)
7. பாடசாலையின் கற்பிக்கும் ஒரு ஆசிரியர்)

இக்குழுவின் பணிகள் வலயப்பணிப்பாளரின் மேற்பார்வையின் கீழும் வழிகாட்டலுக்கமையவும் நடைபெறுதல் வேண்டும்.

2.5. <u>பணிகள்</u>

1. ஆய்வுகூடத்தின் நிதிசார் நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்குதல்.
2. நிலையத்தினால் வழங்கப்படும் கற்கைநெறிகளை அல்லது சேவைகளைத் தீர்மானித்தலும் அவற்றிற்கான திட்டங்களை அமைத்தலும்.
3. கல்விக்காகத் தகவல் தொழில்நுட்பத்தினை ஊக்குவித்தல்.
4. தகவல் தொழில்நுட்பத்திற்கான மாகாண இணைப்பு உத்தியோகத்தர் நிரல் அமைச்சின் உத்தியோகத்தர்கள் தேசிய கல்வி நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் தொடர்புகளைப் பேணுதல்.
5. புதிய தேர்ச்சிகளுக்கும், சமூகத் தேவைகளுக்கும் இசைவாக நிலையத்தினால் வழங்கப்படவேண்டிய சேவைகளைத் தீர்மானித்தல்.
6. முகாமைத்துவக்குழுவின் கூட்டங்கள், பணிகள் பற்றிய ஒழுங்கான ஆவணங்களைப் பேணுதல்.

2.6. <u>நிதி முகாமைத்துவம்</u>

2.6.1. <u>வருமானத்தினைச் சேகரித்தல்</u>

கீழ்க்காணும் விதத்தில் வருமானத்தினைச் சேகரிக்க முடியும்.

1. பாடசாலை நேரத்தின் பின்னரும், வார இறுதிநாட்களிலும் பாடசாலை விடுமுறை தினங்களிலும் வெளியாருக்கான கற்கை நெறிகளை நடாத்துதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. நிலையத்திலுள்ள வலைப்பின்னல் போன்ற வளங்களிலிருந்து வெளியார் சமூகத்திற்கு சேவையினை வழங்குதல் (இப்பணத்தொகையானது முகாமைத்துவக்குழுவினால் தீர்மானிக்கப்படவேண்டும்.)

2.6.2. கீழ்க்காணும் வகையில் கற்கை நெறிக்கட்டணம் தீர்மானிக்கப்பட முடியும்.

1. எந்தக் கற்கை நெறி ஒன்றுக்காகவேனும் கணனி இயந்திரத்தினை 1 மணித்தியாலத்திற்குப் பாவிப்பதற்கு ரூ.20/- அறவிடுதலும், அதற்கு மேலதிகமாக பிற நிர்வாக விரிவுரைக்கட்டணமாகப் பின்வரும் வீதத்தில் கட்டணத்தினைக் கணக்கிடுதல்.

- அடிப்படைக் கற்கை நெறி (Basic Course)
 1 மணித்தியாலத்திற்கு ரூ.20/
- சான்றிதழ் கற்கை நெறி (Certificate course) Web Desigining, Desktop Publishing, Hardware ....) 1 மணித் - ரூ. 25/-
- கணனி உயர்கற்கை நெறி (Advanced courses) (Web, Programming, Network .....) 1 மணித்தி - ரூபா.30/-

ஒரு கணனிக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடிய மாணவர் எண்ணிக்கை 2 ஆகும். இயலுமான சகல சந்தர்ப்பங்களிலும் ஒரு ஆளுக்கு ஒரு கணனியினை வழங்குதல் பொருத்தமானதாகும்.

2.6.3. செலவிடும் விதிமுறை

- அத்தியாவசியமான சிறு செலவுகளுக்கென ரூபா.500/- நிலைய முகாமையாளர் வசம் வைத்திருக்கப்படலாம் என்பதுடன் சகல கொள்வனவுகள் தொடர்பாகவும் முகாமைத்துவக்குழுவின் தழுவல் அதிகாரம் பெறப்படவேண்டும்.
- ரூபா.10000/- இற்குக் குறைவான செலவினம் விலைமனுக்கோரலின் பின்னர் முகாமைத்துவக்குழுவின் அங்கீகாரத்துடன் செய்யப்படவேண்டும்.
- ரூ.10000/- இற்கு மேற்பட்ட கொள்வனவுகள் தொடர்பாக வலயக்கல்விப்பணிப்பாளரினால் கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டுச் செலவினம் மேற்கொள்ளப்படவேண்டும்.
- அரசின் நிதிப் பிரமாணங்கள், நிறுவன நடைமுறைகள் என்பவற்றுக்கு இணங்க செலவினம் மேற்கொள்ளப்படவேண்டும்.

தொலைபேசி, மின்சாரக்கட்டணங்களுக்கு அமைச்சினால் பணம் எதுவும் கொடுப்பனவு செய்யப்படாது. அவை நிலைய நிதிகளிலிருந்து கொடுப்பனவு செய்யப்படல் வேண்டும்.

2.6.4 கொடுப்பனவுகள் தொடர்பாகப் பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும்.

1. மாதாந்தம் சமன்செய்யப்பட்ட இரட்டை நிரல் காசுப்புத்தகம் பேணப்படுதலும் ஒவ்வொருமாதமும் வங்கி இணக்கம் தயாரித்தலும்.
2. குழுக் கூட்டங்களின்போது வரவு செலவு அறிக்கையினைச் சமர்ப்பித்தல்.
3. வருடாரம்பத்திற்கு முன்னராக வருடத்திற்கான திட்டத்தினையும் வரவு செலவிற்கான மதிப்பீட்டினையும் தயாரித்து வலயக் கல்விப்பணிப்பாளரது அங்கீகாரத்தினைப் பெறுதல்.
4. சகல கொடுப்பனவுகளும் பொது 35 வவுச்சரூடாகவே செய்யப்படுதலும், சகல கொடுப்பனவுகளும் பொருளாளரால் சிபார்சு செய்யப்பட்டு தலைவரினால் அங்கீகரிக்கப்பட்டிருத்தலும்.
5. சகல கொடுப்பனவுகளையும் செலவுப் பதிவேட்டிற் குறித்துக் கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. சகல வருமதிகளுக்கும் சீ100 பற்றுச்சீட்டினை விநியோகித்தல்.
7. சகல கொடுப்பனவுகளுக்கும் முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரத்தினைப் பெறுதல்.
8. நிலையத்தின் சகல கொடுக்கல் வாங்கல்களுக்குமென அரச வங்கியொன்றில் கணனி ஆய்வுகூடத்தின் பெயரில் நடைமுறைக்கணக்கொன்றினைத் திறத்தல்.
9. கிடைக்கும் சகல பணத்தினையும் (கைமீதி தவிர) 3 நாட்களுள் வங்கியிற் சேர்த்தல்.
10. காசோலை மூலம் கொடுப்பனவு செய்யும் பொழுது குழுவின் பொருளாளரும் தலைவரும் ஒப்பமிடல்.
11. வருடமுடிவில் கொடுப்பனவுகள் பற்றிய இறுதிக் கணக்குகளைத் தயாரித்தல்.

2.6.5. விரிவுரை, சேவைகளுக்கான கொடுப்பனவு.

1. நிலைய முகாமையாளருக்கு நிர்வாக நடவடிக்கைகளுக்கென் மாதமொன்றுக்கு ரூபா.500/- ஐ நிலைய நிதியிலிருந்து பெறமுடியும்.

2. அங்கீகரிக்கப்பட்ட கற்கை நெறிகளிலிருந்து கிடைக்கப்பெறும் வருமானத்தின் 30% ஆனது உச்ச எல்லையாக விரிவுரைக்கெனப் பாவிக்கப்படமுடியும்.

3. விரிவுரைக்கட்டணங்கள் பெறக்கூடியது பாடசாலை நேரத்தின் பின்னரும், வார இறுதித் தினங்களிலும் செய்யும் சேவைகளுக்கு மாத்திரமேயாகும்.

4. விரிவுரையாளர்களது வரவு, அகல்வு என்பவற்றினைக் குறிப்பிடுவதற்கு வரவு அட்டவணையொன்று பேணப்படல் வேண்டும்.

5. ஒருவருக்கு வாரத்தின் கிழமை நாட்களில் 3 மணித்தியாலத்திற்கும் அரச விடுமுறை தினங்களில் 4 மணித்தியாலங்களுக்கும் கொடுப்பனவினைப் பெறமுடியும். விதிக்கப்பட்ட மணித்தியாலங்களுக்கு மேலதிகமாகச் செய்யப்படும் விரிவுரைகளுக்கான மணித்தியால அளவு முகாமைத்துவக் குழுவினால் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

6. சகல கற்கை நெறிகளையும் ஆரம்பிப்பதற்கு முன்பாக சகல விபரங்களும் (மணித்தியால அளவு, விரிவுரையாளரின் பெயர், செலவு, விரிவுரையாளர் ஈடுபடும் மணித்தியால அளவு) முதலான தொடர்பாக விபரமான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு வலயக்கல்விப்பணிப்பாளரின் அங்கீகாரம் பெறப்படவேண்டும்.

7. விரிவுரைக்கென வெளியிலிருந்து விரிவுரையாளர்களை ஈடுபடுமிடத்து கீழ்க்காணும் வகையில் கொடுப்பனவு செய்தல்.(நாளொன்றுக்கு 3 மணித்தியாலயங்கள் உச்ச எல்லையாகக் கொண்டு.)

- பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு விரிவுரை மணித்தியாலமொன்றுக்கு ரூபா.400/-
- தீவடங்கிலுமான சேவை அல்லது சமமான சேவைகளின் 1ம் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அல்லது திணைக்களத்தலைவர்கள் அல்லது பட்டத்துடனான ஆளொருவருக்கு விரிவுரை மணித்தியாலமொன்றுக்கு ரூ.300/-
- ஆசிரிய ஆலோசகர்கள்/தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அல்லது மேலே குறிப்பிடப்படாத உத்தியோகத்தர்களுக்கு விரிவுரை மணித்தியாலமொன்றுக்கு ரூபா.250/-

3. கணனி வள நிலையம்

3.1. கணனி வளநிலையங்களின் நோக்கம்

1. அன்றாட வாழ்க்கையில் தகவல் பரிமாற்றத்திற்கும் அதற்கு கணனியினைப் பாவிப்பதிலும் ஆற்றலை வழங்குதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப எழுத்தறிவினை வழங்குதல்.
3. வலய கணணிக்கல்வி தொடர்பாக நானாவித பாடங்களின் கீழான பயிற்சி
4. தேவையான மென்பொருள் தயாரிப்பதில் பாடசாலைகளுக்கு உதவிபுரிதல்.

3.2. கணனி வள நிலையத்திற்குப் பணி நிலையினரை நியமித்தல்

புதிதாக அமைக்கப்படும் நிலையமொன்றிற்குப் பணி நிலையினரை நியமிக்கும்பொழுது அல்லது ஏற்கனவே உள்ள நிலையமொன்றில் வெற்றிடமொன்று ஏற்படும் பொழுது வலயக்கல்விப் பணிப்பாளரினால் வலயத்திலுள்ள பாடசாலைகளிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப்பரீட்சைச்சபையொன்றினால் பணிநிலையினர் நியமிக்கப்படல் வேண்டும்.

பணிநிலையினரை நியமிக்கும் பொழுது கீழ்வரும் விடயங்கள் பற்றிக் கவனம் இருத்தல் வேண்டும்.

1. இடமாற்றம் கோரி விண்ணப்பித்துள்ள ஆசிரியர்களை நியமிக்காது விடல்
2. பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் வேலை செய்யும் ஆசிரியரை நியமித்தல்
3. ஆங்கில பாடத்தில் சாதாரணதரப் பரீட்சையில் சித்தி பெற்றவராகவும், தேர்ச்சியுடையவராகவும் உள்ளவரை நியமித்தல்.
4. கணனி விஞ்ஞானம் பற்றிய மூன்றுமாத்திற்கு மேற்பட்ட முழுநேரப் பயிற்சியினைக்கொண்ட ஆளை நியமித்தல்.

3.3. கணணி வளநிலைய ஆளணி,

1. நிலைய முகாமையாளர் - 01
2. போதனாசிரியர்கள் - 03 (ஆகக்கூடியது)

இது நிலையத்திலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப வித்தியாசப்படவேண்டும் ( ஒரு நிலையத்தில் ஆகக்குறைந்தது 120 மாணவர் தொகை இருத்தல் வேண்டும்.)

3. உதவிப் பணியாள் - 01

3.4. வளநிலையத்தின் பணிப்பொறுப்புகள்

1. க.பொ.த.(உ/த) க.பொ.த(சா/த) பரீட்சைகளுக்குத் தோற்றியவர்களான பிள்ளைகளுக்கான கற்கை நெறிகளை நடாத்துதல்.
2. மேற்படி குழுவினருக்கான கற்கை நெறிகள் நடைபெறாத காலத்தில் வெளியாருக்கான கற்கை நெறிகளை நடாத்துதல்.
3. வலயத்தின் தேவைக்கிணங்க ஆசிரிய பயிற்சி நடவடிக்கைகளை நிகழ்த்துதல்.

3.5. முகாமைத்துவக்குழுவின் அமைவு

1. வலயக்கல்விப் பணிப்பாளர் (தலைவர்)
2. நிலையம் அமைந்துள்ள பாடசாலை அதிபர்
3. நிலைய முகாமையாளர்
4. சம்பந்தப்பட்ட கணனி வள நிலைய போதனாசிரியர் ஒருவர்(பொருளாளர்)
5. வலயக் கணக்காளர்.

3.6. பணிகள்

2. நிலையத்தின் நிதிசார் நடவடிக்கைகளுக்கு அங்கீகாரம் வழங்குதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. நிலையத்தினால் வழங்கப்படும் கற்கை நெறிகள் அல்லது சேவைகள் என்பனவற்றைத் தீர்மானித்தலும் அவற்றிற்கான திட்டங்களைத் தயாரித்தலும்.
4. கல்விக்கான தகவல் தொழில்நுட்பத்தினை ஊக்குவித்தல்.
5. தகவல் தொழில்நுட்பத்துக்கான மாகாண இணைப்பு உத்தியோகத்தர், நிரல் அமைச்சின் உத்தியோகத்தர்கள், தேசிய கல்வி நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் தொடர்புகளைப் பேணல்.

6. புதிய தேர்ச்சிகளுக்கும், சமூகத்தேவைகளுக்கும் இசைவாக நிலையத்தினால் வழங்கப்படவேண்டிய சேவைகளைத் தீர்மானித்தல்.

7. முகாமைத்துவக் குழுவின் கூட்டங்கள், பணிகள் பற்றிய ஒழுங்கான ஆவணங்களைப் பேணுதல்.

### 3.7 நிதி முகாமைத்துவம்

#### 3.7.1. வருமானத்தினைச் சேகரித்தல்

கீழ்க்காணும் முறைகளில் வருமானம் சேகரிக்கப்படலாம்.

1. கணனி வள நிலையங்களிற்கெனக் குறிக்கப்பட்ட கற்கை நெறிகள் நடாத்தப்படாத காலங்களில் வெளியாருக்கான கற்கை நெறிகளை நடாத்துதல்.
நிலையத்திலுள்ள வலைப்பின்னல் போன்ற வளங்களிலிருந்து சமூகத்திற்குச் சேவையொன்றினை வழங்குதல்.

#### 3.7.2. கீழ்காணும் விதத்தில் கற்கை நெறிக்கட்டணம் தீர்மானிக்கப்படலாம்

எந்தவொரு கற்கை நெறி அல்லது சேவைக்கான கணனி இயந்திரத்தின் 1 மணி நேரப்பாவனைக்கு ரூபா.20/- அறவிடுதலும் அதற்கு மேலதிகமாக நிர்வாக, விரிவுரைக் கட்டணமாக கீழ்க்காணும் விதத்தில் கட்டணத்தைக் கணக்கிடுகிறது.

- அடிப்படைக் கற்கை நெறி (Basic Courses) - மணித்தியாலத்திற்கு ரூ.20/-
- சான்றிதழ் கற்கை நெறி (Certificate Courses) Web Development, Desktop, Publishing, Network .... - மணித்தியாலத்திற்கு ரூபா.25/-
- உயர் கணனிக் கற்கை நெறி (Advanced Courses) Web, Programmeing, Network ... - மணித்தியாலத்திற்கு ரூபா.30/-

#### 3.7.3. செலவிடும் விதிமுறை

- அத்தியாவசியமான மற்றும் சிறு செலவுகளுக்கும் ரூபா.2000/- பணத்தினை நிலைய முகாமையாளர் தம் வசம் வைத்திருக்கமுடியும் என்பதுடன் சகல கொள்வனவுகளுக்கும் முகாமைத்துவக்குழுவின் தழுவல் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும்.
- ரூபா.10000/- ற்குக் குறைவான செலவுகள் விலை கோலின் பின்னர் முகாமைத்துவக்குழுவின் அங்கீகாரத்துடன் செய்யப்படமுடியும்.
- ரூபா.10000/- இற்கு மேற்பட்ட கொள்வனவுகளுக்கு வலயக்கல்விப்பணிப்பாளரினால் கேள்விப் பத்திர முறைப்படி செலவுகள் செய்யப்படவேண்டும்.

அரசின் நிதிப்பிரமாணங்கள், தாபன விதிகள் , என்பவற்றிற்கு இசைவாக செலவுகள் செய்யப்படவேண்டும். தொலைபேசி, மின்சாரக்கட்டணங்கள், தொடர்பாக அமைச்சினால் பணம், கொடுப்பனவு செய்யப்படாது என்பதுடன் அவை நிலையத்தின் நிதிகளினால் கொடுப்பனவு செய்யப்படவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது அறிவுறுத்தல்கள்

1. நிலையத்தின் சகல ஆவணங்களும் வருங்காலத்தில் நடைபெறக்கூடிய கணக்காய்வு நடவடிக்கைகளுக்குச் சமர்ப்பிக்கக்கூடிய விதத்தில் பாதுகாப்பாகப் பேணப்படல் வேண்டும்.
1. நிலையத்திற்குக் கிடைக்கும் சகல பொருட்களும், நீக்கி விடுமுறைகளும் முறைப்படி பொருட் பதிவுப் புத்தகத்தில் பதியப்படல் வேண்டும்.

3.7.4 கொடுப்பனவுகள் தொடர்பாகப் பின்வரும் நடை முறைகள் பின்பற்றப்படல் வேண்டும்.

01. மாதாந்தம் சமன்செய்யப்பட்ட இரட்டை நிரல் காசுப்புத்தகம் பேணப்படுதலும் ஒவ்வொருமாதமும் வங்கி இணக்கம் தயாரித்தலும்.
02. குழுக் கூட்டங்களின்போது வரவு செலவு அறிக்கையினைச் சமர்ப்பித்தல்.
03. வருடாரம்பத்திற்கு முன்னராக வருடத்திற்கான திட்டத்தினையும் வரவு செலவிற்கான மதிப்பீட்டினையும் தயாரித்து வலயக்கல்விப்பணிப்பாளரது அங்கீகாரத்தினைப் பெறுதல்.
04. சகல கொடுப்பனவுகளும் பொது 35 வவுச்சரூடாகவே செய்யப்படுதலும், சகல கொடுப்பனவுகளும் பொருளாளரால் சிபார்சு செய்யப்பட்டு தலைவரினால் அங்கீகரிக்கப்பட்டிருத்தலும்.
05. சகல கொடுப்பனவுகளையும் செலவுப் பதிவேட்டிற் குறித்துக் கொள்ளல்.
06. சகல வருமதிகளுக்கும் சீ100 பற்றுச்சீட்டினை விநியோகித்தல்.
07. சகல கொடுப்பனவுகளுக்கும் முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரத்தினைப் பெறுதல்.
08. நிலையத்தின் சகல கொடுக்கல் வாங்கல்களுக்குமென அரச வங்கியொன்றில் கணனி ஆய்வுகூடத்தின் பெயரில் நடைமுறைக்கணக்கொன்றினைத் திறத்தல்.
09. கிடைக்கும் சகல பணத்தினையும் (கைமீதி தவிர) 3 நாட்களுள் வங்கியிற் சேர்த்தல்.
10. காசோலை மூலம் கொடுப்பனவு செய்யும் பொழுது குழுவின் பொருளாளரும் தலைவரும் ஒப்பமிடல்.
11. வருடமுடிவில் கொடுப்பனவுகள் பற்றிய இறுதிக் கணக்குகளைத் தயாரித்தல்.

3.7.5. 1. நிலைய முகாமையாளருக்கு நிர்வாக நடவடிக்கைகளுக்கென மாதமொன்றுக்கு ரூபா.500/- ஐ நிலைய நிதியிலிருந்து பெறமுடியும்.

2. அங்கீகரிக்கப்பட்ட கற்கை நெறிகளிலிருந்து கிடைக்கப்பெறும் வருமானத்தின் 30% ஆனது உச்ச எல்லையாக விரிவுரைக்கெனப் பாவிக்கப்படமுடியும்.

3. விரிவுரைக்கட்டணங்கள் பெறக்கூடியது பாடசாலை நேரத்தின் பின்னரும், வார இறுதித் தினங்களிலும் செய்யும் சேவைகளுக்கு மாத்திரமேயாகும்.

4. விரிவுரையாளர்களது வரவு, அகல்வு என்பவற்றினைக் குறிப்பிடுவதற்கு வரவு அட்டவணையொன்று பேணப்படல் வேண்டும்.

5. ஒருவருக்கு வாரத்தின் கிழமை நாட்களில் 3 மணித்தியாலத்திற்கும் அரச விடுமுறை தினங்களில் 4 மணித்தியாலங்களுக்கும் கொடுப்பனவினைப் பெறமுடியும். விதிக்கப்பட்ட மணித்தியாலங்களுக்கு மேலதிகமாகச் செய்யப்படும் விரிவுரைகளுக்கான மணித்தியால அளவு முகாமைத்துவக் குழுவினால் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

6. சகல கற்கை நெறிகளையும் ஆரம்பிப்பதற்கு முன்பாக சகல விபரங்களும் (மணித்தியால அளவு, விரிவுரையாளரின் பெயர், செலவு, விரிவுரையாளர் ஈடுபடும் மணித்தியால அளவு) முதலான தொடர்பாக விபரமான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு வலயக்கல்விப்பணிப்பாளரின் அங்கீகாரம் பெறப்படவேண்டும்.

7. விரிவுரைக்கென வெளியிலிருந்து விரிவுரையாளர்களை ஈடுபடுமிடத்து கீழ்க்காணும் வகையில் கொடுப்பனவு செய்தல்.(நாளொன்றுக்கு 3 மணித்தியாலயங்கள் உச்ச எல்லையாகக் கொண்டு.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது அறிவுறுத்தல்கள்

- பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு விரிவுரை மணித்தியாலமொன்றுக்கு ரூபா.400/-
- தீவடங்கிலுமான சேவை அல்லது சமமான சேவைகளின் 1ம் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அல்லது திணைக்களத்தலைவர்கள் அல்லது பட்டத்துடனான ஆளொருவருக்கு விரிவுரை மணித்தியாலமொன்றுக்கு ரூ.300/-
- ஆசிரிய ஆலோசகர்கள்/தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அல்லது மேலே குறிப்பிடப்படாத உத்தியோகத்தர்களுக்கு விரிவுரை மணித்தியாலமொன்றுக்கு ரூபா.250/-

தயவு செய்து ஆய்வுகூடங்களின் நடவடிக்கைகளை நடாத்தச் செய்வதில் வருங்காலத்தின்போது இச் சுற்றுநிருபத்தின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு வலியுறுத்துகின்றேன்.

ஒப்பம் / ராறா த மெல்,
செயலாளர்,
கல்வியமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைபேசி இல./Telephone Nos.
2784832
2784807
2785617

2784812

2785141-50
Fax: 2784846

மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

அධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

"இசுருபாய"
பத்தரமுல்ல
"Isurupaya"
Battaramulla.

எமது இல. / My No. /01/12/01/03/ 13 பாடசாலைச் செயற்பாட்டுக் கிளை

திகதி / Date: 2004.07.12.

**சுற்றறிக்கை இலக்கம்: 2004/23**

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
அதிபர்கள்
கணனி வள மத்திய நிலைய முகாமையாளர்கள்.

## *கணனி விஞ்ஞான கூடங்களின் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்*

1. **அறிமுகம்:**

கணனி மற்றும் தகவற்றொழிநுட்பப் பாடம் தற்போது கல்வித் துறையில் பெரும்பாலும் கவர்ச்சியான ஓர் அம்சமாக அமைந்துள்ளது. உலகின் எல்லா நாடுகளும் இதற்காகக் கடும் உற்சாகம் காட்டுவதுடன் தகவற்றொழிநுட்பம் கல்வி நடவடிக்கைகளுக்கு அத்தியாவசியமான ஒரு கருவியாக உபயோகிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. உலக அறிவு பற்றிய தகவல்கள் சேர்க்கப்பட்டுள்ள ஆயிரக் கணக்கிலான தரவுகளை அடிப்படையாகக் கொண்டு வலைத் தொகுதி சம்பந்தப்பட்டிருப்பதன் காரணமாக புதுவிடயங்கள் பற்றியும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளதோடு ஆரம்பக்கல்வி தொடக்கம் உயர் கல்வி நடவடிக்கை வரை பல்துறைகளைக் கற்பதற்கும் கணனி பிரதான ஊடகமாகப் பயன்படுத்தப்படுகிறது.

தற்போது கல்வித் துறையில் செயற்படும் கணனி வள நிலையங்கள் பல.

1. வெளிநாட்டுச் செயற்றிட்டம் மூலம் நிறுவப்பட்டுள்ள கணனி மத்திய நிலையங்கள் பல.
2. மாகாணக் கல்வி நிதியினால் வழங்கப்பட்ட கணனி நிலையங்கள்.
3. பழைய மாணவர் பெற்றார் ஆசிரியர் அரச சார்பற்ற இயக்கங்களின் மூலம் நன்கொடையாக வழங்கப்பட்ட மத்திய நிலையங்கள்.
4. மத்திய அரசினால் வழங்கப்பட்ட கணனி மத்திய நிலையங்கள் வேலைகளுக்கேற்ப இவை மூன்று காண்டங்களாகப் பிரிக்கப்படலாம்.

1. பாடசாலைக் காலத்திற்குள் கற்றல் - கற்பித்தல்களுக்காகப் பயன்படுத்தப்படும் பாடசாலை மட்டத்தின் நிறுவப்பட்டுள்ள கணனி மத்திய நிலையங்கள் (பாடசாலைக் கணனி ஆய்வு கூடங்கள்)
2. குறிப்பிட்ட பிரதேசத்தின் க.பொ.த. (உயர்தர) மற்றும் பெறுபேறுகளை எதிர்பார்த்துக் கொண்டுள்ள மாணவர்களுக்கு வலய மட்டத்தில் நிறுவப்பட்டுள்ள கணனி வள நிலையங்கள் (கணனி வள நிலையங்கள்.)
3. மாகாண ஆசிரிய பயிற்சி நடவடிக்கைகளுக்காக மாகாண மட்டத்தில் நிறுவப்பட்டுள்ள மாகாணத் தகவல் தொழிநுட்ப நிலையங்கள் (மாகாணக் கணனி வள நிலையங்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வகைகளினால் பாடசாலைகளுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள கணனி மத்திய நிலையங்கள் இனிமேல் 11 பாடசாலைக் கணனி விஞ்ஞான கூடம் என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்படும்.

## 2. பாடசாலைக் கணனி விஞ்ஞான கூடங்கள்

### பாடசாலைக் கணனி ஆய்வுகூட நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்கள்

1. கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் பண்புசார் விருத்தியை ஏற்படுத்துவதற்காகக் கற்கும் உபகரணமொன்றாகக் கணனியைப் பயன்படுத்தல்.
2. கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கு வலைத் தொகுதியைப் பயன்படுத்தல், சர்வதேச தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல்..
3. தகவல் முகாமைத்துவத்திற்கு மாணவ திறனை விருத்தி செய்தல்.
4. வருங் காலத்தை எதிர்கொள்வதற்குத் தேவையான தொழிநுட்ப அறிவை மாணவர்களுக்கு வழங்கல்.

### ஆளணியினர்

1. கணனி விஞ்ஞான கூடப் பொறுப்பு நடவடிக்கைகளுக்கு ஓர் ஆசிரியர் இருக்க வேண்டும். அவர் தேவையான சந்தர்ப்பங்களில் பாடசாலை நேரத்தின் பின்பும் சேவையாற்ற வேண்டும்.
2. பாடசாலை நேரத்தின் பின்பு விஞ்ஞான கூட நடவடிக்கைகள் நடைபெறும்போது உதவியாளர் ஒருவரைச் சேர்த்துக் கொள்ள முடியும்.

### செயற்பாடு

1. முகாமைத்துவ நடவடிக்கைகள் இங்கே கீழ்க் குறிப்பிடப்படும் வகையில் தெரிவு செய்யப்பட்ட முகாமைத்துவக் குழுவினால் செய்யப்படும்.
2. பாடசாலைக் கணனி விஞ்ஞானகூடம் பாடசாலை நடைபெறும் காலத்தில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஆளணியினர்க்கும் பாத்திரமானதாக இருக்க வேண்டும்.
3. பாடசாலை நடைபெறும் காலத்தில் அதாவது வார நாட்களில் மு.ப. 8.00 - பி.ப. 2.00 வரை மாணவர்களிடம் பணம் அறவிடக்கூடாது.
4. பாடசாலை நேரத்தின் பின்பும் அரசாங்க விடுமுறை தினங்கள் அல்லது பாடசாலை விடுமுறை காலத்தில் விஞ்ஞான கூடத்தை வெளியாருக்குத் தேவைப்படின் பயன்படுத்தலாம். வெளிவாரி ஆலோசகர்களின் உதவியையும் பெற்றுக் கொள்ளலாம்.

### முகாமைத்துவக் குழுவின் உள்ளடக்கம்

1. வலயக் கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (விஞ்ஞானம்)
2. அதிபர் (தலைவர் பதவி நிலை)
3. பொருளாளர் (பாடசாலைக் கணனிக் கூட ஆசிரியர்)
4. பாடசாலை அபிவிருத்தி சபைப் பிரதிநிதி ஒருவர் (பொதுக் கூட்டத்தில் அனுமதிக்கப்பட்டவராயிருத்தல்)
5. பழைய மாணவர் சங்க அங்கத்தவரொருவர்
6. கணக்காளர் ஒருவர் (வலயக் கல்வி அலுவலகம்)
7. பாடசாலையில் கற்பிக்கும் ஓர் ஆசிரியர்.

இக்குழுவின் வேலைகள் வலயக் கல்விப் பணிப்பாளரின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டலின் கீழ் நடைபெற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைகள்

1. விஞ்ஞானகூட நிதி நடவடிக்கைகளுக்கு அனுமதியைப் பெற்றுக் கொள்ளல்.
2. மத்திய நிலையத்தினால் வழங்கப்படுகின்ற பாடநெறிகள் அல்லது சேவைகளைத் தீர்மானித்தல் மற்றும் அதற்கான திட்டங்களை வகுத்தல்.
3. கல்விக்காகத் தகவற்றொழிநுட்பத்தைப் பயன்படுத்துவதைப் பிரபல்யப்படுத்துதல்.
4. தகவற்றொழிநுட்பம் சம்பந்தமான மாகாண இணைப்புத்தியோகத்தர்கள் நிரல் அமைச்சின் உத்தியோகத்தர்கள் தேசிய கல்வி நிறுவகத்தின் உத்தியோகத்தர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல்.
5. புதிய முன்னேற்றங்கள் மக்கள் தேவைகளின்படி மத்திய நிலையத்தினால் வழங்கும் சேவைகளைத் தீர்மானித்தல்.
6. முகாமைத்துவக் குழுவின் கூட்டங்கள் வேலைகள் பற்றி முறையான ஆவணங்களை நடைமுறைப்படுத்தல்.

நிதி முகாமைத்துவம்

வருமானங்களைத் திரட்டல்

கீழ்க் குறிப்பிடப்படும் முறைகள் மூலம் வருமானங்களைத் திரட்டிக் கொள்ளலாம்.

1. பாடசாலை நேரத்தின் பின்பு வார இறுதி நாட்களில் மற்றும் விடுமுறை நாட்களில் வெளிவாரியாளர்களுக்குப் பாட நெறிகளை நடாத்தல்.
2. மத்திய நிலையத்திலுள்ள இணையம் போன்ற வளங்களினால் வெளிவாரிச் சமூகத்தினர்க்கு சேவை வழங்குவதன் மூலம் (இப்பணம் முகாமைத்துவக் குழுவினால் தீர்மானிக்கப்பட வேண்டும்.)

**கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளபடி பாடநெறிக் கட்டணங்கள் தீர்மானிக்கப்படலாம்.**

1. எந்தப் பாட நெறிக்கும் (கணனி இயந்திரமூலம்) 1 மணித்தியால காலத்திற்கு 20/= ரூபாவை அறவிடல் மற்றும் அதற்குப் புறம்பாக ஏனைய நிர்வாக விரிவுரைகளுக்குக் கட்டணங்களாக கீழ்வரும் முறையில் கட்டணங்களைக் கணிப்பீடு செய்தல்.

- அடிப்படைப் பாட நெறி (Basic Courses) 1 மணித்தியாலத்திற்கு 20/= ரூபா.
- தராதரப் பத்திரப் பாடநெறிகள் (Certificate Courses) { Web Designing, Desk Top Pubilishing , Hardware } 1 மணித்தியாலத்திற்கு 25/= ரூபா.
- உயர் கணனி Advanced Courses { Web Programming Net Work ...........1 } மணித்தியாலத்திற்கு 30/= ரூபா.

ஒரு கணனிக்குக் கூடிய மாணவரெண்ணிக்கை 02, இயன்ற சகல சந்தர்ப்பங்களிலும் ஒருவருக்கு ஒரு கணனி வீதம் பகிர்ந்தளிப்பது பொருத்தமானதாகும்.

செலவிடும் முறைகள், விதிகள்

- அத்தியாவசிய மற்றும் சிறு செலவுகளுக்கு 500/= ரூபாப் பணம் மத்திய நிலைய முகாமையாளரிடம் வைத்துக் கொள்ள முடிவதோடு ஒவ்வொரு கொள்வனவிற்கும் முகாமைக் குழுவின் தழுவல் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.
- 10,000/= ரூபாவிற்குக் குறைவான செலவினங்கள் கேள்வி விலைகள் கோரப்பட்ட பின்பு முகாமைத்துவக் குழுவின் அனுமதியுடன் செலவு செய்யப்பட முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 10,000/= ரூபாவிற்கு மேற்பட்டகொள்வனவுகளுக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் மூலம் கேள்வி நடவடிக்கை முறைகளுக்கேற்பச் செலவிடப்பட முடியும்.

அரசாங்க நிதிப் பிரமாணங்கள் தாபனக் கோவை விதிகள் என்பனவற்றிற்கேற்ப செலவழிக்கும் வேலைகள் நடைபெற வேண்டும்.

தொலைபேசி மற்றும் மின் கட்டணப் பட்டியல்கள் என்பனவற்றிற்கு அமைச்சினால் நிதி, செலுத்தப்படாததோடு அது மத்திய நிலைய நிதியினால் செலுத்தப்பட வேண்டும்.

**கொடுப்பனவுகள் பற்றிப் பின்வரும், நடவடிக்கை முறைகள் பின்பற்றப்பட வேண்டும்.**

1. மாதாந்தம் சமகாலப்படுத்தப்படும் இரண்டு கோர்டுகளையும் கொண்ட நிதி ஏடொன்றை நடைமுறைப்படுத்தல் மாதாந்தம் வங்கிக் கணக்கு ஒப்பீடுகள் தயாரிக்கப்படல்.
2. வருமானம் செலவினம் பற்றிய அறிக்கைகள் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
3. வருட ஆரம்பத்திற்கு முன்பு வருடாந்தத் திட்டம் லரவு செலவு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுக் கல்விப் பணிப்பாளரின் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.
4. சகல கொடுப்பனவுகளும் பொது 35 ஆம் இலக்க உறுதிச் சீட்டின் மூலம் செய்யப்பட வேண்டியுள்ளதோடு சகல கொடுப்பனவுகளும் தனாதிகாரியினால் சிபார்சு செய்யப்பட வேண்டியுள்ளதுடன் தலைவரினால் அனுமதிக்கப்படவும் வேண்டும்.
5. சகல கொடுப்பனவுகளும் செலவேட்டில் குறிப்பிட வேண்டும்..
6. சகல வரவுகளுக்கும் சீ 100 ரசீது பத்திரமொன்று வழங்கப்படல்.
7. சகல செலவினங்களுக்கும் முகாமைத்துவக் குழுவின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளல்.
8. மத்திய நிலையத்தின் சகல கொடுக்கல் வாங்கல்களுக்கும் அரச வங்கயொன்றில் பாடசாலையைக் கணனி நிலையம் என்ற பெயரில் நடைமுறைக் கணக்கொன்றை ஆரம்பித்தல்.
9. சகல வரவுகளும் (கையிருப்புப் பணம் தவிர்த்து) மூன்று (03) நாட்களுக்குள் வங்கியில் வைப்புச் செய்யப்படல்.
10. காசோலை மூலம் கொடுப்பனவுகளை வழங்கும்போது குழுவின் பொருளாளர் தலைவர் என்போர் ஒப்பமிடல்.
11. வருட இறுதியில் கொடுப்பனவுகள் பற்றிய கணக்குகளைத் தயாரித்தல்.

**விரிவுரைகள் சேவைகள் என்பனவற்றிற்கான கொடுப்பனவுகள்**

1. மத்திய நிலைய முகாமையாளருக்கு நிர்வாக நடவடிக்கைகளுக்காக மாதமொன்றிற்கு 500/= மத்திய நிலைய நிதியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
2. அனுமதிக்கப்பட்ட பாடநெறிகளினால் கிடைக்கும் வருமானத்தில் 30% உச்சமட்டத்தில் விரிவுரைகளுக்காகப் பயன்படுத்தலாம்.
3. விரிவுரையாளர்களின் வரவு மற்றும் செல்லல் என்பனவற்றைக் குறிப்பிடுவதற்காக வரவு பதிவு இடாப்பொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.
4. ஒருவருக்கு வாரத்தில் வேலை செய்யும் தினமொன்றிற்கு 03 மணித்தியாலங்களும் அரசாங்க விடுமுறைத் தினமொன்றில் 4 மணித்தியாலங்களுக்குமான கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளலாம். உரிய மணித்தியாலங்களுக்கு மேல் நடாத்தப்படும் விரிவுரைகளுக்குரிய நேர காலம் முகாமைத்துவக் குழுவினால் தீர்மானிக்கப்பட வேண்டும்.
5. சகல பாடநெறிகளும் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பு சகல விவரங்களும் (மணித்தியாலங்கள் விரிவுரையாளரின் பெயர், செலவு விரிவுரை மணித்தியாலங்கள்) என்பன விரிவாக மதிப்பீடு, செய்யப்பட்டு அதற்கான அறிக்கையொன்றைத் தயாரித்துக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. விரிவுரைகளுக்காக வெளிவாரி விரிவுரையாளர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டால் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் கொடுப்பனவுகள் வழங்குதல் (நாளொன்றிற்கு 03 மணித்தியால உச்சத்திற்குட்பட).

- பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு விரிவுரைக் கட்டணம் மணித்தியாலமொன்றிற்கு 400/= ரூபா.
- நாடளாவிய சேவை அல்லது அதற்குச் சமமான சேவைகளின் 1 ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்கள் அல்லது திணைக்களத் தலைவர்கள் மற்றும் கலாநிதிபட்டதாரிகள் என்பவர்களுக்கு விரிவுரைக் கட்டணம் மணித்தியாலயத்திற்கு 300/= ரூபாவாகும்.
- ஆசிரிய ஆலோசகர்கள் கைத்தொழில்/உத்தியோகத்தர்கள் அல்லது மேலே குறிப்பிடப்படாத உத்தியோகத்தர்களுக்கு விரிவுரைக் கட்டணம் 250/= ரூபாவாகும்.

**பொது அறிவுறுத்தல்கள்:-**

1. மத்திய நிலையத்தைச் சேர்ந்த சகல ஆவணங்களும் இனிமேல் நடாத்தப்படவுள்ள கணக்காய்வு நடவடிக்கைக்குச் சமர்ப்பிப்பதற்கு ஏற்ற வகையில் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும்.
2. மத்திய நிலையத்திற்குக் கிடைக்கும் சகல வரவுகளும் மற்றும் அப்புறப்படுத்தப்பட்ட சாமான்கள் முறையான சாமான் பதிவுப் புத்தகமொன்றில் குறித்து வைக்கப்படல்.

**3. கணனி வள நிலையம்**

**கணனி வள நிலையங்களின் நோக்கங்கள்.**

1. அன்றாட வாழ்க்கைக்கான தகவல்களைப் பரிமாற்றம் செய்தல்.
2. க.பொ.த. (சா.த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்குத் தகவற்றொழிநுட்ப அறிவை வழங்கல்.
3. வலயத்தின் கணனிக் கல்விக்குப் பல்வகைப் பாடங்களின் அடிப்படையிலான ஆசிரிய பயிற்சியை வழங்கல்.
4. தேவைப்படும் மென்பாகங்களை உற்பத்தி செய்வதற்குப் பாடசாலைகளுக்கு உதவி செய்தல்.

**கணனி வள நிலையத்திற்கான ஆளணியினரை நியமித்தல்.**

புதிதாக நிறுவப்படும் மத்திய நிலையமொன்றிற்கு ஆளணியினரை நியமிக்கும்போது அல்லது நிலவும் ஒருவள நிலையத்தின் வெற்றிடங்கள் ஏற்படும்போது வலயக் கல்விப் பணிப்பாளரால் வலயத்திலுள்ள பாடசாலைகளில் இருந்து விண்ணப்பப்பத்திரங்களைக் கோரி ஒரு நேர்முகப் பரீட்சைக் குழுவினர் மூலம் ஆளணியினர் நியமிக்கப்பட வேண்டும்.

ஆளணியினரை நியமிக்கும்போது கீழ்க் குறிப்பிடப்படும் அம்சங்கள் பற்றிக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

1. இடமாற்றத்தை எதிர்பார்த்துள்ள ஆசிரியர்களை நியமிக்காதிருத்தல்.
2. செயற்றிறன் அர்ப்பணிப்புடன் செயற்படக்கூடிய ஆசிரியர்களை நியமித்தல்.
3. ஆங்கிலப் பாடத்தில் க.பொ.த. சாதாரண பரீட்சையில் சித்தி பெற்ற ஒருவராக இருத்தலும் திறன் இருத்தலும்.
4. கணனிக் கல்வி பற்றி முழுக்கால 03 மாதங்களுக்கு மேற்பட்ட பயிற்சியைப் பெற்றவராக இருத்தல்.

மத்திய நிலைய ஆளணியினர்

1. மத்திய நிலைய முகாமையாளர் - 1.
2. விரிவுரையாளர்கள் கூடிய எண்ணிக்கை - 03

இது மத்திய நிலையத்திலுள்ள மாணவர் எண்ணிக்கைக்கேற்ப மாற்றமடையலாம். (ஒரு மத்திய நிலையத்தின் குறைந்த மாணவரெண்ணிக்கை 120 ஆகும்.)

3. உதவியாளர் - 1.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்திய நிலையத்தின் வேலைப் பொறுப்புக்கள்

1. க.பொ.த. (உயர்தர) மற்றும் க.பொ.த. (சா.த) பரீட்சைக்கும் தோற்றிய பிள்ளைகளுக்கான பாடநெறிகளை நடாத்தல்.
2. மேற்படி மாணவர்களுக்கான பாடநெறிகள் நடாத்தப்படாத சந்தர்ப்பங்களில் வெளிவாரிப் பாடநெறிகளை நடாத்துதல்.
3. வலயத்தின் தேவைக்கேற்ப ஆசிரிய பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

## முகாமைத்துவக் குழுவின் உள்ளடக்கம்

1. வலயக் கல்விப் பணிப்பாளர் - (தலைவர்)
2. மத்திய நிலையம் அமைந்துள்ள பாடசாலையின் அதிபர்
3. மத்திய நிலைய முகாமையாளர்
4. உரிய கணனி மத்திய நிலையத்தைச் சேர்ந்த ஒரு விரிவுரையாளர் (பொருளாளர்).
5. கணக்காளர் (வலயம்).

## வேலைகள்

1. மத்திய நிலைய நிதி நடவடிக்கைக்கான அனுமதியை வழங்கல்.
2. மத்திய நிலையத்தினால் வழங்கப்படுகின்ற பாடநெறிகள் அல்லது சேவைகளைத் தீர்மானித்தல். மற்றும் அதற்காகத் திட்டமிடல்.
3. கல்விக்காகத் தகவற்றொழிநுட்பத்தைப் பிரயோகிப்பதைப் பிரபல்யப்படுத்தல்.
4. தகவற்றொழில் நுட்பம் பற்றிய மாகாண இணைப்புத்தியோகத்தர்கள் என்போருடன் தொடர்புகளை வைத்துக் கொள்ளல்.
5. புதிய வளர்ச்சி மற்றும் சமூகத் தேவைகளுக்கேற்ப மத்திய நிலையத்தினால் நடாத்தப்படும் சேவைகளைத் தீர்மானித்தல்.
6. முகாமைத்துவக் குழுவின் திட்டங்கள் வேலைகள் பற்றி முறையான ஆவணங்களை நடைமுறைப்படுத்தல்.

## நிதி முகாமைத்துவம்

### 3.7.1. வருமானத் திரட்டல்

பின்வரும் முறைகளின் மூலம் வருமானத்தைத் திரட்டிக் கொள்ளலாம்..

1. கணனி மத்திய வள நிலையங்களுக்குரிய பாடநெறிகள் நடாத்தப்படாத சந்தர்ப்பங்களில் வெளியாருக்கான பாட நெறிகளை நடாத்தல்.
2. மத்திய நிலையங்களில் உள்ள இணையத் தளம் போன்ற வளங்களினால் வெளிவாரிச் சமூகத்திற்கு சேவையொன்றை வழங்குவதன் மூலம் (இப்பணம் முகாமைத்துவக் குழுவினால் தீர்மானிக்கப்படும்.)

கீழ்க் குறிப்பிடப்படும் வகையில் கட்டணங்கள் தீர்மானிக்கப்படலாம்.

- எந்தப் பாடநெறிக்கும் சேவைக்கும் ஒரு கணனி இயந்திர மூலம் 1 மணித்தியாலயத்திற்கு 20/= அறவிடப்படலும் அதற்கு மேலதிகமாக ஏனைய நிர்வாக மற்றும் விரிவுரையாளர் கட்டணங்களுக்காக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கட்டணம் அறவிடப்படல்.
- அடிப்படைப் பாடநெறி (Base Courses) ஒரு மணித்தியாலயத்திற்கு 20./= ரூபா.
- சான்றிதழ் பாடநெறி (Certificate Course)

  Web Development Desktop Publishing Hardware 1 மணித்தியாலயத்திற்கு 25/= ரூபா.

  உயர் பாடசாலைக் கணனிப் பாடநெறி (Advanced Course)

  Web Programming Network.1 மணித்தியாலயத்திற்கு 30/= ரூபா.

ஒரு கணனிக்கு ஆகக் கூடிய மாணவரெண்ணிக்கை 02 பேர். இயன்ற சகல சந்தர்ப்பங்களிலும் ஒருவருக்கு ஒரு கணனி வீதம் வழங்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவிடும் முறை

* அத்தியாவசியம் மற்றும் சிறு செலவினங்களுக்கு 2000/= ரூபா பணத்தை முகாமையாளர் வைத்துக் கொள்ளக்கூடியதாக உள்ளதோடு சகல உறுதிப்பத்திரங்களுக்கும் முகாமைத்துவக் குழுவின் தழுவல் அங்கீகாரம் பெறப்பட வேண்டும்..
* 10,000/= ரூபாவிற்குக் குறைவான விலைகள் கோரப்பட்டதன் பின்பு முகாமைத்துவக் குழுவின் அனுமதியின்படி செலவிடப்படலாம்.

10,000/= ரூபாவிற்கு மேற்பட்ட கொள்வனவுகளுக்கு கல்விப் பணிப்பாளரின் கேள்விக் கோரலுக்கேற்பச் செலவிடப்பட வேண்டும். அரசாங்க நிதிப் பிரமாணங்கள் தாபனக் கோவை விதிகள் என்பனவற்றிற்கேற்பச் செலவீடுகள்

தொலைபேசி மற்றும் மின்கட்டணங்கள் என்பனவற்றை அமைச்சினால் நிதி வழங்கப்படாததோடு அதுமத்திய நிலைய நிதியினால் செலுத்தப்பட வேண்டும்.

கொடுப்பனவுகள் பற்றிக் கீழ்க் குறிப்பிடப்படும் நடவடிக்கை முறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

1. மாதாந்தம் சமகாலப்படுத்தப்படுகின்ற இரண்டு கோடுகளைக் கொண்ட நிதி ஏடொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.. மாதாந்த வங்கி ஒப்பீட்டுக் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும்..
2. வரவு செலவு அறிக்கைக் குழு கூடும் சந்தர்ப்பங்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
3. வருட ஆரம்பத்திற்கு முன்பு வருடாந்த உத்தேசத் திட்டமொன்றும் வரவு செலவு மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டு வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளல்.
4. சகல கொடுப்பனவுகளும் பொது 35 வவுச்சர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு கொடுப்பனவும் பொருளாளரால் சிபார்சு செய்யப்பட்டு தலைவரினால் அனுமதிக்கப்பட வேண்டும்.
5. சகல கொடுப்பனவுகளும் செலவேட்டில் பதியப்படல்.
6. சகல வரவுகளுக்கும் சீ 100 இரசீது பத்திரமொன்று விநியோகிக்கப்பட வேண்டும்.
7. சகல கொடுப்பனவுகளுக்கும் முகாமைத்துவ சபையின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளல்.
8. மத்திய நிலையத்தின் சகல கொடுக்கல் வாங்கலும் அரச வங்கியொன்றில் கணனி வள நிலையத்தின் பெயரில் நடைமுறைக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட வேண்டும்.
9. கிடைக்கும் சகல வரவுகளும் (கையிருப்புப் பணம் தவிர்த்து) 03 தினங்களுக்குள் வங்கியிலிடப்பட வேண்டும்.
10. காசோலை மூலம் கொடுப்பனவுகள் செய்யும்போது குழுவின் பொருளாளர் தலைவர் ஆகியோர் கையொப்பமிடல்.
11. வருட இறுதியில் கொடுப்பனவுகள் பற்றிய இறுதிக் கணக்கைத் தயாரித்தல்.

விரிவுரைகள் சேவைகளுக்கான கொடுப்பனவுகள்

1. மத்திய நிலைய முகாமையாளருக்கு நிர்வாக நடவடிக்கைகளுக்காக 500/= மத்திய நிலைய நிதியிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.
2. அனுமதிக்கப்பட்ட பாடநெறிகளினால் கிடைக்கும் வருமானத்தின் 30% வீதத்தைக் கூடிய மட்டத்தில் விரிவுரைகளுக்காகச் செலவிடலாம்.
3. விரிவுரைக் கொடுப்பனவுகள் பெற்றுக் கொள்ளக்கூடியது பாடசாலை வேளையின் பின்பும் வார இறுதித் திகதிகளின் சேவைகளுக்கு மாத்திரமே.
4. விரிவுரையாளர்களின் வரவு செல்லல் பதிவு செய்யப்படுவதற்காக வரவு இடாப்பொன்று நடைமுறைப்படுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஒருவருக்கு வாரத்தின் வேலை செய்யும் நாளொன்றிற்கு 3 மணித்தியாலங்களும் அரசாங்க விடுமுறை தினங்கள் 04 மணித்தியாலங்களுக்குக் கொடுப்பனவுகள் பெற்றுக் கொள்ள முடியும். குறிப்பிட்ட மணித்தியாலங்களுக்கு மேல் செய்யப்படும் விரிவுரைகளைப் பற்றிய மணித்தியாலங்கள முகாமைத்துவக் குழுவினால் அனுமதிக்கப்பட வேண்டும்.

6. சகல பாடநெறிகளும் ஆரம்பிக்கப்பட முன்பு சகல விவரங்களும் (மணித்தியாலங்கள் விரிவுரையாளர்களின் செலவு விரிவுரை மணித்தியாலங்கள்) என்பன பற்றிய விவரமான மதிப்பீடுகள் பற்றிய அறிக்கை தயாரிக்கப்பட்டுக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

7. விரிவுரைகளில் வெளிவாரி விரிவுரையாளர்கள் சம்பந்தப்படுவதாயின் கீழ்க் குறிப்பிடப்படும் வகையில் கொடுப்பனவுகளை வழங்கல். (நாளொன்றுக்கு 03 மணித்தியாலங்களுக்கு)

- பல்கலைக் கழக விரிவுரையாளர்களுக்கு விரிவுரைக்கு மணித்தியாலமொன்றிற்கு 400/= ரூபா.
- நாடளாவிய சேவை மற்றும் அதற்குச் சமமான சேவைகளின் 1 ஆம் வகுப்பு உத்தியோகத்தர்கள் அல்லது திணைக்களத் தலைவர்கள் அல்லது கலாநிதிப்பட்டம் பெற்றவர்கள் ஆகியோருக்கு 01 மணித்தியால விரிவுரைக்கு மணித்தியாலமொன்றிற்கு 300/= ரூபா.
- ஆசிரிய ஆலோசகர்கள்./கைத்தொழில் உத்தியோகத்தர்கள் அல்லது மேற்கூறப்பட்ட உத்தியோகத்தர் அல்லாதவர்களுக்கு விரிவுரைகளுக்கு மணித்தியாலமொன்றிற்கு 250.00/= ரூபா. வீதம்.

<u>பொது அறிவுறுத்தல்கள்</u>

1. மத்திய நிலையத்தின் சகல ஆவணங்களும் இனிமேல் நடைபெறவுள்ள கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு ஏற்ற முறையில் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளப்பட வேண்டும்.
2. மத்திய நிலையத்திற்குக் கிடைக்கும் சகல சாமான்களும் பதிவுப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டிருத்தல்.

கணனி விஞ்ஞான கூடங்களின் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும்போது இனிமேல் இச்சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு இத்தால் வலியுறுத்துகிறேன்.

வைத்திய டாரா டி மெல்.
செயலாளர்,
கல்வி அமைச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுநிருப இலக்கம்: 1997/19

எனது இல: ஆங்/1/55/97,
ஆங்கிலக் கல்விக் கிளை,
கல்வி, உயர்கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பத்தரமுல்ல.
1997.10...08...ஆந் திகதி.

சகல மாகாணச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,

<u>ஆங்கில மொழியில் உயர்ந்த தகைமையைப் பெற்றுக்கொள்வதில் ஆங்கில ஆசிரியர்களை ஊக்குவிப்பதற்காக ஊக்குவிப்புக் கொடுப்பனவுத் திட்டம் ஒன்றை ஏற்படுத்துதல்.</u>

இன்று பாடசாலைகளில் கடமையிலீடுபட்டுள்ள ஆங்கில ஆசிரியர்களில் அதிகமானோர் க.பொ.த.(சா.த) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் திறமைச்சித்தி பெற்றவர்கள் என்ற தகைமை அடிப்படையில் சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆங்கில ஆசிரியர் ஒருவருக்கு ஆங்கில மொழித்தேர்ச்சி இல்லை என்பது தெளிவாகியுள்ளது. எனவே ஆங்கில மொழியில் உயர்ந்த கல்வித் தகைமைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு ஆசிரியர்களை ஊக்குவிப்பதற்காக அவ்வாறு தகைமை பெறும் ஆங்கில ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுத் திட்டம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

02. அதற்கமைய 1997.07.01 ஆம் திகதியின் பின் இங்கே கீழே காணப்படும் தகைமைகளைப் பெற்றுக்கொள்ளும் ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி தயவுடன் கேட்டுக்கொள்கிறேன். இவ்வூக்குவிப்புக் கொடுப்பனவு சேவைக்காலத்தின் ஒருமுறை மாத்திரம் வழங்குவது என்ற அடிப்படையில் நடைபெற வேண்டும் என்றும் அறியத்தருகின்றேன்.

01. க.பொ.த.(உ.த) பரீட்சையில் ஆங்கிலமொழியில் சித்தியடையும் ஆங்கில ஆசிரியர்களுக்கு ரூபா 5,000/-.

02. க.பொ.த.(உ.த) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் திறமைச்சித்தி பெறும் ஆங்கில ஆசிரியர்களுக்கு ரூபா 5,500/-.

03. க.பொ.த.(உ.த) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் விசேடசித்தி பெறும் ஆங்கில ஆசிரியர்களுக்கு ரூபா 10,000/-.

04. முதல் பட்டப்பரீட்சையில் ஆங்கிலமொழிப் பாடத்தில் சித்திபெறும் ஆங்கில ஆசிரியர்களுக்கு ரூபா 12,500/-.

05. ஆங்கில மொழியுடன் பட்டப்பரீட்சையில் சித்தியடையும் ஆசிரியர்களுக்கு ரூபா 20,000/-.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06: விசேச ஆங்கிலப் பட்டதாரிப் பரீட்சையில் கௌரவப் பட்டம் பெறும் ஆங்கில ஆசிரியர்களுக்கு ரூபா 25,000/-.

03. மேற்குறித்த ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக விசேசமான நிதி ஒதுக்கீடு செய்யப்படமாட்டாது. ஆசிரியர் சம்பளத்திற்காக ஒதுக்கப்படும் நிதியிலிருந்து தேவையான தொகையை பெற்றுக்கொள்ளும்படி தயவுடன் அறியத்தருகின்றேன்.

சேனாநாயக்க உபசேன,
மேலதிகச் செயலாளர் (நிர்.).

ஒப்பம்: எம்.டீ.டீ.பீரிஸ்,
கல்வி, உயர்கல்விச் செயலாளர்.

பிரதிகள்:

1. மாகாண ஆளுனர் செயலாளர்கள்.
2. மேலதிகச் செயலாளர் (கல்வி அபிவிருத்தி) கல்வி, உயர்கல்வி அமைச்சு.
3. பிரதம கணக்காளர், கல்வி, உயர்கல்வி அமைச்சு.
4. கணக்காய்வாளர்.
5. பி.க.ப.நா. (ஆங்கிலம்) கல்வி, உயர்கல்வி அமைச்சு.
6. சிரேஷ்ட உதவிச் செயலாளர்/தொழிற்றொடர்பு.
   தொழிற்சங்கங்களுக்கு வழங்குவதற்காக 30 பிரதிகள் அனுப்பப்படுகின்றன.
7. ஆங்கிலம் பற்றிய பி.க.பணிப்பாளரும், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்.
8. கணக்காய்வு அதிகாரி - மத்திய களஞ்சியம்.

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல 30/96(1)

எனது இல தா/IV/2/2/1(3)
2003 டிசெம்பர் 26

அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

**<u>ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு புறம்பாக அரச சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அலுவலர்களுக்கு 55 வயதுக்கு மேல் சேவை நீடிப்பு வழங்குதல்.</u>**

மேற்படி விடயத்துடன் தொடர்பான 2003-12-16 திகதிய 30/96(1) இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் ஆங்கில மொழிபெயர்ப்பில் 1 (a) பந்தியின் தொடக்கத்தில் குறிப்பிட்டுள்ள "After" என்ற சொல் "Allow" என சரியாதல் வேண்டும் என்பதை தயவுசெய்து குறித்துக்கொள்ளவும்.

ஒப்பம்: எஸ்.ஜீ.மானப்பெரும
செயலாளர்
அரசாங்க நிர்வாக முகாமைத்துவ,
மறுசீரமைப்பு அமைச்சு.

ஒப்பம்: பி.ஜீ.கருணாரட்ன
தாபனப் பணிப்பாளர் நாயகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இலக்கம் : பொ. நி. 5/31

கல்வி சேவை அமைச்சு,
இசுருபாய,
பத்தரமுல்ல

1988. மார்ச் 14.

சகல பிரதேசக் கல்விப் பணிப்பாளர்கள்,
பிரதம கல்வி உத்தியோகத்தர்கள்.

### பழுதடைந்த பாட நூல்கள்

தங்களது பிரதேசத்திற்குரிய பாடசாலைகளிலிருந்து சேகரிக்கப்படும் பழுதடைந்த புத்தகங்கள் இறுதியாகப் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் அவற்றை வகைப்படுத்தி பின்னர் அவற்றைப் பெற்றுக் கொள்ள விருப்பமான மாணவர்கள் பாடசாலையில் இருப்பின் அவர்களுக்கு அந்த பழுதடைந்த புத்தகங்களைப் பெற்றுக் கொள்ள அனுமதி வழங்கப்பட வேண்டும். பழுதடைந்த புத்தகங்களை மாணவர்கள் பெற்றுக் கொள்ள இடமளிக்க முன்னர் அது சம்பந்தமாக அப்புத்தகங்களைப் பெற்றுக் கொள்ள விருப்பமான மாணவர்களிடமிருந்து எழுத்து மூல அறிக்கை பெற்றுக்கொள்ளவும் வேண்டியதுடன் அதனை அதன் மூலம் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும்.

02. அது சம்பந்தமாக அதிபர்கள் கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு செயற்பட வேண்டும். அதிபர் பாடசாலையில் பொறுப்பான வேறு ஆசிரியர் ஒருவர் பாடசாலை அபிவிருத்தி சங்க உத்தியோகத்தர் உள்ளடங்கலாக மேற்பார்வை சபையினால் மீதமாக இருக்கும் புத்தகங்கள் சேதமடைந்த புத்தகங்கள் என உறுதியளிக்கப்பட வேண்டும். (இவ்வுறுதியை பழுதடைந்த புத்தகம் விபரமடங்கிய கோவையில் உள்ளடக்கவும்). அவ்வாறு தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் பாடசாலை அமைந்திருக்கும் மாகாணம் அல்லது பாடசாலைக்கு அண்மித்த மாகாணங்களில் அல்லது கடதாசிச் சபையினால் நியமிக்கப்பட்டிருக்கும் பழுதடைந்த புத்தகங்கள் கடதாசி போன்றவற்றைக் கொள்வனவு செய்யும் பிரதிநிதி மற்றும் மாகாணக் கடதாசி கொள்வனவு செய்பவர்களிடமிருந்து பதிவுத் தபாலில் விலை மனுக்கள் கோரப்பட்டு அதிக விலை வழங்கும் பிரதிநிதிக்கு பழுதடைந்த புத்தகங்கள் விற்பனை செய்யப்பட வேண்டும். பழுதடைந்த புத்தக விற்பனை மூலம் பெறப்படும் பணம் அரச கணக்கில் வைப்பிலிட வேண்டும்.

03. இலவசமாக விநியோகிக்கப்படும் பாடசாலைப் புத்தகங்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும் இணைப்பு உத்தியோகத்தர்கள் சேதமடைந்த புத்தக விற்பனை தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள நியமிக்கவும். அவ்வவ் பாடசாலைகளினால் கடதாசித் தயாரிப்புச் சபைப் பிரதிநிதிகளுக்கு மேற் கூறப்பட்டவாறு விற்பனை செய்யப்படும் பழுதடைந்த புத்தகங்கள் சம்பந்தமாக சகல விபரங்களும் இணைப்பு உத்தியோகத்தர்களுக்கும் உரிய அதிபர்களினால் அறிவிக்கப்பட வேண்டியுள்ளதுடன் அவ் விபரங்கள் இணைப்புத்தியோத்தர்களினால் தமது அலுவலகங்களினால் கோவைப்படுத்தி வைத்திருக்க வேண்டும். (அப்போது விற்பனை செய்யப்படும் பழுதடைந்த புத்தகங்கள் எதுவென்றும் எவ்வளவு தொகை விற்பனை செய்யப்பட்டது என்பதும் விற்பனை செய்யப்பட்ட பிரதிநிதியின் பெயர், விலாசம், விற்பனை மூலம் பெறப்பட்ட பணம் என்பன இணைப்புத்தியோத்தருக்கு தேவைப்படும் பட்சத்தில் அல்லது கணக்காய்வுப் பிரிவுக்கு அல்லது அமைச்சுக்கு அனுப்ப முடியுமானதாக இருக்க வேண்டும்.

04. நியமிக்கப்படும் இணைப்புத்தியோகத்தருக்கு பழுதடைந்த புத்தக விற்பனை சம்பந்தமாக கடமைக்காகவும், மேலதிக பிரயாண செலவுக்காகவும் கொடுப்பனவுகள் தேவைப்படின் தயவு செய்து இது சம்பந்தமாக தங்களது பரிந்துரையை வழங்கவும்.

எம். பி. சீ. சில்வா,
கல்விச் சேவை செயலாளர்.

*பிரதி:*

1. கல்வி வெளியீட்டு ஆணையாளர்
2. கல்வி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு
3. கணக்காய்வாளர் நாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இல- தா7/3/1/31
அரசாங்க நிர்வாக ,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு. ,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07
2005.05. 31

அமைச்சுக்களின் செயலாளர்கள்,,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்.

**தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 11 ஆம் பிரிவை திருத்துதல் - சொத்துக்கடன்**

சொத்துக்கடன்களை வங்கிகளின் முலம் வழங்குவதற்கு உரிய புதிய ஏற்பாடுகளை தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 11 ஆம் பிரிவுக்கு பதிலீடு செய்து வெளியிடப்பட்டுள்ள 2005.03.31 ஆம் திகதிய 8/2005 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 11:4 ஆம் பிரிவின் 11:4:1 ஆம் உட்பிரிவு பின்வருமாறு திருத்தப்பட்டுகிறது,

" 11:4 கடன் அளவு

11:4:1 அலுவலர் உரித்தடையத் தக்க ஆகக்கூடிய கடன் தொகை அலுவரின் படிகள் தவிர்ந்த 05 ஆண்டு திரட்டிய சம்பளம் அல்லது 20 இலட்சம் ருபா ஆகிய இரண்டில் எது குறைகின்றதோ அவ்வாறு குறையும் கடன் தொகை ஆகும்."

02. இச் சுற்றறிக்கை திறைசேரியின் இணக்கத்துடன் வெளியிடப்படுகிறது

ஒப்பம்/ டி. திசாநாயக்க
செயலாளர்
அரசாங்க நிர்வாக
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரசாங்க நிர்வாகச் சுற்றிக்கை:12/2005

எனது இலக்கம் : தா7/4/1/22
அரசாங்க நிர்வாக,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு.07
2005. மே மாதம் 18 ஆந் திகதி

அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

## 2005 ஆம் ஆண்டின் வரவுசெலவு திட்டத்தில் அரச அலுவலர்களுக்காக உத்தேசிக்கப்பட்ட புதிய காப்புறுதி திட்டத்தைத் ஸ்தாபித்தல். (அக்ரஹாரா)

2005 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டப் பிரேரணைகள் மூலம் அரசாங்க அலுவலர்களுக்கு சமமானதும் அதிக நலன்கள் உடையதுமான காப்புறுதித் திட்டமொன்றை ஏற்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

2. அதன்படி 1997.01.31 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் /97 இற்கும் மற்றும் அதனுடன் தொடர்புடையதாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்குப் பதிலாக பின் குறிப்பிடப்படும் பங்களிப்புக் காப்புறுதித் திட்டம் 2005.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும்.

3. இக் காப்புறுதித் திட்டம் பின் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 03 பிரிவுகளைக் கொண்டிருக்கும்.

I. மருத்துவக் காப்புறுதித் திட்டம்
II. தனிநபர் திடீர் விபத்துக்கள் மற்றும் இயற்கை மரணங்கள் தொடர்பான காப்புறுதி
III. கடன் உறுதியளிப்புக் காப்புறுதி.

4. **தகைமைகள்**

நிரந்தர ஓய்வூதியமுடையதும்/பங்களிப்பு ஓய்வூதியமுடையதுமான பதவிகளில் இருக்கும் அரசாங்க மற்றும் மாகாண அரச சேவையில் உள்ள சகல அலுவலர்களும் இதற்குத் தகைமை பெறுவார்கள்.

5. **தவணைக் கட்டணம் செலுத்துதல்**

1. அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க சேவையில் உள்ள சகல அலுவலர்களும் இப் பங்களிப்புக் காப்புறுதித் திட்டத்திற்கு பங்குகொள்ளுதல் அத்தியாவசியமாகும். அதற்காக அவர்களது மாதாந்தச் சம்பளத்தில் ரூ.75% வீதமான தவணைக் கட்டணம் அறவிடப்படுவதுடன், அத் தவணைக் கட்டணம் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. அரசாங்கம் ஒரு அலுவலருக்காக மாதாந்தம் 69/- ரூபாவை மாதாந்தம் உதவு தொகையாக செலுத்தும்.

111. இக் காப்புறுதித் திட்டத்தில் பங்களிப்புச் செய்துள்ள அரச அலுவலர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வருடாந்தம் அரசினால் செலுத்தப்படும் மொத்த உதவு தொகையை மாதாந்த தவணைக் கட்டணமாக திறைசேரியினால் வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்துதல் வேண்டும்.

1V. ஒவ்வொரு நிறுவனத்தினாலும் வரையறுக்கப்பட்ட காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு மாதாந்தம் அனுப்பப்படுகின்ற தவணைக் கட்டணத் தொகைகள், அங்கத்தவர்களின் எண்ணிக்கைகள் என்பன தொடர்பான அறிக்கைகள் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

## 06. நலன்கள்

மருத்துவக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் கிடைக்கும் நலன்கள் இணைப்பு (1) இன் பகுதி 1 இலும், தனிநபர் திடீர் விபத்துகள் மற்றும் இயற்கை மரணங்கள் தொடர்பான காப்புறுதியின் நலன்கள் பகுதி 11 இலும், கடன் காப்புறுதியின் நலன்கள் பகுதி 111 இலும் காட்டப்பட்டுள்ளது.

அலுவலர் சட்டவிரோதமற்ற செயற்பாடொன்றில் ஈடுபடும் போது திடீர் விபத்துகளுக்குள்ளானால் மாத்திரமே தனிநபர் திடீர் விபத்துகள் காப்புறுதி மற்றும் கடன் உறுதியளிப்புக் காப்புறுதி உரித்துக்களை பெறுவர். பணிநீக்கம் செய்தல்/ வெளிநாட்டு லீவுகளைப் பெறுதல், (கடமையின் பொருட்டு வெளிநாட்டு லீவுகளை தவிர்த்து) சம்பளமற்ற லீவுகளை பெறுதல்/ வெளிநாட்டுத் தொழிலொன்றில் ஈடுபடுதல்/ இராஜினாமாச் செய்தல், அல்லது சேவையை வெறிதாக்குதல் போன்ற சந்தர்ப்பங்களில் தனிநபர் திடீர் விபத்துக்கள் காப்புறுதி மற்றும் கடன் உறுதியளிப்புக் காப்புறுதிக்கான உரித்துக்களைப் பெறுவதற்கு உரித்தற்றவராவர்

சம்பளமற்ற உள்நாட்டு லீவுகளைப் பெறும் அலுவலர்கள் தவணைக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு பொருத்தமான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தால் மட்டுமே அவர்களுக்கு உரித்துகள் வழங்க முடியும்.

## 07. காப்புறுதித் திட்டத்தின் கீழ் நலன்களைப் பெறுதல்.

I. மருத்துவமனையில் அனுமதிக்கப்படுமிடத்து அல்லது திடீர் விபத்தொன்று ஏற்படுமிடத்து அல்லது இயற்கை மரணமொன்று நிகழுமிடத்து 07 நாட்களுக்குள் அதைப்பற்றித் திணைக்களத் தலைவருக்கு அறிவித்தல் வேண்டும். சகல மருத்துவக் கட்டணங்களும் மருத்துவமனைப் பற்றுச்சீட்டுகளும் உரிய சகல நலன்களும் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டு திணைக்களத் தலைவர் ஊடாக ஒரு மாதத்திற்குள் வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பிரதேச அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். உரிய விண்ணப்பத்திற்கு பற்றுச்சிட்டுக்களின் மூலப் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்.

II. வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் வாரத்தில் வேலை செய்யும் 10 நாள்களுக்குள் இந் நலன்களை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

III. நோயாளர் மருத்துவமனையொன்றில் தங்கியிருந்து சிகிச்சைப்பெறின் வீட்டுக்கு அழைத்து வருவதற்கு முன்பு பின் குறிப்பிடப்படும் தொலைபேசி இலக்கங்களுக்கு கட்டாயமாக அறிவித்தல் வேண்டும்.

011-2357357
011-2357000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IV. முதன் முறையாக நலன்களை பெறுவதற்காக விண்ணப்பிக்கும் போது திணைக்களத் தலைவரினால் அண்மையில் சான்றுப்படுத்தி பெற்றுக் கொண்ட பாஸ்போர்ட் அளவிலான புகைப்படம் ஒன்றினை வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

**பொய்யான ஆவணங்களை சமர்ப்பித்தல்**

1. எவரேனுமொரு அலுவலர் பொய்யான பற்றுச்சீட்டுப் (பில்) பத்திரங்களையோ அல்லது மருத்துவச் சான்றிதழ்களையோ சமர்ப்பித்திருப்பின் வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அது தொடர்பான அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அறிவித்தல் வேண்டும்.

II. அவ் அறிக்கைகளின்படி, அங்கத்தவருக்கு உரிய திணைக்களத் தலைவர் ஊடாக, அவருக்கெதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதற்கு அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுக்கும்.

III. அலுவலர் குற்றவாளியாக கருதப்படுவாரானால், தாபன விதிக்கோவையின் தொகுதி 11 அத்தியாயம் XLVIII இன் ஏற்படுகளுக்கும், தண்டனைச் சட்டக் கோவையின் ஏற்பாடுகளுக்கும் அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

எவரேனுமோர் அலுவலர் அரச சேவையிலிருந்து இராஜினாமாச் செய்தல் ல்லது இளைப்பாறுதல் அல்லது பதவி வெறிதாக்குதல் அல்லது பணிநீக்கம் செய்தல் கிய எந்தவொரு முறையிலாவது அரச சேவையில் இருந்து விலகியிருந்தால் இக் ப்புறுதி நலன்களை இழப்பதற்கு ஆளாவர். அவ்வாறான அலுவலர்கள் தொடர்பான றிக்கையினை தாமதமின்றி வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் ட்டுத்தாபனத்திற்கு அனுப்பி வைப்பதற்கு திணைக்களத் தலைவர் நடவடிக்கை எடுத்தல் பண்டும்.

. வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் மாதாந்தம் ாளிப்புச் செய்யப்படும் செலவு அறிக்கைகள், அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் மைச்சு பொதுத்திறைசேரிக்கு மூன்று மாதங்களுக்கொரு முறை சமர்ப்பிப்பதற்கு ‗வக்கை எடுத்தல் வேண்டும்.

. ஏற்கனவே உள்ள அக்ரஹார காப்புறுதித் திட்டத்தின் கீழ் அரசாங்க லுவலர்களின் கடன் காப்புறுதி உறுதியளிப்புகளைப் பிணையாக வைத்து பெற்றுக் காண்ட கடன் தொகையையும் இப் பங்கேற்புக் காப்புறுதித் திட்டத்தின் புதிய ற்பாடுகளின் கீழும் அவ்வாறே செயற்படும்.

:. 2005.05.01 ஆந் திகதி வரையில் நலன்களை பெற்றுக் கொள்வதற்கான உரிமைப் த்திரங்களைச் சமர்ப்பிப்பதற்கு 2005.08.01 ஆந் திகதி வரையிலான சலுகைக் காலமும் ரித்தாகும். அவ்வாறே நலன்களுக்கான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றவுடன் வற்றை இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிப்பதற்கு திணைக்களத் லைவர் தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ஒப்பம் : டி.திசாநாயக்க
செயலாளர்,
அரசாங்க நிர்வாக,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைப்பு 1**

பகுதி 1

மருத்துவக் காப்புறுதி திட்டம்

| | நன்மைகளின் வகுதி | எல்லை |
|---|---|---|
| 1 | மருத்துவமனைகள் மற்றும் தனியார் மருத்துவமனைக் கட்டணங்கள் | ரூ.21,000.00 நாளொன்றுக்கு அறைக் கட்டணம் ரூ.1500/படி |
| 2 | மருத்துவ நிபுணர் ஆலோசகர்களின் சிபாரிசுகளுக்கு இணங்க வழங்கப்படும் விசேட சிகிச்சையளிப்புக்கள், தாதி சேவைகள் மற்றும் மருத்துவமனைகள் என்பவற்றின் விசேட சிகிச்சையளிப்புகளுக்கான மருத்துவ மற்றும் சத்திர சிகிச்சை செலவுகளும், சத்திர சிகிச்சைக் கூடக் கட்டணங்களும், சத்திர சிகிச்சையளிப்புகளுக்கான சத்திர சிகிச்சை மற்றும் மயக்கமூட்டல் மருத்துவர்களின் கட்டணங்கள் | ரூ.50,000.00 (ஒரு குடும்பக் கூறுக்காக) |
| 3 | ஏற்றுக் கொள்ளப்பட்ட மருத்துவரொருவரின் அல்லது மருத்துவ சேவை கட்டளைச் சட்டம் 41 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட மருத்துவரொருவரின் பரிந்துரைகளின்படி மருத்துவமனையொன்றில் அல்லது தனியார் மருத்துவமனையொன்றில் தங்கியிருந்து சிகிச்சைப் பெறுகையில் செலவாகும் மருத்துவ ஆலோசனைச் சேவைகள் அல்லது மருத்துவ நிபுணர் கட்டணங்கள். | ரூ.15,000.00 (ஒரு குடும்பக் கூறுக்காக) |
| 4 | நுணுக்கமான சிகிச்சையளிப்புகள் கதிர் ஒளிகள், ரேடியம் பரிசோதனைகள், மற்றும் சிகிச்சையளிப்புகள் மின்சிகிச்சையளிப்புகள், தேக சிகிச்சையளிப்புகள் உட்பட நிபுணர் சேவை கட்டணங்கள். | ரூ.20,000.00 (ஒரு குடும்பக் கூறுக்காக) |
| 5 | மேலே 1லிருந்து 4 வரையிலான நலன்கள் உரித்தாகும் ஒருநபரின் திடீர் நோயொன்றின் போது அவரது உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக வதிவிடத்திலிருந்து மிக அண்மையிலுள்ள அரசாங்க மருத்துவமனைக்கு அல்லது தனியார் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல நேரிடின் பிரயாணக் கட்டணங்களுக்காக. | ரூ.1500.00 (ஒரு குடும்பக் கூறுக்காக) |
| 6 | மேலே குறிப்பிடப்பட்ட இலக்கம் 01 லிருந்து 05 வரையிலான சந்தர்ப்பங்களுக்கு<br>(அ) ஒரு சந்தர்ப்பத்திற்கு ஆகக் கூடியது<br>(ஆ) ஒரு வருடத்திற்கு ஆகக்கூடியது | ரூ.100,000.00<br>ரூ.150,000.00<br>(வாழ்க்கைத் துணையும் அரச சேவையில் ஈடுபட்டிருப்பின் ரூ.300,000.00 நலன்கள் உரித்தாகும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 7 | இலங்கை மருத்துவ சபையில் பதியப்பட்டிருக்கும் அங்கத்தவர்களுக்காக மட்டுமே கண் தொடர்பான விசேட மருத்துவரொருவரின் விதப்புரையின் பேரில் 03 வருடங்களுக்கொரு தடவை மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளுதல் | ரூ.3,500.00 |
| 8 | அரசாங்க மருத்துவமனையொன்றில் அல்லது ஆயுர்வேத மருத்துவமனையொன்றில் தங்கியிருந்து சிகிச்சைப் பெறின் அவ் அங்கத்தவர்களுக்காக வழங்கும் கட்டணம் | ரூ. 5000.00 (நாளொன்றுக்கு ரூ.500/-படி) |
| 9 | 1. சாதாரணமான குழந்தை பிரசவம் அல்லது இயற்கை கருச்சிதைவுக்குள்ளான தனியார் அல்லது அரச மருத்துவமனையொன்றில் தங்கியிருந்தால் முழு வாழ்விலும் ஆகக் கூடியது இரண்டு தடவைகளுக்கு வழங்கும் கட்டணம்<br>11. அங்கத்துவம் பெற்றுள்ள பெண் அலுவலருக்காக தனியார் மருத்துவமனையொன்றில் நிகழ்கின்ற ஒரு குழந்தை பிறப்புக்காக முழு வாழ்விலும் இரு தடவைகள் வழங்கும் கட்டணம் | நாளொன்றுக்கு ரூ.500/-படி ஆகக்கூடிய 05 நாட்களுக்கு<br>நாளொன்றுக்கு ரூ.1,000.00 படி ஆகக்கூடிய 05 நாள்களுக்கு |
| 10 | 1. குறிப்பிடப்படும் இருதயத்துடன் சம்பந்தப்பட்ட சத்திர சிகிச்சைகளுக்குள்ளாகும் அங்கத்தவர்களுக்கு மீளளிப்புச் செய்யும் ஆகக் கூடிய தொகை (ஆகக் கூடிய)<br>1. Heart Attack - (Myocardial Infaraction)<br>2. Coronary Artery Disease ( Coronary by-pass Surgery)<br>3. Stroke (Cerebra Vascular Accident)<br>11. பின்குறிப்பிடப்படும் சத்திர சிகிச்சைகளுக்குட்படும் அங்கத்தவர்களுக்கு வழங்கும் (ஆகக் கூடிய தொகை)<br>1. Cancer<br>2. Rental Failure<br>3. Major Organ Transplant, such as lung or bone marrow, However this benefit will not be paid to a doctor of a major organ<br>4. Paralysis<br>5. Multiple Sclerosis<br>6. Primary Pulmonary Arterial Hypertension<br>7. Fulminate Hepatitis | ரூ.350,000.00<br>ரூ.100,000.00 |

குடும்ப அலகு

திருமணமான அலுவலர்கள் :- அங்கத்தவர், வாழ்க்கைத்துணைவர் மற்றும் தொழிலற்ற திருமணமாகாத அத்துடன் தங்கிவாழும் 21 வயதுக்கு குறைந்த பிள்ளைகள்

திருமணமாகாத அலுவலர்கள்:- அங்கத்தவர் மற்றும் 70 வயதுக்கு குறைந்த அங்கத்தவர்களின் பெற்றோர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி 2

## தனிநபர் திடீர் விபத்துகளுக்கான பாதுகாப்பளிப்புகள்/இயற்கை மரணங்களின் காப்புறுதி

அரச சேவையில் மாகாண அரச சேவையில் நிரந்தர ஓய்வூதியம் உரித்துடைய/ பங்களிப்பு ஓய்வூதியம் உரித்துடைய சகல அலுவலர்களும் 24 மணித்தியாலங்கள் பூராகவும் இக் காப்புறுதி திட்டத்தின் பாதுகாப்பளிப்பதற்கு உட்படுவர்.

### கிடைக்கும் நலன்கள்

| | |
|---|---|
| 1. காப்புறுதித் திட்டத்திலான பாதுகாப்பளிப்பு | நாளொன்றின் 24 மணித்தியாலங்கள் பூராகவும் |
| 11. உச்ச வயதெல்லை | 60 வயது வரை |
| 111. பாதுகாப்பளிப்புப் பணம் | ரூ.600,000.00 திடீர் விபத்தொன்றில் மரணம் ஏற்பட்டால் அல்லது நிரந்தர முழுமையான செயவிழப்புக்கு உள்ளானால் பாதுகாப்பளிப்பு பணத்தில் தங்கி வாழ்பவர்களிடையே பகிர்ந்தளிக்கப்படும். |
| 1V. செலுத்தப்படும் தொகை | ரூ.600,000.00 |

அ. நிரந்தர செயலிழப்பு

| | |
|---|---|
| திடீர் விபத்தொன்றினால் ஏற்பட்ட மரணத்தின் போது அல்லது நிரந்தரமாக முழுமையான செயலிழப்பின் போது | மொத்த பங்களிப்பு பணம் |

ஆ. நிரந்தர பகுதியளவிலான செயலிழப்பு

| | |
|---|---|
| காலென்றை இழத்தல் ,கண்ணொன்றை இழத்தல், கையொன்றை இழத்தல் போன்ற நிரந்தரமான பகுதியளவிலான செய்லிழப்பின் போது | பாதுகாப்பளிப்புப் பணத்தில் 50% |

இ. தற்காலிக முழுமையான செயலிழப்பு

1. 52 கிழமைகளுக்காக - கிழமையொன்றிற்கு ரூபா.300/படி

ஈ தற்காலிக பகுதியிலான செயலிழப்பு

1. 52 கிழமைகளுக்காக - கிழமையொன்றிற்கு ரூபா.200/படி

உ. இயற்கையாக ஏற்படும் மரணத்தின் போது ரூ.50,000/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடன் உறுதியளிப்புக் காப்புறுதி

தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் கீழ் அரசாங்க அலுவலர்களால் பெற்றுக் கொண்ட ஆதனக் கடன் தவிர ஏனைய பிணையாளர் ஒருவர் அல்லது பிணையாளர்கள் தேவைப்படும் சகல கடன் வகுதிகளும் இந்தக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் தற்சமயம் அரசுக்குச் சேர வேண்டிய கடன் தொகையை கடனாளிக்கு செலுத்த முடியாதவிடத்து அத் தொகைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் அரசுக்குச் செலுத்தப்படும் . இதன் கீழ் அலுவலர் ஒருவர் பிணை வைக்கத்தக்க ஆகக் கூடிய கடன் தொகையானது ரூ.6,000,000/- ஆகும்.

### நலன்கள்

1. கடன்பெற்றோர் நோய்வாய்ப்பட்டோ அல்லது விபத்தினால் அரைவாசி அல்லது முழுமையான செயலிழப்புக்கு உட்பட்டு ஜீவனோபாயத் தொழிலை இழந்தால் அல்லது உயிர் சேதத்திற்கு உள்ளானால் காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது கடன் தொகையின் மீதிப் பணத்தை அரசிற்கு செலுத்த வேண்டும் என்ற கட்டுப்பாட்டுக்கு உட்படுகிறது.

11. கடன் உறுதியளிப்புக் காப்புறுதியாக ஆகக் கூடிய தொகை ரூ. 600,000/ ஆவதுடன் அலுவலரின் சம்பளத்திற்கு ஏற்ப அவருக்கு உரிய கடன் தொகை தீர்மானிக்கப்படும்.

111. காப்புறுதித் தொகை - கடன் தொகையின் மீதி நிலுவை

1V. கடன் தொகையை மீளச் செலுத்துதல் மீளச் செலுத்தும் காலம் 55 வயதிற்கோ அல்லது சேவை நீடிக்கப்பட்டிருப்பின் 60 வயதிற்கோ மேற்படாது இருத்தல் வேண்டும்.

எஸ்/ B/L.1.M / 33 / 99
Post Master General Dept
Colombo - 00100
1999.06.03

சகல தபால் நிலைய அதிபர்களுக்கும்
உப தபால் நிலைய அதிபர்களுக்கும்

#### இலங்கையிலுள்ள பாடசாலைகளில் அதிபர் கணிக்கும் பொருட்டு மின்சாரப் பாவனைப் பட்டியல், முத்திரைகள் , தொலைபேசிப் பட்டியல் முதலானவற்றை கட்டுவதற்கான அனுமதி

இலங்கைப் பாடசாலை அதிபர்கள் தங்கள் பாடசாலைகளுக்கான மின்சார கட்டணத்தினையோ , முத்திரைகளையோ தொலைபேசிக் கட்டணங்களையோ செலுத்த கல்வித் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது. இது தொடர்பாக அதிபர்கள் தயாரித்த உறுதிச் சீட்டினை/பற்றுச் சீட்டினை தபாலதிபரோ உப தபாலதிபரோ கீழே உள்ளவாறு உறுதி செய்து கொடுக்க முடியும்.

உ+ம்

| |
|---|
| கட்டுகலை தேசிய பாடசாலை |
| தபால்முத்திரை 17.50 |
| ( ரூபா . 17.50) |
| கையொப்பம்........................ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ධුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.
[illegible] 2784832 2784807 2785617 ster
[illegible] 2784812 ctary
[illegible] 2785141-50 Fax: 2784846
[illegible]/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk
[illegible] No. ..........................................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education
"ඉසුරුපාය"
බත්තරමුල්ල.
"இசுருபாயா"
பத்தரமுல்ல.
"Isurupaya"
Battaramulla.

பாடசாலை செயற்பாட்டு மற்றும் தனியார் பாடசாலைக் கிளை

මගේ අංකය / எமது இல. / My No. ஈடி/1/12/1/1/27

දිනය / திகதி / Date 2005.05.10

சுற்றறிக்கை இல: 2005/18

சகல மாகாண பிரதம செயலாளர்கள்,
சகல மாகாண கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்.
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,
அதிபர்கள்,

## பாடசாலை நேரத்திற்குள் பணம் அறவிட்டு கற்பித்தல் நடவடிக்கைகளை ஒழுங்கு செய்வதை தடுத்தல்

இலவச கல்வியின் மூலம் மாணவர்களுக்கு பாடசாலை நேரத்திற்குள் எந்தவித கட்டணமும் அறவிடப்படாது கல்வியை வழங்குவதற்காக கல்வி அமைச்சு பொறுப்பாக உள்ளது. இந்நிலைமைக்கு சவால் விடுத்து பாடசாலை நேரத்திற்குள் ஒருசில பாடங்களை கற்பிப்பதற்காக பணம் அறவிடப்படுவதென்றும், அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு மேலதிகமாக வேறு நபர்கள் மூலம் இவ்வாறான கற்பித்தல் நடவடிக்கைகள் ஒழுங்கு செய்யப்படுவதாகவும், கல்வி அமைச்சிற்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

02. கல்வி நடவடிக்கைகளுக்காக அரசாங்கத்தினால் வசதிகள் செய்துகொடுக்கப்பட்டிருந்த போதிலும் பாடசாலை நேரத்திற்குள் எந்தப் பாடத்திற்காகவும் பாடசாலை மாணவர்களிடமிருந்து பணம் அறவிட்டு கற்பிப்பது இலவசக் கல்வியின் நோக்கத்திற்கு புறம்பானது என்பதனால் அவ்வாறு பணம் அறவிடப்படுமானால் உடனடியாக அந்நடவடிக்கையை இடைநிறுத்துமாறு வலியுறுத்துகிறேன்.

03. பாடசாலை நேரத்திற்குள் உரிய நேரசூசிக்கமைய கற்பிக்கும் போது மனிதவளம் இல்லாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் மாகாணக் கல்விப் பணிப்பாளரின் எழுத்துமூல அங்கீகாரத்துடன் ஒப்பந்த அடிப்படையில் ஆசிரியர்களை வரையறுக்கப்பட்ட காலத்திற்காக பயன்படுத்த முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் மாணவர்களிடமிருந்து பணம் அறவிடாது பாடசாலை அபிவிருத்தி சங்கங்களினூடாக அல்லது வசதிக் கட்டணம் ஊடாக அவ்வாசிரியர்களுக்கு கொடுப்பனவுகளைச் செய்யவேண்டும்.

04. கல்லூரிக்குள் ஏதாவதொரு பாடம் அல்லது பாடங்களை கற்பிப்பதற்காக ஆசிரியர்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் அவ்வாசிரிய வெற்றிடம் தொடர்பாக தாமதமின்றி மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அல்லது மேலதிக செயலாளர் (கல்வி பண்பூசார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தி) இற்கு அறிவித்து தேவைப்படும் ஆசிரியர்களைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும்.

05. மேலும் பாடசாலை நேரத்திற்குள் மாணவர்களை தனியார் வகுப்புக்களுக்கு செல்வதை தடுக்க அதிபரினால் நடவடிக்கை எடுக்கவேண்டியது அத்தியாவசியமாகும். இது சம்பந்தமாக இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட இலக்கம் 2004/14 மற்றும் 2004.05.13ம் திகதி கொண்ட சுற்றறிக்கை மீது தங்களது கவனத்தை ஈர்க்கச் செய்கிறேன்.

டாக்டர் தாரா டி மெல்
செயலாளர்,
கல்வி அமைச்சு.

பிரதி:

1. கல்வி அமைச்சின் சகல கிளைப் பொறுப்பாளர்கள்
2. தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம்
3. கல்வி வெளியீட்டு ஆணையாளர்
4. பரீட்சை ஆணையாளர் நாயகம்
5. தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர்

அஞ்சல் மா அதிபர் சுற்று நிருபம் 10 / 2004

அஞ்சல் மா அதிபர் அலுவலகம்
ட்ரான் ஸ்வேர்க் ஹவுஸ்,
கொழும்பு - 01
2004.04.06

அஞ்சல் அதிபர்களுக்கு
பிரதான அஞ்சல் அதிபர்
உப அஞ்சல் அதிபர்

**அரசாங்க திணைக்களங்கள் , காரியாலயங்களுக்கு முத்திரை வழங்கும் போது பற்றுச் சீட்டு வழங்கல்**

அரசாங்க திணைக்களங்கள் , அலுவலகங்கள் என்பன தங்களுக்கு தேவையான முத்திரைகளை பெற்றுக் கொள்ளும் போது செலுத்தும் பணத்திற்கான பற்றுச் சீட்டை வழங்கலாம். அதன்படி அதற்கான கொடுக்கல் வாங்கல் செய்யும் அதிகாரியால் கையொப்பம் காரியாலய முத்திரையுடன் திகதியும் இடப்பட்ட பற்றுச் சீட்டை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

அதிகாரி

அ.க/கே ,ஏ, எஸ் சேனாதீர
மேற்பார்வை

பிரதிகள்

1. தி,பொ. மா .ய உப அஞ்சல் அதிபர் அறிந்து கொள்வதற்காக
2. உப அஞ்சல் மா அதிபர் ( நிர்வாகம்) அறிந்து கொள்வதற்காக
3. அனைத்து மாவட்ட உப அஞ்சல் மா அதிபர்
4. பிரதான அஞ்சல் மா அதிபர்
5. அதிகாரிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் அமைச்சு
MINISTRY OF FINANCE AND PLANNING

17 JAN 2006

මහ ලේකම් කාර්යාලය, කොළඹ 01. செயலகம், கொழும்பு 01.The Secretariat, Colombo 01.

| | | |
|---|---|---|
| කාර්යාලය / அலுவலகம் / Office: 2484500, 2484600, 2484700 | ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-011-2449823 | වෙබ් අඩවිය / வெப்சைட் / Website: www.treasury.gov.lk |
| මගේ අංකය / எனது இல. / My No. | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date: 2006.01.09 |

சுற்றுநிருப இலக்கம் : 127

சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள்
மாகாணசபைத் தலைமைச் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள் ஆகியோருக்கு

அக்ரஹார காப்புறுதி சந்தாப் பணம்

தேசிய காப்புறுதிப் பொறுப்பு நிதியம் ஒன்றினைத் தாபிப்பது தொடர்பாக மாண்புமிகு ஜனாதிபதி அவர்களால் முன்வைக்கப்பட்ட பிரேரணை 2006.01.04 ம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2) குறித்த காப்புறுதிப் பொறுப்பு நிதியம் ஆரம்பமாக்கப்படும் வரை, 75/- வீதம் அறவிடப்படும் அரசாங்க உத்தியோகத்தர்களின் மாதாந்த அக்ரஹார காப்புறுதி சந்தாப் பணம் 2006 ஜனவரி மாதம் முதல் இலங்கை மத்திய வங்கியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள "திறைசேரிப் பிரதிச் செயலாளரின் இலக்கம் 4225 என்ற அரச அலுவலர்களின் காப்புறுதிக் கணக்கு" இல் மாத்திரம் இடும்படி வேண்டுகிறேன்.

3) உங்கள் நிறுவனத்தில் உள்ள சம்பந்தப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் இதனை உடனடியாக அறிவிக்கும்படி தயவாய் வேண்டுகின்றேன்

ஒப்பம்
எஸ். அபேசிங்க
திறைசேரியின் பிரதிச் செயலாளர்

பிரதிகள்
1) ஜனாதிபதியின் செயலாளர்
2) பிரதமரின் செயலாளர்
3) செயலாளர் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு
4) கணக்காய்வாளர் நாயகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை :12/2003

எனது இல: 11/309E 83/V
அரசாங்க நிர்வாக ,முகாமைத்துவ
மறுசீரமைப்பு அமைச்சு,
சுதந்திர சதுக்கம்.
கொழும்பு -07
2003.12. 11

சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

## மொழிபெயர்ப்பு, பேச்சுமொழிபெயர்ப்பு மற்றும் தட்டச்சிடுவதற்கான கட்டணங்களை திருத்தம் செய்தல்.

1996.07.19 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல 20/96 இல் குறிப்பிடப்பட்டுள்ள மொழிபெயர்ப்பு கட்டணங்களை அச் சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக பின்வருமாறு திருத்தி கொடுப்பனவு செய்வது அனுமதிக்கப்படுகிறது.

1 360 சொற்களைக் கொண்ட சட்ட, விஞ்ஞான அல்லது தொழில்நுட்பம் சார்ந்த ஆவணப் பக்கமொன்றுக்கு ரூபா 400/-

11 360 சொற்களை கொண்ட ஏனைய ஆவணப் பக்கமொன்றுக்கு ரூபா 300/-

2 2000.12.08 ஆந் திகதிய 18/2000 இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களை அச் சுற்றறிக்கையின் நிபந்தனைகளுக்கு அமைவாக பின் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தங்களை மேற்கொண்டு கொடுப்பனவு செய்வது அனுமதிக்கப்படுகிறது.

அ தட்டச்சிடப்படும் பக்கம் ஒன்றுக்காக,

1 360 சொற்கள் அல்லது அதைப்பார்க்க கூடியது -ரூபா 30/-
11 240 சொற்களில் இருந்து 359 சொற்கள் வரை -ரூபா 25/-
111 240 சொற்களுக்கு குறைந்தது -ரூபா 15/-

ஆ. ஸ்ரென்சில்கள் தட்டச்சிடுவதற்காக ஒரு பக்கத்திற்கு -ரூபா 35/-

2:1 மேற்படி தட்டச்சிடப்படும் கட்டணங்களை, கணனியில் அச்சிடுவதற்காகவும் செலுத்தலாம்.

3 பேச்சுமொழிபெயர்ப்புக்காக பின் குறிப்பிடப்படும் அடிப்படையில் கொடுப்பனவு செய்வ அனுமதிக்கப்படுகிறது.

| | | முதலாம் மணித்தியாலயம் | இரண்டாம் மணித்தியாலய | 2மணித்தியாலயங்ளுக்குமேற்படும் மணித்தியாலயம் ஒவ்வொன்றுக்கு |
|---|---|---|---|---|
| 1 | மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவன சபை கூட்டங்களின் பேச்சுக்களை ஒருங்கிணைவாக மொழிபெயர்த்தல். | ரூபா 500/- | ரூபா 350/- | ரூபா 200/- |
| 2 | விஞ்ஞான தொழில்நுட்ப கலை போதனைகளை ஒருங்கிணைவா மொழிபெயர்த்தல். | ரூபா 600/- | ரூபா 400/- | ரூபா 250/- |
| 3 | பொதுசனக் கூட்டங்களும் கலந்துரையாடல் களும் | ரூபா 300/- | ரூபா 200/- | ரூபா 100/- |

4 இத் திருத்தப்பட்ட கொடுப்பனவுகள் 2003 நவம்பர் மாதம் 01 ஆந் திகதி முதல் செய்ப்படும்.

கையொப்பம்/எச்.சீ.மான்னப்பெரும,
செயலாளர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍ය / அமைச்சர் / Minister } 784807 784832

ලේකම් / செயலாளர் / Secretary } 784811

කාර්යාලය / அலுவலகம் / Office } 785141-50 Fax: 784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : secedu@sltnet.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. } ....................

මානව සම්පත් සංවර්ධන, අධ්‍යාපන හා සංස්කෘතික කටයුතු අමාත්‍යාංශය

மனிதவள அபிவிருத்தி, கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு

Ministry of Human Resources Development, Education & Cultural Affairs

'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ බත්තරමුල්ල.

'இசுருபாய' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பத்தரமுல்ல.

"Isurupaya", Sri Jayawardhanapura Kotte Battaramulla

මගේ අංකය / எனது இல. / My No. } 4/ஆசே/தா2

දිනය / திகதி / Date } 2003.01. 28

சுற்றுநிருப இலக்கம்:4/பொநி/1/2003/01

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,

சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,

சகல மாகாண வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,

**1995 ஆம் ஆண்டில் நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கை கல்வி நிருவாக சேவையின் 111 ஆம் வகுப்புக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான வேதனக் கொடுப்பனவுகள்.**

1995 ஆம் ஆண்டில் நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாக சேவை 111 ஆம் வகுப்புக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் இலங்கை அதிபர் சேவைக்கெனக் குறித்துரைக்கப்பட்ட வேதனங்களைப் பெற்றுவந்துள்ளார்கள் என அறிக்கை செய்யப்பட்டுள்ளது. உண்மையாக இந்த உத்தியோகத்தர்கள் இ.க.நி.சே. வகுப்பு 111 இற்குக் குறித்துரைக்கப்பட்ட ஆரம்ப வேதனத்தைக் காட்டிலும் அதிக வேதனம் பெற்றுள்ளார்கள் என்று அறிய முடிகிறது.

02. ஆகையால் அதிகாரிகளால் இறுதித் தீர்வு எடுக்கப்படும்வரை இத்தகைய உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் ஏற்கனவே வகித்துவந்த பதவிகளில் பெற்ற வேதனத்தை அவர்களுக்குரிய வேதனமாகக் கொடுப்பதற்கு அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

03. அதன்படி இ.க.நி.சே.வகுப்பு 111இற்கு நியமனம் பெறுவதற்கு முன்பாக இலங்கை அதிபர்கள் சேவை வகுப்பு1, அல்லது வகுப்பு 2 தரம் 1இல் எது பொருத்தமோ அதற்கேற்றப்படி உத்தியோகத்தர்களுக்கு வேதனக் கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

S. Thillainadarajah

எஸ்.தில்லை நடராசா
மேலதிக செயலாளர்
கல்விச் சேவைகள் தாபனம்

ஒப்பம்: வி.கே.நாணயக்கார
செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல . 09/ 99

எனது இல 1/ 543ஈ/ 02டி/ 07
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு - 07.
1999.04.05

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்களுக்கும்,
திணைக்கள தலைவர்களுக்கும்,

**அரச சேவையிலிருந்து மாகாண அரச சேவைக்கு விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு மீண்டும் அரச சேவைக்கு வருவதற்கு சந்தர்ப்பமளித்தல்**

அரச சேவையிலிருந்து மாகாண அரச சேவைக்கு உத்தியோகத்தர்களை விடுவித்தல் தொடர்பான ஆலோசனைகள் அடங்கிய 56/89, 25/91, 26/91, 26/91 (1) ஆம் இலக்கங்களைக் கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளின் பால் உங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. அரச சேவையிலிருந்து மாகாண அரச சேவைக்கு விடுவிக்கப்பட்ட பதவி நிலை (நாடளாவிய சேவைகளுக்கு அப்பாற்பட்ட) மற்றும் பதவி நிலை அல்லாத தரங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மத்திய அரசின் பதவிகளுக்கு வருவதற்காக கோரும் போது பின்வரும் நிபந்தனைகளின் பேரில் அவர்களை அரச சேவையிலுள்ள வெற்றிடங்களில் நியமிக்கலாம்.

1. மாகாண அரச சேவையிலிருந்து விடுவிப்பதற்கும் அரச சேவையில் நியமனம் செய்வதற்கும் சம்பந்தப்பட்ட நியமன அதிகாரி உடன்படுதல் வேண்டும்.
2. உத்தியோகத்தர்கள் தொடர்ந்தும் அரச சேவையில் இருந்திருந்தால் அடையக்கூடியதாகவிருந்த சேவை முதுமுறையின் படி நியமனம் செய்தல்
3. தொடர்ந்து அரச சேவையில் இருந்திருந்தால் பெறக் கூடியதாக இருந்த பதவி உயர்வுகளையும் பார்க்க மேலான பதவி உயர்வுகள் மாகாண அரச சேவையில் இருக்கும் போது பெறப்பட்டிருந்தால் அத்தகைய பதவி உயர்வுகளைக் கைவிடல்
4. மேலே 2, மற்றும் 3, செயற்பட்டதால் சம்பளத்தில் ஏதேனும் திருத்தம் செய்ய நேரிட்டால் அதற்கு இணங்குதல்
5. மேலே 2, 3, மற்றும் 4 உள்ளடங்கக் கூடியதாக இணைப்பு 1 உடன் சத்தியப் பிரகடனமொன்றை சமர்ப்பித்தல்

03. அதன்படி சம்பந்தப்பட்ட மாகாண அரச சேவை ஆணைக்குழு உத்தியோகத்தரை விடுவிப்பதற்காக இணக்கம் தெரிவிக்கலாம்

ஒப்பம் பி.ஏ. சேனாரட்ன
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

---

அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல . 23/ 94

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு - 07.
1994.06.17

செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள் அனைவருக்கும்,

**அரசாங்க சேவைக்கு ஆட்சேர்க்கப்படுவதற்கு வயதெல்லை**

அரசாங்க சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான உச்ச வயதெல்லை 45 ஆண்டுகளாக இருக்க வேண்டுமென அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இம் மாற்றம் வைத்தியர்கள், பொறியியலாளர்கள் முதலிய உயர்தொழில் தரங்களுக்கு ஆட்சேர்க்கும் போது பொருத்தம் உடையதன்று.

ஒப்பம் வை.பீ. புசதெனிய
செயலாளர்,
பொது நிருவாக அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ඔබේ අංකය / உமது இல. / Your No. } ..........................................

මගේ අංකය / எனது இல. / My No. } ஆசிசே / சி/கு/ 1

දුරකථන / தொலைபேசி இல. / Telephone Nos.

අමාත්‍ය / அமைச்சர் / Minister } 864807, 869325, Fax : 869326

ලේකම් / செயலாளர் / Secretary } 864812

කාර්යාලය / அலுவலகம் / Office } 865141 — 50

අධ්‍යාපන හා උසස් අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி அமைச்சு
Ministry of Education and Higher Education
'ඉසුරුපාය' ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ, බත්තරමුල්ල.
'இசுருபாய', ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, பத்தரமுல்ல.
'ISURUPAYA' SRI JAYAWARDHANAPURA KOTTE, BATTARAMULLA

දිනය / திகதி / Date } 1997.07.28


வலயக் கல்விப் பணிப்பாளர்,

இலங்கை ஆசிரிய சேவைப் பிரமாணக்குறிப்பின் திருத்தங்கள்

பட்டதாரி ஆசிரிய சம்பளத் தயாரிப்பின் சிக்கல்கள்.

தங்களின் வமக/உறிங்கு/ஆசி/1 இலக்கத்தையும் 1997.06.02 திகதியையும் கொண்ட கடிதம் தொடர்பானது.

02. இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பில் 97.03.11 திகதியன்று செய்யப்பட்ட திருத்தங்களுக்கேற்பப் பட்டதாரிகளுக்கான தரங்களை வகுப்பதற்குப் புள்ளி வழங்குவதற்காக நீங்கள் கேட்டிருக்கும் கேள்விகளுக்குப் பின்வரும் விடைகளை ஆதாரங்களாகக் கொள்ளவும்.

| சிக்கல் | வழங்கக்கூடிய புள்ளிகளின் அளவு. |
|---|---|
| 1. பட்டதாரி நியமனம் பெற்று 01 வருடமும் 04 மாத காலத்திற்கு (94.10.06 திகதியன்று) கொடுக்கக்கூடிய புள்ளிகள் | 1 . எஞ்சியுள்ள மாதங்களுக்கு அருகிய சம்பள நிலை. |
| 2. 1994.10.06 திகதியன்று பட்டதாரி நியமனம் பெற்று 06 மாதங்களினில் வழங்கக் கூடிய புள்ளிகள். | புள்ளிகள் இல்லை. ஆரம்ப நிலை. |
| 3. பட்டம் முதல் டிப்ளோமா வரை சேவைக் காலம் 8 வருடங்களும் 11 மாதங்கள் டிப்ளோமாவிலிருந்து 94.10.06இற்குச் சேவைக்காலம் 01 வருடம் 05 மாதங்கள் அச்சந்தர்ப்பத்தில் வழங்கக் கூடிய புள்ளிகள். | புள்ளிகள் 11 வாண்மைத் தொழிற் தகைமையுடனான சம்பள அளவின் 12ஆம் படித்தரம். |
| 4. தராதரம்பெற்ற நியமனம் 87.04.05<br>பயிற்றப்பட்ட 92.02.01<br>பட்டதாரி 93.06.01<br>பட்டப்பின் கற்கைப்பட்டம் 94.10.01 | புள்ளிகள் 02. வாண்மைத் தொழிற்றகைமையுடனான பட்டதாரிச்சம்பள முறையின் மூன்றாம் படித்தரம். |
| 5. பட்டதாரி முதல் நியமனம் 82.07.01<br>டிப்ளோமா 94.05.02 | 12 புள்ளிகள். வாண்மைத் தொழிற்றகைமையுடனான சம்பள முறையின் 13ஆம் படித்தரம் |

சேனாநாயக்க உப்பசேன
மே. செய. (நிர்வாகம்)
க. உ. க. செயலாளருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றறிக்கை இலக்கம் : 2000/04

ඔබේ අංකය
உமது இல.
Your No. ..............................

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍ය
அமைச்சர்
Minister 864807 869325
Fax : 869326

ලේකම්
செயலாளர்
Secretary 864812

කාර්යාලය
அலுவலகம்
Office 865141 - 50

මගේ අංකය
எமது இல.
My No. 4/அப்ப. பே/ஃ/13/196

අධ්‍යාපන හා උසස් අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி அமைச்சு
Ministry of Education and Higher Education

'ඉසුරුපාය' ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටෙ
බත්තරමුල්ල.
'இசுருபாய' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே.
பத்தரமுல்ல.
'ISURUPAYA' SRI JAYAWARDHANAPURA KOTTE.
BATTARAMULLA

දිනය
திகதி
Date 2000.01.07 ...

சகல அரசாங்கப் பாடசாலை அதிபர்களுக்கு,

## அரசாங்கப் பாடசாலைகளில் பிரதி அதிபர்கள்/ உதவி அதிபர்களை நியமித்தல்

அரசாங்கப் பாடசாலைகளில் பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள் ஆகிய பதவிகளுக்கு அலுவலர்களை நியமிப்பது தொடர்பாக இவ் அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்திலுள்ள அறிவுறுத்தல்கள் மற்றும் இலங்கை அதிபர் சேவைப் பிரமாணக் குறிப்பு ஏற்பாடுகள் தொடர்பாக உங்களது கவனத்தை ஈர்க்க விளைகிறேன்.

இலங்கை அதிபர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 29 (அ) பிரிவில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் அதிபர்கள், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள் போன்ற பதவிகள் இலங்கை அதிபர் சேவை, இலங்கை கல்வி நிர்வாக சேவை ஆகியவற்றிலுள்ள அதிகாரிகளுக்கு வழங்கப்படுவது வழமையாகும்.

இவ் அமைச்சினால் வெளியிடப்பட்ட 1997/4 இலக்கமும் 1997 ஏப்ரல் 8 ஆந் திகதியும் இடப்பட்ட சுற்று நிருபத்தின் 14 வது பந்தியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

### அதிபர், பிரதி அதிபர் / உதவி அதிபர்கள் மற்றும் பகுதித் தலைவர்களை நியமித்தல்

14.1 அதிபர், பிரதி அதிபர் பதவிகளுக்கு இலங்கை கல்வி நிர்வாக சேவை அல்லது இலங்கை அதிபர் சேவை அலுவலர்கள் நியமிக்கப்படல் வேண்டும்.

14.2 இலங்கை அதிபர் சேவை அலுவலர்கள் இருப்பின் அவர்கள் உதவி அதிபர்களாக நியமிக்கப்பட வேண்டும்.

இலங்கை அதிபர் சேவை அலுவலர்கள் இல்லாதவிடத்து இலங்கை ஆசிரியர் சேவையின் தரம் - 1 , 2 - I ஆகியவற்றைச் சேர்ந்த அலுவலர்கள் உதவி அதிபர்களாக நியமிக்கப்பட வேண்டும்.

மேற்கூறப்பட்ட ஏற்பாடுகளுக்கு ஒவ்வாத முறையில் அதிபர்கள் பிரதி / உதவி அதிபர் நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக இவ் அமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவ்வாறான முறையற்ற நியமனங்கள் தொடர்பாக பாதிக்கப்பட்ட அதிபர் தரத்தைக் கொண்ட அலுவலர்கள் நீதிமன்ற உதவியை நாடியிருப்பதும் அறியக்கூடியதாகவுள்ளது.

மேற்குறிப்பிட்ட சுற்றுநிருபம் மற்றும் பிரமாணக் குறிப்பு ஏற்பாடுகளை மீறுதல் கடுமையான குற்றமாகக் கருதப்படும். இம் மீறல்கள் காரணமாக ஏற்படும் நீதிமன்ற வழக்குகளில் அதிபர்களின் சார்பில் ஆஜராக வேண்டாமென பிரதம நீதியரசரை கேட்க வேண்டிய நிலமை அமைச்சுக்கு ஏற்பட்டுள்ளது.

எனவே மேலே கூறப்பட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக மட்டுமே பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள் ஆகியோரை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு சகல அதிபர்களுக்கும் அழுத்தமாக அறிவுறுத்த விரும்புகிறேன்.

இவ் அறிவுறுத்தல்களுக்கு ஏற்புடையதல்லாத விதத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள சகல நியமனங்களையும் உடனடியாக செல்லுபடியற்றதாக்கி உரிய தகைமைகளைக் கொண்டோர் அவ்வவ் பதவிகளுக்கு நியமிக்கப்படல் வேண்டும்.

எதிர்காலத்தில் இவ் அமைச்சின் முன் அனுமதியுடனேயே பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள் ஆகியோர்கள் நியமிக்கப்பட வேண்டுமென அறியத்தருகிறேன்.

இச் சுற்று நிருபம் கல்விச் சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் வெளியிடப்படுகிறது.

சேனாநாயக்க உபசேன
மேலதிக செயலாளர் ( திட். முகா.)

ஒ. அன்ட்ரூ த சில்வா
கல்வி உயர்கல்வி அமைச்சு

பிரதிகள்

01. கல்விச் சேவைக் குழுச் செயலாளர்
02. சகல மாகாண அரச சேவை ஆணைக்குழுச் செயலாளர்கள்
03. சகல பிரதம செயலாளர்கள்
04. சகல மாகாண கல்வி செயலாளர்கள்
05. சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 30/96(1)

எனது இலக்கம்:தா/IV/2/2/1(3)
அரசாங்க நிர்வாக, முகாமைத்துவ,
மறுசீரமைப்பு அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு -07
2003 டிசெம்பர் மாதம் ...16.....ஆந் திகதி

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்.

## ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு புறம்பாக அரசு சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அலுவலர்களுக்கு 55 வயதுக்கு மேல் சேவை நீடிப்பு வழங்குதல்.

1996.10.14 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக, சுற்றறிக்கை இலக்க 30/96 இன் ஏற்பாடுகளின் படி விருப்பத்துடன் ஓய்வுபெறச் செய்யும் வயதான 55 வயதுக்கு மேல் சேவை நீடிப்புக்கு உரித்து பெறாதவர்கள் தொடர்பில் பின் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயற்படுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) 30/96 இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி 1996.10.14 ஆந் திகதிக்குப் பின் ஓய்வுபெறச் செய்தவரொருவரை கூறப்பட்ட பதவி நியமனம் பெறல் அல்லது தரமுயர்வு பெறலுக்கு பின் பதவிக்குரிய அடிப்படை தகைமைகளையும் விசேட திறமைகளையும் அடைந்திருந்தால் அத்துடன் தொடர்புடைய பதவிகளில் வெற்றிடங்களும் இருந்து, அவர் கோரிக்கை ஒன்றையும் முன்வைத்திருந்தால் 2003-01-03 திகதிய 1/2003 இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி அவரை 60 வயதுவரை ஒப்பந்த அடிப்படையில் மீளச் சேவையில் ஈடுபடுத்துவதற்கு இடமளித்தல்.

(ஆ) 30/96 இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை நடைமுறைப்பட்ட 1996.10.14 ஆந் திகதிக்கு முன்னராக சேர்த்துக்கொள்ளப்பட்ட அலுவலரொருவர் நியமனங்கள் பெற்ற அல்லது தரமுயர்வுகளை பெற்ற சந்தர்ப்பத்தில் வேண்டிய அடிப்படை தகைமைகள் இருந்திராத போதிலும், தொடர்புடைய பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட அல்லது தரமுயர்த்தப்பட்ட பின் தேவையான தகைமைத்திறன்களை அடைந்து சேவையில் ஈடுபட்டிருப்பாராயின், கட்டாயமாக ஓய்வுபெறும் வயதை அடையும் வரை 5/2002 இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை ஏற்பாடுகளின்படி அவருக்கு சேவை நீடிப்பு வழங்குவதற்கு இடமளித்தல்.

2. இவ் ஏற்பாடுகள் 2003.09.17 ஆந் திகதி முதல் வலுவில் இருக்கும்.

ஒப்பம்: எச்.சீ.மான்னப்பெரும,
செயலாளர்,
அரசாங்க நிர்வாக,
முகாமைத்துவ, மறுசீரமைப்பு அமைச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 12/2005(II)

எனது இல.ஆ/7/4/1/22

அரசாங்க நிர்வாக
உள்நாட்டலுவலர்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

23 டிசம்பர், 2005.

மைச்சின் செயலாளர்கள்,
காண சபையின் பிரதம செயலாளர்கள்,
ணைக்களத் தலைவர்கள்.

**2005 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில்
பிரேரிக்கப்பட்டவாறு, அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான
புதிய (அக்ரா ஹரா) காப்புறுதித் திட்டத்தினைத் தயாரித்தல்**

2005.05.18 ஆம் திகதியதும் 12/2005 ஆம் இலக்கமிடப்பட்டதும் 12/2005(1) ஆம் லக்கமிடப்பட்டதும் 2005.07.22 ஆம் திகதியதும் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையானது 5 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் பிரயோகிக்கப்பட்டவாறு புதிய காப்புறுதித் டத்தினை தாபிக்கும் பொருட்டு பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது.

05. தவணைக் கட்டணம் செலுத்துதல்

1. அரசாங்க சேவை, மாகாண அரசாங்க சேவை என்பவற்றில் உள்ள சகல உத்தியோகத்தர்களும் மற்றும் அரசாங்க சேவையில் இருந்து வேறு சேவைகளுக்கு தற்காலிக அடிப்படையில் முறையான வகையில் விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களும் இந்தக் காப்புறுதித் திட்டத்தின் பங்களிப்பில் இணைவது கட்டாயமானதாகும். அவர்களுடைய மாதாந்தச் சம்பளத்தில் இருந்து ரூபா 75/- கழிக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும் என்பது இதன் நோக்கமாகும்.

06. நன்மைகள்

மேலே குறிக்கப்பட்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இன் பிரிவுகள் 08, 10 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட மருந்துவக் காப்புறுதி நன்மைகள் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 08 | அரசாங்க வைத்திய சாலையில் அல்லது ஆயுர்வேத வைத்திய சாலையில் சிகிச்சைக்களத்தில்(வாட்டில்) தங்கியிருந்து சிகிச்சை பெறுமிடத்து குடும்ப அங்கத்தவர் உட்பட்ட அனைவருக்கும் நாள் ஒன்றுக்கு பின்வரும் கொடுப்பனவைப் பெறுவதற்கு உரித்துண்டு. | (வரையறுக்க பட்டது)<br>(நாள் ஒன்றுக்கு) | ரூ.5000/-<br>ரூ. 500/- |
| 10. | அரசாங்க வைத்திய சாலையில் அல்லது தனியார் வைத்திய சாலையில் பகுதி I, II இன் கீழ் குறிப்பிடப்பட்ட சத்திர சிகிச்சை தொடர்பிலான நன்மைகளை வழங்குதல். | | |

07. காப்புறுதித் திட்டத்தின் கீழ் நன்மை பெறுதல்.

01. ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அல்லது விபத்து ஏற்பட்டு அல்லது இயற்கை மரணம் எய்தி இருக்கமிடத்து 14 நாள்களுக்குள் திணைக்களத் தலைவர் அதுபற்றி அறியத்தருதல் வேண்டும். மருத்துவம் தொடர்பானதும் வைத்தியசாலை அறவீடுகள் தொடர்பானதும் ஆன அனைத்துப் பற்றுச்சீட்டுக்களும் (பில்) விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் 90 நாள்களுக்குள் திணைக்களத் தலைவரூடாக இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தின் தலைமையகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்..

02. உரிமை கோருவதற்காகவும், நடவடிக்கை எடுப்பதற்காகவும் சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பப் படிவங்கள் 2005.01.01 ஆம் திகதியில் இருந்து 2005.11.30 ஆம் திகதி வரையான காலப்பகுயில் ஏற்படுகின்ற தாமதங்களை இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது கவனத்திற் கொள்ளாது.

ஒப்பம்/டீ.திசாநாயக்க
செயலாளர்,
அரசாங் நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 8/2005(V)

எனது இலக்கம் : தா/7/3/1/31
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு - 07

2006 சனவரி மாதம் .2.7.. ஆந் திகதி

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்

## தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XXIV இன் II ஆம் பிரிவை திருத்தம் செய்தல் - ஆதனக்கடன்

ஆதனக் கடன் வழங்குதல் தொடர்பாக 2006 ஆம் ஆண்டின் வரவு செலவு உத்தேச திட்டத்தின்படி புதிய ஏற்பாடுகளைத் தாபனவிதிக் கோவையின் அத்தியாயம் XXIV- இன் பிரிவு II இற்கு பதிலீடு செய்து 2006.01.01 ஆந் திகதி முதல் வலுவில் இருக்கும் வண்ணம் 8/2005 ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கு பின் குறிப்பிடப்படும் பிரிவுகள் மீள் திருத்தம் செய்யப்படுகிறது.

11:4 கடன் தொகை

11:4:1 உத்தியோகத்தர் ஒருவர் பெறக்கூடிய ஆகக் கூடிய கடன் தொகை படிகள் நீங்கலாக 7 வருட திரட்டிய சம்பளம் அல்லது 30 இலட்ச ரூபாவிலான தொகை ஆகியவற்றில் எது குறைந்ததோ அது.

06. புதிய விண்ணப்பங்களுக்கு மேலதிகமாக 7 வருட ஆதனக் கடனை வங்கிகளின் ஊடாக பெற்றுக் கொள்வதற்கான உரித்துக்களை பெறுவது 2006.01.01 ஆந் திகதியின் பின்பு அமைச்சுக்கள், திணைக்களங்கள் என்பவற்றின் பரிந்துரை செய்துள்ள கடன் விண்ணப்பங்களினால் அங்கீகரிக்கப்படுகின்ற விண்ணப்பங்களுக்கு மட்டுமே ஆகும்;

02, இச் சுற் றிக்கை திறைசேரியின் இணக்கத்துடன் வெளியிடப்பட்டது.

ஒப்பம் /டி.திசாநாயக்க
செயலாளர்
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி முகாமைத்துவ சுற்றறிக்கைகளின் தொகுப்பு

(தெரிந்தெடுக்கப்பட்டவை)

2002

*மீளமைக்கப்பட்டவை* - 2006


தொகுத்தவர்
**சி.சரவணபவானந்தன்**
*நிருவாகச் செயலாளர்*
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்


- ஆசிரியர் தேவைப்பாடு
- ஆசிரியர் செயலாற்றுகை தரங் கணிப்பீடு
- தாபன விடயம்
- பாடசாலை மட்டக் கணிப்பீடு
- மாணவர் அனுமதி லீவு
- ஆசிரியர் லீவு
- ஓய்வூதியம்
- ஆசிரியர் பதவியுயர்வு
- ஆசிரிய இடமாற்றம்
- பொது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்

### பாடசாலை முகாமைத்துவம்


1. க.பொ.த உயர்தர கல்வி மறுசீரமைப்பு அமுலாக்கல் வலய கண்காணிப்பு குழுக்களை அமைத்தல் 4
2. க.பொ.த (சா/த) பரீட்சைக்கான ............ பாடங்களின் வினாப்பத்திரங்களை அறிமுகம் செய்தல் 9
3. பாடசாலைகளுக்கு நிதி உதவி மற்றும் பொருள் ரீதியான அன்பளிப்புகளைப் பெற்றுக் கொள்ளல் 10
4. இலங்கையின் சகல பாடசாலைகளிலும் ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்களை அமுல் நடாத்தல் 12
5. பாடசாலைகளில் மனித வலுவிலிருந்து உச்சப் பயனைப் பெறாதிருத்தல் 19
6. பொதுப் பாடசாலைகளில் உரிய வயதில் அனுமதிக்கப்படாத பிள்ளைகளுக்கும் கல்வி ................. கற்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதல் 21
7. நிதி அன்பளிப்பு ஏற்றுக்காள்ளல் / மாணவரின் கட்டுக்காப்பு/கோப்பு 22
8. பட்டதாரிப் பயிலுனருக்கான மகப்பேற்று லீவு/ தேசிய கல்வி .......... நிறுவக கற்கை விடுமுறை 23
9. பாடசாலைக் கூட்டங்கள் 24
10. பதில் பாடசாலை நாட்கள் நடத்துவதற்கான அனுமதி 25


### ஆசிரியர் செயலாற்றுகை தரக் கணிப்பீடு


1. ஆசிரியர் செயலாற்றுகை தரக் கணிப்பு 26


### தாபன விடயம்


1. தேசிய பாடசாலைகளில் சேவையில் உள்ள இலங்கை அதிபர் சேவைக்குரித்தான உத்தியோகத்தர்களை சேவையில் நிரந்தரமாக்கல் 28
2. இலங்கை அதிபர் சேவைக்குரிய உத்தியோகத்தர்களை சேவையில் நிரந்தரமாக்கல் 29
3. தேசிய பாடசாலை, மாகாண அரசாங்கங்களுக்கிடையே ஆசிரியர்களை விடுவித்தல் 30
4. இலங்கை ஆசிரியர் சேவைக்குரித்தான ஆசிரியர்களின் முறையான நியமனக் கடிதம் வழங்கல் 32
5. அரசாங்க அலுவலர்களின் அலுவலக நேரங்கள் 34
6. கடமை நிறைவேற்று அதிபர்களை நியமித்தல் 35
7. பதவியுயர்வின் மீது சம்பளம் மாற்றியமைத்தல் 36
8. தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விமாணிப் பட்டத்தை பட்டதாரி ஆசிரியர் பதவிக்கு அங்கீகரித்தல் 38
9. ஆசிரியர்களின் சுயவிபரக் கோவைகளை கல்வி அலுவலகங்களுக்கிடையே மாற்றும் போதான நடைமுறைகள் 39
10. சொத்துக் கடன்களுக்கான பிணையாளிகள் தாபன விதிக்கோவையின் திருத்தங்கள் 41
11. அரசாங்க அலுவலகங்களின் கடிதத் தொடர்பு 42
12. பாடசாலைகளுக்குள் புகைத்தல், மதுபானம் அருந்துதலைத் தடை செய்தல் 43
13. பயிற்சி நெறிகள் தடைசெய்தல் உத்தியோகபூர்வ விடுமுறை வழங்கல் 44
14. இலங்கைக் கல்வி நிருவாக சேவை பட்டதாரிச் சேவை .............. பட்டதாரிச் சேவைக் காலத்தை கணித்தல் 45
15. பாடசாலை மேற்பார்வை 46
16. பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் 47
17. இடமாற்றத்தின் போது பதவியேற்கத் தவறுதல் 54
18. தேசிய பாடசாலைகளின் நிர்வாகத்தை பன்முகப்படுத்தல் 55


### பாடசாலை மட்டக் கணிப்பீடு


1. பாடசாலை மட்டக் கணிப்பீடு தரம் 10, 11 56
2. பாடசாலை மட்டக் கணிப்பீட்டு வேலைத்திட்டம் க.பொ.த.(சா.த) பரீட்சை 2002 57


### மாணவர் அனுமதி, லீவு


1. பிறப்புச் சான்றிதழுக்கு பதிலாக ஏற்றுக்கொள்ளல் சேர்வு இடாப்பும் வரவு இடாப்பும் 60
2. அரசாங்க பாடசாலைகளுக்கான அனுமதி / மாணவர் வகுப்பேற்றம் 61
3. வெளிநாடு செல்லும் மாணவர்களுக்கான லீவு (2000.11.22) 62




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. வெளிநாடு செல்லும் மாணவர்களுக்கான லீவு (2000.06.06) 63
5. வெளிநாடு செல்லும் மாணவரின் லீவினை அனுமதித்தல் 64

## ஆசிரியர் லீவு

1. தொலைக்கல்வி பயிலும் ஆசிரிய பயிலுநர்களுக்கு கற்கை விடுமுறை வழங்கல் 65
2. தொழிற்சங்க கிளைக் கூட்டங்களுக்குச் சமூகமளிப்பதற்கு கடமை விடுதலை 66
3. வடக்கு கிழக்கு பிரதேசங்களில் யுத்த நிலமை ............... விசேட விடுமுறை 67
4. இடம்பெயர்ந்தோரில் நாடு திரும்பியவர்களைச் சேவையில் மீள அமர்த்துதல் 68
5. பிணி லீவு - அத்தியாயம் xii தாபன விதிக்கோவை 69
6. தாபன விதிக்கோவையின் xxiii அத்தியாயத்தை திருத்துதல்/
தாய்ப்பால் ஊட்டுவதற்கான சலுகைக் காலம் 71
7. பிரசவ விடுமுறை தாபன விதிக்கோவை திருத்தங்கள் (1997.11.08)/ 72
அரச உத்தியோகத்தர்களின் அலுவலக நேரங்களும் லீவும்
8. விசேட லீவு (1989.03.23) / முதுமாணி புகுநிலை புவியியல் ........... கடமை லீவு 73
9. ஆங்கிலப் பாடநெறி பயிலுவோருக்கு கடமை லீவு/
கர்ப்பிணி............. ஆசிரியர் பயிற்சியை பின்போடல் 74
10. வெளிநாட்டு முகவர் நிறுவனங்களில் ................ சம்பளமற்ற லீவு வழங்குதல் 75
11. தொலைக்கல்வி ...... படிப்பு விடுதலை / திறந்த பல்கலைக்கழக விஞ்ஞான ......... படிப்பு லீவு 76
12. திறந்த பல்கலைக்கழக பாடநெறி பயிலும் ஆசிரியருக்கு படிப்பு விடுதலை/
கணனித் தொழில்நுட்ப ........ படிப்புலீவு 77
13. செய்திட்ட கற்கை .......... கடமை லீவு / பட்டப்பின் கல்வி ............. படிப்பு விடுதலை 78

## ஓய்வூதியம்

1. ஓய்வூதியம் பற்றிய அறிக்கை (அரச வர்த்தமானி) 79
2. 1996.12.17 ஆந் திகதி முதல் ஓய்வு பெறுவோருக்கான ஓய்வூதியக் கணக்கு நூற்றுவீத அட்டவணை 81
3. அரச ஊழியர்கள் ஓய்வு பெறுதல் 82

## ஆசிரியர் பதவியுயர்வு

1. பயிலுனர் / தகுதிகாண் அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட ஆசிரியர்களை இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணங்களுக்கமைய ஆசிரியர் சேவைக்கு உள்ளெடுப்பு செய்தல் 84
2. பயிலுனர் / தகுதிகாண் அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட ஆசிரியர்களை இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணங்களுக்கமைய ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்ப்பு செய்தல் 85
3. பயிலுனர் / தகுதிகாண் அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட ஆசிரியர்களை இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணங்களுக்கமைய ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்த்தல் 86

## ஆசிரிய இடமாற்றம்

1. தேசிய ஆசிரிய இடமாற்றக் கொள்கை 88
2. அரசாங்க பாடசாலை அதிபர்களினதும் ஆசிரியர்களினதும் இடமாற்றங்கள் 97
3. நேர்முகப் பரீட்சைக் குழுக்களுக்கு பெண் அங்கத்தவர்களை நியமனம் செய்தல் 99

## பொது

1. பழைய மாணவர் சங்கம் 100
2. வசதிகள்,சேவைகள் கட்டணங்கள் 102
3. ஆசிரியர்களைப் பதவிகளில் நிரந்தரம் செய்வது தொடர்பான நடவடிக்கைகள் 108
4. ஆசிரியர்களின் பதவிப் பெயரைச் சரியாக உபயோகித்தல் 109
5. விளையாட்டுப் போட்டிகளில் ....... மாணவர்களின் நடத்தை விதிகள்/
தலைமை ஆசிரியரின் சம்பவத் திரட்டுக் குறிப்புக்கள் 110
6. கல்விச் சுற்றுலா 111
7. மும்மொழிகளின் பாவனை 112
8. மாதிரிப் படிவங்களை மும்மொழிகளிலும் தயாரித்தல் 113



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, உயர்கல்வி அமைச்சு,
'இசுருபாய', ஸ்ரீ ஜயவர்தனபுர,
கோட்டே, பத்தரமுல்ல.
தொலைபேசி: 865141-50
பெக்ஸ்: 865162
ஈ-மெயில்: secedu@sltnet.lk
வெப்தள முகவரி: www.moesl.org

சுற்றுநிருப இலக்கம்:2001/26
2001.10.17

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலய கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர்கள்,
சகல 1AB மற்றும் 1C அதிபர்கள்,
சகல பிரிவெனா பொறுப்பாளர்கள்,

**க.பொ.த.(உயர்தர) கல்வி மறுசீரமைப்பு அமுலாக்கல்,**
**வலய கண்காணிப்புக் குழுக்களை அமைத்தல்.**

க.பொ.த.(உயர்தர) கல்வி மறுசீரமைப்பை அமுலாக்கல் தொடர்பாக வலய கண்காணிப்பு குழுக்களை அமைப்பது சம்பந்தமாக வெளியிடப்பட்ட எனது இலக்கம் மே.செ. (கல்வி அபி)/35 ஆம் 1999.02.02 திகதியும் கொண்ட இலக்கச் 99/11 சுற்றுநிருபத்தில் இடம்பெறும் விதிகள் அறிவுறுத்தல்களை மீற மேலாக இந்த சுற்றுநிருபம் செல்லுபடியாகும்.

வலய கண்காணிப்பு குழுக்களை அமைத்ததன் முக்கிய நோக்கம் கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதற்கான க.பொ.த. (உயர்தர) கல்வி மறுசீரமைப்பை அமுலாக்கல் தொடர்பாக கண்காணிப்பதாகும். இதன் கீழ் செயன்முறைப் பரீட்சை, ஒப்படை, அறிமுறை மதிப்பீடு மற்றும் செயற்றிட்டம் என்பன முறையாகவும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாகவும் அமுலாக்கப்படுகின்றதா என்பதை பரிசீலிப்பதாகும்.

மேற்படி சுற்றுநிருபத்தினை நடைமுறைப்படுத்துவதில் எழுந்துள்ள சில குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்வதற்காக கீழ்க் குறிப்பிடப்படும் நடவடிக்கைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இந்தக் குழுக்கள் அமைத்தல் மாகாணக் கல்விப் பணிப்பாளரின் ஆலோசனைப்படி வலயக் கல்விப் பணிப்பாளர்களால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

02. வலயக் கண்காணிப்புக் குழுவின் கட்டமைப்பு பின்வருமாறு அமைய வேண்டும்.

1. தலைவர் – வலயக் கல்விப் பணிப்பாளர்
2. செயலாளர் -வலயக் கல்விப் பணிப்பாளரினால் தெரிவு செய்யப்படும் க.பொ.த. (உயர்தர) பாடங்களுக்குரிய விடயப் பொறுப்புப் பணிப்பாளர் ஒருவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அங்கத்தவர்கள்-

1. க.பொ.த.(உயர்தர) பாடங்களுக்குப் பொறுப்பான பணிப்பாளர்கள்.
11. க.பொ.த.(உயர்தர) பாடங்களுக்குரிய வள ஆசிரிய ஆசிரியைகள்
111. க.பொ.த.(உயர்தர) பாடங்கள் கற்பிக்கும் சிரேஷ்ட ஆசிரிய ஆசிரியைகள்

2.1 கண்காணிப்பு குழுவிற்கு உரித்தான வள ஆசிரிய ஆசிரியைகளினதும் மற்றும் சிரேஷ்ட ஆசிரிய ஆசிரியைகளினதும் எண்ணிக்கையானது வலயத்திலுள்ள 1ஏபி, 1சி பாடசாலைகளின் எண்ணிக்கை, அப் பாடசாலைகளிலுள்ள உயர்தர வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கை அவர்கள் கற்கின்ற பாடங்கள் ஆகியன பிரதிநிதித்துப்படுத்தும் வகையில் வலயக் கல்விப் பணிப்பாளரால் தீர்மானிக்கப்படல்வேண்டும்.

2.2 ஒரு பாடசாலை குறைந்த பட்சம் வருடத்திற்கு இருமுறையாவது கண்காணிக்கப்பட வேண்டும். பாடசாலையின் மாணவர் எண்ணிக்கைக்கும் பாடச் சேர்க்கைக்கும் எற்ப ஒரு கண்காணிப்பு சந்தர்ப்பத்தில் கலந்து கொள்ள வேண்டிய மேற்பார்வை அங்கத்தினர் தொகை குழுச் செயலாளரால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.தகுதி அடிப்படையில் வள நபரொருவரை ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களைக் கண்காணிப்பதற்காகவும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

2.3 ஒரு கண்காணிப்புத் தடவையின் போது குழு அங்கத்தவர் ஒருவர் குறிப்பிட்ட பாடத்தில் ஆகக் கூடியளவு 60 மாணவர்களை மேற்பார்வை செய்யக் கூடிய வகையில் குழு உறுப்பினர் தொகை தீர்மானிக்கப்பட வேண்டும்.

3.0 வலய கண்காணிப்புக் குழுவிற்கு உதவுவதற்காக மாகாணத்தில் மாகாண வழிநடத்தல் குழு அமைக்கப்படும். <u>மாகாண வழிநடத்தல் குழுவின்</u> கட்டமைப்பு பின்வருமாறு அமைய வேண்டும்.

1. மாகாண கல்விப் பணிப்பார் –தலைவர்
2. மாகாண விஞ்ஞான, கணித இணைப்பாளர்– செயலாளர்
3. மாகாண கல்வித் திணைக்களத்தில் க.பொ.த.(உயர்தர) பாடங்களுக்குரிய பாடப் பணிப்பாளர்கள் – அங்கத்தவர்கள்.

4.0 வலய கண்காணிப்பு குழுவிற்கு உரிய பணிகள்

4.1 க.பொ.த.(உயர்தர) வகுப்பறைகளில் மற்றும் விஞ்ஞான ஆய்வுகூடங்களில் தேவையான வசதிகள் உள்ளனவா என தேடிப் பார்த்தல்.

4.2 ஆசிரியர் அறிக்கைப் புத்தகங்களில் மாதத்திற்கொருமுறை செயன்முறை/ஒப்படைகளின் கணிப்பீட்டுப் புள்ளிகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்படுத்தி அதன்படி பரிகார வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளனவா? என மேற்பார்வை செய்தல்.

4.3 செயல்முறை அறிக்கைப் புத்தகம்/ ஒப்படை அறிக்கை மற்றும் அறிமுறைக் கணிப்பீடு சரியான முறையில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என தேடிப்பார்த்தல்.

4.4 செயற்றிட்ட வேலை உரிய முறையில் நடைபெறுகிறதா என பரிசீலித்துத் தேவையான ஆலோசனைகளை வழங்கல்.

4.5 மாணவர் அறிக்கைப் புத்தகங்களில் பதிவுகள் உரிய முறையில் பேணப்படுகின்றனவா எனப் பார்த்தல்.

4.6 இந்த மேற்பார்வையின் போது மாணவருடன் கலந்துரையாடி அறிமுறைச் சோதனை, செயல்முறை மற்றும் ஒப்படை வேலைகள் சம்பந்தமான அவர்களது அறிவை மதிப்பிடல்.

4.7 பாடசாலை கல்வி நடவடிக்கைகளை மேலும் அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான கருத்துக்கள் சம்பந்தமாக கலந்துரையாடி தேவையான ஆலோசனைகளடங்கிய அறிக்கையைத் தயாரித்தல்.

4.8 இந்த அறிக்கையின் பிரதிகள் முறைப்படி அதிபர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு பெற்றுக் கொடுத்தலும் மாகாண கல்விப் பணிப்பாளரின் கவனத்திற்கு உட்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டால் அது சம்பந்தமாக மாகாண வழிநடத்துதல் குழுவின் செயலாளருக்கு அறிவித்தலும்.

4.9 வலய பாடசாலை கண்காணிப்பு நேர அட்டவணையைத் தயாரித்தல், இந்த நேர அட்டவணையை பாடசாலைத் தவணை ஆரம்பத்தில் பாடசாலைகளுக்கும் மற்றும் மாகாண வழிநடத்தல் குழுச் செயலாளருக்கும் தெரியப்படுத்தல்.

4.10 க.பொ.த.(உயர்தர) வகுப்புகளில் கற்பித்தலில் ஈடுபடுகின்ற சகல ஆசிரிய ஆசிரியைகளுக்கும் பாடசாலைத் தவணை ஒன்றுக்கு ஒரு முறை மாணவர் முன்னேற்றம்பற்றிக் கலந்தாலோசிக்க ஒருநாள் செயலமர்வுக்கான ஒழுங்குகள் செய்தல்.

* இந்த ஒரு நாள் செயலமர்வில் பின்வருவன பற்றி கலந்தலாலோசிக்கப்படலாம்.

1. தமது பாடத்துக்கு உரித்தான செயல்முறை/ ஒப்படை மற்றும் அறிமுறைக் கணிப்பீட்டுப் பணிகளின் முன்னேற்றம்.

11. பாட கற்றல்– கற்பித்தல் நடவடிக்கைகள் சம்பந்தமான பிரச்சினைகள்.

111. செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தலும் மதிப்பிடலும்.

1V. ஆசிரியர்களது அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ளல்

இந்த ஒரு நாள் செயலமர்வின் அறிக்கை மாகாண வழிநடத்தல் குழுச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

5.0 **மாகாண வழிநடத்தல் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்ட பணிகள்:**

5.1 . வலயக் கண்காணிப்பு குழுவின் தலைவர் செயலாளருடன் பாடசாலை தவணைக்கு ஒரு தடவை அதன் முன்னேற்றம் மீளாய்வுக் கூட்டங்களை நடத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.2 மாகாண மட்டத்தில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளுக்க தீர்வு காணல்.

5.3 வலய மட்டத்தில் கண்காணிப்பு செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் அதற்கு உதவுதல்.

5.4 வலய மட்டத்தில் ஆசிரியர்களுக்காக பாடசாலை தவணைக்கொரு தடவை நடைபெறும் ஒரு நாள் முன்னேற்ற மீளாய்வு செயலமர்வு அறிக்கையை மீளாயவு செய்தல்.

5.5 தமது மாகாணத்தின் வலய கண்காணிப்பு குழுக்கள் பற்றி கல்வி அமைச்சுடன் தொடர்பு கொள்ளல்.

5.6 வலய கண்காணிப்பு குழுக்களுடன் குறிப்பிடப்பட்ட பாடசாலைகளில் கண்காணிப்புத் திட்டம்பற்றி கலந்துரையாடல். அதன்படி எதிர்வரும் ஆண்டுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்தல்.

5.7 மாகாண மானிட வளங்கள் பற்றிக் கவனஞ் செலுத்தி வலயக் கண்காணிப்புச் சபைக்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்து கொள்வதற்கான நியதிகளைத் தயாரித்தல்.

5.8 உயர்தர செய்திட்டப் பணிகட்கு உதவி பெறத்தக்க அரச. தாபனங்கள் கூட்டுத்தாபனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்களை இனங்காணலும் அவை தொடர்பாக, வலயக் கண்காணிப்புச் சபைகட்கும் அதிபர்கட்கும் விழிப்பூட்டல்.

6.0 வலய மட்ட கண்காணிப்புக் குழுக்களுக்கு தெரிவு செய்யப்படும் ஆசிரியர்கள் தொடர்பான விபரம் மாகாணக் குழுவின் செயலாளரின் அறிவுறுத்தலுக்கமைய மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் உரிய பாடசாலை அதிபருக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

7.0 வலய கண்காணிப்புக்குழு வேலைகளுக்கு சமுகமளிக்கும் ஆசிரியர்கள் குறித்த தினத்தில் விடுவித்தல் பிரிவெனாத்தலைவர்/ பாடசாலை அதிபரினால் நடைபெறுதலோடு அவர்களுக்கு இது தொடர்பாக தேவையான கடமைலீவு வலயக் கல்விப் பணிப்பாளரினால் அனுமதிக்கப்படல் வேண்டும்.

பாடசாலைக் கண்காணிப்புக்குத் தேவையான வாகன வசதி தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் கொடுப்பதற்கு மாகாண/ வலய கல்விப் பணிப்பாளரினால் ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

8.0 வலயக் கண்காணிப்புக் குழுவில் இடம்பெறும் பணிப்பாளர்களுககாக வழங்கப்படும் அனுமதிக்கப்பட்ட போக்குவரத்துப் பயணப்படியும் ஆசிரியர்களுக்கு அனுமதிக்கப்பட்ட தினத்திற்கான வாழ்க்கைக் கொடுப்பனவும் அவசியமாகும். இது தொடர் பாக தேவையான ஒதுக்கீடு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.0 இவ்வேலைத்திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு செய்வதற்காக மாகாண அமுலாக்கல் குழுச் செயலாளர்களின் கூட்டம் மூன்று மாத்திற்கொருமுறை நடத்தலும் கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளருடன் (விஞ்ஞானமும் தொழிநுட்பமும்) தொடர்பு கொள்ளலும் நடைபெறும்.

வைத்திய டாரா டிமெல்
செயலாளர்,
கல்வி, உயர்கல்வி அமைச்சு.

பிரதிகள்:-

1. தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு.
2. தலைவர், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு.
3. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்.
4. பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம்.
5. பணிப்பாளர் நாயகம், கல்வி மறுசீரமைப்பு செயற்படுத்தல்.
6. கல்விப் பணிப்பாளர் (விஞ்ஞானமும் தொழிநுட்பமும்) கல்வி அமைச்சு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, உயர்கல்வி அமைச்சு,
'இசுருபாய', ஸ்ரீ ஜயவர்தனபுர,
கோட்டே, பத்தரமுல்ல.
தொலைபேசி: 865141-50
பெக்ஸ்: 865162
ஈ-மெயில்: secedu@sltnet.lk
வெப்தள முகவரி: www.moesl.org

சுற்று நிருப இலக்கம்:2001/25
2001.10.17

மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,
பிரிவெனாக்களின் பிரிவெனாதிபதி தேரர்கள்,
மற்றும் அரசாங்க, தனியார் துறை, அங்கீகரிக்கப்பட்ட
பாடசாலை அதிபர்கள்,

**2001 டிசம்பரிலும் அதன் பின்னரும் நடைபெறும் க.பொ.த.(சா.த.) பரீட்சைக்கான கணிதம், விஞ்ஞானமும் தொழில்நுட்பவியல் பாடங்களுக்கான வினாப்பத்திரங்களை அறிமுகம் செய்தலும். மேற்படி பாடங்களை 2002 ம் ஆண்டிலும் அதன் பின்பும் அரசாங்க, தனியார்துறை அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகளில் 12 ஆம் தர விஞ்ஞான பாடத்துறையைச் சார்ந்த வகுப்புக்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்காகப் பயன்படுத்தல்.**

01. புதிய கல்வி மறுசீரமைப்பின் கீழ் தரம் 10,11 களுக்கான பாடத்திட்டத்திட்டத்தை மையமாகக் கொண்டு முதன் முறையாக 2001 டிசம்பரிலும் அதன் பின்னரும் நடைபெறும் க.பொ.த.(சா.த.) பரீட்சைக்கான கணிதம், விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் பாடங்களுக்காக வினாப்பத்திரத் தொகுதி ஒன்று வீதம் மாத்திரம் வழங்கப்படும்.

02. மேற் குறிப்பிடப்பட்டுள்ள பெறுபேறுகளுக்கேற்ப 2002ஆம் ஆண்டில் அரசாங்க தனியார்துறை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகளில் க.பொ.த.(உயர்தர) விஞ்ஞான பாடத்துறைக்கு 12 ஆம் தரத்திற்கு மாணவர்களை அனுமதிக்கும் போது கல்வி அமைச்சின் செயலாளரின் 2000/15 இலக்கத்தையும் 2001.05.29 திகதியையும் கொண்ட பாடசாலைகளுக்குப் பிள்ளைகளைச் சேர்க்கும் சுற்றுநிருபத்தைக் கடைபிடிக்க வேண்டும்.

03. சுற்றுநிருப இலக்கம் 1997/29 ஈன் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட விஞ்ஞான கணித மேலதிக பாடங்களுக்குத் தோற்றிய மாணவர்களை 12 ஆம் தரத்திற்குச் சேர்த்துக் கொள்ளும் போது 1997/29 இலக்கத்தையும் 1998/13 யும் கொண்ட சுற்றறிக்கைகள் தொடர்ந்தும் பின்பற்றப்பட வேண்டும்.

வைத்திய டாரா டிமெல்
செயலாளர்,
கல்வி, உயர்கல்வி அமைச்சு.

பிரதிகள்:-

1. தவிசாளர்- தேசிய கல்வி ஆணைக்குழு.
2. பணிப்பாளர் நாயகம்- தேசிய கல்வி நிறுவகம்.
3. பரீட்சை ஆணையாளர் நாயகம்- இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்.
4. தவிசாளர்- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
5. பணிப்பாளர் நாயகம்- கல்விச் சீரமைப்பு அமுலாக்கல் பிரிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றறிக்கை இல:2001/24
01.10.08

கல்வி, உயர்கல்வி அமைச்சு,
'இசுருபாய', ஸ்ரீ ஜயவர்தனபுர,
கோட்டே, பத்தரமுல்ல.
தொலைபேசி: 865141-50
பெக்ஸ்: 865162
ஈ-மெயில்: secedu@sltnet.lk
வெப்தள முகவரி: www.moesl.org

கல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,
கல வலய கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல பாடசாலை அதிபர்கள்,
சகல பிரிவெனாக்களினதும் பிரிவெனாதிபதித் தேரர்கள்,

**பாடசாலைகளுக்கு நிதி உதவி மற்றும் பொருள் ரீதியான அன்பளிப்புகளைப் பெற்றுக் கொள்ளல்.**

மேற்கூறப்பட்ட விடயம் தொடர்பான ஆலோசனை அடங்கிய இவ்வமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள இலக்கம்2001/115 யும் 2001.05.29ம் திகதியும் கொண்ட 'பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுமதித்தல்' சுற்றறிக்கையின் 21.0 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிள்ளைகளை அனுமதிப்பதற்காக பணமும் வேறு உதவிகளும் பெற்றுக் கொள்வதை தடைசெய்தல் எனும் பிரிவுக்கு தங்களது கவனத்தை ஈர்க்கிறேன்.

01. இதன் அடிப்படையில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் கவனமாகவும் ஆராய்வுடனும் செயற்படுமாறு அறியத் தருகின்றேன்.

1.1 சகல அரசினர் பாடசாலைகளிலும் கட்டணம் அறிவிடப்படாத தனியார பாடசாலைகளிலும் அனுமதிக்கும்போது வசதிகள் சேவைகள் கட்டண மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்கத்துவர் கட்டணம் ஆகியவற்றை தவிர ஏனைய கட்டணம் அல்லது உதவி தொகைகள், பொருட்களைப் பெற்றுக் கொள்வது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

1.2 பிள்ளைகளை பாடசாலையில் அனுமதித்தற் பின்னர் பெற்றோர்கள்/ பாதுகாவலர்களுக்கு இவ்வாறான அறிவுறுத்தல்களை மேற்கொள்வது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

1.3 மேற்கூறப்பட்ட 1.1 மற்றும் 1.2 விடயங்களை மீறக் கூடிய சந்தர்ப்பங்களில் அதற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி ஏற்படும்.

02. பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுமதித்ததன் பின்னர் பெற்றோர்/ பாதுகாவலர் ஏதாவதொரு நிறுவனம் சுய விருப்பத்தின் பேரில் கல்லூரிக்கு பண அன்பளிப்பு, பொருள் அன்பளிப்புகளைச் செய்ய முற்படும் போது கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு செயல்பட வேண்டும்.

2.1 நிதி உதவிகள்

அ. பாடசாலைக்கு அருகாமையில் உள்ள வங்கியொன்றில் பாடசாலைப் பெயருடன் 'பாடசாலை வள அபிவிருத்திக் கணக்கு' என்ற பெயரில் புதிய நடைமுறைக் கணக்கொன்றை ஆரம்பிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, உயர்கல்வி அமைச்சு,
'இசுருபாய', ஸ்ரீ ஜயவர்தனபுர,
கோட்டே, பத்தரமுல்ல.
தொலைபேசி: 865141-50
பெக்ஸ்: 865162
ஈ-மெயில்: secedu@sltnet.lk
வெப்தள முகவரி: www.moesl.org

ஆ. இக்கணக்கின் சம கையொப்பம் அதிபர், மாகாண கல்விப் பணிப்பாளர்/ வலயக் கல்விப் பணிப்பாளர் அல்லது அவரினால் பெயர் குறிப்பிடப்படும் பதவி நிலை உத்தியோகத்தர் இட வேண்டும். பணம் மீளப் பெறும் போது முதலில் உரிய பாடசாலையின் அதிபர் கையொப்பம் இட வேண்டும்.

இ. பாடசாலைக்கு நிதி உதவி வழங்க முன்வரும் பெற்றோர்கள்/ பாதுகாவலருக்கு அக்கணக்கின் இலக்கத்தை வழங்க வேண்டியதுடன் கணக்கில் வைப்பு செய்த பின்னர் அது குறித்து வங்கியின் பற்றுச் சீட்டை அதிபரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.வங்கிக் கணக்கின் வைப்புச் செய்யப்பட்டது உறுதியானதிற்குப் பின்னர் அதற்காக 'கல்வி சீ 100' பற்றுச் சீட்டு வெளியிடப்பட வேண்டும்.

ஈ. இக்கணக்கு நடவடிக்கைகள் மேற்கூறப்பட்ட 'ஆ' பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள மாகாண/ வலய உத்தியோகத்தர்களின் நெறிப்படுத்தலுக்கு உட்படுத்த வேண்டும்.

உ. இக்கணக்கை பேணும் போது நிதிப் பிரமாணங்களை மீறாதவாறு நடவடிக்கை மேற்கொள்வது அதிபர் மற்றும் உத்தியோகத்தர்களின் பொறுப்பாகும்.

2. பொருள் அன்பளிப்புகள்

பெற்றோர்/ பாதுகாவலர் கல்லூரியின் தேவைக்கேற்ப சுயவிருப்பத்தின் பேரில் பொருள் உதவி செய்ய முன்வருவார்களானால் வழங்கப்படும் சகல பொருட்களுக்குப் பொருள் அன்பளிப்பு பெற்றதற்கான 'கல்வி சீ 100' பற்றுச் சீட்டை வழங்கி பொருட்களை உரிய இன்வென்ட்ரி (பொருள் பதிவுப் புத்தகத்தில்) குறிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதுடன் உரிய பொருள் பதிவுப் புத்தகத்தின் உறுதி செய்யப்பட்ட பிரதியொன்றை கல்விப் பணிப்பாளருக்கு அனுப்ப வேண்டும்.

வைத்திய டாரா டி மெல்
செயலாளர்,
கல்வி, உயர்கல்வி அமைச்சின்
செயலாளருக்காக.

பிரதி: சகல மாகாண கல்விச் செயலாளர்களுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அமைச்சு
"இசுருபாய",
பத்தரமுல்ல,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே.
தொலைபேசி : 865141–50

சுற்றுநிருப இல : 2001/16
2001.06.20

சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல பாடசாலை அதிபர்கள்,
சகல பிரி வெனாக்களினதும் பிரி வெனாதிபதிகள்,

**இலங்கையின் சகல பாடசாலைகளிலும் ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்களை அமுல் நடாத்தல்.**

தற்போது நடைபெற்றுவரும் துரிதமானதும், சிக்கலானதுமான சமூக பொருளாதார அமைப்பினுள் பெரும்பாலும் பல்வகையான கஷ்டங்களுக்கு ஆளாகின்ற முக்கிய பிரிவினராக அமைவது சிறுவர்களாவர். ஆனபடியால் பாடசாலைமுறைக்குள் சகல பாடசாலைகளிலும் மாணவ ஆலோசனைச் சேவையொன்றை ஆரம்பிப்பதன் தேவை எழுந்துள்ளது. கி.பி.2001 ஆம் ஆண்டில் இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட நூறு (100) பாடசாலைகளில் முறையான ஆலோசனை நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்படுவதோடு கி.பி.2002 இருந்து நாட்டின் சகல பாடசாலைகளிலும் இச்சுற்றிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முறைக்கேற்ப நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

**ஒரு பாடசாலையில் அமுல் நடாத்தப்பட வேண்டிய ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்களின் குறிக்கோள்கள்:-**

1. பல்வேறுவகையான உடல்/உள்ளம் சார்ந்த பிரச்சினைகளை எதிர்கொள்ளும் பாடசாலைச் சிறுவருக்கு கல்வியினால் எதிர்பார்க்கும் குறிக்கோள்களை அடைவதற்கு மாறாக அமைந்துள்ள தடைகளை குறைத்து உரிய கல்விச் செயற்பாட்டில் வெற்றிகரமாக ஈடுபடுவதற்கு வாய்ப்பை வழங்குதல்.
11. பூரண ஆளுமைப் பண்புகளைக் கொண்ட ஒருவராகவும் சமூகத்தோடு இணைந்த நபராகவும் பாடசாலையில் இருந்து சமூகத்திற் பிரவேசித்தல்.
111. மாணவர்களுக்கு அவர்களுடைய பலத்தையும் பலவீனங்களையும் இனங்கண்டு சுய அபிவிருத்தி காண்பதற்காக வாய்ப்பை வழங்கல்.
1v. மாணவர்கள் பற்றிய அறிக்கைகளை நடைமுறைப்படுத்தல் அவர்களின் பாடச்சாதனைகள் ஆளுமைத் தன்மைகள் மற்றும் ஆற்றல்கள் ஆகியவற்றை மதிப்பீடு செய்வதன் மூலம் எதிர்கால தொழில்வாய்ப்புக்கள் பற்றிய சரியான எதிர்பார்ப்புகளை அடைவதற்கு வாய்ப்பளித்தல்.

மதிப்பீடு செய்வதன் மூலம் எதிர்கால தொழில்வாய்ப்புக்கள் பற்றிய சரியான எதிர்பார்ப்புகளை அடைவதற்கு வாய்ப்பளித்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அமைச்சு
"இசுருபாய",
பத்தரமுல்ல,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே.
தொலைபேசி : 865141-50

பாடசாலையின் ஆலோசனைச் சேவைக்கான ஓர் ஆசிரியரை தெரிவு செய்தல்.

(அ) தகைமைகள்

1. பத்தாண்டுகளுக்கு மேற்பட்ட சேவையனுபமுள்ளவராயிருத்தல்.

11. ஆலோசனைச் சேவை பற்றிய விருப்பும் அர்ப்பணிப்பும் உடையவராய் இருத்தல்.

111. மாணவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவராகவும் அவர்களுடன் சினேகமாகவும் அன்பாகவும், புரிந்துணர்வுடனும் சம தன்மையுடனும் செயற்படக் கூடியவராக இருத்தல்.

(மேற்குறித்த 10 ஆண்டு கற்பித்தல் அனுபவம், உளவியல் பட்டதாரிகள் மற்றும் ஆலோசனை பற்றிய பட்டப் பின் பட்டதாரிகளுக்கு பொருத்தமற்றது. அவர்கள் மேற்படி பட்டத்துடன் ஆலோசனை பற்றிய பிரயோகச் செயற்பாடுகளை மாத்திரம் பெற்றிருந்தால் போதுமானதாகும்.)

03. (ஆ) கடமையின் தன்மை

1. சுமார் 300 மாணவர்களைக் கொண்ட ஒவ்வொரு பாடசாலையிலும் ஆலோசனை ஆசிரியர் பூரணகாலக் கற்பித்தல் வேலைகளில் இருந்து விடுவிக்கப் படுவார். அவர் முழுக்காலத்திலும் ஆலோசனை நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். (300 மாணவர்களுக்கு குறைந்த பாடசாலையாயின் உரிய ஆசிரியர் வாரத்திற்கு 15 மணித்தியாலங்கள் கற்பித்தல் நடவடிக்கைகளில் இருந்து விடுவிக்கப்படல் வேண்டும்.)

11. அவர் 3/பீஜீஆர்/பீஜி/34 ஆசிரிய கணிப்பீட்டுச் சுற்றுநிருபத்தின்படி ஆசிரியர்களைக் கணிப்பீடு செய்யும் போது கற்பித்தல் ஆளணியினருக்கு மேலதிகமான ஒருவராக கணிப்பிடப்படலாம். எக்காரணம் கொண்டும் அவர் ஓர் மேலதிகமான ஆசிரியர் என்று கணக்கிடப்படலாகாது.

111. குறிப்பிட்ட ஆசிரியர் இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பில் அமைந்துள்ள சகல சிறப்புரிமைகளையும் பெறுவதற்கு உரித்துடையவராவதுடன் குறிப்பிடப்பட்டுள்ள பதவியுயர்வுகளின் போது ஆலோசனைச் சேவைகளுக்காக வேண்டி அவர் காட்டிய திறமைகள் பங்குபற்றல்கள் மணித்தியாலயங்கள் என்பன கணிப்பிடப்பட வேண்டும்.

03. (இ) குறிப்பிட்ட ஆசிரியரின் கடப்பாடுகள்

1. பாடசாலையில் ஆலோசனைச் சேவையொன்றை ஆரம்பித்து மாணவர்களுக்குத் தேவையான சந்தர்ப்பங்களில் தம்மைச் சந்தித்து ஆலோசனை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை திட்டமிடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அமைச்சு
"இசுருபாய",
பத்தரமுல்ல,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே.
தொலைபேசி : 865141– 50

11. மாணவர் ஒரு நபர் என்ற வகையில் கணிப்பிடப்படும் போது அவர்பால் செல்வாக்குப் பெறும் உளப்பாங்கள் பற்றி தனிப்பட்ட முறையில் ஆலோசனை வழங்கல், மாணவர் கற்றல் நிகழ்ச்சிகளில் ஈடுபடும் ஒருவராக இருப்பதால் அதுபற்றிய கல்விசார் ஆலோசனைகளும் மற்றும் மாணவர் ஒரு குடும்ப அங்கத்தவராக இருப்பதால் அதன் அடிப்படையில் அவர்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகள் சம்பந்தமாகக் குடும்ப ஆலோசனைகளும் மாணவர் எதிர்கால தொழில் உலகிற்கு நுள்ழயக்கூடிய ஒருவராக எதிர்பார்ப்புகளை கொண்டிருப்பதால் அவருக்கு தொழில்சார் வழிகாட்டல்களை யும் வழங்குதல் ஆலோசகரின் கடப்பாடுகளாகும்.

111. ஆலோசனைப் பொறுப்பாசிரியர் அதிபருடனும் ஏனைய ஆசிரியர் குழாத்தினருடனும் இணைந்து பாடசாலையில் அமுல் நடாத்தப்பட வேண்டிய ஆலோசனைத் திட்டத்தை தயாரித்துக் கொள்ள வேண்டும்.

1V. மாணவர் சம்பந்தமான அறிக்கைகளை வைத்தல், தேவையான சந்தர்ப்பங்களில் மாணவர்களுக்கான வசதிகளைச் செய்து கொடுத்தல் ,சமயா சமயத் தலையீடுகள் மூலம் அவர்களை வழிநடாத்தல் என்பன ஆலோசகரினால் செய்யப்பட வேண்டும்.

V. இவ்வாறான சகல வேலைத்திட்டங்களையும் பற்றி அதிபர் மூலமாக ஆசிரியர் குழாத்தினர், மாணவர் அவர்களின் பெற்றார் என்போருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும்.

04. **ஆலோசனைப் பிரிவொன்றை ஆரம்பித்தல.**

இலங்கையின் ஒவ்வொரு பாடசாலையிலும் ஆலோசனைப் பிரிவொன்றை ஆரம்பித்துத் தேவையான மாணவர்களுக்கு ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளச் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

4.1 தேவைகள்

1. ஆலோசனைச் செயற்பாட்டின்போது இரகசியங்களைப் பேணல்.

11, நடைமுறைப்படுத்தப்படும் கோவைகளின் இரகசியத் தன்மைகளைப் பேணிப் பாதுகாத்தல்.

111. மாணவர்களுடன் செயற்படும்போது அவர்களின் உளப்பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் திட்டமிடப்பட்ட ஒரு பின்னணியை வகுத்துக் கொள்ளுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அமைச்சு
"இசுருபாய",
பத்தரமுல்ல,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே.
தொலைபேசி : 865141-50

4.11. பிரிவின் அளவு குறைந்தபட்சம் 20x10 அடிகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். இதற்கு மேலான இடவசதிகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு இருப்பின் அவசியம் அவ்வாறு செய்தல் வேண்டும். பாதுகாப்பாக மூடிவைக்கக் கூடிய வசதியுடைய ஓர் கதவு இருக்க வேண்டும். அதற்குப் புறம்பாக ஒரு மேசையும் மூன்று கதிகைளும் (கைக் கதிரைகள்) கோவைகள் வைப்பதற்கான கபினட் ஒன்றும் இருப்பது அவசியமாகும்.

## 05. ஆலோசனை ஆசிரியரின் தொழில் அபிவிருத்தி

### 05.1 பயிற்சி நடவடிக்கைகள்

இவ்விடயம் ஆலோசனை பற்றிய நிபுணர்களின் வழிகாட்டல் மூலம் கல்வியமைச்சினால் திட்டமிடப்பட்டு த் தேசிய கல்வி நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் பயிற்சி நிகழ்ச்சிகள் அமுல்நடாத்தப்படும்.

பயிற்சி நடவடிக்கைகள் பிராந்திய மாகாண, தேசிய மட்டங்களில் நடாத்தப்படுவதோடு பாடங்கள் தொடர்பான உயர்மட்டப் பாடநெறிகளும் நடத்தப்படும்.

ஒவ்வொரு ஆலோசனை ஆசிரியரும் ஆரம்ப பயிற்சியைப் பெற்ற பின்பு மாத்திரமே சேவையில் ஈடுபடுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

### 5.11 ஆலோசனை ஆசிரியர் பற்றிய புரிந்துணர்வை உறுதிப்படுத்தல்.

ஒவ்வொரு ஆலோசனை ஆசிரியருக்காகவும் பாடசாலை ஆலோசனைச் சேவையில் ஈடுபடுவதற்காக வேண்டி உத்தியோகக் கடிதம் ஒன்று வழங்கப்படும். தாம் பெற்றுள்ள பயிற்சியின் தரத்திற்கேற்ப பின்வரும் பெயர்களால் அவர்கள் அழைக்கப்படுவர்.

#### அ. உதவி மாணவ ஆலோசகர்

வலய/மாகாண அல்லது தேசிய மட்டத்தில் மாணவ ஆலோசனையில் 40 மணித்தியாலயங்களுக்கு மேல் பயிற்சி பெற்றுள்ள, பட்டப்பின் டிப்ளோமா பரீட்சையில் வழிகாட்டலும் ஆலோசனையும் என்ற பாடத்தை ஓர் பாடமாக சித்தியடைந்தள்ள ஒருவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அமைச்சு
"இசுருபாய",
பத்தரமுல்ல,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே.
தொலைபேசி : 865141 – 50

ஆ. மாணவ ஆலோசகர்

கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஏதாவது ஓர் நிறுவனத்தினால் 120 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட ஆலோசனைப் பாடநெறியைப் பின்பற்றிய ஆசிரிய ஆசிரியைகள். (இதற்காக தொழில் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழ்களும் செல்லுபடியானதாகும்.)

இ. சிரேஷ்ட மாணவ ஆலோசகர்.

ஆலோசனை பற்றிய பிரயோகப் பயிற்சியுடன் பட்டப் பின் படிப்பு மட்டத்திலான தகைமைகளைப் பெற்றுள்ள ஒருவர் அல்லது மேலே 'ஆ' வின் கீழ் தகைமை பெற்றுள்ள பயிற்சியுடனான பாடங்களில் ஆலோசனை விடயத்தைக் கற்ற முதுமாணிப் பட்டம் பெற்றுள்ளவர்கள்.

**ஆலோசனைத் தொடரின் செயற்பாட்டின் போது அதிபர்களின் பொறுப்புக்கள்**

1. ஆலோசனைப் பிரிவொன்றை அமைத்துக் கொள்வதற்கு தேவையான வசதிகளை வழங்கல்.
11. தனதும் தம்முடைய ஆசிரியர் குழாத்தினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுத்தல்.
111. ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெறோர்களை ஆலோசனை செயற்பாடுகள் பற்றி வழியுறுத்தல்.
IV. உள்ளக மேற்பார்வை, மதிப்பீடு, பொருத்தமான பாடநெறி என்பனவற்றிற்காக உரிய ஆசிரியரை ஈடுபடுத்தல்.
V. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அபிவிருத்திசார் அணுகு முறை மூலம் பாடசாலையினுள் ஆலோசனைச் செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்தல்.

07. **ஆலோசனைச் செயற்பாட்டின்போது ஏனைய ஆசிரியர்களின் கடப்பாடுகள்.**

பாடசாலை நேரத்தில் எச்சந்தர்ப்பத்திலும் ஆலோசகரைச் சந்திப்பதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கலும் ஆலோசனை நிகழ்ச்சித் திட்டம் பற்றி மாணவர்களிடையே சிறந்த மனப்பாங்கை ஏற்படுத்தலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அமைச்சு
"இசுருபாய",
பத்தரமுல்ல,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே.
தொலைபேசி : 865141 - 50

ஏதாவதொரு பிரச்சினைக்குரிய சந்தர்ப்பத்தில் பாடத்தைக் கற்பிப்பதற்கு மாணவரை எவ்வாறு ஊக்கப்படுத்திய போதிலும் அப் பிரச்சினையினுள் அம்மாணவன் இருக்கும் வரை பலன்தரு கற்றல் நிகழாது. ஆதலால் எச் சந்தர்ப்பத்திலும் (வகுப்பில் பாடமொன்றில் ஈடுபட்டுள்ள பாடவேளையிலும் கூட) நியாயமான ஒரு நிலையில் மாணவருக்கு ஆலோசகரைப் சந்திப்பதற்கான அவகாசத்தை வழங்க வேண்டும்.

08. **ஆலோசனை அசிரியர் மூலம் ஏனைய ஆசிரியர்களை ஆலோசனைக்காக பயிற்றுவிததல்.**

கி.பி.2004 வரை பயிற்சி நடவடிக்கையில் ஆலோசனைகள் பறறிய விசேட நிபுணர்களைக் கொண்டு நடாத்தப்படும் பயிற்சிக்குப் புறம்பாக மாணவ ஆலோசகர்களினதும் சிரேஷ்ட மாணவ ஆலோசகர்களினதும் உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

எனினும் கி.பி.2004 இன் பின் பயிற்சி நடவடிக்கைகளின்போது மேற்குறிப்பிடப்பட்ட உதவிகளை வழங்க வேண்டியது சிரேஷ்ட மாணவ ஆலோசகர்கள் மாத்திரமே.

09. **பின்னூட்டல் நிகழ்ச்சித்திட்டம்**

கல்விக்கோட்ட மட்டத்தில் மூன்று மாததிற்குகொருமுறை கோட்டப் பொறுப்பான கல்விப் பணிப்பாளருடன் ஆலோசனைப் பாடப் பொறுப்பு ஆசிரியர்களின், கூட்டமொன்றை நடத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்குத் தேவையான வசதிகளைச் செய்து கொள்ள வேண்டும். 4 மாதங்களுக்கொருமுறை மாகாணக் கல்விக் காரியாலயத்தின் மூலமாக மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டம் பற்றிய முன்னேற்ற மீளாய்வுகள் செய்யப்பட வேண்டியதோடு 6 மாதங்களுக்கொருமுறை கல்வி அமைச்சு மட்டத்தில் அவ்வம் மாகாணங்களில் நடைபெறுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் சம்பந்தமான மதிப்பீடு நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அமைச்சு
"இசுருபாய",
பத்தரமுல்ல,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே.
தொலைபேசி : 865141- 50

மேற்பார்வைச் செயற்பாடு

கீழ் குறிப்பிடப்படும் படிமுறைகளின்படி அமுல் நடாத்தப்படும்.

1. பாடசாலையின் உள்ளக மட்ட மேற்பார்வை.
2. கோட்ட மற்றும் வலய மட்ட மேற்பார்வை.
3. மாகாண மட்ட மேற்பார்வை.
4. தேசிய மட்ட மேற்பார்வை.

எல்லா மேற்பார்வை செயற்பாடுகளின் போதும் ஆலோசனை நிகழ்ச்சியின் அபிவிருத்திக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதோடு மாணவரின் தனிப்பட்ட சுபாவங்களுக்குக் பாதிப்பு ஏற்படாதவாறு செய்யப்பட வேண்டும்.

ஆலோசனை வேலைகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபடுகின்ற ஆசிரியர்களின் தொழில் அபிவிருத்திக்காக உரிய நடவடிக்கைகள் கல்வி அமைச்சினால் தயாரிக்கப்படும்.

வெற்றிகரமான ஆலோசனைக் கலாசார முறையொன்றை பாடசாலையில் கட்டியெழுப்பி மாணவ பரம்பரையினரின் எதிர்கால நலனுக்காக செயற்படுவதற்கு தாங்கள் வழங்கும் ஒத்துழைப்பு மிகப் பெரிதாக கருதப்படும்.

வைத்திய டாரா டி மெல்
செயலாளர்,
கல்வி அமைச்சு.

பிரதிகள்:-

1. சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்.
2. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்.
3. தவிசாளர், தேசிய கல்வி ஆணைக்குழு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுநிருப இல 1981/13

எனது இல 03/அசை/2/353
உடற்கல்விக் கலைக்குப் பிரிவு
கல்வி அமைச்சு
மலே வீதி
கொழும்பு-02
1982.02.27

எல்லா அதிபர்களுக்கும்.

## பாடசாலைகளில் மனிதவலுவிலிருந்து உச்சப் பயனைப் பெறாதிருத்தல்

தலைமைக் கணக்குப் பரிசோதகரின் வருடாந்த அறிக்கையில், பாடசாலைகளில் மனித வலுப் பிரயோகம் குறைவாகவுள்ளதென எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதுடன் பிந்திவருதல், வராதிருத்தல், உரிய வேலைகளை பொருத்தமான முறையில் செய்யாதிருத்தல், குறைபாடுள்ள மேற்பார்வை என்பன தொடர்பாகவும் விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விடயங்கள் தொடர்பாக ஏற்கனவே ஆலோசனைகள் வழங்கப்பட்டிருப்பினும், சில பாடசாலைகளில் இக்குறைபாடுகள் இன்னும் நிலவுவதாக கணக்குப் பரிசோதனைகளில் தெரிய வந்துள்ளது.

02. இக்காரணங்களால் பின்வரும் அறிவுறுத்தல்களை விடுக்க வேண்டியிருப்பதுடன் தொடர்புடைய எல்லா உத்தியோகத்தராலும் அவை பின்பற்றப்படவும் வேண்டும்.

(1) லீவு :-

லீவில் செல்லுமுன் அதற்காக பொருத்தமான அதிகாரியின் முன்அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். தவிர்க்கமுடியாத நிலைமைகளினால் லீவுக்கான முன்னனுமதியை பெற முடியாமற் போகும் சந்தர்ப்பத்தில், உடனடியாக ஒரு செய்திப் பரிமாற்றத்தின் மூலம் அது பற்றி தெரியப்படுத்த வேண்டும். சாதாரணமான ஒரு கால அளவிற்குள் அவ்வாறான அறிவித்தல் கிடைக்கப்பெறாத பட்சத்தில், பிரதேசக் கல்விப் பணிப்பாளர் அவசியம் என கருதும் பட்சத்தில், அவ்வாசிரியர் சேவையை விட்டுத் தாமாக நீங்கியவர் எனக்கருதி நடவடிக்கை எடுக்கக் கூடிய வகையில் குறிப்பிட்ட ஆசிரியர் தொடர்பான எல்லா விபரங்களையும் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் அல்லது பிரதான கல்வி அதிகாரிகளுக்கு, நீங்கள் அறிவித்தல் வேண்டும். லீவுப் புத்தகத்தில் சகல குறிப்புகளும் பதியப்பட்ட பின் லீவு விண்ணப்பங்கள் பாடசாலை காரியாலயத்தில் கோவையிடப்பட்டு வைக்கப்பட வேண்டும். சம்பளமற்ற லீவு தொடர்பில் பண அறவீடுகளை செய்யும் பொருட்டு மேலதிகமாக பெற்றுக் கொள்ளப்பட்ட லீவு விபரங்கள் பிரதேச கல்விப் பணிப்பாளர்/பிரதான கல்வி அதிகாரி ஆகியோருக்கு அறிக்கையிடப்படல் வேண்டும். பிரதேச கல்விப் பணிப்பாளர்/ பிரதான கல்வி அதிகாரி ஆகியோரால் அவ்வாசிரியரின் சம்பளத்திலிருந்து அக்குறிப்பிட்ட பணத்தொகை காலதாமதமின்றி அறவிடப்படுவதை அதிபர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். சமுகமளிக்காத ஆசிரியர்களுக்கு பதிலாக பதில் வேலை ஒழுங்கொன்றை பாடசாலைகளில் பேணுவது அதிபர்களின் பொறுப்பாகும்.

அனுமதி பெற்றுக்கொள்ளாமல் அல்லது நியாயமான காரணம் ஒன்றின் மீதல்லாமல் சேவைக்கு சமுகமளிக்காத எந்தவொரு ஆசிரியரும் சேவையிலிருந்து தாமாக நீங்கியவராக கருதப்படுவார் என்பதை உங்கள் ஆசிரியர் குழாத்திற்கு தெரியப்படுத்துகின்றேன்.

II) பிந்தி வருதல் :-

உங்கள் பாடசாலையில் சேவை புரியும் சகல ஆசிரியர்களும் கீழ்வரும் முறையில் தமது கடமைகளை செய்கின்றனர் என்பது குறித்து அதிபர்கள் கவனத்தில் எடுத்தல் வேண்டும்.

அ) உரிய வேளைக்கு பாடசாலைக்கு சமுகமளிக்கிறார்களா என்பது பற்றி

ஆ) பாடசாலை முடியும் வரை அவர்களது கடமைகளில் ஈடுபடுகின்றார்களா என்பது பற்றி

இ) வரவுப் பதிவுப் புத்தகத்தில் பாடசாலைக்கு வரும் நேரத்தையும் பாடசாலையை விட்டு செல்லும் நேரத்தையும் சரியாக குறித்து ஒப்பமிட்டுச் செல்கிறார்களா என்பது பற்றி

பாடசாலை தொடங்கும் நேரத்திலிருந்து 15 நிமிடங்கள் கழிந்ததும் உடனடியாக வரவுப்பதிவு புத்தகத்தைச் சிவப்புக் கோடிட்டு மூடவும். பாடசாலை தொடங்கியதன் பின் மூன்று வேலை நாட்களுக்கு ஒவ்வொரு நாளும் ½ மணித்தியாலங்களுக்குள் பிந்தி வரும் ஆசிரியர்களுக்கு, அவ்வாறு பிந்தி வரும் 3 நாட்களுக்கு ஒரு ½ நாள் வீதம் லீவு கணித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை தொடங்கி ½ மணித்தியாலயத்திற்கு பிந்தி சமூகமளிக்கும் ஆசிரியர்களுக்கு அவ்வாறு பிந்திவரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அந்நாள் ½ நாள் லீவாக கணிக்கப்படல் வேண்டும்.

½ நாள் லீவு பெறுவதாயின் குறைந்தது பாடசாலை நடைபெறும் வேலை மணித்தியாலயங்களில் அரைப்பகுதி, அல்லது 2½ மணித்தியாலயங்கள் என்பவற்றில் எது கூடியதோ அந்தளவு மணித்தியாலயங்கள் வேலை செய்ய வேண்டும்.

வழமையாகவே பிந்திவரும் ஆசிரியர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்வதற்கு மேலதிகமாக தனியாள் கோவையில் குறிப்பு இடும் பொருட்டு அது சம்பந்தமாக நிறைவேற்று உத்தியோகத்தருடாக பிரதேச கல்விப் பணிப்பாளர்/ பிரதம கல்வி அதிகாரிகளுக்கு அறிக்கையிடப்படல் வேண்டும்.

III) குறுகிய கால லீவு :-

7.30-13..30 வரையான வேலை நேரத்தைக் கொண்ட பாடசாலைகளில் கடமைபுரியும் ஆசிரியர்களுக்கு உச்சளவு ஒரு மணித்தியாலயத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட ஒரு மாதத்திற்கு இரண்டு சந்தர்ப்பங்களுக்கு கூடாத வகையில் சமயோசித லீவுகளுக்கு மேலதிகமாக, சமயோசித தேவைகளுக்காக இந்த லீவு வழங்கப்படும். அவ்வாறான லீவு சம்பவத்திரட்டு புத்தகத்திலும் குறுகிய கால லீவுப்புத்தகத்திலும் பதியப்பட வேண்டும்.

IV) உரிய வேலையளவு :-

ஆசிரியர் ஆளணித் தேவை தொடர்பான இல 15/1981 உம் 1981.11.03ம் திகதியிடப்பட்டதுமான அமைச்சின் சுற்று நிருபத்தின் ஊடாக வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பாடசாலைத் தலைவர்கள் பின்பற்ற வேண்டும். பாடசாலையில் வைத்திருக்கும் மேலதிக ஆசிரியர்களுக்கு செய்யப்படுகின்ற கொடுப்பனவுகளுக்கு அதிபரே பொறுப்பு என்பதுடன் அது அவரிடமிருந்து அறவிடப்பட நேரும்

V) ஆசிரியர் குழு மேற்பார்வை

ஒவ்வொரு பாடசாலைத் தவணையுள்ளும் எல்லா விடயங்கள் தொடர்பாகவும் ஆற்றப்பட வேண்டிய பணிகளும் பல்வேறு துறைசார்ந்த, ஒவ்வொரு நாளும் ஆற்றப்பட வேண்டிய வேலைகளும் ஆசிரியர்களால் பேணப்படும் குறிப்பு ஏடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை அதிபர்கள் உறுதி செய்தல் வேண்டும். இக் குறிப்பு ஏடுகள் காலத்துக்கு காலம் அதிபரால் பரிசீலனைக்குட்படுத்தப்பட்டு ஒப்பமிடப்படல் வேண்டும். பாடசாலைகளுக்கு திடீர் விஜயம் செய்யும் போதும் ஏனைய மேற்பார்வைகளின் போதும் இக் குறிப்புப் புத்தகங்கள் கல்வி அதிகாரிகளின் பரிசீலனைக்கு உட்படுத்தப்படும்.

03. இச்சுற்று நிருபத்தில் அடங்கியுள்ள விடயங்களை அறிந்து கொண்டதாக உங்கள் குழாமிலுள்ள சகல உறுப்பினர்களதும் ஒப்பம் பெறப்பட்டு வைக்கப்படல் வேண்டும்.

எரிக்.ஜே.டி.சில்வா
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதி:-

1. வட்டாரக் கல்வி அதிகாரிகள்.
2. பிரதேச கல்விப் பணிப்பாளர்/பிரதான கல்வி அதிகாரி
3. கணக்காய்வாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றறிக்கை இலக்கம்: 1998/16(1)

ඔබේ අංකය
உமது இல.
Your No. } ......................

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍ය
அமைச்சர்
Minister } 864807
869325
Fax : 869326

ලේකම්
செயலாளர்
Secretary } 864812

කාර්යාලය
அலுவலகம்
Office } 865141-50

මගේ අංකය
எனது இல.
My No. } 2/பா.அகா.ஆர்./4/27
பாடசாலை செயற்பாட்டுக் கிளை.

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

"ඉසුරුපාය", ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
බත්තරමුල්ල.
"இசுருபாய", ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
பத்தரமுல்ல.
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte.
Battaramulla.

දිනය
திகதி
Date } 08.01.2001.

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்

பொதுப் பாடசாலைகளில் உரிய வயதில் அனுமதிக்கப்படாத
பிள்ளைகளுக்கும் பதிவு செய்யப்பட்ட சிறுவர் இல்லங்களில் உள்ள
பிள்ளைகளுக்கும் கல்வி கற்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதல்
----------------------------------------

இது தொடர்பாக என்னால் 1998-4-29 ஆந் திகதி வெளியிடப்பட்ட இலக்கம் 1998/16 ஐக் கொண்ட சுற்றறிக்கைக்கு கீழ்வரும் திருத்தம் சேர்க்கப்பட்டுள்ளது.

குறித்த சுற்றறிக்கையில் பிரிவு 01இன் இறுதியில் கீழ்க்குறிப்பிடப்படும் விடயம் சேர்க்கப்பட்டுள்ளது. "பிள்ளைகளை பாடசாலைகளில் சேர்க்கும் போது பிறப்புச் சான்றிதழ் சமர்ப்பிக்க முடியாத சந்தர்ப்பங்களில் பிறந்த திகதியை உறுதிப்படுத்துவதற்காக சத்தியக்கடதாசி ஒன்றை சமர்ப்பித்தல் போதுமானது."

ஒப்பம்: வைத்தியரட்ன டி மெல்
செயலாளர்
கல்வி அமைச்சு.

எச்.ஏ.லயனல் பெரேரா
கல்விப் பணிப்பாளர்
பாடசாலை அபிவிருத்தி ஆலோசனையும்
வழிகாட்டலும்.

பிரதி: சகல வலயக்கல்விப் பணிப்பாளர்கள் - அதிபர்களுக்கு அறிவிப்பதற்காக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்று நிருப இல 94/12

எனது இல கஇராசெ/பாஅ/டீ
கல்வி கலாசார அலுவலக அமைச்சு
"இசுறுபாய"
பத்தரமுல்ல
11.05.04

மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்
கோட்டத்திற்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்
பாடசாலை அதிபர்களுக்கும்

## நிதி அன்பளிப்பு ஏற்றுக்கொள்ளல்

பாடசாலைகளில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்காகவும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரால் நிதிகள், அன்பளிப்புகள் சேகரிக்கப்படுவது பற்றி கல்வி அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

பாடசாலைகளில் நடைபெறும் எந்தவொரு நிகழ்ச்சியின் பொருட்டும் மாணவர்களிடமிருந்தோ பெற்றோர் அல்லது பாதுகாவலர்களிடமிருந்தோ எந்த வகையிலும் நிதிகள் அன்பளிப்புகள் ஆகியவற்றைப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் அறவிடுவது, அல்லது பெற்றுக்கொள்வது தவிர்க்கப் படல் வேண்டும் என்பது கண்டிப்பாக கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரும் இச்சுற்றுநிருபத்தில் கூறப்பட்ட விடயங்களைக் கடைப்பிடித்தல் வேண்டும். பாடசாலை ஆசிரியர்கள் அனைவருக்கும் இச்சுற்றுநிருபம் காண்பிக்கப்பட்டு கையொப்பம் பெறப்பட்டு கோவைப்படுத்தப்படல் வேண்டும்.

ஆர்.ஜ.ரி.அலஸ்
கல்வி இராஜங்க அமைச்சின் செயலாளரும்
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின்
மேலதிகச் செயலாளரும்
பிரதி மாகாணக் கல்விச் செயலாளர்கள்

ஒப்பம் என்.வி.கே.கே.வேரகொட
செயலாளர்
கல்வி, கலாசார அலுவல்கள் அமைச்சு

---

சுற்றுநிருப இல 1960/13

எண் GSM/WP/GSI/438
வித்தியா பகுதி
மலாய் வீதி,
கொழும்பு 02
1960 பெப்ரவரி 23

சகல பாடசாலை அதிபர்கள்
தலைமை ஆசிரியர்கள் / ஆசிரியைகள்
உதவிபெறும் பாடசாலைகளின் முகாமைக்காரர்கள்
ஆகியவர்கட்கு

## மாணவரின் கட்டுக்காப்பு

பாடசாலைகளின் தலைவர்கட்கும் அவர்களது உதவி ஆசிரியகட்கும் ஞாபகமூட்டுவது யாதெனில் அவர்தம் பாடசாலையிற் கல்விபயிலும் பிள்ளைகள் பாடசாலைக்கு வந்த நேரந்தொட்டு பாடசாலை வளவை விட்டு வெளியேறும் வரையுள்ள பாடசாலை நேரத்தில் அப்பிள்ளைகளின் பாதுகாப்பிற்கு கூட்டாகவும், தனிமையாகவும் சொந்தத்தில் அவ்வாசிரியர்களின் பொறுப்பானவர்கள் என்பதே.

பாடசாலையின் இயல்பான தொழிற்பாடுகளில் தொடர்புள்ள வேலைகட்கு அன்றி வேறொரு நோக்கத்திற்காகவும் எதுவித சூழ்நிலையிலும் பாடசாலை வளவைவிட்டு மாணவர் வெளியேற அனுமதிக்கப்படலாகாது.

எஸ்.எப்.டி.சில்வா
வித்தியாபதி

பிரதிகள்
1. கல்வியமைச்சின் நிரந்தர காரியதரசி
2. தலைமைக் காரியாலயத்திலுள்ள எல்லா மேற்றர உத்தியோகத்தர்
3. தலைமைக் காரியாலயத்திலுள்ள எல்லா லிகிதர்களும்
4. சகல வித்தியாதிகாரிகள், மாவட்ட வித்தியாதரிசிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இல 2/3/38/111
முறைசாரா கல்விப் பிரிவு
கல்வி உயர்கல்வி அமைச்சு
இசுருபாய, பத்தரமுல்ல
1996 ஒக்டோபர் 21ம் திகதி

எல்லா மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும்
எல்லா வலய கோட்டமட்ட பணிப்பாளர்களுக்கும்

## பட்டதாரி பயிலுநர்களுக்கான மகப்பேற்று லீவு

மேற்குறிப்பட்ட விடயம் தொடர்பான இளைஞர் விவகார விளையாட்டுத்துறை, கிராமிய அபிவிருத்தி அமைச்சின் 1/ 8/ 3/ 26 உம் 95.09.15உம் இடப்பட்ட சுற்றுநிருப கடிதத்துக்கு மேலதிகமாக 1996.06.31ம் திகதியிடப்பட்டதும் 16/96 இலக்கமிடப்பட்டதுமான பொதுநிருவாக அமைச்சின் சுற்றுநிருபம் எல்லா வகையான பியிலுநர்களுக்கும் பிரயோகிக்கதக்கது என இளைஞர் விவகார விளையாட்டுத்துறை கிராமிய அபிவிருத்தி அமைச்சின் 1/ 8/ 3/ 26(1) இலக்க 1996.09.20ம் தேதியிடப்பட்ட கடிதமூலம் எனக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது அந்த சுற்றுநிருபத்தின் பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

பிரம்சிரி வெலிவிட்ட
கல்வி பணிப்பாளர்(மு.க)
கல்வி உயர்கல்வி அமைச்சு

எனது இல 4/18/90
கல்வி உயர்கல்வி அமைச்சு
இசுறுபாய
பத்தரமுல்ல
1990.11.05

பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

## தேசிய கல்வி நிறுவகத்தால் நடாத்தப்படும் பட்டபின் கல்வி டிப்ளோமா பாடநெறியை பயிலும் ஆசிரிய மாணவர்களுக்கான கற்கை விடுமுறை

இவ்விடயம் பற்றி தங்களது தே.க.நி / தொ.அ/ ஆசி கல்3 இலக்கமிடப்பட்டதும் 1990.09.27 ஆம் திகதியிடப்பட்டதுமான கடிதம் தொடர்பாக

மேற்கூறப்பட்ட பாடநெறி சம்பந்தமான கற்கை விடுமுறை வழங்குவது குறித்த கீழ்காணும் தங்களது பிரேரணைகளை யான் ஏற்றுக்கொள்கிறேன்.

1. பாடநெறி நடைபெறும் வார இறுதியின் வெள்ளிக்கிழமை கற்கை விடுமுறை (ஒரு தவணைக்கு மிகக்கூடிய கற்கை விடுமுறைத் தினங்கள் 08 ஆகும்)
2. பரீட்சைக்காக பரீட்சைக்கு முந்திய 10 தினங்களுக்குமான கற்கை விடுமுறை
3. செயன்முறை கற்பித்தலுக்கான 2வது கட்டம் கொழும்பில் நடைபெறுமாயின் அதற்காக நான்கு தினங்கள் கற்கை விடுமுறை.

ஏ.எல்.கருணா சேன
உதவிச் செயலாளர்

கே.விக்ரம சிங்க
கல்வி இராஜாங்க செயலாளரும்
மேலதிக செயலாளரும்
கல்வி உயர்கல்வி அமைச்சின் செயலாளருக்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுநிருப இல 1989/ 01

எனது இல 2/ SEC/3/04/03
விளையாட்டுஇணைந்தபாடவிதான பகுதி
கல்வி அமைச்சு
பத்தரமுல்ல
1989 ஜனவரி 31ம்திகதி

எல்லா அதிபர்களுக்கும்

பாடசாலை கூட்டங்கள்

எனது இலக்கமுடையதும் 1988/2 யும் 88.03.28 இலக்கமுடையதுமான சுற்றுநிருபங்கள் மீது உங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. காலை ஆராதனைக் கூட்டம் ஐக்கியத்தையும் கூட்டொத்துழைப்பையும் விருத்தி செய்யும் ஊடகமாகும் தவிரவும் தேசப்பற்று உயர் மானிடப்பண்பு மதவிசுவாசம் என்பனவற்றை ஏற்படுத்துவதற்கு இந்த காலைக்கூட்டம் வழிவகுக்க வேண்டும். பொதுவாக சர்வ மதங்களின் இலக்கும் மனித சுபீட்சமே அன்றி பிரிவினையை தோற்றுவிப்பதல்ல மாணவர் தமது மதத்தினை பின்பற்றுவதற்கும் ஏனைய மதங்களுக்கு மதிப்பளிப்பதற்கும் வழிகாட்டப்படல் வேண்டும். பல்லின மதங்களை சார்ந்த மாணவர்களிடையேயும் ஒரு ஆராக்கியமான உறவினை வளர்க்கும் வகையில் காலைக்கூட்டங்கள் அமைதல் வேண்டும்"

3. மேற்குறித்த நோக்கங்களை எய்துவதற்கு காலைக் கூட்டங்களை பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

4. பாடசாலைகளின் அன்றாட அலுவல்களை ஆரம்பிக்க முதல் ஒவ்வொரு நாளும் கூடுதல் வேண்டும் ஒரே இடத்தில் கூட்டமுடியாதவாறு மாணவர்கள் தொகை பெரிதாக இருக்குமானால் பொருத்தமான மாற்று ஒழுங்குகளை அதிபர் மேற்கொள்ள முடியும். காலைக் கூட்டங்களுக்கு எல்லா ஆசிரியர்களும் கட்டாயமாக சமூகமளித்தல் வேண்டும்.

5. காலைக்கூட்டமொன்றை ஒழுங்கு செய்ய வேண்டிய விதிமுறைகள் கீழே காணப்படுகின்றன.

   i. மத அனுட்டானம்

   ii. தேசிய கொடி ஏற்றல் தேசிய கொடியை ஏற்றும் போது எல்லா ஆசிரியர்களும் மாணவர்களும் அதற்குரிய நிலையில் நிற்றல் வேண்டும். அதன் பின் தேசிய கீதம் படித்தல் வேண்டும்.

   iii. அதிபர் அல்லது மதகுரு அல்லது அதிதி அல்லது மாணவர், தேசிய பிணைப்பு அதன் முக்கியத் துவம் தொடர்பாக சிறு உரை நிகழ்த்த வேண்டும்.

   iv. பாடசாலையின் கௌரவம், நற்பெயர் என்பவற்றை வளர்க்க செயலாற்றிய ஆசிரியர் மாணவர் பற்றிய விடயங்கள் பிரஸ்தாபிக்கப்பட வேண்டும்.

6. பாடசாலை முடிந்ததும் மிகவும் பவ்வியமான முறையில் மாணவர்கள் வகுப்பறைகளை விட்டு வெளியே செல்ல வேண்டும். அந்தந்த வகுப்பறையில் இறுதிப்பாட வேளையில் கற்பித்த ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவரும் வெளியேறும் வரை வகுப்பறையில் தரித்திருத்தல் வேண்டும். வகுப்பறையைவிட்டு மாணவர்கள் வெளியேற முன்னர்சிறு தியானம் செய்தல் வேண்டும்.

ஏ.எல். விஜயமான
செயலாளர்
கல்வி உயர்கல்வி அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுநிருப இல. 97/ 15

எனது இல 3 /PMD/WS
கல்வி உயர்கல்வி அமைச்சு
"இசுறுபாய"
பத்தரமுல்ல
08.08.1997

எல்லா மாகாணக் கல்விச் செயலாளருக்கும்
மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும்
வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்
அதிபர்களுக்கும்

## பாடசாலை பஞ்சாங்கத்துக்குட்பட்ட வேலை நாட்களில் பாடசாலைகளை மூடுவதற்கும் பதில் பாடசாலை நாட்களை நடத்துவதற்குமான அனுமதி

நாட்டிலுள்ள எல்லாப் பாடசாலைகளும் வருடத்தில் குறைந்தது 210 வேலை நாட்களுக்கு நடாத்தப்பட வேண்டுமென கல்வி உயர் கல்வி அமைச்சு கரிசனை கொண்டுள்ளது. இந்த விடயம் ஒரு முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டிய தொன்றாகையால் பல்வேறு தேவைகளுக்காகவும் பாடசாலைகள் மூடப்படுவதற்கும் பதில் பாடசாலை நாட்களை நடத்துவதற்கும் அனுமதிப்பதும் சில விஷேட நிலைமைகளுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

வருடாந்த பாடசாலை பஞ்சாங்கத்தினை தயாரிப்பதும் அமுல்படுத்துவதும் கோட்டுக் கல்வி அமைச்சின் பணியென்பதால் விசேட நிலைமைகளின் கீழ் பாடசாலைகள் மூடப்படுவதாயினும் கூட அது என்னால் அனுமதிக்கப்படல் வேண்டும் மாகாணக் கல்வி பணிப்பாளரோ வலயக் கல்வி பணிப்பாளரோ அத்தகைய அனுமதியை வழங்கக்கூடாது என்பதனை வலியுறுத்த விரும்புகின்றேன். பாடசாலைகளை மூடுவதற்கு மாகாணக்கல்வி பணிப்பாளரினால் பெறப்படும் வேண்டுகோள்கள் அவரது சிபாரிசுடன் அனுமதியின் பொருட்டு எனக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடந்த காலங்களில் சில சந்தர்ப்பங்களில் மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் எனது முன் அனுமதியின்றி பாடசாலைகளை மூடுவதற்கு இடமளித்திருப்பதாக எனது கவனத்திற்கு கொண்டுவர்பட்டுள்ளது.

தேசியப்பாடசாலைகள் கல்வி உயர்கல்வி அமைச்சின் நேரடி அதிகாரத்தின் கீழ் வருவதனால் தேசிய பாடசாலைகளிலிருந்து எழும் அதையொத்த வேண்டுகோள்கள் அமைச்சின் தேசிய பாடசாலைகள் பிரிவிற்கு நேரடியாக அனுப்பப்படுதல் வேண்டும் பாடசாலைகள் அதிவிசேட நிலைமைகளின் கீழ் மூடப்படுமானாலும் கூட பதில் பாடசாலை நாட்கள் பற்றி என்னால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

எல்லா அதிபர்களும், தொடர்புடைய உத்தியோகத்தர்களும் இந்த சுற்று நிருபத்திலுள்ள நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டப்படுகின்றனர்.

எம்.பி.டி.பீரிஸ்
செயலாளர்
கல்வி உயர் கல்வி அமைச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, உயர்கல்வி அமைச்சு,
'இசுருபாய',
ஸ்ரீ ஜயவர்தனபுர,
கோட்டே, பத்தரமுல்ல.
தொலைபேசி: 865141-50
பெக்ஸ்: 865182
ஈ-மெயில்: secedu@sltnet.lk
வெப்தள முகவரி: www.moesl.org

சுற்றுநிருப இல. 2001/22
2001.09.20

சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல அரச, அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலை அதிபர்கள்,
சகல பிரிவேனாத் தலைவர்கள்.

## ஆசிரியர் செயலாற்றுகைத் தரங்கணிப்பு

மேற்படி விடயம் தொடர்பாக வெளியிடப்பட்ட இலக்கம் 2000/16 உம் 2000.03.30 ஆந் திகதியையும் கொண்ட மற்றும் இலக்கம் 2000/47 உம் 2000.11.20 ஆந் திகதியையும் கொண்ட சுற்றுநிருபங்கள் இத்தால் இரத்துச் செய்யப்படுவதுடன் இதன்பிறகு ஆசிரிய செயலாற்றுகைத் தரங்கணிப்புத் தொடர்பாக இந்தச் சுற்றுநிருபம் செல்லுபடியாகும்.

அரச ஊழியர்களுக்கான சம்பளவேற்றக் கொடுப்பனவு, குறித்த சம்பளவேற்றத்தினைப் பெறும் காலப்பகுதியினுள் அச்செயலாற்றுகை பற்றி நடாத்தப்படும் முறையான கணிப்பீட்டின்படி வழங்கப்படல் வேண்டும் என அரசினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாகப் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் 1998.03.13 ஆந் திகதிய இல. AR/15/1/11 சுற்றுநிருபத்தின்பாலும் 1992 ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்ட தாபனக் கோவையின் vii அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவின் பாலும் உங்கள் கவனத்தை ஈர்க்கின்றேன். எந்தவொரு உத்தியோகத்தருக்கும் ஓர் உரிமையாகச் சம்பளவேற்றம் வழங்கப்படுவதற்கு உருத்துரிமை இல்லை என்பதோடு தனது கடமையை வினைத்திறனுடன் நிறைவேற்றி அதனை தானே பெற்றுக்கொள்ளல் வேண்டும் என்றும் அதில் விளக்கப்பட்டுள்ளது. ஆசிரிய கணிப்பீட்டுக்கான கால எல்லையை ஓர் கலண்டர் வருடமாக (உதாரணமாக 2002.01.01 இலிருந்து 2002.12.31 வரை) கொள்ளுமாறு அறியத்தருவதுடன் சம்பளவேற்ற தினம் கலண்டர் வருடமாக அமையாத ஆசிரியர்களுக்கு இதற்காக முன்னைய வருடச் செயலாற்றுகைத் தரங்கணிப்பின் சிபார்சினைப் பயன்படுத்துமாறும் அறியத்தருகின்றேன்.

ஆசிரிய செயலாற்றுகைத் தரக்கணிப்பீடு அதிபரினால் அல்லது தரங்கணிக்கப்பெறுநரின் இணக்கப்பாட்டுடன் அதிபரால் பெயர் குறிக்கப்படுகின்ற பாடசாலையில் கடமையாற்றும் தொழில் வாண்மைத்துவத்தில் சிரேஷ்டவரான ஆசிரியரால்/ உத்தியோகத்தரால் செய்யப்படல் வேண்டும். தரங்கணிப்பிடுநர் அதிபராகும் பட்சத்தில் தரப்படுத்துநர் வலய/ கோட்ட கல்விப் பணிப்பாளர் ஆவதுடன் ஆசிரியர் எண்ணிக்கை அதிகமாகவுள்ள பாடசாலைகளில் தரங்கணிப்பிடுநராக அதிபர் இல்லாத பட்சத்தில் அதிபர் தரப்படுத்துநராக தொழிற்படுவார். ஆசிரியர் எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருக்கும் பட்சத்தில் தரப்படுத்துநராக, தரங்கணிக்கப்பெறுநரின் இணக்கப்பாட்டுடன் பிரதி/ உதவி அதிபர் அல்லது பிரிவுத் தலைவருக்குப் பொறுப்பளிக்கலாம். ஆசிரியர் செயலாற்றுகைத் தரங்கணிப்புப் படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. ஒரு கலண்டர் வருடத்துக்காக இதனை 3 பிரதிகளில் நடைமுறைப்படுத்திக் கொள்ளல் வேண்டும். 6.0 இல் காட்டப்படும் செயலாற்றுகைத் திட்டத்தின் முதலாம் (i) இரண்டாம் (ii) மூன்றாம் (ii) நிரல்கள் தரங்கணிக்கப்பெறுநர் மூலம் தரங்கணிக்கப்பெறுநருடன் கலந்துரையாடியதன் பின் வருட ஆரம்பத்தில் பூரணப்படுத்தப்படல் வேண்டும். 6.0 இல் காட்டப்படும் செயலாற்றுகைத் திட்டத்தில் கணிப்பீட்டிற்கான நான்காம் (iv) நிரல் வருட இறுதியில் தரம் கணிக்கப்பெறுநர் மூலம் பூரணப்படுத்தப்பட்டதன் பின் ஐந்தாம் (v) நிரல் தரங்கணிப்பிடுநர் மூலம் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். தரப்படுத்துநர் உறுதிப்படுத்தியதன் பின் அதிபர் ஆசிரியர் செயலாற்றுகைத் தரங்கணிப்புப் படிவத்தின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, உயர்கல்வி அமைச்சு,
'இசுருபாய',
ஸ்ரீ ஜயவர்தனபுர,
கோட்டே, பத்தரமுல்ல.
தொலைபேசி: 865141-50
பெக்ஸ்: 865162
ஈ-மெயில்: secedu@sltnet.lk
வெப்தள முகவரி: www.moesl.org

ஒரு பிரதியை ஆசிரியரின் சுயவிவரக் கோவை உள்ள காரியாலயத்திற்கு அனுப்புதல் வேண்டும். தரங்கணிக்கப்பெறுநரும் முதலாம், இரண்டாம் பாடசாலைத் தவணைகளின் இறுதி வாரத்தில் அவ்வச்செயற்பாடுகளில் பெற்றுள்ள முன்னேற்றம் பற்றி மீளாய்வில் ஈடுபடுதல் சிறப்பானதாகும்.

ஆசிரியர் செயலாற்றுகைத் தரங்கணிப்புப் படிவத்தில் 6.0 இன் ஐந்தாம் (V) நிரலில் எழுதப்படும் தரங்கணிப்பிடுநரின் குறிப்பின் சாராம்சத்தினை அதிபர் மூலம் வருட இறுதியில் கல்வி, உயர் கல்வி அமைச்சு மூலம் வழங்கப்பட்டுள்ள ஆசிரியர் பதிவேட்டின் உரிய பக்கங்களில் குறிப்பிடுமாறு ஆலோசனை வழங்கப்படுகின்றது.

இச்சுற்றுநிருபத்தின் பிரமாணங்களைச் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சகல அதிபர்களையும் அறிவுறுத்துவதுடன் இது சரியாக அமுலாக்கப்படுகின்றதாக என்பதைக் கண்காணிப்பது மாகாண, வலயக் கல்விப் பணிப்பாளர்களுடைய பொறுப்பாகும்.

வைத்திய தாரா டி மெல்
செயலாளர்,
கல்வி, உயர் கல்வி அமைச்சு

<u>பிரதிகள் :</u>

1. ஜனாதிபதி செயலாளர்
2. செயலாளர், பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு
3. தவிசாளர், தேசிய கல்வி ஆணைக்குழு
4. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி ஆணைக்குழு
5. சகல பதவிநிலை உத்தியோகத்தர்கள், கல்வி உயர்கல்வி அமைச்சு
6. செயலாளர், கல்விச் சேவை ஆணைக்குழு
7. மாகாணக் கல்விச் செயலாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விச் சேவைக் குழுவின்
சுற்றுநிருப இல:2002/06

எனது இல:கசேகு/அதி/தெ/சுநி/01

அரசாங்க சேவை ஆணைக்குழுவின்
கல்விச் சேவைக் குழு,
'இசுருபாய',
பெலவத்த, பத்தரமுல்ல.

2002.05. 9

சகல மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர்கள்/
சகல மாகாண கல்விச் செயலாளர்கள்/
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்/
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,

### தேசிய பாடசாலைகளில் சேவையில் உள்ள இலங்கை அதிபர் சேவைக்குரித்தான உத்தியோகத்தர்களை சேவையில் நிரந்தரமாக்கல்

தேசிய பாடசாலைகளில் சேவை புரியும் இலங்கை அதிபர் சேவைக்கு உரித்தான உத்தியோகத்தர்களை சேவையில் நிரந்தரமாக்கும் போது ஏற்படும் தாமதங்களை தவிர்ப்பதற்காக அவ்வுத்தியோகத்தர்களை சேவையில் நிரந்தரமாக்குவதற்கான அனுமதி வழங்கும் அதிகாரத்தை, மாகாணக் கல்விப் பணிப்பாளர்களிடம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. எனவே உடன் செயற்படும் வண்ணம் சேவையில் நிரந்தரமாக்குவதற்கான தகைமை பெற்றுள்ள தேசிய பாடசாலைகளில் சேவையாற்றும் அதிபர் சேவைக்குரித்தான உத்தியோகத்தர்களின் கோரிக்கைகளை உரிய வலயக் கல்விப் பணிப்பாளர் மூலம் பெற்று, அவர்களது சேவையை நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தயவாய் அறியத் தருகின்றேன்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவின் பணிப்பிற்கமைய

ரி.எம்.எம்.தென்னகோன்
செயலாளர்
அரசாங்க சேவை ஆணைக்குழுவின்
கல்விச் சேவைக் குழு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Your No. ......................

Telephone Nos.
Chairman 785239
Secretary 785236
Office 785141 – 785150
Fax 787231

கசேகு/அபி/சாபா/பொத/01
My No. கசேகு/அபி/சாபா/பொத

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழு
Education Service Committee of the Public Service Commission

Date 2002.05.9

செயலாளர்,
மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு,
.................................... மாகாணம்.

## இலங்கை அதிபர் சேவைக்குரிய உத்தியோகத்தர்களை சேவையில் நிரந்தரமாக்கல்

மாகாண சபை நிருவாகத்தின் கீழ் உள்ள பாடசாலைகளில் சேவை புரியும் இலங்கை அதிபர் சேவைக்குரித்தான உத்தியோகத்தர்களின் சேவையை நிரந்தரமாக்குவதற்காக அதிகளவு எண்ணிக்கையான விண்ணப்பங்கள் கல்விச் சேவைக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்படுவதுடன், அதன் அளவு கூடுதலாக இருப்பதனால், அவர்களது சேவையில் நிரந்தரமாக்கப்படுவது தாமதமாகும் சந்தர்ப்பங்களும் உண்டு.

02. இவ்வாறு ஏற்படும் தாமதத்தை தவிர்ப்பதற்காக, தங்களது மாகாணத்திற்கு உரிய, தங்களின் கீழ் நிருவகிக்கப்படும் பாடசாலைகளில் சேவை புரியும் இலங்கை அதிபர் சேவைக்கு உரித்தான உத்தியோகத்தர்களின் சேவையில் நிரந்தரமாக்கும் நடவடிக்கையை தங்களுக்கு வழங்குவது உசிதம் என அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

03. அதன் பிரகாரம் தங்களது மாகாணத்திற்குரிய பாடசாலைகளில் சேவை புரியும் இலங்கை அதிபர் சேவைக்கு உரித்தான உத்தியோகத்தர்களின் சேவையை நிரந்தரமாக்கும் விண்ணப்பத்தை வலயக் கல்விப் பணிப்பாளர் மூலம் மாகாண கல்விப் பணிப்பாளரின் சிபார்சுடன் , மாகாண கல்விச் செயலாளரின் சிபார்சின் பேரில் அங்கீகாரம் வழங்க தாங்கள் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தயவாய் வேண்டுகிறேன்.

04. இது சம்பந்தமாக தங்களால் கிடைக்கப்பெறும் ஒத்தாசையை மேலானதாகக் கருதுகின்றேன்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவின் பணிப்பிற்கமைய,

ரி.எம்.தென்னகோன்,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழுவின்,
கல்விச் சேவைக் குழு.

பிரதிகள்:
1. மனிதவள அபிவிருத்தி கல்வி கலாசார அமைச்சின் செயலாளர் அ.கொ.
2. மாகாணக் கல்விச் செயலாளர் ......................மாகாணம் அ.கொ.
3. மாகாணக் கல்விப் பணிப்பாளர் அ.கொ.
4. வலயக் கல்விப் பணிப்பாளர் அ.கொ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விச் சேவைக் குழுவின்

சுற்றுநிருப இல.2002/02

அரசாங்க சேவை ஆணைக்குழுவின்
கல்விச் சேவைக் குழு
'இசுறுபாய'
பெலவத்த, பத்தரமுல்ல

2002.05..02

சகல மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
தேசிய பாடசாலை பணிப்பாளர் கல்வி அமைச்சு,
சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்.

**தேசிய பாடசாலைகளில் சேவை புரியும் ஆசிரியர்களை மாகாண அரசாங்க சேவைக்கு விடுவித்தலும் மாகாண அரசாங்க சேவை ஆசிரியர்களை தேசிய பாடசாலை சேவைக்கு விடுவித்தலும்**

தேசிய பாடசாலைகளில் சேவையில் உள்ள ஆசிரியர்கள் மாகாண அரசாங்க சேவைக்கு விடுவித்தலும் மாகாண அரசாங்க சேவை ஆசிரியர்களை தேசிய பாடசாலை சேவைக்கு விடுவித்தல் சம்பந்தமான நடவடிக்கை 2001.12.10 ஆந் திகதி தொடக்கம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

02. அதன் பிரகாரம் அவ்வாசிரியரை விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் போது, பின்வரும் செயல்முறையை பின்பற்றி, உரிய அங்கீகாரத்திற்காக கல்விச் சேவைக் குழுவிற்கு விண்ணப்பத்தினை சமர்ப்பிக்குமாறு வேண்டுகிறேன்.

03. 1. மாகாண அரசாங்க சேவை ஆசிரியர்களை தேசிய பாடசாலை சேவைக்கு விடுவிக்கும் போது அவ்வாசிரியரை விடுவிப்பதற்காக உரிய (ஈ.எஸ்.சி.ஆர்1) விண்ணப்பப்பத்திரம் பிரதிகள் (05) ஐ தயாரித்து அதிபர்/வலயக் கல்விப் பணிப்பாளர்/மாகாணக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சுடன் அந்த மாகாணத்திலிருந்து விடுவிப்பதற்காக மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் இணக்கத்துடன், மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஊடாக கல்விச் சேவைக் குழுவிற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பம் முதல் முறை சமர்ப்பிக்கும் போது ஆசிரியரை முறையாக விடுவிக்க முடியாது/விடுவிக்க முடியும் என்பதை உரிய அதிகாரிகளின் இணக்கப்பாட்டுடன் மாத்திரம் குறிப்பிடுமாறு வேண்டுகிறேன். (உரியவர்களை விடுவிக்கப்படும் தேசிய பாடசாலைகளில் குறித்த பாடத்திற்கு வெற்றிடம் இருத்தல் வேண்டும். அத்துடன் இக்குழுவினால் தேசிய பாடசாலை பணிப்பாளரிடம் இதுபற்றி நிரூபித்துக் கொள்ளப்படும்.)

11. பதிலாள் இன்றி விடுவிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

111. பதிலாளுடன் விடுவித்தலுக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் பதிலாளை கண்டுபிடித்து அவர்களது விடுவித்த விண்ணப்பப் பத்திரத்துடன் உரிய விண்ணப்பதாரர் இரண்டு பேரினதும் விண்ணப்பப்பத்திரம் சமர்ப்பிக்கப்படுபவர்களுககு அடுத்ததாக முன்னுரிமை வழங்கப்படும்.

04 1. தேசிய பாடசாலை ஆசிரியரொருவர் மாகாண அரசாங்க சேவை பாடசாலைக்கு விடுவிக்கும் விண்ணப்பபத்திரம் சமர்ப்பிக்கும் போதும் (ஈ.எஸ்.சி.ஆர் 1) விண்ணப்பப்பத்திரம் (04) பிரதிகளில் முறையாக பூரணப்படுத்தி அவற்றினை அதிபர்/வலயக் கல்விப் பணிப்பாளர்/மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக இக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் அப்பொழுது விண்ணப்பிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாண மாகாண அரசாங்க சேவைப் பாடசாலையில் உரிய பாடத்திற்காக வெற்றிடம் இருத்தல் வேண்டும். அத்துடன் குறித்த ஆசிரியரை மாகாண அரசாங்க சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கு. மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் விருப்புரிமை இக்குழுவினால் கோரப்பட்டு உறுதிப்படுத்திக் கொள்ளப்படும்.

11. பதிலாள் இன்றி விடுவிப்பதற்கு சிபார்சு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரர் சம்பந்தமாக முன்னுரிமை வழங்கப்படும்.

111. பதிலாளுடன் விடுவிக்க சிபார்சு செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் குறித்த பதிலாளைக் கண்டுபிடித்து, அவர்களது விடுவித்தலுக்கான விண்ணப்பத்துடன் உரிய விண்ணப்பதாரர் இருவரினதும் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுமாயின் அவர்களுக்கு அடுத்ததாக முன்னுரிமை வழங்கப்படும்.

05. மேற்குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய பூரணப்படுத்தப்பட்ட 2003 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பப்பத்திரங்கள் 2002 யூன் மாதம் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு செயலாளர், கல்விச் சேவைக் குழு, 'இசுறுபாய', பத்தரமுல்லை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

06. கல்வி அமைச்சின் செயலாளரின் 2001.11.05 ஆந் திகதிய 'வருடாந்த இடமாற்றம்' என்ற பத்திரிகை அறிவித்தலின் 4.2க்கு அமைவாக 2002 ஆம் வருடத்திற்காக மாத்திரம் மாகாண அரசாங்க சேவை ஆசிரியர்களை தேசிய பாடசாலைக்கு விடுவிக்க முடியாது.

ரி.எம்.எம்.தென்னகோன்
செயலாளர்,
அரசாங்கசேவைஆணைக்குழுவின்
கல்விச் சேவைக் குழு.

பிரதி

சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்
தங்களது வலயத்தில் உள்ள சகல பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் இச்சுற்றுநிருபத்தையும் விண்ணப்பப்பத்திரத்தையும் அறிந்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விச் சேவைக் குழுவின் சுற்றறிக்கை இல: 2002/01

எனது இல: கசேகு/ஆதா/2
அரசாங்க சேவை ஆணைக்குழுவின்,
கல்விச் சேவைக் குழு,
"இசுருபாய",
பெலவத்த, பத்தரமுல்ல.
2002.01.30

சகல மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர்களுக்கும்,
சகல மாகாண கல்வி அமைச்சின் செயலாளர்களுக்கும்,
சகல மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும்.

## இலங்கை ஆசிரியர் சேவைக்கு உரித்தான ஆசிரியர்களின் முறையான நியமனக் கடிதம் வழங்கல்

கல்வி அமைச்சினாலும், கல்விச் சேவைக் குழுவினாலும் அந்நிருவாகம் ஆரம்பிக்கப்பட்ட காலங்களில் வழங்கப்பட்ட பயிலுநர்/உதவி ஆசிரியர்/மாவட்ட சேவை/தகுதிகாண் அல்லது வேறு வகைக்குரிய ஆசிரியர்களின் சுயவிபரக் கோவைகளில் தற்காலிக நியமனக் கடிதம் மாத்திரம் உள்ளதாகவும், அவ்வாறான நியமனக் கடிதங்களுக்குப் பின்னர் முறையான நியமனக் கடிதம் வழங்கப்படும் என குறிப்பிடப்பட்டிருந்தும், அவ்வாறு முறையான நியமனக் கடிதம் பின்னர் சில சந்தர்ப்பங்களில் வழங்கப்படவில்லையென்பதாக அறிய வருகிறது.

02: எவ்வாறாயினும் மாகாண அரசாங்க சேவையில் அல்லது தேசிய பாடசாலைகளில் சேவை புரியும் ஆசிரியர்களது முறையான நியமனக் கடிதம் வழங்கப்படுவதற்கு கல்வி அமைச்சினாலும் கல்விச் சேவைக் குழுவினாலும் பின்னர் உரிய அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டதற்கேற்ப சில வலயக் கல்விக் காரியாலயங்களில் மாத்திரம் இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அறிய முடிகிறது.

03, மாகாண அரசாங்க சேவையில் சேவை புரியும் ஆசிரியர்களின் சுயவிபரக் கோவைகளில் மேற்குறித்த தாமதத்திற்கு தற்போதைக்குமே மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு, மாகாண கல்வி அமைச்சு ஒன்றிணைந்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளுவதாக 2001.11.13ஆந் திகதி ஜனாதிபதி செயலாளர் காரியாலயத்தில், மாகாண கல்வி அமைச்சுக்களின் செயலாளர்களுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் போது தெரிய வந்தது.

04. எனினும் மேற்குறித்த 2இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை கவனிக்கும் போது மாகாண அரசாங்க சேவையிலும் தேசிய பாடசாலைகளிலும் தற்பொழுது சேவையில் ஈடுபட்டுள்ள சகல ஆசிரியர்களினதும் சுய விபரக்கோவைகளை முன்வரும் 06 மாதங்களுக்குள் பரிசீலனை செய்து முறையான நியமனக் கடிதம் இல்லாத ஆசிரியர்கள் இருப்பின், அவர்களை இனங்கண்டு அவர்களது சுயவிபரக் கோவைக்கு முறையான நியமனக் கடிதத்தை சேர்ப்பதற்கும், அதன் ஒரு பிரதியை உரிய ஆசிரியர்களுக்கு வழங்கவும் வேண்டும்.

......02


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. முறையான நியமனக் கடிதம் வழங்கும் போது அறிவுறுத்தல்களில் அல்லது ஏதேனும் தெளிவுபடுத்த வேண்டியிருப்பின் அதுபற்றி தாமதமின்றி மாகாண மட்டத்தில் ஒரு கடிதத்தில் சுருக்கி எடுத்த உரிய படிவத்துடன் இக் குழுவிற்கு அனுப்பி வைக்கவும்.

06. மேலும், தேசிய பாடசாலைகளில் சேவை புரியும் ஆசிரியர்களது முறையான நியமனக் கடிதம் வழங்கும் போது பிரச்சினையை தீர்க்கும் போது அறிவுறுத்தல்கள் பெறுவதற்கு அதனையும், இக் குழுவிற்கு அனுப்பி வைக்க முன், அவ்வகையான தற்பொழுது தங்களது மாகாணத்தினுள் சேவை புரியும், மாகாண அரசாங்க சேவை ஆசிரியர்கள் சம்பந்தமாகவும் உரிய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு/ மாகாணக் கல்வி அமைச்சுக்களினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள முறையின் பிரகாரம் தேவையான திருத்தங்களுடன், மாதிரி முறையான நியமனக் கடிதத்தின் மாதிரியை இக்குழுவிற்கு சமர்ப்பித்து குழுவின் முன் அனுமதியுடன் உரிய நியமனக் கடிதத்தை வழங்குவதற்கு தேவையான நடைமுறையை மேற்கொள்ளுமாறு, மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கு இத்தால் அறிவுறுத்தப்படுகின்றது.

07.. இந்த வேலையை செய்வதற்கு தேவையான அதிகாரம் மாகாண அரசாங்க சேவை உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவின் செயலாளர்களுக்கும், தேசிய பாடசாலைகளில் சேவை புரியும் ஆசிரியர்கள் சம்பந்தமாக மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் வழங்குவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின்
கல்விச் சேவைக் குழுவின் பணிப்பிற்கமைய

பி.எம்.எம். தென்னகோன்,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழுவின்
கல்விச் சேவைக் குழு.

பிரதி:-

1. செயலாளர் - மனித வளங்கள் அபிவிருத்தி கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல.04/2001

எனது இல.ஆ/111/2/12-5
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள்,
நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07
2001.02.20

அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
பிரதான செயலாளர்களுக்கும்,
திணைக்கள தலைவர்கள் யாவருக்கும்.

## அரசாங்க அலுவலர்களின் அலுவலக நேரங்கள்

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 17/96 மூலம் திருத்தப்பட்ட தாபன விதிக்கோவையின் XXVIII ஆம் அத்தியாயத்தின் 1ப உட்பிரிவின்பால் உங்களது கவனத்தை கோருகின்றேன். அதன்படி அரசாங்க சேவைகளில் இருக்கும் அனைத்து அலுவலர்களினதும் (கனிஷ்ட ஊழியர்கள் தவிர) அலுவலக நேரம் மு.ப.9.00 மணியில் இருந்து பி.ப.4.45 வரையாகும். கனிஷ்ட சேவையைச் சேர்ந்த அலுவலக பணியாளர்கள், சைக்கிள் ஏவலாளர்கள், அலுவலகத் தொழிலாளர்கள், மற்றும் நடுத்தர சேவைகளின் ஊழியர்கள் ஆகியவர்களுக்கான அலுவலக நேரம் மு.ப.8.30 மணியில் இருந்து பி.ப.5.15 வரையாகும்.

02. மதிய உணவுக்காக ஒதுக்கப்பட்டுள்ள காலம் 30 நிமிடங்களாகும். அரச கடமையின் நிமித்தம் அலுவலகத்திலிருந்து வெளியே செல்வது தவிர, சேவை நிலையத்தில் தங்கியிருந்து கடமைகளில் ஈடுபடுவதன் அவசியம் கடுமையாக வலியுறுத்தப்படுகின்றது.

03. அரசாங்க அலுவலகங்களுக்கு தமது தேவைகளை நிறைவேற்றி கொள்வதற்காக வரும் சேவை பெறுநர்களுக்கு அவர்களது தேவைகளை தாமதமின்றி உரிய முறையில் நிறைவேற்றி கொடுப்பதற்கு அனைத்து அரசாங்க அலுவலர்களும் கட்டுப்பட்டு இருக்கின்றனர் ஆகையால் அரச கடமையின் நிமித்தம் அல்லது தனிப்பட்ட விடுமுறையின் பேரில் அலுவலகத்திலிருந்து வெளியே செல்வதற்கு முன் தமது கடமைகளை செய்வதற்காக தகுந்த அலுவலரொருவரை குறிப்பிட்டு அதற்காக அனுமதித்த மேற்பார்வை அலுவலரின் அனுமதியை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

04. பதவிநிலை அலுவலர்கள் தமது சேவை நிலையத்திலிருந்து வெளியில் இருக்கும் சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு வரும் தொலைப்பேசி அழைப்புகளுக்கு பதிலளிப்பதற்கு அலுவலரொருவர் இல்லாத சந்தர்ப்பங்களும் இருப்பதாக அறிய வந்துள்ளது. இது தொடர்பாக நிறுவனத் தலைவர்கள் முக்கிய கவனம் செலுத்த வேண்டியதுடன், இந்நிலையை சீராக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்..

ஒப்பம் எம்.என்.ஜுனைட்
செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு.

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுநிருப இலக்கம்: 2000/34


ඔබේ අංකය
உமது இல.
Your No. ..............................

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister } 864807, 869325
Fax : 869326 .

ලේකම් / செயலாளர் / Secretary } 864812

කාර්යාලය / அலுவலகம் / Office } 865141 - 50

මගේ අංකය
எமது இல.
My No. } 4/ஆசிகா.1/10

අධ්‍යාපන හා උසස් අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி அமைச்சு
Ministry of Education and Higher Education

'ඉසුරුපාය' ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
බත්තරමුල්ල.
'இசுருபாய' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
பத்தரமுல்ல
'ISURUPAYA' SRI JAYAWARDHANAPURA KOTTE
BATTARAMULLA.


දිනය
திகதி
Date } 2000.05.29.

சகல மாகாணப் பிரதம செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,

கடமை நிறைவேற்று அதிபர்களை நியமித்தல்

தற்போது நாட்டில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான தரம்பெற்ற அதிப ~~உள்ள~~ ஆசிரியர்களாக இலங்கை அதிபர் சேவையில் உள்ளடக்கப்படாத பலர் சேவையில் ஈடுபட்டுள்ளனர். மேலும் அதிக எண்ணிக்கையான தரமற்ற ஆசிரியர் அதிபர்களாகக் கடமை நிறைவேற்று அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளார்கள்.

இனிமேல் நிறைவேற்று அடிப்படையில் அல்லது பதில் அடிப்படையில் ஆசிரியர் இவ்வமைச்சின் முறையான அனுமதியின்றி அதிபர் சேவையில் அமர்த்தக் கூடாது. இவ்வாறு சேவையில் அமர்த்தப்படும் உத்தியோகத்தர்களை இலங்கை அதிபர் ( சேர்த்துக் கொள்வதில் அமைச்சு எந்தவிதப் பொறுப்பையும் ஏற்காது. மேலும் இது தொடர்பாக எழும் பிரச்சினைகள் மீதுள்ள பொறுப்பை சேவையில் அமர் உத்தியோகத்தரே ஏற்க வேண்டும்.

மேலதிக செயலாளர்
(நிருவாகம்)
கல்வி, உயர்கல்வி அமைச்சின்
செயலாளருக்காக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல: 07/2000

எனது இல: 1/543E/16/95.
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 07.
2000, மார்ச் 07...

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

<u>பதவியுயர்வின் மீது சம்பளம் மாற்றியமைத்தல்</u>

மேற்போந்த விடயம் சம்பந்தமாக, 1994.02.11 ஆம் தேதிய 11/94 ஆம் இலக்க, அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின்பால் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. மேற்போந்த சுற்றறிக்கையின் நியதிகளின்படி, பதவியுயர்வொன்றின் மீதான சம்பளம் மாற்றியமைக்கப்படுகையில், சம்பந்தப்பட்ட அலுவலர் பெறும் சம்பளமானது சேவையில் அவரிலும் கனிட்டராகவுள்ள அலுவலரொருவரின் சம்பளத்திலும் பார்க்க ஒப்பீட்டளவில் ஆகக் குறைவாக வரும் குறிப்பிட்ட சில எடுத்துக்காட்டுக்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. அத்தகைய முரண்பாட்டு நிகழ்வுகளை இயன்றளவு குறைக்கும் நோக்குடன் 11/94 ஆம் இலக்க, அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையானது பின்வருமாறு திருத்தப்பட்டுளது.

03. தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவின் 5:3, 5:3:1, 5:3:2, 5:3:3, 5:3:4 ஆம் உட்பிரிவுகள் இத்தால் நீக்கப்பட்டு அவற்றிற்காக பின்வரும் உட்பிரிவுகள் பதிலீடுசெய்யப்பட்டுள்ளன.

" 5. <u>பதவியுயர்வு மீதான சம்பளம்:</u>

5:3. அலுவலரொருவர் எப்பதவிக்கு பதவியுயர்வு அளிக்கப்பட்டாரோ அப்பதவியின் சம்பளமானது, ஏற்றத்துடனான சம்பள அளவுத்திட்டமொன்றாக இருக்குமிடத்து, பின்வரும் அறிவுறுத்தல்களுக்கு அமைய, அவருடைய சம்பளம் ஒரு சம்பள அளவுத்திட்டத்திலிருந்து வேறு சம்பள அளவுத்திட்டத்திற்கு மாற்றப்படல் வேண்டும். இந்தச் சம்பள மாற்றியமைப்பின்போது அலுவலரொருவர் ஆண்டொன்றுக்குள் அவர் பதவியுயர்வளிக்கப்பட்ட தேதியன்று வரை சம்பள ஏற்றமொன்றினை அவர் உழைத்திருப்பாராயின், அவர் உழைத்துள்ள சம்பள ஏற்றத்திற்குச் சமமானதொரு தொகை அவருக்கு வழங்கப்படல் வேண்டும். பதவியுயர்வின் மீதான சம்பளப் படிநிலையைத் தீர்மானிக்கையில், சம்பள ஏற்றத்தின் அவர் உழைத்துள்ள பெறுமதியைப் பொருட்படுத்தாது, கீழே காட்டப்பட்டுள்ளவாறு அவருடைய சம்பளம் மாற்றியமைக்கப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5:3:1. பதவியுயர்வின் மீது, அலுவலரொருவரால் பெறப்பட்ட கடைசச சம்பளமானது புதிய சம்பள அளவுத்திட்டத்தின் சம்பளப் படிநிலைகளுக்கிடையில் வருமிடத்து, மிகக் கிட்டிய அடுத்த உயர்ந்த சம்பளப் படிநிலையில் அவர் வைக்கப்படல் வேண்டுமென்பதுடன், மேலதிக சம்பள ஏற்றமொன்றும் வழங்கப்படல் வேண்டும்.

5:3:2. பதவியுயர்வின்மீது, அலுவலரொருவரால் பெறப்பட்ட கடைசிச் சம்பளமானது புதிய சம்பள அளவுத்திட்டத்தின் மீதான தொடக்கச் சம்பளத்திற்கு அல்லது ஒரு சம்பளப் படிநிலைக்கு சரிஒத்திருக்குமிடத்து, அடுத்த உயர்ந்த படிநிலையில் அவர் வைக்கப்படல்வேண்டும்.

5:3:3. பதவியுயர்வின்மீது, அலுவலரொருவரால் பெறப்பட்ட கடைசிச் சம்பளமானது, புதிய சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளத்திலும் ஒரு சம்பள ஆண்டேற்றப் படிநிலைக்கு அல்லது அதற்கும்கூட, குறைவானதாகவிருக்குமிடத்து, புதிய சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளத்தில் அவர் வைக்கப்படல்வேண்டும்.

5:3:4. பதவியுயர்வின்மீது, அலுவலரொருவரால் பெறப்பட்ட கடைசிச் சம்பளமானது, புதிய சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளத்திலும் பார்க்க ஒரு சம்பள ஏற்றப் படிநிலையிலும் குறைவானதாகவிருக்குமிடத்து, புதிய சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளப் படிநிலைக்கும் மேலாக மேலதிக சம்பள ஏற்றம் ஒன்று அவருக்கு வழங்கப்படல் வேண்டும்.

04. 11/94 ஆம் இலக்க, அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 5:4, 5:6, 5:7 ஆம் உட்பிரிவுகள் மாற்றமெதுவுமின்றி அப்படியே இருக்கும்.

05. 11/94 ஆம் இலக்க, அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 5:5 ஆம் உட்பிரிவானது இத்தால் நீக்கப்பட்டுள்ளது.

06. 1988.01.01 ஆந் திகதியிலிருந்து 1999.12.31 ஆந் திகதிவரை நடைமுறைப்பட்ட 11/94 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை ஏற்பாடுகளின்கீழ் பதவிஉயர்வுபெற்ற அலுவலரொருவர் முன்னராக வகித்த பதவி/வகுப்பு/தரத்தின் சம்பளமும், தரமுயர்த்தப்பட்ட பதவி/வகுப்பு/தரத்தின் வேதனவேற்றப் பெறுமதியும் சரிசமமாகியும், வேதனவேற்றத் திகதியும் தரமுயர்த்தப்பட்ட திகதியும் ஆகிய இரண்டும் ஒரேதிகதியில் அமைந்தும், அவ்வகுப்புக்கு/தரத்திற்கு தனக்குப் பின்னராக தரமுயர்த்தப்பட்ட கனிஷ்ட அலுவலரொருவரின் சம்பளப் படிநிலையைப் பார்க்க தனது சம்பளம் குறைந்தும் இருப்பின் இம்மூன்று விடயங்களினால் எவரேனுமோர் அலுவலருக்கு இழப்புகள் ஏதும் நேர்ந்திருந்தால் அத்தகைய நபரொருவருக்கு தரமுயர்த்தப்பட்ட பதவியின் புதிய சம்பளப் படிநிலையில் மேலும் ஒரு வேதனவேற்றத்தை பதவி உயர்வுத் திகதியிலிருந்து நடைமுறைப்படும்வண்ணம் மேலதிகமாக வழங்கவேண்டும்.

07. இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளானவை 2000.01.01 ஆம் தேதியன்று முதல் வலுவுக்கு வருதலாதல் வேண்டும்.

08. இச்சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் ஒருப்பாட்டுடன் விடுக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

(மஹிந்த பந்துசேன)
செயலாளர்.

சுற்றறிக்கை இலக்கம்: 1999/23


ඔබේ අංකය / உமது இல. / Your No. ..........

දුරකථන අංක / தொலைபேசி இல. / Telephone Nos.

අමාත්‍ය / அமைச்சர் / Minister } 864807, 869325
Fax : 869326

ලේකම් / செயலாளர் / Secretary } 864812

කාර්යාලය / அலுவலகம் / Office } 865141 - 50

මගේ අංකය / எமது இல. / My No. } 4/ஆசி.1/107/98

අධ්‍යාපන හා උසස් අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி அமைச்சு
Ministry of Education and Higher Education

'ඉසුරුපාය' ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ, බත්තරමුල්ල
'இசுருபாய' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, பத்தரமுல்ல
'ISURUPAYA' SRI JAYAWARDHANAPURA KOTTE, BATTARAMULLA

දිනය / திகதி / Date } 1999.07.05


சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளர்கள்,
சகல வலயப் பொறுப்புக் கல்விப் பணிப்பாளர்கள்,

**தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விமாணிப் பட்டத்தை இலங்கை ஆசிரியர் சேவையில் பட்டதாரி ஆசிரியர் பதவிக்கு அங்கீகரித்தல்.**

1985 இன் 28 ஆம் இலக்கத் தேசிய கல்வி நிறுவன மசோதா மூலம் கல்வி ஊழியர்களுக்குப் பட்டங்களை வழங்கும் அதிகாரம் தேசிய கல்வி நிறுவகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன்படி 1992 தொடக்கம் தேசிய கல்வி நிறுவகம் 10 துறைகள் மூலமாகக் கல்விமாணிப் பட்டத்தை வழங்குவதற்கு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

02. இப்பட்டதாரிகளுக்கு ஆரம்ப, மற்றும் கனிஷ்ட இடைநிலை வகுப்புக்களில் கற்பிப்பதற்கு ஏற்ற முறையில் தயாரிக்கப்பட்ட பாடத்திட்டத்துடனான பட்டமொன்று வழங்கப்பட்டுள்ளதாலும், எதிர்காலத்திலும் அவ்வாறே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாலும், மேல் வகுப்புக்களில் கற்பித்தல்களுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டுமென்று சிபார்சு செய்யப்படவில்லை. கட்டாயமாக ஆரம்ப வகுப்புக்களிலும் கனிஷ்ட இடைநிலை வகுப்புக்களிலும் கற்பித்தல்களில் ஈடுபடுத்தப்பட வேண்டியுள்ளதால் கல்விமாணிப் பட்டம் பெறுவதன் காரணமாக ஆரம்ப வகுப்புக்களில் பயிற்றப்பட்ட ஆசிரியர் பற்றாக்குறை ஏற்படுவதற்கான நியாயமும் இல்லை. எனவே தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விமாணிப் பட்டத்தைப் பல்கலைக்கழக மொன்றினால் வழங்கப்படும் அவ்வாறான ஒரு பட்டத்திற்குச் சமனாக ஏற்றுக் கொள்வதற்கும், அப்பட்டத்தைப் பெற்ற ஆசிரியர்களைப் பட்டதாரி ஆசிரியர்களாகக் கணிப்பதற்கும், அவர்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவையில் பட்டதாரி ஆசிரியர்களுக்கான சகல சிறப்புரிமைகளையும் வழங்குவதற்கும், இவ்வமைச்சு தீர்மானித்துள்ளதென்பதை அறிவிக்கின்றேன். இதற்கேற்ப மாகாண அதிகாரிகளும் நடவடிக்கை எடுப்பார்களென்று இவ்வமைச்சு எதிர்பார்க்கின்றது.

சேனா நாயக்க உபசேன
மேலதிக செயலாளர் (திட்டமிடல்-முகாமைத்துவம்)
கல்வி, உயர் கல்வி அமைச்சின் செயலாளருக்காக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ඔබේ අංකය / உமது இல. / Your No. } ..........................................

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

ඇමති / அமைச்சர் / Minister } 864807, 869325

Fax : 869326

ලේකම් / செயலாளர் / Secretary } 864812

කාර්යාලය / அலுவலகம் / Office } 865141 — 50

මගේ අංකය / எனது இல. / My No. } 4/ஆசா./1/95/97

අධ්‍යාපන හා උසස් අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி அமைச்சு
Ministry of Education and Higher Education

'ඉසුරුපාය' ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ. බත්තරමුල්ල.
'இசுறுபாய', ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே, பத்தரமுல்ல.
'ISURUPAYA' SRI JAYAWARDENAPURA KOTTE. BATTARAMULLA

දිනය / திகதி / Date } 1998.11.28 ஆந் திகதி.

சுற்றறிக்கை இல: 97/28

சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,
வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,

**ஆசிரியர்களின் சுயவிபரக்கோவைகளை ஒரு கல்வி அலுவலகத்திலிருந்து இன்னொரு கல்வி அலுவலகத்திற்கு மாற்றும்போது அனுசரிக்க வேண்டிய நடைமுறைகள்.**

ஆசிரிய ஆசிரியைகளின் சுயவிபரக்கோவைகளை ஒரு கல்வி அலுவலகத்திலிருந்து மற்றொரு கல்வி அலுவலகத்திற்கு மாற்றும் சந்தர்ப்பங்களில் சில ஆசிரியர்களின் சுயவிபரக் கோவைகள் தவறிக்/காணாமற் போவதால் அவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளார்கள் இருப்பதாக இவ்வமைச்சுக்குத் தகவல் கிடைத்துள்ளது. இது மிகவும் கவலைக்குரிய ஒரு விடயமாகும்.

02. இவ்வாறு சுயவிபரக் கோவைகளை மாற்றும்போது பின்வரும் நடைமுறைகளை உடனடியாகச் செயற்படுத்தக்க வகையில் அமுல் நடாத்துமாறு இத்தால் அறிவுறுத்தல் வழங்கப்படுகின்றது.

(அ) ஒவ்வொரு கல்வி அலுவலகத்திற்கும் அனுப்பப்படுகின்ற கோவைகளின் பட்டியல் பின்வருமாறு 4 பிரதிகளில் தயாரிக்கப்பட வேண்டும்.

| கோவை இலக்கம் | ஆசிரியரின் பெயர் | கோவை பிரிவின் பக்கங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| | | |

2...6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் ஒரு பிரதியை உரிய கோவைகளுடன் கோவைகளைப் பெறும் கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பித்து அவற்றைப் பெற்றுக்கொண்டமை பற்றி உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனைய மூன்று பிரதிகளில் ஒரு [illegible] பிரதியை மாகாணக் கல்விச் செயலாளரிடமும் மற்றப் பிரதியை மாகாணக் கல்விப் பணிப்பாளரிடமும் சமர்ப்பிப்பதுடன் 4ம் பிரதியை முன்னைய வலயக் கல்விக் காரியாலயத்தில் கோவையிட்டு வைக்க வேண்டும்.

(ஆ) இவற்றிற்குப் புறம்பாக ஒரு சுயவிபரக் கோவை அலுவலகம் ஒன்றிற்கு அனுப்பப்படும் பட்சத்தில் கோவையிலுள்ள முக்கிய ஆவணங்களை ஒளிப்படப் பிரதி செய்து உபகோவையொன்றைத் தயாரித்து முதல் வலயக் கல்விக் காரியாலயத்தில் வைக்க வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள செயன்முறைகளைப் பின்பற்றுவதற்குக் குறிந்துக் கொள்ளும்படி இத்தால் வலியுறுத்தி, அறியத் தருகிறேன்.

ஒப்பம்: சேனாநாயக்க உபசேக
மேலதிகச் செயலாளர் (நிர்வாகம்)
கல்வி, உயர்கல்வி அமைச்சின்
செயலாளருக்காக.

பிரதிகள் :-

1. க.சே.ஆ.கு.செய.
2. சகல மா.க.செயலாளர்கள்.
3. சிரேட்ட உதவிச் செயலாளர்கள் (தொழிற்றொடர்புகள்)
மேற்படி சுற்றறிக்கையின் 30 பிரதிகள் இத்துடன் அனுப்பப்படுகின்றன. இவை சகல ஆசிரிய தொழிற்சங்கங்களுக்கும் அனுப்பப்படுவதற்காக.
4. நி.அ. - 10 பிரதிகள் அனுப்பப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல: 17/98 எனது இல: ஆ/111/3/17-1

அரசாங்க, நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.
சுதந்திர சதுக்கம்
கொழும்பு-07
1998-05 - 06

ஆந் திகதி
எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்
திணைக்களத் தலைவர்களுக்கும்.

## <u>சொத்துக் கடன்களுக்கான பிணையாளிகள் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்திற்கான திருத்தங்கள்</u>

தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 11.8 ஆம் பிரிவு மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான அக்ரஹார காப்புறுதித் திட்டத்திற்கு ஏற்புடையதாக வெளியிடப்பட்ட 1997.01.31 ஆந் தேதிய 5/97 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றிக்கையின் பால் தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது. மேற்படி சுற்றறிக்கையின் 2(11)ஆம் பந்தியின் குறிப்பிட்டுள்ளவாறு தனது விருப்பப்படி கடன் பாதுகாப்பு காப்புறுதியில் சேர்ந்துள்ள உத்தியோகத்தர்களுக்கு சுற்றறிக்கையின் 3ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள 3 ஆம் பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ள நலன்கள் கிடைப்பதால் அவ் ஏற்பாடுகளை உள்ளடக்கி கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு 11:8:1 என்ற வகையிலான உட்பிரிவொன்று தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தில் உள்ளடக்கி தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 11 ஆம் பிரிவு இத்தால் திருத்தப்படுகின்றது.

11:8:1 அக்ரஹார காப்புறுதித் திட்டத்தின் கடன் பாதுகாப்பு காப்புறுதித் திட்டத்திற்கு உதவித் தொகை செலுத்தும் ஒரு உத்தியோகத்தர் தொடர்பிலானவிடத்து 11:8 இல் குறிப்பிட்டுள்ளவாறு பிணையாளிகளை முன்னளிப்பதற்குப் பதிலான. மாற்றீடாக 5/97 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி அந்தக் காப்புறுதிச் சான்றிதழ் பிணையாக சமர்ப்பிக்க முடியும்.

02. இவ்வேற்பாடுகள் 1997.01.31 திகதி தொடக்கம் நடைமுறைப்படும்.

ஒப்பம்/டிக்ஸன் நிலவீர
பதில் கடமை புரியும் செயலாளர்
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

sot/w/2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிருவாகச் சுற்றறிக்கை இல: 23/97

எனது இல: சீசேம/2/vi
அரசாங்க நிருவாக உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு-07.
1997-11- 27

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்!

## அரசாங்க அலுவலகங்களின் கடிதத் தொடர்பு

அரச அலுவலகங்களுக்கு கிடைக்கப் பெறுகின்ற கடிதங்களுக்கு உரிய நேரங்களில் பதில் அனுப்புவதில் குறைபாடுகள் நிலவுகிறதென்றும் அரச கருமங்களின் பொருட்டு வருகின்ற பொதுமக்களுடன் கண்ணியமாக நடந்து கொள்ளாத சந்தர்ப்பங்கள் உள்ளனவென்றும் கிடைத்துள்ள முறைப்பாடுகளை கவனத்திற் கொண்டு உத்தியோகபூர்வ கடிதத் தொடர்புகள் சம்பந்தமாக தாபனவிதிக் கோவையின் XXVIII ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பந்தியிற்கு உங்களின் கவனத்தை மீண்டும் செலுத்த வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. முக்கியமாக அதன் 3 : 6 ஆம் பந்தி தொடர்பில் தாமதமின்றி பின்வருமாறு நடவடிக்கை எடுப்பதற்காக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு வேண்டிய மதியுரைகளை வழங்குவது மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

I. தாபன விதிக் கோவையின் XXVIII ஆம் அத்தியாயத்தின் 3:6 ஆம் பிரிவின்படி பொது மக்களிடமிருந்து /அரசாங்க நிறுவனமொன்றிடமிருந்து கிடைக்கின்ற கடிதங்களுக்கு தாமதமின்றி பதில் அனுப்ப வேண்டியிருந்தாலும் விரைவாக முறையானதும் பிழையற்றதுமான பதிலை அனுப்புதல் சிரமமாகின்ற சந்தர்ப்பங்களில் அவ்வாறு செய்யும் வரை குறிப்பிட்ட கடிதம் கிடைத்து ஒரு வாரத்திற்குள் இடைக்கால பதிலொன்று அனுப்பப்பட வேண்டுமென்பதை அறியத் தருவதுடன் முறையான பதில் நான்கு வாரங்களுக்குள் அனுப்பப்படல் வேண்டும்.

II. கௌரவ அமைச்சர்கள்/பிரதி அமைச்சர்கள்/பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சரின்/பிரதி அமைச்சரின் கையொப்பத்துடன் அனுப்பப்படுதல் வேண்டும். அவ்வாறில்லாத சந்தர்ப்பங்களில் அமைச்சின் செயலாளரின் /நிறுவனத் தலைவரின் கையொப்பத்துடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

III. கிடைக்கின்ற ஏதேனும் ஒரு கடிதத்திற்கு பதில் அனுப்புவதற்காக கொள்கை ரீதியான முடிவொன்று தேவைப்படுமிடத்து குறிப்பிட்ட கடிதத்தை உடனடியாக அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பித்து மதியுரைகள் பெறப்பட வேண்டும்.

IV. சந்திக்க வருபவர்களுடன் கருணையாகப் பேசி நிலைமையை விளக்கி விடுவதனால் அரசாங்க நிருவாகத்திற்கும் பொது மக்களுக்கும் இடையில் ஒரு சுமுகமான தொடர்பைக் கட்டியெழுப்ப முடியுமாவதுடன் அனைத்து உத்தியோகத்தர்களும் குறிப்பிட்ட நேரத்திற்கு அலுவலகத்திற்கு சமுகமளித்தலும் குறிப்பிட்ட பொழுது
ப ப
புரிவதும் அத்தியாவசியமாகும்.

02. மேலே குறிப்பிட்ட கட்டளைகள் சம்பூரணமாக நடைமுறைப்படுத்தப்படுதில் அனைத்து அதிகாரிகளும் கவனமாக இருத்தல் வேண்டும். அது பற்றி மேற்பார்வை அதிகாரிகள் தங்களது முழுக்கவனத்தையும் செலுத்த வேண்டியதுடன் இந்தக் கட்டளைகளைநடைமுறைப்படுத்துவதில் சிரமமேற்படுகின்ற ஏதேனும் சந்தர்ப்பங்கள் இருப்பின் அவற்றை சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவர் அல்லது அமைச்சின் செயலாளரின் உடனடிக் கவனத்திற்கு கொண்டு வரப்படல் வேண்டும் என்பதையும் அன்புடன் அறியத்தருகின்றேன்.

ஒப்பம்/டிக்சன் நிலவீர
செயலாளர்
அரசாங்க நிருவாக உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.

1/vi/moli



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுநிருப இல:1997/14

எனது இலக்கம்: ஈடு/1/2/90(போதைப்பொருள்)
கல்வி, உயர்கல்வி அமைச்சு,
இசுருபாய, பத்தரமுல்ல.
1997.07.31

சகல பாடசாலை அதிபர்களுக்கும்,

## பாடசாலைகளுக்குள் புகைத்தல், மதுபானம் அருந்துதலைத் தடைசெய்தல்.

"பாடசாலைகளுக்குள் புகைத்தல்" என்பது தொடர்பாக அனுப்பப்பட்டுள்ள 86.04.14 ஆந்திகதியிடப்பட்ட எனது இலக்கம் க/பாஅ/7/27 ஐயும், 92.10.16 ஆந்திகதியிடப்பட்ட எனது இலக்கம் ஈடு/1/2/90 ஐயும் கொண்ட சுற்றுநிருபங்கள் தொடர்பானது.

பாடசாலைகளில் புகைத்தல், மதுபானம் அருந்துதலைத் தடை செய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் அவ்வளவுக்கு வெற்றியளிக்கவில்லை என்பது தெரியவந்துள்ளது. அதனால், கீழே தரப்பட்ட அறிவுறுத்தல்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஆவன செய்யும் படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

01. ஆசிரியர்களோ, அன்றி வேறு ஊழியரோ, அல்லது பாடசாலையைத் தரிசிக்கும் பெற்றோர் பெரியவர்களோ பாடசாலை வளவுக்குள் இருந்து புகைப்பதோ, அன்றி மதுபானம் அருந்துவதோ, முற்றாகத் தடைசெய்யப்படல் வேண்டும்.

02. சிகரட் அல்லது மதுபானம் பாடசாலை மாணவரைக் கொண்டு எடுப்பித்தல் முற்றுமுழுதாய்த் தடைசெய்யப்படல் வேண்டும்.

03. பாடசாலைப் போசனசாலையிலோ, அன்றி வளவுக்குள்ளோ சிகரெட்டோ, அல்லது மதுபானமோ விற்பனை செய்வது முற்றாகத் தடைசெய்யப்படுதல் வேண்டும்.

04. பாடசாலை வளவுக்குள் வைபவவேளைகளில் புகைத்தலோ, அல்லது மதுபானம் அருந்துதலோ முற்றாகத் தடைசெய்யப்படுதல் வேண்டும்.

05. பாடசாலை வளவுக்குள் புகைத்தலையும் மதுபானம் அருந்துவதையும் தடைசெய்தல் தொடர்பான பதாகைகள், விளம்பரப்பலகைகள் தொங்கவிடப்பட்டிருத்தல் வேண்டும்.

06. பாடசாலையிலோ, அல்லது பாடசாலை வளவுக்குள்ளோ மாணவர்கள் அல்லது ஆசிரியர்கள் அல்லது பெரியவர்களோ பெற்றோரோ மற்றும் வேறு வெளியார் யாருமோ மதுபானம், போதைப்பொருள் கொணர்ந்து கொடுத்தற்கு ஆயத்தமாவாராயின் உடனே அதனைத் தடுத்துநிறுத்த ஆவன செய்தல் வேண்டும்.

தயவுசெய்து இச்சுற்றுநிருபத்தில் அடங்குபவற்றை ஆசிரியர் குழாமுக்கும், ஏனைய சேவையாளருக்கும் கட்டுப்பாட்டுடன் கவனத்தை ஈர்க்கும்படி தெளிவுறுத்துக. புகைத்தல்/ மது அருந்துதல்/ தீங்கிழைக்கும் போதைவஸ்துக்கள் பாவித்தல் முதலானவை தொடர்பாக மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்க்கும் அறிவுறுத்தல் வழங்குதல் தொடர்பான செயற்றிட்ட நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துவதற்கும் ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் நன்று.

எம்.ஈ.ஈ.பீரிஸ்,
செயலாளர்,
கல்வி உயர்கல்வி அமைச்சு.

பிரதிகள்:

1. மாகாணக் கல்விச் செயலாளர்கள்
2. மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்.
3. கோட்டத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள்.
4. செயலாளர், சுகாதார அமைச்சின் புகைத்தலும் சுகாதாரமும் தொடர்பான தேசிய ஆணைக்குழு.
5. தலைவர், அபாயகரமான போதைப்பொருட்களின் கட்டுப்பாட்டுத் தேசிய சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க நிருவாகச்
சுற்றறிக்கை இல. 10/97

எனது இல: [illegible]/496/7
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளு
மன்ற அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
1997.03.17ஆந் திகதி.

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்,

**பயிற்சி நெறிகள்/செயலமர்வுகளில் கலந்துகொள்ளும்
உத்தியோகத்தர்கட்கு உத்தியோகபூர்வ விடுமுறை வழங்கல்
தாபன விதிக்கோவை அத்தியாயம் X11 பிரிவு 13.5**

அரச அமைச்சுக்கள்/திணைக்களங்கள் பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழில் சங்கங்கள்/மாநாடுகளினால் ஒழுங்குசெய்யப்படும் பயிற்சிநெறிகள்/செயலமர்வுகளில் கலந்துகொள்வதற்காக சில திணைக்களத் தலைவர்களினால் தகுந்த முறையில் உத்தியோகபூர்வ விடுமுறைகள் வழங்கப்படுவதில்லையென்பது எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

02. தாபனவிதிக்கோவையின் X11 ஆம் அத்தியாயத்தின் 13.6ம் பிரிவின் கீழ் "தான் தொழிற்சங்கமொன்றின் அங்கத்தவர் ஒருவரான கருத்தரங்கொன்றில் கலந்துகொள்வதாக இருந்தால் அல்லது அந்தக் கருத்தரங்கு தான் சேவையாற்றுகின்ற திணைக்களத்தின் விடய எல்லைக்குட்பட்டதாகவிருந்தால் உத்தியோகத்தர் ஒருவருக்கு கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக உத்தியோகபூர்வ விடுமுறை அனுமதிக்கலாம்." என்று அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றபோதிலும், தொழிற் சங்கங்கள்/மாநாடுகளினால் ஒழுங்குசெய்யப்படுகின்ற பயிற்சி நெறிகள்/செயலமர்வுகளில் கலந்துகொள்வதற்காக சில திணைக்களத் தலைவர்கள் உத்தியோகபூர்வ விடுமுறைகள் வழங்கப்படாத சந்தர்ப்பங்கள் தொடர்பிலான முறைப்பாடுகளும் எனக்குக் கிடைத்துள்ளன. அத்தகைய சந்தர்ப்பங்களில் உத்தியோகபூர்வ விடுமுறைகளை வழங்குமாறு அறிவித்து அந்தத் திணைக்களத் தலைவர்கட்கு கடிதங்களை அனுப்ப நேரிடுவதால் அனாவசியமான ஒரு வேலைப்பகுதியை செய்வதற்கு இவ்வமைச்சிற்கு நேர்ந்துள்ளது.

03. பயிற்சி நெறிகள்/செயலமர்வுகளினால் அரச பணியாளர்களின் அறிவு மற்றும் மனப்பாங்குகளினால் மாற்றங்கள் ஏற்படுவதுடன் அரச சேவையை வினைத்திறனுடையதாக நடாத்திச் செல்வதற்காக அவை பெருந்துணையாக இருக்கின்றன. ஆகையால் எல்லா அரச பணியாளர்களையும் சந்தர்ப்பத்திற்கேற்ற முறையில் பயிற்சி நெறிகளில்/செயலமர்வு கலந்து கொள்ளவைப்பது மிக அவசியமானதொன்றாகும்.

அத்தகைய சந்தர்ப்பங்களில் அதற்காக உத்தியோகத்தர்களை பெயரிடவும் அவர்கள், பயிற்சி நெறிகளில்/செயலமர்வுகளில் கலந்துகொள்ளக் கூடியதாக உத்தியோகபூர்வ விடுமுறைகளை வழங்குதலும் திணைக்களத் தலைவர்கள் அனைவரினாலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

04. இதன்படி பயிற்சி நெறிகளில்/செயலமர்வுகளில் உத்தியோகத்தர்களை கலந்து கொள்ளவைக்குமாறும் அவ்வுத்தியோகத்தர்கள் அதில் கலந்துகொள்ளக்கூடியதாக உத்தியோகபூர்வ விடுமுறைகளை வழங்குமாறும் எல்லா அமைச்சுக்களின்/திணைக்களங்களின் தலைவர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகின்றனர். அவ்வாறு உத்தியோகபூர்வ விடுமுறை வழங்க முடியாத காரணங்கள் ஏதும் இருந்தால் மட்டும் இவ்வமைச்சுடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

ஒப்பம்: ஆர். எஸ். ஜயரட்ன
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல
பெருந்தோட்டக் கைத்தொழில்,
பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்று நிருபம் இல: 93/1

கசேச/தா/கசே2/49
அரசாங்க சேவை ஆணைக்குழுவின்
கல்விச் சேவைச் சபை,
'இசுருபாய', பத்தரமுல்லை.
2993 எப்பிரல் ... ஆந்திகதி.

எம். பீ. பன்டுசேன
ජ්‍යෙෂ්ඨ සහකාර ලේකම්
රාජ්‍ය සේවා කොමිෂන් සභාවේ
අධ්‍යාපන සේවා කමිටුව
'ඉසුරුපාය'

மா.க.ப./மேலதிக மா.க.ப.
கோட்டங்களுக்குப் பொறுப்பான சகல
பி.க.ப. கள்.

99/5/19

இலங்கைக் கல்வி நிருவாகச்சேவை, இலங்கை அதிபர்கள் சேவை மற்றும் கல்வி உயர்கல்வி அமைச்சினால் நடத்தப் படுகின்ற வேறு போட்டிப் பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்காக பட்டதாரிச் சேவைக் காலத்தைக் கணித்தல்.

---

இலங்கைக் கல்வி நிருவாகச் சேவை, இலங்கை அதிபர்கள் சேவை- மற்றும் கல்வி,உயர்கல்வி அமைச்சினால் நடத்தப்படுகின்ற வேறு ஆட்சேர்ப்புக் கள் தொடர்பாக நடத்தப்படுகின்ற பரீட்சைகளுக்கு விண்ணப்பிப்பதற்கான அடிப் படைத்தகைமையாக பட்டதாரி ஆசிரியாய் யாதேனுமொரு குறித்த சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டுமெனக் குறிப்பிடப்படுகின்ற சந்தர்ப் பங்களில் பயிலுநர் அடிப்படையில் ஆசிரிய சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களின் நியமனம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து சேவைக்காலத் சேவையில் ஈடுபட்டுள்ளபோது பட்டம் பெற்ற ஆசிரியர்களின், அப்பட்டம் பெற் திகதியிலிருந்துமான சேவைக்காலத்தினையும் மேற் குறித்த போட்டிப்-பரீட்சை களுக்குத் தோற்றுவதற்காக கணிப்பதை தாபனப் பணிப்பாளரின் ஒப்புதல் கிடைக் கப்பெற்றுள்ளது. இதற்கமைய அச்சேவைக் காலத்தினைக் கணிப்பதைக் கல்விச் சேவைச் சபை அங்கீகரிக்கின்றது என்பதை அறியத்தருகின்றேன்.

உங்கள் கோட்டத்திலுள்ள சகல ஆசிரியர்களுக்கும் இது பற்றி அறிவிக்க நடவடிக்கை எடுக்கவும்.

ஒப்பம்: ஏ.எஸ்.வீரரத்ன
செயலாளர்
கல்விச் சேவைச் சபை.

உதவிச் செயலாளர்.

பிரதி:- கல்வி, உயர்கல்விச்/செ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்று நிருப இல 17/91

எனது இல. 3/PMD/ASD/SS/56
கல்வி உயர்கல்வி அமைச்சு
இசுருபாய
பத்தரமுல்ல
1991-10-02

எல்லா மாகாண செயலாளர்கள்
மாகாண கல்விப் பணிப்பாளர்கள்
கோட்ட கல்விப் பணிப்பாளர்கள்
பாடசாலைத் தலைவர்கள்

## பாடசாலை மேற்பார்வை

பாடசாலை மேற்பார்வைக்கான பிரதான தேவைப்பாடு குறித்து பின்வரும் விடயங்கள் தொடர்பாக சகல பிரிவுகளிலும் அவதானம் செலுத்தப்படல் வேண்டும். கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேற்பார்வை செய்ய முயற்சிக்கப்படுவதுடன் மனிதர்கள், கருவிகள், முறைமைகள் என்பவற்றை பொருத்தமாக இணைவுறச் செய்வது அடிப்படையானதும் அவசியமானதுமாகும்.

1. எல்லா பாடசாலைகளும் இது தொடர்பான அறிக்கைகளை பேணுவதுடன் அவற்றை முறையாக நற்காலப்படுத்தலும் வேண்டும். தேவையேற்படின் அதற்குரிய அனுமதியை பெற்றுக் கொள்ளவும் வேண்டும். உதாரணமாக:- நேரசூசி, வருடாந்த வேலைத்திட்டம், வருடாந்த நாட்காட்டி கணக்கு வழக்குகள், மாணவர் அனுமதி பதிவுப்புத்தகம், மதிய உணவு பதிவுப்புத்தகம் லீவுப்பதிவுப்புத்தகம், மதிப்பீட்டுப்பதிவுப் புத்தகம், பொது பரீட்சைகள் தொடர்பான பதிவுப் புத்தகங்கள் போன்றவை.
2. அதிபர், ஆசிரியர்களுக்கு நேரசூசி, பொறுப்புகள், உபகரணங்கள் என்பவற்றை வழங்கும் போது எழுத்து மூலம் ஒப்பமிட்டு வழங்க வேண்டும். அதே போல ஆசிரியர்கள் பாடக்குறிப்பு, பாடப்பதிவு என்பவற்றை அதிபரின் மேற்பார்வைக்கு தேவையான போது சமர்ப்பிக்க வேண்டும்.
3. எந்தவொரு வகுப்பு மாணவருக்கும் நேரசூசியில் "ஓய்வுப் பாடவேளை" உள்ளடக்கப்படக்கூடாது. அதற்கு பதில் வேலை வழங்கும் முறைமை இருத்தல் வேண்டும்.
4. தேவையான போது அவசியமான மூலத் தரவுகளை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருத்தல் வேண்டும். மூலத் தரவு என்பது அந்நாளுக்குரிய பாடசாலைக்கு சமூகமளித்த மாணவர் எண்ணிக்கை, வகுப்பு வாரியாக மாணவர் எண்ணிக்கை, ஆசிரியர் எண்ணிக்கை, ஆசிரியர் வரவு, நிருவாக கட்டமைப்பு, பொதுப்பரீட்சைகளின் பெறுபேறு, நேரசூசி, பாட ஒதுக்கீட்டு கிரயம், வருடாந்த வேலைத்திட்டம், என்பனவாகும் இந்த தரவுகளை பகுத்து காட்சிப்படுத்தல் வேண்டும். வகுப்பு இடாப்புகள், புள்ளிப்பதிவு, மாணவர் அனுமதிப்பதிவு என்பன சரியாக பூரணப்படுத்தப்பட்டுக் கொண்டு செல்லப்படல் வேண்டும். வரவிடாப்புக்களின் வரவுச் சுருக்கம் வகுப்புகளின் எண்ணிக்கைப்பிரகாரம் வருட இறுதியில் கணக்கிடப்பட்டு பதியப்படல் வேண்டும்.
5. அமைச்சின் சுற்று நிருபத்தில் பாடசாலை தவணைகள் பற்றி தரப்பட்ட ஒழுங்கில் பாடசாலை தவணைகள் திட்டமிடப்படல் வேண்டும். வருடத்தில் குறித்தொதுக்கப்பட்ட நாட்களுக்கு பாடசாலையை நடாத்துவது தொடர்பாக கூடிய கவனம் எடுத்தல் வேண்டும்.
6. கோட்ட கல்வி அலுவலரின் முறையான அனுமதியின்றி அதிபர்கள்/ ஆசிரியர்கள்/ மாணவர்கள் தமது சேவையை பிற தனிப்பட்ட நிறுவனங்களுக்கு, தனிப்பட்ட தாபனங்களுக்கு வழங்குதல் கூடாது. சம்பவக்குறிப்பு புத்தகத்தில் குறிப்பொன்றினையிடாது அதிபரோ ஆசிரியரோ பாடசாலை நேரத்தில் பாடசாலையை விட்டு வெளியே செல்லக் கூடாது. அவ்வாறான சம்பவக்குறிப்பில் பதில் ஒழுங்குகள் பற்றி குறிப்பிடல் வேண்டும்.
7. பாடசாலை பேண்ட் வாத்திய குழு தனிநடனகுழு என்பவற்றை உற்சவங்களில் பாவிப்பது தொடர்பாக கல்வி உயர்கல்வி அமைச்சின் 1990/14,2/SP/3/18 ம் இலக்கமும் 1990-04-30 திகதியும் இடப்பட்ட சுற்றுநிருபத்தினை அமுல் படுத்தவும்.
8. அதிபர்கள் ஆசிரியர்களிடம் வருடாந்த வேலைத்திட்டமொன்றினை பெற்றுக்கொள்வதுடன் அவ்வாறான வேலைத்திட்டங்களை வழிபடுத்தவும் மேற்பார்வை செய்தலும் வேண்டும்.

இந்த மேற்பார்வை வேலைத்திட்டம் முழுமையாக கடைப்பிடிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதும் நடைமுறையில் உள்ள மேற்பார்வைத் திட்டத்தினுள் சேர்த்துக்கொள்ளுவதும் மாகாண, மேலதிக மாகாண, கோட்டக் கல்விப் பணிப்பாளர்களதும் பாடத்துக்கு பொறுப்பான பிரதி/உதவி கல்விப்பணிப்பாளர்களதும் கடமையாகும்.

எம்.டி.டி.பீரிஸ்
செயலாளர்
கல்வி உயர்கல்வி அமைச்சு

பிரதி:- கல்விப் பணிப்பாளர் நாயகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்று நிருப இல.1982/2

எனது எண் 03/பிஅ/9/4/28
பிரதேச மேற்பார்வை, முகாமை
அபிவிருத்திப் பிரிவு,
கல்வி அமைச்சு,
கொழும்பு 02,
29.03.82

எல்லா பிரதேசக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்
கல்வி அலுவலகங்களுக்குப் பொறுப்பான எல்லா
பிரதம கல்வி அதிகாரிகளுக்கும்
வட்டாரக் கல்வி அதிகாரிகளுக்கும்
அதிபர்களுக்கும்,

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள்.

31.01.1979 தொடக்கம் நடைமுறையிலிருந்த 17ம் இலக்கச் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின் கீழ் பாடசாலை அபிவிருத்தி சங்கங்கள் இயங்குவதில் எழுந்த பலதரப்பட்ட பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டதன்பின், அதிக கருத்துடைய பாடசாலை அபிவிருத்தி சங்கங்களின் திட்ட நிகழ்ச்சி ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இவ்வீனமாய்ந்த சுற்று நிருபம் வழங்கப்பட்டுள்ளது.

1.1 இந்தச் சுற்றுநிருபத்தின் உள்ளடக்கங்களோடு சம்பந்தப்பட்ட மற்றைய சகல சுற்று நிருபங்களும் இத்தால் நீக்கப்பட்டுள்ளன.

1.2 பாடசாலை அபிவிருத்தி சங்கங்களின் இயக்கமும் தொழிற்பாடும் பின்வரும் விதிகளினதும் பிரமாணங்களினதும் இணக்கத்துடன் 1982ஆம் ஆண்டு மே மாதம் 01ஆம் திகதி தொடக்கம் நடைமுறையில் இருக்கும்.

2. ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒவ்வொரு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் இயக்கப்படும்.

2.1 பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் குறிக்கோள்களும் நோக்கங்களும் பின்வருமாறாகும்-

அ) பெற்றோர்கள், மாணவர்கள், அவ்வப்பகுதியைச் சேர்ந்த மக்கள் ஆகியோரின் கல்வி அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பாடசாலையை அபிவிருத்திசெய்தல்.

ஆ) அவ்வப்பகுதியைச் சேர்ந்த மக்களின் வாழ்க்கையில் விரும்பற்பாலனவான சமூக, கலாசார, பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தற்கு பாடசாலையை ஒரு ஏதுவாக்குதல்.

2.2 மேற்கூறப்பட்ட நோக்கங்களையும் குறிக்கோள்களையும் எய்தும் பொருட்டுப்பின்வரும் முயற்சித் துறைகளில் கல்வி அமைச்சின் கல்விக் கொள்கையுடன் சங்கம் ஈடுபடும்:

அ) கல்வி முயற்சிகள்

நூலக வசதிகள் ஏற்படுத்தல், கல்வி சம்பந்தமான கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், விரைவுரைகள் ஆகியவை ஒழுங்குசெய்தல்; கல்வியில் பின்தங்கிய பிள்ளைகளுக்கு வெளிவகுப்புகள் நடாத்துதல்; கல்வி சம்பந்தமாக அரசாங்கம் கொண்டுள்ள கொள்கைகள் பற்றி பெற்றோர்களும் ஏனையோரும் கொண்டுள்ள அறிவையும் விளக்கத்தையும் மேம்படுத்த உதவுதலும் இக்கொள்கைகளைச் செயற்படுத்தலில் அவர்களின் ஒத்துழைப்பை பெறுதலும்.

ஆ) கலாசார சமூக முயற்சிகள்

நாட்டுப்பாடல்கள், பழக்க வழக்கங்கள், சம்பிரதாய முறைகள், இடப்பெயர்கள், அவ்விடத்திற்குரிய மருந்து வகைகள், வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த இடங்கள் பற்றிய தகவல், அவ்வப்பகுதி இயற்கை மூல வளங்கள் ஆகியவைப் பற்றி கற்றற்பொருட்டு கற்கை வட்டங்கள் ஒழுங்குசெய்தல் நாடகங்கள், கூத்துக்கள் இலக்கியம் ஏனைய இரசஞானக்கலைகள் ஆகியவற்றை நயத்தற்கான ஆற்றலை மேம்படுத்தற் பொருட்டு குழாங்களை ஒழுங்குசெய்தல் சிரமதானம், உடல்நல, சுகாதார முயற்சிகள் ஆகியவற்றை நடாத்துதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) பாடசாலையின் தேவைகள்

கற்பித்தல் உதவிகள், தளபாடங்கள் முதலியன வழங்குதல், பாடசாலைக் கட்டடங்கள் கட்டுதலும் பழுதுபார்த்தலும் ஆசிரியர்களுக்கும் சிறு வேலையாட்களுக்கும் படிகள் கொடுப்பனவு செய்தல்.

ஈ) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஆசிரியரின் பொதுநலனுக்கான தொழில்முறை அபிவிருத்தி

அதிபர், ஆசிரியர்கள், ஆசிரியரின் தொழில்முறை அபிவிருத்திக்காக நிதி உதவி. இலங்கையிலும் வெளிநாடுகளிலும் நடைபெறும் பயிற்சித் திட்டங்களில் பங்கு பற்றுவதற்கு நிதி உதவிகள். (இலங்கையிலும், வெளிநாடுகளிலும்) கல்வி அல்லது போட்டிகளுக்கான சுற்றுலாக்கள் செய்யும் பாடசாலைக் குழுக்களுக்கு நிதி உதவி. பாடசாலை விளையாட்டுப் போட்டிகளுக்கும் ஏனைய பாடசாலை நிகழ்ச்சிகளுக்கும் நிதி உதவி. மாணவர் பொதுநல முயற்சிகளுக்கு நிதி உதவி

3. உறுப்புரிமை

3.1 பாடசாலையில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள், பாதுகாவலர்கள், பாடசாலையைச் சார்ந்த ஆசிரியர்கள் ஆகியோருக்கே பொதுவாக பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்புரிமை வழங்கப்பட்டுள்ளது (பாதுகாவலர் என்பது பாடசாலை சேர்வுப் பதிவேட்டில் அம்மாணவனின் பாதுகாவலர் எனப் பதியப்பட்டவராவர்)

3.2 பின்வரும் நிபந்தனைகளின் கீழ் நலன் விரும்பிகளும் பழைய மாணவர்களும் உறுப்பினர்களாக வரலாம்

அ) ஒரு நலன் விரும்பி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் உறுப்பினராக விண்ணப்பம் செய்யலாம். முகாமைக்குழுவினால் விண்ணப்பதாரி ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டால் விண்ணப்பதாரி குறித்த உறுப்புரிமைப் பணத்தைக் கொடுத்துவிட்டு உறுப்பினராக வரலாம்.

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பழைய மாணவர் சங்கம் இருக்கும் பாடசாலைகளில் அந்தச் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு விண்ணப்பதாரிகளை உறுப்புரிமைக்கு நியமிக்கலாம். அத்தகைய நியமனதாரர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க முகாமைக் குழுவினரின் ஏகமனதாக அங்கீகரிக்கப்பெற்றால் குறித்த உறுப்புரிமைப் பணத்தைக் கட்டிவிட்டு உறுப்பினராகலாம்

இ) அங்கீகரிக்கப்பட்ட பழைய மாணவர் சங்கங்கள் இல்லாத பாடசாலைகளில், பழைய மாணவர்கள் எழுத்திலான விண்ணப்பங்களை பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளருக்கு அனுப்பலாம். முகாமைக்குழுவின் ஏகமனதான அங்கீகாரத்தினால் அவர்கள் குறித்த உறுப்புரிமைப் பணத்தைக் கட்டிவிட்டு உறுப்பினராகலாம்.

ஈ) உறுப்புரிமைப் பணம் வழங்காவிடில் எவரும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் உறுப்பினராகக் கருதப்பட மாட்டார். பாடசாலை ஆசிரியர்கள் இந்தத் தேவைக்கு விலக்கானவர்.

4. உறுப்புரிமைப் பணம்

உறுப்புரிமைக் கட்டணம், பெற்றோர் அல்லது பாதுகாவலர்களுக்கு ஒரு வருடத்திற்கு 3/= ரூபாவிற்கு கூடாமலும் 1/= ரூபாவிற்கு குறையாமலும் பொதுச்சபை அங்கீகரிக்கும். மற்றைய எல்லா உறுப்பினர்கட்கும் உறுப்புரிமைக் கட்டணம் வருடத்திற்கு 15/= ரூபாவாகும். பாடசாலை ஆசிரியர்கள் இக்கட்டணத்திற்கு விலக்கானவர்.

5. கூட்டங்கள்

5.1 சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் ஒவ்வொரு வருடமும் மார்ச் இறுதிக்கு முன்பு நடைபெறும்.

5.2 ஒவ்வொரு வருடமும் குறைந்தது இரண்டு தடவைகளேனும் பொதுக்கூட்டம் நடாத்தப்பட வேண்டும். அத்தகைய கூட்டங்களில் ஒன்று வருடாந்த பொதுக் கூட்டமாக இருக்கும். பொதுக்கூட்டத்திற்கு ஒரு வாரத்திற்கு முன் கடிதம் மூலம் உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.3 தேவைகள் எழும் போது விசேட பொதுக்கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும்.

5.4 ஒவ்வொரு பொதுக்கூட்டத்திலும் வரவு பதிவேடு ஒப்பங்கள் பதிவேட்டில் கோவைப்படுத்தப்பட வேண்டும்.

5.5 வருடாந்த பொதுக்கூட்டம் பொதுக்கூட்டத்தில் நிறைவெண்ணின் படி தீர்மானிக்கப்படும்.

5.6 சங்கத்தின் செயற்குழு, முகாமைக்குழுவிற்கு உறுப்பினர்கள் ஆகியோர் வருடாந்த பொதுக்கூட்டம் மூலம் தெரிவுசெய்யப்பட வேண்டும்.

5.7 பாடசாலை அதிபரைத்தவிர்ந்த வேறெவரும் அடுத்தடுத்து மூன்று வருடங்களுக்கு மேற்பட உத்தியோகம் வகிக்கலாகாது.

5.8 சங்கத்தின் 25% ற்கு மேற்பட்ட உறுப்புரிமையின் எழுத்துருவக் கோரிக்கையின் பேரில் ஒரு விசேட பொதுக்கூட்டம் ஒன்று கூட்டலாம். அத்தகைய சபை கூடுதலின் பொறுப்பு, சங்கத்தின் தலைவரிடமும், செயலாளரிடமும் தங்கியுள்ளது. இந்தக் கோரிக்கை ஒரு மாதத்திற்குள் நிறைவேற்றப்படாவிட்டால் வட்டாரக் கல்வி அதிகாரிக்கு அறிவிக்கலாம். அத்தகைய சந்தர்ப்பத்தில் வ.க.அ. பிரதேசக் கல்விப் பணிப்பாளரின் அங்கீகாரத்துடன் விசேட பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தலாம். விசேட சந்தர்ப்பங்களில் ஒரு பொதுக் கூட்டத்தை நடாத்துவதற்கும் பா.அ.ச இன் கட்டுப்பாட்டை மேற்கொள்வதற்கும் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் தற்காலிகமாக உரிமையைப் பெறுவார்.

6. உத்தியோகத்தர்கள்:-

தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரே சங்கத்தின் உத்தியோகத்தவராவர். பாடசாலை அதிபரே பதவிவழித் தலைவராவர். தெரிவுசெய்யப்படும் பொருளாளர் பாடசாலை ஆசிரியர் குழாம் உறுப்பினராக இருக்க வேண்டும். இத்தேவை பூர்த்தி செய்ய இயலாத கட்டத்தில் பி.க.ப. இன் அங்கீகாரத்துடன் ஒரு பெற்றோர் பொருளாளராகத் தெரிவு செய்யப்படலாம்.

7. முகாமைக்குழு

7.1 தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் உட்படவுள்ள இவ்முகாமைக்குழு குறைந்த பட்சம் ஏழு உறுப்பினர்களைக் கொண்டதாக இருத்தல்வேண்டும். முகாமைக்குழு 21 உறுப்பினர்கட்கு மேற்படலாகாது.

7.2 ஒவ்வொரு வருடாந்த பொதுக்கூட்டத்திலும் ஆளுகைக்குழு ஒரு வருடத்திற்கு இயங்குவதாகவே தெரிவுசெய்யப்பட வேண்டும். அடுத்துவரும் வருடத்திற்கான ஆளுகைக்குழுவை தெரிவு செய்தற் பொருட்டு பொதுக்கூட்டம் ஒன்றினைத் தவிர்க்க முடியாத எக்காரணங்களையிட்டும் நடத்தமுடியாவிடின் அந்நேரம் இயங்கிவரும் ஆளுகைக்குழு பொதுச்சபையின் விவகாரங்களை நிருவகிக்க வேண்டும். எனினும் இயங்கிவரும் ஆளுகைக்குழுவின் பதவிக்காலம் அது தெரிவுசெய்யப்பட்ட திகதியிலிருந்து 18 மாதங்களுக்கு மேல் நீடிக்கப்படாது.

7.3 பொதுச்சபைக்கென பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட அதிகாரங்களைத் தவிர சங்கத்தின் ஏனைய சகல அதிகாரங்களையும் ஆளுகைக்குழு பிரயோகிக்க வேண்டும். சரியானதும் செல்லுபடியானதுமான உறுப்பினர் பதிவேடு ஒன்றினைப் பேணி வைத்திருத்தலும் பெற்றுக்கொள்ளப்பட்ட, செலவிடப்பட்ட பணங்கள் தொடர்பாக உண்மையானதும் செம்மையானதுமான பதிவுச் சுவடிகளை வைத்திருத்தலும் இக்குழுவின் கடமையாகும்.

7.4 வருடத்தின் போது செய்யப்பட்ட வேலை பற்றிய ஒரு விரிவான அறிக்கையையும் கணக்குகள் தொடர்பான ஒரு கூற்றையும் இக்குழு தயாரித்து வருடாந்த பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

7.5 இச்சபை அடுத்துவரும் வருடம் மேற்கொள்ளவிருக்கும் கட்டட அமைப்பு வேலைகள் உட்பட வேலை நிகழ்ச்சித்திட்டம் தொடர்பிலும் படிகள் வழங்கி வெளியாட்கள் சேவைகள் பெறப்படவேண்டிய சந்தர்ப்பங்கள் தொடர்பிலும் பிரதேச கல்விப் பணிப்பாளரின் முன்னனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

7.6 குழு உறுப்பினர்கள் மூன்றிலொரு பகுதியினர் பாடசாலை ஆசிரியர் குழாம் உறுப்பினராக இருக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7.7 உறுப்பினர்களின் எண்ணிக்கை பத்து அல்லது அதற்குக் குறைவாக இருப்பின் நலன் விரும்பிகளின் பிரதிநிதியாக ஒரு உறுப்பினர் இருக்கலாம். எண்ணிக்கை பதினொன்று அல்லது அதற்கு மேல் இருப்பின், நலன் விரும்பிகளின் பிரதிநிதிகளாக இரு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படலாம்.

7.8 பிரதேசக் கல்விப் பணிப்பாளர், தான் தேவையெனக் கருதும் நேரங்களில் முகாமைக் குழுவின் கூட்டம் ஒன்றிற்கு அழைப்பாணை செலுத்த முடியும்.

7.9 2.2 ஆம் பந்தியில் கூறப்பட்ட காரியங்களை மேற்கொள்வதற்குப் பொதுச்சபை உப குழுக்களைத் தெரிவு செய்யலாம். அதிபர், பாடசாலைத் தலைவர்களை தேவைக்கேற்றவாறு இவ் உபகுழுக்களுக்கு நியமிக்கலாம்.

8. பொதுச்செயலாளர் :-

சகல கூட்டங்களிலும் இடம்பெறும் விடயங்கள் தொடர்பிலான நிகழ்ச்சிக் குறிப்புகள், உறுப்பினர் பதிவேடு, ஏனைய வேண்டிய சாதனங்கள் ஆகியவற்றைப் பொதுச்செயலாளர் பேணவேண்டும். அவர் பொதுக்கூட்டங்களையும் குழுக்கூட்டங்களையும் கூட்ட வேண்டும். கல்வி அமைச்சின் அல்லது பிரதேசக்கல்வித் திணைக்களத்தின் அலுவலர்களால் பரிசோதனைக்காக கேட்கப்படும் வேளையில் சமர்ப்பிப்பதற்காக பா. அ. ச. உடன் சம்பந்தப்பட்ட சகல சாதனங்களும் அவரினால் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும்.

9. பொருளாளர்:-

சங்கத்தால் பெற்றுக்கொள்ளப்படும் சகல பணங்களையும் பொருளாளர் பொறுப்பேற்று அவற்றிற்குப் பற்றுச்சீட்டுக்கள் வழங்கவேண்டும். இப்பணங்கள் ஆளுகைக் குழுவின் அறிவுறுத்துதலுக்கு இணங்கவே செலவு செய்யப்பட வேண்டும். பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பெயரில் ஒரு கணக்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரு வங்கியில் ஆரம்பிக்கப்பட்டு ரூ.200/= க்கு மேலதிகமான பணங்கள் யாவும் அக்கணக்கில் இடப்பட வேண்டும். காசோலைகள் தலைவராலும் பொருளாளராலும் ஒப்பமிடப்பட வேண்டும். கணக்கீட்டு வேலைகளின் பொருட்டு வேண்டிய சாதனங்களை பேணுதல் பொருளாளரின் கடமையாகும் இதன் பொருட்டு பின்வரும் புத்தகங்களும் பதிவேடுகளும் பேணப்பட வேண்டும்.

அ) உறுப்பினர் பதிவேடு :-

இதில் உறுப்பினர்கள் பெயர், முகவரி, அவர் கொடுத்த தொகை ஆகிய விபரங்கள் கொடுக்கப்பட வேண்டும்

ஆ) வருமானம், செலவினம் ஆகியவற்றைப் பதிவதற்கான காசுப் புத்தகம்.

இ) பாடசாலை அபிவிருத்தி, மாணவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட யாதேனும் விசேடவேலைகள் ஆகியவை தொடர்பான செலவின விபரங்கள்.

ஈ) இலக்கமிட்ட, அச்சிடப்பட்ட பற்றுச் சீட்டுக்கள் :-

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் இவற்றை அச்சிடலாம். ஆனால் காசுப் பற்றுச் சீட்டுகளுக்கு பி.க.ப./பி.க.அ இன் உத்தியோகப் பேரச்சி இடப்பட வேண்டும்.

உ) பற்றுச்சீட்டு அச்சிடப்பட்டது பற்றிய ஒரு விபரமான அறிக்கை.

ஊ) கொடுப்பனவுகள் தொடர்பில் உரிய உறுதிச்சீட்டுக்கள் பேணப்பட வேண்டும். இச்சாதனங்கள் யாவும், வேண்டப்படும் நேரத்தில், எந்நேரத்திலும் பிரதேசக் கல்வித் திணைக்களம்/ கல்வி அமைச்சு/ கணக்காளர் நாயகத்தின் திணைக்கள உத்தியோகத்தர்களின் பரிசோதனைக்கு கிடைக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

10. கணக்குகளின் கணக்காய்வு :-

கணக்குகளின் கணக்காய்வாளர்களாகத் தொழில் புரிவதற்கு, மூன்று உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழுவைப் (அவர்கள் செயற்குழுவாகவோ அல்லது குழு உறுப்பினர்களாகவோ அல்லது உபகுழுவினர்களாகவோ இருக்கப்படாது) பொதுச்சபை நியமிக்கும். பொதுச்சபை விரும்பினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வுத் தாபனத்தின் சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம். வருடாந்தப் பொதுச்சபையில் சமர்ப்பிப்பதற்குமுன் கணக்காய்வறிக்கை வ.க.அ க்குப் பரிசோதனைக்காகவும் உறுதிப்படுத்துவதலுக்காகவும் அனுப்பிவைக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. பணங்களும் வேறு உதவுதொகைகளும்.

11.1 பொதுச்சபையின் அல்லது முகாமைக்குழுவின் அங்கீகாரத்துடன் சேர்ந்த பணத்தொகை அல்லது பலதரப்பட்ட பொருள் உதவுதொகைகள் சங்கத்தின் தொழில்களை நடாத்துவதற்காகச் சேர்த்த பணத்தொகை, பொருள்கள் முதலியன பொதுச் சபையின் அல்லது முகாமைக்குழுவின் அங்கீகாரத்துடன்தான் பிரயோகிக்கப்படவேண்டும். ஆனால் அத்தகைய சேர்க்கைகள் எவர்மீதும் வற்புறுத்திப் பெற்றதாகவோ அல்லது பாடசாலைப் பிள்ளைகளுக்குத் தொந்தரவு கொடுத்துப் பெற்றதாகவோ இருக்கப்படாது. சேர்க்கப்பட்ட பணங்களுக்கும் பொருள்களுக்கும் செல்லுபடியான பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட வேண்டும். கணக்குப் புத்தகங்கள் பேணப்பட்டு ஒவ்வொரு வருடமும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் வருடாந்த பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

11.2 பணமல்லாத வேறு உதவுதொகைகள் முறையாகப் பொருட் பதிவேட்டிற் பதியப்பட வேண்டும்.

11.3 தொழிநுட்ப பாடங்களை கற்பிப்பதன் விளைவாக உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விற்பனையால் வரும் பணத்தொகையும் பாடசாலை வளவிலுள்ள நிலையான பயிர்ச்செய்கைகளின் விற்பனையால் ஏற்படும் வருமானமும் சங்கத்தின் பணங்களுடன் வரவு வைக்கப்படல் வேண்டும்.

11.4 விவசாயம், தோட்டவேலை, சிகைஅலங்காரம், மரவேலை, உலோக வேலை, புடவை நெசவுவேலை, மட்பாண்ட வேலை, மட்பாண்டங்கள் மினுக்கும் வேலை போன்ற தொழிநுட்ப பாடங்களை கற்பிப்பதன் விளைவாக மாணவர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை விற்பனை செய்வதால் வரும் பணம் உற்பத்தியாளர்களுக்கும் அவர்களின் உதவியாளர்களுக்கும் இடையில் பகிர்ந்தளிக்கப்பட்டு, மிகுதி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துக்குப் பயன்படுத்த வேண்டும். உற்பத்தியாளர்களும் உதவியாளர்களும் என்போர் பாடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள ஆசிரியர்களுக்கு உதவியளித்த மாணவர்களையும் அதிபரையும் கருதும்.

11.5 விளைபொருட்களினதும் தொழிநுட்ப பாடங்களை கற்பிப்பதால் உற்பத்தி செய்யப்படும் விளைபொருட்களினதும் விலை அவற்றின் விற்பனையால் வரும் பணத்தைப் பகிர்ந்தளித்தல் ஆகியன்வ பாடசாலை அதிபர், பாடத்திற்கு பொறுப்பாகவுள்ள ஆசிரியர், பாடசாலை ஆசிரியர் குழாமைச் சேர்ந்த இன்னோர் ஆசிரியர் (இவர் வர்த்தக ஆசிரியராக இருத்தல் விரும்பற்பாலது), பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் ஒருவர் ஆகியோரை கொண்ட விலை நிர்ணயித்தல் குழு ஒன்றினால் தீர்மானிக்கப்படவேண்டும். குறித்த குழு விலைகளை நிர்ணயிக்கும் போது, அவ்வப்பகுதியில் நிலவும் பொருட்களின் அன்றைய விலை சீர்தூக்கப்படல் வேண்டும். விவசாய உற்பத்திப் பொருட்களை பொறுத்தளவில் அவ்வப் பகுதிச் சந்தைப்படுத்தல் சபையின் விலைகள் பெறப்பட வேண்டியதுடன் ஏனைய பொருட்களை பொறுத்தலவில் அவற்றின் விலை பகிரங்கச் சந்தை விலைகளுடன் ஒப்பிட்டு கணிக்கப்படல் வேண்டும். சேதமடையாத பொருட்களுக்கு விலையை நிர்ணயிக்கும் போது உற்பத்திச் செலவிலும் ஆகக்குறைந்தது 10% கூடுதலாக இருக்கவேண்டும்.

11.6 மேற்குறித்த தொழிநுட்ப பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஒவ்வொரு பாடம் தொடர்பான கணக்குகளை வைத்திருந்தற்கான கணக்குப் புத்தகங்களைப் பேண வேண்டும். இவை
பின்வருவனவற்றை அடக்கும் :

i) கையிருப்புப் புத்தகம் ;
ii) தொழில் நடைப் புத்தகம் ;
iii) காசுப் புத்தகம் ;
iv) பற்றுச் சீட்டுப் புத்தகம்.

மாணவர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விற்பனையால் வரும்பணத்தொகைகள் கல்வி B 74 ஆம் இலக்கத்தைக் கொண்ட காசுப் புத்தகத்தில் பதியப்பட வேண்டியதுடன் பொருட்களை கொள்வனவு செய்பவருக்கு கல்வி B 102ஆம் இலக்கத்தை கொண்ட பொதுப் படிவங்களில் பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படவும் வேண்டும். அதிபர் அல்லது அவருடைய பிரதிநிதி அப்பற்றுச் சீட்டுக்களில் முதலொப்பமிட வேண்டும்.

11.7 சங்கத்தின் தொழில்களை ஏற்படுத்துவதற்காக பணங்களைச் சேர்க்க தொடங்குவதற்குமுன் ஒரு விபரமான அறிக்கை (ஏன் பணம் தேவை, தேவைப்பட்ட பணம், எப்படி சேர்த்தல் செய்யப்பட்டது, எப்பொழுது அது தொடங்கப்படும், எப்பொழுது அது முடிவடையும்) பிரதேசக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்டு அவரது முன் அனுமதி பெறப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. பெற்றுக் கொண்ட காசின் பங்கீடு

12.1 தொழிநுட்ப பாடங்கள் கற்பிப்பதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விற்பனையால் பெற்றுக் கொள்ளப்படும் சகல பணத்தொகைகளும் பின்வருமாறு வகுக்கப்படல் வேண்டும் :

12.2 அரசிறைக்குக் கணக்கு வைத்தற் பொருட்டு, உற்பத்திச்செலவு, பிரதேசக் கல்வி அலுவலக கணக்காளரின் பெயருக்கு அனுப்பப்பட வேண்டும். தாககப்பட்டவை பொருத்தமான செலவு இத்தொகையிலிருந்து எடுக்கப்படலாம். செலவு என்பது உற்பத்தி செய்யப்பட்ட பொருளுக்குப் பயன்படுத்தப்பட்ட மூலப் பொருட்களின் செலவைக் கருதுவதாகும்

12.3 இலாபம்
பொருட்களை உற்பத்தி செய்த மாணவர்களுக்கு 40% தொழிநுட்ப பாடங்களுக்கு பொறுப்பாகவுள்ள ஆசிரியர் ஆசிரியர்கட்கு 15%, அதிபருக்கு 10% பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு 35%

13. பாடசாலையில் கற்பிக்கப்பட்ட சகல தொழிநுட்ப பாடங்கள் தொடர்பிலான ஒரு காசுப் புத்தகம் அதிபரால் பேணப்பட வேண்டும். விற்பனை, இலாபப் பகிர்ந்தளித்தமை, மூலப் பொருட்களின் கொள்வனவுக்குப் பிரதேசக் கல்வி அலுவலகம் அனுப்பிய முற்பணம் ஆகியவை தொடர்பான விபரங்களும் இதில் பதியப்பட வேண்டும். உற்பத்திப் பொருட்களின் விற்பனையால் பணத் தொகைகள் பெறுவோர் அதனை உறுதிப்படுத்தும் முகமாக இக் காசுப் புத்தகத்தில் ஒப்பமிட வேண்டும். உள்ளக பொது கணக்குப் பரிசோதனைக் கிளை உத்தியோகத்தர்களின் பரிசோதனையின் பொருட்டு காசுப் புத்தகமும் பற்றுச் சீட்டுக்களின் அடிக்கட்டைகளும் பத்திரமாக வைத்திருக்கப்பட வேண்டும்.

14. பாடசாலைக் காணி

14.1 பாடசாலை வளவிலுள்ள நிலையான பயிர்ச்செய்கையின் பெயரில் அரசாங்கத்துக்குக் கொடுக்கப்பட வேண்டிய தீர்வை பாதேனும் வருடாந்த வாடகை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தால் கொடுக்கப்பட வேண்டும். இச் சங்கம் விளை பொருட்களின் குத்தகையை எடுத்து அதன் வருமானத்தை பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் நிதிக்கு கணக்கு வைக்க வேண்டும். குறித்த வாடகை கொடுப்பனவை பா. அ. ச. பொறுப்பேற்கும் வரை தற்போதுள்ள நடைமுறை பின்பற்றப்படுவதற்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை. ஏற்றுக் கொள்வதில் எக்காரணத்தையிட்டேனும் தாமதம் இருப்பின் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் / பிரதம கல்வி அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டு அறிவுறுத்தல்கள் பெறப்பட வேண்டும்.

14.2 நிலையான பயிர்ச் செய்கையின் பாதுகாப்பு, அறுவடைக்கு உரமிடுதல், அறுவடை செய்தல், அவற்றைப் பேணல் ஆகிய விடயங்களைக் கவனித்துப் பொருட்டு பயிர்ச்செய்கை முகாமைக்குழு ஒன்று பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களிடையேயிருந்து தெரிவு செய்யப்பட வேண்டும். இக்குழுவிற்கு தேவையான உறுப்பினர்களின் தொகை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு குழு தகுந்த முறையில் நியமிக்கப்பட வேண்டும். குழுவின் உறுப்பினர்கள் விசேட படி வழங்கப்படுவார்கள்.

14.3 வருமானத்திலிருந்து 50% பாடசாலை அபிவிருத்தி நிதிக்கு வரவு வைக்கப்பட வேண்டும். எஞ்சியுள்ள 50% முகாமைக்குழு உறுப்பினர்கட்கு விசேட படி வழங்குவதற்கும் 14.2 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள பயிர்களைப் பேணுவதற்கும் பாதுகாப்பதற்கும் ஏற்படும் செலவுகளுக்கும் உபயோகிக்கப்படலாம். முகாமைக் குழுவில் சேவையாற்றும் ஆசிரியர் ஒருவருக்கு அவருடைய திரட்டிய மாதச் சம்பளத்தின் 33 1/3% க்கு அதிகமாக விசேட படி வழங்கப்படாது. ஆசிரியர் அல்லாத ஒருவருக்கு வழங்கப்படும் படியை விட கூடுதலான படி வழங்கப்படக்கூடாது. செலவுகள் ஈடு கொள்ளப்பட்ட பின்னர் பணம் ஏதும் மிகுதியாக இருப்பின், அப்பணமும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும். எனவே, உற்பத்தியிலிருந்து பெறப்படும் 50% மொத்த வருமானமும் மிகுதியாகவுள்ள 50% இல் 14.3 ஆம் பிரிவின் பிரகாரம் செலவுகள் மேற்கொண்ட பின்னர் எஞ்சியுள்ள தொகையும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்.

15. ஏனைய கொடுப்பனவுகள்.

15.1 மாணவர்களின் நலன்புரிக்காக சங்கத்தின் பணத்தில் செலவு செய்யவேண்டியிருப்பின், அத்தகைய செலவுகளுக்கு பிரதேசக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து எழுத்து மூலமான முன் அறிவித்தல் பெறப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15.2 கட்டிடங்கள், விளையாட்டு மைதானங்கள் ஆகியவற்றைத் திருத்தும் வேலைகளை பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மேற்கொள்ளும் பொழுது [illegible] வேலைகளைத் [illegible] செலவு மதிப்பீடுகள், வரைபடங்கள் [illegible] முன் அனுமதியைச் சங்கம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

15.3 கட்டத் தேசிக்கப்பட்ட செலவு ரூபா 2000க்கு [illegible] [illegible] உத்தியோகத்தர் [illegible] வேலைகளை முடிப்பதற்கு [illegible] வேலைகளைச் செய்ய [illegible] பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

15.4 சகல வேலைகளும் [illegible] இன் மேற்பார்வையின் கீழ் நிறைவேற்றப்பட வேண்டும். அவர், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின்கீழ் வேலை செய்யப்பட்டதென்பதையும் தம்மால் அல்லது தம்மால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் வேலைகளைப் பரிசோதனை செய்த பின்புதான் கொடுப்பனவுகள் செய்யப்பட்டதென்பதையும் அவர் உறுதிக்க வேண்டும். [illegible] கட்டிடத் திணைக்களத்தால் அல்லது [illegible] திணைக்களத்தால் நிறைவேற்றப்படும் கட்டட வேலைகளை மேற்பார்வை செய்தல் அவசியமில்லை.

16 கடன்களும் முற்பணங்களும்.

16.1 நிதிகள், சேவைகள் [illegible] பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திலிருந்தோ [illegible] கடனாகவோ முற்பணமாகவோ வழங்கப்படலாகாது. இந்த [illegible] வழங்கப்படுவதற்கு முன் அத்தகைய கடனோ அல்லது முற்பணமோ வழங்கப்பட்டிருப்பின் அத்தகைய கணக்குகள் உடனடியாகத் தீர்த்து வைக்கப்பட வேண்டும்.

17 பாடசாலை அதிபருக்கு உரிமையளித்த உள்ளக நிர்வாக தொழிற்பாடுகளில் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தலையிடக்கூடாது.

18 தேவையேற்படக் கருதப்படும் நேரங்களில் ஏதாவது அல்லது சகல [illegible] விதிகளையும் பிரமாணங்களையும் வழங்குவதற்குக் கௌரவ கல்வி அமைச்சர் உரித்துடையவர் ஆவார்.

எரிக் ஜே. டி. சில்வா,

கல்வி அமைச்சின் செயலாளர்.

பிரதிகள்:

1) கணக்காளர் நாயகம்.
2) உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்று நிருப இல. 13/59

இல GED 5026
கல்வித்திணைக்களம்
மலே வீதி
கொழும்பு 02
பெப்ரவரி 12.1959

எல்லா அரச பாடசாலை தலைவர்களுக்கும்

## இடமாற்றத்தின் போது பதவி ஏற்கத்தவறுதல்

இடமாற்றக் கட்டளைக்குட்பட்ட ஒரு ஆசிரியர் புதிய பாடசாலையில் உரிய தினத்தில் அல்லது அடுத்த தினத்தில் முன்னனுமதி அல்லது லீவுக்கான அனுமதியை பெற்றுக்கொள்ளாது கடமையை ஏற்றுக்கொள்ள தவறுவாராயின் அவர் தாமாகவே பதவியை விட்டு விலகியதாக கருதப்படுவதுடன் இடமாற்ற உத்தரவு கூட ரத்துச் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2. உங்கள் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர் ஒருவர் உரிய திகதியில் கடமைகளைப் பொறுப்பேற்காது விட்டால் அதற்கான லீவு முன்கூட்டியே பெறப்பட்டிருக்காது விட்டால் அது தொடர்பாக 24மணி நேரத்துக்குள் உங்கள் பிரதேசத்துக்குரிய கல்வி அலுவலருக்கு அறிவித்தல் வேண்டும். அதன் பிரதி இந்த காரியாலயத்தின் நிருவாகக் கிளைக்கு அனுப்பப்படல் வேண்டும்.

3. மேலும் உங்கள் பாடசாலையிலிருந்து யாதேனும் ஒரு ஆசிரியர் வேறு பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றிருப்பின் எக்காரணம் கொண்டும் அந்த இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது என உங்களுக்கு தகவல் அனுப்பப்பட்டாலேயன்றி அவ்வாசிரியரின் பெயர் சம்பளப்பட்டியல் இடம்பெற அனுமதிக்கக்கூடாது. இதனை கடைப்பிடிக்காமையினால் ஏதாவது மேலதிக கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருப்பின் அவை உங்கள் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட வேண்டியிருக்கும்.

4. இந்த சுற்று நிருபம் உங்கள் சுற்றுநிருபக் கோவையில் ஒழுங்குவிதி 136ல் குறிப்பிட்டுள்ளவாறு கோவைப்படுத்தப்பட வேண்டும்.

ஜே.விக்கிரமசிங்க
வித்தியாபதிக்காக

பிரதிகள்

1. கல்வி அதிகாரிகள்
2. மாவட்டக் கல்விப் பரிசோதகர்
3. வட்டாரக் கல்விப் பரிசோதகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுநிருப இல 93/18

எனது இல. 3/ PMD /ASD / WS/P/2
பாடசாலை முகாமைத்துவ ஒழுங்கமைப்புக் கிளை
கல்வி உயர்கல்வி கலாச்சார விவகார அமைச்சு
இசுருபாய
ஸ்ரீ ஜயவர்த்தன புர கோட்டை
பத்தரமுல்ல

எல்லா மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்

## தேசிய பாடசாலைகளின் நிர்வாகத்தைப் பன்முகப்படுத்தல்

தீவடங்கலிலுமுள்ள தேசிய பாடசாலைகள் யாவும் மூலக் கல்வியமைச்சின் நிர்வாகத்துக்குட்பட்டவையாகும். எவ்வாறாயினும் மாகாண மட்டத்தில் மூலக் கல்வியமைச்சின் செயற்பாடுகள் மாகாண கல்விப் பணிப்பாளரூடாகவே செய்யப்படுவதால் தேசிய பாடசாலைகளைப் பொறுத்தவரை பின்வரும் விடயங்களில் மூலக் கல்வி அமைச்சின் மேற்பார்வை ஒழுங்கமைப்பின் கீழ் மேற்கொள்ள உங்களுக்கு அதிகாரமளிக்கப்படுகிறது.

1. ஆசிரியர் இடமாற்றம், ஆசிரியர் ஆளணி தொடர்பான சிபாரிசுகளை கல்வி உயர்கல்வி அமைச்சின் பாடசாலை முகாமைத்துவ அபிவிருத்திக்கு பிரிவுக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஊடாக கல்விச்சேவை சபை செயலாளருக்கு அனுப்புதல்.
2. ஒவ்வொரு வருடத்தினதும் ஜனவரி 15ம் தேதிக்கு முன்னர் நேரசூசிகளை பெற்று அனுமதித்து வழங்கல்.
3. எல்லா விடயங்கள் மீதான மேற்பார்வை
4. உரிய விதிகளுக்கும் அமைச்சின் ஆலோசனைகளுக்கும் உட்பட்டு பாடசாலை அபிவிருத்தி சபை தொடர்பான விடயங்கள்
5. ஒதுக்கப்பட்ட அடிப்படை வேலைகள்
6. மரத்தளபாடங்கள் தொடர்பாக தேவையான பொருட்கள் உபகரணங்கள் என்பவற்றை முன்னுரிமை அடிப்படையில் உரிய வேளைக்கு மூலக் கல்வி அமைச்சுக்கு அனுப்புதலும் அமைச்சிக் கொள்கையின் அடிப்படையில் பொருட்களை வழங்குதலும் பகிர்ந்தளித்தலும்
7. பாடசாலை கட்டிடத் தேவைகளை அடையாளம் காணலும், பாடசாலை கட்டிட நிர்மாணம் தொடர்பான முன்னேற்ற அறிக்கைகளை உரிய வேளைக்கு அமைச்சுக்கு அனுப்புதலும்
8. ஆசிரியர் மாணவர் தொடர்பான ஆரம்ப ஒழுக்காற்று நடவடிக்கைகள்
9. புலமைப் பரிசில் கொடுப்பனவும் வேறு கொடுப்பனவும்
10. தேசிய பாடசாலைகள் தொடர்பான தரவுகளை சேகரித்தலும் தேவைப்படும் போது மூலக்கல்வி அமைச்சுக்கு அனுப்புதலும்.

02. தேசிய பாடசாலைகள் தொடர்பில் மேற்படி விடயங்கள் உங்கள் மூலம் நிறைவேற்றப்பட வேண்டியிருப்பதால் தேசிய பாடசாலைகூறு ஒன்றை உங்கள் காரியாலயத்தில் உங்கள் மேற்பார்வையின் கீழ் உருவாக்கிக் கொள்ளல் வேண்டும் அதன் கடமைகள் உங்கள் பொறுப்பில் அமைதல் வேண்டும் ஆசியர் சம்பளம் வேறு கொடுப்பனவுகள் உள்ளடங்கலான சிறு கொடுப்பனவுகள் ஆள்தேவை என்பன தற்போதைக்கு பிரதேச கல்வி காரியாலயங்களில் மேற்கொள்ளபப்டுமானால் அது உங்கள் பொறுப்பில் இடம்பெற வேண்டும்.

என்.வி.கே.கே.வேரகொட
செயலாளர்
கல்வி உயர்கல்வி அமைச்சு

பிரதிகள்

1. செயலாளர், கல்விச்சேவைகள் சபை
2. மாகாணக் கல்விச் செயலாளர்கள்
3. பிரதான கணக்காளர்கள்
4. கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்
5. தேசிய பாடசாலை அதிபர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

තැපැල් පෙට්ටිය
தபாற் பெட்டி } 1503
P.O.Box

දුරකථනය
தொலைபேசி } 786200
Telephones

මගේ අංකය
எமது இல } RD/16/012
My No

ඔබේ අංකය
உமது இல }
Your No

ජාතික ඇගයීම් හා පරීක්ෂණ සේවය
ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
தேசிய மதிப்பிடலுக்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
**National Evaluation & Testing Service**
**Department of Examinations, Sri Lanka**

කොළඹ
கொழும்பு } 2002.07.10
Colombo

கல அதிபர்களுக்கும்.

பாடசாலை மட்டக் கணிப்பீடு தரம் 10, 11

பரீட்சைத் திணைக்களத்தின் இல. SBA/2002/03 இலக்கம் கொண்ட 2002 ஜூலை 2 ஆம் திகதி சுற்றுநிருபம் இத்துடன் ங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றது. இச்சுற்றுநிருபம் கிடைத்தமை பற்றி ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டதென ம்பவத்திரட்டுப் புத்தகத்தில் குறிப்பிடவும்.

இந்நிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்குத் தேவையான அறிவுறுத்தல் கைந்நூலும் தரம் 10 மாதிரிக் கணிப்பீட்டுத்திட்ட ற்தொகுதிகளும் அத்தரங்கள் உள்ள நாட்டின் சகல பாடசாலைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. அந்நூல்களிலுள்ள மாதிரிக் ணிப்பீடுகளும் அதனடிப்படையில் ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட தரம் 10, 11 இற்கான கணிப்பீட்டுத்திட்டங்களும் டசாலையினுள்ளே நடைமுறைப்படுத்தப்படும்போது புள்ளிகளை மாணவர் முன்னேற்ற அறிக்கைகளில் அறிக்கைப்படுத்தி வைத்திருத்தல் வண்டும்.

இக்கணிப்பீட்டுத் திட்டத்தைத் தயாரிக்கும்போது பல்வேறு வகைக் கணிப்பீட்டுத் திட்டத்தைத் தயாரித்துச் செயற்படுத்துவதற்கு ஆசிரியர்களை ஊக்குவித்தல் வேண்டும.

இச்செயலொழுங்கினை நடைமுறைப்படுத்துவதற்கும் புள்ளிகளை அறிக்கைப்படுத்துவதற்கும் உள்ளகக் கண்காணிப்பு வலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதோடு வலயக் காரியாலயமும் இது தொடர்பாக விசேட கவனம் செலுத்தும். பரீட்சைத் திணைக்கள உத்தியோகத்தர்களும் காலத்துக்குக் காலம் பாடசாலைகளுக்கு வருகை தந்து இது தொடர்பான கண்காணிப்பினை மற்கொள்வர்.

2002 ஆம் ஆண்டு தரம் 10 இல் நடைமுறைப்படுத்தப்படும் கணிப்பீட்டுத்திட்டம் புள்ளிகளின் அறிக்கை, தேர்ச்சி அறிக்கை ஆகியன தொடர்பாக நீங்கள் கவனஞ் செலுத்துவதுடன் பெற்றோர்களுக்கு அனுப்பும் அறிக்கைகள் தவணை இறுதியில் அனுப்பிவைப்பதற்கு ஆசிரியர்களுக்கு ஆலோசனை வழங்குதல் வேண்டும்.

இது தொடர்பாகப் பிரச்சினைகள் எவையேனும் இருப்பின் உங்களுக்குரிய வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளருடன் அல்லது பிரதிக் கல்விப் பணிப்பாளருடன் (கல்வி அபிவிருத்தி) கலந்தாலோசித்துத் தீர்வினைப் பெற்றுக்கொள்ளவும்.

> மிக முக்கியம் :
> தரம் 10, 11 பாடசாலை மட்டக் கணிப்பீட்டுச் செயற்றிட்டம் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுவதால் 1968 இல 25 இன் பகிரங்க பரீட்சை விதியில் அடங்கியுள்ள சட்டதிட்டங்களுக்கும் பிரமாணங்களுக்கும் கீழ் இச்செயற்றிட்டம் உள்ளதென்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

டப்ளியு.எம்.என்.ஜே.புஷ்பகுமார
பிரதிப் பரீட்சை ஆணையாளர்
(ஆய்வும் அபிவிருத்தியும்)

ஒப்பம்: ஏ.எம்.ஆர்.பி.அமரகோன்
பரீட்சை ஆணையாளர் நாயகம்.

பிரதிகள்

01. மாகாண கல்விப் பணிப்பாளர்
02. வலயக் கல்விப் பணிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

තැපැල් පෙට්ටිය
தபாற் பெட்டி
P.O.Box
} 1503

දුරකථනය
தொலைபேசி
Telephones
} 786200

මගේ අංකය
எமது இல
My No
} RD/16/01/14

ඔබේ අංකය
உமது இல
Your No
}

ජාතික ඇගයීම් හා පරීක්ෂණ සේවාව
ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
தேசிய மதிப்பிடலுக்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
National Evaluation & Testing Service
Department of Examinations, Sri Lanka

කොළඹ
கொழும்பு
Colombo
} 2002.07.08

DOE/NETS சுற்றறிக்கை இல. SBA/2000/03

சகல பாடசாலை அதிபர்களுக்கும்.

### பாடசாலை மட்டக் கணிப்பீட்டு வேலைத்திட்டம்
### க.பொ.த.(சா.த) பரீட்சை - 2002

தற்போது உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இலக்கம் SBA/2000/2, 2000 செப்டெம்பர் 29 ஆம் திகதி சுற்றறிக்கையிலும் SBA/RD/2001/01 இலக்க 10 ஆம் 11 ஆம் தரத்திற்கான பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான அறிவுறுத்தற் கைந்நூலிலும் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாகப் பின்வரும் அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டுள்ளன என்பதை கவனத்திற் கொள்ளவும்.

01. சான்றிதழ்களுக்காகச் சேர்க்கப்படும் கணிப்பீட்டு எண்ணிக்கை

2002 ஆம் ஆண்டுக்கு மட்டும் பாடசாலை மட்டக் கணிப்பீட்டின் கீழ் தேர்ச்சி மட்டத்தைத் தீர்மானிப்பதற்குத் தெரிவு செய்யப்படும் கணிப்பீட்டு எண்ணிக்கை 2001 ஆம் ஆண்டு 10 ஆம் தரத்தில் 3 ஆம் தவணைக்கும், 2002 ஆம் ஆண்டு 11 ஆம் தரத்தில் முதலாம், இரண்டாம் தவணைகளுக்கும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கேற்ப தரப்பட்டுள்ள அட்டவணையை, 3 ஆம் நிரலில் கீழே தரப்பட்டுள்ளவாறு மாற்றிக் கொள்ளவும்.

| பாடசாலை மட்டக் கணிப்பீடு செய்யவேண்டிய பாடங்கள் | ஒரு தவணைக்குரிய தேர்ச்சி மட்டத்தைத் தீர்மானிக்கும் கணிப்பீடுகளின் எண்ணிக்கை | தரம் 10 இலும், 11 இலும் இருந்து 2002 ஆம் ஆண்டு தேர்ச்சி மட்டத்தைத் தீர்மானிப்பதற்கு பெறவேண்டிய கணிப்பீடுகளின் எண்ணிக்கை (3 தவணைகளுக்கு) |
|---|---|---|
| சமயம் | 02 | 06 |
| முதல் மொழி | 05 | 15 |
| ஆங்கிலம் | 05 | 15 |
| கணிதம் | 06 | 18 |
| விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் | 06 | 18 |
| சமூகக்கல்வியும் வரலாறும் | 05 | 15 |
| அழகியற் கல்வி | 03 | 09 |
| தொழில்நுட்பப் பாடங்கள் | 04 | 12 |

2003 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் தேர்ச்சி மட்டத்தைத் தீர்மானிப்பதற்கு தரம் 10 இன் 1 ஆம் 2ஆம் 3 ஆம் தவணைகளும், தரம் 11 இன் 1 ஆம் 2 ஆம் தவணைகளுமாக மொத்தம் 5 தவணைகளுக்கான புள்ளிகளைப் பெறுதல் வேண்டும். இதற்கேற்ப மேற்படி அட்டவணையில் 2 ஆம் நிரலிலுள்ள கணிப்பீடுகளின் எண்ணிக்கை மாறாது 3 ஆம் நிரலிலுள்ள எண்ணிக்கைகள் 2003 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் பொருத்தமானவாறு மீண்டும் திருத்தியமைக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. தேர்ச்சி மட்டத்தைத் தீர்மானிப்பதற்குப் புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளுதல்.

தேர்ச்சி மட்டத்தைத் தீர்மானிப்பதற்குப் புள்ளிகளை அனுப்பும் போது மேற்குறிப்பிட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கணிப்பீட்டு எண்ணிக்கைகள் அந்தந்தத் தவணை தொடர்பாக பல்வேறு கணிப்பீட்டு வகைகளிலிருந்து பெறப்பட்டிருத்தல் வேண்டும். இங்கு வகுப்பறையில் செய்யப்பட்ட ஒவ்வொரு கணிப்பீட்டு வகை தொடர்பாகவும் மாணவர் பெற்ற சராசரிப் புள்ளியைப் பெறவேண்டும்.

உதாரணம் - விஞ்ஞானமும் தொழினுட்பவியலும் (தவணைக்கு சான்றிதழ்படுத்தல் தொடர்பான கணிப்பீட்டு வகைகள் தொடர்பாகக் கீழே 6 வகைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.)

| கணிப்பீட்டு வகை | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | கணித்தல் | சராசரிப் புள்ளி |
|---|---|---|---|
| ஒப்படை | $A_1, A_2$ | $\frac{40+60}{2}$ | 50 |
| குழுச் செயற்பாடு | $A_1, A_2$ | $\frac{54+68}{2}$ | 61 |
| செயற்றிட்டம் | $A_1$ | 72 | 72 |
| செய்முறை | $A_1, A_2, A_3$ | $\frac{65+62+53}{3}$ | 60 |
| எழுத்துப் பரீட்சையும் திறந்த புத்தகப் பரீட்சையும் | $A_1, A_2, A_3, A_4$ | $\frac{60+58+44+62}{4}$ | 56 |
| ஏனைய பரீட்சைகள் | $A_1$ | 78 | 78 |

2.1 மேலே குறிப்பிட்ட ஒரு தவணைக்கான உதாரணத்தைப் போல எல்லாத் தவணைகளுக்குமான கணிப்பீட்டு வகைகளினதும் சராசரிப் புள்ளிகளைக் கூட்டி அதனை சான்றிதழ்ப்படுத்துதல் தொடர்பாகப் பெறப்பட்ட மொத்தக் கணிப்பீட்டு எண்ணிக்கையினால் வகுத்து அம்மாணவருக்குரிய சராசரிப்புள்ளியைப் பெறுதல் வேண்டும். (கீழேயுள்ள RD/SBA/2002/04 மாதிரிக்கு ஏற்ப) அச்சராசரிப்புள்ளி சான்றிதழ்ப்படுத்துவதற்காக OMR பத்திரத்தில் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

| අනු අංකය / தொடரிலக்கம் | විභාග අංකය / பரீட்சை சுட்டெண் | ශිෂ්‍යයාගේ නම மாணவர் பெயர் | විෂය අංකය / பாட எண் | විද්‍යාව හා තාක්ෂණවේදය (34) / விஞ்ஞானமும் தொழினுட்பவியலும் (34) | | | | | | | | | | | | | | RD | SBA | 2002 | 04 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2001 – 10 ශ්‍රේණිය/தரம் | | | | | | 2002 – 11 ශ්‍රේණිය/ தரம் | | | | | | | | | | | | එකතුව / மொத்தம் | සාමාන්‍යය / சராசரி |
| | | | | 3 වන වාරය/3ம் தவணை | | | | | | 1 වන වාරය/1ம் தவணை | | | | | | 2 වනවාරය/2ம் தவணை | | | | | | | |
| | | | | ඇගයීම් ලකුණු கணிப்பீட்டுப் புள்ளிகள் | | | | | | ඇගයීම් ලකුණු கணிப்பீட்டுப் புள்ளிகள் | | | | | | ඇගයීම් ලකුණු கணிப்பீட்டுப் புள்ளிகள் | | | | | | | |
| | | | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | |
| | | | | 50 | 61 | 72 | 60 | 56 | 78 | 71 | 40 | 48 | 50 | 60 | 31 | 72 | 81 | 83 | 60 | 57 | 50 | $\frac{1080}{18}$ | 60 |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | |

2.2 அழகியற் கல்வி, சமயம் ஆகிய பாடங்களுக்கு (அறிக்கைப்படுத்த வேண்டிய) மொத்த கணிப்பீடுகளின் புள்ளிகள் (3 தவணைகளுக்கும்) அந்தந்த கணிப்பீட்டு வகைக்கான புள்ளிகளாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03 பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படும் புள்ளிகள் அதிபரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். இது சம்பந்தமான மேலதிக அறிவுறுத்தல்களும் RD/SBA/2002/04 இலக்கமுடைய புள்ளிகள் அறிக்கைப்படுத்தி அனுப்பவேண்டிய மாதிரிகளும் இத்துடன் அனுப்பிவைக்கப்படும். அதுவரை அப்புள்ளி முன்னேற்ற அறிக்கைகளைச் சரியாகப் பூரணப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும்.

04 கல்வி அமைச்சின் மூலம் வெளியிடப்பட்ட இல.1998/35 உம் 1998 செப்தெம்பர் மாதம் 4 ஆம் திகதி சுற்றுநிருபம் இல. 99/16 உம் 1999 மே மாதம் 18 ஆம் திகதி சுற்றுநிருபத்திற்கும் ஏற்ப அழகியல் பாடங்களுக்கும் தொழில்நுட்பவியல் பாடங்களுக்கும் பாடசாலை மட்டக் கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான செய்முறைப் பரீட்சையின் புள்ளிகள் 2002 ஆம் ஆண்டு க.பொ.த.(சா.த) பரீட்சை சான்றிதழ்ப்படுத்தலுக்காகச் சேர்த்துக் கொள்ளப்படும்.

05. 2002 டிசெம்பர் மாதத்திலும் அதன் பின்னரும் நடைபெறும் பெறுபேறுகளின் அடிப்படையில் க.பொ.த.(உ.த) கற்பதற்குத் தேவையான திறமைச் சித்திகள் எண்ணிக்கையில் ஒரு திறமைச் சித்தியை பாடசாலை மட்டக் கணிப்பீட்டு திட்டத்தின் கீழ் பெறப்பட்ட திறமைச் சித்தியுடன் பூரணப்படுத்த முடியும். இது தொடர்பாக தகுதி பெறுவதற்குரிய பாடத்திற்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் நடாத்தப்படும் பரீட்சையில் சாதாரண சித்தி பெற்றிருப்பதோடு பாடசாலை மட்டக் கணிப்பீட்டில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும் இருந்தபோதும் இது கணிதம், முதலாம் மொழி ஆகிய பாடங்களைப் பொறுத்தவரையில் பொருத்தமானதன்று. இது 2002.06.04 திகதியிடப்பட்ட மனித வள அபிவிருத்தி, கல்வி கலாசார அமைச்சின் HRD/PPM/2002/14 இலக்கச் சுற்றறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது

06. பாடசாலை மட்டக் கணிப்பீட்டு கண்காணிப்பின்போது கணிப்பீட்டுத் திட்டப் பிரதிகள் கோவை, முன்னேற்ற அறிக்கை, மாணவர் தேர்ச்சி அறிக்கை என்பவற்றை பார்வையிடுவதற்கு தயார் நிலையில் வைத்திருக்க வேண்டுமெனப் பாடத்திற்குப் பொறுப்பான ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தவும்.

ஏ.எம்.ஆர்.பி.அமரக்கோன்
பரீட்சை ஆணையாளர் நாயகம்.

பிரதிகள்:

01. செயலாளர் - கல்வி அமைச்சு
02. தலைவர் - தேசிய கல்வி ஆணைக்குழு
03. பணிப்பாளர் நாயகம் - தேசிய கல்வி நிறுவகம்
04. மாகாணக் கல்விச் செயலாளர்கள்/பணிப்பாளர்கள்
05. வலய/கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்று நிருப இல. 26/ 95

எனது இல IV/2/09/245(II) IV- 1
பொதுநிருவாக, சுதேச விவகார. பெருந்தோட்டக் கைத்தொழில்,
பாராளுமன்ற விவகார அமைச்சு சுதந்திர சதுக்கம
கொழும்பு - 07.
ஒகஸ்ட் 04. 1995

எல்லா செயலாளர்களுக்கும்
திணைக்களத் தலைவர்களுக்கும்
பொதுக்கூட்டுத்தாபனத் தலைவர்களுக்கும்
நியதிச் சபைகளின் தலைவர்களுக்கும்

## பதிவாளர் நாயகம் திணைக்களத்தால் பிறப்புச் சான்றிதழுக்குப் பதிலாக வழங்கப்படும் ஏனைய சான்றிதழ்களை ஏற்றுக்கொள்ளல்

ஆட்களின் பெயர், பிறந்த திகதி என்பனவற்றை உறுதிப்படுத்தும் நோக்கத்தின் பொருட்டு பதிவாளர் நாயகம் திணைக்களத்தால் வழங்கப்படும் பின்வரும் சான்றிதழ்களுள் ஒன்றினை ஏற்றுக்கொள்வதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

அ. பிறப்பினை எவர் பதிவு செய்தாரோ அந்தப்பதிவாளரினால் இலவசமாக வழங்கப்படும் பிறப்புப்பதிவு ஆவணத்தின் பிரதி (பதிவுப் படிவம் 1B)

ஆ. பிறப்புப்பதிவு ஆவணத்தின் சுருக்கப்பிரதி (பதிவுப் படிவம் 65B)

இ. பருமட்டான வயதுச் சான்றிதழ் (பதிவுப் படிவம் 142 B)

ஈ. தத்து எடுத்தல் சான்றிதழ் (பதிவுப் படிவம் 143B)

உ. உறுதி செய்யப்பட்ட பிறப்புப்பதிவு ஆவணத்தின் நிழற் பிரதி

எவ்வாறாயினும், அவ்வாறான சான்றிதழ்கள் தொடர்பாக ஏதாவது சந்தேகங்கள் எழுமாயின் பதிவாளர் நாயத்திடமிருந்து தெளிவுறுத்தல் பெறப்படல் வேண்டும்.

R.S.ஜயரட்ண
செயலாளர்
பொது நிருவாக அமைச்சு

சுற்று நிருப இல. 22/ 1951

கல்விக் காரியாலயம்
கொழும்பு
1951 ஒகஸ்ட் 01

அரசாங்க, உதவிபெறும் பாடசாலைகளின்
எல்லா அதிபர்களுக்கும்,
தலைமை ஆசிரியர்களுக்கும்

## சேர்வு இடாப்பும் வரவு இடாப்பும்

1. மேற்குறித்த ஆவணங்கள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

   அ. பிரமாணங்களின் படி அவை பேணப்படுவதில்லை

   ஆ. போதுமான காலத்திற்கு அவை பாதுகாத்து வைக்கப்படுவதில்லை.

2. எனவே எதிர்காலத்தில் நீங்கள் பின்வருமாறு அவற்றைப் பேணுதல் வேண்டும்

   அ. எல்லா விடயங்களையும் அவ்வவ்போது தற்காலப்படுத்துதல் வேண்டும்.

   ஆ. இந்த ஆவணங்களை இருப்புப் புத்தகத்தில் பதிய வேண்டும்.

   இ. குறைந்தது 20 வருடங்களாவது அவற்றைப் பாடசாலையில் வைத்திருக்க வேண்டும்.

3. சேர்வு இடாப்பில் 11வது கூட்டினை நிரப்பும் போது விஷேட கவனம் செலுத்தப்படல் வேண்டும். சேர்வு இடாப்பு தெளிவாகவும் சரியாகவும் நிரப்பப்படுவதுடன் ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் ஒவ்வொரு ஆண்டின் ஜனவரி மாதத்தில் அதிபரினால் திகதியுடன் கூடிய சுருக்கொப்பம் இடப்படவும் வேண்டும்.

எச்.டப்ளியூ.ஹோவல்
கல்வி பணிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்று நிருப இல. 31/1956

GSI 1599

கல்வித் திணைக்களம்

கொழும்பு 2

செப்டெம்பர் 15, 1956

எல்லா அரச பாடசாலை தலைவர்களுக்கும்

## அரசாங்கப் பாடசாலைகளுக்கான அனுமதி

கீழ்வகுப்பு மாணவர்களுக்கான பாடசாலை அனுமதி பிறப்புச்சாட்சிப்பத்திரம் இன்மை காரணமாக மறுக்கப்படக்கூடாது. மூன்று மாதகாலப்பகுதிக்கு ஒரு சத்தியக் கடதாசியை பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்திற்கு பதிலாக ஏற்றுக்கொள்ள முடியும். அம்மூன்று மாத காலத்துக்குள் பெற்றோர் பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்திற்கான விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்.

ஜே.விக்கிரமசிங்க
பதில் வித்தியாபதி

எனது இலக்கம் 2/பாசெ6/38
கல்வி, கலாசார அலுவல்கள்
தகவல் அமைச்சு
பாடசாலை செயற்பாட்டுக் கிளை,
"இசுருபாய"
பத்தரமுல்ல
24.10.1989

சகல மாகாணக்கல்விப்பணிப்பாளர்கள்,
மேலதிக கல்விப் பணிப்பாளர்கள்,
கோட்டக் கல்வி உதவிப் பணிப்பாளர்கள்

## மாணவர் வகுப்பேற்றம்

1. மேற்கூறப்பட்ட விடயம் சம்பந்தமான 26.02.1972 ஆந் திகதியிடப்பட்ட 250 ஆம் இலக்க (2/SO/6/29) ஆன எனது சுற்றறிக்கையை பார்க்கவும்.
2. (பொருத்தமற்றது என்பதால் இப்பகுதி நீக்கப்படுகிறது)
3. எதிர்காலத்தில் பின்வரும் அடிப்படையில் ஒரு வகுப்பிலிருந்து இன்னொரு வகுப்பிற்கு வகுப்பேற்றம் செய்யப்பட வேண்டும்.
    1. பாடவேலையில் பெற்ற தகைமை
    2. மாணவரின் ஒழுக்கம் சீரான முறையில் திருப்திகரமாக இருப்பதுடன் வகுப்பேற்றத்துக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளார் என்று வகுப்பு ஆசிரியர் எழுத்து மூலம் அறிவித்தல்.
4. ஆண்டு இறுதியில் மாணவருக்குக் கொடுக்கப்படும் அறிக்கையானது அவரின் கல்விச்சாதனை, சீரான ஒழுக்கம் என்பவற்றின் காரணமாக அவர் வகுப்பேற்றப்பட்டுள்ளார் என்பதைக் குறிப்பிடல் வேண்டும்.

கேர்ணல்.வீ.எஸ்குடலிகம
கல்வி இராஜாங்க அமைச்சின்
செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுநிருப இல. 2000/29(1)

ඔබේ අංකය / உமது இல. / Your No ..............................

දුරකථන / தொலைபேசி இல. / Telephone Nos

අමාත්‍ය / அமைச்சர் / Minister: 864807, 869325

Fax : 869326

ලේකම් / செயலாளர் / Secretary: 864812

කාර්යාලය / அலுவலகம் / Office: 865141 - 50

මගේ අංකය / எமது இல. / My No: 2/பாமுமே/4/25 பாடசாலை முகாமைத்துவ மேற்பார்வைக் கிளை

අධ්‍යාපන හා උසස් අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி அமைச்சு
Ministry of Education and Higher Education

'ඉසුරුපාය' ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
බත්තරමුල්ල
'இசுருபாய' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
பத்தரமுல்ல
'ISURUPAYA' SRI JAYAWARDHANAPURA KOTTE.
BATTARAMULLA

දිනය / திகதி / Date: 2000.11.22

சகல மாகாணக் கல்வி அமைச்சர்கள்,
மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,
பாடசாலை அதிபர்கள் ஆகியோருக்கு.

# வெளிநாடு செல்லும் மாணவர்களுக்கான லீவு

மேற்குறித்த விடயம் தொடர்பாக 2000.06.06 ஆந் திகதி வெளியிடப்பட்ட 2000/29 இலக்கத்தைக் கொண்ட அமைச்சுச் சுற்றுநிருபத்துக்கு மேலதிகமாக வெளியிடப்படுகின்றது.

02. அச்சுற்றுநிருபத்தின் பிரிவு 02 இன் உபபிரிவு 02 இல் கீழ்க் குறிப்பிடப்படுவோருக்கு மட்டும் "03 மாதங்கள் அல்லது அதற்குக் குறைந்த காலம்" என்பது, 02 வருடங்கள் அல்லது அதற்குக் குறைந்த காலம் எனத் திருத்தப்படுகின்றது.

அ. "கடல் கடந்த சேவை" உறுப்பினர்களான பெற்றோர்கள்

ஆ. அரசினால் அனுமதிக்கப்பட்ட புலமைப்பரிசில், உயர் புலமைப் பரிசில் அல்லது போக்குவரத்துக் கொடுப்பனவு பெற்று வெளிநாடு செல்லும் மாணவர்கள் அல்லது அவர்களின் பெற்றோர்கள்

பேராசிரியர் எல்.எஸ். பெரேரா
மேலதிகச் செயலாளர்
(கல்வி அபிவிருத்தி)

ஒப்பம் :
கலாநிதி தாரா டி மெல்
செயலாளர்
கல்வி அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ඔබේ අංකය / உமது இல. / Your No. : க.பி-இல.2000/29

දුරකථන/தொலைபேசி இல. / Telephone Nos

අමාත්‍ය / அமைச்சர் / Minister : 864807, 869325

Fax : 869326

ලේකම් / செயலாளர் / Secretary : 864812

කාර්යාලය / அலுவலகம் / Office : 865141 — 50

මගේ අංකය / எனது இல. / My No. : 2/பா.இம.மு/4/25

අධ්‍යාපන හා උසස් අධ්‍යාපන අමාත්‍යාංශය

கல்வி, உயர் கல்வி அமைச்சு

Ministry of Education and Higher Education

'இசுருபாய', ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, பத்தரமுல்ல.

'ISURUPAYA' SRI JAYAWARDHANAPURA KOTTE, BATTARAMULLA

දිනය / திகதி / Date : 2000.06.06


சகல மாகாணக் கல்விச்செயலாளர்கள்,
மாகாணக் கல்விப்பணிப்பாளர்கள்,
வலயக் கல்விப்பணிப்பாளர்கள்,
கோட்டக் கல்விப்பணிப்பாளர்கள்,
பாடசாலை அதிபர்களுக்கும்,

## வெளிநாடு செல்லும் மாணவர்களுக்கான லீவு

மேற்குறித்த விடயம் தொடர்பான எனது இலக்கம் : 2/பாச/3 உடன் 1990.08.22 ஆம் திகதிய, இலக்கம் 1990/25 கொண்ட, வெளிநாடு செல்லும் மாணவருக்கு லீவு அனுமதித்தல் என்ற சுற்று நிருபத்துக்கு அமைய யாதாவதொரு மாணவன் வெளிநாடு செல்வதால் அம்மாணவன் படித்த பாடசாலையில் ஏற்படும் வெற்றிடம் 03 வருட காலங்களுக்கு நிரப்பாமல் வைத்திருப்பது பழக்கமாகியுள்ளது. அவ்வாறு அவ்வெற்றிடம் நீண்ட காலம் நிரப்பப்படாமல் வைத்திருப்பதால் இன்னுமொரு மாணவனுக்கு அப்பாடசாலையில் கல்வி கற்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்காமல் போகின்றது. எனவே மேற்குறித்த விடயம் தொடர்பான மேற்படி சுற்றுநிருபத்தை நான் இத்தால் இரத்துச் செய்கின்றேன்.

02. கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைய இனிமேல் வெளிநாடு செல்லும் மாணவர்களின் மாணவத்துவத்தைத் தீர்மானிக்க வேண்டும் என்பதை அறியத்தருகின்றேன்.

01. மாணவரொருவர் வெளிநாடு செல்வதற்காக லீவு கோரும் போது மாகாணப் பாடசாலை மாணவராயின், மாகாணக் கல்விப் பணிப்பாளரால் லீவு அனுமதிக்க முடியும் என்பதோடு தேசிய பாடசாலை மாணவராயின் மாகாணக்கல்விப் பணிப்பாளரின் சிபாரிசுடன் விண்ணப்பத்தை எனக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.
02. மாணவரொருவர் உரிய மாகாணக்கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் அல்லது எனது அனுமதியுடன் 03 மாதங்களோ அல்லது அதற்குக் குறைந்த காலம் வெளிநாட்டிலிருந்து விட்டு திரும்பி வந்த பின் இருந்த பாடசாலையிலேயே சேர்ந்து படிப்பைத் தொடர அதிபரால் அனுமதிக்க முடியும். மாணவரொருவர் வெளிநாடு சென்றுவிட்டு 03 மாதங்களுக்குள் திரும்பி வராவிட்டால் அம்மாணவனின் பெயரை பெயர் இடாப்பிலிருந்து நீக்குதல் வேண்டும்.
03. மாணவரொருவர் 03 வருடங்களுக்குள் திரும்பி வந்தால் மீண்டும் அப்பாடசாலையில் சேருவதற்காக விண்ணப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்க முடியும். எனினும் அம்மாணவனைப் பாடசாலையில் வெற்றிடம் இருந்து மாகாணக்கல்விப் பணிப்பாளரது அல்லது எனது அனுமதி இருந்தால் மட்டுமே சேர்த்துக் கொள்ள முடியும்.
04. மாணவனை மீண்டும் சேர்க்கும் போது மாணவரது தகைமைகளைப் பரீட்சித்து, சேர்த்துக்கொள்ள வேண்டிய வகுப்பு எது என்பதை அதிபர் தீர்மானிக்க வேண்டும்.

பேராசிரியர் ஆர்.பி.குணவர்தன
செயலாளர்
கல்வி, உயர்கல்வி அமைச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுநிருப இல 90/ 25

எனது இல 02 / SO / 03
கல்வி உயர் கல்வி அமைச்சு
இசுருபாய
பத்தரமுல்ல
ஓகஸ்ட் 22.1990

எல்லா மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்

## வெளிநாடுசெல்லும் மாணவர்களின் லீவினை அனுமதித்தல்

எனது இலக்க 1984.03.3ம் திகதிய மற்றும் 1986.11.07 ம் திகதியிடப்பட்ட அது தொடர்பான திருத்தங்கள் என்பனவற்றின் மீது உங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. கீழ்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு வெளிநாடு செல்லும் மாணவர்களுக்கான லீவினை அனுமதிக்கும் அதிகாரத்தினை மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கு கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

   1. மூன்று மாதத்திற்கு மேற்படாததாயினும் அங்ஙனம் வெளிநாடு செல்லும் மாணவர்களுக்கான லீவினை அதிபர்களே அனுமதிக்கலாம்

   2. மூன்று மாதத்திற்கு மேற்பட்ட காலத்திற்கான லீவு விண்ணப்பங்கள் பின்வரும் சந்தர்ப்பங்களில் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

   பெற்றோர் கடல்கடந்த சேவையை சேர்ந்தவராயின்

   அரசின்னால் அனுமதிக்கப்பட்ட ஒரு பயண நன்கொடை அல்லது பரிசில் பெற்ற மாணவராயின்

   இரண்டு பெற்றோரும் வெளிநாடு செல்வார்களாயின் குழந்தை படிப்புக்காக அவர்களுடன் செல்லும் போது

3. மீளவும் பாடசாலைக்கு அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் யாவும் அம்மாணவர்களை எந்த தரங்களுக்கு மீளவும் அனுமதிப்பது என்பதனை அதிபர்கள் தீர்மானிப்பதை இலகுவாக்கும் பொருட்டு குறைந்தது இலங்கைக்கு திரும்புவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன் மாணவரின் கல்விச் சாதனை அறிக்கை விபரங்களுடன் அதிபருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

4. அதிபர்கள் அம்மாணவர்கள் எந்த தரங்களில் சேர்க்கப்பட முடியும் என்ற தமது சிபாரிசுகளுடன் அவ்விண்ணப்பங்களை உங்கள் அனுமதிக்காக அனுப்பி வைப்பர்.

5. இச்சுற்று நிருபத்திலுள்ள ஏற்பாடுகள் இவ்விடயம் தொடர்பில் ஏற்கெனவே வெளியிடப்பட்ட எல்லா அறிவுறுத்தல்களையும் மேலோங்கி நிற்கும் இதிலுள்ள விடயங்களை உங்கள் மாகாணத்திலுள்ள எல்லாப் பாடசாலை அதிபர்களினதும் கவனத்திற்கு கொண்டுவரவும்.

திருமதி.கே.ஜ.விக்ரமசிங்க
இராஜங்க அமைச்சின் செயலாளரும்
கல்வி உயர்கல்வி அமைச்சின் மேலதிக செயலாளரும்

பிரதி சகல மாகாணக் கல்விச் செயலாளர்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இல: க/பொநி/6/1
கல்வி, உயர்கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பத்தரமுல்ல.
2000.07.07 ஆந் திகதி.

சுற்றறிக்கை இலக்கம்: 2000/33

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளர்கள்,
மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்,
கல்விக் கல்லூரி தலைவர்,

தொலைக் கல்வி பயிலும் ஆசிரிய பயிலுநர்களுக்கு
கற்கை விடுமுறை வழங்கல்.

தொலைக் கல்விப் பாடநெறி பயில்வதற்காக பதிவு செய்துள்ள பயிலுநர் நியமனம் பெற்றுள்ள ஆசிரியர்களுக்கு கற்கை நடவடிக்கைகளுக்காக கல்வி நிலையங்களுக்கு சமுகமளிப்பது மற்றும் கல்வி நடவடிக்கைகளில் உள்ள வசதியீனங்களை நிவர்த்தி செய்யும் நோக்கமாக கற்கை விடுமுறை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. இதன் அடிப்படையில் ஆசிரிய பயிலுநர்களின் நிரந்தர வசிப்பிடம் கற்கை நிலையத்தில் இருந்து 100 கிலோ மீட்டர் வரையுள்ள தூரத்தில் இருப்பவர்க்கு/ 1 நாள் விடுமுறையும் 100 கிலோ மீற்றரை விட கூடிய தூரத்திற்கு 2 நாள் விடுமுறையும் வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

03. இதற்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சோமநாயக்க உபசேன
மேலதிக செயலாளர்
(திட்டமிடல் முகாமைத்துவம்)
கல்வி, உயர்கல்வி அமைச்சின்
செயலாளருக்காக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல: 05/2000

எனது இல. X T U/M I S C/V,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 07.
2000. பெப்ருவரி. 02

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

**தொழிற் சங்கக் கிளைக் கூட்டங்களுக்குச் சமூகமளிப்பதற்கு கடமை விடுதலை.**

**தாபன விதிக் கோவையின் XXV ஆம் அத்தியாயத்தின் 2.1 ஆம் பிரிவினைத் திருத்துதல்**

அங்கீகரிக்கப்பட்ட அகில இலங்கைத் தொழிற்சங்கங்களின் கிளைச் சங்க உறுப்பினருக்கு அத்தகைய சங்கங்களின் ஆண்டுப் பொதுக் கூட்டங்களுக்கு அவர்கள் சமூகமளிக்க வசதியாக அரைநாள் கடமை விடுதலை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதற்கமைய, பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலம் தாபன விதிக் கோவையின் XXV ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவு திருத்தப்பட்டுளது.

" 2:3 அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள அகில இலங்கைத் தொழிற் சங்கங்களின் கிளைச் சங்க உறுப்பினர்கள் அத்தகைய கிளைச் சங்கங்களின் ஆண்டுப் பொதுக்கூட்டங்களில் பங்குபற்றுவதற்கு அரைநாள் கடமை விடுதலை பெறுவதற்கு உரித்துடையவர்களாவர்".

மஹிந்த பந்துசேன,
செயலாளர்.
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
அமைச்சு.

நர/ -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல: 01/98

எனது இல: தா/111/2/1/-3

அரசாங்க, நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.
சுதந்திர சுதுக்கம்.
கொழும்பு-07.
1998-01- 23ஆந் தேதி.

அமைச்சின் செயலாளர்களுக்கும்
மாகாண அமைச்சுக்களின் பிரதம செயலாளர்கள்.
திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்!

**வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் யுத்த நிலைமைகள் யுத்த நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்து சேவைக்கு சமூகமளிக்க முடியாத அரச உத்தியோகத்தர்களுக்கான விசேட விடுமுறை.**

தாபனவிதிக் கோவையின் xii ஆம் அத்தியாயத்தின் 12 ஆம் பிரிவின் பால் உங்களது கவனம் ஈர்க்கப்படுவதுடன் அந்தப் பிரிவிற்கு 12:14 எனும் வகையில் புதிதாக உப பிரிவொன்றைச் சேர்ப்பதன் மூலம் தாபன விதிக்கோவை திருத்தம் செய்யப்படுகிறது.

12:14 அனுமதிக்கப்பட்ட விடுமுறையில் தனது சேவை நிலையத்தை விட்டகன்றிருக்கின்ற எவரேனும் ஓர் உத்தியோகத்தர் அரசாங்க பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்படுகின்ற யுத்த நடவடிக்கைகளின் காரணமாக அவ்விடுமுறையின் இறுதியில் தனது சேவை நிலையத்திற்கு குறிப்பிட்ட தினத்தில் சமூகமளிக்க முடியாது போகின்ற சந்தர்ப்பங்களில் இந்தப் பிரிவின் படி விசேட விடுமுறை வழங்க முடியும். இந்த விடுமுறை அனுமதிக்கப்படுவதற்கு முன்னர் விடுமுறைக்கு அனுமதி அளிக்கும் உத்தியோகத்தர் தேசிய பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் தொடர்பு கொண்டு அப்பிரதேச நிலைமைகள் பற்றிய உண்மை நிலையை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

02. இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் 1996-01-01 ஆந் திகதி முதல் அமுலுக்குவரும்.

ஒப்பம்/டிக்சன் நிலவீர
செயலாளர்.
அரசாங்க, நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.

vad/2/w



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 11/93

பொதுநிர்வாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு - 07.
1993, ஜூன் மாதம், 04 ஆந் திகதி.

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரசுக்குடைமையான நிறுவனங்களின்
- தலைவர்கள் அனைவருக்கும்.

**இடம்பெயர்ந்தோரில் நாடு திரும்பியவர்களைச்
சேவையில் மீள அமர்த்துதல்.**

1988.04.25ஆந் திகதிய 14/88ஆம் இலக்க, 1990.08.07 ஆந் திகதிய 33/90ஆம் இலக்க, 1991.02.17ஆந் திகதிய 04/91ஆம் இலக்க, 1991.03.14 ஆந் திகதிய 10/91ஆம் இலக்க, 1991.11.14 ஆந் திகதிய 53/91ஆம் இலக்க, 1991.12.19ஆந் திகதிய 14/88(1)ஆம் இலக்க, 1992.02.21ஆந் திகதிய 08/92ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளுக்கு உங்கள் அவதானம் ஈர்க்கப்படுகிறது.

02. மேற்குறித்த அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளின் நியதிகளின்படி சேவையில் மீள அமர்த்தப்பட்டுள்ள அரச அலுவலர்கள் உள்ளூராட்சிச் சேவைப் பணியாளர்கள் அல்லது கூட்டுத்தாபனப் பணியாளர்கள் நிலவிய நிலைமை, அவர்களின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதால், அவர்கள் சேவையில் தொடர்ந்திருந்தாரென்ற அடிப்படையில் பொருத்தமான சம்பள அடிப்படையில் கணிக்கப்பட வேண்டும்.

03. பின்வரும் அடிப்படையில் சமூகமளிக்காத காலப் பகுதிக்குத் தங்கள் லீவுகளைப் பயன்படுத்த அவர்கள் அனுமதிக்கப்படல் வேண்டும்.

(அ) நடப்பாண்டில் பயன்படுத்தப்படாத அமைய, ஓய்வு லீவுகள்.
(ஆ) நேர்முந்திய ஆண்டில் பயன்படுத்தப்படாத ஓய்வு லீவு.
(இ) சேவைக்காலத்தின் போது கடந்த ஏதாவது ஈராண்டுகளில் போது பயன்படுத்தப்படாத ஓய்வு லீவு.
(ஈ) எஞ்சிய காலப்பகுதிக்கு சம்பளமற்ற லீவு.

04. இச்சுற்றறிக்கையில் 03 (ஈ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளமற்ற லீவுக் காலப்பகுதி ஒரு விசேட சந்தர்ப்பமாகக் கொள்ளப்பட்டு ஓய்வூதிய நோக்கங்களுக்காகக் கணிக்கப்படும்.

05. இந்தியாவிலிருந்து திரும்பிய அகதிகளும் இலங்கையிலுள்ள அகதிகள் முகாம்களிலிருந்த அகதிகளும் இச் சலுகைக்கு உரித்துடையவர்களாவார்கள்.

ஒப்பம் கே. எச். கெமிலஸ் பெர்னாந்து.
பதில் செயலாளர்,
பொதுநிர்வாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௭௧/20.

அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 27/92

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம், கொழும்பு -07,
1992. ஒக்டோபர் மாதம் 07ஆந்திகதி

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்,
அரசாங்க அதிபர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள்,
ஆளுநர்களின் செயலாளர்கள்.

<u>லீவு - அத்தியாயம் XII - தாபன விதிக்கோவை</u>

1985.02.17 ஆந் திகதியிட்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையும் 1988.03.30 ஆந் திகதியிட்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையும் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

XII ஆம் அத்தியாயத்தின் 6ஆம் பிரிவை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக பின்வருவனவற்றைப் புகுத்துக.

"6 லீவு

6:1 நோய்காரணமாக லீவுக்கு விண்ணப்பிக்கும் போது அல்லது பிணி காரணமாக ஓர் உத்தியோகத்தர் அலுவலகத்திற்கு இரண்டு நாட்களுக்கு மேல் வரமுடியாதவிடத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வுத்தியோகத்தர் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரைக் கொண்டு அல்லது பதிவு பெற்ற மருத்துவ தொழில் புரிபவர் ஒருவரைக் கொண்டு தம்மை பரிசோதித்தல் வேண்டும். உத்தியோகத்தர் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் மருத்துவ படிவம் 170இல் அல்லது ஆயுள்வேதப்படிவம் 44இல் சான்றிதழ் ஒன்றை அல்லது உத்தியோகத்தர் ஆயுள்வேதச் சட்டத்தின் கீழ் அல்லது மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற தனியார் மருத்துவத் தொழில் புரிபவரினால் பரிசோதிக்கப்படுமிடத்து அந்த தனியார் மருத்துவத் தொழில் புரிபவர் தம்மால் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட படிவத்தில் சான்றிதழ் ஒன்றை அவ்வுத்தியோகத்தர் பணி புரியும் திணைக்களத்தின் அல்லது உப அலுவலகத்தின் தலைவருக்குச் சமர்ப்பிப்பார்.

6:1:1 முந்திய உபபிரிவில் குறிப்பிடப்பட்ட மருத்துவச் சான்றிதழின் மீது எக்காலப் பகுதிக்கும் முழுச் சம்பளமுள்ள அல்லது அரைச் சம்பளமுள்ள அல்லது சம்பளமற்ற லீவு வழங்கப்படலாம்.

6:1:2 மருத்துவச் சான்றிதழ்களை தொடர்பிலான அறிவுறுத்துரைகள் சுகாதாரச் சேவைத் திணைக்களத்தினால் வழங்கப்படும்.

6:2 பிணி காரணமாகப் பெறப்படும் ஒரு தடவையில் ஆறு நாட்கள் வரையினதாகவிருக்கும் குறுகிய கால லீவு, உத்தியோகத்தர் விரும்பினால் அமய லீவாகக் கணிக்கப்படும்.

எதாயினும் ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் உத்தியோகத்தர் ஒருவரின் ஓய்வு லீவிலிருந்து எந்த குறுகிய கால வராமையைக் கழிப்பதற்குத் திணைக்களத் தலைவர் தீர்மானிக்கலாம்.

6:3 திணைக்களத் தலைவரொருவருக்கு அல்லது லீவு வழங்கும் அதிகாரிக்கு உத்தியோகத்தரொருவரின் லீவு தொடர்பில் வழமையான சூழ்நிலைகளின் கீழ் மருத்துவச் சான்றிதழொன்று தேவைப்படாத விடயத்தில் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தரிடமிருந்து மருத்துவச் சான்றிதழைச் சமர்ப்பிக்குமாறு அவரைக் கோருவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது."

ஒப்பம்: எம். எச். ஜுனைட்
செயலாளர்
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல: 32/93

எனது இல:111/163/4/27/எல்/எல்
பொது நிர்வாக அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு - 07.
1993 டிசம்பர் மாதம் 24 ஆந் திகதி.

எல்லா செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,

தாபன விதிக்கோவையின் XX111 அத்தியாயத்தை
திருத்துதல்.

தாபன விதிக்கோவையின் XX111 அத்தியாயத்தின் 1 ஆம் பிரிவானது 1:4 மற்றும் 1:4:1 என புதிதாக உட்பிரிவுகள் சேர்க்கப்படுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

1:4 மேல் 1:1, 1:2, 1:3 உட்பிரிவுகளில் காட்டப்பட்டுள்ள நோக்கங்களுக்கு சமமான மருத்துவச் சபையால் நியமிக்கப்படும் வேறு எந்த நோய் தொடர்பாகவும் அல்லது மருத்துவச் சபையால் சிபாரிசு செய்யப்படும் சத்திரச் சிகிச்சைகளுக்குப் பின்பு தேவைப்படும் கவனிப்புக்களின் பொருட்டும் 06 மாத காலம் வரை பூரண சம்பளமுள்ள விசேட லீவுகள் வழங்கப்படல் வேண்டும்.

1:4:1 இதன் பொருட்டு லீவுகளை அனுமதிக்கும்போது இந்த அத்தியாயத்தில் காட்டப்படும் மற்றைய அனைத்து ஏற்பாடுகளையும் ஏற்புடையதாக்கிக் கொள்ளல் வேண்டும்.

ஒப்பம்: வெ.பி.புஸ்சேதெனிய
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.

அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 13/95

எனது இல. 111/163/1/21/எல்/எல்/11-4
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07.
1995, மார்ச் மாதம் 31 ஆந் திகதி.

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

தாய்ப்பால் ஊட்டுவதற்கான சலுகை காலம்

தற்போது அரச சேவையிலுள்ள பெண்களுக்கு பிரசவகால விடுமுறை முடிந்து விட்டு (84 நாட்கள் அல்லது 42 நாட்களின் பின்) தனது குழந்தைக்கு தாய்ப்பால் ஊட்டுவதற்காக குறிப்பிட்ட நேரத்திற்கு ஒரு மணித்தியாலம் முன்னராக சேவை நிலையத்திலிருந்து புறப்பட்டுச் செல்வதற்கு அனுமதி வழங்க வேண்டும். இந்த அனுமதி குழந்தைக்கு (05) மாதங்கள் முடியும் வரை மட்டுமே வழங்க வேண்டும்.

ஒப்பம்: ஆர்.எஸ்.ஜயரத்ன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல 16/ 96 (1)
எனது இல ஆ 111/ 4/ 8-1
அரசாங்க நிருவாக உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு-07
1997.11.08 ஆந் தேதி

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்
திணைக்கள தலைவர்களுக்கும்

## பிரசவ விடுமுறை தாபன விதிக்கோவை xii ஆம் அத்தியாயத்திற்குத் திருத்தங்கள்

தாபன விதிக் கோவையின் xii ஆம் அத்தியாயத்தின் 18ஆம் பிரிவைத் திருத்தி வெளியிடப்பட்ட 1996.06.17 ஆந் தேதிய 16/96 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுவதுடன் அச் சுற்றறிக்கையின் 18: 05, 18 : 7 ஆம் பிரிவுகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவுகள் பதிலீடு செய்யப்படுகின்றன.

18: 5 பிரசவமான அதேவேளையில் மரணம் நிகழும் குழந்தைப் பிரசவத்தின் போதும் பிறந்து 06 வாரங்கள் செல்லுமுன் குழந்தை மரணிக்கும் சந்தர்ப்பத்திலும் குழந்தையின் மரணச் சான்றிதழ் அல்லது வைத்தியச் சான்றிதழ் சமர்ப்பித்த போது சம்பளத்துடனான விசேட விடுமுறையாக பிறந்த திகதி தொடக்கம் 06 வாரங்கள் விடுமுறை வழங்கப்பட வேண்டும்.

18: 7 இந்தப் பிரிவின் கீழ் அனுமதிக்கப்படுகின்ற பிரசவ விடுமுறை முடிந்ததும் (84 அல்லது 42 நாட்கள்) தன் குழந்தைக்கு தாய்ப்பாலூட்டுவதற்காக வழமையான அலுவலகத்திலிருந்து புறப்படும் நேரத்திற்கு ஒரு மணித்தியாலம் முன்னராக சேவை நிலையத்தை விட்டுச் செல்வதற்காக அவர்களுக்கு அனுமதி வழங்க வேண்டும். குழந்தை பிறந்த நாள் தொடக்கம் அதற்கு (6) மாதங்கள் பூர்த்தியாகும் வரை மட்டும் இவ்வாறு அனுமதி வழங்க வேண்டும்.

ஒப்பம் / டிக்ஸன் நிலவீர
செயலாளர்
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

சுற்றுநிருபம் இலக்கம் 1993/ 09

எனது இல. 4/ஆ.தா/ 6 மக/ 44 நானாவித
கல்வி, உயர்கல்வி அமைச்சு,
"இசுருபாய", ஸ்ரீ ஜயவர்த்தனபுர,
பத்தரமுல்ல.
1993.05.20 ஆந் திகதி

மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
மற்றும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்

## அரச உத்தியோகத்தர்களின் அலுவலக நேரங்களும் லீவும்

மேற்குறித்த விடயம் சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ள பொ.நி.சு.நி.இலக்கம் 03/92 இன் இரண்டாம் பந்தியின் இலக்கம் 111இன் மீது உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

அதன் அடிப்படையில் அரச உத்தியோகத்தர்களுக்குக் கர்ப்பிணியான சந்தர்ப்பங்களில் 05 மாதங்களான பின்னர் கடமைக்காக சேவைத்தளத்திற்கு அரை மணிநேரம் பிந்தி வருவதற்கும் பொதுவாகச் சேவைத்தளத்திலிருந்து அரைமணி நேரம் முந்தி வெளியே செல்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த சுற்றுநிருபக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டவாறான வரப்பிரசாதங்களை ஆசிரியைகளுக்கும் வழங்குவதை அங்கீகரிக்கின்றேன்.

பாடசாலையில் கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாதவாறு இது தொடர்பாக ஏற்ற ஒழுங்குமுறைகளை ஏற்படுத்திக் கொள்வதற்காக சகல கோட்டக் கல்வி அலுவலங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கவும்.

எம்.டி.டி.பீரிஸ்
செயலாளர்,
கல்வி, உயர் கல்வி அமைச்சு

பிரதி சகல தேசிய பாடசாலைகளினதும் அதிபர்களுக்கு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நிர்வாக சுற்று நிருப இல. 20/89

பொதுநிர்வாக மாகாண சபைகள்
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07
1989.03.23

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்
திணைக்கள தலைவர்களுக்கும்
அரச கூட்டுத்தாபன தலைவர்களுக்கும்

## விசேட லீவு தாபன விதிக்கோவை xii வது அத்தியாயத் திருத்தம்

கீழ்வருமாறு துணைப்பிரிவு 12 : 1 திருத்தப்படுகிறது

சேவையின் அவசிய தன்மையைப் பொறுத்து, முஸ்லீம் அரச ஊழியருக்கு தங்கள் வணக்க வழிகாடுகளில் ஈடுபடுவதன் பொருட்டு வெள்ளிக்கிழமை தினங்களில் முற்பகல் 12.00 தொடக்கம் 2 மணித்தியாலத்திற்கு மேற்படாத வகையில் விசேட லீவு வழங்கப்படும்.

02. கீழே காட்டப்பட்டவாறு துணைப்பிரிவு 12 : 12 திருத்தப்படுகிறது

"இத்தா"அனுட்டிப்பதற்கான லீவு

அக்குறிப்பிட்ட வருடத்திலும் தமது முழு சேவைக்காலத்தினுள்ளும் பாவிக்காது எஞ்சியுள்ள ஓய்வு (ஒன்று திரட்டிய ஏனைய) லீவுகளை பயன்படுதி அரச சேவையிலுள்ள மணமுடித்த முஸ்லிம் பெண்கள்"இத்தா" அனுட்டிக்கும் பொருட்டு 4 மாதம் 10 நாட்களுக்கு கூடாத வகையில் லீவு வழங்கப்படலாம். இந்நாட்களை மேவும் லீவுகள் அரைச் சம்பள லீவாக கணிக்கப்படும்.

சிரில் கமகே
செயலாளர்
பொது நிர்வாக மாகாண சபை
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு

சுற்றுநிருப இல 1995/ 35

எனது இல4/ 17/ 92/ 93
கல்வி உயர்கல்வி அமைச்சு
இசுருபாய
பத்தரமுல்ல
1996.01.31

எல்லா மாகாண கல்விப்பணிப்பாளர்களுக்கும்

## முதுமானி புகுநிலை கற்கை நெறியின் கீழ் புவியியல் (வார இறுதி) பாடநெறி இறுதிப் பரீட்சையின் பொருட்டு ஆசிரிய மாணவர்களுக்காக கடமை லீவு வழங்குதல்

பேராதனை பல்கலைக்கழகத்தில் முதுமானி புகுநிலை மட்டத்தில் பூகோளவியல் (வார இறுதி) பாடநெறியினை மேற்கொள்ளும் ஆசிரிய மாணவர்களுக்கு அப்பாட நெறி இறுதிப் பரீட்சைக்காக பாட நெறியின் இறுதி மாதத்தினுள் கடமை லீவு அனுமதிக்கப்படுகிறது.

2. இவ்விடயம் தொடர்பாக உங்கள் மாகாணத்திலுள்ள சகல வலய பணிப்பாளர்களுக்கும், பிரதி பணிப் பாளர்களுக்கும் ஏனைய தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கும் அறிவிக்கவும்.

எம்.டி.டி.பீரிஸ்
செயலாளர்
கல்வி உயர்கல்வி அமைச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இல ஆங் 1/43/95
ஆங்கிலக் கல்வி பிரிவு
கல்வி உயர்கல்வி அமைச்சு
இசுருபாய
பத்தரமுல்ல
1996.07.23

எல்லா மாகாண கல்விப்பணிப்பாளர்களுக்கும்

## கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் தொழில்சார் ஆங்கிலப் பாடநெறியை பயிலுவோருக்கு கடமைலீவு அனுமதித்தல்

கல்வி உயர்கல்வி அமைச்சரின் பணிப்பின் பேரில் ஆங்கில ஆசிரியர்களின் மொழியாற்றலை மேம்படுத்தும் பொருட்டு, கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் தொழில்சார் ஆங்கில பாடநெறிக்கு தீவிலுள்ள ஆங்கில ஆசிரியர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

இப்பாடநெறி வாரஇறுதி நாட்களில் நடாத்தப்படுவதால் போய்வருவதற்கு சேவை நிலையத்திலிருந்தான தூர அளவினை வைத்து கடமைலீவு அனுமதிக்கப்பட முடியும். (வெள்ளி அல்லது திங்கட்கிழமை) கொழும்பு பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் வரவுச் சான்றிதழினை அடிப்படையாகக் கொண்டு இது வழங்கப்பட வேண்டும்.

இதில் அடங்கியுள்ள விடயங்களை எல்லா வலய, கோட்டமட்ட பணிப்பாளர்களினதும் கவனத்திற்கு கொண்டு வந்து நடைமுறைபடுத்தவும்.

கே.ஜ.விக்ரமசிங்
மேலதிக செயலாளர் (நிருவாகம்)
கல்வி உயர்கல்வி அமைச்சின்
செயலாளருக்காக

எனது இலக்கம் ஆசி/ கல் 2/21
ஆசிரியர் கல்வி நிர்வாகக் கிளை
கல் உயர்கல்விஅமைச்சு
இசுறுபாய
பத்தரமுல்ல
1996.08.15

எல்லா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி
அதிபர்களுக்கு

## கர்ப்பிணி நிலையடைந்த ஆசிரிய மாணவர்களது ஆசிரியர் பயிற்சியை பின்போடல்

கர்ப்பிணி நிலையெய்திய ஆசிரிய மாணவர்களின் பயிற்சியை பின் போடுவது தொடர்பாக ஒவ்வொரு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியும் வேறு வேறு நடைமுறையை பின்பற்றுவது தெரிய வந்துள்ளது இது தொடர்பாக இனிமேல் கீழ்வரும் அறிவுறுத்தல்களை கடைப்பிடிக்குமாறு வேண்டப்படுகின்றீர்.

1. மணமுடித்த ஆசிரிய மாணவர்களுக்கு தற்போது வழங்கப்படும் சலுகையாதெனில் அங்ஙனம் கருவுற்றதும் உடனடியாக ஆசிரியர் பயிற்சியை இடை நிறுத்தாது ஆசிரிய பயிற்சி நடவடிக்கைகளுக்கு குந்தகம் ஏற்படாத வகையில் தொடர இடமளித்தலாகும்.
2. எவ்வாறாயினும் உடற்கல்வி அழகியல் கல்வி போன்ற பிரயோக செயற்பாடுகளில் பங்கேற்க முடியுமாயிருந்தால் வேண்டும். அவ்வாறு பங்கேற்கமுடியாதபோது அதுஆசிரியர் கல்விக்கு குந்தகமானது எனக்கருதி பயிற்சியை பின்போடுவதை சிபாரிசு செய்து அனுப்பவும்.
3. குழந்தை பிறந்தபின் அவ்வாசிரியர் தமது மகப்பேற்று விடுமுறையை அனுபவிப்பது கட்டாயமாகும் அவ்வாறான விடுதலை அநாவசியமானது என யாரும் ஒதுக்க முடியாது அவ்வாறு விடுமுறை பெற்றுக்கொள்வதால் கட்டாய சமூகம் தர வேண்டிய வீதத்தை விட சமூகமளிக்கும் வீதம் குறையுமிடத்து அதனால் பயிற்சிக்கு பாதகம் என கருதுமிடத்து குழந்தை பிறந்தபின் ஒருவருடம் பயிற்சியை பின்போட சிபாரிசு செய்யலாம்.

எம்.டி.டி.பீரிஸ்
கல்வி உயர்கல்வி அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுநிருப இல 52 / 91

பொதுநிருவாக மாகாண சபைகள்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 7
நவம்பர் 10,1991

எல்லா அமைச்சின் செயலாளர்களுக்கும்
மாகாண சபை பிரதான செயலாளர்களுக்கும்
மாகாண ஆளுநர் செயலாளர்கள்
திணைக்கள தலைவர்களுக்கும்

## அரச உடன்பாட்டுடன் நிறுவப்பட்ட வெளிநாட்டு முகவர் நிறுவனங்களில் தொழில் புரியும் பொருட்டு சம்பளமற்ற லீவு வழங்குதல்

1985 டிசம்பர் 05ம் திகதி 318ம் இலக்க பொதுநிருவாக சுற்றறிக்கையின்பால் உங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. தாபன விதிக் கோவையின் 16ம் பிரிவின் 16: 13ம் உப பிரிவினை அடுத்து கீழ்வரம் பிரிவுகளை சேர்த்துக் கொள்ளவும்

16 : 1 : 4 அரசின் உடன்பாட்டுடன் இலங்கையில் நிறுவப்பட்ட ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், உலக சுகாதார அமையம் போன்ற வெளிநாட்டு முகவர் நிறுவனங்களில் தொழில் புரியும் பொருட்டு நிரந்தர சேவையிலுள்ள அரச ஊழியர்களுக்கு ஐந்து (05) வருடங்களுக்கு மேற்படாத சம்பளமற்ற லீவுகளை வழங்கலாம்.

16 : 1 : 5 உப பிரிவுகள் 16 : 1 : 1 : 16 : 1: 4 யின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு தமது சேவைக் காலத்துள் வழங்கக்கூடிய மொத்த லீவுகள் ஐந்து (05) வருடங்களுக்கு மட்டுப்படுத்தப்படும்.

16 : 1 : 6 வெளிநாட்டு வேலையின் பொருட்டு சம்பளமற்ற லீவு வழங்கப்படும் போது விதிக்கப்பட்டுள்ள 16வது பிரிவின் கீழான ஏனைய அனைத்து நிபந்தனைகளும் 16: 1: 4 உப பிரிவின் கீழ் லீவுகள் வழங்கும் போதும் ஏற்புடையதாகும்.

ஆர். அபேவர்த்த
செயலாளர்
பொதுநிர்வாக மாகாண
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இல 4
கல்வி உயர் கல்வி அமைச்சு
இசுருபாய
பத்தரமுல்ல
1994 ஓகஸ்ட் 12

பீடாதிபதி/ கல்வி
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

## இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பட்டப்பாடநெறியை பயிலும் ஆசிரியர்களுக்கு படிப்பு லீவு வழங்குதல்

மேற்குறித்த பாடநெறியை பயிலும் ஆசிரியர்களுக்கு

1. திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் விரிவுரை / செய்முறை என்பவற்றில் கலந்து கொள்வதற்காக 10 தினங்களும்
2. பரீட்சைகளுக்காக 10 நாட்களும் என்ற வகையில் வருடத்துக்கு 20 நாட்களுக்கு படிப்பு விடுதலை அனுமதிக்கப்படுகிறது.

எஸ்.வி.விஜேசிங்க
மேலதிக செயலாளர்
கல்வி உயர்கல்வி அமைச்சு
செயலாளருக்காக

எனது இல 7
கல்வி உயர்கல்வி அமைச்சு
இசுருபாய
பத்தரமுல்ல
1987.03.04

சகல பிராந்திய கல்விப் பணிப்பாளர்கள்
சகல பிரதான கல்வி அதிகாரிகள்
சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்

## தொலைக்கல்வி பாடநெறி இறுதிப் பரீட்சைக்குத் தோற்றும் ஆசிரிய மாணவர்களுக்கான படிப்பு விடுதலை

கல்வி அமைச்சின் தொலைக்கல்விப் பிரிவின் ஊடாக நடாத்தப்படும் தொலைக்கல்வி பாட நெறியை பின்பற்றும் அரச மற்றும் அனுமதியளிக்கப்பட்ட தனியார் பாடசாலைகள் பிரிவேனாக்களில் சேவை புரியும் எல்லா ஆசிரிய மாணவர்களுக்கும், பரீட்சை ஆணையாளரால் நடாத்தப்படும் இறுதிப் பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முந்திய இருவாரங்கள் சம்பளத்துடனான கற்கை லீவு வழங்க இத்தால் அனுமதியளிக்கப்படுகிறது.

2. இறுதிப் பரீட்சை இடம்பெறும் தினம்பற்றி தொலைக் கல்விக்கு பொறுப்பான பணிப்பாளர் மூலம் உங்களுக்கு அறிவித்தல் தரப்படும்.
3. இவ்வாறு ஆசிரியர்கள் கற்கை லீவு பெறும் காலத்தினுள் பாடசாலையின் நாளாந்த நடவடிக்கைகளை வழக்கம் போல் கொண்டு நடாத்த தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு தயவு செய்து அதிகாரிகளை அறிவுறுத்தவும்.

டபிள்யூ. ஜயமக
மேலதிக செயலாளர்
ஏ.ஜே.விஜேமான செயலாளர்
கல்வி உயர்கல்வி அமைச்சு

பிரதிகள் 1. தொலைக்கல்விப் பணிப்பாளர்
2. சிரேட்ட போதானாசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இல 4

கல்வி உயர்கல்வி அமைச்சு
இசுருபாய
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே
பத்தரமுல்ல
1995.07.04

மாகாண கல்விப்பணிப்பாளர்களுக்கு

## இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பாடநெறியை பயிலும் ஆசிரியர்களுக்கு படிப்பு விடுதலை வழங்குதல்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பாடநெறியை தொடரும் ஆசிரியர்களுக்கு பின்வரும் அடிப்படையில் படிப்பு விடுதலை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1. கல்வி பெறும் காலப்பகுதியினுள் தேவைக்கேற்ப மாதத்திற்கு ஒருநாள் வீதம்
2. பாடசாலை விடுமுறை காலமல்லாத போது பரீட்சைகள் இடம்பெறின் பரீட்சை இடம்பெறும் காலப்பகுதி மட்டும்.
3. பரீட்சைகளுக்கு தயார் செய்வதற்கான பரீட்சைக்கு முந்திய ஒரு வாரம்

படிப்பு விடுதலை வழங்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள மேற்படி தீர்மானத்தினை உங்கள் மாகாணத்திலுள்ள எல்லாப் பாடசாலை அதிபர்களுக்கும் தெரியப்படுத்தவும்

சேனாநாயக்க உபசேன
மேலதிக செயலாளர்
கல்வி உயர்கல்வி அமைச்சு
செயலாளருக்காக

எனது இல 4

கல்வி உயர் கல்வி அமைச்சு
இசுருபாய
பத்தரமுல்ல
1995.10.30

எல்லா மாகாண கல்விப்பணிப்பாளர்களுக்கும்

## கணணித் தொழிநுட்ப பாடநெறியொன்றினை பயில்வதற்கு படிப்பு விடுதலை வழங்குதல்

கணணித் தொழிநுட்ப பாடநெறிக்கு தெரிவு செய்வதற்கென வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் படி தகைமையுள்ள எல்லா ஆசிரியர்களுக்கும் சம்பளத்துடனான படிப்பு விடுதலை வழங்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

2. தயவுசெய்து இந்த விடயத்தினை உங்கள் மாகாணத்திலுள்ள எல்லாப் பிரதிக் கல்விப்பணிப்பாளர்களுக்கும் அறிவிக்கவும்.

சேனாநாயக்க உபசேன மேலதிக செயலாளர்
கல்வி உயர்கல்வி அமைச்சின் செயலாளருக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்று நிருப இல. 91/38

எனது இல. 4/ ஆதா/1/71
கல்வி உயர் கல்வி அமைச்சு
இசுருபாய
பத்தரமுல்ல
91.12.05

சகல மாகாண கல்வி பணிப்பாளர்களுக்கும்
மேலதிக மாகாண கல்வி பணிப்பாளர்களுக்கும்

ஆசிரிய பயலுனர்களின் தொழில் அபிவிருத்தி செயல்திட்ட கற்கை சம்பந்தமான கடமை லீவு

தொலைக்கல்வி ஆசிரியர் கற்கைநெறியை பயிலும், பயிலுனர் ஆசிரிய நியமனம் பெற்றுள்ளவர்களுக்கு மாதத்தில் வெள்ளிக்கிழமைகளில் இரு வேளைகளில் கடமை லீவு கொடுக்கும்படி அறியத்தருகின்றேன். இந்த விடுமுறை அவர்கள் இணைக்கப்பட்டுள்ள தொலைக்கல்வி பிரதேச மத்திய நிலையத்திற்கு சென்று கல்வி சம்பந்தமான ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்காகும் பாடசாலையின் கற்பித்தலுக்கு தடை ஏற்படாத முறையில் நாளின் முதல் 3 மணித்தியாலத்தையோ இறுதி 3 மணித்தியாலத்தையோ விடுமுறையாக கொடுக்கும்படி அதிபர்களுக்கு அறிவுறுத்தவும்.

எஸ்.ஏ.விஜேசிங்க
சிரேட்ட உதவி செயலாளர்
கல்வி உயர்கல்வி அமைச்சின் செயலாளருக்காக

பிரதிகள் 1. பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள்
2. சகல மாகாண நல்விச் செயலாளர்கள்
3. பணிப்பாளர் தொலைக்கல்வி

சுற்று நிருப இல. 1995/ 29

எனது இல 4
கல்வி உயர் கல்வி அமைச்சு
இசுருபாய
பத்தரமுல்ல
1995.11.30

சகல மாகாண செயலாளர்களுக்கும்
மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும்
மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும்

பட்டபின் கல்வி டிப்ளோமா (வார இறுதி) கற்கை நெறிக்கான படிப்பு விடுதலை

பேராதனை பல்கலைகழகத்தில் பட்டபின் கல்வி டிப்ளோமா (வார இறுதி) கற்கை நெறியை பயிலுனர் ஆசிரிய மாணவர்களுக்கு அந்த கற்கை நெறிக்கு தயாராகுவதற்கும் இறுதி பரீட்சை எழுதுவதற்குமாக கற்கை நெறியின் கடைசி மாதத்திற்கு முழுச் சம்பளத்துடனான படிப்பு விடுதலை அனுமதிக்கப்படுகிறது.

2. தயவு செய்து இது தொடர்பாக உங்கள் மாகாணத்திலுள்ள சகல பிரதிக்கல்விப் பணிப்பாளருக்கும் அறிவித்துவிடவும்.

பத்மா.டி.ஜயவீர
சிரேட்ட உதவி செயலாளர்
கல்வி உயர் கல்வி அமைச்சின்
செயலாளருக்காக

பிரதி 1. உபவேந்தர் பேராதனை பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[1] 10. (i) No period during which an officer shall have been absent from duty on leave without salary shall be taken into account as service for computation of pension unless such leave shall have been granted on grounds of public policy.

(ii) Only one half of any period during which an officer shall have been absent from duty on leave with half salary shall be taken into account as service for computation of pension unless such leave shall have been granted on grounds of public policy.

(iii) Any period whilst an officer is proceeding to Ceylon on first appointment to the service thereof shall not be so taken into account unless he received not less than half salary from Ceylon funds in respect of that period.

### Private Practice

11. (1) As a general rule, it is indispensable as a qualification for pension that the whole time of the retiring officer during his employment shall have been given to the public service. But officers of the Attorney-General's Department, subordinate officers of the Department of Health, Headmen, Kaddu Kanganies and Wewa Lekamas shall not be affected by this provision.

[2] (2) The provisions of sub-section (1) shall, in so far as they relate to Kaddu Kanganies and Wewa Lekamas, be deemed to have come into effect on January 1, 1946.

### Deductions

[3] 12. (1) Where the explanation tendered by a public servant against whom, at the time of his retirement from public service [4], disciplinary proceedings were pending or contemplated in respect of his negligence, irregularity or misconduct, is considered to be unsatisfactory by the competent authority, the [5] Permanent Secretary, Ministry of Public Administration, Local Government and Home Affairs [4] may either withold or reduce any pension, gratuity or other allowance payable to such public servant under these Minutes.

(2) [4] Where any inquiry pending at the time of retirement of an officer from the public service, and concluded after such retirement, discloses any negligence, irregularity or misconduct on his part during his period of service, and if the explanation tendered by him in respect of the findings of such inquiry is considered to be unsatisfactory by the competent authority or if no explanation is tendered by him in respect of those findings, the [5] Permanent Secretary, Ministry of Public Administration, Local Govrnment and Home Affairs may either withold or reduce any pension, gratuity or other allowance payable or awarded to such officer under these Minutes.

(3) Where no explanation has been tendered by a public servant referred to in paragraph (1) of this section, the [5] Permanent Secretary, Ministry of Public Administration, Local Government and Home Affairs may request such public servant to tender an explanation.

[6] 13. Repealed.

### Age at which Pensions are granted

14. A pension will not be granted to a public servant who shall be under fifty-five years of age unless upon a certificate from the Head of his Department and from a Medical Board nominated by the Director of Health Services or, if the public servant is absent on leave, from such medical adviser or advisers as the [5] Permanent Secretary, Ministry of Public Administration, Local Government and Home Affairs may name, that he is unfit to discharge the duties of his office

---

1 *Vide* Notification of November 4, 1941 (PN 1386).

2 *Vide* Notification of June 21, 1950 (PN 19868/P).

3 As amended by Notification of November 17, 1951, in *Gazette* of November 23, 1951. (PN. 1600).

4 *Vide* Notification of December 10, 1963 in *Gazette* No. 13,863 of December 20, 1963. This amendment shall be deemed to have come into effect on October 1, 1962. (PN. 1767).

5 *Vide* Notification of July 14, 1970 in *Gazette Extraordinary* No. 14,914/3 of July 16, 1970 (PN 1873).

6 *Vide* Secretary of State's Despatch No. 518 of October 31, 1933 in PN. 7588/P.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

owing to infirmity either of mind or body.[1] When a public servant claiming pension is himself the Head of a Department, a pension will be granted only upon medical certificate as prescribed above.[2]

[3] Provided that a pension may be granted without the medical certificate above referred to at the age of fifty years or after twenty years of service, whichever is earlier, in the case of locally appointed matrons [4], nursing sisters, nurses, midwives[5] and female vaccinators of the Department of Health, female teachers of the Education Department[6] and female employees in the Post and Telegraph Department[6] and at the age of forty-five or after fifteen years' service, whichever is later, in the case of members of the European Police Force.

[7] Provided however that any member of the Public Service, or any officer of the Department of Public Security whose service in a pensionable and permanent post in that Department is continuous with service as a member of the Police Service may, on completing the age of fifty years, be granted, without the production of the medical certificate referred to in the preceding provisions of this section, a pension or gratuity computed in the manner set out in section 7 of these Minutes.

14A. Rescinded.[7]

## Retirement for Inefficiency

[8] 15. Where a public servant is required by the competent authority to retire on grounds of inefficiency, the [7] Permanent Secretary, Ministry of Public Administration, Local Government and Home Affairs may in his discretion, grant such public servant a pension, gratuity or other allowance:

Provided, however, that the amount of pension, gratuity or allowance so granted shall in no case exceed the amount for which his length of service would qualify him.

## Re-employment of Pensioner or Gratuitant

[7] 16. (1) Where an officer to whom on his retirement a gratuity or a commuted gratuity together with a reduced pension has been granted, is re-appointed to a post under the Government, then such officer may be requested to refund to the Government such gratuity or commuted gratuity in such manner as the [7] Permanent Secretary, Ministry of Public Administration, Local Government and Home Affairs may direct.

(2) If any officer to whom a pension has been granted under these Minutes, is re-appointed to another post under the Government and subsequently retires in circumstances in which he may be granted a pension, then he may, in lieu of his previous pension, be granted a pension computed as if the periods of his service under the Government had been continuous, and such pension may be based on his pensionable emoluments at the time of his previous or final retirement from the service of the Government, whichever emoluments are the greater.

---

1 When an officer is responsibe or mainly responsible for the illness which leads to his retirement, some reduction (e.g., about 12 por cent) will as a general rule, be made in the pension or gratuity which would otherwise be award . (See Secretary of States' Circular Despatch of February 19, 1894).

2 *Vide* Notification of July 8, 1937.

3 *Vide* Notification of February 20, 1924.

4 [illegible] (PN 772.)

5 *Vide* Notification of September 6, 1948

6 *Vide* Notification of June 12, 1934.

7 Vide Notification of February 10, 1971 in *Gazette Extraordinary* No. 14945/1 of February 13, 1971. Th amendment shall be deemed to have come into effect on April 1, 1970 (PN. 1660).

8 *Vide* Notification of October 23, 1933.

9 *Vide* Notification of March 13, 1926.

10 *Vide* Notification of April 9, 1955, in the *Gazette* of April 29, 1955 (PN. 023) and Notification of November 30, 1955, in the *Gazette* of December 16, 1955. (PN. 1580).

11 *Vide* Notification of December 28, 1964, in *Gazette Extraordinary* No. 14,272 of December 29, 1964 (PN.1795).

12 As amended by Notification of November 17, 1951, in *Gazette* of November 23, 1951. (PN. 1000).

13 *Vide* Notification of July 14, 1970, in *Gazette Extraordinary* No. 14,914/9 of July 16, 1970 (PN 1873).

This is a true extract of the Pension minute

A.P
28/09/14.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1986.12.17 ஆந் திகதி முதல் ஓய்வு பெறுவோருக்கான ஓய்வூதியக் கணிப்பு நூற்றுவீத அட்டவணை

| ஓய்வு பெறும் போது பெற்ற வருடச் சம்பளம் | வரு: 25 | | வரு: 25 மாதம்: 06 | | வரு: 26 | | வரு: 26 மாதம்: 06 | | வரு: 27 | | வரு: 27 மாதம்: 06 | | வரு: 28 | | வரு: 28 மாதம்: 06 | | வரு: 29 | | வரு: 29 மாதம்: 06 | | வரு: 30 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கணிக்கப்படாத | கணிக்கப்பட்ட | கணிக்கப்படாத | கணிக்கப்பட்ட | கணிக்கப்படாத | கணிக்கப்பட்ட | கணிக்கப்படாத | கணிக்கப்பட்ட | கணிக்கப்படாத | கணிக்கப்பட்ட | கணிக்கப்படாத | கணிக்கப்பட்ட | கணிக்கப்படாத | கணிக்கப்பட்ட | கணிக்கப்படாத | கணிக்கப்பட்ட | கணிக்கப்படாத | கணிக்கப்பட்ட | கணிக்கப்படாத | கணிக்கப்பட்ட | கணிக்கப்படாத | கணிக்கப்பட்ட |
| | % | % | % | % | % | % | % | % | % | % | % | % | % | % | % | % | % | % | % | % | % | % |
| ரூபா 25440க்கு குறைவான | 85 | 75 | 86 | 76 | 87 | 77 | 88 | 78 | 89 | 79 | 90 | 80 | 90 | 81 | 90 | 82 | 90 | 83 | 90 | 84 | 90 | 85 |
| 25441 - 26460 | 84 | 74 | 85 | 75 | 86 | 76 | 87 | 77 | 88 | 78 | 89 | 79 | 90 | 80 | 90 | 81 | 90 | 82 | 90 | 83 | 90 | 84 |
| 26461 - 28740 | 83 | 73 | 84 | 74 | 85 | 75 | 86 | 76 | 87 | 77 | 88 | 78 | 89 | 79 | 90 | 80 | 90 | 81 | 90 | 82 | 90 | 83 |
| 28741 - 30060 | 82 | 72 | 83 | 73 | 84 | 74 | 85 | 75 | 86 | 76 | 87 | 77 | 88 | 78 | 89 | 79 | 90 | 80 | 90 | 81 | 90 | 82 |
| 30061 - 31740 | 81 | 71 | 82 | 72 | 83 | 73 | 84 | 74 | 85 | 75 | 86 | 76 | 87 | 77 | 88 | 78 | 89 | 79 | 90 | 80 | 90 | 81 |
| 31741 - 41280 | 80 | 70 | 81 | 71 | 82 | 72 | 83 | 73 | 84 | 74 | 85 | 75 | 86 | 76 | 87 | 77 | 88 | 78 | 89 | 79 | 90 | 80 |
| 41281 - 55920 | 79 | 69 | 80 | 70 | 81 | 71 | 82 | 72 | 83 | 73 | 84 | 74 | 85 | 75 | 86 | 76 | 87 | 77 | 88 | 78 | 89 | 79 |
| 55921 - 66840 | 78 | 68 | 79 | 69 | 80 | 70 | 81 | 71 | 82 | 72 | 83 | 73 | 84 | 74 | 85 | 75 | 86 | 76 | 87 | 77 | 88 | 78 |
| 66841 - 71040 | 77 | 67 | 78 | 68 | 79 | 69 | 80 | 70 | 81 | 71 | 82 | 72 | 83 | 73 | 84 | 74 | 85 | 75 | 86 | 76 | 87 | 77 |
| 71041 -101400 | 76 | 66 | 77 | 67 | 78 | 68 | 79 | 69 | 80 | 70 | 81 | 71 | 82 | 72 | 83 | 73 | 84 | 74 | 85 | 75 | 86 | 76 |
| 101400க்கு மேல் | 75 | 65 | 76 | 66 | 77 | 67 | 78 | 68 | 79 | 69 | 80 | 70 | 81 | 71 | 82 | 72 | 83 | 73 | 84 | 74 | 85 | 75 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வூதியச் சுற்றறிக்கை இல: 1/96

ஓய்வூதியத் திணைக்களம்
மாளிகாவத்தைச் செயலகம்,
மாளிகாவத்தை
கொழும்பு - 10.
1996.12.06

சகல அமைச்சுச் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கட்கும்.

## அரச ஊழியர்கள் ஓய்வு பெறுதல்

அரச சேவையாளர்கள் ஓய்வு பெறுவதற்கான உரிய வயதை அடையுமுன், ஓய்வு பெறுதல் சம்பந்தமாக பொது நிர்வாகச் சுற்றறிக்கை 44/90 மூலம் ஏற்படுத்தப் பட்டிருந்த வழிமுறைகள், 1996.11.12 ஆந் திகதிய 32/96 ஆம் இலக்கப் பொது நிர்வாகச் சுற்றறிக்கை மூலம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

02. இதன்படி 1996.12.17 ஆந் திகதியன்று அல்லது அதற்குப் பின் செயற்படுத் தப்படும் சகல ஓய்வு பெறுதல்களும் பின்வரும் விதிமுறைகளுக்கமைய ஓய்வூதியத் திணைக்களம், அதன்படி வழங்கலும் பின்பற்றப்பட வேண்டும்.

அ. இருநூற்றிருபது மாதங்கள் மொத்தச் சேவையைப் பூர்த்திசெய்ததன் பின் ஓய்வூதிய உரிமை பெறும் ஊழியரொருவர் வயது சம்பூரணமாதல் அடிப்படை யில் அல்லது ஓய்வூதியச் சட்ட அம்சங்களுக்கு ஏற்பப் பெறப்படும் ஏதாவ தொரு ஓய்வுபெறும் அடிப்படையில் ஓய்வு பெறுவதாயின் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின்படி, அவரின் சேவைக்காலத்திற்கும், சம்பளத்திற்கும் பொருத் தமான 'குறைக்கப்படாத' ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு உரிமை உண்டு.

ஆ. ஓய்வூதிய விதிகளின் கீழ் சுயவிருப்பைத் தெரிவித்த பின் 24 மாதங்களின் ஓய்வூதியத்திற்குச் சமமான திரட்டிய கொடுப்பனவைப் பெற முடியும். அத் திரட்டிய கொடுப்பனவைப் பெறுவதாயின் அவ்வாறான ஓய்வு பெற்ற வருக்கு ஓய்வு பெற்ற முதல் 10 வருடங்களுக்கு "குறைக்கப்பட்ட" ஓய்வூ தியம் அல்லச் சம்பள அடிப்படையில் கணிப்பிடும் முறை இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. அப்பத்து வருடங்களின் பின் மேலே அப்பந்தியில் காட்டப்பட்டுள்ளவாறு "குறைக்கப்படாத" ஓய்வூதியம் ஊழியருக்கு வழங்கப்படும்.

03. இவ் அட்டவணையில் 25-30 வரை சேவைக்காலம் உடையோருக்கான ஓய்வூதிய கொடுப்பனவு சம்பந்தமான விதங்களாகும். 25 வருடங்களுக்குக் குறைந்த சேவையுடன் ஓய்வுபெறும் ஊழியருக்கு 25 வருடங்களுக்குக் குறையும் ஒவ்வோர் 6 மாதங்களுக்கும் ஓய்வூதியம் கணக்கிடும்போது முறையே 1% குறைக்கப்படும்.

04. ஊழியர் ஒருவரினால் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட சம்பளமற்ற லீவு பெறப்பட் டுள்ள சந்தர்ப்பத்தில், அவ்வாறு சம்பளமற்ற லீவு பெறப்பட்ட ஒரு வருடத்தில் ஒவ் வோர் மாதத்திற்குமாக அல்லது அதன் பகுதிக்குமாக அவருக்குரிய ஓய்வூதியத்தில் 0.2% குறைக்கப்படும். எனினும் பின்வரும் சந்தர்ப்பங்களில் பெறப்பட்டுள்ள சம்பளமற்ற லீவுகள் மேற்கூறப்பட்ட குறைப்பனவிற் சேர்க்கப்படாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதியக் கட்டளை சார்பின் 1970 ஏப்பிரல் 1 ஆந் திகதி சிவில் ஓய்வூதியத் திட்டத்திற்கு முந்திய காலத்தில் அவர்களினால் பெறப்பட்ட ½ சம்பளத்துடனான சம்பளமற்ற லீவுகள்.

ஆ. அரச ஊழியர் ஒருவரின் உத்தியோக ரீதியான அவருக்குப் பயன்படத்தக்க உயர் தகைமையைப் பெறுவதற்கு அவருக்கு வழங்கப்பட்ட சம்பளமற்ற லீவுகள்.

05. ஓய்வூதியம் பெறுவதற்குத் தேவையான தகைமைகள் உள்ள ஊழியர் ஒருவர் திணைக்களம் அல்லது பதவி இல்லாது ஒழிக்கப்படும் போது ஓய்வு பெறுவதெனில் ஓய்வூதிய விதிகளுக்கு ஏற்ப அவ்வூழியரின் ஓய்வூதியம் கணக்கிடுவதற்கான சேவைக்காலத்துடன் மேலும் 5 வருடங்கள் அதிகரிக்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின்படி ஓய்வு பெற்ற திகதியிலிருந்து ஓய்வூதியம் பெற உரித்துடையவராவார்.

06. ஓய்வூதிய விதிகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள வேறு விசேட காரணங்களுக்காக ஓய்வூதியம் பெறும் ஊழியர்கட்கு அவ்விதிகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறே பின்பற்றப்படுவதோடு இச்சுற்றுநிருபத்தில் கூறப்பட்டுள்ளவற்றிற்கேற்ப ஓய்வூதியம் பெறுவதற்கு உரித்துண்டு.

07. நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமான பதவியொன்றில் கடமையாற்றி, அப்பதவியில் நிரந்தரமாக்கப்பட்டு 5 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலங்கள் பூரணப்படுத்தப்பட்டுள்ள ஊழியர் ஒருவர் ஓய்வு பெறுவதற்கு முன் இறக்க நேரிடின், அவ்வூழியர் இறந்த தினத்தில் பெற்ற சம்பளமும் இறக்கும் பொழுது ஆற்றியுள்ள சேவைக்காலமும் கருத்திற் கொள்ளப்பட்டு இச்சுற்று நிருபத்தின் விதிகளுக்கேற்ப 24 மாதங்களுக்குரிய "குறைக்கப்படாத" ஓய்வூதியமும் அதற்குச் சமமான திரட்டிய கொடுப்பனவு மரணக் கொடுப்பனவாகத் தங்கிநிற்போருக்கு வழங்கப்படும்.

08. பொது நிருவாக சுற்றுநிருபம் 30/88 இன் விதிகளுக்கு ஏற்ப ஓய்வு பெறும் ஊழியருக்கு ஓய்வூதியமும் திரட்டிய கொடுப்பனவும் வழங்கப்படுவது 55 வயதைப் பூர்த்தி செய்ததன் பின்னராகும். அத்தோடு அவர்களது ஓய்வூதியம் கணக்கிடப்படுவது மேலே 2 வது பந்தியில் குறிப்பிடப்பட்டவாறாகும்.

09. ஓய்வூதிய விதிகள் இதன்படி திருத்தப்பட்டுள்ளது.

10. இச்சுற்றுநிருபம் திறைசேரியினதும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் பெருந்தோட்டத்துறை பாராளுமன்ற விவகார அமைச்சினதும் ஒருமைப்பாட்டுடன் வெளியிடப்படுகிறது.

(டி. சூரிய சமரவீர)
ஓய்வூதியப் பணிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கசேகு/சுற்றுநிருப இலக்கம் 2002/3

எனது இல:கசேகு/ஆசி/2
கல்விச் சேவைக் குழு,
இசுறுபாய,
பெலவத்த, பத்தரமுல்ல.

2002.03.18

சகல மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு செயலாளர்கள்/
சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்/
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்.

**பயிலுநர்/தகுதிகாண் அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட ஆசிரியர்களைஇலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணங்களுக்கமைய ஆசிரியர் சேவைக்கு உள்ளெடுப்புச் செய்தல்**

எனது 2001.11.16ஆந் திகதியில் வெளியிடப்பட்ட 2001/12ஆம் இலக்கம் கொண்ட சுற்றுநிருபத்திற்கும் 2001.11.27ஆந் திகதியையும் கொண்ட 2001/12(1) சுற்று நிருபம் தொடர்பாக.

02. மேற்குறித்த சுற்றுநிருபங்களில் உட்படாத பின்வரும் ஆசிரியர் வகைக்குரிய பயிலுநர்/தகுதிகாண் ஆசிரியர்களையும் 2001/12 மற்றும் 2001/12(1) சுற்றுநிருபங்களில் உள்ள அறிவுறுத்தல்களை கருத்தில் கொண்டு, இலங்கை ஆசிரியர் சேவையின் உரிய தரங்களுக்கு உள்ளெடுப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன்.

| இலக்கம் | ஆசிரியர் வகை | வர்த்தமானி அறிவித்தல் திகதி | ஆட்சேர்க்கப்பட்ட வருடம் |
|---|---|---|---|
| 01 | அரசாங்க பாடசாலைகளில் சமயக்கல்வி கற்பிப்பதற்காக தகுதிகாண் ஆசிரியர்களை நியமித்தல் | 1996.03.01ஆந் திகதி கொண்ட வர்த்தமானி அறிவித்தலும் 1997..05.03ஆந் திகதிய போட்டிப் பரீட்சை மூலம் | 1999 |
| 02 | இலங்கை ரஜரட்ட, சபரகமுவ மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகங்களில் ஆங்கில மொழி பட்டதாரிகளை ஆங்கில பட்டதாரி தகுதிகாண் ஆசிரியர்களாக நியமித்தல். | 2000.05.15 மற்றும் 16ஆந் திகதியின் நேர்முகப் பரீட்சை. (கல்வி உயர்கல்வி அமைச்சின் அனுமதியின் கீழ் ஆட்சேர்க்கப் பட்டது. | 2000 |

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவின் பணிப்பிற்கமைய,

ரி.எம்.தென்னகோன்
செயலாளர்
அரசாங்க சேவை ஆணைக்குழுவின்
கல்விச் சேவைக் குழு

பிரதிகள்: 1. செயலாளர், மனிதவளங்கள் அபிவிருத்தி, கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சு

2. சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் தகுந்த நடவடிக்கைக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விச் சேவைக் குழுவின்
சுற்றறிருப இலக்கம்: 2001/12(1)

எனது இல: கசேகு/ஆ/2
அரசாங்க சேவை ஆணைக்குழுவின்
கல்விச் சேவைக் குழு.
'இசுருபாய'
பெலவத்த, பத்தரமுல்ல.
2001.11.27

சகல மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,

பயிலுநர்/தகுதிகாண் அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட ஆசிரியர்களை இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் கருக்கமைய ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்தல்

பொது 2001.11.16ஆந் திகதி 2001/12 கொண்ட சுற்று நிருபத்தின் 3ஆம் பந்தியின் (1) உப பிரிவு நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக கீழ்வரும் பந்தி சேர்க்கப்படுகின்றது.

"இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளில் கல்விப் பொதத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சையில் சித்தி பெற்றவர்களை அப்பிரமாணத்தின் 3ஆம் வகுப்பின் 11 ஆம் தரத்திற்கும் கல்வி உயர்கல்வி அமைச்சினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆசிரியர் பயிற்சியொன்றை பெற்றுள்ளவர்களை அப்பிரமாணத்தின் 3ஆம் வகுப்பின் 1ஆம் தரத்திற்கும் அத்தகைமைகளை பெற்ற திகதி முதல் உள்ளீர்ப்புச் செய்தல் வேண்டும். இங்கு இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணத்திற்கமைய உரிய தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ளவர்களை தகைமை பெற்ற திகதி அல்லது நியமனத் திகதி என்ற இரண்டில் பின்னர் வரும் திகதி முதல் உரிய உள்ளீர்ப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

02. மேலும் 2001/12 இந்த சுற்று நிருபத்தை செயற்படுத்துவதில் நியமனக் கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகாண் சேவைக் காலத்தை பூரணப்படுத்துதல் நிபந்தனையை கருத்தில் கொள்ளக்கூடாது என்று இங்கு குறிப்பிடப்படுகின்றது.

03. இந்த சுற்று நிருபம் கல்வி, உயர்கல்வி அமைச்சின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்படுகின்ற ஒன்றாகும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவின் பணிப்பிற்கமைய,

ரி. எம். தென்னகோன்,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழுவின்,
கல்விச் சேவைக் குழு.

பிரதிகள்:
1. செயலாளர்-கல்வி உயர்கல்வி அமைச்சு - அறிந்து கொள்வதற்காக
2. சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்- உரிய நடவடிக்கைக்காக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுநிருப இலக்கம்: 2001/12

அரசாங்க சேவை ஆணைக்குழுவின்,
கல்விச் சேவைக் குழு,
'இசுருபாய',
பெலவத்த, பத்தரமுல்ல.
2001.11.16

05 DEC 2001

சகல மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,

பயிலுநர்/தகுதிகாண் அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட ஆசிரியர்களை இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணங்களுக்கமைய ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்த்தல்

இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணம் செயற்படுத்தப்பட்டதன் பின்னர் காலத்திற்குக் காலம் எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய கல்வி உயர்கல்வி அமைச்சின் சிபார்சுக்கமைய கல்விச் சேவைக் குழுவினால் அல்லது கல்விச் சேவைக் குழுவின் அறிவுறுத்தலுக்கமைய, மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தகுதிகாண், பயிலுநர் அடிப்படையில் மாதாந்த கொடுப்பனவு அடிப்படையில், கீழ் குறிப்பிடப்படும் ஆசிரியர் வகையினர் அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

| தொடர் இலக்கம் | ஆசிரியர் வகை | வர்த்தமானி அறிவித்தல் திகதி | ஆட்சேர்க்கப்பட்ட வருடம் |
|---|---|---|---|
| 01. | கடும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளில் தமிழ்மொழிமூலம் கற்பிப்பதற்காக பயிலுநர் ஆசிரியர்களை ஆட்சேர்த்தல். | 1994.03.25 | 1995 |
| 02. | கவின்கலை டிப்ளோமா தகுதிகாண் ஆசிரியர் | 1993.12.24 | 1996 |
| 03. | தொழில்கல்வி தகுதிகாண் ஆசிரியர் | 1994.03.04 | 1996 |
| 04. | விவசாய விஞ்ஞான தகுதிகாண் ஆசிரியர் | 1994.01.28 | 1996 |
| 05. | மனைப்பொருளியல் தேசிய டிப்ளோமா தகுதிகாண் ஆசிரியர் | 1996.03.01 | 1996 |
| 06. | இணைக்கப்பட்ட பல்கலைக்கழக டிப்ளோமாதாரர்கள். | கல்வி அமைச்சின் அனுமதிக்கமைய சேர்க்கப்பட்டவர்கள். | 1996 |
| 07. | தோட்டப்பகுதிகளில் தமிழ்மொழிமூல ஆசிரியர் | 1995.10.17 பத்திரிகை அறிவித்தல், 1996.02.10ஆந் திகதி நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சை | 1996 |
| 08. | ஆங்கில தகுதிகாண் ஆசிரியர் | 1994.01.13 | 1996 |
| 09. | மேலைத்தேய சங்கீதம் கற்பிப்பதற்காக தகுதிகாண் ஆசிரியர் | 1993.11.19 | 1996 |
| 10. | குறிக்கப்பட்ட பிரதேசங்களில் அமைந்துள்ள அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடங்களுக்காக சிங்கள மொழிமூல தகுதிகாண் ஆசிரியர் | 1995.10.30 பத்திரிகை அறிவித்தல். 1996.03.23 போட்டிப் பரீட்சை | 1996 |
| | தமிழ்மொழிமூல தகுதிகாண் ஆசிரியர் | 1996.02.24 போட்டிப் பரீட்சை | |
| 11. | ஆங்கில தகுதிகாண் ஆசிரியர் (டெவிக்) | 1994.01.13 | 1997 |
| 12. | அழகியற்கலை/விஞ்ஞானம்/கணித தகுதிகாண் பட்டதாரி ஆசிரியர் | கல்வி அமைச்சின் அனுமதிக்கமைய ஆட்சேர்க்கப்பட்டது | 2000 |

03. மேற்குறித்த ஆசிரியர்களில் அதிகமானவர்கள் இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணத்திற்கு அமைவாக இதுவரை ஆசிரியர் சேவையின் உரிய தரங்களுக்கு உள்ளீர்க்கப்படவில்லை என அறிய வருகிறது. இக்காரணங்களினால் 2001.11.15ஆந் திகதி அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய இவ்வாசிரியர்களை உள்ளீர்ப்புச் செய்வதற்காக கீழே குறிப்பிடும் வண்ணம் செயற்படுத்துமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(i) இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூரணப்படுத்தியிருப்பின் அவர்களை 2001.11.15ஆந் திகதி முதல் இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணத்தின் உரிய தரங்களுக்கு உள்ளீர்ப்புச் செய்தல்.

(ii) 2001.11.15ஆந் திகதிக்கு ஆசிரியர் சேவைப் பிரமாணங்களுக்கு உரிய தகைமைகளை பெற்றிராத தகுதிகாண் மற்றும் பயிலுநர் ஆசிரியர்களுக்கு, குறித்த தேவைகளை பூரணப்படுத்துவதற்கு 2004.11.15வரை சந்தர்ப்பம் பெற்றுக் கொடுப்பதற்கும், குறித்த தகைமைகளை பூரணப்படுத்தும் திகதிக்கு அவர்களை ஆசிரியர் சேவைப் பிரமாணத்தின் உரிய தரங்களுக்கு உள்ளீர்ப்புச் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல்.

(iii) மேற்குறித்த 02ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகைக்குரிய தகுதிகாண் அல்லது பயிலுநர் அடிப்படையில் சேவையில் ஈடுபட்டுள்ள 2001.11.15ஆந் திகதிக்கு அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் உள்வாரி அல்லது வெளிவாரி மாணவராக பட்டப்பாடநெறியை பின்பற்றி அதில் சித்தி பெற்றிருப்பின், அவ்வாறான தகுதிகாண் அல்லது பயிலுநர்களை உள்ளீர்க்கும் போது உள்வாரி பட்டதாரிகளிடமிருந்து மாத்திரம், அவர்களுக்கு தனிப்பட்ட முறையில், அவர்களால் அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மகாபொல புலமைப்பரிசில் பணத்தை மீளப்பெற்று 2001.11.15ஆந் திகதிக்கு அவர்களையும் உரிய தரங்களுக்கு உள்ளீர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

04. மேற்குறித்த 02ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகாண், பயிலுநர் ஆசிரியர்களின் உள்ளீர்ப்பு நடவடிக்கை செய்யும் போது உரிய ஆசிரியர்கள் மாகாண அரசாங்க சேவைக்கு உரித்தான பாடசாலையில் சேவை புரிவார்களாயின், அவர்களது நடவடிக்கைகளை செய்வதற்கு தேவையான அதிகாரம் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர்களுக்கும், தேசிய பாடசாலைகளில் சேவை புரியும் ஆசிரியர்கள் சம்பந்தமாக மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும் வழங்குவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழு தீர்மானித்துள்ளது.

05. தயவு செய்து இதன் பிரகாரம் காமதமின்றி மேலதிக நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன்.

06. எனது 2001.10.26ஆந் திகதிய கசேகு/ஆதநு/2 கடிதத்தினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கும், 2001.11.07ஆந் திகதியும் 2001/8ஆம் இலக்க சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் இச் சுற்று நிருபத்தில் மேலும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

07. இச்சுற்றுநிருப அறிவுறுத்தல்கள் செயற்படுத்தும் போது ஏதேனும் பிரச்சினைகள் எற்படின், அது தொடர்பாக கல்விச் சேவைக் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு தயவாய் அறியத் தருகின்றேன்.

08. இச்சுற்று நிருபம் கல்வி உயர்கல்வி அமைச்சின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவின் பணிப்பின்கமைய,

பிரதிகள் :-

1. செயலாளர், கல்வி உயர்கல்வி அமைச்சு
   - அறிந்து கொள்வதற்காக
2. சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
   - உரிய நடவடிக்கை எடுப்பதற்காக

ரி.எம்.எம். தென்னகோன்,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழுவின்
கல்விச் சேவைக் குழு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுநிருப இலக்கம்:2001/28
2001.10.26

கல்வி, உயர்கல்வி அமைச்சு,
'இசுருபாய', ஸ்ரீ ஜயவர்தனபுர,
கோட்டே, பத்தரமுல்ல.
தொலைபேசி: 865141-50
பெக்ஸ்: 865162
ஈ-மெயில்: secedu@sltnet.lk
வெப்தள முகவரி: www.moesl.org

சகலமாகாணக் கல்விச் செயலாளர்கள்
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல பாடசாலை அதிபர்கள்,
சகல பிரிவெனாக்களினதும் பிரிவெனாதிபதித் தேரர்கள்;

## தேசிய ஆசிரிய இடமாற்றக் கொள்கை

கல்விச் செயற்பாடுகளைக் கூடிய உற்பத்தித்திறன் மிக்கதாகச் செயற்படுத்துவதற்கும், மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் கூடிய சேமநலன்களைக் கருத்திற்கொண்டும் ஆசிரிய இடமாற்ற முறையொன்றைத் தயாரிக்க வேண்டுமென்று அரசாங்கம் தீரமானித்துள்ளது. எனவே அதற்கேற்ப இவ்வாசிரிய இடமாற்றக் கொள்கை கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை அம்சங்களைக் கொண்டாக அமையப் பெற வேண்டுமென்று அமைச்சரவையினால் தீரமானிக்கப்பட்டுள்ளது.

01. தேசிய ஆசிரிய இடமாற்றக் கொள்கை கீழ்க் குறிப்பிடப்படும் அம்சங்களுக்கேற்ப அமையப் பெற வேண்டும்.

1.1 கல்வி எப்போதும் மாணவ மையமானதாக வேண்டியுள்ளபடியால் ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படும்போது மாணவர்களின் தேவைகள் முன்னுரிமையானவைகளாகக் கருதப்பட வேண்டும்.

1.2 கல்வியின் பண்புசார் விருத்திச் 'செயற்பாடுகள் தங்கியிருப்பது ஆசிரியர்களின் அறிவு ஆற்றல் மனப்பாங்கு விருத்தி என்பவற்றிலாகும். எனவே ஆசிரிய இடமாற்றக் கொள்கை மூலம் ஆசிரியர்களின் அறிவு, ஆற்றல் மனப்பாங்கு விருத்தி என்பனவற்றிற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

1.3 ஆசிரிய தொழிலின் பாதுகாப்பு, நம்பிக்கை என்பன உறுதிப்படுத்தப்படக்கூடிய வகையிலும் அவர்களின் நலைஞான அறிவுச் சுதந்திரம் பாதுகாக்கப்படக்கூடிய வகையிலும், அநீதியான ஆசிரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, உயர்கல்வி அமைச்சு,
'இசுருபாய', ஸ்ரீ ஜயவர்தனபுர,
கோட்டே, பத்தரமுல்ல.
தொலைபேசி: 865141-50
பெக்ஸ்: 865162
ஈ-மெயில்: secedu@sltnet.lk
வெப்தள முகவரி: www.moesl.org

இடமாற்றங்கள் பற்றிய அவசியமற்ற அச்சங்களில் இருந்துநீங்கக்கி சேவையாற்றக்கூடிய வகையிலும் சேவையின் திருப்தியை உயர்ந்த அளவில் பெற்றுக் கொள்ளக்கூடியதாகவும் ஆசிரிய இடமாற்றக் கொள்கை அமைப் பெற வேண்டும்.

1.4 கல்வி பற்றிய பிரதேச வாரியான வேறுபாடுகளை இயன்றவரை குறைப்பதோடு மாணவ மையக் கற்றல் கற்பித்தல் எவ்வித தடைகளுமின்றியும் தொடர்ச்சியாகவும் நடைபெறுவது ஆசிரிய இடமாற்றக் கொள்கையின் ஒரு முக்கிய குறிக்கோளாக இருக்க வேண்டும்.

1.5 ஏதாவதொரு பிரதேசத்திற்கு அல்லது பாடசாலைக்கு வரையறுக்கப்பட்டுள்ள மனிதவளங்கள் நாட்டின் ஏனைய பிரதேசங்களில் வாழும் மக்களுக்கும் பிரயோசனப்படக்கூடிய வகையில் ஆசிரிய சேவையில் உள்ள மனிதவளங்கள் பொதுவான முறையில் பரவலாகிச் செல்லும் விதத்தில் ஆசிரிய இடமாற்றக் கொள்கை மூலம் உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும்.

1.6 களநிலையில் காணப்படும் மனிதவளங்களை உரிய முகாமைத்துவத்தின் மூலம் மிகக் கூடிய செயற்றிறன்கள் பால் இட்டுச் செல்வதற்காக இக் கொள்கைகள் மூலம் வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை அம்சங்களைச் சாத்தியப்படுத்திக் கொள்ளும் செயற்பாட்டினை மேலும் இலகுபடுத்திக் கொள்வதற்காக கீழ்க் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கேற்ப ஆசிரிய இடமாற்றச சபைகள் செயற்பட வேண்டும்.

02. ஆசிரிய இடமாற்றச் சபைகள்

2.1 ஆசிரிய இடமாற்றச் சபைகள் நிறுவப்படல்.

கீழ்க் குறிப்பிடப்படும் மட்டங்களில் ஆசிரிய இடமாற்றச் சபைகள் நிறுவப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, உயர்கல்வி அமைச்சு,
'இசுருபாய', ஸ்ரீ ஜயவர்தனபுர,
கோட்டே, பத்தரமுல்ல.
தொலைபேசி: 865141-50
பெக்ஸ்: 865162
ஈ-மெயில்: secedu@sltnet.lk
வெப்தள முகவரி: www.moesl.org

1. வலயக் கல்வி அலுவலகம்
11. மாகாண கல்வி அலுவலகம்
111. நிரல் அமைச்சு.

2.2 மாகாணங்களுக்கிடையிலான ஆசிரிய இடமாற்றப் புள்ளிவிவர நிர்ணயக்குழு

இங்கு மாகாணங்களுக்கிடையிலான ஆசிரியரிடமாற்றச் சபை என்று கூறப்படும் மாகாண இடமாற்றங்கள் செய்யப்படும்போது அவ்வம் மாகாணங்களிடையே பரிமாற்றம் செய்து கொள்ளக்கூடிய ஆசிரியரிடமாற்ற எண்ணிக்கை சம்பந்தமான இணக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்குக் கல்வி அமைச்சின் ஆசிரிய சேவை ஆளணிக் குழுவினால் வரவழைக்கப்படுகின்ற கீழ்க் குறிப்பிடப்படும் அங்கத்துவப் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு சபையாகும்.

1. சகல மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுக்களின் செயலாளர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள்.
2. நிதி ஆணைக் குழுவின் செயலாளர் அல்லது அவரின் பிரதிநிதி.
3. மாகாணக் கல்விப் பணிப்பாளர் அல்லது அவரின் பிரதிநிதி.
4. மாகாணக் கல்விச் செயலாளர் அல்லது அவரின் பிரதிநிதி.
5. கல்விச் சேவைக் குழுவின் செயலாளர் அல்லது அவரின் பிரதிநிதி.
6. தேசிய பாடசாலைப் பணிப்பாளர் அல்லது அவரின் பிரதிநிதி.

ஒவ்வொரு மாகாணத்திற்கிடையலும் பரிமாற்றம் செய்து கொள்ளக்கூடிய ஆசிரியர்களின் எண்ணிக்கையை அவ்வவ் வர்க்க அடிப்படையில் தீரமானித்தல் இச்சபையின் பொறுப்பாகும். அதன் பின்பு மாகாணக் கல்விப் பணிப்பாளரால் அவ்வெண்ணிக்கை தொடர்பாகச் செய்யப்படும் ஆசிரியரிடமாற்றச் சபையின் விதப்புரைகளைப் பெற்றுக் கொண்டு மாகாண அரச சேவை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இவ்வாசிரியரிடமாற்ற எண்ணிக்கையை நிர்ணயிக்கும் சந்தர்ப்பத்தில் ஆசிரிய இடமாற்றச்சபையில் பிரதிநிதித்தவம் பெறுவதற்குத் தகைமை பெற்றுள்ள தொழிற்சங்கங்களின் ஒவ்வொரு பிரதிநிதியைப் பங்குபற்றச் செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, உயர்கல்வி அமைச்சு,
'இசுருபாய', ஸ்ரீ ஜயவர்தனபுர,
கோட்டே, பத்தரமுல்ல.
தொலைபேசி: 865141-50
பெக்ஸ்: 865162
ஈ-மெயில்: secedu@sltnet.lk
வெப்தள முகவரி: www.moesl.org

2.3 ஆசிரிய இடமாற்றச் சபையின் அமைப்பு

தாபனக் கோவையின் 111 ஆம் அத்தியாயத்தின் 35ஆம் பந்தியின் விதிமுறைகளுக்கமைவாக இருக்க வேண்டும்.

2.4 ஆசிரிய இடமாற்றக் குழுவின் செயற்பாடுகள்.

தேசிய ஆசிரிய இடமாற்றக் கொள்கையை அமுல் நடாத்தும் போது மாற்றச் சபைகளின் செயற்பாடுகள் தாபனக் கோவையின் 11ஆம் அத்தியாயத்தின் 3:1 மற்றும் 3:2 வாசகங்களுக்கேற்பச் செய்யப்படுவது அவசியமாகின்றது. எனினும் யாராவதோர் ஆசிரியருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளோ அல்லது தனியாகவோ சேவையின் தேவைக்கேற்ப மிக விசேடமான அவசர சந்தர்ப்பமொன்றின் போதோ ஓர் ஆசிரியரின் வேண்டுகோளின் பேரிலான சுகவீன காரணத்தின் அடிப்படையலோ (வைத்திய சபையின் சிபார்சுகளின் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்ற) அல்லது சிநேகபூர்வமான ஒத்துமாறும் தேவையொன்றின் காரணமாக செய்யப்பட வேண்டியதான இடமாற்றங்கள் அதிகாரிகளினால் தீர்மானிக்கப்பட்டு அமுல் நடாத்தப்பட வேண்டும்.

2.5 மேன்முறையீட்டுச் சபைகள்

இங்கு செயற்பட வேண்டியது தாபனக் கோவையின் 111 ஆம் அத்தியாயத்தின் 5ம் பந்திக்கு ஏற்புதலான முறையிலாகும்.

3.0 ஆசிரிய இடமாற்றக் கொள்கையை அமுல் நடாத்தும்போது கருத்திற் கொள்ளப்பட வேண்டிய விசேட அம்சங்கள் /சாதகமான

ஆசிரிய இடமாற்றங்கள் செய்யப்படும் பொழுது கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்களின்பால் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

3.1 பாடசாலைகளை வகைப்படுத்தல்.

1. மிக விருப்பமான பாடசாலைகள்.

11. விருப்பத்திற்குரிய பாடசாலைகள்.

111. விருப்பக் குறைவான பாடசாலைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, உயர்கல்வி அமைச்சு,
'இசுருபாய', ஸ்ரீ ஜயவர்தனபுர,
கோட்டே, பத்தரமுல்ல.
தொலைபேசி: 865141-50
பெக்ஸ்: 865162
ஈ-மெயில்: secedu@sltnet.lk
வெப்தள முகவரி: www.moesl.org

1V. கஷ்டப் பிரதேச பாடசாலைகள்.
V. அதி கஷ்டப் பிரதேச பாடசாலைகள்.

என்ற வகையில் 05 வகைகளின் கீழ் வகைப்படுத்டதப்பட்டுள்ளன என்பதை கருத்திற் கொள்ள வேண்டும். அவ்வாறே தேசிய ஆசிரிய இடமாற்றக் கொள்கையை அமுல் நடாத்தும் தேவையின் அடிப்படையில் காலத்திற்கேற்ப நடைபெறுகின்ற பாடசாலைகளை வகைப்படுத்தல்களை அவ்வீச சந்தர்ப்பங்களில் பொருத்தமானதாக்கிக் கொள்ள வேண்டும்.

**சேவைக்காலம் பற்றிய அம்சங்கள்**

இலங்கை ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சேவைப் பிரமாணக் குறிப்பில் அடங்கியுள்ள நிலையியற் குழுவினால் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ள ஒரு பாடசாலையில் கட்டாயமாகக் குறைந்த பட்ச சேவையை ஒவ்வொரு ஆசிரியரும் பூர்த்தி செய்திருக்க வேண்டும். அதன்படி

அதி கஷ்ட அல்லது கஷ்டப் பாடசாலையொன்றில் 03 ஆண்டுகள் (குறைந்த பட்சம்)

விருப்பக் குறைவான பாடசாலையொன்றில் 04 ஆண்டுகள்(குறைந்த பட்சம்) என்ற வகையில் சேவையாற்ற வேண்டும்.
மேலுீம், விருப்பத்திற்குரிய பாடசாலையொன்றில் 08 ஆண்டுகள் (கூடிய பட்சம்)
மிக விருப்பத்திற்குரிய பாடசாலையொன்றில் 06 ஆண்டுகள் (கூடிய பட்சம்) என்ற அடிப்படையில் கருத்திற் கொண்டு ஆசிரியர்களின் சேவைக் காலத்தைத் தீர்மானிப்பது அவசியமாகும்.

.3 **கஷ்டப் பிரதேசப் பாடசாலைச் சேவைக்கால ஊக்குவிப்புக்கள்**

மேலே வகைப்படுத்தப்பட்டுள்ள கஷ்டமான அல்லது அதிக கஷ்டமான பாடசாலையொன்றில் கட்டாய சேவைக் காலத்தை ஒவ்வொரு ஆசிரியரும் பூர்த்தி செய்திருப்பதோடு அக்கட்டாய சேவைக்காலத்தின் பின்பு அதிகஷ்டப் பாடசாலையொன்றில் இருக்கும் வரை மேலதிக சம்பள உயர்வொன்று வீதமும் அவ்வாறான ஓர் ஆசிரியர் மீண்டும் கஷடப் பிரதேச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, உயர்கல்வி அமைச்சு,
'இசுருபாய', ஸ்ரீ ஜயவர்தனபுர,
கோட்டே, பத்தரமுல்ல.
தொலைபேசி: 865141-50
பெக்ஸ்: 865162
ஈ-மெயில்: secedu@sltnet.lk
வெப்தள முகவரி: www.moesl.org

பாடசாலையொன்றில் சேவையாற்றுவதாயின் அவருக்கு ஈராண்டுகளுக்கொருமுறை மேலதிக வருடாந்தச் சம்பள உயர்வு ஒன்றும் உரித்துடையதாகும்.

மேலும் அதிகஷ்டப் பாடசாலையொன்றில் சேவை செய்யாது கஷ்டப் பாடசாலை யொன்றில் கட்டாய சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள ஒருவருக்கு அக்கட்டாய சேவையின் பின்பு ஈராண்டுகளுக்கொருமுறை மேலதிக வருடாந்த அதிகரிப்பு ஒன்று வீதம் உரித்தாகும். இவ்வாறு மேலதிக சம்பள உயர்வுகளுக்குரிய முதற் சந்தர்ப்பம் கட்டாய சேவைக்காலத்தின் பின்பு வரும் முதலாவது சம்பள உயர்வுச் சந்தர்ப்பமாக இருக்க வேண்டும்.

இச் சந்தர்ப்பத்தில் கல்வி, உயர்கல்வி அமைச்சின் செயலாளரின் 99/17 இலக்கத்தையும் 1999.05.27 ஆந் திகதியும் கொண்ட சுற்றறிக்கைக்கேற்ப கஷ்டப் பிரதேச ஆசிரியர்களுக்காக அமுல் நடாத்தப்படும் ஊக்குவிப்புகளும் விசேடமாகக் கருத்திற் கொள்ளப்பட வேண்டும். அவ்வாறே கல்விச் செயலாளரினால் கஷ்டப் பாடசாலைகளுக்காக அடிக்கடி வழங்கப்பட்டுள்ள ஊக்குவிப்புக்களையும் இதற்குப் புறம்பாகக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

3.4 **வேறும் அம்சங்கள்**

1. 53 வயதினைத் தாண்டிய ஆசிரியர்களை அவர்களின் வேண்டுகோளின் பெயரிலே அல்லாது இடமாற்றம் செய்யக் கூடாது.

11. வைத்திய காரணங்களின் அடிப்படையில் எவராவதோர் ஆசிரியரினால் இடமாற்றம் கோரப்படும் சந்தர்ப்பத்தில் தமது ஆரோக்கிய நிலையை உறுதிப்படுத்தவதற்காக அரசாங்க வைத்திய சபையின் சிபார்சு பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

ஒரு கர்ப்பிணித் தாயைப் பொறுத்தவரை அவரின் விருப்பமின்றி இடமாற்றம் வழங்கக் கூடாது. எவ்வாறாயினும் ஒரு கர்ப்பிணித் தாயினால் இடமாற்றம் கோரப்படுமிடத்து அது பற்றிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது வைத்திய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்களை அடிப்படையாகக் கொண்டேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, உயர்கல்வி அமைச்சு,
'இசுருபாய', ஸ்ரீ ஜயவர்தனபுர,
கோட்டே, பத்தரமுல்ல.
தொலைபேசி: 865141-50
பெக்ஸ்: 865162
ஈ-மெயில்: secedu@sltnet.lk
வெப்தள முகவரி: www.moesl.org

ஆசிரியரின் சொந்த ஆரோக்கிய நிலைக்குப் புறம்பாக ஆசிரியரின் வாழ்க்கையுடன் ஒன்றுபட்டு விளங்கக் கூடிய கீழ்க் குறிப்பிடப்படுகின்ற குடும்ப அங்கத்தவர்களின் உடல்நல நிலையும் இடமாற்றங்கள் சம்பந்தமாகக் கருத்திற் கொள்ளப்படலாம்.

1. துணைவன்/துணைவி
2. பிள்ளைகள்
3. ஆசிரியர் விவாகம் செய்யாதவராயின் பெற்றார்கள்.

111. வைத்திய காரணங்களின் அடிப்படையில் நடைபெறும் இடமாற்றங்கள் புரிந்துணர்வு காரணமாகச் செய்யப்படும் ஒத்துமாறல் இடமாற்றங்கள் மற்றும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய காரணங்களின் அடிப்படையில் செய்யப்படும் இடமாற்றங்கள் என்பனவற்றின் போது தேசிய கொள்கைகளின் அடிப்படையான அம்சங்களுக்குப் பாதிப்பு ஏற்படாதவகையில் இடமாற்றங்களை வழங்கலாம்.

1V. **முதல் நியமனம்**

ஓர் ஆசிரியரை ஆட்சேர்ப்புச் செய்யும்போது முதல் நியமனம் அதிகஷ்டப் பிரதேச அல்லது விருப்பமில்லாத ஆகிய வர்க்கங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் குறைந்த பட்சகால கட்டவரையறைக்குட்படுத்தப்பட்டு அவ்வாறான ஒரு பாடசாலைக்கு வழங்கப்பட வேண்டும்.

V. இத்தேசிய ஆசிரிய இடமாற்றக் கொள்கைச் சிந்தாந்தங்களுக்கு உட்பட சகல ஆசிரிய இடமாற்றச் சபைகளும் தமது கடமைப் பொறுப்புக்கள் சம்பந்தமாகச் செயன்முறைப் பிரமாண ஒழுங்கொன்றைத் தயாரித்துக் கொண்டு அதற்கேற்பச் செயற்படும் கொள்கைகளின்படி இயங்க வேண்டும்.

04. **இடமாற்றம் செய்யப்படும் கால எல்லை**

மேலே 2.4 பந்தியில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பத்திலேயன்றி ஏனைய சகல சந்தர்ப்பங்களிலும் ஆசிரியர்களின் இடமாற்றச் செயற்பாடு காரணமாக ஆசிரியர்களுக்கும் மாணவருக்கும் ஏற்படக் கூடிய அசௌகரியங்களைக் குறைப்பதற்காக ஆசிரியடமாற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, உயர்கல்வி அமைச்சு,
'இசுருபாய', ஸ்ரீ ஜயவர்தனபுர,
கோட்டே, பத்தரமுல்ல.
தொலைபேசி: 865141-50
பெக்ஸ்: 865162
ஈ-மெயில்: secedu@sltnet.lk
வெப்தள முகவரி: www.moesl.org

வேலைகள் ஒவ்வோராண்டிலும் மே மாதம் 31 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட நவம்பர் 01 ஆந் திகதி முடிக்கப்பட வேண்டும்.(அடுத்த ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் அமுல் நடாத்தப்பட வேண்டும்)

4.1 ஆசிரிய இடமாற்றச் செயற்பாட்டிற்கான காலக்கெடு வருடாந்த ஆசிரியரிடமாற்றம் செய்யப்படுவதற்கான காலக்கெடு பின்வருமாறு இருக்கும்.

| காரணம் | திகதி வரையறை |
|---|---|
| 1. ஆசிரிய இடமாற்றம் சம்பந்தமான சகல தகவல் திரட்டல்கள். | மே மாதம் 31 ஆம்திகதிக்கு முன்பு. |
| 2. ஆசிரிய இடமாற்ற விண்ணப்பம் கோரல். | ஜுன் 01 – ஜுலை 30க்கு இடையில் |
| 3. மாற்றச் சபைக் கூட்டம். | ஜூலை01– ஜூலை 31இற்கு இடையில் |
| 4. ஆசிரிய இடமாற்றச் சபையின் சிபார்சைப் பெறல். | ஆகஸ்ட் 01– ஆகஸ்ட் 15 இற்கிடையில். |
| 5.இடமாற்றக் கடிதம் விநியோகிக்கப்படல். | செப்டெம்பர் 15 இருந்து செப்டெம்பர் 20 வரை. |
| 6.மேன்முறையீடுகள் ஏற்றுக் கொள்ளப்படல். | செப்டெம்பர் 01 - செப்டெம்பர் 09 |
| 7.மேன்முறையீட்டுத்தீர்மானங்களை வழங்கல். | நவம்பர் 10ஆம் திகதிக்கு முன்பு |

பொதுவான வருடாந்த ஆசிரியரிடமாற்றுத் திட்டத்திற்கு அப்பால் 2.4 இன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விசேட சந்தர்ப்பங்களில் ஆசிரிய இடமாற்றங்கள் மிகவும் செயற்றிறமைக்கேற்றதாகவும் தேசிய ஆசிரிய கல்விக் கொள்கையின் அடிப்படை அம்சங்கள் என்பனவற்றிற்கு மாற்றமேற்படாதவகையிலும் இக் கால எல்லையிற் செயற்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, உயர்கல்வி அமைச்சு,
'இசுருபாய', ஸ்ரீ ஜயவர்தனபுர,
கோட்டே, பத்தரமுல்ல.
தொலைபேசி: 865141-50
பெக்ஸ்: 865162
ஈ-மெயில்: secedu@sltnet.lk
வெப்தள முகவரி: www.moesl.org

05. இக் கொள்கையில் புறம்பாகக் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களைத் தவிர்ந்த ஏனைய சகல சந்தர்ப்பங்களில் ஆசிரிய இடமாற்றம் பற்றித் தாபனக் கோவையின் 111 ஆம் அத்தியாயத்தின் விதிமுறைகளுக்கமையச் செயற்படுவது கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும்.

06. தற்பொழுது நடைமுறையில் உள்ள கல்வி, உயர்கல்வி அமைச்சின் செயலாளரின் இலக்கம் 95/11 மற்றும் 1995.03.31 திகதி கொண்ட தேசிய ஆசிரிய இடமாற்றக் கொள்கை சுற்றறிக்கைக்குப் பதிலாக 2002.01.01 திகதி முதல் நடைமுறைக்கு வரக்கூடிய வகையில் இவ்வாசிரிய இடமாற்றக் கொள்கையை அமுல்படுத்த வேண்டும். எனவே ஆசிரிய இடமாற்றம் தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளும் போது சகல உத்தியோகத்தர்களும் இக் கொள்கைக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதனை தயவாய் அறியத் தருகிறேன்.

வைத்திய டாரா டி மெல்
செயலாளர்,
கல்வி உயர்கல்வி அமைச்சு.

பிரதிகள்:-

1. கணக்காய்வாளர் நாயகம்
2. அரச சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழுச் செயலாளர்.
3. சகல மாகாண பிரதான செயலாளர்கள்.
4. மாகாண அரச சேவை ஆணைக்குழு.
5. நிதி ஆணைக்குழுச் செயலாளர்.
6. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்.
7. பரீட்சை ஆணையாளர்.
8. வெளியீட்டு ஆணையாளரும் பி.க.ப.நாயகமும்.
9. செயலாளர், தேசிய கல்வி ஆணைக்குழு.
10. பணிப்பாளர் நாயகம் - ஆசிரிய கல்வி அதிகார சபை.
11. கல்வி, உயர்கல்வி அமைச்சின் சகல பகுதித் தலைவர்கள்.
12. செயலாளர், ஆசிரிய சேவை எண்ணிக்கைக் குழு.
13. சுவடிக் கூடம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

අධ්‍යාපන හා උසස් අධ්‍යාපන
අමාත්‍යාංශය
'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර
කෝට්ටේ, බත්තරමුල්ල.
දුරකථන : 865141-50
ෆැක්ස් : 865162
ඊමේල් : secedu@sltnet.lk
වෙබ් අඩවිය : www.moesl.org

சுற்றுநிருப இலக்கம்:2001/30
2001.10.20

செயலாளர், கல்விச் சேவை ஆணைக்குழு,
பணிப்பாளர், தேசிய பாடசாலைகள்,
சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல பாடசாலை அதிபர்கள்,
சகல பிரிவெனாக்களின் பிரிவெனாதிபதித் தேரர்கள்,

**அரசாங்க பாடசாலை அதிபர்களினதும் ஆசிரியர்களினதும் இடமாற்றங்கள்**

அரசாங்கப் பாடசாலைகளின் அதிபர்கள் ஆசிரியர்கள் என்போர் ஆண்டுபூராகவும் இடமாற்றங்களைப் பெற்றுச் செல்வதால் பாடசாலை நிர்வாகம் மற்றும் கற்றற் கற்பித்தற் செயற்பாடுகள் என்பனவற்றில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதாகத் தெரிய வந்துள்ளது.இதனால் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் என்போரின் இடமாற்றங்களை ஆண்டு பூராகவும் நடாத்துவதை இயன்ற அளவில் குறைத்துக் கொள்ளவும், குறிக்கப்பட்ட ஒரு கால எல்லைக்குள் மாத்திரம் அவ்விடமாற்றங்களைச் செய்யவும் கல்வி, உயர்கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இனிமேல், அதிபர், ஆசிரியர்கள் என்போரின் இடமாற்றங்களைச் செய்யும் போது கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கடைப்பிடிக்குமாறு வலியுறுத்துகின்றேன்.

1. **அதிபரின் இடமாற்றங்கள்**

1.1 எந்த ஒரு அதிபருக்கும் ஆண்டின் மத்தியில் இடமாற்றம் வழங்கப்படக் கூடாது.

1.2 ஆண்டின் மத்தியில் 60 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து ஓய்வு பெறுவதற்காக ஒரு அதிபருக்காக ஓய்வு பெறுவதற்கான ஆண்டின் ஜனவரி மாத ஆரம்பத்திலேயே பொருத்தமான ஒரு அதிபரை அப்பாடசாலைக்குத் தெரிவு செய்து கொள்ள வேண்டும். ஓய்வுபெறும் அதிபர் ஓய்வுபெறும் வேளையிலேயே புதிய அதிபர் உரிய பாடசாலையில் கடமை ஏற்பதற்கான ஒழுங்குகளைச் செய்ய வேண்டும். அதிபர் ஒருவரின்றி பாடசாலையொன்று நடைபெறுவதற்கு இடமளிக்கக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

අධ්‍යාපන හා උසස් අධ්‍යාපන
අමාත්‍යාංශය
'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර
කෝට්ටේ, බත්තරමුල්ල.
දුරකථන : 865141-50
ෆැක්ස් : 865162
ඊමේල් : secedu@sltnet.lk
වෙබ් අඩවිය : www.moesl.org

## 2. ஆசிரியர்களின் இடமாற்றங்கள்

2.1 1 தொடக்கம் 11 தரங்கள் வரையுள்ள வகுப்புக்களில் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்களின் இடமாற்றங்கள் டிசம்பர்மாத ஆரம்பத்திலிருந்து ஜனவரி மாதம் 31 ஆம் திகதி வரையிலான காலத்தில் மாத்திரம் செய்யப்பட வேண்டும்.

2.2 க.பொ.த.(உயர்தர) வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்களின் இடமாற்றங்கள் மே மாத்தில் மாத்திரம் செய்யப்பட வேண்டும்.

கீழ்க் குறிப்பிடப்படும் மிக விசேட சந்தர்ப்பங்களில் மாத்திரம் மேலே 1ஆம் 2ஆம் பந்திகளில் காட்டப்பட்டுள்ள வரையறைகளுக்குப் புறம்பாகச் செயற்படலாம்.

(அ) சேவையின் தேவை அடிப்படையில்

(ஆ) அதிபர்/ ஆசிரியர் பற்றி எழும் ஒழுக்காற்று நடவடிக்கைகளின் போது

(இ) அதிபர்/ ஆசிரியர் திடீர் விபத்தொன்றுக்காளாதல்/ பாரதூரமான வியாதிக்குட்படல் ஆகிய சந்தர்ப்பங்களில் வைத்திய சபையின் தீரமானத்தின் பேரில் வீட்டிற்கு அண்மையிலுள்ள ஓர் இடத்திற்கு வர வேண்டிய தேவை எற்படும் சந்தர்ப்பத்தில்

இத் தீரமானங்கள் முக்கியமாக பாடசாலைப்பிள்ளைகளின் நன்மை கருதி எடுக்கப்பட்டுள்ளன. எனவே மேற்படி தீரமானங்களை அமுல் நடாத்துவதற்குத் தங்களின் தயவான ஒத்துழைப்பை நாடுகிறேன்.

வைத்திய டாரா டி மெல்
செயலாளர்,
கல்வி, உயர்கல்வி அமைச்சு

பிரதி:- கல்வி அமைச்சின் சகல மேலதிக செயலாளர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 18/99

எனது இல. ஆ/1/5
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
1999.07.20.....ஆந் திகதி.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,

**நேர்முகப் பரீட்சைக் குழுக்களுக்குப் பெண் அங்கத்தவர்களை நியமனம் செய்தல்**

அரச சேவையில் பணித்தொகுதிகளுக்காக ஆட்சேர்ப்புக்கள் செய்யப்படும் போதோ அல்லது பதவி உயர்வுகளை வழங்கும் போதோ அது தொடர்பாக நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுக்களுக்குக் குறைந்த பட்சம் ஒரு பெண் அங்கத்தவரையாவது நியமனம் செய்யவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. இயன்ற எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இதனை மேற்கொள்ளவேண்டும்.

02. தயவு செய்து அதன்படி செயற்படவும்.

ஒப்பம் / (பி.ஏ சேனாரட்ன)
செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1964 ம் ஆண்டின் 27 ம் இலக்க சுற்றுநிருபம்

எனது இல.ஜி.எஸ்.ஏ.ஜி. 192,
கல்வித்திணைக்களம்,
கொழும்பு 2.

1964 நவம்பர் மீ 20ந் திகதி

சகல பாடசாலைத் தலைவர்களுக்கும்.

## பழைய மாணாக்கர் சங்கம்

அநேக பாடசாலைகளில் நிறுவப்பட்டிருக்கும் பழைய மாணாக்கர் சங்கங்கள் செய்கின்ற சிறந்த சேவைகளைப் பற்றிக் கல்விப் பகுதிக்குத் தெரியும். பாடசாலைகளுக்கும் அவற்றின் பழைய மாணாக்கருக்குமிடையே அதிக ஒத்துழைப்பையும் நல்லிணக்கத்தையும் உறுதிப்படுத்தும் இத்தகைய சங்கங்களை பாடசாலைகளில் நிறுவும் நோக்கத்தோடு, பின்வரும் அமைப்பு விதிகளுக்கிணங்க ஒரு திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருமாறு இத்தால் நான் உங்களை வேண்டிக் கொள்கிறேன்.

### அமைப்பு விதி

1. பெயர்:- இச்சங்கம் பழைய மாணாக்கர் சங்கம் என அழைக்கப்படும்.

2. சங்கத்தின் நோக்கங்களும் இலக்குகளும்:-
பழைய மாணாக்கரின் ஒத்துழைப்புடன் பாடசாலையின் பொதுநல வளர்ச்சிக்கான முயற்சிகளில் ஈடுபடல். அத்தகைய முயற்சிகளாவன:-
   அ) பாடசாலை மாணாக்கரின் வரவை அதிகரிக்கச் செய்தல்.
   ஆ) வேண்டியவிடத்து பாடசாலையில் மேலதிக இடவசதி ஏற்படுத்துவதிலும் உபகரணங்கள் பெற்றுக் கொடுப்பதிலும் உதவியளித்தல்.
   இ) பாடவிதானத்தை பல்வகைப்படுத்தற்கும் தொழில் வழிகாட்டுகைத் திட்டத்துக்கும் ஆதரவு அளித்தல்.
   ஈ) இலவச பகற் போசனமளித்தலை வெற்றிகரமாக நடைபெறச் செய்தல்.
   உ) இயலுமானால் இலவச பகற்போசனம் அளித்தற்கு பொருள் உதவி அல்லது வேறு வகையில் உதவியளித்தல்.
   (ஊ) போதிய சுகாதார வசதிகளை ஏற்படுத்தல்.
   (எ) பாடசாலையின் தேசிய, சமய முயற்சிகளுக்கு உதவி அளித்தல்.
   (ஏ) விளையாட்டுக்கள், உடற்பயிற்சி விளையாட்டுக்கள், விளையாட்டுப் போட்டிகள், சாரணர் படைகள் ஆகியவற்றை ஒழுங்கு செய்வதில் உதவி அளித்தல்.
   (ஐ) பாடசாலைக் கலைவிருந்து, நாட்டுப் பாடல்கள், நடனக் காட்சிகள் ஆகியவற்றை ஒழுங்கு செய்வதில் உதவியளித்தல்.
   (ஒ) பாடசாலையையும் சமூகத்தையும் ஒன்றுபடுத்தக்கூடிய சகல முயற்சிகளையும் விருத்தி செய்தல்.

3. சங்கத்தில் அங்கத்துவம் வகித்தல்.
   (1) பழைய மாணாக்கர் யாவரும் இச்சங்கத்தில் அங்கத்துவம் வகிக்க தகுதியுடையவராவர்.
   (2) பாடசாலையின் கடந்தகால தற்போதைய ஆசிரியர்களும் பழைய மாணாக்கர் சங்கத்தில் அங்கத்தவராகலாம்.

4. நிதி:-
   (1) அங்கத்துவப் பணம்
   (2) வருடாந்தக் கட்டணம்
   (3) வேறு ஏதாவது விசேட நோக்கங்களுக்காக திரட்டப்பட்ட கட்டணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. சங்கத்தின் கூட்டங்கள்:

(1) சங்கத்தின் பொதுக்கூட்டங்கள் வருடத்திற்கு ஒரு முறையாதல் நடைபெற வேண்டும். இவை பற்றி போதிய கால அறிவித்தல் எழுத்து மூலம் கொடுபட வேண்டும்.

(2) அத்தகைய கூட்டங்களின் போது கூட்டங்களின் நிகழ்ச்சி நிரல் ஆயத்தமாயிருக்க வேண்டும்.

(3) பிரேரணைகள் பற்றிய அறிவித்தல், வருடாந்தப் பொதுக்கூட்டத் தினத்துக்குக் குறைந்த பட்சம் 7 நாட்களுக்கு முன் செயலாளருக்கு (இணைச் செயலாளருக்கு) அனுப்பபட வேண்டும்.

(4) சங்க அங்கத்தவர்களில் குறைந்த பட்சம் 10 பேர் எழுத்து மூலம் வேண்டுகோள் விடுக்கும் 3 கிழமைகளுக்குள் ஒரு விசேட பொதுக்கூட்டத்தைச் செயலாளர் (இணைச் செயலாளர்) கூட்ட வேண்டும். அத்தகைய வேண்டுகோளில் விசேட கூட்டம் கூட்டுவதற்குரிய காரணத்தை அறிவிக்க வேண்டும்.

6. உத்தியோகத்தர்கள்:

(1) காப்பாளர்.

(2) தலைவர்- அதிபர்/தலைவர் (பதவி வழியால்)

(3) உபதலைவர்- அங்கத்தவர்களிலிருந்து தெரிவு செய்யப்படல் வேண்டும்.

(4) செயலாளர்- (அ) செயலாளர் (ஒருவர்)
(ஆ) உதவிச்செயலாளர் அல்லது
(இ) இணைச்செயலாளர்

(5) தனாதிகாரி- (அ) தனாதிகாரி (ஒருவர்)
(ஆ) உதவித் தனாதிகாரி அல்லது
(இ) இணைத் தனாதிகாரி

(6) ஒரு சபை: இச்சபையின் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை பழைய மாணாக்கர் சங்க அங்கத்தவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்ததாகும். இவ்வெண்ணிக்கை 5 க்குக் குறையாமலும் 12 க்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

(7) ஒரு கணக்குப் பரிசோதகர்- அங்கத்தவர்களில் ஒருவராகவேனும் பழைய மாணாக்கர் சங்கத்தால் நியமிக்கப்படும் ஒருவராகவேனும் இருக்கலாம்.

ஈ.எச்.டி அல்விஸ்,
வித்தியாதிபதி.

பிரதிகள் - சகல உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும், கல்வி அதிகாரிகளுக்கும், மாவட்ட கல்விப் பரிசோதகர்களுக்கும் வட்டாரக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்று நிருப இல : 57/1975

எனது இல பா. /14/19/20
கல்வி அமைச்சு,
மலே வீதி,
கொழும்பு - 02
1975 - 11 - 05

சகல அரசாங்க பாடசாலை அதிபர்களுக்கும்

## வசதிகள் சேவைகள் கட்டணங்கள்

### 1.0 நிபந்தனைகளும் விதிகளும்

1.1 1958 வசதிகள் சேவைகள் கட்டண நிபந்தனைகளும் விதிகளும் அடங்கிய 1959 ஜனவரி 23ம் திகதியும், 11/645 இலக்கத்தையும் கொண்ட அரசாங்க வர்த்தமானி அறிவித்தலின் ஒரு பகுதியை நீங்கள் அறிந்துக் கொள்வதற்காக இத்துடன் சமர்ப்பிக்கிறேன். அந்த நிபந்தனையிலும், வசதிகளிலும் கீழ் குறிப்பிடப்படும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

1.1.1 தனது தாயினால் - தகப்பனினால் அல்லது பாதுகாவரினால் அக்கட்டணத்தை செலுத்த முடியாத மாணவர்களை அக்கட்டணத்திலிருந்து விடுவிப்பதற்காக.

1.1.2 அறவிடக் கூடிய ஆகக் கூடிய தொகையை தீர்மானிப்பதற்காக.

1.1.3 அதிபரினால் வசதிகள் சேவைகள் கட்டணக்கணக்கு என்ற பெயரில் காசுப் புத்தகமொன்றும் விசேட வசதிகள் சேவைகள் கட்டணப் புத்தகமொன்றும் வைத்துக்கொள்வதற்காக.

1.1.4 சேர்க்கப்படும் வசதிகள் சேவைகள் கட்டணப்பணத்தை செலவளிக்கக் கூடியக் கருமங்களை தீர்மானித்துக் கொள்வதற்காக

### 2.0 கட்டணத் தொகை

2.1 தற்போது அமுலிலுள்ள கட்டணத்தொகையை இக்கட்டணம் அறவிடப்படும் பாடசாலைகள் சம்பந்தமாக அறவிடக்கூடிய ஆகக் கூடிய கட்டணத்தொகையாகக் கொள்ள வேண்டும். சேர்க்கப்படும் கட்டணம் இடைநிலை வகுப்புகளில் மாதம் ஒன்றுக்கு ரூபா 5/=க்கு அல்லது ஆரம்ப வகுப்புகளில் ரூபா 3/=க்கு மேற்பட்டதாயின் அக்கட்டணங்களை இதனளவுக்கு குறைக்க வேண்டும். எவ்வாறாயினும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப குறிப்பிட்ட கட்டணத்தொகையை குறைக்க வேண்டி ஏற்பட்டால் அவ்வாறு குறைப்பதுபற்றி எதிர்புக்கள் இல்லை. இது வரை கட்டணம் அறவிடப்பட்டில்லாத பாடசாலைகளில் கட்டணம் அறவிடத் தொடங்கும் போது அதுபற்றி பிரதேசக் கல்விப் பணிப்பாளருக்கு அல்லது வட்டார கல்வி அதிகாரிக்கு அறிவிக்க வேண்டும். மகா வித்தியாலய நிலையிலுள்ள பாடசாலை ஆயின் அக்கடிதத்தின் ஒரு பிரதியை கல்வி அமைச்சின் உள்ளக கணக்குப்பரிசோதனை பிரிவு கணக்காளருக்கு அனுப்ப வேண்டும். (ஆரம்ப வகுப்புக்கள் என்பதனால்கருதப்படுவது 1 தொடக்கம் 5 வரையிலான வகுப்புக்கள் ஆகும்)

### 3.0 சம்பளங்களும் கொடுப்பனவுகளும் வழங்கல்.

3.1 இக்கட்டணத்திலிருந்து நிரந்தர தொழிலாக கருதக்கூடியவாறு சம்பளம் கொடுத்தல் தடையாகும். எனினும் 1969. 10. 21ம் திகதி அல்லது அதற்கு முன்னைய திகதி ஒன்றிலிருந்து இக்கட்டணத்திலிருந்து மாதச் சம்பளம் பெற்றுக் கொண்டிருப்பவர்களுக்கு இத்தடை பொருந்தாது. பிரதேச கல்விப் பணிப்பாளரின் முன் அனுமதியைப் பெற்று நிபந்தனைகளுக்கும் விதிகளுக்கும் உடன்பட்டதாக குறிப்பிடப்படும் கருமங்களாக குறிக்கப்பட்ட கடமைக்குரிய காலத்திற்கு மேலதிகமாக ஆற்றப்படும் அச்சேவைகளுக்காக மணித்தியால அடிப்படையில் அல்லது பகுதி அடிப்படையில் கணக்கிடப்படும் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகளை வழங்குவதற்கு இடம் அளிக்கப்படும். இவ்வாறு வழங்கப்படும் கொடுப்பனவு 1 மணித்தியாலத்திற்கு தனது ஒன்று திரட்டிய சம்பளத்தில் 1/240 பங்குகளுக்கு கூடாத அளவின் படி கணக்கு பார்க்க முடிவதோடு அதன்படி 1 மாதத்திற்கு வழங்கப்படும் கொடுப்பனவு ரூபா 100/=ற்கு கூடுதலாக இருக்கக் கூடாது ஆசிரியர் குழுவுக்கு உட்படாதவர்களுக்கும் இவ்வெல்லை பொருந்தும். ஆசிரியர் குழுவிலுள்ளவர்களுக்கு வழங்கப்படும் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகள் பற்றிய சகல விபரங்களும் அடங்கிய பட்டியலொன்றும் பாடசாலையில் வைத்திருக்க வேண்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4.0 தண்டனை வழங்கல்.**

4.1 இக்கட்டணத்தை செலுத்தமுடியாமைக்காக மாணவர் ஒருவருக்கு தண்டனை வழங்க முடியாது. கட்டணத்தை செலுத்த முடியாமைக்காக ஒரு மாணவனுக்கு எவ்விதமான ஒரு தண்டனையை வழங்கவோ, அவமானப்படுத்தவோ முடியாது.

**5.0 கணக்கு வைத்தல்**

5.1 இக்கட்டணம் அறவிடப்படும் பாடசாலைகளில் அதிபர்களினால் கீழ்க்குறிப்பிடப்படும் கணக்குப்புத்தகங்களும், பதிவுகள், கடிதங்களும் வைத்துப் பேணப்பட வேண்டும்.

5.1.1 வசதிகள் சேவைகள் கட்டண அட்டவணை. இத்துடன் இணைக்கப்படும் இல i ஐக் கொண்ட படிவத்தில் காட்டப்பட்டுள்ளவாறு வசதிகள் சேவைகள் கட்டண அட்டவணை வைக்கப்பட வேண்டும். பாடசாலைத் தவணை அடிப்படையில் கட்டணம் அறவிடப்படும் பாடசாலைகளில் இவ்வட்டவணையைத் தயாரிக்கும் போது இல 01 கொண்ட படிவத்தில் "மாதம்" என்பதற்குப் பதிலாக பாடசாலைத் தவணை என இட்டு தயாரித்துக் கொள்ள இடமளிக்கப்படும்.

**5.1.2 கட்டணத்திற்காக பற்றுச்சீட்டு வழங்குதல்**

அறிவிடப்படும் கட்டணத்திற்காக கல்வி 100 படிவத்தில் திணைக்கள பற்றுச்சீட்டு ஒன்று வழங்க வேண்டும் இந்த பற்றுச்சீட்டுப் புத்தகங்களை பிரதேச கல்விப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்வதோடு அப்புத்தகங்கள் கிடைத்த தொடரிலக்க ஒழுங்கில் வெவ்வேறாக அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டும். அதிபரால் சகல பற்றுச்சீட்டுப் புத்தகங்களும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளப்படவேண்டும்.

**5.1.3 காசுப் புத்தகம்**

இதனுடன் இணைக்கப்பட்டுள்ள இல ii ஐக் கொண்ட படிவத்தினைப்போல காசுப்புத்தகத்தை வைக்கவேண்டும். இது ஒரு பக்க காசுபுத்தகமாகையால் வங்கிக்கும் காசுக்கும் ஆக இரண்டு பக்கங்களைக் கொண்ட இரு பக்க காசுப்புத்தகங்களை பாவிக்கும் பாடசாலைகளுக்கு அந்தவிதமாகவே காசுப்புத்தகத்தை சரியாக நடைமுறையில் பாவிக்க இடமளிக்கப்படும். ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் அன்றாடம் சேரும் முழுப்பணமும் அன்றைய தினம் வழங்கப்பட்ட முதல் பற்றுச்சீட்டினதும் இறுதி பற்றுச்சீட்டினதும் இலக்கங்களைக் குறித்து தினமும் இப்புத்தகத்தில் எழுதப்படவேண்டும். பணக்கொடுப்பனவுகளும் அவை நடைபெறும் விதத்தில் அவ்வச்சந்தர்ப்பங்களிலே இப்புத்தகத்தில் குறிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு மாத இறுதியிலும் காசுப்புத்தகம் சமனிலைப்படுத்தப்பட்டு மீதி அதற்கான மாதத்திற்கு முன்கொண்டு செல்லப்படல் வேண்டும். அத்துடன் வங்கி அறிக்கையில் காட்டப்படும் மீதியுடன் காசுப்புத்தக மீதியை இணக்கம் செய்து வங்கி இணக்கத்தை காசுப்புத்தகத்தில் காட்டி அது சரியானதென அதிபரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். எச்சந்தர்பத்திலும் காசுப்புத்தகத்தின் நிலுவை குறைந்த நிலுவையாக இருக்கக் கூடாது. சில சந்தர்பங்களில் அதிபர்களினால் வரவை எதிர்பார்த்து பாடசாலை நலன்கருதி தமது சொந்த பணத்தை செலவளிப்பதாயின் அத்தகைய சந்தர்பங்களில் அவ்வாறு கொடுக்கப்படும் பணம் முற்பணம் கிடைத்ததாக காசுப்புத்தகத்தில் வரவுப்பக்கத்தில் குறிப்பிடல் வேண்டும். அவ்வாறு செலவு செய்யும் சொந்தப் பணத்தை திருப்பி எடுத்துக்கொள்ளும் போது முற்பணத்தை தீர்த்தல் என காசுப்புத்தகத்தில் செலவுப் பக்கத்தில்பதியவேண்டும்.

**5.1.4 வங்கிக் கணக்கு வைத்தல்**

அதிபரினால் அருகிலுள்ள இலங்கை வங்கி அல்லது மக்கள் வங்கிக் கிளையில் பாடசாலை பெயரில் வங்கிக் கணக்கொன்று வைத்துக்கொள்ள வேண்டும். அத்தகைய வங்கிக் கிளையொன்று இல்லையாயின் தேசிய சேமிப்பு வங்கியில் கணக்கொன்றை தொடங்க வேண்டும். அதிபராலும், உபஅதிபர்,அல்லது சிரேஷ்ட உதவி ஆசிரியராலும் வங்கிக் கணக்கை செயற்படுத்தப்படுவதோடு, தேசிய சேமிப்பு வங்கிக் கணக்கு அதிபரால் செயற்படுதப்படல் வேண்டும்.

**5.1.5 பணம் வைப்புச்செய்தல்**

அன்றாடச் செலவுகளுக்காக ரூபா 200.00 இற்கு மேற்படாத பணத்தை அதிபரின் தனிப்பட்ட பொறுப்பில் வைத்துக்கொள்ள இடமளிக்கப்படும். அதற்கு மேலதிகமாக உள்ள பணம் வங்கியில் இடப்பட வேண்டும். ரூபா 200.00 இற்கு மேற்பட்ட பணத்தை எச்சந்தர்ப்பத்திலும் கையில் வைத்துக்கொள்ளக் கூடாது என்பது இங்கிருந்து கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.1.6 கொடுப்பனவுகள்.

பி.க. பணிப்பாளரினால் அனுமதிக்கப்படும் வருடாந்த வரவு செலவு அறிக்கையில் குறிக்கப்பட்டுள்ள சேவைகள் சம்பந்தமாக செய்யப்படும் சகல கொடுப்பனவுகளுக்கும் முறையான பற்றுச்சீட்டு/ உறுதிப்பத்திரங்கள் இருக்க வேண்டும். உறுதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளும் போது பணம் பெற்றுக்கொள்பவரின் பெயர், முகவரி, சேவையின் தன்மை, கொடுக்கப்படும் தொகை, கொடுத்த திகதி என்பன தெளிவாகக் குறிக்கப்படல் வேண்டும். அத்துடன் 20 ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட கொடுப்பனவானால் 15 சத முத்திரையின் மீது கைபொப்பமிட்டு உறுதிப்பத்திரம் பெறப்படல் வேண்டும். வசதிகள் சேவைக்கட்டணம் பற்றிய நிபந்தனைகளிலும் விதிகளிலும் உறுதியாகக் கட்டப்பட்டுள்ள கருமங்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கும் போது அனுமதிக்கப்பட்ட கட்டண அளவுகளுக்கு அதிகமாக இல்லாதிருத்தல் வேண்டும். அதற்காக பெற்றுக்கொள்ளும் உறுதிப்பத்திரம் / பற்றுச்சீட்டுக்களில் மணித்தியாலத்திற்கு அனுமதிக்கப்பட்ட தொகை, வேலை செய்த மணித்தியாலங்கள் கொடுக்கப்பட்ட தொகை என்பன குறிப்பிடப்படல் வேண்டும். போக்குவரத்துச் செலவுகள் வழங்கும் போது பெற்றுக்கொள்ளும் உறுதிப்பத்திரம்/ பற்றுச்சீட்டுக்களில் பிரயாணஞ் செய்யும் தூரம், பிரயாணஞ் செய்தவர், வாகன இலக்கம் முதலிய விபரங்களும் உள்ளடங்க வேண்டும். விளையாட்டு விழாவுக்கான செலவு, உபகரணங்கள் திருத்துவதற்கான செலவுகள் போன்ற கொடுப்பனவுகளின் போது பெற்று கொள்ளும் உறுதிப்பத்திரங்களில் கொடுக்கப்பட்ட பணத்திற்கு பெற்றுக் கொண்ட சேவை, பொருட்களின் விபரம் அவற்றின் அளவு ஆகிய விபரங்கள் தெளிவாக காட்டப்படல் வேண்டும். பணம் கொடுத்து வாங்குதல் போன்றவைகளின் போது கொடுக்கப்படும் பற்றுச்சீட்டுக்களில் தொகை எழுத்தில் எழுதப்பட வேண்டும். சகல உறுதிப்பத்திரங்களிலும் / பற்றுச்சீட்டுக்களிலும் பணம் கொடுக்கப்பட்ட படிக்கு அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு கைபொப்பமும் திகதியும் இடப்படல் வேண்டும். அத்துடன் அவ்விலக்கம் காசுப்புத்தகத்தில் விபரக் குறிப்புக்கு முன்னால் குறிக்கப்படல் வேண்டும். பொருட் பதிவு புத்தகங்களுக்கு / நூல் நிலைய புத்தக பெயரட்டவணையில் சேர்க்கப்பட வேண்டிய உபகரணங்கள் / நூல் நிலையப் புத்தகங்கள் என்பன விலை கொடுத்து எடுத்தால் அவற்றிற்குரிய பதிவுகளில் சேர்த்து அவ்வாறு செய்த படிக்கு பற்றுச்சீட்டிலேயே உறுதிப்படுத்தி பக்க இலக்கத்தையும் குறிக்க வேண்டும். (இலகு முறையில்) கொடுப்பனவுகள் பணமாக அல்லது காசோலை மூலம் செய்ய முடியும். எனினும் நடைமுறை கணக்கு வைத்திருக்கும் பாடசாலையில் ரூபா 100.00 இற்கு மேற்பட்ட கொடுப்பனவுகள் காசோலை மூலமே வழங்கப்படல் வேண்டும். வசதிகள் சேவைக் கட்டண கணக்கிலிருந்து பெற்றார் ஆசிரியர் சங்க கணக்கிற்கோ வேறு கணக்கிற்கோ முற்பணம் கொடுப்பதிலிருந்து தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

5.1.7 வருடாந்த வரவு செலவுத் திட்டம்

வருடத்திற்காக எதிர்பார்க்கப்படும் வரவுகளும், கொடுப்பனவுகளும் உள்ளடங்கிய வரவு செலவுத் திட்டமொன்று வருடம் ஆரம்பிப்பதற்கு குறைந்த பட்சம் ஒரு மாதத்திற்கு முன்னராவது அதிபரால் தயாரிக்கப்பட்டு, பி.க பணிப்பாளரின் அனுமதிக்காக மூன்று பிரதிகளில் அனுப்பப்பட வேண்டும். அவரால் அனுமதிக்கப்பட்ட பிரதிகள் உள்ளக கணக்கு பரிசோதனைப் பிரிவின் கணக்காளருக்கு அனுப்பி ஒரு பிரதியை தமது காரிய காரியாலயத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். எஞ்சிய பிரதியை பாடசாலைக்கு திருப்பி அனுப்ப வேண்டும். இவ்வரவு செலவு திட்டத்தை தயாரிக்கும் போது வசதிகள் சேவைக்கட்டணத்தை செலவு செய்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அதன்படி பாடசாலையின் சேவைகளை கவனத்தில் கொண்டு செலவுத்தலைப்புகளை வைத்து பணம் ஒதுக்கி அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வரவு செலவுத் திட்டத்தை இத்துடன் இணைத்துள்ள இல iii படிவத்தை உபயோகித்து தயாரிக்க வேண்டும். வரவு செலவுத் திட்டத்தில் ஒவ்வொரு செலவுத் தலைப்பின்கீழும் செலவு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள பணத்தை விட செலவு அதிகம் செல்லாமல் பார்த்துக் கொள்வதற்காக கட்டுப்பாட்டு "லெஜர்" ஒன்றை வைத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு செலவுத் தலைப்பின் கீழும் பதிவுப் புத்தகமொன்றில் சில பக்கங்களில் ஒதுக்கிக் கொண்டு அனுமதிக்கப்பட்ட தொகைகளையும் அதில் செய்யும் செலவுகளையும் அவ்வச் சந்தர்ப்பங்களிலேயே காசுப்புத்தகத்திற்கு புறம்பாக அதிலும் பதிந்து கொள்ளுவதினால் இதனை இலகுவாக நடத்தி செல்ல முடியும். இவ்வாறு செய்வதனால் கணக்குச் சாராம்சம் தயாரிக்கும் போது ஒவ்வொரு செலவுத் தலைப்பின் கீழும் செலவு செய்யப்பட்ட பணத்தைக் கணக்கெடுக்க இலகுவாகலாம்.

5.1.8 நான்கு மாதக் கணக்குச் சாராம்சம்

ஒவ்வொரு நான்கு மாத முடிவிலும் அதற்கு அடுத்த மாதம் 15ம் திகதிக்கு முன்னர் அதிபரால் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இல ii படிவத்தில் நான்கு மாதக் கணக்குச் சாரம்சம் ஒன்று தயாரித்து அந்நான்கு மாதங்களுக்கான சாரம்சத்தில் காட்டப்பட்டுள்ள முழுச்செலவும் உறுதிப்பத்திரம் / பற்றுச் சீட்டுக்கேற்ப செலவு செய்யப்பட்டுள்ள விதத்தைக் காட்டக் கூடிய செலவு விபரக் குறிப்புடன் கல்வி அமைச்சின் உள்ளகக் கணக்குப் பரிசோதனைப் பிரிவின் கணக்காளருக்கு அனுப்ப வேண்டும். செலவு விபரக்குறிப்பு இத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு மாதத்திற்கு காணப்படும் மீதி காசுப்புத்தகத்தில் அத்தினத்தில் காணப்படும் மீதியுடன் பொருந்துகிறது என்பதற்கு அதிபர் விசேடமாக பொறுப்புடையவராக இருக்க வேண்டும். பீ.க. பணிப்பாளர் அறிந்துக் கொள்வதற்காக அக்கணக்குச் சாராம்சத்தின் பிரதியொன்று அனுப்பப்பட வேண்டியதோடு பெற்றார் ஆசிரியர் சங்கம் அறிந்துக்கொள்வதற்காக அறுவலக பிரதியை அச்சங்கத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். சகல உறுதிப்பத்திரங்களும் பற்றுச்சீட்டுக்களும் பாடசாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும்.

6.0 கட்டணத்தால் செலவு செய்யக் கூடிய விடயங்கள்

6.1 இக்கட்டணத்தால் செலவு செய்யக் கூடிய விடயங்கள்: "நிபந்தனைகளை விடயங்களும்" எனும் தொகுப்பில் 8(1)பந்தியில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றுக்கு மேலதிகமாக அதில் 8 (1) (6) பந்தியில் சிற்சில தேவைகளுக்காக இக்கட்டணத்தை செலவு செய்வதற்காக பல்வேறு சந்தர்ப்பங்களில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவற்றுள் சில வருமாறு.

6.1.1 வருடத்திற்கு ரூபா. 150இற்கு மேற்படாது நூல் நிலைய புத்தகங்களை விலைக்கு எடுப்பதற்காக.

6.1.2 வருடத்திற்கு ரூபா, 150 அல்லது சேர்க்கப்படும் பணத்தில் 5% ஆகிய இவ்விரண்டின் கூடிய தொகையை விட மேவாத ஒரு தொகையை காகிதாதிகளுக்கும் வேறும் உபயோகப் பொருட்களுக்கும் செலவிடுவதற்கு.

6.1.3 பாடசாலை கட்டிடங்களினதும் மரத்தளபாடங்களினதும் உபகரணங்களினதும் அவசர சிறு பழுதுபார்த்தலுக்காக ரூபா. 300இற்கு மேற்படாத தொகை.

6.1.4 ஸ்ரீ லங்கா வானொலியின் கல்விச் சேவை நிகழ்ச்சிகளுக்காக உபயோகிக்கும் ஆசிரியர் கைநூல்களை விலைக்கு வாங்குவதற்காக.

6.1.5 நீண்ட காலமாக எஞ்சிவரும் ஒரு தொகைப்பணம் இக்கணக்கில் இருப்பின் அப்பற்றை பீ.க. பணிப்பாளரின் கணக்கில் இட்டு அவரது கண்காணிப்பின் கீழ் பாடசாலை கட்டிடங்களைக் கட்டுவதற்காக செலவு செய்யலாம். கட்டிடங்களைக் கட்டுவதற்காகவும் சிறு பழுதுபார்த்தல்களுக்காகவும் இக்கட்டணத்தைச் செலவு செய்வதற்கு விசேட அனுமதி வழங்கப்படும் சந்தர்ப்பங்களில் அதற்காக பீ.க. பணிப்பாளரின் அனுமதிக்கப்பட்ட செலவு மதிப்பீட்டுத் தொகை ரூபா. 1000.00ற்கும் மேற்படாமல் இருந்தால் பணம் பீ.க. பணிப்பாளரின் கணக்கிலிடப்படத் தேவையில்லை என்பதனையும் அனுமதிக்கப்பட்ட செலவு மதிப்பீட்டின் படி செலவு செய்வதற்கு அதிபர்களுக்கு அனுமதி உண்டு என்பதையும் அறியத்தருகிறேன். எனினும் சகல கொடுப்பனவுகள் சம்பந்தமாகவும் விபரங்களும் முறையான உறுதிப்பத்திரங்களும் பற்றுச்சீட்டுக்களும் வைத்திருத்தல் வேண்டும்.

6.2 கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்காகவும் இக்கட்டணத்தால் செலவு செய்தல் அனுமதிக்கப்படுகிறது.

6.2.1 முதலுதவிகளுக்காக மருந்துகள் விலைக்கு எடுப்பதற்காக.

6.2.2 மலசல கூடங்களை சுத்திகரிப்பதற்காக (இது அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஊழியர்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் மட்டும்)

6.2.3 பொலிஸ் மாணவர் படை உள்ள பாடசாலைகளில் அந்தப்படைக்கான செலவுகளுக்காக.

6.2.4 வசதிகள் சேவைகள் கட்டணம் வங்கிக் கணக்கில் பணம் இடுவதற்குச் செல்வதற்கான பஸ் கட்டணம் அல்லது புகையிரதக் கட்டணம்.

6.3 பாடசாலையில் பாவிப்பதற்காக வானொலிக் கருவிப்பெட்டி போன்ற உபகரணமொன்றை விலைக்கு எடுப்பதற்காக, பாடசாலையில் அல்லது பாடசாலைக்கிடையிலான நடனம் அல்லது சங்கீத செயற்பாடுகளுக்காக உதவிப்பணமாக செலவு செய்வதற்காகவோ இக்கணக்கில் இருந்து பணம் செலவழித்தல் சட்ட. விதிகளுக்கு உட்பட்டதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7.0 விசேட வசதிகள் சேவைக்கட்டணம்

கட்டணம் சம்பந்தமான நிபந்தனைகளும் விதிகளும் தொகுப்பின் 13ம் பந்திற்கேற்ப பி.க. பணிப்பாளரின் அனுமதியைப்பெற்று விசேட வசதிகள் சேவைகள் கட்டணம் அறவிடப்படும் சந்தர்ப்பத்தில் அவ்வாறு அறவிடப்படும் பணம் அச்சேவைக்கான செலவுகளை மட்டும் ஏற்பதற்கு ஈடுபடுத்தப்படுவதற்கானது என்பதனைப் பொறுப்பேற்க வேண்டும். 5.1.7. பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள "லெஜரில்" சில பக்கங்களை இதற்காக ஒதுக்கிக் கொள்வதால் இதனை இலகுவாக செய்யமுடியும் சங்கீதப்பாடத்திற்காக இக்கட்டணம் சேர்க்கப்படும் போது அதற்காக ஒரு மாதத்தில் ஒரு மாணவனுக்கு ரூபா. 2.50 வீதமான பணமும் கட்டணத்தோடு சேர்க்கப்படல் வேண்டும்.

## 8.0 இடமாற்றத்தின் போது மேற்கொள்ள வேண்டிய ஒழுங்குகள்.

பாடசாலை அதிபர்கள் இடம் மாறிச் செல்லும் போது வசதிகள் சேவைக்கட்டணக்காசுப் புத்தகத்தை மாறிச் செல்லும் தினத்தன்றைக்கு நிலுவைப்படுத்தி அதன்படி தம் பொறுப்பிலுள்ள சகல பணம் காசுக்கட்டளையை காசோலை என்பவற்றை, பதிலாக நியமிக்கப்படுபவரிடம் ஒப்படைக்க வேண்டும். சாதாரணமாக எழுதப்படும் லொக் குறிப்பிற்கு மேலதிகமாக இக்கணக்கிற்குரிய சகல பணம் /காசுக்கட்டளை/ காசோலை புத்தகங்கள் பத்திரங்கள் முதலானவை சம்பந்தமான விபரங்களை 3பிரதிகளில் பட்டியல் தயாரித்து பதிலாக நியமிக்கப்படுபவருக்கு பொறுப்புக் கொடுத்து பொறுப்பை ஒப்படைத்தபடிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட படிக்கும் கையொப்பத்தை பெற்று பிரதியை மாற்றிச்செல்லும் பாடசாலை அதிபரிடமும் மற்றப்பிரதியைப் பதிலாக நியமிக்கப்படுபவரிடத்திலும் கல்வி அமைச்சில் உள்ளக் கணக்குப் பரிசோதனைப் பிரிவுக்கும் அனுப்ப வேண்டும். மகா வித்தியாலய நிலையில் இல்லாதபாடசாலைகள் இப்பிரதியை அனுப்ப வேண்டியது வட்டாரக் கல்வி அதிகாரிக்காகும்.

## 9.0 விசாரணைகளும், கடிதங்களும், பதில் அனுப்புதலும்

இக்கட்டணம் சம்பந்தமாக அதிபருக்கு அனுப்படும் சகல விசாரணைகளுக்கும் கடிதங்களுக்கும் இரண்டு வாரங்களுக்குள் பதில் அனுப்ப வேண்டும்.

## 10 முன்னைய அறிவுறுத்தல்களை இரத்துச் செய்தல்.

இது சம்பந்தமாக இதற்கு முன் வழங்கப்பட்ட 123 ஆம் இலக்கத்தையும் 1969.06.01 திகதியும் கொண்ட சுற்றுநிருபம் இரத்துச்செய்யப்படுவதோடு இந்த ஆலோசனைகள் 1976.01.01 திகதி தொடக்கம் அமுலுக்கு வரும். 296 இலக்கத்தையும் 1973.02.28 ஆம் திகதியும் கொண்ட சுற்று நிருபப்படி வசதிகள் சேவைகள் கட்டணம் அறவிடுவதை ஆரம்பித்துள்ள பாடசாலைகளில் கட்டணம் சம்பந்தமான கணக்கு வைத்தல் இந்த சுற்று நிருபத்தில் 5வது பந்தியில் குறிப்பிட்டுள்ள விதத்தில் செய்யப்படல் வேண்டும். எனினும் மகாவித்தியாலய நிலையில் இல்லாத பாடசாலைகளில் வருடாந்த வரவு செலவுத் திட்டமும் நான்கு மாதக் கணக்குச் சாராம்சமும் சமர்ப்பிக்கப்பட வேண்டியது வட்டாரக் கல்வி அதிகாரிக்கே ஆகும்.

பிரேமதாச உடகம
செயலாளர்
கல்வி அமைச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இலக்கம் [illegible]7/293
கல்வி அமைச்சு
மலே வீதி,
கொழும்பு - 02
1979 - 12 - 31

எல்லா பிரதான கல்வி அலுவலர்கள்,
மாவட்ட கல்வி காரியாலயங்களுக்கு பொறுப்பான
பிரதேச கல்வி அலுவலர்களுக்கும்,

சேவையின் நிமித்தம் சேர்த்துக்கொள்ளப்படும் தற்காலிக சேவை வழங்குனர்களுக்கு வசதிகள் சேவைகள் கட்டணத்திலிருந்து கொடுப்பனவு செய்தல்.

இது தொடர்பில் வெளியிடப்பட்ட இல [illegible]/79 கொண்டதும் 79.01.31ம் திகதியிடப்பட்டதுமான அமைச்சரின் பணிப்புரையின் பாலும் இல. [illegible] 10/57 (I) உடைய 79.03.30 ம் திகதியிடப்பட்டதுமான சுற்று நிருபத்தின் பாலும் உங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. அரச பாடசாலைகளில் வசதிகள் சேவைகள் கட்டண நிதியிலிருந்து கொடுப்பனவுகள் வழங்கி சமயோசித சேவைக்கு நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு பின்வரும் விதிகளுக்குட்பட்டு கொடுப்பனவுகள் வழங்குவதற்கு தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அ) அனுமதிக்கப்பட்ட விசேட பாடங்களை போதிப்பதற்கு அமர்த்தப்படும் சமயோசித ஆசிரியர்கள்.

i. விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் பொருட்டு அமர்த்தப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு ஒரு பாடத்திற்கு மணித்தியாலயத்திற்கு வழங்கக்கூடிய கொடுப்பனவு ரூ. 15/= இற்கு மேற்படக்கூடாது. அவ்வாறு வழங்கக்கூடிய மாதத்திற்கான உச்ச தொகை ரூ. 450/= ஐ தாண்டக் கூடாது.

ii. மேற்படி ஆசிரியர்களின் சேவைக்காலம் அதிபர்களின் விருப்பின்படி 3 மாதங்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். அதைவிடவும் மேலதிக காலத்திற்கு அவர்களது சேவை தேவைப்படுமானால் அது 6 மாதத்திற்கு உட்பட்டதாயின் பிரதேச கல்விப் பணிப்பாளரும் ஒரு வருடத்திற்காயின் வலயக் கல்விப் பணிப்பாளரும் வருடத்திற்கு மேற்பட்டதாயின் கல்வி செயலாளரும் அவ்வாறான அனுமதியை வழங்குவர். சுற்று நிருபத்தில் முன்னரே குறிப்பிட்டவாறு இவ்வாறான சமயோசித ஆசிரியர்களுக்கு எவ்வித வயது எல்லையும் கிடையாது.

ஆ). i. இச்சேவையாளர்களின் எண்ணிக்கை இப்போதைக்கு கல்வி அமைச்சு மூலம் பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள சேவையாளர்களின் எண்ணிக்கைக்குள்ளடங்கியதாக கருதப்பட வேண்டும். இவ்வாறான சேவையாளர்களை நியமிக்க தீர்மானம் எடுக்கும் போது, அங்குள்ள மாணவர்களின் எண்ணிக்கையை மட்டும் கருத்தில் கொள்ளாது சேர்க்கக்கூடிய வசதிகள் சேவைகள் கட்டண தொகையையே கருத்தில் எடுக்க வேண்டும்.

ii. அனுமதிக்கப்பட்ட ஆளணி, தேவைக்குப் போதுமானதல்லாதபோது பிரதேச கல்விப்பணிப்பாளர் சேவையாளர் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு அனுமதிக்கலாம்.

iii. - எழுது வினைஞர், தட்டெழுத்தாளர்களுக்கு தினமொன்றுக்கு ரூ. 10/= வீதம் நிலையான கொடுப்பனவொன்று வழங்க முடியும். அது மாதம் ஒன்றிற்கு ரூ. 300/= ஐ தாண்டாதிருத்தல் வேண்டும்.

பிரதான கணக்காளர்
கல்வி அமைச்சின் செயலாளருக்காக

பிரதிகள்

i. கணக்குப் பரிசோதகர்
ii. கல்வி காரியாலயங்களிலுள்ள உள்ளக கணக்குப்பரிசோதகர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ඔබේ අංකය / உமது இல. / Your No. ....................

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister } 864807, 869325
Fax : 869326

ලේකම් / செயலாளர் / Secretary } 864812

කාර්යාලය / அலுவலகம் / Office } 865141 - 50

මගේ අංකය / எமது இல. / My No. } 4/ஆதா/1/121/99

අධ්‍යාපන හා උසස් අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி அமைச்சு
Ministry of Education and Higher Education

'ඉසුරුපාය' ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ බත්තරමුල්ල.
'இசுருபாய' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே. பத்தரமுல்ல.
'ISURUPAYA' SRI JAYAWARDHANAPURA KOTTE. BATTARAMULLA

දිනය / திகதி / Date } 1999.12.27

சகல மாகாணக் கல்விச் செயலாளர்,
சகல மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,

ஆசிரியர்களைப் பதவிகளில் நிரந்தரம் செய்வது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழு நிறுவப்படுவதற்கு முன்பு நியமனம் பெற்ற பெரும்பாலான ஆசிரியர்களை அவர்களின் பதவிகளில் நிரந்தரமாக்கும் நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லையென்று கல்வி அமைச்சுக்குப் பலமுறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அதிசமாணர்கள் இது தொடர்பாகக் கவனம் செலுத்துவது ஓய்வு பெற்றுச் செல்லும் வேளையில் உரிய ஆவணங்களைத் தயார்படுத்தும் போதாகும். சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட கடிதம் சுயவிபரக் கோவையில் அடங்கி இருக்க வேண்டிய மிக முக்கியமான ஒரு ஆவணமாவதுடன் ஓய்வூதியம் தயாரிக்கும் போது இது மிகவும் அவசியப்படுகின்றது. எனவே 1979 இற்கு முன்னர் நியமனம் பெற்றும் இதுவரை முறையான நியமனக் கடிதமோ அல்லது நிரந்தர நியமனக் கடிதமோ பெற்றுக் கொள்ளாத ஆசிரியர்களின் சுயவிபரக் கோவைகளைப் பரிசீலனை செய்து தேவையான தகவல்களை உறுதிப்படுத்திக் கொண்டு நியமனக் கடிதங்களின் விதிகளுக்கமைவாக மாகாணக் கல்விச் செயலாளரின் கையொப்பமிடப்பட்ட முறையான நியமனக் கடிதங்களை வழங்குவதற்கும் அதற்கேற்பப் பதவியில் நிரந்தரமாக்கப்படுவதற்குமான நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தயவுசெய்து குறித்துக் கொள்வீர்களாக.

இவ்விடயம் சம்பந்தமாக ஆசிரியர்களை அறிவுறுத்துவதற்கான பத்திரிகை அறிவித்தலொன்று வெளியிடப்பட்டுள்ளது. முறையான நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும் நிரந்தர நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும் உங்களிடம் வருகின்ற ஆசிரியர்களுக்கு உங்கள் ஒத்துழைப்பை வழங்குவீர்களாக.

யு. டீ. பண்டார
மேலதிக செயலாளர் (நிர்வாகம்)
கல்வி, உயர் கல்வி அமைச்சின்
செயலாளருக்காக.

பிரதி:- செயலாளர், கல்விச் சேவைக் குழு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுநிருப இலக்கம் : 1999/26

ඔබේ අංකය / உமது இல. / Your No. ..............................

දුර කථන / தொலைபேசி இல. / Telephone Nos.

අමාත්‍ය / அமைச்சர் / Minister — 864807, 869325
Fax : 869326

ලේකම් / செயலாளர் / Secretary — 864812

කාර්යාලය / அலுவலகம் / Office — 865141 - 50

මගේ අංකය / எமது இல. / My No. — 4/ஆசா/1/121/99

අධ්‍යාපන හා උසස් අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி அமைச்சு
Ministry of Education and Higher Education

'ඉසුරුපාය' ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
බත්තරමුල්ල.
'இசுருபாய' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே.
பத்தரமுல்ல.
'ISURUPAYA' SRI JAYAWARDHANAPURA KOTTE.
BATTARAMULLA

දිනය / திகதி / Date — 1999.08.10 ஆந்திகதி.

சகல மாகாண பிரதான செயலாளர்களுக்கும்,
சகல மாகாணக் கல்விச் செயலாளர்களுக்கும்,
சகல மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளர்களுக்கும்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,
வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,
கல்வி, உயர் கல்வி அமைச்சின் சகல அலுவலர்களுக்கும்,

## ஆசிரியர்களின் பதவிப் பெயரைச் சரியாக உபயோகித்தல்

ஆசிரியர்கள் தொடர்பாகப் பெரும்பாலான ஆவணங்களில் "உதவி ஆசிரியர்" என்று குறிப்பிடப்பட்டு இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இனிமேல் ஆசிரியர்களின் பதவிப் பெயரை " .................... வகுப்பு/ தர ஆசிரியர் " எனக் குறிப்பிடுமாறும் "உதவி ஆசிரியர்" என்ற பெயரை ஆவணங்களில் உபயோகிப்பதிலிருந்து தவிர்க்குமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

02. இதன் தொடர்பாக அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வியோடு சம்பந்தப்பட்ட அலுவலர்கள் ஆகிய அனைவருக்கும் விளக்கம் அளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் படியும் தயவாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

Sgd/Senanayake Upasena
சேனாநாயக உபசேன
மேலதிகச் செயலாளர்
(திட்டமும் முகாமைத்துவமும்)
கல்வி, உயர் கல்வி அமைச்சின்
செயலாளருக்காக

பிரதிகள் :- 1. செயலாளர், கல்விச் சேவைக் குழு.
2. அமைச்சில் உள்ள சகல பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1959ம் ஆண்டின் 5ம் இலக்கச் சுற்றுநிருபம்

இல PHE / A 473
வித்தியா பகுதி, மலே வீதி,
கொழும்பு 2
1959ம் வரு.ஜனவரி மீ 30ம் திகதி

சகல அரசினர் பாடசாலைகளினதும்,
உதவி நன்கொடை பெறும்
பாடசாலைகளினதும் அதிபர்களுக்கும்,
தலைமை ஆசிரியர்களுக்கும்

## விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றும் மாணாக்கர்களின் நடத்தை தொடர்பான விதிகள்

மாணாக்கரின் நடத்தை சிறந்ததென பாடசாலை அதிபர் எழுத்து மூலம் அத்தாட்சிப்படுத்தாவிடின் எம்மாணாக்கரும் விளையாட்டுப் போட்டிகளிலேனும் தேகாப்பியாசப் போட்டிகளிலேனும் பங்குபற்ற இனிமேல் அனுமதிக்கப்படமாட்டார்கள். எனவே ஒரு குறித்த விளையாட்டில் அல்லது தேகாப்பியாசத்தில் பாண்டியத்தியம் பெற்றிருத்தல் காரணமாக அதில் பங்குபற்றுவதற்கு அவர் உரித்துடையவராகார். பாடசாலைத் தலைவர்கள் மாணவர்களுக்கு இந்த விடயம் தொடர்பாக கவனத்துக்கு கொண்டுவருதல் வேண்டும். மேலும் ஏதாவது விடயத்தில் அல்லது விளையாட்டு போட்டிகளில் பங்குபற்றி தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு கட்டாயமாக சான்றிதழ் வழங்குதல் வேண்டும்.

S.F.D.சில்வா
வித்தியாபதி

சுற்று நிருப இல 41/1958

GED 4994
கல்வித் திணைக்களம்
மலே வீதி
கொழும்பு 02
1958.11.03

எல்லா அதிபர்களுக்கும்
எல்லா தலைமை ஆசிரியர்களுக்கும்

## தலைமை ஆசிரியரின் சம்பவத்திரட்டுக் குறிப்புகள்

உதவி ஆசிரியர்களின் நடத்தை உத்தியோகக் கடமைகளை பற்றி விமர்சிக்கும் குறிப்புரைகளை தலைமை ஆசிரியர்கள் சம்பவத்திரட்டு புத்தகத்தில் பதிதல் கூடாது. ஆசிரியர்களின் நடத்தை தொடர்பான விடயங்களை கல்வி அதிகாரிகளுக்கு அறிவிப்பதே சரியான நடைமுறையாகும். அதுவே அவரது கடமை தொடர்பான விடயமாக இருப்பின் உங்கள் மேற்பார்வை புத்தகத்தில் குறித்தல் வேண்டும்.

2. உங்கள் பாடசாலைக்கு வருகை தரும் அதிகாரிகளின் குறிப்புரைகள் ஆசிரியர் கூட்டத்தில் வைத்து எல்லா ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படல் வேண்டும்.
3. அரசாங்க பாடசாலைகளுக்கான விதிக்கோவையின் பிரமாணங்கள் 89-91 வரையான விதிகள் சம்பவத் திரட்டு புத்தகங்கள் தொடர்பாக கண்டிப்பாக கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.

J.விக்ரம சிங்க
வித்தியாபதிக்காக

பிரதிகள்

1. எல்லாக் கல்வி அதிகாரிகள்
2. மாவட்டக் கல்வி அதிகாரிகள்
3. வட்டாரக் கல்வி அதிகாரிகள்

தொடர்ச்சி 112 பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்று நிருபக் கடிதம்

எனது இல 2 /SEC/ 49
கல்வி அமைச்சு மலே வீதி
கொழும்பு 02
1982 ஜுலை 23ம் திகதி

எல்லா பிரதேசக் கல்விப்பணிப்பாளர்களுக்கும் பிரதானக் கல்வி அதிகாரிகளுக்கும்

## பாடசாலைக் கல்விச் சுற்றுலா

பாடசாலைக் கல்விச் சுற்றுலா பாவிதானத்துக்குட்பட்ட முக்கியமான ஒரு கூறாகும். எனவே பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பாக விஷேட கவனம் செலுத்தி அவ்வாறான கல்விச் சுற்றுலாக்களை ஒழுங்கமைப்பது முக்கியமாகும். ஆகையால் அவ்வாறான கல்விச் சுற்றுலாக்களை மேற்கொள்கையில் பின்வரும் தேவைப்பாடுகள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்ய வேண்டப்படுகின்றீர்கள்.

1. உங்கள் அனுமதியின்றி கல்விச் சுற்றுலாக்களை ஒழுங்கமைப்பது கூடாது.
2. வெளியே சென்று தங்குவதற்குப் பொருத்தமான இடம் ஏற்பாடு செய்யப்படாதவிடத்து பாடசாலை மாணவர்கள் இரவில் தங்கும் வண்ணம் கல்விச் சுற்றுலாக்கள் ஒழுங்கமைக்கப்படக்கூடாது.
3. கல்விச் சுறறுலாவில் பங்குகொள்ளும் மாணவர்களின் பெற்றோர்களின் விருப்பத்தை எழுத்து மூலம் பெற்றுக்கொள்ளல் வேண்டும். மேலும் அத்தகைய கல்விச் சுற்றுலாக்களில் பெற்றோரில் சிலரை கலந்து கொள்ளச் செய்ய முடியுமானால் சிறந்தது.
4. கல்விச் சுற்றுலாக்களின் பொருட்டு பாடசாலைகளுக்கு லீவு விடப்படக்கூடாது. மாறாக கல்விச் சுற்றுலாக்கள் வார இறுதி நாட்களையும் லீவுகாலங்களையும் மட்டும் பயன்படுத்தி மேற்கொள்ளப்படல் வேண்டும்.
5. கல்விச் சுற்றுலாக்களின் போது ஏதாவது எதிர்பாராத சிக்கல்கள் தோன்றுமாயின் அருகில் உள்ள பொலீஸ் நிலையத்திற்கு தெரியப்படுத்தி உதவிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
6. கல்விச் சுற்றுலா செல்வதற்கான விண்ணப்பங்கள் உங்கள் பிரதேச கல்விப்பணிப்பாளருடாக அனுமதிக்காக அனுப்பப்படல் வேண்டும்.
7. அத்தகைய விண்ணப்பமொன்று பின்வரும் விடயங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   அ. பாடசாலையின் பெயர்
   ஆ. விஜயம் மேற்கொள்ளவுள்ள இடங்கள், அங்கு செல்ல உத்தேசித்துள்ள நேரம், அங்கிருந்து புறப்படும் நேரம் உத்தேச சுற்றுலாப் பயணப்பாதையை காட்டும் படம், தூரம் என்பன.
   இ. பெற்றோரின் விருப்பம் பெறப்பட்டுள்ளதா என்பது
   ஈ. சுற்றுலா தொடங்கும் திகதியும் நேரமும், திரும்பி வரும் திகதியம் நேரமும் புறப்படு நேரமும் திரும்பிவரும் நேரமும் பாடசாலை வேளையைவிட முந்தியோ பிந்தியோ அமையுமானால். பிள்ளை கள் சுற்றுலாவில் புறப்பட உத்தேசித்துள்ள இடத்திற்கு வீட்டிலிருந்து எங்ஙனம் வந்து சேருவார்கள் என்பதும் அதுபோன்று திரும்பி வரும்போதும் எங்ஙனம் வீடு திரும்புவார்கள் என்பதும்.
   உ. கல்விச் சுற்றுலாவின் போது இரவில் தங்க நேரிடுமாயின் அதற்காக செய்யப்பட்ட ஏற்பாடும் அவ்வாறு தங்குமிட வசதி ஒழுங்கு அனுமதிக்கப்பட்டதற்கான சான்றுக்கடிதமும் இருத்தல்.
   ஊ. போக்குவரத்து தனியார் வாகனமாயிருப்பின் வாகன இலக்கம், வாகனத்தின் தகுதிநிலை குறித்த சான்றிதழ் அது வழங்கப்பட்ட திகதி
   எ. தனியார் வாகனமாயின் பயணிகள் காப்புறுதி செய்யப்பட்டுள்ளதா அது எத்தொகைக்கு என்பதும்.
   ஏ. சுற்றுலாவில் செல்லும் மாணவர்கள் வகுப்புரீதியாகவும் பால்வாரியாகவும்
   ஐ. சுற்றுலாவில் மாணவ செல்லுவார்களாயின் ஆண், பெண் தங்குவதற்கு வெவ்வேறாக வசதி செய்யப் பட்டுள்ளதா என்பது எழுத்துமுலம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
   ஒ. சுற்றுலாவில் செல்லும் ஆசிரியர்களின் பெயர், வயது விஷேட தகைமை என்பவற்றை குறிப்பிடவும் இருபது மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் வீதம் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும். மாணவிகள் கூட்டிச்செல்லப்படும் போது கட்டாயமாக பெண் ஆசிரியர்கள் கலந்து கொள்ள வேண்டும்.
   ஓ. சுற்றுலாவின் செலவுகள் எங்ஙனம் பெறப்பட்டதென்றும் உத்தேச வரவு செலவுத் திட்டமும் காட்டப்படல் வேண்டும்
8. கல்விச் சுற்றுலாவிற்கு அனுமதி வழங்குமுன் நீங்கள் பின்வருவன தொடர்பாக தனிப்பட்ட வகையில் திருப்தி அடைந்திருக்க வேண்டும்.
   அ. அச்சுற்றுலா பிள்ளைகளுக்கு பிரயோசனமுடையது
   ஆ. பிள்ளைகளின் பாதுகாப்பு ஏனைய வசதி குறித்து போதுமான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.
   இ. காட்டப்பட்டுள்ள பயணப்பாதையின்படி பிரயாணங்கள் பகல் வேளைக்குள் மேற்கொள்ள கூடிய தென்றும் இரவில் பயணம் செய்யத்தேவையிருக்காது என்றும்
   ஈ. சுற்றுலாவின் பொருட்டு பணம் சரியான முறையில், சரியான அளவில் பயன்படுத்தப்படுகின்றது என்று
9. சுற்றுலா முடிவடைந்தவுடன் அதுபற்றி அதிபர் கல்விப்பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.
10. சுற்றுலா முடிவடைந்து ஒரு வாரத்துக்குள் அக் கல்விச் சுற்றுலாவின் நோக்கம் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்றும் அவை யாவையென்றும் விரிவான அறிக்கையொன்று கல்விப்பணிப்பாளருக்கு அதிபரால் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

1954ம்ஆண்டை 28ம் இலக்க சுற்று நிருபம் 1973.01.17 இல் வெளியிட்ட சுற்றுநிருப கடிதமும் இத்தால் ரத்துச்செய்யப்படுகிறது.

செயலாளர்
கல்வி அமைச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு

1929ம் ஆண்டைய அரச பாடசாலைக்களுக்கான பிரமாணக்கோவையின் 89-91 வரையான விதிகள் பின்வருமாறு.

89 வரவு பாடசாலை அனுமதிப் பதிவுப் புத்தகங்களுக்கு மேலாக ஒவ்வொரு பாடசாலையும் சம்பவத் திரட்டு புத்தகம் ஒன்றை பேணி வருவதுடன் அதில் பின்வருவனவற்றை குறித்தல் வேண்டும்.

அ. தவணை ஆரம்பம், ஆசிரியர் மாற்றம் கட்டிடத்திருத்தம் பாடசாலையை மூடுதல் போன்ற பாடசாலையுடன் தொடர்பான முக்கிய விடயங்கள்

ஆ. பாடசாலை மேற்பார்வை அதிகாரிகளின் வருடாந்த அறிக்கை சுருக்கத்தின் ஒவ்வொரு சொல்லும்

இ. ஒரு ஆசிரியர் திடீரென பாடசாலையை விட்டு வெளியே செல்ல நேரும்போது அதுபற்றி காரணத் துடன் குறிப்பிடப்படல் வேண்டும்.

90. மேற்பார்வைக்கான அல்லது விசாரணைக்காக பாடசாலைகளுக்கு சமூகம்தரும் எல்லா அதிகாரிகளுக்கும் இது காட்டப்படல் வேண்டும். அவர்களால் இடப்படும் குறிப்புரையின் பிரதி அவ்வாறு குறிப்பிட்டு ஒரு வாரத்திற்குள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

91. சம்பவத்திரட்டுப் புத்தகத்தில் ஒரு குறிப்புரை இடப்படுமானால் அது நீக்கப்படவோ, திருத்தப்படவோ கூடாது இன்னுமொரு குறிப்புரையிடுவதன் மூலம் அது திருத்தப்படலாம்.

உத்தியோக பூர்வ மொழி ஆணைக்குழு

1996.06.25

எல்லா அமைச்சுகளின் செயலாளர்களுக்கும்

மாகாணசபை பிரதான செயலாளர்களுக்கும்

திணைக்களத் தலைவர்களுக்கும்

பொதுக்கூட்டுத்தாபனத் தலைவர்களுக்கும்

## சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகள் பாவனை தொடர்பான அரசியலமைப்பு ஏற்பாடுகள்

ஏனையவற்றுடன் கீழ்வருவனவற்றை தெளிவாகக் குறிப்பிட்டுச் சொல்லும் பொதுநிருவாக அமைச்சின் 25/89 (1) ம் இலக்கமும் 91.012.13 திகதியிடப்பட்டதுமான சுற்றுநிருபங்களின் பால் உங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது அவற்றிற்கிணங்க.

1. பொது நிறுவனங்களிலுள்ள எல்லா பெயர்ப் பலகைகளும் தகவற் குறிகளும் மூன்று மொழிகளிலும் இடம்பெறல் வேண்டும்.
2. பொது மக்களால் கையாளப்படும் எல்லாப் படிவங்களும்மூன்று மொழிகளிலும் இருத்தல் வேண்டும் அவ்வாறில்லாத பழைய படிவங்கள் எல்லாம் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும்.
3. பொது மக்களின் கடிதங்களுக்கான பதில் கடிதங்கள் கடிதம் அனுப்பியவரின் மொழியில் அனுப்பப் படல் வேண்டும்

இச்சுற்று நிருப ஏற்பாடுகளை மீறுவது தாபன விதிக்கோவை II இல் உள்ள (அ) வகை குற்றமாக கருதப்பட்டு பொருத்தமான ஒழுக்காற்று குழுவினால் உடனடி நடவடிக்கைக்குட்படுத்தப்படும்.

மேற்குறித்த Iம் IIம் IIIம் அறிவுறுத்தல்களை அனுசரிக்காதிருத்தல் 1991ம் ஆண்டின் 18ம் இலக்க உத்தியோக மொழிகள் ஆணைக்குழு சட்டத்தின் 28ம்பிரிவின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகவும் கருதப்படும்.

பல அரச நிறுவனங்களில் இவ்வேற்பாடுகள் புறக்கணிக்கப்படுவதாக ஆணைக்குழுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன எனவே இவற்றை உடனடியாக அமுல்படுத்துமாறு ஆணைக்குழு கேட்டுக்கொள்கிறது.

தலைவர்

உத்தியோக மொழிகள் ஆணைக்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு
சுற்றறிக்கை இலக்கம்: 2/2002

எனது இலக்கம்: பீஎல்/4/1/171
உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள்,
உள்ளூராட்சி அமைச்சு,
இல. 330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு - 02
2002.05.29.

1. அனைத்து மாகாண சபை பிரதம செயலாளர்கள்,
2. அனைத்து மாவட்ட செயலாளர்கள்,
3. பணிப்பாளர், இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம்
4. பிரதம நிறைவேற்று அதிகாரி
உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியம்.

<u>மாதிரிப் படிவங்களை மும்மொழிகளிலும் தயார்செய்தல்</u>

அரசகரும மொழிக் கொள்கையை செயற்படுத்துவது தொடர்பாக 1991.05.12 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்பட்டுள்ள 1991.06.17 ஆம் திகதிய 22/91 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை தொடர்பில் உங்களின் கவனத்தைக் கோருகின்றேன். அச்சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைய .பொது மக்கள் அரசுடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது பயன்படுத்தப்படும் அனைத்து மாதிரிப் படிவங்களையும் ஒரே தாளிலேயே தயார் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இத்தால் அறியத்தருகின்றேன்.

ஒப்பம்/கே.பீ.எம். ஸ்பெல்டிவின்ட்
செயலாளர்,
உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள்
உள்ளூராட்சி அமைச்சு.

பிரதி:-
1. தலைவர்
அரசகரும மொழிகள் ஆணைக்குழு
இல. 34/7, கோட்டை வீதி,
இராஜகிரிய.

2, செயலாளர், திரு.ஏ.ஐ. விக்கிரம

Certified True Copy



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்சங்க உரிமைகளும் அதன் அவசியமும் அதன் தொழிற்பாடுகளும்

## உங்கள் தொழில் உரிமைகளை அறிந்துள்ளீர்களா ?

(பிரெட்றிக் ஈபேட் மன்ற தொழிற்சங்க உரிமைகள் பற்றிய நூல், தொம்சன் பெலோசிப் பயிற்சி கைநூல், ஆகியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டது)

தொகுத்தவர்
திரு. சி. சரவணபவானந்தன்
நிருவாகச் செயலாளர்

கொழும்புப் பணிமனை
"கனடா இல்லம்"
இல. 40 மத்திய வீதி,
கொழும்பு - 15
இலங்கை.

தலைமைப் பணிமனை
இல. 442, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்,
இலங்கை.

தொழிற்சங்க உரிமைகள் எவை ?
ஏழு அடிப்படையான தொழிற்சங்க உரிமைகள் உள்ளன.

முதலாவது,
சகல தொழிலாளர்களுக்கும் தம்மை ஒரு சங்கமாக சுயமாகவே ஒழுங்குபடுத்தும் உரிமை உள்ளது. எவ்வித பாகுபாடுமின்றி அவர்களது சுய விருப்பின் பேரில் தொழிற்சங்கங்களை அமைப்பதற்கும் அவற்றில் சேர்ந்து கொள்வதற்கும் உரித்துடையோர் ஆவார். தொழிலாளர்கள் ஒரு தொழிற்சங்கத்தை அமைப்பதற்கு அரசாங்கத்திடமிருந்து முன்கூட்டியே அனுமதி எதுவும் பெறத்தேவையில்லை.

இரண்டாவது ,
தொழிற்சங்கங்களுக்கு சுயமாகச் செயற்படும் உரிமை உள்ளது. தொழிற்சங்க அமைப் பொன்றில் வெளியார் தலையீடு இருத்தல் ஆகாது.

- ★ தொழிற்சங்கங்கள் தமது அமைப்பு விதிகள் மற்றும் விதிகளை வரைதல்.
- ★ தமது பிரதிநிதிகளை தெரிவு செய்தல்
- ★ தமது நிருவாகத்தையும், நடவடிக்கை களையும் ஒழுங்கமைத்தல்
- ★ தமது நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்தமை த்தல்.

போன்ற தொழிற்சங்க விடயங்களில் அரசாங்க அதிகார சபைகள் தலையீடு செய்தல் ஆகாது. சங்கங்களில் அங்கத்தவர்கள் மட்டுமே ஆட்சி செலுத்தல் வேண்டும்.

மூன்றாவது ,
தொழிற்சங்கங்களுக்கு, அதிகாரிகளின் தீர்மானத்தின் மூலம் ஏற்படும் இடைநிறுத்தம் மற்றும் கலைத்து விடுதல் என்பவற்றுக்கெதிரான பாதுகாப்பு உள்ளது. ஆகவே ஒரு தொழிலாளர் அமைப்பை அரசாங்கம் கலைக்கவோ, இடை நிறுத்தவோ முடியாது. ஒரு சயாதீனமான தகுதி வாய்ந்த நீதித்துறை, அதிகார சபை மட்டுமே ஒரு தொழிற்சங்கத்தை இடை நிறுத்தவோ, கலைக்கவோ, முடியும்.

நான்காவது,
தொழிற்சங்கங்கள் சம்மேளனங்களையும், உயர் சம்மேளனங்களையும் ஆக்குவதற்கும், அவற்றில் இணைந்து கொள்வதற்கும் உரிமை உள்ளது. அவ்வாறே ஒரு தொழிலாளர் அமைப்பு அரசாங்கத்தின் அனுமதி கோரும். தேவை இல்லாமல் ஒரு சர்வதேச தொழிற்சங்க அமைப்பில் இணைந்து கொள்ளும் உரிமை இருத்தல் வேண்டும்.

ஐந்தாவது,
தொழிற்சங்கங்களுக்கு, தொழிற்சங்க எதிர்ப்பு பாரபட்ச நடவடிக்கைகளிலிருந்து போதிய பாதுகாப்பு பெற்றுக்கொள்ளும் உரிமை இருத்தல் வேண்டும்.
இவ்வுரிமை, தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் காரணமாக எந்த தொழிலாளியும் வேலை நீக்கம் செய்யப்படாமலிருப்பதை உறுதி செய்யும் உத்தரவாதங்கள் இருப்பதைக் கோரி நிற்கின்றது. அது, வேலைக்கு விண்ணப்பிக்கும் ஒருவரை தொழிற்சங்கத்தில் சேருவதைத் தடுக்கும் வகையிலான எத்தகைய வாசகத்தையும் சேர்த்துக் கொள்வதையும் தடைசெய்கிறது.

ஆறாவது,
தொழிற்சங்கங்களுக்கு சுதந்திரமான, கூட்டுப் பேரம் பேசலுக்கு உரிமையுண்டு தொழிலாளர்கள் வேதனம், ஏனைய பயன்கள், மற்றும் தொழில் நிலைமைகள் குறித்துக்கூட்டுப் பேரம் பேசலுக்கு உதவும் வகையில் ஒன்றாகச் சேரமுடியும், என்ற ஏற்பாடும் இதில் அடங்கி உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாவது,

தொழிற்சங்கங்களுக்கு வேலை நிறுத்தம் செய்யும் உரிமை உண்டு. வேலை நிறுத்தம் செய்யும் உரிமை என்பது பொறுப்புணர்வோடு உபயோகிக்க வேண்டிய ஒன்றாகும். ஆயினும் அது ஐயத்துக்கிடமின்றி, தொழிற்சங்கங்கள் கைவிடமுடியாத சட்ட பூர்வமான உரிமையாகும். ஆகவே வேலைநிறுத்தம் மற்றும் ஏனைய தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடும் உரிமை அவசியம் என்பதோடு இந்த உரிமை எவ்வித விதிவிலக்கோ கட்டுப்பாடோ இல்லாமல் சகல தொழிலாளர்களுக்கும் இருத்தல் வேண்டும்.

## தொழிற்சங்கத்தின் அவசியமும் அதன் தொழிற்பாடுகளும்

1. தொழிற்சங்கம் என்பது என்ன ?

அங்கத்தவர்களின் சமூக, பொருளாதார அரசியல் மற்றும்அறிவுபூர்வ நாட்டங்களை விருத்தி செய்யவும் பாதுகாக்கவும் உருவாக்கப்பட்ட தொழிலாளர்களின் கூட்டமைப்பே தொழிற்சங்கம் எனப்படும்.

தொழிற்சங்க நாட்டங்களின் வகைகள்

அ. கல்வி கலாச்சார நடவடிக்கைகள் விளையாட்டுக்கள் நலன்புரி நடவடிக்கைகள் என்பவை சமூக நாட்டங்களாகும்.

ஆ. தொழில்சார் அறிவு விருத்தி நடவடிக்கைகளும் மேலதிகக்கல்வியும் புலமைசார் நாட்டத்தினுள் அடங்கும்.

இ. வேதனம், வேலை நிலைமைகள் என்பவற்றின் முன்னேற்றம், முதலீடுகளும், கூட்டுத்திட்டங்களும், சட்டச்சேவைகள், சமூகப்பாதுகாப்பு மற்றும் தொழிலாளர் நிவாரணம் ஆகியவை பொருளாதார நாட்டத்தினுள் அடங்கும்.

ஈ. ஜனநாயக வழிமுறைகள் பற்றிய அறிவையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்துதல், நாட்டின் அபிவிருத்திக்காக ஒரு குடிமகனுக்கும், ஒரு வாக்காளருக்கும் உள்ள உரிமைகளை பயன்படுத்தல் போன்றவை அரசியல் நாட்டத்தைக் குறிக்கும்.

2. சங்கம் ஒன்றின் பொறுப்புக்கள் எவை ?

ஒரு தனிநபராகவோ அல்லது ஒரு குழுவாகவோ உள்ள உறுப்பினர்களுக்கு சங்கம் வழங்கும் உதவி பற்றி இங்கு தரப்படுகின்றது.

அ. வேதன, வேலைநிலமைகளில் ஏற்படும் முன்னேற்றம்

உறுப்பினர்களது வாழ்க்கைத் தரத்தையும், வேலை நிலைமைகளையும் அபிவிருத்தியடைச் செய்வதே சங்கத்தின் முக்கிய நோக்கமாகும். உறுப்பினர்களின் ஆதரவுடனும் சுயாதீனமாகவும் பேச்சுவார்த்தைகளை நடாத்தக்கூடிய வகையில் சங்கம் இருத்தல் வேண்டும்.

ஆ. அங்கீகரிப்பு அல்லது அங்கீகாரம் பேச்சுவார்த்தை நடத்தப்படுவதற்கு முன்னர் ஒரு சங்கமானது வேலை கொள்வோரால் அங்கீகரிக்கப்பட வேண்டும். ஒரு தொழிற்சங்கம் பல்வேறு தரங்களில் அல்லது குழுக்களில் உள்ள தொழிலாளர்களில் பெரும்பான்மையானோரைப் பிரதி நிதிப் படுத்துவதை நிருபிக்கும் பட்சத்தில் மாத்திரமே அது தொழிற்படுவதற்கான அனுமதி வழங்கப்படும்.

இ. கூட்டுப்பேரம் பேசும் பொறிமுறை (இயந்திரம்) வேலை நிபந்தனைகள், வேதனம் போன்றவை பற்றிய பேச்சுவார்த்தைகளை வேலை கொள்வோருடன் மேற்கொள்ளும் வகையில் ஒருகூட்டுப் பேரம் பேசும் இயந்திரத்தின் வடிவம் அல்லது முறைமையை ஸ்தாபித்தல் அவசியமாகும்.

ஈ) தனிநபர் துயர்களும் பிரச்சினைகளும் பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பான மேன்முறையீடு, வேலைநீக்கம், மற்றும் தொழிற்பயிற்சிகள் தொடர்பான தனிநபர் பிரச்சினைகளின் போது தொழிற்சங்கங்கள் அவர்களுக்கு உதவுதல் அவசியமானதாகும்.

உ) கல்வி உறுப்பினர்களின் பொதுவான கல்வியறிவை மேம்படுத்தல் தொழிற்சங்கங்களின் முக்கிய தொழிற்பாடுகளில் ஒன்றாகும். இது பொதுவான அல்லது தொழிற்சங்க கல்வி மேம்பாடாக அமையலாம். தொழிற்சங்க கொள்கைகள் பற்றிய அறிவைத்தருதல், தொழிற்சங்க நடவடிக்கைகளிற் கூடியளவு பங்கேற்கச் செய்தல், பேரம் பேசும் நுட்பத்திறனை வளர்க்கச்செய்தல் போன்றவையே தொழிற்சங்கக்கல்வியின் முக்கிய விடயங்களாகும்.

ஊ) சங்கத்தொடர்பாடல்

சங்கம் தனது அங்கத்தவர்களிடையே தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு பிரதான ஊடகங்களாக. செய்திக்கடிதங்கள் ,சிறு பத்திரிகைகள். சுற்றுநிருபங்கள் , கையேடுகள் , துண்டுப் பிரசுரங்கள், கல்வியூட்டல் வசதிகள் , தனியாள் நேரடித் தொடர்புகள் , மற்றும் விசேட கூட்டங்கள் என்பவற்றைக் கொண்டுள்ளன.

எ) நலன் பேணல் வசதிகள்

மரணப் பணிக்கொடை நிதியம், புலமைப்பரிசில்கள் கல்விக்கான விருதுகள் போன்றவை மூலமாக நலன் பேணல் சேவைகள் மேற்கொள்ளப்படலாம்

ஏ) சட்ட உதவிகளும் ஆலோசனைகளும் நட்ட ஈடு தொடர்பான வழக்குகள் வேலை நேரத்தில் ஏற்படும் விபத்துக்கள் , காயங்கள் ,வேலை நீக்கம் வேதனக் குறைபாடுகள் போன்ற பிரச்சினைகளின் போது சட்ட உதவிகளும், ஆலோசனைகளும் சங்கத்தின் மூலம் வழங்கப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ) வேலை நிறுத்தமும் சச்சரவுகளும்

உத்தியோக பூர்வ வேலை நிறுத்தம் மற்றும் சச்சரவுகளின் போது ஏற்படும் வசதியீனங்களை நீக்குவதற்கான நடவடிக்கைகளை சங்கம் மேற்கொள்ள வேண்டும்.

ஒ) தனிப்பட்ட உறுப்பினர்களுக்கு உதவுதல்

வேலை பற்றிய தொடர்ச்சியான வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் உறுப்பினர்களுக்கு அவசிய மாகும். முகாமைத்துவத்தின் ஒழுக்காற்று நடவடிக் கைகள் வேலை நீக்கம் அல்லது முகாமைத்து வத்தால் வஞ்சிக்கப்படுதல் போன்ற சந்தர்ப்பங் களில், உறுப்பினர் உண்மையாகப் பாதிக்கப் பட்டுள்ளவராயின் அவர் சங்கத்தினால் பாதுகாக் கப்படுவதுடன் உதவியளிக்கப்பட வேண்டும்.

ஓ) ஆய்வு

தொழிற்சங்கத்தைப் பலப்படுத்துவதற்காக ஆய்வு பிரிவு வசதிகள் ஸ்தாபிக்கப்பட வேண்டும். இப்பிரிவுக்கு ஆய்வுக்கான பின்புல மூலவளங்கள் வழங்கப்பட வேண்டும்.

ஔ) பரந்த சமூக, பொருளாதார அரசியற் பிரச்சினை கள் வேதனம் மற்றும் சம்பளம் உழைப்போர் பற்றிய ஒட்டு மொத்தமான சமூக, பொருளாதார நிலை மைகளைத் தொழிற்சங்கங்கள் கருத்திற் கொள்ள வேண்டும். நிலையான விலைகள், பெறுமதிகள், பொதுவான வேதன மட்டங்கள், சமூகப் பாது காப்பு, கல்விக் கொள்கைகள் போன்ற வற்றிலும் முன்னேற்றம் காணப்படுவதற்கு சங்கங்கள் வழி வகுத்தல் வேண்டும்.

3. தொழிற்சங்கத்தின் உரிமைகள்

1. உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் உரிமையும் அவர்களுக்காக பேரம் பேசும் உரிமையும்
2. சச்சரவுகளின் போது தொழிற்சங்க நட வடிக்கை மேற்கொள்ளும் உரிமை
3. தொழிற்சங்க சட்டவாக்கத்தில் குறித்து ரைக்கப்பட்ட உரிமைகளையும் சலுகைகளையும் அனுபவிக்கும் உரிமை

ஒரு தொழிற்சங்கம் என்பது, ஒரு ஸ்தாபனமாகும்

★ அங்கத்தவர்களால் (தொழிலாளர்களால்) நிருவகிக்கப்படுவது

★ அங்கத்தவர்களால் நடத்தப்படுவது

★ அங்கத்தவர்களின் நிதியினால் நடாத்தப்படுவது

## தொழிற்சங்கங்களால் கடைப்பிடிக்கப்படும் நான்கு கொள்கைகள்

| | | |
|---|---|---|
| 1. தொழிலாளர் ஒற்றுமை | ★ | ஏனையவரின் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பது |
| 2. சுதந்திரமானது | ★ | அரசாங்கத்தின் தலையீடின்றி தொழிற்படுவது |
| | ★ | ஒருவரின் தனிச் சொத்தல்ல |
| 3. ஜனநாயகமானது | ★ | சகல அங்கத்தவர்களுக்கும் சம உரிமைகள் உண்டு. |
| 4. ஒற்றுமை | ★ | ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு பிரிந்து நின்றால் அனைவர்க்கும் தாழ்வு. |

## யார் சங்கத்தை நடாத்துவது ?

### தாங்களே நடத்துகிறீர்கள்

### தாங்களும் தங்களின் சக ஊழியர்களுமே சங்கத்தை நடத்துகிறீர்கள்.

**தாங்களே** தங்களின் கிளை நிருவாகிகளைத் தெரிவு செய்கிறீர்கள்

**தாங்களே** தங்களின் கிளைச் செயற்பாடுகளை ஓட்டிச் செல்கிறீர்கள்

**தாங்களே** தங்களின் கிளை சார்பாக பேரம் பேசும் குழுவைத் தெரிவு செய்கிறீர்கள்

**தாங்களே** தங்களின் சங்கத்திற்கான ஒப்பந்தங்கள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்கிறீர்கள்

**தாங்களே** தங்களின் பிரதிநிதிகளைத் தெரிவு செய்கிறீர்கள்.

**தாங்களே** தங்களின் சங்கத்திற்காக முக்கியமான கொள்கைகளைத் தீர்மானிப்பதிலும், அதனை செயற் படுத்தவதிலும் ஜனநாயக ரீதியான முறையில் மேலதிக வாக்குகள் மூலம் தீர்மானிக்கிறீர்கள்.

**தாங்களே** தங்களின் பிரதிநிதியாக சர்வேதச மாநாடுகளுக்கு பங்குபற்றும் பிரதிநிதிகைளத் தெரிவு செய்கிறீர்கள்.

**தாங்களே** தங்கள் சங்கத்தின் கொள்கைகளையும் இறுதித் தீர்மானங்களையும் மேற்கொள்ளவும் அதிகார ரீதியான குழுவாக இருக்கிறீர்கள்

**தாங்களே** தங்களின் சங்கத்தின் உண்மையான தலைமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வழமைபோல் கொழும்புக் கிளைகளின் உதவியுடன் வாண்மை விருத்தி, வழிகாட்டல அமர்வுகளை தொடராக கடந்த 2005 ஒக்டோபர் இல் இருந்து நடாத்தி வருகிறது. இவ்வாண்மை விருத்தி வழி காட்டல் அமர்வில் பல்வேறு ஆவணங்களைத் தொகுத்து ஐந்து வகையான சிறு கையேடுகளை வழங்கியுள்ளது. அத்துடன் கடந்த முறை (2002) இலங்கைக் கல்வி நிருவாக சேவை பரீட்சை நடை பெற்ற போது வெளியிடப்பட்ட கல்விமுகாமைத்துவ சுற்றறிக்கைகளின் தொகுப்பு தற்காலப்படுத்தப்பட்டு இம்முறையும் உங்கள் கைக்கு கிடைக்கிறது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க கொழும்புக்கிளைகளை உள்ளடக்கிய வாண்மை விருத்தி, வழிகாட்டல் அமர்வு ஒழுங்கமைப்புக் குழு. இந்த சுற்றறிக்கைத் தொகுப்பு விடயத்தில் தனது பங்குதாரர் நலனை கருத்திற் கொண்டு இதனை இம் முறையும் வெளியிட வேண்டுமென்று முன் மொழிந்தது. இவ்வாறான தொகுப்பை வெளியிடுவதிலுள்ள பல்வேறு சிரமங்களையும் எதிர் கொண்டு சுற்றறிக்கைகளின் தொகுப்பினை வெளியிடுவதற்கு ஒருமித்த கருத்துடன் ஒன்று கூடி கொழும்பில் இதுவரை நடாத்தப்பட்ட 20 அமர்வுகள் எமக்கு ஒரு உந்து சக்தியாக அமைந்தது.

நிச்சயமாக இது கொழும்பு கிளைகளின் அங்கத்தவர்களுக்கு மாத்திரமல்ல ஏனைய பிரதேச கிளைகளின் அங்கத்தவர்களுக்கும் பாடசாலைகளுக்கும் தமது கற்றல், கற்பித்தல் பணிக்கு வலுச் சேர்க்கும் என்பது எமது நம்பிக்கையாகும். இத் தொகுப்பு ஆசிரியர்கள் , அதிபர்கள் ஒன்றுபட்டுழைப்பதன் மூலம் கிடைக்கும் "பலம்" என்றால் அது மிகையாகாது.

கொழும்பைத தளமாகக் கொண்டு கடந்த முறை வெளியான இத்தொகுப்பு நாடளாவிய ரீதியில் வரவேற்பு பெற்றதும் எல்லோரின் தேவையையும் முழுமையாக பூர்த்தி செய்ய முடியாத நிலை தோன்றியதும் இத்தொகுப்பின் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் எமக்கு உணர்த்தியது.

அறிவு தொகுதி பிரவாகம் எடுத்துள்ள இந்த யுகத்தில் தகவல் பெறல மிக முக்கிய அம்சமாக இருக்கின்றது. அதற்கு இத் தொகுப்பும் பங்களிப்பைச் செய்யும் என்ற திருப்தியுடன், இதற்கு உதவிய சகலருக்கும் ஒரு வெகுமதியாகவும் வருங்காலத் தேவைகளுக்கும் மற்றவர்களுக்கு உதவும் இவ்வாறான பணியில் கைகொடுக்க உந்து சக்தியாகவும் இச் செயற்திட்டம் அமையும் என்பது எமது கருத்தாகும். இதை வெளியிடுவதற்கு உதவிய ஈ, எஸ் அச்சகத்தாருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இதனைப் பெறுதல் தொடர்பான சகல தகவல்களுக்கும் கொழும்பு பணிமனையுடன் கடித மூலமும் யாழ்ப்பாணம்; திருகோணமலை பணிமனை யூடாகவும் தொடர்பு கொள்ளலாம்.

**ஒற்றுமையே பலம்.**

**கொழும்பு பணிமனை**
கனடா இல்லம்
40, மத்திய வீதி,
கொழும்பு -15

**சரவணபவானந்தன்**
நிருவாகச் செயலாளர்
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

E.S Print-2553541,2590462,0777-316719

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org